

கம்ப ராமாயணம்





கம்ப ராமாயணம்

உரைநடைச் சுருக்கம்

"வரதமணி"

விலை ரூ. 6

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
தி.நகர், சென்னை-600017

முதற் பதிப்பு : 1969
மறு அச்சு : 1977

Paper used for the printing of this book was made available by the Govt. of India at concessional rates



லிப்கோவின் திருச்சி விற்பனை நிலையம் :

17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620002.

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள் :

எம். தாமோதரம் & கம்பெனி,
108, கார்ப்பொரேஷன் பழக் கடை, சென்னை-600001.

அச்சிட்டோர் :
தேவி பிரஸ், சென்னை-600010.

முன்னுரை

'அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழிக்குக் கதியாவார் இருவர்; அவர் கம்பரும் திருவள்ளுவரும்' என்றார் ஒரு தமிழ்ப் பேராசிரியர். நாம் நம் செந்தமிழ் நாட்டைப் 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்று பாராட்டிப் பூரிப்புக் கொள்ளுகின்றோம். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று பெருமிதம் கொண்டார் பாட்டுக்கொரு புலவராகிய பாரதியார்.

கம்பன் அளித்த காவிய அமுதம் கம்ப ராமாயணம். இதனை அவர் **ராமாவதாரம்** என்னும் பெயரால் இயற்றினார். கம்ப ராமாயணம் தமிழ் மக்களின் தனிப்பெருஞ் செல்வமாகும். கற்பவர் விரும்பும் அற்புத நூலாகிய கம்ப ராமாயணம் தமிழிலக்கியச் சோலையில் என்றென்றும் வாடாத மணமலராகும்.

ராமாயணக் கதை பல மொழிகளில் இயற்றப்பட்டிருப்பினும் தமிழில் உள்ள கம்ப ராமாயணமே மிகச் சிறப்பு வாய்ந்த நூலாகப் போற்றப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான பாடல்கள் அடங்கிய பெருநூலை எல்லோரும் எளிதில் கற்க இயலாமை கருதிப் பாமரரும் புரிந்துகொள்ளும் இனிய எளிய நடையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் சுருங்கிய அளவில் இயன்றதாயினும் கதைத் தொடர்பு ஒரு சிறிதும் வழுவாவண்ணம் கூர்ந்து கவனித்து எழுதப்பட்டுள்ளது. இன்றியமையாத இடங்களில் சுவையான பாடல்களும், அவற்றின் அரும்பதக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கும் மேலாகப் புத்தகப் பணியில் ஈடுபட்டுவரும் நாங்கள் தமிழ் வளமும் பக்தி நலமும் கருதி வெளியிடும் இத்தகைய நூல்களைத் தமிழுலகம் வரவேற்று எங்கள் முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தருளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். இந்நூலைப் பயிலும் தமிழ் மக்கள் பேரும் புகழும் பெருவாழ்வும் எய்திப் பல்லாண்டு வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

> ''பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து—கம்பன்
> பாரில் பொழிந்ததிம் பாற்கடலை
> நாவின் இனிக்கப் பருகுவமே—நூலின்
> நன்னயம் முற்றும் தெளிகுவமே.'' — கவிமணி.

—பதிப்பகத்தார்.

கம்பர் வரலாறு

'கல்வியில் பெரியவர் கம்பர்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கம்பநாடன் கவிதையைப்போல் கற்ருேர்க்கு இதயம் களியாதே' என்னும் பொன்னுரைகள் கம்பரின் புலமையை விளக்குவனவாகும். கம்பர் புலமை அறிஞர்களால் அளவிட முடியாத ஆழமும் அகலமும் உடைய பெருங்கடல் என்றே கூறலாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த கம்பரின் வரலாறு இருளிற் புதைப்பட்டுக் கிடக்கின்றது. அவர் வரலாற்றைக் கூறும் சான்றுகள் மிகச் சிலவே ஆகும். அவைகளும் சில நூல் களில் உள்ள செய்யுட்களும் கன்ன பரம்பரைச் செய்திகளுமே யாம்.

கம்பர் தஞ்சையைச் சார்ந்த திருவழுந்தூரில் ஆதித்தன் என்பாருக்குப் பிள்ளையாகத் தோன்றினர் என்று கூறுவர். இவரது பெயர்க் காரணங்கள் பலப்பல கூறப்படுகின்றன. இவருக்குக் கம்பர் என்பது பெற்ருேரால் இடப்பட்ட பெய ரென்று கூறுவர் ஒரு சிலர். ஒரு சிலர், கம்ப நாடு என்னும் பெயருடைய நாட்டை உடையவராதலால் இப்பெயர் வந்தது என்பர் ; வேறு சிலர் கம்பத்தினடியில் உவச்சவனெருவனுல் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளையாகையால் இப்பெயருண் டாயிற்று என்பர். மற்றும் சிலர் காஞ்சியில் எழுந்தருளியிருக் கும் இறைவனின் திருப்பெயராகிய 'ஏகம்பர்' என்பதன் மரூஉப் பெயரே கம்பர் என்பர். சில கல்வெட்டுக்களில் கம்பன் பெயர் இயற்பெயராகவே வழங்கப்பட்டுள்ளது. ஆகை யால் கம்பர் என்பதை இயற்பெயராகக் கொள்ளுதலே பொருத்தமாகும்.

கம்பர் சிறுவயதில் திருவெண்ணெய்நல்லூரில் பெருஞ் செல்வராக விளங்கிய சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பட்டார். கம்பர் ராமாயணம் பாடியமைக்குக் காரணங்கள் பல கூறுவர். ஆயினும் அவருக்கு ராமபிரா

னிடமிருந்த பேரன்பே இதற்கு முதற் காரணம் என்று கூறலாம். இவர் வால்மீகி ராமாயணத்தை அப்படியே மொழி பெயர்த்துவிடவில்லை. மூலக் கதையின் சாரத்தைப் பிழிந்தெடுத்துத் தமிழ்ப் பண்பாடு, மொழி, காலம் முதலியவைகளுக்கு ஏற்றபடி கூட்டியும் குறைத்தும் மாற்றியும் பாடினர்.

கம்பரது காலம் 12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பர் சிலர்; 9-ஆம் நூற்றுண்டு என்பர் சிலர். இவர் பன்னிரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியினராயின் ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், ஔவையார் ஆகியவர்கள் இவர்தம் சமகாலப் புலவர்கள் ஆவார்கள். கம்பர் பாடாது விட்ட ஏழாவதாகிய உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினர் என்பர். கம்ப ராமாயணம் திருவரங்கத்தில் பெரியோர் கூடியுள்ள அவைக்களத்தே மேட்டழகியசிங்கர் தலை அசைக்குமாறு அரங்கேற்றப்பட்டதென்று கூறுவர்.

கம்பர் வைணவ மதத்தைச் சார்ந்தவர். அவர் நன்றி மறவாத நல்லியல்புடையவர்; அவர் நாட்டுப் பற்று மிக்கவர்; தாய்மொழிப் பற்று உடையவர் என்பதை அவர் இயற்றிய இந்த அரிய நூலின் செய்திகளால் நன்கு அறியலாம். சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதியந்தாதி முதலியவை கம்பர் இயற்றிய வேறு நூல்களாம்.

பொருளடக்கம்

கிஷ்கிந்தா காண்டம்

சுந்தர காண்டம்

யுத்த காண்டம்

யுத்த காண்டம் (தொடர்ச்சி)



துதிச் செய்யுட்கள்

பரம்பொருள்

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.''

[**உள ஆக்கல்:** உள்ளனவாகச் செய்தல் (படைத்தல்), **நிலைபெறுத்தல்:** நிலைத்திருக்கச் செய்தல் (காத்தல்), **நீக்கல்:** விடுதல் (அழித்தல்): இவை முத்தொழில்கள். **அலகிலா:** அளவு இல்லாத.]

சரஸ்வதி

''புத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகம் தரித்த செங்கை விமலையை அமலை தன்னை
மொய்த்த கொந்(து) அளக பாரம் முகிழ்முலைத் தவளமேனி
மைத்தகு கருங்கண் செவ்வாய் அணங்கினை வணங்கல் செய்வாம்.''

[புத்தகம், படிகமாலை, குண்டிகை, ஞானவித்தகம் என்பவை சரஸ்வதி தேவியின் இடக்கீழ்க்கரம், வலக்கீழ்க்கரம், இடமேற்கரம், வலமேற்கரம் ஆகிய இடங்களாகும். **குண்டிகை:** நீர்ப்பாத்திரம். **அளகம்:** கூந்தல். **தவளம்:** வெண்மை நிறம். **அணங்கு:** தெய்வப் பெண்.]

அனுமான்

''அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்(டு)அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனெம்மை அளித்துக் காப்பான்.''

[**அஞ்சிலே ஒன்று:** ஐவகைப் பூதங்களில் ஒன்று; இவை முறையே பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்பன. **வாயு:** அனுமனைப் பெற்றவனாகிய வாயுதேவன். **பூமி:** பூமிதேவி, சீதையை ஈன்றவள்.]

நம்மாழ்வார்

''தருகை நீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத்(து) இராகவன் தன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.''

[**வேழம்:** யானை. **வேலை:** கடல். **குருகை:** திருக்குருகூர் என்ற ஊர். **குரை:** ஒலி. **கழல்:** பாதம்.]

தனிச் செய்யுட்கள்

கம்பர்

''நாரணன் விளையாட் டெல்லாம் நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான் அறிந்தவான் மீகி என்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருள் வாழ்வோன்
காரணக் கோடையான் கம்பன் தமிழினாற் கவிசெய் தானே.''

''கரைசெறி காண்டம் ஏழு கதைகள்ஆ யிரத்தெண் ணூறு
பரவுறு சமரம் பத்துப் படலம்நூற் றிருபத் தெட்டே
உரைசெயும் விருத்தம் பன்னி ராயிரத்து ஒருபத் தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற் றுறே.''

'ராம' என்னும் பெயரின் சிறப்பு

''நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.''


ராமாயணம் படித்தோர்க்கும்
கேட்டோர்க்கும் கிடைக்கும் நன்மைகள்

''வென்றிசேர் இலங்கை யானை வென்றமால் வீரம் ஓத
நின்றரா மாய ணத்தில் நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும் உரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது என்றோர் தாமும் நரகம தெய்தி டாரே.''

''நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலைஇ ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.''

''அன்ன தானம் அகிலநல் தானங்கள்
கன்னி தானம் கபிலையின் தானமே
சொன்ன தானப் பயனெனச் சொல்லுவார்
மன்இ ராம கதைமற வார்க்கரோ.''

பால காண்டம்



1. ஆற்றுப் படலம்

உலகம் உயிர் வாழ்வதற்குத் தண்ணீர் இன்றியமையாத தாகும். அந்நன்னீரை நமக்கு அன்னைபோல் ஊட்டுபவை நம் நாட்டு ஆறுகளாம். வான் பொய்ப்பினும் தான் பொய் யாது வளந்தருவதே சிறந்த ஆறு ஆகும். மக்களின் உயிர்த் தொழிலாகிய பயிர்த் தொழில் செழிக்க உதவுவது ஆறே ஆகும்.

இத்தகைய ஆறுகளில் சிறந்தது சரயு நதி என்னும் ஆருகும். இது புலவர் பாடும் புகழ்மிக்க ஆருகும். இந்நதி இமயமலையின்கண் தோன்றுகிறது. இது நறுமலர்ச் சோலை களிலும், சண்பக மரங்கள் நிறைந்த காடுகளிலும் புகுந்து அவற்றை அழகு பெறச் செய்கிறது. அதன் பின்னர், தடாகங் களை நிரப்பியும், நந்தவனங்களையும் வயல்களையும் வளமுள்ளன வாகச் செய்கிறது. இத்தன்மைகளால் சரயு நதி உடம்பு தோறும் உலாவித் திரியும் உயிரேபோல் விளங்கிற்று:

''நாநுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.''

2. நாட்டுப் படலம்

சரயு நதி பாய்தலால் எங்கணும் பசுமையான தோற்றத் துடன் மருத நிலவளம் மாண்புற அமைந்தது கோசலம் என்னும் மாசிலா நாடு. அங்குள்ள மருத நிலத்தின் பேரழ கைக் கம்பர் கண்களால் கண்டு களிப்போம்:

''சோலைகளாகிய நாட்டிய அரங்குகளிலே மயில்கள் ஆகிய நடனப் பெண்கள் தம் தோகைகளை விரித்துக்கொண்டு நடனமாடுகின்றன; தாமரைக் கொடிகளாகிய மகளிர் மலர் களாகிய விளக்குகளைத் தம் கையில் ஏந்தி நிற்கின்றனர்; மேகங்கள் மத்தளம்போல் ஒலிக்கின்றன; நீர்நிலைகளில் உள்ள அலைகள் திரைகளைப்போல் விளங்குகின்றன; வண்டுகள் தேன்போன்ற மகரயாழின் இசையைப் பாடுகின்றன; கருங் குவளைகள் மலர்களாகிய தம் கண்களால் பார்க்கின்றன. இவ் வாறு நிகழும் நாட்டிய விருந்தில் மருத நிலமாகிய அரசன் பெருஞ்சிறப்புடன் அமர்ந்திருக்கிறான்'' என்று கம்பர் சித்தரிக் கிருர்:

''தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.''

[தண்டலை: சோலை. விளக்கம்: விளக்குகள். முழவு: மத்தளம். எழினி:திரை. தேம்பிழி: இனிய தேனைப்போன்ற.]

இத்தகைய வளம் மிக்க கோசல நாடு அன்பும் அருளும் பொறையும் அறிவும் வாய்ந்த சான்றோர்களுக்கு இருப்பிடமாக விளங்கியது. மேற்கூறிய மருதவளமேயன்றி மற்ற குறிஞ்சி, முல்லை, நெய்தல் நிலவளங்களும் அங்கே நிறைந்திருந்தன. மேலும், அங்கு,

''வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரையி லாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.''

இத்தகைய வளமிக்க நாட்டில் மக்கள் அனைவரும் இன்பமும் அமைதியும் நிலவ வாழ்ந்து வந்தார்கள்.

3. நகரப் படலம்

கோசல நாட்டின் தலைநகரமாக விளங்குவது அயோத்தி மாநகரம். அது,

''நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ உயிரின்
இருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லுலகோ ஊழியின் இறுதி
உறையுளோ யாதென உரைப்பாம்.''

[நிலமகள்: பூமிதேவி. திலகம்: நெற்றிப்பொட்டு. பூண்: ஆபரணம். மாயோன்: திருமால். வானோர்: தேவர்கள். ஊழி: யுகம்.]

என்று வியக்கத்தக்க பெருமையினை உடையதாய் இருந்தது.

அந்நகரத்தில், கல்வி கல்லாதவர் எவரும் இல்லாமையால், 'இவர் கல்வியில் வல்லவர்; இவர் கல்வியில் வல்லவர் அல்லர்' என்று கூறுவதற்கும், மக்கள் யாவரும் எல்லா விதமான செல்வங்களையும் பெற்றிருந்தமையால், 'செல்வர் இவர்; செல்வர் அல்லாதவர் இவர்' என்று கூறுவதற்கும் இயலவில்லை. ஆதலால்,

''ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகம் தழைத் தன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியொன்று பழுத்தது போலு மன்றே.''

[**ஏகம் முதல்:** ஒரு வித்தானது. **எண்ணில்:** அளவில்லாத. **திண்பணை:** வலிய கிளை.]

கல்வியாகிய ஒரு விதை முளைத்து உயர எழுந்து மரமாகி, எண்ணுவதற்கு இயலாத கேள்வியாகிய முதன்மையும் வன்மையும் உள்ள கிளைகளை வளரவிட்டு, அருமையான தவமாகிய இலைகளைத் தழைக்கச் செய்து, அன்பு ஆகிய மொட்டுகளைத் தோற்றுவித்துத் தருமம் என்கின்ற மலர்களை மலர்த்தி, இன்பமாகிய கனி ஒன்றைப் பழுக்கவைத்தது போன்று உள்ளதாம்.

4. அரசியல் படலம்

அத்தகைய பெருமையினை உடைய அயோத்தி மாநகரைச் சீரும் சிறப்பும் வாய்ந்த தசரதன் என்னும் மன்னர் மன்னன் ஆண்டு வந்தான். அவனே சிறப்பு மிக்க இக்கதைக்கு, இறைவனுன ஒரு தலைவனைப் பெற்றெடுத்த நல்ல தருமமூர்த்தியாக விளங்கி இருந்தவன். இம்மன்னன், மன்னுயிர்களைத் தன் உயிர்போலவே எண்ணிக் காத்துவந்தான். குடிமக்களுக்கு அன்பு காட்டுவதில் ஒரு தாய்போன்று இருந்தான். அவர்களுக்கு நன்மை செய்வதில் தவசிகளின் அருள்போலவும், அவர்கள் நற்கதிப் பெறச் செய்வதில் புத்திரன்போன்றும் விளங்கினுன்; பெரியோர்களுடன் நூற்கேள்விகளை ஆராயும் பொழுது அவர்களுக்கு, ஒரு சிறந்த அறிவுச் சுடராகக் காட்சி அளித்தான். தன்னை எதிர்த்து வரும் பகை அரசர் எவரும் இல்லாததால் 'போர்' என்பதே நேராது, தினவு காண்கின்ற திரண்ட தோள்களை உடைய தசரதன், ஏழை ஒருவன், தனக்குள்ள சிறு நிலத்தைப் பாதுகாப்பதுபோலத் தன் பெருநிலம் முழுவதிலும் தனது செங்கோலைச் செலுத்தி ஆட்சி புரிந்து வந்தான்:

" எய்யென எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பொருத் தினவுறு முழுவுத் தோளினுன்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்றுன்.''

அவனுக்குக் கோசலை, சுமித்திரை, கைகேயி என மூன்று மனைவியர் இருந்தனர். தசரதன் அறுபதினுயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன்.

5. திரு அவதாரப் படலம்

அரசர்க்கு அரசனுன தசரதன், ஒரு நாள், தன் குலகுரு வாகிய வசிஷ்ட முனிவரை நோக்கி, ''முனிவர் நாயக! சூரியன் முதலாகத் தோன்றிய என் குலமுதல்வர்கள் எமது மரபு விளங்க இப்பெரிய நாட்டை ஆட்சி செலுத்தி வந்துள் ளார்கள். தங்களுடைய அருளினுல், யானும், அறுபதினுயிரம் ஆண்டுகள் கழியும்படிப் பகைவர்களை ஒடுக்கி, நல்லோர்களைக் காத்து இவ்வுலகத்தில் ஆட்சி செய்து வந்தேன். எனினும், எனக்குப் பின்னர், இந்நாட்டை ஆளவும் மக்களைத் துன்பம் இல்லாது காக்கவும் ஒருவரும் இல்லையே'' என்று கூறி வருந்தினுன்.

உடனே, வசிஷ்டர், தசரதன் கூறிய துன்பமொழிகளைக் கேட்டுச் சற்று யோசித்தார்: முன்னொரு காலத்தில், பிரமன் முதலான தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிய திருமால், ''கொடுந்தொழில் புரியும் அரக்கர் கூட்டங்களை அழித்து, அவர்களால் உண்டாகும் துன்பத்தைப் போக்குவோம்'' எனக் கூறி அருளிய ரகசியம் அவருடைய ஞாபகத்திற்கு வந்தது.

அத்தேவரகசியம் யாதெனில், ராவணன் முதலான அரக்கர்கள் செய்துவந்த துன்பங்களுக்கு அஞ்சிய இந்திரன் முதலிய தேவர்கள், சிவபெருமானிடம் சென்று தம் குறையை முறையிட்டனர். அதற்கு அப்பரமன், பின்னுல் நடப்பவை களை அறிந்தவராதலால், தாம், அரக்கர்களுடன் போர் செய்ய மறுத்து, இந்திரன் முதலியோரோடும் பிரமதேவரை அடைந்தார்.

பிரமதேவர், தன்னை அடைந்த சிவபிரானையும் தேவர் களையும் முறைப்படி உபசரித்தார்; ஆசனத்தில் இருத்தினர். தேவேந்திரன், தான் ஒரு காலத்தில் இலங்கையை நோக்கிச் செல்லுங்கால், ராவணன் மகன் மேகநாதன் என்பவன், தன்னைப் பாசத்தால் பிணித்துச் சென்றதையும், அப்பொழுது பிரமதேவர் வந்து தன்னை மீட்டதையும் சிவபிரானிடம் அறிவித்தார்.

பின்பு, அனைவரும், மிக்க வலியோரான ராவணன் முதலிய இரக்கமில்லா அரக்கரை அடக்கத் தம்மால் ஆவது ஒன்றும் இல்லை என்றும், கருணைக் கடலான கார்வண்ணனே அரக்கர்களை ஒழித்துத் தம் துன்பத்தைப் போக்கத்தக்கவர் என்றும் தீர்மானித்துப் பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனை மனத்தினுல் துதித்தனர். அப்போது,



''கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ(டு)
இருசுடர் இருபுறத் தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்.''

[**கருமுகில்:** கரிய மேகம். **இருசுடர்:** சூரியனும் சந்திரனும். **கலுழன்:** கருடன். திருமாலே. கரிய மேகமாயும், அவர் அவயவங்களைத் தாமரை மலராகவும், சக்கரத்தையும் சங்கையும் இரு சுடர்களாகவும், கருடனைச் சிவந்த பொற்குன்றமாகவும் ஆசிரியர் கூறியுள்ளார்.]

தங்கள் எதிரில் காட்சி அளித்த நாராயணனை யாவரும் கண்டு மகிழ்ந்து, ராவணன் முதலிய அரக்கர்களால் தங்களுக்கு உண்டாகும் துன்பங்களைக் கூறினார்கள். திருமால் அவர்களைக் கேட்டு, ''இனி வருந்தவேண்டா'' என்று மேலும் கூறத் தொடங்கினார்: ''வானவர்களாகிய நீங்கள் யாவரும் வானரங்களாகத் தோற்றங் கொண்டு பல சேனைகளுடன் பூவுலகிலுள்ள மலைகளிலும் காடுகளிலும் வசித்திருங்கள். நாம், அயோத்தி அரசனான தசரதனுக்குப் புதல்வராகவும், சக்கரமும் சங்கும் இப்பாம்பணையும் நமக்கு ஏவல் செய்யும் இளைஞர்களாகவும் வருவோம்'' என்று கூறியருளிக் கருடனுடன் மறைந்தார்.

திருமாலின் கட்டளைப்படி, பிரமதேவர், தனது கூறு, கரடிவேந்து (ஜாம்பவான்) என்று கூறினார். இந்திரன், தன் மகன் 'வாலி' என்றான். சூரியன், தன் மகன், வாலிக்கு இளைஞனான 'சுக்ரீவன்' என்றனன். அக்னிதேவன், தானே 'நீலன்' எனக் கூறினன். வாயுதேவன், தனது அம்சமே 'அனுமன்' என்றான். இவ்வாறு தேவர்கள் ஒவ்வொருவரும் மிருகமாகவும் குரங்குகளாகவும் தோன்றுவோம் என்றனர்.

தேவர்கள் இவ்விதமாக நிகழ்த்திய ரகசியத்தை உணர்ந்தவரான வசிஷ்ட முனிவர், தசரதனை நோக்கி, ''நீ, இனி வருத்தப்படுவதை ஒழித்து, ஏழு உலகங்களையும் ஆட்சி செய்யும்படியான புதல்வரைக் கொடுக்கத்தக்க 'அசுவமேதம்' என்ற வேள்வியைச் செய்வாயாக'' எனக் கூறினார். உடனே தசரதன் மிக்க மகிழ்ச்சி அடைந்து, அவ்வேள்வியைச் செய்வதற்கான முறையைக் கூறுமாறு வேண்டினான். உடனே, அவர், '''ருசியசிருங்கர்' என்ற கலைக்கோட்டு முனிவரை இங்கு அழைப்பித்து வந்து வேள்வியை முடிப்பாயாக'' எனலும், தசரதன் பின்னரும் முனிவரை வணங்கி, ''ஐயனே! அந்த ருசியசிருங்கர் என்பவர் யாவர்? அவர் எங்கு உள்ளார்? அவருடைய வரலாறு யாது? அவற்றையும் அறிவிக்க வேண்டும்'' எனக் கேட்டனன். வசிஷ்டரும் சொல்லத் தொடங்கினார்:

ருசியசிருங்கர் வரலாறு

''பிரமதேவரின் புத்திரரான காசியப முனிவரின் புதல்வர் 'விபாண்டகர்' என்பவர். விபாண்டக முனிவரின் பிள்ளை யான ருசியசிருங்க முனிவர், நான்முகனும் புகழத்தக்க தவ வலிவும் சாந்த குணமும் உடையவர். எப்பொழுதும் காட்டி லேயே வசிப்பவர். ஆதலால் நாட்டைப்பற்றியும் அதில் வாழும் மக்களைப்பற்றியும் ஏதும் அறியாதவர். அவருடைய தலையில் மானின் கொம்பு போன்ற ஒரு கொம்பு உள்ளதால் கலைக்கோட்டு முனிவர் ஆனார். கொம்பு இல்லாத மக்களையே இவர் மிருகங்களாக எண்ணி வந்தார். உத்தானபாதன் என்ற அரசனுடைய மைந்தன் ரோமபாதன் அங்கதேசம் என் னும் நாட்டை ஆட்சி புரிந்து வந்தான். ஒரு காலத்தில் அத் தேசம் எங்கனும் மழையே இல்லாது, நீர்நிலைகள் யாவும் வற்றிப்போகக் குடிகள் மிக வருந்தினர். ரோமபாத மன்னன், பல பெரியோர்களை அழைத்து, 'இப்பஞ்சத்தைப் போக்க யாது செய்வோம்'? எனக் கேட்டான். அதற்கு அவர்கள், 'நாட் டையே கண்டு அறியாத ருசியசிருங்க முனிவரை எவ்வித மேனும் இங்கு அழைத்து வந்தால் நாட்டில் மழை பெய்யும்; யாவும் வளம் பெறும்' என்றனர்.

''அப்பொழுது ரோமபாதன், 'அத்தகைய முனிவரை யாரால் எவ்வாறு இங்கே அழைத்துவரலாம்?' என்று எண்ணி வருந்தினன். அப்போது மாளிகையில் உள்ள தாதிப் பெண் களில் சிலர், அரசன் முன்வந்து, தாமே காட்டிற்குச் சென்று அம்முனிவரை அழைத்து வருவதாகக் கூறினர். மன்னனும் அவர்களை அனுப்பினன்.

''தாதியர் கலைக்கோட்டு முனிவரின் ஆசிரமத்தை அடைந் தனர். தமக்குப் புதிய தோற்றத்தினரான அப்பெண்கள், தன் ஆசிரமத்தை அடைந்தது கண்டார் அம்முனிவர். அவர் களும் தவசிகளே என எண்ணினர். அதனல் ருசியசிருங்கர், அவர்களை உபசரித்து அர்க்யம், ஆசமனம் முதலியன கொடுத்து உபசரித்தார். இவ்வாறு சில நாள் பழகியபின் எங்களிடத்திற் கும் வரவேண்டும் என்று அவர்கள் வேண்ட அப்பெண்களின் அழைப்பிற்கு இணங்கி அம்முனிவர் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றர். 'இதோ, இதோ' என அவர்கள் அம்முனிவரை அங்க நாட்டிற்கு அழைத்துச் சென்றனர். ருசியசிருங்கர் அங்க நாட்டின் எல்லையை அடைந்ததும், மழை பொழிந்து நாடு எங்கனும் நீர் பெருக்கெடுத்தது. அது கண்ட ரோமபாதன் மிக்க மகிழ்ச்சியுடன் முனிவரை வரவேற்றன். பலவாறு உபசரித் தான். அவரை அவருக்குத் தன் பெண் 'சாந்தை' என்பவளைத்

தானமாகத் தந்து தன் பாவங்களைப் போக்கிக்கொண்டான். அந்த முனிவர் இப்போது அங்கதேசத்திலே இருக்கிறார்.''

ருசியசிருங்கரின் இவ்வரலாற்றைக் கேட்ட தசரதன் வசிஷ்டரை வணங்கி, ''இப்பொழுதே யான் அங்க நாடு அடைந்து உயர் தவத்தினரான அம்முனிவரை அழைத்து வருவேன்'' எனக் கூறிச் சுமந்திரன் முதலான மந்திரிகளுடன் தேர் ஏறி அங்க நாட்டிற்குச் சென்றான்.

அயோத்தி அரசனான தசரதன், அங்க தேசத்தின் எல்லையை அணுகியதாக ஒற்றர்களால் அறிந்த ரோமபாத மன்னன், தசரதனை எதிர்கொண்டு அழைக்க மந்திரிகளும் பெரியோர்களும் சூழ வந்து அவனைக் கண்டான். பிறகு தசரதனைப் பலவகை உபசார மொழிகளால் வரவேற்று தன் நகர் அடைந்து ஏற்றதொரு மாளிகையில் அமர்த்தினான். பிறகு ரோமபாதன் தசரதனை நோக்கி, ''வேந்தர் வேந்தே! தாங்கள் இங்கு வந்த காரியம் யாதோ?'' எனக் கேட்டான். அதற்குத் தசரதன், தான் செய்ய நினைத்த வேள்வியைப்பற்றி அறிவித்து, அதனை முற்றுவிக்கும் பொருட்டுக் கலைக்கோட்டு முனிவரை அயோத்திக்கு அழைத்துவரும்படிக் கூறினான். பின்னர், தசரதன், ரோமபாதனிடம் விடைபெற்றுத் தன் நகரை அடைந்தான்.

மறுநாள், ரோமபாதன் ருசியசிருங்கரை அடைந்து தசரதன் கருத்தைக் கூறினான். அவரும் அயோத்திக்குப் புறப்படச் சித்தமானார். மன்னனும் அயோத்தியை நாடிச் சென்றனர்.

ருசியசிருங்கர் வருகையை அறிந்த தசரத மன்னன் மட்டிலா மகிழ்ச்சியடைந்தான். வசிஷ்டர் முதலான பெரியோர்கள் புடைசூழ, அவரை எதிர்கொண்டு அழைத்தான். பலவித உபசாரங்கள் செய்தான். அவரை உரிய ஆசனத்தில் அமர்த்தினான். தசரதன் வேண்டுகோளின்படி, வசிஷ்டர், ருசியசிருங்கரை அழைத்துக்கொண்டு, தசரதன் நிருமித்திருந்த வேள்விச்சாலையை அடைந்தார். அவரால் வேள்வியைச் சிறப்பாக முடித்தார். பின்னர் புத்திரர்களை அளிக்கத்தக்க ஆகுதியைத் தீக்குண்டத்தில் இட்டனர். அந்நேரத்தில், அக்குண்டத்திலிருந்து சிவந்த நிறமுள்ள பூதம் ஒன்று எழுந்து நின்று, தன் கையிலுள்ள தட்டை நிலத்தில் வைத்துவிட்டு அக்குண்டத்திலேயே மறைந்து போயிற்று. உடனே ருசியசிருங்க முனிவர், தசரதனை அழைத்து, ''அரசே! இத்தட்டை எடுத்துச் சென்று இதிலுள்ள அமுதத்தை உன் தேவியருக்கு அளிப்பாயாக'' என்றார்.

அவ்வாறே தட்டினை ஏந்திய தசரதன், அதிலுள்ள அமுத பிண்டத்தில் நாலில் ஒரு பாகத்தைக் கோசலைக்குக் கொடுத்தான். மற்ருெரு பாகத்தைக் கைகேயிக்குக் கொடுத்தான். பின்னருள்ள பாகத்தைச் சுமித்திரைக்குக் கொடுத்தான். பிறகு தட்டில் மிகுந்திருந்தவற்றைச் சேர்த்து அதனையும் சுமித்திரைக்கே அளித்தான்.

வேள்விச்சாலையிலிருந்த பல பெரியோர்களிடம் நல்வாழ்த்தைப் பெற்றுக்கொண்ட தசரத மன்னன் யாவருடனும் எழுந்து தனது சபையை அடைந்தான். ருசியசிருங்க முனிவர் வசிஷ்டர் முதலானோரிடமும் தசரதனிடமும் விடை பெற்றுக் கொண்டு ரோமபாத மன்னனுடன் அங்கநாட்டுக்குப் புறப் பட்டுச் சென்ருர்.

சில மாதங்கள் சென்றன. பின்னர், தசரதனுடைய முதல் மனைவியான கோசலை வயிற்றில் ராமனும், கைகேயி வயிற்றில் பரதனும், சுமித்திரை வயிற்றில் லக்ஷ்மணனும் சத்துருக்னனும் பிறந்தனர். இங்ஙனம் தசரதனுக்கு நான்கு மைந்தர்கள் தோன்றியது கண்டு வானவர்கள் இன்பம் அடைந்தனர்; மலர் மாரி பொழிந்தனர்; தேவதுந்துபி முழங்கின. மண்ணுலக மக்களும் மனமகிழ்ச்சியடைந்தனர். எங்குப் பார்த்தாலும் தான தருமங்கள் நிகழ்ந்தன; ஆடல் பாடல்கள் நடைபெற்றன. குழந்தைகள் நால்வரும் குழலினும் இனிய மழலை பயின்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து யாவரையும் மகிழ்வித்து வந்தனர்.

தசரதன், தன் புதல்வர்களுக்குப் பருவந்தோறும் செய்ய வேண்டிய சடங்குகளுடன் உபநயனமும் நிகழ்த்தி, அரசர் களுக்குரிய எல்லாவித வித்தைகளையும் பயிற்சிகளையும் அளித்தான்.

இவ்வாருக, தசரத மன்னன், முனிவர்களும், அரசர்களும் புகழும்படித் தன் மைந்தர்களுடன் நாட்டை ஆண்டு மகிழ்ச்சி யோடிருந்தான்.

6. கையடைப் படலம்

தேவர்கள் போற்றவும் முனிவர்கள் வாழ்த்தவும் சிறப் புடன் விளங்கிய தசரத மன்னன் தன் நாட்டை இனிதாக ஆட்சி செய்துவந்தான். அவ்வாறு ஆண்டு வரும்போது ஒரு நாள் விசுவாமித்திர முனிவர் அம்மன்னன் சபைக்கு வந்தார். முனிவரைக் கண்டதும், தசரதன் எழுந்து முறைப்படி உப சரித்தான். அவரை ஓர் ஆசனத்தில் அமரச் செய்து, தானும் ஓர் ஆசனத்தில் அமர்ந்தான்.

பின்பு அரசன், விசுவாமித்திர முனிவரை நோக்கி, ''தாங்கள் இங்கே வந்ததானது, இந்நகர் செய்த தவமோ? அல்லது என் குலம் செய்த தவமோ? யாதோ அறியேன்; தாங்கள் அடியேனிடம் வந்துள்ள காரியத்தை அருளவேண்டும்'' என்று பணிவாகக் கேட்டனன்.

அப்பொழுது, முனிவர், ''தேவர்களும், எம் போன்ற முனிவர்களும் தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் நேர்ந்தால், சிவபெருமான் உறையும் வெள்ளிமலையும், திருமால் விளங்கும் பாற்கடலும், பிரமன் வாழும் சத்தியலோகமும் அழகிய மாடங்களையுடைய இந்த அயோத்தி நகரும் அல்லாமல் வேறு புகலிடம் உண்டோ? இல்லையே; ஆதலால்,

''தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக்(கு)
இடையூறுய்த் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென உயிரிரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்.''

[தரு: மரங்கள். இடையூறு: துன்பம். வெருவர: அஞ்ச. நிருதர்: அரக்கர். செரு: போர். கரிய செம்மல்: கரிய நிறத்தினனான ராமன். கொடுங்கூற்றின்: கொடிய யமனைப் போல. உளைய : வருந்த.]

''யாம் செய்ய விரும்பிய வேள்வியை அரக்கர்களின் துன்பம் இல்லாது காப்பதற்கு நின் மைந்தர்களுள் ஒருவனாகிய ராமனை எம்முடன் அனுப்புவாயாக'' என்று கூறினான். இவ்வாறு,

''எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின்று ஊசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா லெனஉழந்தான்
கடுந்துயரம் கால வேலான்.''

[எண்ணிலா: அளவில்லாத. மருமத்தின்: மார்பில். புண்ணிலாம் பெரும்புழை: புண்ணில் உண்டான பெரிய துவாரத்தில். உண்ணிலாவிய: மனத்தில் உண்டான. கண்ணிலான்: குருடன். காலவேலான்: பகைவர்க்கு எமனைப் போன்ற வேலாயுதத்தையுடைய தசரதன்.]



விசுவாமித்திரர் சொல்லைக் கேட்ட தசரதன் வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போலத் துடித்தான்; குருடன் கண்களைப் பெற்று மீண்டும் இழந்ததுபோலப் பெருந்துயர் உழந்தான்.

பின்னர் ஒருவாறு மனம் தேறி, அவரை நோக்கி, ''சுவாமி! என் ராமன் சிறியவன்; படைப் பயிற்சி இல்லாதவன். தாங்கள் கட்டளை இட்டால், நானே வந்து, இடையூறுக நிற்கும் அரக்கர்களை அழித்துத் தங்கள் வேள்வியினைக் காக்கின்றேன்'' என்றனன்.

தசரதன் உரைத்ததைக் கேட்ட முனிவர் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் கோபங்கொண்டு, தம் ஆசனத்திலிருந்து எழுந்தார். உடனே, அங்கிருந்த வசிஷ்ட முனிவர், விசுவாமித்திரரைப் பொறுத்துக்கொள்ளக் கூறி, அரசனை நோக்கி, ''உன் மகன் ராமனுக்கு, இவரால் வந்து அடையக் கூடிய பல நன்மைகளை நீ தடுக்க எண்ணுகிருயா? அவனுக்கு மேன்மை உண்டாகும் காலம் இதுவே'' என்று கூறி ராமனை முனிவருடன் அனுப்புமாறு கட்டளை இட்டார்.

குருவின் வாசகத்தைக் கேட்ட மன்னன், ராமனுடன் லக்ஷ்மணனையும் கூட்டி, விசுவாமித்திரரிடம் ஒப்புவித்து, ''இவர்களுக்கு, இனித் தந்தையும் தாயும் ஆக இருந்து தாங்களே காத்து வரவேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டு மூவரையும் செல்ல விடை கொடுத்தான்.

அதன்மேல், விசுவாமித்திரர் சினம் தணிந்து அரசனை வாழ்த்தி, மைந்தர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு சித்தாச்ரமம் நோக்கிச் செல்வாராயினர்.

''கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்
தெடுத்த சீற்றம்விட் டினிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாமென
நடத்தல் மேயினன் நவைக்கண் நீங்கினன்.''

[***சீற்றம் :*** கோபம். ***வேள்வி:*** யாகம். ***நவைக்கண் நீங்கினன்:*** காமம் முதலிய குற்றங்களிலிருந்து நீங்கியவராகிய விசுவாமித்திரர்.]

7. தாடகை வதைப் படலம்

விசுவாமித்திர முனிவருடன் புறப்பட்டு வந்த ராமனும் லக்ஷ்மணனும் சரயு நதிக்கரையிலுள்ள ஒரு சோலையை அடைந்து அங்குத் தங்கினர்கள். அப்பொழுது முனிவர்,



அச்சோலையையும் அதனைச் சார்ந்த ஆச்ரமத்தையும் பற்றிக் கூறத் தொடங்கினர்.

''முன்னொரு காலத்தில் சிவபெருமான் இந்த இடத்தில் அமர்ந்து தவம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது, அவருடைய தவத்தைக் கெடுக்க வந்த மன்மதன் மலரம்புகளை அவர்மீது செலுத்தினன். அவர் சினம் கொண்டு, தமது நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தார். மன்மதன் எரிந்து சாம்பலாகிவிட்டான். அந்த மன்மதன் தன் அங்கத்தை உகுத்த இடம் இதுவே; ஆதலால், இதனைச் சார்ந்த இடங்களை 'அங்க நாடு' என்றும், இந்த ஆச்ரமத்தைக் 'காமன் ஆச்ரமம்' என்றும் வழங்குகின்றனர்.'' விசுவாமித்திரர் கூறியவற்றைக் கேட்ட மைந்தர்கள் இருவரும் பெரிதும் வியப்படைந்தனர்.

மறுநாள், முனிவர், ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு ஒரு பாலைவனத்தை அடைந்தார். தசரதன் மைந்தர் இருவரும் மிக்க ஆற்றல் உடையவர்கள் எனினும் மென்மை வாய்ந்த இளைஞர்கள். ஆதலின், வனத்தின் கொடுமைக்கு வருந்துவர் என்று முனிவர் எண்ணினர். உடனே அவர் பசி முதலியன தோன்ருதிருப்பதற்கும், வலிவைக் கொடுப்பதற்கும் நான்முகன் அருளிச்செய்த 'பலை', அதிபலை', என்ற இரு மந்திரங்களை அவர்களுக்கு உபதேசித்து அவற்றின் சிறப்பையும் கூறினர்.

பின்னர், ராமன் முனிவரை வணங்கி, ''மாதவரே! நீரும் நிழலும் இல்லாத மிகக் கொடிய இவ்வனத்தின் விசேஷம் யாது?'' எனக் கேட்டனன். அவர் ராமனைப் பார்த்து, ''உயிர்களைக் கொன்று திரியும் வாழ்க்கையை உடையவளும், ஆயிரம் யானைகளின் வலிமையைப் பெற்றவளுமான 'தாடகை' என்பவள் இவ்வனத்தில் உள்ளாள். அவள் வரலாற்றைக் கேட்பாயாக. முன்காலத்தில் 'சுகேது' என்ற யக்ஷன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். அவனுக்குப் பிரமதேவர் அருளால் தாடகை என்னும் இவள் மகளாகத் தோன்றினள். பருவம் அடைந்தபின் இவள் 'சுந்தன்' என்னும் அரக்கனை மணந்து, மாரீசன், சுபாகு என்ற இரு பிள்ளைகளைப் பெற்ருள். பிறகு கணவனுன சுந்தன் இறந்து போனன். தாயும் பிள்ளைகளும் அகஸ்திய முனிவரை அடைந்து அவருக்குத் துன்பம் உண்டாக்கினர். அவர் இவர்களை அரக்கர்கள் ஆகும்படிச் சபித்தார். அதனல் இவர்கள் சினமடைந்து தாம் கண்ட உயிர்கள் யாவையும் வதைத்து இக்காட்டையும் வளமையற்றதாகச் செய்துவிட்டனர். ஆதியில் குளிர்ந்த மருத நிலமாயிருந்த இந்த இடம், இப்பொழுது வெப்பமுள்ள ஒரு கொடுங்காடாக விளங்குகிறது. அகஸ்தியர்மீது கொண்டுள்ள பகைமை

யால், இத்தாடகையானவள் இவ்விடத்தில் வாசம் செய்து கொண்டு, முனிவர்களுக்கும் உயிர்களுக்கும் துன்பம் கொடுத்து வருகிறாள். இவள் இன்னும் சிலகாலம் உயிருடன் இருப்பாளாயின், உயிர்களைக் கண்டபடி வதைத்துத் தன் வயிற்றிலே இட்டுக் கொல்லுவாள். இப்பொழுது, இவள், எனது வேள்விக்கும் தடையாக இருக்கிறாள்'' என்று கூறினார்.

கொடிய தாடகை முதலியோரின் வரலாற்றைக் கேட்டதும் ராமன், ''இப்பொழுது அப்பாதகி வசிக்கும் இடம் யாது?'' என்று கேட்டனன். அதற்கு முனிவர், ''அவள் வசித்து வருவது இம்மலையே'' என்று பக்கத்திலுள்ள ஒரு மலையைக் காட்டினார். அச்சமயத்தே அத்தாடகை, அக்குன்றினைப் போலவே அஞ்சத்தக்க பெரிய உருவங்கொண்டு அவர்கள் முன் தோன்றினாள்; பற்பல அடாத மொழிகளைக் கூறினாள். அவர்களைக் கொல்வதற்காகக் தன் கையிலுள்ள சூலாயுதத்தை வீச முயன்றாள்.

அப்போது ராமன் அவளைப் பார்த்து பெண்ணான இவளை எவ்வாறு கொல்வது என்று எண்ணிப் பேசாது நின்றான். அது கண்ட விசுவாமித்திரர், ''ராமா, என்ன யோசிக்கிறாய்? இவளைப் பெண் என்று நினையாதே; உலக உயிர்களுக்கெல்லாம் துன்பம் செய்யும் இவளைக் கொல்வதால் பாபம் இல்லை'' என்று முன்னர் நடந்த சம்பவங்களை எடுத்துக் காட்டி, ''இவளை விரைவில் கொல்வாயாக'' என்று கட்டளையிட்டார். ராமன், வில்லினை வளைத்து அம்பைப் பூட்டி விடுக்க ஆரம்பித்தான். அது கண்ட தாடகை சூலத்தை அவன்மீது வீசினாள். அதை ராமன் தன் பாணத்தினால் இரு துண்டுகளாகச் செய்து விட்டான். பின்னர் அவள் மலைகளைப் பிடுங்கி எறிந்தாள். அவற்றையும் ராமன் தவிடுபொடியாகச் செய்து, மிகவும் விரைந்து செல்லும் ஓர் அம்பினை அவள்மீது எய்தான்.

''சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சிற் றங்கா(து) அப்புறங் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே.''

இவ்வாறாக, ராமனுடைய அம்பு பட்ட மாத்திரத்தில், அக்கொடிய தாடகை வீழ்ந்து இறந்தாள். அப்பொழுது, வானவீதியில் வந்து நின்ற தேவர்கள் ராமன்மீது மலர்களைப் பொழிந்து விசுவாமித்திரரை நோக்கி, ''வில் வீரனான இவனுக்குத் தெய்வப் படைக்கலங்கள் யாவும் அளிப்பீராக'' என்று கூறி, ராமனையும் வாழ்த்திச் சென்றனர்.

8. வேள்விப் படலம்

ராமன், தாடகையைக் கொன்ற பின்னர் விசுவாமித்திரர், அவனது வீரச் செயலைப் பலவாறு புகழ்ந்து கூறினார். தேவர்களின் விருப்பப்படி, முனிவர், ராமனுக்குப் பலவகையான அஸ்திரங்களைக் கொடுத்து, அவற்றைக் கையாளும் முறைகளையும் கூறினார். பிறகு அவர், ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு இரண்டு காத தூரம் சென்றார். அவ்விடத்தில் உண்டான பேரொலியைக் கேட்டு, ராமன் முனிவரை நோக்கி, ''அண்ணலே, இது யாது?'' என வினவினான்.

அப்போது, அவர், இமயமலையில் உள்ள மானச மடுவில் தோன்றியதும், மிகச் சிறப்புடையதுமான சரயு நதியுடன் கோமதி கூடுதலால் ஏற்படும் ஒலியே அது என்றார். மூவரும் கோமதி நதிக்கரை அடைந்தனர். அதன் வரலாற்றை முனிவர் கூறத் தொடங்கினார்:

கோமதி நதியின் வரலாறு

''பிரமதேவருக்குக் குசன் என்ற ஒரு புத்திரன் தோன்றி, இந்நதிக்கரையை அடுத்துள்ள பிரதேசங்களை ஆண்டு வந்தான். அவனுக்குக் குசன், குசநாபன், ஆதூர்த்தன், வசு என்ற நான்கு புத்திரர் பிறந்தனர். குசநாபனுக்குக் கிருதாசி என்ற தேவமாதிடம் நூறு பெண்கள் பிறந்தனர். அவர்கள் மிக்க அழகுடன் வளர்ந்து மங்கைப் பருவம் எய்தினர்.

''ஒரு நாள், அப்பெண்கள் நூற்றுவரும் தம் தந்தையின் சிங்கார வனத்திற் சென்று விளையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது, வாயுதேவன், அவர்களை அடைந்து, தன்னை மணம் செய்துகொள்ளும்படிக் கூறினான். அவர்கள், 'எம் தந்தையால் நீர் வார்த்துக் கொடுக்கப்பெற்றீரானால், நாங்கள் உம்மை மணந்துகொள்வோம்' என்றனர். உடனே வாயுதேவன் சினம் கொண்டு, அப்பெண்களின் முதுகினை ஒடித்துக் கூனிகளாகச் செய்து போயினன். அப்பெண்கள் தம் தந்தையிடம் சென்று தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறலும், குசநாபன் மிகவும் வருந்தினான். அப்பெண்களை மணம் முடித்துக் கொடுப்பதில், அவர்கள் வடிவமே ஒரு பெருந்தடையாக இருந்தது.

''சில நாட்கள் சென்றபிறகு, குசநாபன், தன் பெண்கள் நூறு பேரையும் 'சூளி' என்ற முனிவருடைய புத்திரரான 'பிரமதத்தர்' என்பவருக்கு மணம் செய்துகொடுத்தான். பிரமதத்தருடைய கைபட்ட மாத்திரத்தில், அப்பெண்கள் யாவரும் தம்முடைய கூன் வடிவம் நீங்கி, முன்னிலும்

மிக்க அழகுடையவராய் விளங்கினர். அவர்களைக் கண்ட குச நாபன் வியப்புற்று மகிழ்ந்தான்.

''பின்னர் குசநாபன் தனக்கு ஒரு பிள்ளை உண்டாக விரும்பி வேள்வி ஒன்றைச் செய்தான். அதன் பயனாக, அவ னுக்குக் காதி என்ற மைந்தன் பிறந்தான். காதிக்கு உரிய வயது வந்ததும் தன் அரசாட்சியை அவனிடம் ஒப்படைத்து விட்டு, குசநாபன் துறக்கம் எய்தினன். காதிக்குக் கவுசிகை என்ற பெண்ணும் நானும் பிறந்தோம். கவுசிகை, பிறகு முனி வரின் புதல்வரான 'ருசிகர்' என்பவருக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டாள்.

''கவுசிகையுடன் ருசிகர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தபின்னர், அவர் பிரமனது சத்தியலோகத்தை நாடிச் செல்லலுற் றார். அது கண்ட கவுசிகையும் கணவருடன் தொடர்ந்து சென் றாள். ருசிகர் திரும்பிப் பார்த்து, 'நீ இந்த நிலவுலகத்தில் ஒரு புண்ணிய நதியாகத் தோன்றி, மக்களின் பாவங்களைப் போக்கிக்கொண்டிருப்பாயாக' எனக் கூறினார். அதன்படி என் தமக்கையாகிய கவுசிகை, இந்நதி உருவம் பெற்று ஓடிக் கொண்டிருக்கிறாள். இதன் பெயர் 'கோமதி' என்றும் கூறப் படுகிறது'' என்றார்.

மாபலி மன்னன் கதை

விசுவாமித்திரரும் ராமனும் லக்ஷ்மணனும் சிறிது தூரம் நடந்து சென்று ஓர் அழகிய சோலையை அடைந்தனர். அப்பொழுது, ராமன், ''ஐயனே, இச்சோலையின் வரலாற்றை யும் கூறுக'' என்று வேண்டினான். முனிவர், ''ராமா! இச் சோலையானது மிகத் தூய்மை வாய்ந்ததாகும். வெகு காலத் திற்குமுன் திருமால் நூறு ஊழிக்காலம் வரை இங்கே தவம் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் மாபலி என்ற மன்னன் தனது வலிமையால் மூவுலகங்களையும் கைப்பற்றித் தன்னை அடைந்து யாசித்தவர்களுக்கு அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்து வந்தான். மாபலியின் செல்வத்தையும் செருக்கையும் கண்டு அஞ்சிய தேவர்கள் இங்கே வந்து திருமாலை வணங்கி மாபலியை அடக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவர், மாபலியை அடக்குவதாகக் கூறி, தேவர்கள் செல்ல விடை கொடுத்தார்.

''பிறகு காசிப முனிவரின் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடைய பத்தினியான அதிதி தேவிக்குப் புத்திரராகத் தோன்றினார். மிகக் குறுகிய வடிவத்துடன் வாமன மூர்த்தி யாய் விளங்கினார்.

''அந்த வாமன மூர்த்தி, மாபலியிடம் சென்று, தனக்கு மூன்றடி மண் வேண்டுமென யாசித்தார். மன்னனும் கொடுக்க உடன்பட்டு, 'இதோ கொடுத்தேன், பெற்றுக் கொள்ளும்' என்று சொல்லி அவருடைய கையில் நீர் வார்க்கத் தொடங்கினான்.

''அப்பொழுது மாபலியின் குருவாகிய சுக்ர பகவான் வாமனரின் வஞ்சகச் செயலை உணர்ந்து, 'நீ இவ்வாறு செய்வதால் உனக்குத் தீமை உண்டாகும்' என்று தடுத்தார். உடனே மன்னன்,

> ''எடுந்தொருவ ருக்கொருவர் ஈவதனின் முன்னே
> தடுப்பதுநி னக்குநெழ கோதகைவில் வெள்ளி
> கொடுப்பதுவி லக்குகொடி யோயுனது சுற்றம்
> உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்.''

எனச் சினந்து, 'பெரியோர்களுக்கு இடும் தானம் மிகச் சிறப்பைத் தரும். ஆகையால், நீர் இதனைத் தடை செய்யாதிரும்' எனக் கூறினான். பின்னர் கெண்டியிலுள்ள நீரைத் திருமாலான வாமனரின் கையில் வார்த்தான்.

''அங்ஙனம், வார்த்த நீர் தன் கையில் விழவே குறளனாக இருந்த திருமால், நெடிய உருவங் கொண்டு, அண்ட முகடு வரை உயர்ந்து, மூவுலகங்களையும் இரண்டு அடிகளால் அளந்து, 'மூன்றாவது அடிக்கு இடம் யாது?' எனக் கேட்டனர்.

''அப்பொழுது மாபலி மன்னன், 'அம்மூன்றாவது அடிக்கு இடம் என் சிரமேயாகும்' எனத் தலை குனிந்தனன். உடனே திருமால் தமது திருவடியை அவன் சிரத்தின்மீது வைத்து அழுத்தி அவனைப் பாதாள உலகத்திற் சேர்த்துப் பல வரங்களையும் தந்தருளினார். பின்னர் மாபலியின் ஆட்சியை இந்திரனுக்கு அளித்துவிட்டுத் திருப்பாற்கடலை அடைந்தார்.

விசுவாமித்திரர் வேள்வியைக் காத்தல்

''அத்தகைய செயல்கள் நிகழ்ந்த சிறப்பான இடமே இது. இதற்குச் 'சித்தாச்ரமம்' எனப் பெயராகும். யான் செய்ய எண்ணிய வேள்வியை இங்கேயே முடிக்கப்போகின்றேன். அக்காலத்தில் அரக்கர்கள் வந்து தடை செய்வார்கள். நீயும் லக்ஷ்மணனும் அவர்களால் எவ்வித துன்பங்களும் நேராமல் காத்து வருவீராக'' என்று சொல்லித் தமது வேள்வியைச் செய்யத் தொடங்கினார்.

முனிவர் வேள்வியை நடத்திக் கொண்டிருக்கும் காலத்தில் ராமனும் லக்ஷ்மணனும் கண்களை இமைகள் காப்பதுபோலக் காத்தனர். லக்ஷ்மணன் வில்லைப் பிடித்து, வேள்விச் சாலையின்

வாயிற்புறத்தே நின்ருன். ராமன் வில்லை ஏந்தி அச்சாலையைச் சுற்றி வந்து அடிக்கடி லக்ஷ்மணனை எச்சரித்துக் கொண்டே இருந்தான். இவ்வாறு

''என்னுநற் காக்கரி(து) இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்.''

இவ்வாறு ராமனும் லக்ஷ்மணனும் காவல் செய்து வரும் பொழுது, மாரீசன் முதலிய அரக்கர்கள் நீருண்ட கரிய மேகங்களைப்போல மாய வடிவம் கொண்டு ஆகாயத்தில் தோன்றி மலைகளையும் மரங்களையும் பிடுங்கி ராமன் முதலியோர்மீது எறிந்தனர். ஆயுதங்களைப் பொழிந்து ஆரவாரித்தனர்.

ராமன் அவர்கள் செயல்களை நோக்கி, ''இவர்கள்மீது நாம் ஆயுதங்களை ஏவினுல் இவர்களின் ரத்தம், தசை முதலியன ஓமகுண்டங்களில் விழும். ஆதலால், அவை விழாதிருக்க ஓர் உபாயம் செய்வோம்'' என்று தமக்குள் யோசித்து முதலில் வேள்விச்சாலைக்கு மேலே தன் அம்புகளைச் செலுத்தி சரக்கூடம் அமைத்தனன். பிறகு வில்லில் அம்புகளைத் தொடுத்து அரக்கர் கூட்டத்தை நோக்கி எய்தான். அரக்கர்களுள் பலர் அடிபட்டு இறந்து வீழ்ந்தனர். பூமி எங்கணும் ரத்த வெள்ளமாயிற்று. எஞ்சியுள்ள தாடகையின் மைந்தர்களாகிய சுபாகு, மாரீசன் என்பவர்கள்மீது இரு பாணங்களைச் செலுத்த அவற்றுள் ஒன்று சுபாகுவை வீழ்த்தியது. மற்ருென்று மாரீசனைத் துரத்திக்கொண்டே போய்க் கடலிற் சேர்த்தது.

அதைக் கண்ட தேவர்கள் ராமனை வாழ்த்தினர். விசுவாமித்திரர் வேள்வியை முடித்துக்கொண்டு எழுந்து ராமன் அமைத்திருந்த சரக்கூடத்தையும் சுபாகு, மாரீசர்கள் அழிந்ததையையும் அறிந்தார். அதனுல் மிக்க மகிழ்ச்சி கொண்டு ராமனையும் லக்ஷ்மணனையும் புகழ்ந்து வாழ்த்தினுர்.

மறுநாள் ராமன் முனிவரை நோக்கி, ''சுவாமி! இனியும் நான் செய்யத்தக்க காரியங்கள் உளவோ?'' என்று கேட்டனன். அதற்கு முனிவர், ''நீ செய்யவேண்டிய பெரிய காரியங்கள் உள்ளன. அவற்றைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது மிதிலை நகரத்தில் ஜனக மன்னன் ஒரு யாகம் செய்யப்போகிருன். நாம் சென்று அதனைப் பார்த்து வருவோம்'' என்று கூறி ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துக் கொண்டு மிதிலையை நோக்கிச் சென்ருர்.

9. அகலிகைப் படலம்

துர்வாஸரும், அமுதம் எடுத்தலும்

மிதிலையை நோக்கிச் சென்ற விசுவாமித்திரரும், ராமனும், லக்ஷ்மணனும் மிக்க வளமுள்ள சோணமா நதிக்கரையைச் சேர்ந்தார்கள். அப்போது, சூரியன் மறையும் நேரம் நெருங்கியதால், அவர்கள், அங்கே இருந்த சோலையில் தங்கியிருக்க எண்ணினர். சோலையின் நாற்புறமும் பார்த்த ராமன் அதன் வளமையையும் ஒழுங்கையும் கண்டு வியந்தான். பின்னர் முனிவரை நோக்கி, ''முனிவர் திலகமே! இதன் வரலாற்றை இயம்பியருள வேண்டும்'' எனக் கேட்டான். முனிவரும் கூறுவாராயினர்:

''சில காலங்களுக்கு முன்னர், விஞ்சையர் மகள் ஒருத்தி லக்ஷ்மியைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் துதிப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த மலர்மகள் அவ்விஞ்சையர் மகளுக்கு, தான் அணிந்திருந்த பூமாலையைப் பரிசாகக் கொடுத்து வரமும் அருளினர். மாலையைப் பெற்றுக்கொண்ட விஞ்சை மாது அதனைத் தன் வீணையிற் கட்டிக்கொண்டு பிரமன் உலகை அடைந்தாள். அப்போது, அங்கே இருந்த துர்வாஸ முனிவர், விஞ்சையர் பெண்ணைக் கண்டார். அவள் திருமகளிடமிருந்து பூமாலை பெற்ற வகையை அறிந்து அவள் அடைந்த நற்பயனைக் குறித்துப் புகழ்ந்து கொண்டாடினர். அவளும் மகிழ்ந்து அந்த மலர் மாலையைத் துர்வாஸருக்குக் கொடுத்தாள். முனிவர் மாலையைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்தவராய் அமராவதி நகருக்கு வந்தார். அப்பொழுது தேவேந்திரன், ஐராவதம் என்னும் வெள்ளை யானையின்மீது அமர்ந்து வீதி வழியே வந்தனன். இந்திரனைக் கண்டதும் துர்வாஸர் தன்னிடமிருந்து மலர் மாலையை அவனுக்குக் கொடுத்தார். அவன் அங்கு அதனை அலட்சியமாக அங்குசத்தினல் வாங்கி ஐராவதத்தின் கழுத்தில் இட்டான். அந்த யானையோ உடனே அந்த மாலையைத் தும்பிக்கையால் இழுத்து நிலத்தில் இட்டுக் காலால் தேய்த்தது. துர்வாஸர், மாலையின் பெருமை அறியாத இந்திரனுடைய அறிவின்மையையும் செருக்கையும் கண்டு அவனை நோக்கி,

''இன்று நின்பெருஞ் செவ்விகண்(டு) உவகையின் ஈந்த
மன்ற லந்தொடை இகழ்ந்தனை நினதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களும் உவரிபுக் கொளிப்பக்
குன்றி நிதுயர் உறுகென உரைத்தனன் கொடியோன்.''

[செவ்வி: பெருமை. **தொடை:** மாலே. **உவரி:** கடல். **கொடியோன்:** கடுங்கோபங் கொண்ட துர்வாஸ முனிவர்.]

என்று சபித்தான்.

''அக்கணமே, இந்திரனுக்கு உரிய காமதேனு, கற்பக மரம், நவநிதியங்கள் யாவும் கடலில் மூழ்கி மறைந்தன. உலகம் எங்கும் வறுமை பரவிற்று. அதனுல் தேவர்கள் யாவரும் திருமாலிடம் சரண் புகுந்து, துர்வாஸ முனிவரால் விளேந்த கேட்டைக் கூறித் துன்பம் போக்கவேண்டினர்.

''உடனே திருமால் தேவர்களே நோக்கி, 'மந்தரமலேயை மத்தாகவும் வாசுகியைக் கடைகயிருகவும் கொண்டு சந்திரனேத் தூணுக நிறுத்தி நீங்களும் அசுரர்களும் பாற்கடலேக் கடையுங் கள். நாமும் அங்கு வருவோம்' என்று கூறினுர்.

''அவ்வாறே, தேவர்கள் ஒரு பக்கமும் அசுரர்கள் ஒரு பக்கமுமாக நின்று, பாற்கடலேக் கடையும்பொழு, பூமி யானது அதிர்ச்சி அடைந்து நெகிழ ஆரம்பித்தது. அதனேக் கண்ட திருமால், ஆமை உருக்கொண்டு, தமது முதுகிலே மந்தரமலேயைத் தாங்கி அதனேச் சுழலும்படிச் செய்தார்.

''கடலேக் கடையும்போது, இந்திரனுடைய செல்வங்கள் யாவும் வெளிவந்தன. அவற்றின் பின்னர், ஆலகால விஷமும், இளம்பிறையும், பஞ்ச தருக்களும் அவை போன்றுயர்ந்த வேறு பல பொருள்களும் தோன்றின. அதன்மேல் அக்கடலி னின்று திருமகள் வந்தாள். கௌஸ்துப மணி தோன்றியது. இந்நிலேயில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அமிர்தத்தைப் பங்கிட்டுக்கொள்வதில் மாறுபாடு உண்டாகிப் பெருஞ் சண்டையாயிற்று. அப்போது திருமால் மோஹினி உருவாகி வந்து அசுரர்களே மயக்கித் தேவரே அமிர்தம் முழுவதையும் அடையச் செய்தார். அசுரர் அனேவரும் அழிந்தனர். பிறகு, ஆலத்தையும் இளம்பிறையினேயும் சிவபெருமான் பெற்று, முறையே தம் கண்டத்திலும், தலேயிலும் தரித்துக்கொண் டார். கௌஸ்துப மணியையும் திருமகளேயும் திருமால் ஏற்று, தம் மார்பினிடத்தே வைத்துக்கொண்டார். மற்றவைகளே இந்திரன் அடைந்தான்.

''அசுரர்கள் அழிந்தது கேட்டு, அவர்கள் தாயாராகிய திதிதேவியானவள், தன் கணவர் காசிப முனிவரிடம் தேவர் களே வெல்லத்தக்க ஒரு புத்திரனேத் தந்தருளவேண்டும் எனக் கேட்டாள். அதற்கு அவர், அவளே நோக்கி, 'உன் வயிற்றில் ஒரு பலசாலியான புத்திரன் தோன்றுவான். அவனேத் தாங்கிய கருப்பத்துடன் பூவுலகினே அடைந்து, ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்வாயாக' என்றுர். அவ்வாறே

பூவுலகை அடைந்த திதிதேவி இச்சோலையில் அமர்ந்து தவம் செய்துகொண்டிருந்தாள்.

''திதிதேவி தன்னைக் கொல்லும் வலிமை படைத்த புதல்வனைப் பெறுவதற்காகத் தவத்தில் இருப்பதை அறிந்த இந்திரன் இங்கே வந்து மாற்றுருக் கொண்டு அவளுக்குப் பணிவிடை செய்யும் ஆளாகி நின்றான். ஒரு சமயம் திதிதேவி தன் தவ முறையில் தவறொன்று செய்ய அதுவே காரணமாகக் கொண்டு இந்திரன் அணுவின் உருவாய் அவளுடைய வயிற்றில் புகுந்து கருப்பத்திலுள்ள சிசுவை ஏழு துண்டங்களாகச் செய்தான். விழித்துக்கொண்ட திதி வேண்டிக்கொள்ள ஏழு துண்டுகளையும் கொல்லாது 'சப்த மருத்துகள்' எனப் பெயரிட்டான்'' என்று உரைத்தார். மற்றும் அவர் எதிரிலுள்ள ஒரு பொய்கையைச் சுட்டிக் காட்டி, ''அதுதான் சிவபெருமானின் திருக்குமாரனான சண்முகதேவன் வளர்ந்தருளிய சரவணப் பொய்கையாகும்'' என்றார்.

பிறகு மூவரும் அவ்விடத்தினின்றும் எழுந்து கங்கை நதி பாயும் இடத்தை அடைந்தார்கள்.

கங்கையின் வரலாறு

கங்கை நதியைக் கண்ட ராமன் அது மிகச் சிறப்புற்று விளங்குவதைக் கண்டு அதன் வரலாற்றைக் கூறுமாறு விசுவாமித்திர முனிவரை வேண்டினான். உடனே அவர், ராமனை நோக்கி, ''உன் குலத்து அரசனாகிய சகரன் என்பவன் முற்காலத்தில் அரசாட்சி செய்துவரும்போது அவன் பட்டத்துத் தேவியான விதர்ப்பை என்பவளிடம் அசமஞ்சன் என்பவன் பிறந்தான். சிறிது காலம் சென்ற பிறகு அசமஞ்சனுக்கு அம்சுமான் என்ற மகன் தோன்றினான். சகரனுக்கு மற்றொரு மனைவியான சுமதி என்பவளிடம் வலிமை மிக்க அறுபதினாயிரம் பிள்ளைகள் தோன்றி சிறந்த வலிமை மிக்க மைந்தர்களைப் பெற்ற சகரன் அசுவமேத வேள்வியைச் செய்ய எண்ணி, ஒரு குதிரையை அலங்கரித்துப் பூமியை வலம் வரும்படி செய்து அதற்குக் காவலாக பல சேனைகளுடன் தன் பேரனான அம்சுமானை அனுப்பினான்.

''சகரன் செய்கின்ற அந்த வேள்வியால் தனக்குத் துன்பம் நேரும் என்று அஞ்சிய தேவேந்திரன், யாரும் அறியாதபடி அக்குதிரையைப் பிடித்துக் கொண்டுபோய், பாதாள உலகத்தில் நிஷ்டையில் இருந்த கபில முனிவருக்குப் பின்புறத்தில் மறைத்துவிட்டுச் சென்றனன். அம்சுமான் குதிரை மாயமாய் மறைந்ததைக் கண்டு திகைத்துத் தன் பாட்டனாராகிய சகரனிடம் சென்று நடந்ததைக் கூறினான். பிறகு சகரன் தன் மக்கள் அறுபதினாயிரம் பேரையும் குதிரையைத் தேடிக்கொண்டுவர

அனுப்பினன். அவர்கள் பூவுலகு எங்கும் தேடியும் காணுமல், பூமியைத் தோண்டிக்கொண்டே பாதாள உலகை அடைந்து அங்கு நிஷ்டையிலிருந்த கபிலரின் பின்புறத்தில் கட்டியிருந்த குதிரையைக் கண்டனர்.

''சகர புத்திரர்கள், 'இந்த முனிவரே நமது குதிரையைக் கொண்டு வந்தவர்' என நினைத்து, கபிலருக்குத் துன்பம் செய்தனர். உடனே கபிலர் நிஷ்டை கலைந்து கண் விழிக்க அந்த அறுபதினுயிரவரும் சாம்பலாயினர். அதனை ஒற்றரால் அறிந்த சகர மன்னன் அம்சுமானிடம் இச்செய்தியைக் கூறிப் பெருந்துன்பமடைந்தான்.

''பின்னர் அம்சுமான் பாதாளத்தை அடைந்து, கபில ரைக் கண்டு வணங்கி தான் வந்த காரியத்தைக் கூறினன். கபில முனிவர், குதிரையை அவனிடம் கொடுத்து உண்மை அறியாது தமக்குத் துன்பம் செய்ததால், சகர புத்திரர் அழிந் ததையும் கூறினர்.

''குதிரை வந்து சேர்ந்ததும் சகர மன்னன் வேள்வியை முடித்து, அம்சுமானுக்கு முடிசூட்டி நாட்டை ஆளும்படிச் செய்தபின்னர் மேல் உலகை அடைந்தான். சகர புத்திரர் கள் தோண்டிய காரணத்தால் கடலுக்குச் சாகரம் என்ற பெயர் உண்டாயிற்று.

''அம்சுமானுக்குப் பின் வெகுகாலம் கடந்து, அக்குலத் தில் பகீரதன் என்பவன் தோன்றினன். ஒரு நாள் பகீரத மன்னன், தன் குல குருவாகிய வசிஷ்ட முனிவரிடம் தனது குலத்தினரின் வரலாறுகளை கேட்டுக்கொண்டிருந்தான். சகர புத்திரர்களின் அழிவை அறிந்த அவன் மிகவும் மனம் நொந்து வசிஷ்டரை நோக்கி, 'அவர்கள் நற்கதி அடையச் செய்யத் தக்க உபாயம் யாது?' எனக் கேட்டான். அதற்கு அவர், 'நீ பிரமனை நோக்கித் தவம் செய்வையாயின் அவர்கள் நற்கதி பெறலாகும்' என்ருர். உடனே பகீரதன் அரசாட்சியைத் தன் மந்திரியாகிய சுமந்தரனிடம் ஒப்பித்துவிட்டுப் பிரமதேவரைக் குறித்துப் பதினுயிரம் ஆண்டுகள் தவம் இருந்தான். முடிவில் பிரமன் பகீரதன் முன்னர்த் தோன்றி, 'அன்பனே, சகரபுத்திரர் முனிபுங்கவரின் கோபத் தீயினுல் இறந்தனராதலின் அவர் களுடைய சாம்பலின்மேல் ஆகாய கங்கையைப் பாயும்படி யாகச் செய்யவேண்டும்; அப்போதுதான் அவர்கள் நற்கதி அடைவர். அக்கங்கை ஆகாயத்திலிருந்து இறங்கும்பொழுது அவளுடைய வேகத்தைத் தாங்கச் சிவபெருமானுக்கல்லாமல் வேறெவராலும் இயலாது. ஆகையால் சிவபிரானைக் குறித்துத் தவம் செய்வாயாக' என்று அருளிச் சென்ருர்.

''பகீரதன், சிவபிரானையும் நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். சிவபிரான் பகீரதன் முன் தோன்றி 'உன் கருத்தை முற்றுவிப்போம்' என மொழிந்து மறைந்தார். பின்னர் பகீரதன் கங்கையை நோக்கி ஐயாயிரம் ஆண்டு தவம் புரிந்தான். கங்கையும் அவன்முன் தோன்றி, 'என் வேகத்தை யாராலும் பொறுத்தல் இயலாது; மீண்டும் ஒரு முறை சிவபிரானைக் குறித்து தவம் செய்து உறுதி செய்துகொள்' எனக் கூறி மறைந்தாள். எனவே, பகீரதன் மீண்டும் சிவபிரானை நோக்கி இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் தவமியற்றினான். சிவபிரான் மீண்டும் பகீரதன் முன் தோன்றி, 'துளியும் கங்கைநீர் கீழே சிந்தாமல் காப்போம்' என்று அபயமளித்து மறைந்தார்.

பகீரதன் மீண்டும் கங்கையைக் குறித்துத் தவம் இயற்றத் தொடங்கினான். இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்தன. கங்காதேவியும் உலகெலாம் நடுங்குமாறு விரைந்து பூவுலகிற்கு வந்தாள். சிவபிரான் அவளைத் தன் சடையில் புல் நுனி பனி நீரைத் தாங்குமாப்போலே தாங்கிக்கொண்டு மெதுவாக ஒரு சிறிது பூமியில் விட்டார்.

''நீர்ப்பெருக்கெடுத்த கங்கை, பகீரதன் முன்னே செல்ல, தான் அதன்பின்னே வந்துகொண்டிருந்தாள். அப்பொழுது கங்கை ஜஹ்நு முனிவரின் வேள்விச் சாலையுட் புகுந்து அழிக்கக் கோபங்கொண்ட முனிவர், தமது உள்ளங்கையில் கங்கைநீர் முழுவதையும் கொண்டு குடித்துவிட்டார். பகீரதன் கங்கையைக் காணாது வருந்தி தான் அதுவரை செய்த முயற்சிகளை எடுத்துச் சொல்லிக் கங்கையை விடும்படி முனிவரை வேண்டினான். அவரும் மனம் இரங்கிக் கங்கையைத் தமது காதின் வழியாக விட்டார். பின்னர் கங்கை பகீரதனைத் தொடர்ந்து போய் சகர புத்திரர்களின் சாம்பலின் மேற் பாய, அவர்கள் யாவரும் நற்கதி அடைந்தனர். கங்கை பகீரதனால் பூவுலகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆதலின் இக்கங்கைக்கு 'பாகீரதி' என்னும் பெயரும், ஜஹ்நு முனிவரின் செவிவழியே வெளிப் போந்தமையின் 'ஜாஹ்நவீ' என்னும் பெயரும் வழங்குகிறது. இக்கங்கையில் மூழ்கினோர் தமது பாபங்கள் எல்லாம் நீங்கப்பெற்றுப் புனிதராவார்.'' இங்ஙனம் முனிவர் கூறக் கேட்டு, மைந்தர் இருவரும் கங்கையைப் போற்றினர். பின்னர் மூவரும் எழுந்து மிதிலை நோக்கிச் சென்றனர்.

அகலிகை தோற்றம்

கௌசிக முனிவரும் ராமலக்ஷ்மணரும் மிதிலைக் கோட்டைக்கு வெளியே தங்கினர். அவ்விடத்திலிருந்த ஒரு கரிய கற்பாறையின்மீது ராமனுடைய திருவடித்துகள் பட்டது.



உடனே அக்கருங்கல் உருமாறிப் பெண்ணாகி அவர்கள் எதிரே நின்றது. பெண்ணாக நின்றவளை ராமன் கண்டு வியக்க விசுவாமித்திர முனிவர் அவனை நோக்கி, 'கருங்கல்லாகக் கிடந்த இந்தப் பெண் கோதம முனிவரின் பத்தினியான அகலிகை ஆவள். இவள்மீது விருப்பம் கொண்ட இந்திரன் கோதமர் இல்லாத சமயத்தில் அவரைப்போல வடிவெடுத்து வந்து இவளுடைய கற்பினைக் கெடுத்துவிட்டான். வெளியே சென்றிருந்த கோதமர் இந்திரன் வஞ்சனையை உணர்ந்து ஆச்ரமம் அடைந்தார். அவரைக் கண்ட இந்திரன் பயந்து பூனை உருக் கொண்டு ஓடினான். கோதமர் அவனைப் பார்த்து மிக்க சினம் கொண்டார். அவன் உடலில் கண்டோர் அருவருக்கத் தக்கவாறு ஆயிரம் குறிகள் உண்டாகுமாறு சபித்தார். பின்னர் கோதமர் அகலிகையை நோக்கி, 'நீ கல்லாகக் கடவை' என்று சபித்தார். இவள் நடுங்கி தான் அறியாது செய்த பிழையைப் பொறுக்கவேண்டுமென்று வேண்டினாள். கோதமர் மனம் இரங்கி, 'தசரத குமாரனாகிய ராமன் இங்கு வரும்பொழுது அவன் பாதத்துகள் பட்ட மாத்திரத்தில் கல்லுரு நீங்கிக் காரிகையாவாய்' என்று சாப விமோசனம் அருளினார்; இந்திரன் பட்டது அறிந்த தேவர்கள் பரமனை முன்னிட்டுக்கொண்டு வந்து கோதம முனிவரை வேண்டச் சினந்தீர்ந்து, 'இந்திரன் உடலிற்றோன்றிய ஆயிரம் குறிகளும் ஆயிரம் கண்களாக' எனச் சாப மாற்றம் செய்தார். இப்போது இங்கே வந்த உனது பாதத்தின் துகள் பட்டுள்ளதால், இவள் கல்லுரு நீங்கிப் பெண் ஆயினள்'' என்று கூறி ராமபிரானை நோக்கி,

''இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர்
துயர்வண்ணம் உறுவ துண்டோ?
மைவண்ணத்(து) அரக்கி போரில்
மழைவண்ணத்(து) அண்ண லேயுன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்
கால்வண்ணம் இங்குக் கண்டேன்.''

*[வண்ணம்: விதம், வகை. **மைவண்ணத்து அரக்கி:** கரிய நிறத்தையுடைய தாடகை. **மழைவண்ணம்:** மேக நிறம்.]*

என்று ராமனைப் புகழ்ந்தார்.

அதன் பின்னர், அகலிகையுடன் மூவரும் சென்று கோதமரை அடைந்தனர். அம்முனிவர் அவர்களை எதிர் சென்று அழைத்து வந்து தக்கபடி உபசரித்தார். விசுவாமித்திரர்

கோதமரை நோக்கி ராமனுடைய பெருமையையும் வீரத்தை யும் கூறிவிட்டு அவன் பாதத்துகளால் அகலிகை தன் சாபம் நீங்கப்பெற்றதை அறிவித்தார்; அவளைச் சேர்த்துக்கொள் ளும்படி உரைத்தார். கோதமர், விசுவாமித்திரர் கூறியதற்கு இணங்கி அகலிகையை ஏற்றுக்கொண்டார். பிறகு மூவரும் எழுந்து, கோதமரிடமும் அகலிகையிடமும் விடை பெற்றுக் கொண்டு மிதிலை நகரை நோக்கிச் செல்வாராயினர்.

10. மிதிலைக் காட்சிப் படலம்

விசுவாமித்திரருடன் ராமனும் லக்ஷ்மணனும் மிதிலைமா நகரின் கோட்டை வாயிற்புறத்தை அடைந்தனர். அப் பொழுது,

''மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்(று) அழைப்பது போன்ற(து) அம்மா.''

[**மையறு:** குற்றம் நீங்கிய. **செய்யவள்:** திருமகள். **கடி:** காவல். **ஒல்லை :** விரைவில்.]

நகரினுள் நுழைந்த அம்மூவரும், அதிலுள்ள தெருக் களையும் அவற்றின் சிறப்புகளையும் பார்த்துக்கொண்டே போய், ஜனக மன்னன் மாளிகை இருக்கும் அரச வீதி வழியே சென்றார்கள். அவ்வாறு செல்லுங்கால் விசுவாமித்தி ரர் முன்னே நடக்க, ராமபிரான் நடுவிலும், லக்ஷ்மணன் அவ னுக்குப் பின்னருமாக, அரச மாளிகையின் தோற்றத்தையும், அலங்காரத்தையும் நோக்கி வியந்தபடியே போயினர்.

அப்பொழுது, மாளிகையைச் சார்ந்த கன்னி மாடத்தின் மேல்தளத்தில், தாதியர் சூழ, ஜனகன் மகளான சீதை உலாவிக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகானது, தேவர்க ளாலும் புலவர்களாலும் அளவிட்டு வருணிக்கமுடியாததாய் விளங்கியது:

''இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண்இணை மடந்தை மாரொடும்
பழகியது எனினும் இப்பாவை தோன்றலால்
அழகெனும் அணியும் ஓர்அழகு பெற்றதே.''

[**இழைகள், குழைகள்** என்பன ஆபரணங்கள். **இன்ன:** இத்தகைய. **மழை பொரு:** கரிய மேகத்தை ஒத்த. **இணை கண்:** இரண்டாகிய கண்கள். **பாவை:** சீதை.]

மேல் மாடத்தில் இவ்வாறு அழகுத் தெய்வமாகச் சீதை நிற்க, ஒருவர் கண்கள் மற்றவர் கண்களைப் பற்றியீர்த்து உணர்வும் ஒன்றாகிப் பொருந்த ராமன் நோக்கினான்; அவளும் ராமனை நோக்கினாள். ஒருவர்மீது ஒருவருக்குக் காதல் ஏற்பட்டது.

இக்காட்சியைக் கம்பர் மிக அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறார்:

''எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.''

[**இனையள்:** இப்படிப்பட்டவள். **கண்ணிணை:** இரண்டு கண்கள். **ஒன்றிட:** பொருந்த.]

பார்வை என்னும் கயிற்றால் கட்டி இழுக்கப்பட்டு வரிசிலை அண்ணனும் வாட்கண் நங்கையும் ஒருவர் மனத்தே ஒருவர் மாறிப் புகுந்தனர்.

பார்வை என்னும் கயிற்றால் கட்டி இழுக்கப்பட்டு வரிசிலை அண்ணனும் வாட்கண் நங்கையும் ஒருவர் மனத்தே ஒருவர் மாறிப் புகுந்தனர்.

அழியாத அழகுடைய ராமனை உடனே சென்றடைய முடியாத வருத்தத்தால் சீதாதேவி ஓவியம் போன்று அசையாது நின்றாள். ராமனோ விசுவாமித்திரர், லக்ஷ்மணன் ஆகிய இருவருடனும் சென்று மறைந்தான்.

பின்னர், விசுவாமித்திரரும், ராமனும், லக்ஷ்மணனும் அரண்மனையை அடைந்து ஜனக மன்னனைக் கண்டார்கள். மன்னன், அவர்களைத் தக்கவாறு உபசரித்து, அழகியதொரு மாளிகையில் தங்கி இருக்கச் செய்தான்.

அப்பொழுது, கோதமரின் புத்திரரும் ஜனகனுடைய குருவும் ஆகிய சதானந்தர் என்பவர் முனிவரும் மைந்தரும் தங்கி இருந்த மாளிகைக்கு வந்தார். அவரைக் கண்டதும் முனிவர் உபசரித்து வரவேற்று ஓர் ஆசனத்தில் அமரும்படிச் செய்தார். ராமனும் லக்ஷ்மணனும் எழுந்துவந்து சதானந்தரை வணங்கினர். அவர், இருவருக்கும் ஆசி கூற விசுவாமித்திரர் ராமன், கொடிய தாடகையை வதைத்துத் தம் வேள்வியை நிறைவேற்றியதையும், பின்னர் அவருடைய தாயான

அகலிகையின் சாபத்தை நீக்கியதையும் அறிவித்தார். சதானந்தர், தம் அன்னையின் துன்பம் நீங்கியது கேட்டு, மிக்க மகிழ்ச்சியடைந்து, ''முனிவர் பெருமானே! உம்முடைய அருள் இருக்கும்போது, இக்குமாரர்களுக்கு, எதுதான் அரியதாகும்?'' என்று வியந்து கூறி ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் விசுவாமித்திர முனிவரின் சிறப்புக்கள் யாவையும் சொல்லத் தொடங்கினுர்:

விசுவாமித்திரரின் வரலாறு

''மேன்மை வாய்ந்த இம்முனிவர் முற்காலத்தில், ஒரு நாட்டைக் காத்து வந்த அரசராவர். அவ்வாறு இருந்த இவர், ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருர். வேட்டையாடி முடிந்ததும், மிகவும் களைப்புற்று, அங்கிருந்த வசிஷ்ட முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தார். வசிஷ்டர், அரசரான இவரைக் கண்டதும் வரவேற்ருர். பின்னர், தம்மிடம் இருந்த காமதேனுவை அழைத்து இவருக்கும் இவருடைய பரிவாரங்களுக்கும் பெரிய விருந்து அளிக்கும்படி அருளினுர்.

''யாவரும் விருந்துண்டபிறகு, அக்காமதேனுவைத் தாம் அடையவேண்டும் என எண்ணிய இவர், அதனைத் தமக்குத் தருமாறு வசிஷ்டரைக் கேட்டார். அதற்கு, வசிஷ்டர், 'இப்பசு என்னுடையது அன்று. நான் கொடுத்ததற்கு அதிகாரி அல்லேன். அப்பசுவே உம்மோடு வருமாயின் அழைத்துச் செல்லலாம்' என்ருர். உடனே இவர், தமது ஏவலரை ஏவி, காமதேனுவைக் கட்டும்படிச் செய்தார். அது, கட்டை முறித்துக்கொண்டு வசிஷ்டரிடம் வந்து, 'ஸ்வாமி, இந்த அரசருக்கு என்னைக் கொடுத்துவிட்டீர்களா?' என்று கேட்டது. அதற்கு அவர், 'நான் கொடுக்கவில்லை; அவர் தாமே உன்னைப் பிடித்துக்கொண்டு போக விழைந்து செய்யும் செய்கை இது' என்ருர். உடனே, அக்காமதேனு, மனம் கொதித்து இவருடைய பரிவாரங்கள் யாவற்றையும் அழித்தது. அதுகண்ட இவருடைய குமாரர்கள் நூறு பேரும் 'வசிஷ்டர் ஏவுதலினுலேயே இப்பசு இவ்வாறு செய்தது' என்று எண்ணி அவரைக் கொல்லப்போனுர்கள். அப்பொழுது வசிஷ்டர் சினந்து விழிக்க யாவரும் இறந்தனர். மைந்தர் இறந்தது கண்டு வெகுண்ட அரசன் பல கணைகளால் வசிஷ்டரைத் துன்புறுத்தத் தொடங்கினுன். வசிஷ்டரோ தம் கையில் இருந்த பிரமதண்டத்தை எதிரில் ஊன்றி நிறுத்திவிட்டு அதன் பின்னே அமைதியுடன் அமர்ந்தார். விடும் கணைகளையெல்லாம் பிரமதண்டம் விழுங்கிவிடுவதைக் கண்ட அரசன் சிவபிரானைத் துதித்து ஓர் அஸ்திரத்தைப் பெற்று, அதனை வசிஷ்டர்மீது செலுத்தினுர். அவர் அதைப் பிடித்து வாயிலிட்டு விழுங்கிவிட்டார். அதுகண்ட இவர், 'வலிமைகள் யாவும் இருடியருக்கே உண்டுபோலும்.

நாமும் தவம்செய்து முனிவர் ஆவோம்' என்று உறுதி செய்து கொண்டு கீழ்த்திசை அடைந்து தவம் இயற்றத் தொடங்கினர்.

''இவர் செய்த பெருந்தவத்தைக் கண்டு அஞ்சிய இந்திரன் இவரது தவத்தைக் கெடுக்கத் திலோத்தமையை அனுப்பினன். அவளைக் கண்டு மயங்கிய இவர், தமது, தவம் அழிந்ததை உணர்ந்து அத்திலோத்தமையைப் பூவுலகத்துப் பெண்ணாகும்படிச் சபித்துவிட்டுத் தென்திசையை நோக்கிச் சென்று மீண்டும் தொடர்ந்து தவம் செய்துகொண்டிருந்தார்.

''அக்காலத்தில், அயோத்தி அரசனான 'திரிசங்கு' என்பவன், குருவாகிய வசிஷ்டரை அணுகி, 'நான் சரீரத்துடனே சுவர்க்கம் அடைய அருளவேண்டும்' என்று கேட்டனன். அதற்கு அவர் 'முடியாது' என்றதும், திரிசங்கு, 'இஃது உம்மால் முடியாது என்றால், நான் வேறு ஒருவரால் முடித்துக் கொள்வேன்' என்று கூற, வசிஷ்டர் சினந்து, 'நீ சண்டாளன் ஆகக் கடவை' என்று சாபம் கொடுத்தனர். உடனே அவனுக்குச் சண்டாள வடிவம் வந்தது.

''பிறகு, அவன், அந்த வடிவத்துடனே, தவத்திலிருந்த விசுவாமித்திரரை அடைந்து தன் குறையை முறையிட்டான். இம்முனிவர், 'நாம் வேள்வி செய்து உன்னைச் சரீரத்துடன் சுவர்க்கம் அனுப்புவோம்' என்றார். அவ்வாறே வேள்வி செய்து முடிப்பதற்காக முனிவர்களை எல்லாம் அழைத்தார். முனிவர்கள் யாவரும் திரண்டு வந்தனர். ஆனால் வசிஷ்ட குமாரர்கள் வர மறுத்தனர். அதனால் சினந்த விசுவாமித்திர முனிவர் அவர்களை வன வேடர்களாகும்படிச் சபித்தார். அதன் பின்னர் வேள்வியை முடித்து திரிசங்கு மன்னனை விமானத்தில் ஏற்றி, தேவர் உலகுக்கு அனுப்ப, அவனைக் கண்ட தேவர்கள் சண்டாளன் என்று சொல்லிக் கீழே தள்ளி விட்டனர். உடனே திரிசங்கு தலைகீழாகக் கூக்குரலிட்டுக் கொண்டே கீழே விழ இவர், அத்தேவர்களைச் சினந்து, 'இப்பொழுதே தேவருலகுமுதல் யாவையும் படைப்பேன்' எனக் கூறி, அவ்வாறே செய்யத் தொடங்கினர். அப்பொழுது தேவர்கள் அஞ்சி, திரிசங்குவுக்கு நக்ஷத்திரப் பதவி அளிப்பதாகச் சொல்லி, இவரையும் ராஜரிஷி எனப் போற்றிச் சிறப்பித்தனர்.

''பின்னர், இவர் மேற்குத் திக்கை அடைந்து தவம் செய்திருந்தார். அப்பொழுது, 'அம்பரீஷன்' என்ற அரசன் செய்யும் 'புருஷமேதம்' என்ற வேள்விக்குப் பசுவாக அமைந்தவனும், தமது தமக்கையின் மகனுமான 'சுனச்சேபன்' என்பவனைக் கண்டார். அவன் இவரிடம், தனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறவும், இவர் அவனது உயிரைக் காக்க எண்ணி, தம்முடைய நான்கு பிள்ளைகளையும் அழைத்து, அவர்களில் ஒரு

வனை அம்பரீஷனுடன் செல்லும்படிக் கூறினர். யாரும் செல்ல மறுத்ததால் சினங்கொண்டு, மைந்தர் நால்வரையும் வேடர்களாகுமாறு சாபமிட்டு, பின்பு மந்திர மகிமையால், சுனச்சேபனுடைய உயிரைக் காத்து, அம்பரீஷனுடைய வேள்வியினையும் நிறைவேற்றினர்.

''அப்பால், விசுவாமித்திரர், வடதிசையை அடைந்து, மிகவும் கடுந்தவம் செய்யலானர். அத்தவத்தினல் எழுந்த வெப்பமானது எங்கும் தாக்கவே பிரமன் முதலான தேவர்கள் எல்லோரும் இவரை அடைந்து, 'உலகத்தில் உம்மைப் போல எவரும் இத்தகைய தவம் செய்யவில்லை. தவத்தில் மிக்க நீர், எல்லா முனிவர்களைக் காட்டிலும் மேம்பட்டுவிட்டீர். ஆதலின், இனியும் தவம் செய்வதை நிறுத்திக்கொள்ளும்' என்று கூறி, இவரைப் பலவாறு புகழ்ந்து சென்றனர். அதுமுதல் இவர், மற்ற முனிவர்களைக் காட்டிலும் சிறந்த முனிவராக விளங்குகிருர். இத்தகைய முனிவரின் கருணையால் உங்களுக்கு ஒரு குறைவும் நேராது'' என்று கூறி விசுவாமித்திர முனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு, சதானந்தர் தம் இருப்பிடம் சென்றர்.

அப்பொழுது, சூரியன் மறைந்தான். இரவு தோன்றியது. அதனல் விசுவாமித்திரரும், ராமனும், லக்ஷ்மணனும் தங்களுக்கு ஏற்ற இடங்களில் சயனித்துக்கொண்டனர். ராமன் தனிமையில் இருந்தபடியால், அன்றைய பகற்பொழுதில், கன்னிமாடத்தே தான் கண்ட சீதையை அடையும் நாள் எப்பொழுது வருமோ என்ற கவலையுடன் கண் உறக்கம் கொள்ளாது வருந்திக்கொண்டிருந்தான். அவ்விதமே, சீதையும் அந்த இரவில் கண் உறங்காமல், ராமனை நாயகனக அடையும் நாள் எந்நாளோ என்று ஏக்கம் கொண்டிருந்தாள். இவ்விருவரின் துன்பமும் ஒழியுமாறு இரவு நீங்கிச் சூரியன் உதயமாயினன்.

அதன் பின்னர், மூவரும் தமது துயில் உணர்ந்து எழுந்து, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, ஜனகன் அமைத்துள்ள வேள்வி மண்டபத்தை அடைந்தனர்.

ஜனக மன்னரும், தாம் தொடங்கிய வேள்வியை முடித்துவிட்டு அரண்மனை மண்டபத்தை அடைந்து முனிவர்களோடு வீற்றிருந்தார். விசுவாமித்திரருக்கு அருகில் அமர்ந்திருந்த ராமலக்ஷ்மணர்களைக் கண்டு அவர்களுடைய வடிவழகினை வியந்தான். பின் விசுவாமித்திரரைத் தொழுது இவர்கள் யாவர் என்று வினவினன். அப்பொழுது, விசுவாமித்திரர், ஜனகனை நோக்கி, ''அரசனே! இவ்விருவரும் தசரத மன்னனின் புதல்

வர்கள்; உனது விருந்தினர்களாக நீ இயற்றும் வேள்வியைக் காண வந்துள்ளனர். இவர்கள் உன்னிடத்திலுள்ள சிவனது வில்லையும் எடுத்து வளைத்து நாண் ஏற்றும் திறமை உடையவர் கள்'' என்று கூறி, சிறப்பு வாய்ந்த அவர்கள்தம் குலத்து அரசர்களின் வரலாற்றுடன், அவ்விரு குமாரர்களின் வரலாற் றையும் சொல்வாராயினர்.

11. குலமுறை கிளத்து படலம்

''சூரியகுல முதல்வனை வைவசுவதமனுவினை அறியாதவர் கள் எவரும் இரார். பிருது, இக்ஷ்வாகு, காகுத்ஸ்தன், அமுதம் கடைந்தளித்த அண்ணல், மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சாகரர், பகிரதன் சத பரிமகம் புரிந்தோன், ரகு ஆகிய புகழ் பெற்ற பேரரசர்கள் இச்சிறந்த சூரிய குலத்தில் தோன்றியவர் களே. பின்னர், அக்குலத்தில் தோன்றிய அயமகாராசன், இந்துமதி என்பவளை மணந்து தசரதனை மகனாக அடைந்தான்.

''துனியின்றி உயிர்செல்லச் சுடராழிப் படைவெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்
மனுவென்ற நீதியான் மகவின்றி வருந்துவான்.''

[துனி: அச்சம். **சுடராழிப்படை:** ஜோதியுள்ள சக்கரப் படை. **வெய்யோன்:** சூரியன். **பனிவென்றபடி:** பனியை வெற்றி கொண்ட விதம். **படி:** பூமி. **கவசம்:** சட்டை, அங்கி. **மனு வென்ற:** மனுவையும் வெற்றி கொண்ட. **மகவு:** குழந்தை].

''அத்தசரத மன்னன், நெடுங்காலம் நாட்டை ஆட்சி செய்துவந்தும் தனக்குப் புத்திரர் இல்லாது வருந்தினன். அதன்மேல் தசரதன், அத்துன்பம் நீங்க எண்ணி, கலைக் கோட்டு முனிவரான ருசியசிருங்கரை உதவியாகக் கொண்டு, மகவு அளிக்கத்தக்க ஒரு வேள்வி செய்தனன். அதன் பயனாக, தசரத மன்னனுக்கு, முதல் மனையாளாகிய கோசலையிடம் ராமனும், இரண்டாம் மனைவியான கைகேயியிடம் பரதனும், மூன்றும் மனையாளான சுமித்திரையிடம் லக்ஷ்மணனும் சத் துருக்கனனும் புதல்வர்களாகப் பிறந்தனர். தசரதன் தன் புத்திரர்கள் தக்க வயதினை அடைந்ததும் அவர்களுக்கு உப நயனம் முதலியன செய்வித்தான். வேதம் முதலிய சகல கலைகளையும் கற்பித்து உண்மையில் இவர்களை வளர்த்தவர் வசிஷ்டரே.

''இவ்வாறு இவர்கள் வளர்ந்து வருங்காலத்தில், எனது வேள்விக்குத் துன்பம் செய்யும் கொடியோரை அழிக்க எண்ணிய நான், ராமன், லக்ஷ்மணன் ஆகிய இவ்விருவரையும் அழைத்துக்கொண்டு வனத்தை அடைந்தேன்; அடைந்த உடனே எதிரில் தாடகை தோன்றினாள். அப்பொழுது ராமன் அவள்மீது தன் பாணத்தைச் செலுத்த, அவள் அடிபட்டுக் கீழே சாய்ந்தாள். ஆஹா! அவளை அடித்துக் கீழே சாய்த்த வீரத்தையும் வன்மையையும் எவ்வாறு விரித்துரைப்பேன்!

''அலைபுருவக் கடலுருவத் தாண்டகைதன் னிண்டுயர்ந்த
நிலைபுருவப் புயவலியை நீபுகல நோக்கையா
உலைபுருவக் கனல்உமிழ்கண் தாடகைதன் உரம்உருவி
மலைபுருவி மரம்உருவி மண்உருவிற்(று) ஒருவாளி!''

''பின்னர், அவளுடைய மக்கள் இருவருள் ஒருவனைக் கொன்றான். மற்றும் ஒருவனைத் தன் பாணத்தால் அடிக்க அவன் சென்று விழுந்த இடம் யாம் அறியேம். இவ்வாறு இவர்கள், அக்கொடியோர்களை ஒழித்து என் வேள்விக்கு இடையூறு நேராமல் காத்தனர். மேலும்,

''கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன்
போதுநின்ற தெனப்பொலிந்த பொலன்கழற்கால் பொடிகண்டாய்
காதலென்றன் உயிர்மேலும் இக்கரியோன் பால்உண்டால்
ஈதிவன்றன் வரலாறும் புயவலியும் எனஉரைத்தான்.''

[**கோதமன்றன் பன்னி:** கோதமன் மனைவியாகிய அகலிகை. **போது:** தாமரை மலர். **பொலன் கழல்:** பொன்னாலாகிய வீரக் கழல்.]


12. கார்முகப் படலம்

விசுவாமித்திரர் கூறியவற்றைக் கேட்ட ஜனக மன்னன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். பிறகு அவன் முனிவரை நோக்கி, ''ஸ்வாமி! இந்த ராமனுக்கு, என் மகள் சீதையைத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்ற விருப்பம் உண்டாகிறது. ஆனால், என்னிடம் உள்ள சிவதநுசை எடுத்து நாணேற்றி வளைப்பவருக்கே அவளைக் கொடுப்பது என்று உறுதி செய்துள்ளதால், அஃது என் விருப்பத்திற்குத் தடையாக இருக்கிறது. அந்த வில்லினை ராமன் வளைப்பானேயாகில், என் மகள் சீதை தவத்தைச் செய்தவள் ஆவாள். நானும் என் கவலையை ஒழித்தவன் ஆவேன்'' எனக் கூறினான்.

பின்னர், அந்தச் சிவதநுசைக் கொண்டுவரும்படி அங்கிருந்த ஏவலர்க்குக் கட்டளை இட்டான். உடனே, யானையைப் போன்ற வலிமையை உடைய அறுபதினாயிரம் வீரர்கள் அந்த வில்லினைப் பெரிய கயிற்றாற் கட்டி, இடைஇடையே தண்டு களைக் கொடுத்துத் தம் தோளில் சுமந்து கொண்டுவந்து வைத் தனர். மேருமலை போன்ற அவ்வில்லைக் கண்டவர்கள், 'இதனை இதற்குமுன் பயன்படுத்திக்கொண்டிருந்தவன் யாவனோ!' என வியந்தனர். ஜனகனும், அந்த வில்லையும் ராமனையும் மாறி மாறிப் பார்த்துத் தன் மகளையும் எண்ணிக் கலங்கினான். அழகிலும் வீரத்திலும் சிறந்த ஐயன் வந்தும், சிவதநுசை நாணேற்றுபவனே சீதைக்கு உரியவன் என்று அறிவிக்கப்பெற் றிருத்தலின் தன் விருப்பப்படி ராமனை உடனே சீதாமணாள னாகச் செய்யமுடியாதது குறித்து மிகவும் வருந்தினான்.

ஜனக மஹாராஜனின் மனக்கருத்தை உணர்ந்த சதானந் தர், அந்த வில்லின் வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார். அவர் விசுவாமித்திரரை நோக்கி, ''முனிவரிற் சிறந்தவரே! முன்காலத்தில் உமாதேவியின் தந்தையான தக்கன் என்பவன், சிவபிரானையும் உமையையும் அவமதித்து ஒரு வேள்வியைச் செய்தான். சிவபிரான் சினம் கொண்டு, இந்த வில்லை ஏந்திச் சென்று, அவன் வேள்வியைச் சின்னாபின்னமாக்கினார். பிறகு சிவபிரான் தமது சினத்தை நீக்கி, வில்லினை ஜனக மன்னரின் முன்னோர்களில் ஒருவரான தேவராத மன்னரிடம் கொடுத்துச் சென்றார். அதுமுதல் இந்த வில் இங்கேயே இருந்துவரு கிறது. இது இங்ஙனமாக, ஒரு சமயம் வேள்வி ஒன்று செய் யும் பொருட்டு ஜனகர் பொற்கலப்பைக்கு வச்சிரக் கொழு வைச் செருகிப் பூமியை உழுதார். அப்போது அக்கொழுமுகத் தில் பூமிதேவியே திருவுருத்தாங்கி வந்தாற்போலச் சீதை தோன்றினாள். உழுபடைச்சாலுக்குச் 'சீதை' என்று பெயர். ஆதலின், அதில் தோன்றிய அவளுக்கு, அப்பெயரே இடப் பட்டது. இச்சீதையின் குணங்களை நான் எவ்வாறு புகழ்ந்து கூறுவேன்? உலகத்து நற்குணங்கள் யாவும் இவளிடமே தஞ்ச மடைந்தன. 'அழகு' பெருந்தவம் செய்து இவளைப் பெற்றது போலும். அரசர்கள் பலர், அவளை மணம் செய்துகொள்ள வந்தனர். அவர்களுள் எவரேனும் ஒருவருக்குக் கொடுத்தால், மற்றையோரின் பகைமை உண்டாகும் என்பதை ஜனகர் அறிந்து, 'இந்த வில்லை வளைப்பவருக்கே சீதை உரியவள் ஆவள்' என்று அறிவித்துவிட்டார்.''

''அன்றுமுதல் இன்றளவும் ஆரும்இந்தச் சிலையருகு
சென்றுமிலர்; போயொளித்த தேர்வேந்தர் திரிந்துமிலர்;
என்றும்இனி மணமுமிலை என்றிருந்தேம்; இவன்ஏற்றின்
நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காது...''



சதானந்தர் கூறி முடித்ததும், விசுவாமித்திரர் ராமனுடைய திருமுகத்தைப் பார்த்தார். அப்பார்வையானது, ''நீ வில்லினை வளைக்கிறாயா?'' என்று கேட்பதுபோல் இருந்தது. ராமனும் அவர் குறிப்பை உணர்ந்து,

''பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்தகொ ழுங்கன லென்ன எழுந்தான்;''

அப்போது,

''அழிந்தது வில்லென விண்ணவர் ஆர்த்தார்
மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றார்.''

[**கொழுங்கனல்:** செழுமையான நெருப்பு. **ஆர்த்தார்:** ஆரவாரித்தார். **முப்பகை:** காமம், வெகுளி, மயக்கம் என்பன. **வென்றார்:** வெற்றி அடைந்தவர், முனிவர்கள்.]

இந்நிலையைக் கண்ட மிதிலை நகரப் பெண்கள், ''ராஜரிஷி என்று புகழ்பெற்ற ஜனகன் உண்மையில் வெள்ளை மனமுடையான்; அறியாமை மிகுந்தவன்; இவ்வழகிய ராமன் சீதையை மணக்கின்றேன் என்று கூறுவானாயின் 'கொள்க' என்று சீதையை மணஞ்செய்து கொடுக்காமல் சிவதநுசை எடுத்து எதிரில் இட்டானே'' என்று இரங்கினர். ஆனால், ராமபிரான் மேருமலைபோலும் கீழே கிடந்த வில்லை, சீதைக்குச் சூட்டி மகிழ்வதற்காக எடுத்த மாலைபோல் எளிதே எடுத்தான். எடுத்ததைத்தான் யாவரும் பார்த்தனர்.

''தடுத்திமை யாமல் இருந்தவர் தாளில்
மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.''

[**தாளில்:** பாதத்தில். **மடுத்தது:** ஊன்றியது. **நாண:** விற்கயிறு. **நுதி:** நுனி. **கடுப்பினில்:** விரைவில். **இற்றது:** ஒடிந்தது.]

வில் முறிந்ததால் உண்டான பேரோசையால் அண்டகோளம் பிளந்துவிட்டதோ எனத் தேவர்கள் அஞ்சினர்; உலகைத் தாங்கி நிற்கும் ஆதிசேஷனும் உலகை அழிக்கும் 'இடி' இதுவோ எனக் கலங்கினான். பின்னர் உண்மை உணர்ந்த அமரர்கள் ராமன்மீது பூமழை பொழிந்தனர். ஜனகன் மகிழ்ந்தான். நகரமாந்தர் கொண்ட மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை: சிலர் தசரத குமாரன் என்பர்; சிலர் தாமரைக் கண்ணன் என்பர்; சிலர் மேகவண்ணன் என்பர்; சிலர் காயாம்பூ நிறத்தவன் என்பர்; சிலர் 'இவன் மானுடன் அல்லன்; அவ்வாறு

சொல்பவர் அறியாதவர்; பாற்கடலுள் பயிலும் பரந்தாமன் என்று அறுதியிட்டுக் கூறுவர். இன்னும் சிலர்,

''நம்பியைக் காண நங்கைக்(கு) ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும் தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்
தம்பியைக் காண்மின் என்பார் தவமுடைத்(து) உலகம் என்பார்
இம்பர்இந் நகரில் தந்த முனிவனை இறைஞ்சும் என்பார்.?''

அத்தருணத்தில், ''ராமனைக் கணவனாக அடைதல் கூடுமோ?'' எனப் பலவாறு எண்ணி வருந்திக்கொண்டிருந்தாள் சீதை:

''விண்ணுளே யெழுந்தமேகம் மார்பின்நூலின் மின்னெடுடும்
மண்ணுளே இழிந்ததென்ன வந்துபோன மைந்தனார்
எண்ணுளே இருந்தபோதும் யாவரென்று தேர்கிலேன்
கண்ணுளே இருந்தபோதும் என்கொல்காண் கிலாதவே''

அந்நிலையில், நீலமாலை என்ற தோழியானவள் ஓடோடிப் போய் ராமன் வில்லை வளைத்து ஒடித்ததைக் கூறினாள். அதனைக் கேட்ட சீதை, ''நாம் விரும்பியவரே வில்லை வளைத்திருப்பார்'' என்று மகிழ்ந்தாள். ஆயினும், ''அவரல்லாது வேறு யாராவது வளைத்திருந்தால் நான் உயிரையே விட்டுவிடுவேன்'' என்று அவள் உறுதி செய்துகொண்டாள்.

சீதை இவ்வாறு இருக்க, சபையில் இருந்த ஜனக மன்னன், விசுவாமித்திர முனிவரைப் பார்த்து, ''வில்லினை வளைத்த வீரனாகிய ராமனுக்குச் சீதையை மணம் செய்துகொடுப்பதில் தடையேதும் இல்லை. திருமண காரியத்தை இப்பொழுதே செய்ய விழைகின்றீர்களோ? அல்லது தசரதரையும் இவ்விடத்தில் வரவேற்றுப் பின்னர் திருமணம் நிகழ்த்த விருப்பமோ?'' என வினவினான். அதற்கு அவர், தசரத மன்னனை வரவழைத்த பிறகே மணவினை செய்யத்தக்கது என்றார். அதன்மேல், ஜனக மன்னன், தசரதனுக்குத் திருமண ஓலை எழுதுவித்துத் தூதுவர்மூலம் அயோத்திக்கு அனுப்பினான்.

13. எழுச்சிப் படலம்

மிதிலையில், ராமன் வில் ஒடித்தபோது எழுந்த ஓசையானது அயோத்திக்கும் கேட்டதால், ''இந்தப் பேரோசை எதனால் உண்டாயதோ?'' என்று தசரதன் ஏதும் அறியமுடியாமல் இருந்தான்.

மிதிலையிலிருந்து வந்த தூதுவர், தசரத மன்னனை அடைந்து, வணங்கித் தொழுது ஜனக மன்னன் அனுப்பிய

திருமண ஓலையை அவனிடம் கொடுத்தனர். அதனை, அவன் பெற்றுத் தன் மந்திரிகளுள் ஒருவனிடம் கொடுத்து வாசிக்கக் கட்டளை இட்டான். மந்திரி வாசித்ததைக் கேட்டதும், அன் ெறொரு நாள், தான் கேட்ட ஓசையானது, மிதிலையில், ராமன் வில்லை ஒடித்ததால் உண்டான ஓசையே என்று அறிந்ததுடன் ராமனுடைய திருமணத்தைப்பற்றியும் வரைந்துள்ளதைக் கேட்டு உள்ளம் பூரித்தான்.

பின்னர், தசரதன், நால்வகைச் சேனைகளையும் சித்தம் செய்து மிதிலையை நோக்கிச் செல்லுமாறு பணித்தான்:

''நித்திய நியமம் முற்றி நேமியான் பாதம் சென்னி
வைத்தபின் மறைவ லோர்க்கு வரம்பறு மணியும் பொன்னும்
பத்திஆ னிரையும் பாரும் பரிவுடன் நல்கிப போனன்
முத்தணி வயிரப் பூணன் மங்கல முகூர்த்த நன்னுள்.''

14. வரைக் காட்சிப் படலம்

அவ்வாறு புறப்பட்டவர்கள், இரண்டு யோசனை தூரம் சென்றதும், சந்திரசைலத்தை அடைந்தனர்.

அம்மலை,

''கண்ணுக்கு இனிதாகி விளங்கிய காட்சி யாலும்
எண்ணற்கு அரிதாகி இலங்கு சிரங்க ளாலும்
வண்ணக் கொழுஞ்சந் தனஞ்சேர்ந் தநுமார் பணிந்த
அண்ணல் கரியோரன்றனை ஒத்தது.''

தசரத மன்னன், மலையின் தோற்றத்தையும் வளமையை யும் காண விரும்பி ரதத்தினின்று இறங்கினன். பிறகு உடன் வந்த யாவருடனும் மலையின் அடிவாரத்தை அணுகினன். அங் கிருந்த மான் முதலிய மிருகங்கள், தங்களைக் கண்டு அஞ்சி ஓடுவதை நோக்கி அவர்கள் வியந்தனர்; மற்றும் அம்மலை யிடத்துள்ள பலவிதமான மரங்களையும், நீர்ச்சுனைகளையும் கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

அப்பொழுது, சூரியன் மறைந்து இருள் சூழத்தொடங்கியதால், தாம் இறங்கிய இடத்திற்கு வந்து, அங்கு அமைக்கப்பட் டிருந்த விடுதிகளில் தங்கி அன்றிரவைக் கழித்தனர்.

15. பூக் கொய் படலம்

மறுநாள் பொழுது புலர்ந்தது; காலைக் கதிரவன்,

'மீனுடை எயிற்றுக் கங்குல் கனகனை வெருண்டு வெய்ய
கானுடைக் கதிர்கள் என்னும் ஆயிரம் கரங்கள் ஓச்சித்
தானுடை உதயம் என்னும் தமனியத் தறியி னின்று
மானுட மடங்கல் என்னத் தோன்றினன்....''

[மீனுடைக் கங்குல்: விண்மீன்களால் பொலியும் இரவு. எயிற்றுக் கங்குல்: கோரப் பற்களையுடைய இரணியன். உதயம் என்னும் தமனியத் தறி: உதயகிரியாகிய பொன் தூண். மானுடமடங்ல்: நரசிங்கம்.]

காலைக் கடன்களை முடித்துக்கொண்ட தசரதன் முதலியோர் மீண்டும் புறப்பட்டு நண்பகல்வரை பயணம் செய்து சோணை நதிக்கரையை அடைந்தனர்.

சோணை நதிக்கரையை அடைந்த தசரத மன்னன் முதலியோர் சூரிய வெப்பத்திற்கு ஆற்ருராகி அங்கே தங்கினர். யாவரும், தத்தம் வாகனங்களினின்று கீழே இறங்கித் தண்ணறுஞ் சோலைகளில் தம் மனம் சென்றவாறு உலாவிக் களித்தனர். மன்னர் மைந்தரும் மகளிரும் அங்குள்ள ஓர் அழகிய பூஞ்சோலையைக் கண்ணுற்று அதனுட் சென்று பலவித மலர்களைக் கொய்து மாலைகளாகத் தொடுத்து ஒருவருக்கு ஒருவர் அணிவித்துக்கொண்டு சல்லாபித்து மகிழ்ந்திருந்தனர்.

16. நீர் விளையாட்டுப் படலம்

பின்னர் யாவரும், அச்சோலையில் விளங்கிய பலவித நிறங் கொண்ட நீர்ப் பூக்களையுடைய தடாகங்களைக் கண்டனர். காணவே, மைந்தரும் மகளிரும், மிக்க மகிழ்வு பொங்க அணி அணியாக அதில் இறங்கித் தம் கைகளில் நிறைய நீரை வாரி, ஒருவர்மீது ஒருவர் இறைத்துக்கொண்டு ஆரவாரத்துடன் நீராடினர்.

அவ்வாறு நீராடிய செய்கை,

''கங்கைவார் சடையோன் அன்ன மாமுனி கனல மேனுள்
மங்கையர் கூட்டத் தோடும் வானவர்க்(கு) இறையோன் செல்வம்
பொங்குபாற் கடலிற் செல்லும் தோற்றமே போன்ற(து) அன்றே.''

[கங்கைவார் சடையோன்: சிவபிரான். மாமுனி: துர்வாச முனிவன். இம்முனிவன் கோபத்தீயால், முன்னுளில் இந்திர னுக்குரிய மங்கையருடன் செல்வம் யாவும் திருப்பாற் கடலில் சென்று மறைவதுபோலிருந்தது.]

இவ்வாறு புனல் விளையாடி யாவரும் இன்புற்றிருக்க,

''மானின் நோக்கியர் மைந்தரொ(டு) ஆடிய
ஆன நீர்விளை யாடலை நோக்கினன்
தானும் அன்னது காதலித் தானென
மீன வேலையை வெய்யவன் எய்தினன்.''

17. உண்டாட்டுப் படலம்

பின்னர், நிலாத் தோன்ற, அரசர் முதலியோர், மைந்தரும் மகளிரும் சூழ பலவித சுவையுள்ள கனிகளை அருந்தினர். தேனைப் பருகினர்; பின்னர், மகிழ்ந்து விளையாடியவாறு அந்த இரவைப் போக்கினர். சூரியன் உதித்ததும், அதுபொழுது செய்யவேண்டிய கடன்களை முடித்துக்கொண்டு, சேனைகள் சூழ, யாவரும் புறப்பட்டுக் கங்கைக் கரையை அடைந்தனர்.

18. எதிர்கொள் படலம்

அயோத்தி அரசனுன தசரதன் முதலியோர், சேனைகள் சூழ மதயாறு பாயும் வேழக் கடலோடு கங்கையைச் சேர்ந்த தைக் காவலர்களால் அறிந்த ஜனக மன்னன், அவர்களை எதிர் கொண்டு அழைத்து வர எண்ணினன். அவ்வாறே, பெண்டிர் கள், பலவித மங்கலப் பொருள்கள் வைத்துள்ள பொன் தட்டுக்களை ஏந்திவர ஜனகன் தன் மந்திரிமாரோடும் அந்தணர் களோடும் புறப்பட்டு, தசரத மன்னனைக் கண்டு வரவேற்முன். காணலும் தசரதன் மிகவும் மகிழ்ந்து ஜனக மஹாராஜனையும் தன் தேரில் வந்து ஏறிக்கொள்ளுமாறு அன்புடன் கூற இரு வரும் ஒரே தேரில் ஏறி மிதிலையை நோக்கிச் சென்றனர்.

அப்பொழுது, அங்கு அடைந்த ராமனும் லக்ஷ்மணனும் தந்தையையும் அன்னையரையும் கண்டு வணங்கினர்கள். பின்பு, பரதனும் சத்துருக்கனனும் தேரினின்றும் இறங்கி, ராமனைத் தழுவிக்கொள்ள, அவன், அவர்களுக்கு ஆசி கூறி வரவேற்முன். அப்போது நால்வரும் விளங்கிய தன்மையைக் கம்பர்,

''கோல்வரும் செம்மையும் குடைவரும் தண்மையும்
சால்வரும் செல்வமென்(று) உணர்பெருந் தாதைபோல்
மேல்வரும் தகைமையான் மிகவிளங் கினர்கள்நாம்
நால்வரும் பொருவில்நான் மறையெனும் நடையினர்.''

என்று கூறினர்.

பின்னர், சங்குகளுடன் பல இன்னிசை வாத்தியங்களும் முழங்க, தசரத மன்னன், தன் தேவியருடனும் மைந்தர்களுடனும் அழகிய ரதத்தின்மீது அமைந்து, மிதிலைமா நகரின் அரச வீதி வழியே வருவானாயினன்.

19. உலாவியற் படலம்

தந்தையான தசரதனுடனும் தாய்மாருடனும் தேரின்மீது அமர்ந்து, வீதி வழியே வருகின்ற ராமனைக் காணவேண்டும் என்ற பெருவிருப்பத்தால், அரச வீதியில்.

''மானினம் வருவ போன்றும் மயிலினம் திரிவ போன்றும்
மீனினம் மிளிர்வ போன்றும் மின்னினம் மிடைவ போன்றும்
தேனினம் சிலம்பி ஆர்ப்பச் சிலம்பினம் புலம்ப எங்கும்
பூநனை கூந்தல் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.''

[**இனம்:** கூட்டம், சாதி. **மீன்:** நட்சத்திரம். **மிளிர்தல்:** பிரகாசித்தல். **மின்:** மின்னல். **சிலம்பி:** ஒலித்து. **நனை:** நனைந்த. **பொம்மென:** மிகுதியாக, ஓர் அநுகரண ஓசை.]

இவ்வாறாக, வீதியின் இருபுறங்களிலும் நெருக்கமாக வந்து கூடிய அப்பெண்கள், ராமனைக் கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தனர். அப்போது,

''தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கை கண்டாரும் அஃதே!
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னான்
உருவுகண் டாரை யொத்தார்.''

[**தொடு கழல்:** அணிந்த வீரக்கழலை உடைய. **தாள்:** திருவடிகள். **தடக்கை:** பெரிய கைகள். **ஊழ்கொண்ட சமயத்து அன்னான்:** முறைமையாகக் கொண்ட மதங்களில்.]

அப்போது, தசரத மன்னன் முதலியோர் ஜனகனுடைய சபாமண்டபத்தை அண்மித் தேரினின்று இறங்கி, மண்டபத்தினுள்ளே சென்று தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்தனர். ராமன் முதலியோர் வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகிய முனிவர்களை வணங்கிப் பின்னர் உரிய ஆசனங்களில் அமர்ந்தனர். தசரத சக்ரவர்த்தியும் அங்கு வந்திருந்த மாதவ முனிவர்களையெல்லாம் வணங்கிச் சிறந்ததோர் ஆசனத்தில் அமர்ந்தான்.

20. கோலங்காண் படலம்

தசரத மன்னன், தன் புதல்வர்களுடன் மண்டபத்தில் அமர்ந்திருக்கும்பொழுது, வசிஷ்ட முனிவர், ஜனக மன்னனை நோக்கி, ''தங்கள் திருமகளாகிய சீதையை, இங்கு வருமாறு அழையுங்கள்'' என்றார். அவ்வாறே அவளை அழைத்து வரும்படி ஜனகன் தாதியருக்குக் கட்டளை இட்டான்.

உடனே அவர்கள் சென்று, சீதையை அலங்கரித்தனர். அவ்வாறு சீதையைப் புனைந்ததைக் கம்பர்.

''அமிழிமைத் துணைகள் கண்ணுக்(கு)
அணியென அமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை
உருவினை மறைப்ப(து) ஓரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன
அழகினுக்(கு) அழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞாலம்
ஏழைமை யுடைத்து மாதோ.''

[**அமிழ்:** அமிழ்ந்த. **உமிழ்:** கக்குகின்ற. **இமிழ்:** ஓசை. **பரவை:** கடல். **ஞாலம்:** உலகம்.]

என்று கூறுகின்றார்.

அவ்வாறு அலங்கரித்தபின்னர், சீதையை சபா மண்டபத்திற்கு அழைத்துவந்தார்கள். சபையில் உள்ளோர் அனைவரும் சீதையின் அழகைக் கண்டு வியந்தார்கள். அப்பொழுது, சீதை, சபையில் உள்ள பெரியோர்கள் யாவரையும் வணங்கினாள். அவளைக் கண்ட ராமன் 'இன்னமிழ்து எழக் களிகொள் இந்திரனை ஒத்து' விளங்கினான். சீதாபிராட்டியோ தன் கையில் உள்ள வளையல்களைத் திருத்திக்கொள்பவள்போல, ராமபிரானைத் தன் கடைக்கண்ணினால் பார்த்து, ''அன்று



கன்னிமாடத்திலிருந்து தெருவில் வரக்கண்டவர் தாம் இவர்'' என்று மனத் தெளிவு அடைந்து மகிழ்ச்சி கொண்டாள். அவ்விருவரையும் கண்ட வசிஷ்டர், 'ராமன், சங்கொடு சக்க ரம் ஏந்தும் ஐயனே; இவள் செந்தாமரை வாழ் செந்திருவே' என உணர்ந்து மகிழ்ந்தார்.

பிறகு தசரதர் விசுவாமித்திர முனிவரைப் பார்த்து, ''என்று திருமணம் நடத்தத் திட்டம்?'' என்று கேட்டார். அதற்கு அவர் ''நாளைய தினமே'' என்ருர்.

யாவரும் எல்லையில்லா மகிழ்ச்சியுடன் இருக்கைகளினின்றும் எழுந்து தங்கள் இருப்பிடத்தை நாடிச் செல்வாராயினர்.

21. கடிமணப் படலம்

திருமணத்தை முன்னிட்டு, மிதிலைமாநகரம் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டது. இந்திரனுடைய சிங்கார மண்டபத்தைப் போலத் திருமண மண்டபம் அமைக்கப்பட்டது. ஜனகன் 'நாளைத் திருமணம்' என்று முரசறைந்து நகர மாந்தர்க்கு அறிவிக்க ஆணையிட்டான். அன்று பகல் முழுவதும் இரவு முழு வதும் மக்கள் நகரமுற்றும் ஒப்பனை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இரவு கழிந்ததே தெரியவில்லை.

கதிரவனும் தன் குலத்தே வந்துதித்த கொண்டல் வண்ணனை அழகிய மணக்கோலத்தில் காண விழைந்தாற் போல ஒற்றையாழித் தேரேறி இருள்கிழித்து விரைந்து வந்தான். சிற்றரசர்கள், பேரரசர்கள், முனிவர்கள், அந்தணர் கள், நகர மக்கள் ஆகியோர் திரள்திரளாக வந்து மண்டபத் தில் கூடினர். ராமன், திருமணக் கோலத்துடன் அங்கு எழுந் தருளினன். சீதையையும், சேடியர்கள் அலங்கரித்து மணமண் டபத்திற்கு அழைத்து வந்தனர். திருமண நேரம் நெருங்கியது. வசிஷ்ட முனிவர், வேதியரும் முனிவரும் சூழ, மணவறையின் அருகே அமர்ந்து, தண்டுலம் (அரிசி) பரப்பி, தருப்பை சாத்தி, மறைநூல் விதிப்படி வட்ட வடிவமாகக் குண்டம் அமைத்து, ஓமத் தீயினை மூட்டினுர். அதில் பசுவின் நெய்யை ஆகுதி இட்டு, ஓமத்தை வளர்த்தனர். அப்பொழுது, அந்த ஓமத்தின்முன் ராமபிரானும் சீதாபிராட்டியரும், நீண்டதோர் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

''மன்றலின் வந்து மணத்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்றுணை அன்னமும் எய்தி இருந்தார்
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்.''

[*தவிசு: ஆசனம். அன்னம்: அன்னத்தைப்போன்ற சீதை. போகம்: பேரின்பம். யோகம்: யோக நிலைமை.*]

ஜனக மன்னன், ராமபிரான் எதிரில் வந்து, ''பூமகளும் பரம்பொருளாகிய திருமாலும்போல என் செல்வ மகளோடு நீயும் நெடுங்காலம் மன்னி வாழ்க'' என்று கூறி, ராமபிரான் கையில் தாரை நீர் வார்த்தான்:

'கோமகன் முன்சனக ன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்என நீயென்
மாமகள் தன்னொடு மன்னுதி என்னுத்
தாமரை யன்ன தடக்கையின் ஈந்தான்.''

[*கோமகன்: ராமன். பூமகளும் பொருளும் என: திருமகளும் பரம்பொருளாகிய திருமாலும்போல. மன்னுதி: நிலை பெற்று வாழ்க.*]

அப்பொழுதே,

''வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவும் இலங்கொளி முத்தம்
தானகு நாண்மலர் என்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய(து) இப்பார்.''

[*நகுதல்: ஒளிவிடுதல். நாண்மலர்: அன்று மலர்ந்த மலர்: மீன்: நட்சத்திரம். வானின்: வானத்தைப் போன்று. பார். பூமி.*]

ராமபிரான் சீதாபிராட்டியைப் பாணிக்கிரஹணம் செய்து கொண்டு தீவலம் வந்தான்; பின்னர் அம்மி மிதித்து எதிரில் நின்ற அருந்ததியைக் கண்டனர்; மற்றும் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து முனிவர்களையும் தந்தையையும் வணங்கி ப்ரவிச்ய ஹோமம் என்ற சடங்கைச் செய்து ராமனும் சீதையும் தம் மாளிகை புகுந்தனர்.

அப்போது,

''ஆர்த்தன பேரிகள் ஆர்த்தன சங்கம்
ஆர்த்தன நான்மறை ஆர்த்தனர் வானோர்
ஆர்த்தன பல்கலை ஆர்த்தன பல்லாண்(டு)
ஆர்த்தன வண்டினம் ஆர்த்தன வேலை.''

[*ஆர்த்தன: முழங்கின. வேலை: கடல்.*]

பின்னர், மணமக்கள் இருவரும் சென்று முதலில் கைகேயியை வணங்கினர்; பின்னர் கௌசலையையும் சுமித்திரையையும் வணங்கினர்; மற்றும் உள்ள பெரியோர்களையெல்லாம் வணங்கி அவர்களுடைய ஆசியைப் பெற்றனர். இவ்வாறாக, ராமபிரான், சீதாபிராட்டியாரின் திருமணம் பங்குனி உத்திரத்தில் மிகச் சிறப்பாக நிறைவேறிற்று.

அதன்பின்னர், ஜனக மன்னன், தசரத மன்னனை அடைந்து, ''வேந்தே! என் மற்றொரு மகளாகிய ஊர்மிளை என்பவளும், என் தம்பியான குசத்துவராசனுடைய புத்திரிகளான மாண்டவி, சுருதகீர்த்தி என்பாளும் கன்னிப் பருவத்தினராக இருக்கின்றனர். அவர்களை உம்முடைய மற்ற புத்திரர்கள் மூவருக்கும் திருமணம் செய்துகொடுக்க விரும்புகிறேன்'' என்றான். அதற்குத் தசரத மன்னனும் இசைந்தான். பரதன் மாண்டவியையும், லக்ஷ்மணன் ஊர்மிளையையும், சத்துருக்னன் சுருதகீர்த்தியையும் மணந்தனர்.

திருமணங்கள் யாவும் சிறப்பாக நிறைவேறியபின்னர், தசரதன் பெரும் தான தருமங்கள் செய்தான். மேலும் சின்னாட்கள் தசரத மன்னன் முதலியோர் மிதிலை நகரத்தில் மகிழ்ச்சியோடு தங்கி இருந்தனர்.

22. பரசுராமப் படலம்

மணமக்கள் யாவரும் நானாவித இன்ப போகங்களில் மூழ்கி மிதிலை நகரத்தில் தங்கியிருக்க, விசுவாமித்திர முனிவர் அவர்களுக்கு ஆசி கூறித் தவம் புரிவதற்காக ஹிமாசலம் சென்று அடைந்தார். தசரதனும் தன் பெருஞ்சேனையோடும் புதுமணமக்களோடும் அயோத்தியை நோக்கிப் புறப்பட்டார். வழியில், தீய நிமித்தங்கள் சில தோன்றின. உடனே, தசரதன் தேரை நிறுத்தித் தன்னுடன் வந்த நிமித்திகனை அழைத்து, ''அவற்றின் பலன் யாது?'' எனக் கேட்டனன். அப்பொழுது அந்த நிமித்திகன் அரசனை வணங்கி, ''மன்னரே! இச்சகுனங்களால், இன்றே இடையூறு வரும்; அது நன்றாய் விடும்'' என்றனன். அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே பரசுராமர் வானகத்து இருள் கீறி ஒளிமயமாய் மின்னும்படி பரந்து விளங்கும் சடையோடும், மழுவோடும், அனல் கக்கித் தழல் விழித்து இடிபோல் முழங்கிப் பொன்மலை விரைந்து வருவதுபோல் மிக்க கோபத்துடன் அவ்விடம் வந்தார்.

இவர், 'ஜமதக்நி' என்ற முனிவருக்கும் ரேணுகா தேவிக்கும் புத்திரராகத் தோன்றியவர். தம் தந்தையை அவமதித்த கார்த்தவீரியன் என்ற அரசனைக் கொன்றதுடன், தன் தந்தை



யைத் தானில்லாத சமயத்தில் வஞ்சகமாய்க் கொன்ற அவன் குலத்தார்மீதும் கொண்டிருந்த பகைமையால், க்ஷத்திரிய குலத்தை, இருபத்தொரு தலைமுறைவரையில், தனது மழுப் படையால் அழித்து, அவர்களுடைய குருதியால் பிதுர்க்கடன் நேர்ந்தவர். க்ஷத்திரிய குலத்துக்கே பெருவைரியும், எல்லையில் லாத வலிமையுடையவரும், மஹாதபஸ்வியுமான பரசுராமர் உன்னற்கரிய சினக்குறிப்போடு கம்பீரமாகத் தன் எதிரில் நின்றதைக் கண்ட ராமபிரான், 'இவர் யாரோ?' என்று எண்ணு வதற்குள், தசரதர் ஓடிவந்து அப்பரசுராமரது பாதங்களில் விழுந்து வணங்கினர். பரசுராமரோ, தசரதரைக் கொஞ்சமும் மதியாது, ராமபிரானை நோக்கி, ''முன்னமே விரிசல் விட்டுப் போன சிவதநுசின் வன்மையை நான் அறிவேன்; அதை முறிப் பது ஒரு பெரிய காரியமன்று; ஆகவே உன் தோள்வலிமையைக் காணும் அவாவுடையேன்; மேலும், வெகு நாட்களாகப் போர் புரியாது தோள்கள் தினவெடுக்கின்றன; உன்னோடு போரிட்டுத் தோள் தினவைப் போக்கிக் கொள்ளும்பொருட்டே இப்போது இங்கு வந்தேன்'' என்று இடிபோன்ற குரலில் முழங்கினர். இத னைக் கேட்ட தசரதன் அஞ்சி நடுங்கி, ''சிறு மானுடர் தங் களுக்கு ஒரு பொருளோ? இவனும் எனதுயிரும் இனி உமது அபயம்'' என்று கதறினன். பரசுராமர் அதனைச் செவியில் ஏற்காது ராமனை நெருங்கினர். அதுகண்ட தசரதன் பெருந் துயர்கொண்டு மூர்ச்சையடைந்தான்.

பரசுராமர், ''ஏ ராமா! நீ மிதிலையில் ஒடித்த சிவன் வில் ஊனமுள்ளது. அதன் வரலாற்றைக் கூறுவேன்; கேட்பாயாக. முன்னொரு காலத்தில் தேவதச்சனுகிய விசுவகர்மா இரண்டு விற்களைச் செய்தான். அவற்றுள் ஒன்றைச் சிவபெருமான் எடுத் துக்கொண்டார். மற்றொன்றைத் திருமால் எடுத்துக்கொண் டார். அஃதறிந்த தேவர்கள், 'இவ்விரண்டில் எது வலிவுள் ளது?' எனப் பிரமதேவரைக் கேட்டனர். அவர், தந்திரமாக முதற் கடவுளர்களாகிய அவ்விருவரும் மாறு கொள்ளச் செய் தார்; எனவே, அவ்விருவரும், தத்தம் வில்லினை எடுத்துக் கொண்டு போர் செய்யத் தொடங்கினர்கள். அப்பொழுது, பரமன் வில் சற்றே விரிசல் விட்டது. அதனுல் பெருங்கோபம் கொண்ட பரமன் மீண்டும் பெரும்போர் தொடங்க முனையவே தேவர்கள் மிகவும் அஞ்சிப் போரை விலக்கினர்கள்.

''சிவபெருமான் தமது வில்லை இந்திரன் கையில் கொடுத் தார். திருமால், தமது வில்லை ருசிகமுனிவரிடம் கொடுக்க, அவர் என் தந்தையாகிய ஜமதக்நி முனிவருக்குக் கொடுத்தார். அவரால் அந்த வில் எனக்குத் தரப்பட்டது. இந்திரன் சிவத நுசை ஜனகன் குலத்து முன்னோனுகிய தேவராதன் என்னும் அர சனிடம் வைத்தான். இப்பொழுது நீ ஒடித்த வில் அதுவே ஆகும். அதனை வளைத்து ஒடித்ததால் உனக்குப் பெருமை ஏற்

படாது. என்னிடம் இருக்கும் இந்தத் திருமாலின் வில்லை வளைப்பாயானால், நீ ஒரு வீரனாவாய். பலகாலமாகப் போர் தொடுப்பதை விட்டுத் தவத்தில் இருந்த நான், நீ வில் ஒடித்த ஓசையைக் கேட்டு, உன்னுடன் போர் செய்ய வந்தேன். முதலில் இந்த வில்லை வளை; நீ வலிமை உள்ளவனாயின் பிறகு உன்னோடு போரிடுவேன்'' என்று கடுமையாகக் கூறினார். அப்பொழுது, ராமன் புன்சிரிப்புடன் பரசுராமரை நோக்கி, ''நாரணமூர்த்தி லாவகமாகக் கையாண்ட வெற்றி வில்லைத் தருக'' என்றனன். பரசுராமர் வில்லினைக் கொடுத்தார். ராமன் அந்த வில்லை வாங்கி ஓர் இமைப்பொழுதில் வளைத்து நாணேற்றி, அதனில் அம்பைத் தொடுத்து இழுத்துக் கொண்டு, 'பரசுராமரே! பூதலத்து அரசை எல்லாம் அழித்தீர்; ஆயினும் வேதவித்தாகிய முனிபுங்கவரின் புதல்வர் தாங்கள்; மேலும், தவவிரதம் பூண்டிருக்கின்றீர்; ஆதலின் உம்மைக் கொல்லுதல் தகாது; இந்த அம்பும் தவறுவதன்று; ஆகையால், என் அம்பினுக்கு ஓர் இலக்குக் கூறுவீராக'' என்றான். பரசுராமர் அஞ்சி நடுங்கினார். பின்னர், அதனைத் தம்முடைய தவப்பயன்மீது செலுத்தச் சொன்னார். அவ்வாறே ராமன் அம்பினைச் செலுத்த அது, பரசுராமருடைய தவ வலிமை யாவையும் வாரிக்கொண்டு மீண்டு வந்தது. அதன் பிறகு, பரசுராமர், ராமனை நோக்கி,

''எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக
மண்ணிய மணிநிற வண்ணன் வண்டுழாய்க்
கண்ணிய யாவர்க்கும் களைகண் ஆகிய
புண்ணிய விடையெனத் தொழுது போயினான்.'


பரசுராமர் சென்றபிறகு, ராமன், மூர்ச்சையாகிக் கிடந்த தந்தையைத் தேற்றி, அவரைத் தழுவினான். தசரதன் சோர்வு நீங்கி எழுந்து பரசுராமர் தம் செருக்கொழிந்து சென்றதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தான். ராமன், பரசுராமரிடம் பெற்ற திருமால் வில்லினை வருணனிடம் வைத்துவிட்டு அயோத்தி மாநகரம் அடைந்தான்.

அயோத்திமாநகரில் யாவரும் இன்புற்று வாழும் நாளில் ஒரு நாள் தசரதன் பரதனை அழைத்து, ''உன் பாட்டனாராகிய கேகயராஜன் உன்னைக் காண விழைகின்றார்; ஆகையால் நீ கேகய நாட்டிற்குச் செல்வாயாக'' எனப் பணித்தான். பரதனும் தந்தை கட்டளையைச் சிரமேற்கொண்டு தன் தமையனாகிய ராமபிரானை வணங்கியபின் தன் தம்பி சத்ருக்கனனோடு புறப்பட்டுக் கேகய நாடு சென்றான்.

பால காண்டம் முற்றிற்று

—o—

அயோத்யா காண்டம்



1. மந்திரப் படலம்

காப்பு

''வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறத்தும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் காத்நிமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தே.''

[**வான் நின்று:** (ஆகாயத்தில்) வைகுந்தத்திலிருந்து. **இழிந்து:** இறங்கி, **வரம்பு இகந்த:** எல்லை நீங்கிய. **மாபூதம்:** பெரிய பூமி. **வைப்பு:** இடம். **கூனும்:** கூனியாகிய மந்தரை. **சிறிய கோத்தாய்:** சிற்றன்னையாகிய கைகேயி. **கோல்:** அரசாட்சி. **இடுக்கண்:** துன்பம். **கழல் வேந்து:** வீரக்கழலை அணிந்த பாதங்களையுடைய ராமன்.]

தசரதன் இவ்வாறு மிக மன மகிழ்ச்சி உடையவராய் ராம லக்ஷ்மணரோடு அயோத்தியில் வாழும் நாளில் அவன் செவியின் அடிப்புறத்தே கருநிறம் மாறி வெண்ணிறம் அடைந்தது ஒரு ரோமம். அது, ''அரசே, உலகெலாம் மகனுக்கு அளித்து உன்னற்கரிய தவம் செய்யவேண்டிய பருவம் இது'' என்று ரகசியமாகக் காதில் கூறுவதுபோல் இருந்தது. கொடுமை செய்வதையே தொழிலாகக் கொண்ட ராவணன் செய்த தீமை எல்லாம் திரண்டு நரையாகி வந்து சேர்ந்ததுபோல் காணப் பட்ட அந்நரைமயிரை அறுபதினுயிரம் ஆண்டுகள் செங்கோல் செலுத்திய அப்பேரரசன் கண்ணுடியிற் கண்டான். அதனால் தனக்குக் கிழப்பருவம் வந்துவிட்டதை உணர்ந்த தசரதன் மந்திராலோசனை மண்டபத்தை அடைந்து பலர் சூழ அமர்ந்திருந்தான்; பின்னர் அங்கிருந்த சுற்றத்தாரையும், நிருபர்களையும், நண்பர்களையும் அப்பாற் செல்லும்படி அன்புக் கட்டளையிட அவர்களும் அவ்வாறே சென்றனர். பின்னர் அரசன் தன் மந்திரிமார்களை அழைத்தான்; மூவர் தேவர்களுடன் நான்காமவர் என்று மதிக்கத்தக்க சிறப்பினையுடையவரும் குலகுருவும் ஆகிய வசிஷ்டமா முனிவர் அங்கே வந்தார். மன்னன் எழுந்து வணங்கி அவரை வரவேற்று, தக்கதோர் ஆசனத்தே அமர்த்தினன்.

''உற்றது கொண்டு மேல்வந் துறுபொருள் உணரும் கோளார்
மற்றது வினையின் வந்த(து) ஆயினும் மாற்றல் ஆற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா அனைய நீரார்.''

''காலமும் இடனும் ஏற்ற
கருவியும் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வம்
நுனித்(து) அறம்குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும்
செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதி யாவும்
தலைவற்குப் பயக்கும் நீரார்.''

''தம்முயிர்க்(கு) உறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாது நின்றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார்
ஒருமையே மொழியும் நீரார்.''

[உறுபொருள்: அடையும் பொருள். **பெற்றியர்:** தன்மை யுடையோர். **மானம்:** பெருமை. **மா:** மான். **குணித்தல்:** எண்ணுதல். **பால்:** ஊழ், விதி. **வெம்மை:** சினம். **மும்மையும்:** மூன்று காலமும்; அவை: இறப்பு, நிகழ்வு, எதிர்வு. **நீரார்:** ஒழுக்கம் உடையவர்.]

அத்தகைய அருங்குணங்களின் உறைவிடமான அமைச்சர்களையும், குலகுருவான வசிஷ்ட முனிவரையும் நோக்கி மன்னர் மன்னவன், ''மனு முதலாக வந்த என் முன்னோர்கள் அரசாட்சி செய்துவந்தமைபோல நானும் இப்பேரரசினை ஏற்று முறை திறம்பாது, அறுபதினாயிரம் ஆண்டுகளாக உங்கள் உதவியால் ஆட்சி செய்தேன்; இதில் ஐயமில்லை. மானிடர் வாழ்க்கையோ நிலையற்றது. இவ்வரச இன்பத்தை நான் நெடுங்காலம் துய்த்துவந்தமையால் வெறுப்படைந்திருக்கிறேன்; நிலையில்லாத இதனை மேன்மேலும் நுகர்ந்துகொண்டிருப்பது எச்சிலை உண்பதற்கு ஒப்பாகும்; ஆதலின் இப்பூமி பாரத்தை என் மகன் ராமன்மீது சுமத்திவிட்டு நான் தவம் செய்தலை நாடி வனத்தை அடைய விரும்புகிறேன்.



''இனி உங்களுடைய கருத்து யாது?' என்று வினவினன். அதனைக் கேட்ட மந்திரிகள் ராமன் அரசேற்கப் போவதைக் கேட்டு மகிழ்ந்தனர். அக்கணமே மன்னன் தங்களை விட்டு நீங்குவதால் ஆகும் பிரிவுத் துன்பமும் ஒருசேர அடைந்தனர். அவர்கள் நிலைமை இரண்டு கன்றுகளுக்கு இரங்கி வாடுகின்ற ஒரு பசுவைப்போல ஆயிற்று. ஆயினும் அவர்கள் ஒருவாறு உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு, ''நாம் அரசருக்குத் தவம் செய்வதல்லாமல் வேறு உறுதி இல்லை'' என்பதை எண்ணியும் உலகிற்கு ராமனைத் தவிர வேறு சிறந்த அரசர் இல்லை என்பதை உன்னியும் மன்னன் கருத்திற்கு இசைந்தனர்.

அப்பொழுது மன்னன் விடுத்த வினவும் மந்திரிகளின் எண்ணமும் ஆராய்ந்தறிந்த வசிஷ்ட முனிவர், அரசனை நோக்கி, ''பேரரசே! நின் குலத்து முன்னோர்களான அரசர்கள் பலர் உலகமெங்கணும் தமது ஆணையைச் செலுத்தி அரசு செய்து பெருமை எய்தினர் என்றாலும், நின்னைப்போல ராமனைப் பெற்றவர் யாவர்? அவனைப் புதல்வனாக அடைந்ததால் அவர்களைக் காட்டிலும் நீயே சிறந்தவன் ஆனாய். இனி உனக்கு ஒரு குறையும் இல்லை. மேலும் ராமனின் திருப்பெயரை நாடோறும் புகல்வதாலும் நினைப்பதாலும் தமக்கு வரும் துன்பங்கள் விலகுகின்றன என வேதியர் முதலான தேவர்களும் போற்றுகின்றனர்; அத்தகைய சிறப்பிற்குக் காரணமாகியவனும், எல்லா நூல்களையும் கற்று அறிந்து, மேலான புண்ணியங்களைப் பெறத்தக்க பல வேள்விகளை இயற்றியவனுமாகிய உனக்குத் தவம் செய்து நன்னிலை பெறுதலே ஏற்றதாகும்'' என்றார்.

அப்பொழுது தசரதன்,

> ''மற்ற வன்சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
> பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
> இற்ற வன்றினும் எறிமழு வாளவன் இழுக்கம்
> உற்ற வன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்.''

*[**பிஞ்ஞகன்:** சிவபிரான். **இற்ற:** ஒடித்த. **மழுவாளவன்:** பரசுராமர். **இழுக்கம்:** தாழ்வு.]*

பின்னர், சுமந்திரன் எழுந்து, ''அரசே! தாங்கள் தவம் செய்யச் செல்லல் தகுதியே ஆயினும் தங்கள் குமாரர் ராமருக்குத் திருமுடி சூட்டிவிட்டு ஏகுதல் சிறந்ததாகும்'' என்று கூறினான். அதுகேட்ட மன்னன், ''நன்று கூறினை. நீயே விரைவில் சென்று ராமனை இங்கு அழைத்துவருவாயாக'' என்று கட்டளை இட்டான். உடனே சுமந்திரன் அரசனை வணங்கிவிட்டு அழகிய தேர்மீது அமர்ந்துகொண்டு ராமன் மாளிகை

அடைந்து அவனைக் கண்டு மன்னன் கட்டளையை அறிவித்தான். தந்தையின் ஆணையைக் கேட்டதும் ராமன் பொருக்கென எழுந்து அத்தேரிலேயே ஏறி மன்னன் அவைக்களத்தை அடைந்தான். முதலில் முனிவரை வணங்கி அவருடைய நல்லாசியைப் பெற்றுத் தந்தையையும் பணிந்தான். அப்பொழுது தசரத மன்னன் ராமனை அன்பு மீதூரத் தழுவி அவனை நோக்கி, ''என் அருமைப் புதல்வ! நான் இதுவரை இப்பூமி பாரத்தைச் சுமந்து உடல் இளைத்தவன் ஆனேன். முதுமையை அடைந்த நான் இனியும் அச்சுமையைத் தாங்கமுடியாதவனாய் இருக்கின்றேன்; நம் குல முன்னோர்கள் மிகவும் பெருமை வாய்ந்தவர்கள்; தங்கள் மூதாதையர் முனிவரால் சாம்பராயினர் என்று கேள்விப்பட்ட பகிரதன் கடுந்தவம் புரிந்து கங்கையைக் காசினியில் பெருகச் செய்து முன்னோர்களுக்கு முத்தியளித்தான். அத்தகைய சிறந்த மரபில் தோன்றிய நீ என் சொல்லை மறுக்காமல் முடி புனைந்து பூமி பாரத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டும்'' என்று கூறினான்.

தந்தையின் இனிய சொற்களைக் கேட்ட ராமன் யாதொன்றும் சொல்லாது நின்றிருந்தனன். அவன் அவ்வாறு இருந்தது தந்தையின் சொல்லைத் தட்டாது அதற்கு இணங்கியதாகக் குறிப்பித்ததே ஆகும். ராமன் சம்மதித்ததைக் குறிப்பால் உணர்ந்த தசரதன் மகிழ்ந்து பின்னரும் அவனைத் தழுவி அணைத்துக்கொண்டு இன்பக் கண்ணீர் பெருக்கினான். ராமன் தந்தை முதலியோரிடமும் விடை பெற்றுக்கொண்டு தன் மாளிகையை நோக்கிச் சென்றான்.

அதன் பின்னர் தசரத மன்னன் அமைச்சர்களுக்கும், மற்ற அரசர்களுக்கும், ராமனுடைய முடிசூட்டு விழாவிற்குரியவைகளைச் சித்தம் பண்ணும்படிப் பணித்தான். அத்தருணத்தில் அதனை அறிந்த தாதியர்களில் சிலர் கோசலையின் அந்தப்புரத்தை அணுகி ராமனுக்கு முடிசூட்ட நிச்சயித்ததை அவளுக்கு அறிவித்தனர்.

அது கேட்ட கோசலை இன்பக் கடலில் மூழ்கினாள். ராமபிரானுக்கு முடிசூட்டியபின் மன்னன் துறவறம் பூண்பான் என்ற எண்ணம் தோன்றியதும் மனத்தில் துணுக்கம் உண்டாயிற்று. ஆயினும் நற்செய்தி சொன்ன தாதியர்க்கு முத்தும் மணியும் பரிசிலாகக் கொடுத்தாள். பின்னர், தங்கள் குல தெய்வமான ஸ்ரீமந் நாராயணனது கோயிலுக்குப் போய் வழிபாடு நடத்தினாள். அப்பெருமானை வணங்கி ராமனுக்கு எல்லா நலன்களும் உண்டாகும்படி வேண்டிக்கொண்டு தன் மாளிகையைச் சேர்ந்து தான தருமங்கள் பலவும் செய்து பல விரதங்களை மேற்கொண்டவளாய் இன்புற்றிருந்தாள்.

2. மந்தரை சூழ்ச்சிப் படலம்

மறுநாள் தசரத மன்னன், கணித நூல் வல்லோரை அழைப்பித்தான். அரசன் அவர்களை நோக்கி ராமனுக்கு முடி சூட்டு விழா நிகழ்வதற்குரிய நன்னாளைத் தேர்ந்தெடுத்துக் கூறும்படிக் கேட்டான். அவர்கள் பல நூல்களைப் பார்த்து ஆராய்ந்து, ''முடிசூட்டற்குரிய நன்னாள் நாளைய தினமே'' என்றனர். உடனே அரசன் வசிஷ்டரை அழைப்பிக்க அவரும் வந்தார். தசரதன் அவரை வணங்கி, ''ஸ்வாமி! ராமன் முடி சூடும் மங்கல நாள் நாளையே என்று நூல் வல்லார் அறிவித்தனர். ஆதலின் அவன் அரசனாக அமரப்போகின்றமையால், அவனுக்கு அரசு நீதிகளையும் செங்கோல் முறையினையும் தாங்கள் உபதேசித்தருளவேண்டும்'' என வேண்டினான்.

மன்னன் விருப்பப்படியே வசிஷ்ட முனிவர் ராமனுடைய மாளிகையை அணுகலும் அவன் மழை முகில் கண்ட மயிலென மகிழ்ந்து முனிவரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றான்; அவரை ஓர் ஆசனத்தில் இருத்தித் தானும் அமர்ந்தான். வசிஷ்டர், ராமனை நோக்கி, ''ராமா! நீ நாளைக்கு இந்நானிலத்தை ஏற்று அரசாட்சி செய்யப்போகிறாய்; இச்சமயத்தில் உனக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன்; கேள். மும்மூர்த்திகளைக் காட்டிலும் அந்தணரை உயர்வாக மதிக்கவேண்டும்; நல்லறமும் மனச்செம்மையும் அருளும் ஒருங்கே பெற்ற அரசனே உயர்வடைவான்; சூது ஒன்றே எல்லாக் குற்றங்களையும் கொண்டு வந்து சேர்க்கும். ஆகையால் சூது உன்னிடம் சேராமல் எச்சரிக்கையாய் இரு; நடுவு நிலைமை தவறாமல் மனவுறுதியோடு ஆளும் அரசே சிறந்த அரசு; மேலும், மஹாபராக்ரம சாலியாயும் இணையற்ற மேதாவிலாசம் உடையவராயும் இருந்தாலும்கூட அரசன் அமைச்சர் சொல்வழி அமைந்து நடத்தல் தான் நன்மையைத் தரும். ஆகவே, இவற்றை உணர்ந்து அன்பு, உண்மை, பொறை ஆகியவற்றைக் கைக்கொண்டு சிறந்த முறையில் ஆட்சி செலுத்தவேண்டும்'' என்றார். பிறகு ராமபிரானோடு ஸ்ரீமந்நாராயணனது ஆலயத்திற்குச் சென்று அறிதுயிலில் அமர்ந்த அருளாளன் சந்நிதியில் ராமனுக்கு அபிஷேகம் செய்து முடிசூட்டு விழாவுக்கு முதல் நாள் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்வித்தார். மாநகரை முடிசூட்டு விழாவுக்கு ஏற்றபடி அலங்கரிக்குமாறு தசரதன் ஆணையிட்டான். அவ்வாறே நகர் முழுதும் கண்கவரும் அழகுடன் அலங்கரிக்கப்பட்டது. முடிசூட்டுவிழாச் செய்தியினை முரசு முழக்கி நகர மக்களுக்கு அறிவித்தனர் வள்ளுவர். அந்நற்செய்தியைக் கேட்டதும் மகிழ்ச்சி கொண்ட நகரமாந்தர்கள்,

''ஆர்த்தனர்; களித்தனர்; ஆடிப் பாடினர்;
வேர்த்தனர் தடித்தனர்;; சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர்; மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்;
தூர்த்தனர்; நீள்நிதி சொல்லினர்க் கெலாம்.''

[ஆர்த்தல்: ஆரவாரித்தல். தடித்தல்: உடல் பூரித்தல். போர்த்தனர்: மறைத்தனர். தூர்த்தனர்: தூவினர்.]

இவ்வாறு ஒருவருக்கொருவர் குலாவி உரையாடும் ஓசையும் நகரை அலங்கரிக்கும் பேரோசையும் ஒன்றோடொன்று மயங்கி இனிய நாதமாகப் பூரித்து நின்றன. அப்பொழுது ராவணன் செய்த தீமைகள் யாவும் ஒருருக்கொண்டு வந்தாற்போல் கைகேயியின் தாதியான மந்தரை என்ற கூனி, மனம் கொதித்து நின்றாள். ராமன் விளையாட்டுப் பருவத்தில் இருந்தபொழுது, தன் முதுகின்மீது வில்லுண்டையை எறிந்து விளையாடியதால் தனக்குத் துன்பம் உண்டாக, அதன்பொருட்டு, ராமன் தன் பகைவன் என்று கருதிய அந்தக் கூனி, பழி தீர்க்க நினைத்து இப்பொழுது அவன் பட்டாபிஷேகத்தைத் தடை செய்ய உறுதி பூண்டாள். உடனே அவள் கைகேயியின் மாளிகைக்குப் போனாள். கைகேயி நித்திரையில் இருந்தது கண்டு, தன் கைகளால் மெதுவாக அவள் பாதங்களை வருடினாள்.

கூனி தொட்டதும் துயிலுணர்ந்தெழுந்தாள் தெய்வக் கற்புடைய கேகயன் மடந்தை. அவள் தூக்கக் கலக்கம் தெளியு முன்னமே கூனி, ''நாகம் தன்னை நெருங்கி விழுங்குமளவும் உணராது ஒளி வீசும் திங்களைப் போன்று நீயும் பேராபத்து உன்னைச் சூழ்ந்திருந்தும் வருந்தாது உறங்குகின்றாயே'' என்று பெருங்குரலில் அழுது கூறினாள். அதற்குக் கைகேயி, ''என் புத்திரர்கள் சுகமாயிருக்கின்றனர்; அவர்கள் அறம் தவறாதவர்கள்; அவ்வாறிருக்க எனக்குத் துன்பம் உண்டாகுமோ?'' என்று கேட்டாள். உடனே கூனி, ''உன் நன்மையெல்லாம் அழிந்தது; உன் செல்வமும் அழிந்தது. கோசலை தன் புத்தி கூர்மையினால் நல்வாழ்வை உண்டாக்கிக்கொண்டாள்'' என்றாள். உடனே கைகேயி அவளைப் பார்த்து, ''அறம் திறம்பாத பேரரசராகிய கணவரும் உத்தம புத்திரனான பரதனும் எனக்கு இருக்கும்பொழுது என்னைக் காட்டிலும் அந்தக் கோசலை எவ் விதத்தில் உயர்ந்த வாழ்வை அடைந்துவிட்டாள்?'' எனக் கேட்டாள். அப்பொழுது கூனி, ''இதோ இதனை நீ அறிய வில்லையா? ஆடவர்கள் நகைக்க, ஆண்மைக்கு இழுக்கு உண்டாக்கித் தாடகை என்ற ஒரு பெண்ணைக் கொன்ற அந்த ராமனுக்கு நாளைக்கு முடிசூட்டு விழா நடக்கப்போகிறது; இதுவே அவனுக்கு வந்த வாழ்வு'' என்றாள்.

தன் கண்ணுக்குக் கண்ணான ராமன் முடிசூடப்போகிறான் என்னும் செய்தியைக் கேட்டதும், கைகேயியின் நெஞ்சம் கோசலையின் உள்ளத்தைப் போலவே மிகவும் களிப்புக் கொண்டது; அன்பென்னும் பெருங்கடல் பொங்கி எழுமாறு என்றும் குறையாது விளங்கும் முகமதி மேலும் ஒளி வீசியது; மிக்க மகிழ்ச்சியால் முச்சுடர்கட்கும் மேலானது என்று சொல்லத்தக்க மணிமாலை ஒன்றை எடுத்து கூனிக்குப் பரிசாகக் கொடுத்தாள்.

உடனே, கூனி மிக்க சினங்கொண்டு, மாலையைத் தரையில் எறிந்தாள். கைகேயியைப் பார்த்து, ''நீ ஒரு பேதை! கோசலை மிகவும் தந்திரக்காரி; தக்க சமயத்தில் அரசன் ஆணையால் பரதனை, அவன் மாமன் வீட்டிற்கு அனுப்பச் செய்து தன் மகன், ராமனுக்குப் பட்டம் கட்டும்படிச் செய்துகொண்டாள்; இனி உன் பிள்ளை, தவம் செய்ய காட்டிற்குப் போதலே நன்று; நீ வறுமையை அடைந்து எல்லாப் பெருமைகளையும் இழந்து தவிக்கப் போகிறாய்; இவ்வாறான கேடுகள் பலவும் உன்னைச் சூழ்ந்திருக்கும் இச்சமயத்தில் நீ அவற்றைச் சிறிதும் எண்ணாமல் களிப்படைகின்றாயே!'' எனப் பலவாறு இடித்துக் கூறினாள்.

கூனி கூறிய அடாத சொற்களைக் கேட்டதும் கைகேயி மிகவும் சினந்து, அவளை நோக்கி,

''வெயில் முறைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர் முதற்பொருள் திறம்பினும் உரைதிறம் பாதோர்
மயில் முறைக்குலத் துரிமையை மனுமுதல் மரபைச்
செயிர் உறப்புலைச் சிந்தையால் என்சொனாய் தீயோய்.''

[**வெயில் முறைக் குலக்கதிரவன்:** வெயிலை உடைய சூரியன் முறையாக வந்த குலம். **மயில் முறைக் குலத்து உரிமை:** மயில் கூட்டத்தில் மூத்த மயிலுக்கே முதன்மை உண்டானாற் போன்ற உரிமை; அதாவது, ஒரு கூட்டமாயுள்ள மயில்கள் மகிழ்ச்சியால் ஆடத் தொடங்கும்போது முதலிற் சிறை விரித்தாடும் உரிமை மூத்த மயிலுக்கே உண்டு. **செயிர்:** சினம். **புலைச்சிந்தை:** கீழான எண்ணம்.]

''போதி என்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சிலர் அறியின்
நீதி யல்லவும் நெறிமுறை யல்லவும் நினைந்தாய்
ஆதி யாதலின் அறிவிலி அடங்குதி என்றாள்.''

[**போதி:** போவாயாக. **சேதியாது:** அறுக்காது. **ஆதி:** பழைமை உள்ளவள்.]

இங்ஙனம் அவள் கூறிய கடுஞ்சொற்களைக் கேட்டும், கூனி, சிறிதும் அடங்கிச் செல்லாமல் மேலும் கைகேயியைப் பார்த்து, ''அந்தோ! நிகழ்ந்துவரும் வஞ்சனையை நீ நன்கு உணராமல், குலமுறை கெட்டுவிடும் என்று, ஏதேதோ நீதிகளைச் சொல்லி என்னையும் திட்டுகின்றாய்; நீ என்னைத் திட்டினாலும், என் அரசியும் தோழியுமான உனக்குத் தக்கதைச் சொல்வதில் நான் தவிரேன்'' எனக் கூறிப் பின்னரும் சொல்வாள்: ''உன் தந்தையான கேகய மன்னருக்குப் பகைவர் பலர் உளர்; அவர்களில் எவரேனும் நின் தந்தையை எதிர்த்து நின்றால் அப்பொழுது இந்த ராமன் உதவிக்கு வருவானா? வராதிருந் தால் நின் தந்தைக்கு வெற்றி என்பது உண்டாகுமோ? இதனை நீயே ஆலோசிப்பாயாக; மற்றும் சீதையின் தந்தை யான ஜனகன், உன் கணவனுக்கு அஞ்சியன்றோ உன் தந்தை யின் நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளாதிருக்கின்றான்? ராமன் பட்டத்தை ஏற்றதும், மருமகனான அவன் உதவியைக் கொண்டு ஜனகன் உன் தந்தையின் ராஜ்யத்தை அபகரிக்க எண்ணுவான்; நீ மற்றவைகளை எண்ணாதிருப்பினும் உன் தந்தையின் நலத்தையாவது நினைக்கவேண்டாவோ?'' என அவள் மனம் திரியும்படிப் பலப் பல கூறினாள்.

கூனி இவ்வாறு கூறலும் ராவணன் முதலிய அரக்கர் களால் உண்டான துன்பம் நீங்கவேண்டிய காலம் வந்துற்ற தாலும் தேவர்களுக்கு நன்மை ஏற்படும் காலம் குறுகியதா லும் கைகேயியின் உள்ளம் மாறுபடத் தொடங்கியது.

கூனி இறுதியாகச் சொன்ன சொற்கள் சரியானவை என்று கைகேயி நினைத்தாள். அதனால் அவள் கூனியை நோக்கி, ''என் மகன் பரதனுக்கு அரசுரிமை கிடைக்க வேண்டுமாயின் எத்தகைய உபாயத்தை மேற்கொள்ள வேண் டும் என்பதைக் கூறுவாயாக'' என்றாள். அதற்குக் கூனி, தன் எண்ணம் பலித்தது என்று மகிழ்ந்து, கைகேயியை நோக்கி, ''சம்பராசுரனுடன் செய்த போரில் உன் கண வருக்குத் தேர் செலுத்தி அவருக்கு வெற்றியை உண்டாக் கினாய்; அப்பொழுது அவர் உனக்கு இரண்டு வரங்களை அளிக்க, அவற்றை நீ விரும்பும்பொழுது கேட்டுப் பெறுவதாகக் கூறினை யன்றோ? இப்பொழுது அவ்விரண்டில், ஒன்றால் பரதனுக்குப் பட்டமும், மற்றொன்றால் ராமனுக்கு பதினான்கு ஆண்டுகள் வனவாசமும் விதிக்குமாறு தசரதனைக் கேட்பாயாக; உன் கண வர் கொடுத்த வாக்கினை மீறாதவர்; உன் எண்ணம் எளிதில் நிறைவேறிவிடும்'' என்றாள்.

இவ்வாறு தனக்கு ஓர் உபாயத்தையும் சொன்ன கூனி யைக் கைகேயி, புகழ்ந்து கொண்டாடி அவளுக்குத் தக்க

பரிசு கொடுத்தாள். கூனி அதனைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் அவளிடம் விடை பெற்றுச் சென்ருள்.

கூனி சென்றதும் கைகேயி, தன் எண்ணத்தை முடித்துக் கொள்ளும் நோக்கத்துடன், மிக்கத் துன்பத்திற்குள்ளானவள் போன்று பாசாங்கு செய்யத் தொடங்கினுள். அவள், தன் மலர்ப் பள்ளியிலிருந்து கீழே இறங்கினுள்; மலர் மாலைகளை எல்லாம் பிய்த்துச் சிதறுமாறு நாலாபக்கமும் வீசினுள்; அணிகள் யாவற்றையும் கழற்றி எறிந்தாள்; நெற்றியிலுள்ள திலகத்தை அழித்தாள். கண்களில் தீட்டிய மை கரையுமாறு கண்ணீர்விட்டு அழுது தரையில் புரண்டு கிடந்தாள்.

3. கைகேயி சூழ்வினைப் படலம்

இவ்வாறு கைகேயி, அழுது புரண்டு கொண்டிருக்கும் சமயத்தில் தசரதன் அங்கே வந்தான. மலர்ப் பாயலனைன்றும் நீங்கி நிலத்தில் அலங்கோலமாகக் கிடந்த கைகேயியைக் கண்டான். திடுக்கிட்ட மனனன் ''இவளுக்கு நேர்ந்தது யாதோ?'' எனச் சோர்வுறற நெஞ்சினனுய அவளை, மான ஒன்றினை எடுக்கும் யானைபோன்று, தன் இரு கரங்களாலும் தழுவி எடுத்து உட்காரவைக்கத் தொடங்கினுன. அப்பொழுது கைகேயி தனனைத் தழுவிய கரஙகளினின்றும் நழுவியவளாய் மின்னல் துவள்வதுபோல் துவண்டு திரும்பவும் மண்ணில் வீழ்ந்தாள்.

அதுகண்ட மன்னன் மனம் ஆற்ருனுகி அவளை நோக்கி, ''அன்புருவமான கைகேயி! உனக்கு நேர்ந்த துன்பம் யாது?'' என்று வினவினுன். அதற்குக் கைகேயி அழுதவாறே, ''நான் அடைந்துள்ள துன்பத்தைப் போக்குவதற்குத் தங்களுக்கு என் மீது அத்தகைய அன்பு இருக்கின்றதோ?'' என்ருள்.

உடனே தசரதன், ''ஏன் இப்படிச் சொல்லுகிருய்? வள்ளல் ராமன் ஆணையாக, உன் உள்ளம் உவந்து தருவேன். உனக்கு என்ன வேண்டும்? அதனைத் தடையின்றி நான் செய்வேன்'' என்ருன்.

இந்த உறுதிமொழி மன்னன் வாயினின்று வெளிப்பட்டதும், கைகேயி மனம் துணிந்து, ''அங்ஙனமாயின் அன்று சம்பராசூரனை வெற்றி கொண்டபொழுது நீர் எனக்கு அளித்த வரங்கள் இரண்டையும் இப்பொழுது தரவேண்டும்'' எனக் கேட்டாள். தசரதன், ''தடையில்லாமல் தருகிறேன். உனக்கு வேண்டிய வரங்கள் இரண்டினையும் கேட்பாயாக'' என்ருன்.



கைகேயி, ''அவ்விரண்டையும் சொல்லுகிறேன், கேளும்: என் மகன் பரதனுக்கு முடிசூட்டுதல் ஒன்று; ராமனைப் பதினான்கு வருஷம் காட்டில் வசிக்கும்படி அனுப்புதல் மற்றொன்று'' என்றாள். கேட்ட தசரதன்,

''நாகமெனும் கொடியாள்தன் நாவின் வந்த
சோகவிடம் தொடரத் துணுக்கம் எய்தா
ஆகமடங் கலும்வெந்(து) அழிந்து அராவின்
வேகமடங் கியவேழம் என்ன விழ்ந்தான்.''

[சோகவிடம்: துன்பத்தைத் தரும் சொல்லாகிய விடம். துணுக்கம்: திடுக்கிடல். ஆகம்: உடல். அரா: பாம்பு. வேகம் அடங்கிய: விட வேகம் தணியப்பெற்ற. வேழம்: யானை.]

''பூதல முற்றத விற்புரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யார்சொல வல்லார்?
வேதனை முற்றிட வெந்துவெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்னவெய் துயிர்த்தான்.''

[பூதலம்: பூமி. கனல்: நெருப்பு. வெய்து உயிர்த்தான்: வெப்பம் தோன்றப் பெருமூச்சு விட்டான்.]

சிறிது நேரம் செல்ல, தசரதன் மூர்ச்சை தெளிந்து, கைகேயியை நோக்கி, ''அடி பேதாய்! நீ மதி மயங்கி இச் சொற்களைக் கூறினையா அல்லது, இவ்வாறு கூறும்படி உன்னை யாரேனும் தூண்டினார்களா?'' என்று கேட்டான். அதற்கு அவள், ''நான் இவற்றைப் புத்தி மயக்கங்கொண்டு கூறவும் இல்லை; பிறரொருவர் தூண்டுதலுக்கு உள்ளாகவும் இல்லை. நீர் இவற்றைக் கொடுத்தால் பெற்றுக்கொள்வேன். இல்லை என்றால், இதனால் ஆகும் வசையை உமது பேரில் வைத்து இறப்பேன்'' என்றாள்.

ராமனே தன் உயிர் என்று எண்ணிய மன்னன், 'வெந்த புண்ணில் வேல் நுழைந்ததுபோல' வருந்தி நிலத்தில் வீழ்ந்து எழுந்து மீண்டும் அயர்ந்து கீழே விழுந்தான். அவளைக் கெஞ்சியாவது கேட்டு அவள் கொண்ட எண்ணத்தை மாற்ற நினைத்தான்.

அவ்வாறே மன்னன் கைகேயியை நோக்கி, ''நீ இவ்வாறு வேண்டுதல் தகாது; இதனால், நம் குலத்திற்கே பழி உண்டாகும். அன்றியும் பரதன் இதற்கு இணங்கமாட்டான். ஆகையால், இவ்வெண்ணத்தை விட்டுவிடு'' என்றான். கைகேயி இதற்கு உடன்படவில்லை. பின்னர் அரசன், ''பெண்ணே!

''கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினும் இன்றே உனதன்றோ?
பெண்ணே! வண்மைக் கேகயன் மானே! பெறுவாயேல்
மண்ணே கொள்நீ; மற்றைய தொன்றும் மறவென்றான்.''

[உண்ணேராவி: உடலின் உள்ளே இருக்கின்ற நேரிய உயிர். வண்மை: வள்ளல் தன்மை. மண்: பூமி, அரசாட்சி.]

இவ்வாறு கூறியும் கைகேயி ஒரு சிறிதும் ஒப்பாமல் இருந்தது கண்டு, ''அடி பாவி! ராமன் காட்டிற்குச் செல்வானாயின் அக்கணமே என் உயிர் போய்விடும். பத்தினிப் பெண்கள், கணவன் உயிர் நீங்குவது உணர்ந்தால், அதற்கு முன்னரே தமது உயிரை விட்டுவிடுவார்கள்; அவ்வாறு இருக்க நீயே என் உயிரைப் போக்கிவிட எண்ணுகின்றாய்; இது உனக்குத் தக்கதன்று. ராமனைக் காட்டுக்கு அனுப்புமாறு கூறாதே'' என்று அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

அரசன் எவ்வளவுதான் வேண்டியும் கைகேயி எள்ளளவும் இரக்கம் கொள்ளவில்லை. அவள், ''முன்னே வரத்தைக் கொடுத்துவிட்டுப் பின்னே வருந்துவது அரசர்க்கு அழகன்று; நான் கேட்ட வரங்களைத் தாங்கள் தரவில்லையாயின் என் உயிர் போவது உறுதி'' என்று கூறினாள். கைகேயி கேட்ட வரத்தைக் கொடுக்காவிட்டால் இறந்துவிடுவாள் என்று நினைத்த மன்னன், ''தந்தேன், தந்தேன்; என் மகன் வனம் ஆள வரம் தந்தேன்; நானும் மாண்டுபோய் வானகம் ஆள்வேன்; நீயும் உன் மகனும் இந்த உலகம் உள்ளளவும் பழியாகிய வெள்ளத்தைக் கடக்கமாட்டீர்கள்'' என்று கூறி மயங்கிக் கிடந்தான். தான் எண்ணிய செயல் ஈடேறியதால் இன்பம் அடைந்த கைகேயியும் அயர்ந்து தூங்கலானாள்.

கைகேயியின் கொடுஞ்செயலை எண்ணி 'இவள் பெண் குலத்துக்கே பெரும்பழி புரிந்தாள்' என்று ஆடவர்களின் முன் நிற்கவும் வெட்கங்கொண்டு இரவாகிய பெண் மறைந்து போனாள். பொழுது விடியும் நேரம்; கோழிகள் தசரத மன்னன் நஞ்சனைய கைகேயியின் வஞ்சனையால் மயங்கித் தவிக்கும் தன்மையைக் கண்டு உள்ளம் கலங்கி, தம் சிறகுகளாகிய கைகளால் வயிற்றில் மாறிமாறி அடித்துக்கொண்டு, ''யாவரும் வாருங்கள்; இந்த அநீதியைப் பாருங்கள்'' என்று கூவி அழைப்பனபோலக் கூவின; குளங்களிலும் மரங்களிலும் தங்கியிருந்த பறவைகளின் மெல்லிய ஒலிகள் உள்ளம் புழுங்கிக் கைகேயியை மனத்திலேயே திட்டுவனபோல இருந்தன; முடிசூட்டு விழாவுக்கு அமைக்கப்பட்ட முத்துப் பந்தல் பிரிக்கப்பட்டாற்போல வானத்தில் இருந்த நட்சத்திரங்கள் மறைந்தன.

இருளாகிய பகைவன் துள்ளி ஓட, சூரியன் கீழ்வானத்தில் தன் வழித் தோன்றலாகிய தசரதனின் உயிர் ஒடுங்குமாறு கொடுமை புரிந்த கைகேயிமீது சினங்கொண்டு சிவந்தவன் போலச் சிவந்து தோன்றினான். விடியற்காலையில் ஏழு கடல்களும் சேர்ந்து ஒலித்ததுபோல அயோத்தி நகர மாந்தர் எல்லோரும் ''இன்று ராமன் முடிசூடும் நாளாகும்'' என்று எண்ணி ஆசையால் செய்த ஆரவாரங்களுக்கு அளவே இல்லை.

முடிசூட்டு விழாவிற்காக மகளிர் தம்மை ஆடை அணிகளால் அழகுக்கு அழகு செய்வார்போல அலங்கரித்துக் கொண்டார்கள். நகர ஆண்மக்கள் தம் அண்ணனாகிய ராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறுவதாகவே எண்ணி எண்ணி இன்புற்றார்கள். விழாவைக் காண்பதற்காகவே வேதியர்களும் வேந்தர்களும் வீரர்களும் வெள்ளம்போல் திரண்டு வந்தார்கள். முடிசூட்டு விழாவைக் காண வரும் மகளிர் மயில் கூட்டம் திரண்டு வருவதைப் போன்று வந்தனர். இலங்கையிலுள்ள அரக்கர்களும் ஏழுலகங்களிலும் உள்ள மலைகளும் எட்டுத் திக்கு யானைகளும் தவிர உலகில் உள்ள யாவரும் அயோத்திக்கு வந்து சேர்ந்தனர்.

முடிசூட்டப்பெறும் மண்டபம் பலவித அலங்காரங்களுடன் இந்திர சபை போன்று விளங்கியது. யாவரும் மண்டபத்தை அடைந்து நிறைந்துவிட்டார்கள். அப்பொழுது வசிஷ்டர் சுமந்திரனை நோக்கி, முடிசூட்டு விழாவிற்குரிய நாழிகை நெருங்கிக்கொண்டிருப்பதால், நீர் விரைவிற் சென்று மன்னரையும் மைந்தனையும் அழைத்து வாரும்'' எனப் பணித்தார். சுமந்திரன், தசரதனை அழைக்க அவன் இருப்பிடத்தை நாடிச் சென்றான். அங்கு அரசனைக் காணவில்லை. அதனால் அவன் அங்குள்ளவர்களை வினவ, அவர்கள், அரசர் கைகேயியின் மாளிகைக்குச் சென்றுள்ளாரெனக் கூறினர். உடனே சுமந்திரன் கைகேயியின் மாளிகையை அடைந்து, அங்கிருந்த தாதியரை நோக்கி தன் வரவினை அரசருக்குக் கூறும்படித் தெரிவித்தான். தாதியர் உள்ளே சென்று சுமந்திரன் வந்திருப்பதாகக் கைகேயியிடம் தெரிவித்தார்கள். கைகேயி, தாதியரைப் பார்த்து, ''நான் ராமனை இங்கே அழைத்து வரச் சொன்னதாக மந்திரியாரிடம் கூறுங்கள்'' என்றாள். தாதியர் திரும்பவும் சுமந்திரனிடம் வந்து கைகேயியின் கட்டளையை அறிவித்தனர். அதனைக் கேட்ட சுமந்திரன் ராமன் மாளிகையை அடைந்து அவனைக் கண்டு வணங்கி, ''இளவரசே! முடிசூட்டு விழாவிற்காக அனைவரும் வந்திருக்கிறார்கள்; இப்பொழுது, உம் சிற்றன்னையாராகிய கைகேயியார் தங்களைப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். ஆதலின், தாங்கள் அங்குச் சென்று, அவர்களைக் கண்டு கொண்டு, விழா

நிகழும் மண்டபத்திற்கு விரைவில் வருவீராக'' எனக் கூறிச் சென்றான்.

ராமன் சுமந்திரன் கூறியதைக் கேட்டதும், எழுந்து சென்று முடியாயிரம் கொண்ட முன்னவனை வணங்கி, ஓர் அழகிய தேரில் ஏறி அரச வீதி வழியாக அரண்மனையை நாடிச் சென்றான். அப்பொழுது, வேதியர்கள் வேதம் ஓதினர். மாதர்கள் கீதம் பாடினர். தேவர்கள் மலர் பொழிந்து வாழ்த்தினர். நகர மக்கள் பலப் பலவிதமாகப் புகழ்ந்து கூறி மகிழ்ந்தனர். அவர்களிற் சிலர் காரணம் அறியாது கண்ணீர் வடித்துக் கலங்கி நின்றனர். இவ்வாறாக வீதியின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்று பார்த்துக்கொண்டிருந்தனர்.

ராமன் மன்னவன் அரண்மனையை அடைந்தான்; தேரிலிருந்து இறங்கி உள்ளே சென்றான். அங்கே தந்தையாரைக் காணாமல் கைகேயியின் மாளிகைக்குச் சென்றான். ராமன் வருகையைக் கண்டதும் கைகேயி, 'அரசர் ராமனை வனத்திற்குச் செல்லும்படித் தம் வாயாற் கூறமாட்டார்; ஆதலின், நாமே அதனைக் கூறிவிடுவோம்' என்று தனக்குள் எண்ணித் தன்னைத் தாய் என எண்ணிய அவன் எதிரே எமனைப்போல வந்தாள். அன்னையைக் கண்டதும், ராமன் நிலமிசை வீழ்ந்து பணிந்தான். அப்பொழுது அவள் அவனை நோக்கி,

''ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாவென்(று) இயம்பினன் அரசன் என்றாள்.''

[*ஆழிசூழ்*: கடலால் சூழப்பட்ட. *தாழ் இரு சடை*: தொங்குகின்ற பெரிய சடைகளை. *பூழி*: புழுதி.]

கைகேயி கூறிய கட்டளையைக் கேட்ட ராமனது திருமுகத்தின் அழகை யாராலும் சொல்லுவதற்கு முடியாது. கைகேயியின் சொற்களைக் கேட்டதற்குமுன் அவன் முகம் தாமரை மலரைப்போல இருந்தது. அவள் கூறிய சொல்லைக் கேட்டபோது அவன் முகம் தாமரை மலரின் செவ்வியையும் வென்றது. இக்காட்சியைக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் மிக அழகாகத் தீட்டுகின்றார்:

''இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே யார்க்கும்
செப்பருங் குணத்து ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்புபின்பு வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு(து) அலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா!''

[செவ்வி: அழகு. வாசகம்: உரை. அலர்ந்த: மலர்ந்த.]

கைகேயி கூறியதைக் கேட்ட ராமன், ''அன்னேயே! இதனை என் தந்தையார் கூருது தாங்களே சொல்லுவதாயிருந் தாலும் நான் மறுப்பேனே? என் தம்பியான பரதனுக்குக் கிடைக்கும் செல்வம் எனக்குக் கிடைப்பது போலன்றோ? இதைக் காட்டிலும் உறுதி பயக்கத்தக்க பணி வேறென்ன இருக்கிறது? இப்பொழுதே நான் கானகம் செல்கிறேன். தங்க ளிடம் உத்தரவும் பெற்றுக்கொண்டேன்'' என்று கூறினன்:

''மன்னவன் பணியன் ருகில் நும்பணி மறுப்ப னேளென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்இதின் உறுதி அப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னெளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டே...

4. நகர் நீங்கு படலம்

கைகேயியைப் பணிந்த ராமன் மீண்டும் தன் தந்தை இருந்த திசை நோக்கித் தொழுது பிறகு, தன்னைப் பெற்ற தாயான கோசலையின் மாளிகையை அடைந்தான்; அவளை வணங்கி நின்றான். அப்பொழுது, முடிசூடுதற்குரிய சிறப்புக் களைச் செய்துகொள்ளாமல் தன் முன் வந்து நின்ற மகனைக் கண்டு வியப்புற்ற கோசலை ராமனை வாழ்த்தி, ''குழந்தாய்! நீ இவ்விதம் யாதோர் அலங்காரமும் இன்றி வந்திருப்பதற்குக் காரணம் யாது? முடிசூடுதற்குத் தடை ஏதேனும் உண்டோ?'' எனக் கேட்டாள். அதற்கு ராமன், ''தாயே! உன் அன்பிற் குரிய மைந்தனும் என் தம்பியுமான பரதனே முடிசூடுகின் ருன்'' என்ருன். இச்சொற்களைக் கேட்டதும் கோசலை, ''அப்பா முறைமை அன்று என்ற குறையே அன்றி உன்னைக் காட்டிலும் பரதன் மிகவும் நல்லவன்; அவன் அரசாள்வது எனக்கு மிக்க விருப்பமே ஆகும்; நீ அவனுடன் இருந்து அன்பொத்து வாழ் வாயாக'' என்று இனிமை ததும்பக் கூறினள். தன் தாயின் பெருந்தன்மையைக் கண்ட ராமன், களிப்படைந்து அவளை நோக்கி, ''அன்னேயே! இனியும் எனக்கொரு கட்டளை உளது. தந்தையர் என்னைப் பதினன்கு வருஷங்கள் வனத்தில் வசிக்கப் பணித்துள்ளார்'' என்று கூறினன்.

இதனைக் கேட்டதும் கோசலை, இடியுண்ட நாகம்போலப் பெருமூச்செறிந்து மிக்க துயரத்தில் அழுந்தி, ''ஆ! உன்மீது பேரன்போடு இருந்த அரசனுக்கு நீ செய்த பிழை யாது? என் அருமைப் புதல்வனே! உன்னைப் பிரிந்து நான் எவ்வாறு உயிர்

வாழ்வேன்? 'மகனே! நீ முடிசூடி இவ்வரசைத் தாங்கிக் கொள்; நான் முதுமை அடைந்தேன்,' என்று உன் தந்தையார் கூறிய சொற்கள் வஞ்சகமோ? மன்னன் கருணை நன்று! நன்று!! வறுமையில் வருந்தியோருக்குப் பெருஞ்செல்வம் கிடைக்க, பின்னர் அதனை இழந்தவர்போலன்றோ உன் நிலைமை ஆகிவிட்டது?'' எனப் பலவாறு கூறி ஏங்கினாள்.

மீண்டும் மீண்டும் பெருந்துயர் வருத்துதலின் கோசலை மனம் நொந்து,

''அறமெ னக்கிலை யோவெனும் ஆவிநைந்(து)
இறவ டுத்ததென்! தெய்வதங் காளெனும்
பிறவு ரைப்பதென்! கன்றுபி ரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்.''

[ஆவி: உயிர். நைந்து: வருந்தி. கறவை: பசுமாடு.]

அப்பொழுது ராமன், அவளை நோக்கி, ''அருங் கற்பினை யுடைய அன்னாய்! மெய்த்திறமுடையாரான நம் வேந்தரைப் பொய்த்திறமுடையராக ஆக்குதல் முறையாகுமோ?'' அன்றியும் ''பெருமையிற் சிறந்த என் தந்தையாரின் கட்டளையை மறுத்து நடத்தல் எனக்கு எங்ஙனம் இயலும்? ஆகவே, தாங்கள் மனம் வருந்தாதிருப்பீராக'' என்றான். உடனே, கோசலை, ''மகனே! உன் தந்தையின் கட்டளையை மறுக்கும்படி நான் கூறவில்லை; உன்னைப் பிரிந்து இருப்பதற்கே மனம் வாடுகிறேன்; அதனால், நீ என்னையும் உன்னுடன் காட்டிற்கு அழைத்துச் செல்லவேண்டும்'' என்று கூறினாள்.

ராமன், ''தாயே! தந்தையார் என் பிரிவால் மிகவும் வருந்துவார்; அவர் அருகே நீங்கள் இருந்து அவருக்கு ஆறுதல் கூறுதலே தகுதியாகும்; எத்தனை ஆண்டுகள்? அவை பத்தும் நாலும் தானே? பதினான்கு நாட்கள்போல விரைவில் கழித்து விட்டு மீண்டும் வந்துவிடுவேன்'' என்றான்.

ராமன் அவ்வாறு கூறியும், கோசலை மனம் ஆற்றாதவளாய், அரசரிடம் சென்று 'இதனை மாற்ற முயற்சி செய்வோம்' என்று கைகேயியின் மாளிகையை நோக்கிச் சென்றாள். பின்னர் ராமன் சுமத்திரையிடம் சொல்லிக்கொள்ள அவள் மாளிகைக்குப் புறப்பட்டான்.

கோசலை, கைகேயியின் அந்தப்புரத்தை அடைந்தாள். அங்கே, அரசன் மூர்ச்சையுற்று நிலத்தில் வீழ்ந்திருப்பதையும் அருகில் கைகேயி நிற்பதையும் கண்டாள்; வேர் அற்ற மரம்

போல் பூமியிற் சாய்ந்து பெரும் கூச்சலிட்டுப் புலம்பத் தொடங்கினுள். அந்த அழுகுரலைக் கேட்ட மண்டபத்திலிருந்த அரசர்கள் முதலியோர் வசிஷ்ட முனிவரை அடைந்து, "ஸ்வாமி! அரண்மனையில் அழுகுரல் கேட்கிறது; பெருந்துன் பம் ஏதேனும் நேர்ந்திருக்கலாம்; தாங்கள் விரைவிற் போய் அறிந்து வாருங்கள்" என்று வேண்டினர்.

அவ்வாறே, வசிஷ்டர் கைகேயியின் மாளிகையை அடைந்து அதனுள் செல்லலும் அங்கே தசரதன் மூர்ச்சையுற்று வீழ்ந் திருப்பதையும், கைகேயி, சிறிதும் முகவாட்டமின்றி இருப்ப தையும் கோசலை புலம்பிக்கொண்டிருப்பதையும் நோக்கினுர். உடனே முனிவர், கைகேயியை, "இங்கு நடந்தது என்ன?" என்று வினவினுர். அவள் தன்னுல் நிகழ்ந்தவை யாவும் கூறி னுள். அதுகேட்ட அவர் மூர்ச்சையுற்ற மன்னன் முகத்தில் குளிர்ந்த பன்னீர் தெளித்து விசிறினுர். அவன் உணர்வு பெற் றுன். பின்னர் மன்னனைப் பார்த்து இனிய சொற்களால் தேற்றி, "இனி உன் கவலையை ஒழிப்பாயாக; ராமனே நாட்டை ஆளும்படிக் கைகேயி செய்வாள்" என்றுர். அதற் குத் தசரதன், "ஸ்வாமி எனக்குப் பழி ஏதும் ஏற்படாதவாறு ராமனுக்குப் பட்டம் கட்டி என் துயரம் நீங்கும் வழியைத் தேடவேண்டும்" என்று வேண்டினுன்.

வசிஷ்டர், கைகேயியை நோக்கி, "திருமகளே, உன் மகனுகிய ராமனுக்கு அரசைக் கொடு; தசரதனுக்கு உயிரைக் கொடு; நீ புகழடைவாயாக" என்றுர். இவ்வாறு வசிஷ்டர் கூறி முடிக்குமுன்னே கைகேயி விம்மி அழுதாள்: "அரசன் தன் வாக்குத் தவறுவானேயாயின் இவ்வுலகில் நான் உயிரோடு இருக்கமாட்டேன்" என்று சூளுரைத்தாள். முனிவர் சினந்து, "நீயும் ஒரு பெண்ணே? தீயவளே! சிறிதும் கண்ணேட்டம் இல் லாமல் கணவன் தன் உயிருடன் படும் துன்பத்தை அறியா மல், புண்ணிடத்தே பட்ட தீயோ அல்லது நஞ்சோ என்னும் படிக் கூறிவிட்டாய்; மன்னன் தன் வாயாற் கூறுவதற்கு முன்பு, நீ ஏன் ராமனை வனம் ஏகும்படிச் சொன்னுய்? உன் னைக் காட்டிலும் கொடியோர் உலகத்தில் உள்ளாரோ?" என்று பலவாறு கூறி நிந்தித்தார்.

உடனே சிறிது உணர்ச்சி பெற்றிருந்த மன்னன் கைகே யியை நோக்கி, "நாவில் நஞ்சையுடையவளே! பாவியாகிய நீயோ, என் உயிர்போன்ற ராமனைக் கொடிய காட்டிற்குச் செல்லுமாறு ஏவினுய்! அடி சண்டாளி! உன் கட்டளையைக் கேட்டு அவனும் காட்டுக்குச் சென்றுனே? ஆ! என் சொல் வேன்? அதனுல் நீ என் உயிரையே உண்டுவிட்டாயே! அந்தோ! அந்நாளிலே நான், தீயின் முன்னிலையில், உன்னை என்

மனைவியாகக் கொண்டவனன்று; உன்னை, என் உயிரைப் பற்று கின்ற கொடுங்கூற்ருகக் கொண்டுவிட்டேன். பாவி, இனிப் பலவாறு கூறி என்? உன் கழுத்திற் கிடக்கும் தாலிக் கயிறு உன் மகனுக்கு ரக்ஷாபந்தனக் கயிருகட்டும்'' என்ருன்.

இவற்றைக் கேட்ட கோசலை, 'கைகேயியினுலேயே இத் துன்பம் விளைந்திருக்கின்றது' என்று உணர்ந்து, மன்னனுக்குப் பல ஆறுதல் மொழிகளைக் கூறினுள். பின்னரும் தசரதன் சினம் அடங்காது வசிஷ்டரை நோக்கி, ''இத்தீயவள் இனி என் மனைவி அல்லள். அரசனுகும் இவள் மகன் பரதனும் என் மகன் அல்லன். அவன் எனக்குக் கடனுற்றவும் உரியவன் ஆகான்'' என்ருன்.

வசிஷ்டர் அரசனை நோக்கி, ''கவலைப்படவேண்டாம்; நான் ராமனை அடைந்து, அவனைக் காட்டிற்குப் போகாமல் நிறுத்திவிடுகிறேன்'' என்று சொல்லி எழுந்து போனுர். மன்னனும் முனிவர் உரைத்தது கேட்டு, ''ராமன் வனம் செல்லா மல் நின்றுவிடுவான்'' என எண்ணிச் சிறிது தூங்கத் தொடங் கினுன். அதுகண்ட கோசலை, ''ஸ்வாமி! தாங்கள் வருத்த மடையவேண்டாம். முனிவர் சென்றிருப்பதால் ராமன் விரை வில் வருவான்'' என்று கூறியவாறு தசரதன் பாதங்களை மெது வாகத் தடவினுள்; அதனுல் அரசன் சிறிது தூக்கம் கலையக் கண்விழித்து நோக்கி, ''கண்மணி! கோசலையே! இந்த வன் நெஞ்சக்காரியான கைகேயி, கூனியின் பேச்சைக் கேட்டு என் உயிரை மாய்க்கத் துணிந்துவிட்டாள்; என் ராமனும் வனத் திற்குச் செல்லாமல் இருக்கமாட்டான்; என் உயிரும் போகா மல் இராது; இதற்கு ஒரு காரணம் உண்டு'' என்று முன் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியைக் கூறினுன்:

''முன்னெரு காலத்தில், நான் வேட்டையின் பொருட்டுக் காட்டிற்குப் போயிருந்தேன். பிரமதேவர் பரம்பரையில் தோன்றிய 'சலபோசர்' என்பவரும் அவர் மனைவியும் குருடர் களாய் அக்காட்டில் வசித்திருந்தனர். அவர்கள் வேண்டியபடி, அவர்களுடைய மகன் 'சுரோசனன்' என்பவன் அவர்களுக்கு நீர் கொண்டுபோக அங்குள்ள ஆற்றில் தன் கமண்டலத்தால் நீரை முகந்தான். அப்போது புதரின் மறைவாக நின்றிருந்த நான், அந்த ஓசையைக் கேட்டு, யானை நீர் பருகுகின்றது என எண்ணி, ஓர் அம்பினை எய்தேன்; அது சுரோசனன்மீது பட்டதால் அவன் கதறி வீழ்ந்தான். நான் திடுக்கிட்டு அவனை அடைதலும், அவன் தன் வரலாற்றைக் கூறித் தன் பெற்ருே ருக்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்துத் தனக்கு நேர்ந்ததையும் அறிவிக்கும்படிச் சொல்லிவிட்டு உயிர் நீங்கி விஉ· அவ்வாறே நான் தண்ணீரைக் கொண்டு போய் அவ

னைப் பெற்றவர்களுக்குக் கொடுத்து மகனுக்கு நேர்ந்ததையும் கூறினேன். 'என் பிழையைப் பொறுத்தருள்க' என்று வேண்டினேன். அந்தோ! அவர்கள் இருவரும் அடைந்த துன்பத்திற்கு எல்லையே இல்லை. 'ஐயா! இன்றுதான் நாங்கள் உண்மையான கண்களை இழந்தவர்களானேம். எங்கள் கண்மணி போன்ற மகனைப் பிரிந்ததால் நாங்கள் இப்போதே இறக்கிறோம். செய்த தவற்றுக்கு வருந்தி நிற்கின்றனையாதலின் கொடிய சாபம் கொடுக்க மனமில்லை; ஆயினும், நீயும் உன் மகன் உன்னை விட்டுப் பிரிய அப்புத்திர சோகத்தால் உயிர் துறப்பாய்' என்று சாபம் தந்து இறந்தனர். அவர்கள் அளித்த சாபம் வீணாகாது; ராமன் காடு செல்வதும் என் உயிர் போவதும் திண்ணம்'' என்றான்.

இங்கே, இப்படி இருக்க, மன்னனை விட்டுச் சென்ற வசிஷ்டர், அரசவைக்கு வந்து அங்குள்ளவர்களிடம் மாளிகையினுள்ளே நடைபெற்ற செய்திகளைக் கூறினர். யாவரும் ஓவென அழுதார்கள். அழுகுரல் கேட்கவே நகரம் எங்கணும் இச் செய்தி பரவலாயிற்று. எல்லோரும் வருந்தினர்கள். ராமன் பிரிவை எண்ணி உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணை உயிர்களும் அழுதன:

''கிள்ளையொடு பூவை அழுத; கிளர்மாடத்(து)
உள்ளுறையும் பூசை அழுத; உருவறியாப்
பிள்ளை அழுத; பெரியோரை என்சொல்ல
வள்ளல் வனம்புகுவான் என்றுரைத்த மாற்றத்தால்.''

[**கிள்ளை:** கிளி. **பூவை:** மைனா. **பூசை:** பூனை. **மாற்றத்தால்:** சொல்லால்.]

இச்செய்தியைக் கேட்ட லக்ஷ்மணன் அடங்காச் சினம் கொண்டு, ''என் முன்னவரான ராமர் முடிசூடுவதற்குத் தடை செய்தவர்களை இதோ, ஒரு நொடிப்பொழுதில் அழித்து, ராமருக்கே முடிசூட்டி வைப்பேன்'' என்று சொல்லித் தன் வில்லினை வளைத்து நாணேசை செய்தான்.

சுமித்திரையிடம் சென்றிருந்த ராமன், அவளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருக்கும்போது, லக்ஷ்மணன் செய்த வில்லின் நாணேசையைக் கேட்டு அவனிடம் விரைந்து வந்தான்; லக்ஷ்மணனை நோக்கி, ''முறையற்ற சினங்கொள்ளாச் செம்மலே, இவ்வளவு கோபம் எங்ஙனே உண்டாயிற்று?'' என வினவினன். லக்ஷ்மணன் கனலெழச் சிரித்து, ''பேரரசு நின்னதேயென்று சக்ரவர்த்தி கூற அதனைப் பகையால் இழந்து வனம் போகின்றாய் என்னும் இந்நிலையிலும் சினம் கொள்ளா

மல் வேறு எப்போதுதான் சினங்கொள்வது?'' என வெகுண்டு கூறினன். அதுகேட்ட ராமன், ''லக்ஷ்மண, இந்நிலை ஏற்பட்டது சக்ரவர்த்தியாகிய தசரதன் பிழையன்று; அன்புடன் நம்மை வளர்த்த கைகேயியின் பிழையும் அன்று; பரதனுடைய பிழையும் அன்று; விதியின் பிழை; இதற்கு நீ இவ்வளவு கோபம் கொள்ளுதல் பொருந்தாது'' என்று சாந்தமான பொருளுரைகளைக் கூறினன். ஆனால் லக்ஷ்மணனே,

''உறிக்கும்உலை உள்ளுறு நீயென ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம்எங்ஙனம் ஆற்றுவென் கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல் வானவர்க்கும் வலிஇதாம்
விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி என்றான்.''

இதனைக் கேட்ட ராமன், ''ஐயனே, அறநெறியினின்றும் பிறழாத தம்பியைப் போரில் கொன்றோ, சான்றோர் புகழும் தந்தையை வெற்றி கொண்டோ, நம்மையீன்ற தாயை வென்றோ இக்கோபம் தீரப்போகின்றாய்?'' என்றான். செல்லும் சொல்வல்ல ராமன் கூறிய இச்சொற்களால் சினம் மாறி வருத்தம் மிகுந்து செய்வகை அறியாது வாளா நின்றான் இளவல்.

பின்னர், ராமன், இளவலையும் அழைத்துக்கொண்டு திரும்பவும் சுமித்திரையிடம் வந்து நடந்த செய்தியைக் கூறி அவள் வருத்தம் அடைந்திருக்கும்பொழுது, கைகேயியால் அனுப்பப்பட்ட தாதியர் இருவர் மரவுரியுடன் வந்து, ''தங்கள் சிற்றன்னை கைகேயியார், இதனைத் தங்களிடம் கொடுக்கும்படிக் கூறினர்கள்'' என்று மரவுரியை ராமனிடம் கொடுத்தனர்.

அதனைப் பெற்றுக்கொண்டதும் ராமன், ''நான் காட்டிற்குச் செல்ல விடை அளியுங்கள்'' என்று சுமித்திரையை வணங்கினன். மிகுந்த வருத்தத்துடன் சுமித்திரை தன் மகன் லக்ஷ்மணனை நோக்கி, ''நீயும் ராமனுடன் சென்று அவனுக்குத் துணையாயிரு; இவனுக்கு அடிமையென ஏவல் செய்க; மீண்டு இந்நகர்க்கு ராமன் வருவானாயின் வருக; அஃதின்றேல் முன்னம் முடி'' எனக் கூறிக் கண்ணீர் பெருக்கி நின்றாள். பின்னர் ராமனும் லக்ஷ்மணனும் மரவுரி தரித்து நிற்க, ராமன் லக்ஷ்மணனை நோக்கி, ''நீ என்னுடன் வருவதைக் காட்டிலும் இங்கேயே இருந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் நம் தாய் தந்தையருக்குத் தேறுதல் கூறுவது நல்லதாகும்'' என, அதற்கு அவன் உடன்படாது, தானும் புறப்படச் சித்தமானன்.

அச்சமயத்தில் வசிஷ்டர் அவர்களிடம் வரவும் இருவரும் பணிந்து நின்றார்கள். ராமனுடைய நிலையைக் கண்ட முனிவர்

மிகத் துயரம் கொண்டு, ''ராமா! நீ வனத்திற்குச் செல்வை யாயின் உன் தந்தையின் உயிர் உடலில் தங்காது; ஆதலின், நீ வனம் செல்லுவதை நிறுத்திவிடு'' என்ருர். அதற்கு ராமன், ''ஸ்வாமி! தந்தையின் கட்டளையைத் தாங்களே தடுத்தல் தகுமோ?'' என்ருன். அப்பொழுது வசிஷ்டர் ஏதும் சொல்ல வழி இல்லாமல் கலங்கி நின்ருர். ராமன் அவரை ஆற்று வித்தான். பின்னர் அவருடனேயே, ராமனும் லக்ஷ்மணனும் அரசர் அரண்மனை வாயில்வரை நடந்து சென்ருர்கள். அரண்மனை வாயிலை அணுகியதும், அங்கிருந்த அரச கூட்டத் தினரும் நகரமக்களும் மிகவும் வருந்தி, 'ராமருடன் நாமும் செல்லவேண்டியதே' என உறுதி கொண்டனர்.

பிறகு ராமன், தன் மாளிகை சென்று சீதையைக் கண் டான். அவள், தன் நாயகன் கொண்டிருந்த கோலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அதுவரை நிகழ்ந்தவற்றுள் ஒன்றும் அறியாத சீதை, ராமனை நோக்கிக் கண்ணீர் சோர, ''தாங் கள் ஏன் இவ்வாறு இருக்கிறீர்கள்? அரசருக்கு ஏதேனும் துன் பம் நேர்ந்துவிட்டதோ?'' என்று கேட்டாள். உடனே ராமன் நடந்தவைகளைக் கூறி மேலும், ''நான் காட்டிற்குச் செல் கிறேன், நீ இங்கேயே வருந்தாமல் இருப்பாயாக'' என்ருன். நாயகன் கூறிய சொற்களைக் கேட்ட சீதை, மனம் வருந்தி, ''தாங்கள் என்னை விட்டு நீங்குதல் தகுதியாகுமோ? என்னை யும் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டுகின்றேன்'' என் ருள்.

ராமன் அவளை நோக்கி, ''பெண்ணே! காட்டில் சூரிய வெப்பம் அதிகம். மேலும் அங்குள்ள பரற்கற்களில் நடப் பதை மெல்லிய மலர் போன்ற உன் பாதங்கள் தாங்காது'' என்ருர். அதற்கு அவள், ''தங்கள் பிரிவெனும் துயரைக் காட்டிலும் கானகம் கொடுமை செய்யுமோ?'' என்று உரைத் தாள். ராமன், இனிச் சீதையை, இங்கு இருக்கச் சொல்வ தால் பயன் ஏதும் இல்லை என்று எண்ணியவாறு நிற்க, அக் கணமே, சீதை, ஓர் அறையினுள் சென்று மரவுரி அணிந்து கொண்டு அவன் அருகே வந்து நின்ருள். அப்பொழுது ராமன் சீதையைப் பார்த்து, ''பெண்ணே! நீ என்னுடன் வருவதால், எனக்குத் துன்பத்தையே கொடுப்பவளாவாய்'' என்று கூறினன்.

அதனைக் கேட்டதும் சீதை சீற்றங் கொண்டு, ''என்னை அழைத்துச் செல்வதொன்றே தங்களுக்குத் துன்பம்; என்னைத் துறந்துவிட்டால் இன்பம் போலும்'' எனச் சீறிக் கூறினள். இதனைக் கேட்ட ராமன் ஏதும் சொல்ல இயலாமல் காட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினன். மரவுரி தரித்துத் திரு

மகள் போன்ற சீதை பின்னே வர இளையவனான லக்ஷ்மணன் வில்லேந்திய கையினனாய் முன்னே செல்ல, மேகத்தின் நிறம் ஒத்த மேனியையுடைய ராமன் வனம் செல்வதைக் கண்ட நகரமாந்தர் அனைவரும் அடைந்த துயரம், யாவராலும் அள விட்டுக் கூற இயலாததாய் இருந்தது. அப்பொழுது சுமித் திரை முதலானோர் தங்களைத் தொடர்ந்து வருதலை நோக்கிய ராமன், ''நீங்கள் துன்பத்தில் வருந்தும் என் தந்தையாருக்குத் தேறுதல் கூறி அவர் துயரத்தை மாற்றுங்கள்'' என்று அவர் களை அங்கேயே நிற்கும்படி வேண்டினான். அவர்கள் விம்மி விம்மி அழுதவாறே மூவரையும் வாழ்த்திவிட்டுத் திரும்பிச் சென்றனர். அத்தருணத்தில், வசிஷ்ட முனிவர் அங்கு வரவும், ராமன் முதலியோர் அவரைத் தொழுது வணங்கி அவரையும் திரும்பிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். பின்னர், சுமந் திரன் செலுத்தி வந்த தேரின்மீது, சீதை, லக்ஷ்மணன் ஆகி யோருடன் ராமன் அமர்ந்து காட்டை நோக்கிச் சென்றான்.

5. தைலம் ஆட்டு படலம்

நகர மக்கள் பின்தொடர்ந்து வர, வனத்தை நோக்கிச் சென்ற ராமன் முதலியோர், இரண்டு யோசனை தூரம் சென் றனர். அச்சமயத்தில், கதிரவன், தன் மரபில் உதித்த மைந் தர், கானகம் புகுவதைக் காணச் சகியாதவன் போன்று, மேற்குமலையில் மறைந்தான். எங்கும் இருள் சூழத் தொடங் கியது. அது கண்ட ராமன் முதலியோர் தேரினின்றும் இறங்கி அருகேயுள்ள சோலையில் தங்கினார்கள். ராமனைத் திரும்பவும் நகரத்திற்கு அழைத்துப் போக எண்ணி வந்தவர்களான நகர மக்களும், தேரைச் செலுத்தி வந்த சுமந்திரனும் அச்சோலையி லேயே தங்கினர்.

அவ்வாறு தங்கியுள்ளவர்கள் யாவரும் ஆழ்ந்து நித்திரை செய்யும்பொழுது ராமன், மெதுவாகச் சுமந்திரனை அழைத்து, ''என்னைப் பின்தொடரும் இவர்கள் யாவரும் நான் நகரத் திற்கு வராமல் தனித்துச் செல்லமாட்டார்கள்; ஆதலின், தாங்கள் இப்பொழுதே தேரைத் திருப்பிக்கொண்டு நகருக் குச் சென்றுவிடும்; நான் சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் இங்கிருந்து போய்விடுகிறேன்; நகர மக்கள் எழுந்ததும் இங்கே தேர் இல்லாதிருப்பதையும் சக்கரங்களின் சுவடுகளை யும் அறிந்து, நான் நகரத்திற்குத் திரும்பிவிட்டேன் என்று எண்ணி நகரத்திற்குத் திரும்பிவிடுவார்கள்; நான் காட்டிற்குச் சென்றதாக, தாங்கள் என் தந்தையாருக்கு அறிவித்துவிடுங் கள்'' என்று கேட்டான்.

சுமந்திரன், தன்னை ராமன் வேண்டியதைக் கேட்டு மிகவும் வருந்தி, ''இத்துன்பச் செய்தியை நானே சென்று நம் பேரரசருக்குச் சொல்லவேண்டும்?'' என்று நினைத்து,

''தேவியும் இளவலும் தொடரச் செல்வனைப்
பூவியல் கானகம் புகவுய்த்தேன் என்கோ?
கோவினை யுடன்கொடு குறுகினேன் என்கோ?
யாவது கூறுகேன் இரும்பின் நெஞ்சினேன்.''

''நாற்றிசை மாந்தரும் நகர மக்களும்
தேற்றினர் கொணர்வரென் சிறுவன் தன்னை யென்(று)
ஆற்றின அரசனை ஐய வெய்யவென்
கூற்றுறழ் சொல்லினல் கொலைசெய் வேன்கொலோ!''

''அங்கிமேல் வேள்விசெய்து அரிதிற் பெற்றநின்
சிங்கவே(று) அகன்றதென் றுணர்த்தச் செல்கெனே,
எங்கள்கோ மகற்கினி யென்னிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால்.''

[**என்கோ:** என்பேனே. **கோவினை:** அரச குமாரனை ராமனை **இரும்பின்:** இரும்பினை ஒத்த.

அங்கி: அக்கினி. **வேள்வி செய்து:** ஆகுதி செய்து. **சிங்க ஏறு:** ஆண் சிங்கம். **கோமகன்:** அரசன் (தசரதன்).]

இங்ஙனம் பலவாறு சொல்லிக் கண்ணீர்விட்டுக் கலங்கினான். அப்பொழுது ராமன், அவனுக்குப் பல நீதி மொழிகளைக் கூறி, ''நான் வனம் சென்ற செய்தியை அறிவிப்பதற்கு உமக்குத் துன்பமாய் உள்ளதாயின், நீர் வசிஷ்டரை அடைந்து அவருக்கு என் வணக்கத்தை அறிவித்து, அவரைக் கொண்டு என் தந்தையாரிடம் சொல்லும்படிச் செய்யுங்கள். பரதன் நகரத்திற்கு வந்தவுடன், அவனை நீதியோடு அரசாட்சி செய்யும்படியும், தன் தாயைச் சினந்து கூருதிருக்கும்படியும் சொல்லி, மற்றையோருக்கும் தேறுதல் கூறிக்கொண்டிருங்கள்'' என்றான். சுமந்திரன், வருத்தத்துடன் ராமன் சொற்களுக்கு இணங்கியவனாய், அருகில் நின்ற சீதையின் திருமுகத்தை நோக்கினான். அவள், ''என் மாமனாருக்கும் மாமியாருக்கும் என் வணக்கத்தை அறிவியுங்கள்; என் தங்கையர்களிடம், நான் வளர்த்துவந்த பூவையையும் கிளியையும் நன்றாகப் பாதுகாத்துக்கொள்ளச் சொன்னதாகக் கூறுங்கள்'' என்றாள். சீதை கூறியது கேட்ட சுமந்திரன் கண்கலங்கி, ''அந்தோ! துன்பம் ஒன்றும் அறியாத அன்னையுமா அரணியம் செல்வது?'' என்று தனக்குள் கருதி, பின்னர் லக்ஷ்மணனை நோக்கினான்.

உடனே அவன், தந்தையையும் பரதனையும் கொடுஞ்சொற்களால் இகழ ராமன் அவனைச் சாந்தப்படுத்தினான்.

அதன் பின்னர், சுமந்திரன், அம்மூவரிடமும் விடைபெற்று தேரைத் திருப்பி நகரை நோக்கிப் புறப்பட்டான். அதே சமயத்தில், ராமன், தன் தேவியோடும் தம்பியோடும் சோலையினின்று நீங்கிப் பொழுது விடிவதற்குள் மற்றும் இரண்டு யோசனை தூரம் கடந்து சென்றுவிட்டான்.

நகரை அடைந்த சுமந்திரன், வசிஷ்டரைக் கண்டு ராமன் கூறியவற்றைச் சொன்னான். அவர் சுமந்திரனை அழைத்துக் கொண்டு தசரதனிடம் சென்றார். அங்கிருந்தோர் அனைவரும் சுமந்திரனுடைய முகக் குறியைக் கண்டு, ராமன் திரும்பி வரவில்லை என உணர்ந்து கலக்கம் அடைந்தனர். அதற்கு முன்னரே, சுமந்திரன் தேர் வருவதைக் கண்ட நகரத்தினர், ''தேர் வந்தது, தேர் வந்தது'' எனக் கூவி ஆரவாரம் செய்ததால், அவ்வொலியைக் கேட்ட தசரதன், ராமன் வந்துவிட்டானென்று எண்ணிச் சிறிது ஆறுதல் அடைந்திருந்தான்; வசிஷ்டர் தன்னிடம் வந்ததும் அவன், ''ஸ்வாமி, ராமன் திரும்பி வந்தானா?'' என்று கேட்டான். அவர், அதற்கு யாதொன்றும் கூறாதிருந்தார். அக்குறிப்பினால் அவன் வரவில்லை என்று உணர்ந்து அரசன் மனம் தளர்ந்து புரண்டான். வசிஷ்டர், ''நான் இத்துன்பத்தைப் பார்க்கமாட்டேன்'' என்று திரும்பிச் சென்றுவிட்டார்.

மற்றும் ஒரு முறை கண்ணைத் திறந்துகொண்ட மன்னன், சுமந்திரனை நோக்கி, ''ராமன், காட்டில் வெகு தூரம் சென்றுவிட்டானா அல்லது அருகிலேயே உள்ளானா?'' என்று வினவினான். சுமந்திரன், ''மன்னரே, ராமர், சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் வெகு தூரம் கடந்து காட்டிற்கே சென்றுவிட்டார்'' என்றான்.

அதனைக் கேட்டதும் தசரதனுக்கு உயிர் போய்விட்டது. அவன் ஒளி பொருந்திய பரமபதத்தை அடைந்தான்.

அரசனுடைய உயிர் நீங்கியதை உணர்ந்த கோசலை துணையைப் பிரிந்த அன்றிற் பறவையைப்போல வருந்தி அழுதாள். சுமித்திரையும் துன்பத்தால் பலவாறு புலம்பினாள். தசரதனுக்குரியவர்களாகிய அறுபதினாயிரம் தேவியரும் மயில் கூட்டம்போல வந்து சூழ்ந்து கூக்குரலிட்டுப் புலம்பினர். சுமந்திரன், வசிஷ்டரை அணுகி, மன்னன் இறந்த செய்தியைக் கூறினான். முனிவர், அரசன் இறந்த இடம் சென்று, ''இப்பொழுது செய்யவேண்டிய சடங்குகளை நடத்துவதற்கு அர

சன் மைந்தர்கள் எவரும் இங்கு இல்லை; ஆதலின், பரதன் வந்தபிறகே அவற்றைச் செய்யவேண்டும்'' என்று கூறி, அரசன் உடல் கெட்டுவிடாதிருக்கும்பொருட்டு, அதனைத் தைலத்திற் சேர்த்துத் தனியாக ஓர் இடத்தில் வைக்குமாறு கூறினர். பின்னர் கோசலையையும் சுமித்திரையையும் தேற்றுவித்து அவர்கள் இருப்பிடம் செல்லுமாறு பணித்தார். மற்றும் முனிவர், சுமந்திரனை நோக்கி, விரைவில் வந்து சேரும்படி பரதனுக்கு ஓலை எழுதி அனுப்பும்படிக் கூறினர்; அவன் வரும் வரையில் அரச காரியங்களைப் பார்த்துக்கொள்ளும்படியும் கட்டளையிட்டார்.

இது இவ்வாறிருக்க, ராமனுடன் சென்ற நகர மக்கள், சோலையில் உறங்கி எழுந்தனர். ராமனைக் காணவில்லை. மிக்க துயர் கொண்டு எங்கும் தேடி, தேர் திரும்பி இருக்கும் சுவட்டைப் பார்த்து, ''சுமந்திரருடன் ராமன் நகரத்திற்குச் சென்றிருக்க வேண்டும்'' என்று நினைத்து மகிழ்ந்து நகரத்திற்கு வந்து சேர்ந்தனர். நகரத்தில், ராமன் இல்லாததையும் மன்னன் இறந்து போனதையும் உணர்ந்த மக்கள், மனம் பதைத்து ஓலமிட்டு அழுதார்கள்.

அப்பொழுது வசிஷ்டர், அவர்களிடம் வந்து அவர்களைத் தேற்றி அமைதியடையச் செய்தார்.

6. கங்கைப் படலம்

காட்டினுள் புகுந்துவந்த ராமன், சீதை ஆகியோர் மூவரும், அங்கேயுள்ள இயற்கை விநோதங்களைக் கண்டவாறு சென்றனர். இரவு விடிந்து சூரியன் தோன்றும் சமயத்தில் கங்கை நதிக் கரையை அடைந்தனர். கங்கைக் கரையிற் செல்லும் அவர்கள் அழகைக் கம்ப நாட்டாழ்வார் வியந்து,

> ''வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
> பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனன்
> மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
> ஐயோஇவன் வடிவென்பதோர் அழியாஅழ குடையான்.''

என்று போற்றுகின்றார்.

அந்நதிக்கரையினை அடுத்து பல தவச்சாலைகளை அமைத்துக் கொண்டு வாழும் முனிவர்கள், ராமன் முதலியோரைக் கண்டு மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தனர். பின்னர் மூவரும் கங்கையில் நீராடித் தம் நித்தியக் கடன்களை முடித்தனர். முனிவர்களால் அளிக்கப்பட்ட தூய காயும், கிழங்கும் கனியும் அருந்தியபின், இரவு முழுவதும் காட்டு வழியே நடந்துவந்த இளைப்பை ஆற்றிக்கொண்டிருந்தனர்.

அவ்வாறு இருக்கும்பொழுது, அங்குள்ள கங்கைக்கரையில் சிருங்கிபேரம் என்ற சிற்றூரில் வசிப்பவனும் பல நாவாய்களுக்குத் தலைவனும் ஆகிய குகன் என்பவன், ராமனைக் காணவேண்டும் என்ற விருப்பத்துடன் ராமன் தங்கி இருக்கும் இடத்திற்கு வந்தான். லக்ஷ்மணன் அவனைக் கண்டதும், ''நீ யாவன்?'' என வினவலும் அக்குகன்,

''தேவ நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்.''

[நாவாய்வேட்டுவன்: ஓடம் ஓட்டும் வேடன்.]

என்றான்.

லக்ஷ்மணன், ராமனிடம் சென்று, குகன் வந்திருப்பதைக் கூறினான். ராமன் அவனை, ''உள்ளே வர விடுவாயாக'' என்றதும், லக்ஷ்மணன் திரும்பி வந்து குகனை உள்ளே அனுப்பினான். ராமனைக் கண்டதும் குகன், அவன் முன்னர், நிலத்தின்மீது வீழ்ந்து வணங்கி நின்றான். அவனை ராமன் அன்புடன், ''இங்கு அமர்வாய்'' எனக் கூறினான். அவன் உட்காரதாவனாய் தன் கரங்களைக் கட்டிக் கொண்டு நின்று, ''ஸ்வாமி, நான் மீனும் தேனும் தங்கள் திருவமுதுக்காகக் கொண்டுவந்துள்ளேன்; அவற்றை ஏற்றுக்கொள்ளத் தங்கள் திருவுள்ளம் எப்படியோ?'' என்று பணிவாகக் கூறினான். அப்பொழுது ராமன், அங்கிருந்த முனிவர்களை நோக்கிப் புன்முறுவல் பூத்துப் பின் குகனை நோக்கி, ''அன்பின் மிகுதியால் நீ கொணர்ந்த இவை அமிர்தத்தைவிட உயர்ந்தன; பரிசுத்தமானவை; நாம் அங்கீகரித்தற்கும் உரியன; ஆகவே, மனமகிழ்ந்து நாம் உண்டதற்கு ஒப்பேயாகும்'' என உரைத்தான். ''நாளை காலை காலையில் கங்கையை கடந்து செல்ல எண்ணியுள்ளோம். ஆதலின் நீ உன்னுடன் வந்தோரை அழைத்துக்கொண்டு இருப்பிடம் அடைந்து, காலையில் ஓடத்துடன் வருவாயாக'' என்றான். அதற்குக் குகன், ''ஸ்வாமி! பேரரசர் மைந்தரான தங்களை இக்கோலத்துடன் கண்டும் விட்டுப் பிரிந்து செல்வதற்கு என் மனம் சம்மதிக்கவில்லை; நான் தங்களிடமே இருந்து தொண்டு செய்ய அனுமதிக்கவேண்டும்'' என்று வேண்டினான். அப்பொழுது ராமன், சீதையையும் லக்ஷ்மணனையும் நோக்கிப் பின் குகனைப் பார்த்து,


'யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு' என்றான். லக்ஷ்மணன் வாயிலாக ராமன் நகர் நீங்கி வனம் போந்த காரணத்தைக் கேட்டறிந்த குகன் மிக்க வருத்தமுற்றுக் கண்களில் நீர் வழியக் கலங்கி நின்றான். அவன் இருந்த இடத்தைச் சுற்றிலும் தன் சேனைகளைக் காவலாக நிறுத்திவைத்து, தானும் நின்றிருந்தான்.

அப்பொழுது கதிரவன் மேற்கில் மறைந்தான். ராமன், மாலைக் காலத்தில் செய்யவேண்டிய கடன்களை முடித்துக்கொண்டு, தருப்பைப் பாயலில் படுத்துத் தூங்கினான். சீதையும் அவ்வாறே படுத்து உறங்கினாள். லக்ஷ்மணன் கையில் வில் ஏந்தியவாறு கண்களைச் சிறிதும் இமையாமல் காவல் புரிந்து நின்றான். ராமனும் சீதையும் எளிய தருப்பைப் பாயலில் படுத்திருப்பது கண்டு, இளையவனும் குகனும் மிகவும் வருந்தினர், பின்னர் இரவு நீங்கிற்று. சூரியன் தோன்றினான்.

ராமன், எழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு குகனை நோக்கி, ஓடம் கொண்டு வருமாறு கூறினான். குகன் ராமனைப் பிரிய மனம் இல்லாது, ''ஸ்வாமி! தாங்கள் வேறிடத்திற்குச் செல்ல நினையாமல் என் கிராமத்திலேயே தங்கி இருக்கலாம்; நான் தங்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தருவேன்'' என்றான். ராமன், அவன் அன்பைப் பாராட்டிப் புன்முறுவல் கொண்டு, ''வீர, நாம் புண்ணிய நதிகளில் நீராடிப் புனித முனிவர் பலரை வணங்கிச் சின்னாட்களில் மீண்டும் வருவோம்'' என்றான்.

பிறகு குகன் ஒன்றும் சொல்ல இயலாதவனாயினன். அவன் கட்டளைப்படி ஓடம் ஒன்று வந்தது. ராமன், அங்குள்ள முனிவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு சீதையுடனும் தம்பியுடனும் ஓடத்தில் ஏறினான். குகன் தானே ஓடத்தைச் செலுத்திக் கொண்டு கங்கையைக் கடந்து எதிர்க்கரை சேர்ந்தான். மூவரும் ஓடத்தைவிட்டு இறங்கினார்கள். ராமன் குகனைப் பார்த்து, ''சித்திரகூட மலைக்குச் செல்லும் வழி யாது?'' என்று கேட்டான். அதற்கு அவன், ''நான் தங்களுடன் வந்தால் எல்லாவற்றிக்கும் உதவியாக இருக்கும். ஆகையால், என்னையும் அழைத்துப் போங்கள்'' என்றான். அதனைக் கேட்டதும் ராமன், ''குகனே! நீ என்னுயிர் அனையவன்; என் தம்பி நின் தம்பி; இந்த சீதை நின் கேள்; இவ்வுலகம் நின்னதே; நின் அன்பில் கண்டவன் நான்; மேலும்,

''துன்புள தெனின்அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெம்ஒரு நால்வேம் முடிவுள தெனஉன்னு
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளராளேம்.''



எனவே, நான் மீண்டு இவ்விடத்திற்கு வருவேன்; எனக்குத் துணையாய் உன் தம்பி என்னோடு இருக்கின்றான்; ஆதலின் நீ இங்கேயே இரு. மனம் வருந்தாமல் உன் இருப்பிடம் செல்வாயாக'' என்று கூறினான். அதனை மறுக்கமுடியாத குகன், சித்திரகூடத்திற்குச் செல்லும் வழியைக் கூறிவிட்டு, ராமன் முதலியோரிடம் விடை பெற்றுத் திரும்பினான். பிறகு மூவரும் தாங்கள் செல்லவேண்டிய காட்டை நோக்கிச் சென்றார்கள்.

7. வனம் புகு படலம்

ராமன் முதலிய மூவரும் நடந்து செல்லும் வனம் முற்றிலும் குளிர்ச்சியாக இருந்தது. ஆங்குள்ள அற்புதக் காட்சிகள் பலவற்றை ராமன் சீதைக்குக் காட்டிக்கொண்டே வந்து சூரியன் குடகடலிற் குளித்தகாலைச் சித்திரகூட மலையைச் சார்ந்தான். அப்போது பரத்துவாச முனிவர், இருவரையும் மனமகிழ்ச்சியோடு எதிர்கொண்டு வரவேற்றார். ராமனும் லக்ஷ்மணனும் முனிவரைக் கண்டதும் வணங்கினார்கள். முனிவர், அவர்கள் இருக்கும் தவக்கோலத்தைப் பார்த்து வருந்தி, ராமனை நோக்கி, ''நீ இவ்விதம் வரலுற்ற காரணம் யாது?'' என வினவினார். ராமன் நடந்தவற்றைக் கூறினான். அவர் மிகவும் மனம் கலங்கி, ''என் இனிய நண்பன், தசரதன், உன்னைக் கொடிய கானகம் போமாறு ஏவி எவ்வாறு வாழ்கின்றான்?'' என்றார். பின்னர், அவர்கள் மூவரையும் தன் ஆச்ரமத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்து, ராமனைப் பார்த்து, ''ராகவா! இங்கு கங்கையுடன், யமுனையும் சரஸ்வதியும் கூடுகின்றன. இவ்விடம் மிகச் சிறப்பு வாய்ந்தது. நீயும் இவ்விடத்திலேயே தங்கி இருக்கலாம்'' என்றார். உடனே ராமன், ''நான் இங்கே இருப்பேனாகில், இது அயோத்திக்கு அருகிலே உள்ளதனால், என்மீது அன்பு உள்ள நகரமக்கள் அடிக்கடி இங்கு வந்து, என்னை நகரத்திற்கு வரும்படி அழைப்பார்கள்; அதனால் எனக்கும் துன்பம் உண்டாகும்; தங்கள் தவத்திற்கும் இடையூறு ஏற்படும்'' என்றான். அதற்கு முனிவர், ''ஆம் ; உண்மையே. ஆயினும், இங்கிருந்து தெற்கே நோக்கி பத்து யோசனை தூரத்தில் சென்றால் சித்திரகூடம் என்ற மலையைக் காண்பீர்கள். அது நல்ல இடம்; அங்கே வசிக்கலாம்'' என்று கூறினார். ராமன் முதலிய மூவரும் அவரிடம் விடை பெற்றுப் புறப்பட்டனர்.

சிறிது தூரம் நடந்து சென்றதும் அவர்கள் காளிந்தி நதியைக் (யமுனை நதி) கண்டனர். நடுப் பகல் நேரமாயிற்று; ராமனும் சீதையும் தம்பியும் அதில் நீராடிவிட்டு காய்கனிகளை உண்டு, சற்று இளைப்பாறினார்கள். அதன் பிறகு ராமன், தம்பி

யுடன் அந்த நதியைக் கடந்து செல்லும் விதத்தைப்பற்றி ஆலோசித்தான். லக்ஷ்மணன் சில மூங்கில்களைக் கொண்டு வந்து தெப்பம் ஒன்று அமைத்தான். அதில், ராமனும் சீதையும் ஏறிக்கொள்ள, லக்ஷ்மணன் தெப்பத்தை நடத்திக் காளிந்தி நதியின் அக்கரை சேர்ந்தான். மூவரும் கரையில் இறங்கி நடக்கலானார்கள்.

வழியில் மிகக் கொடிய பாலைவனம் ஒன்று இருந்தது. ''இந்தப் பாலைவனத்தை மெல்லிய பாதங்களையுடைய சீதை கடக்கலாற்றாள்'' என்று ராமன் எண்ணிய மாத்திரத்தில் அவ் வனம் பங்கய வனம்போல் குளிர்ந்தது. அவர்கள் எளிதில் அவ் வனத்தைக் கடந்து சித்திரகூட மலையைக் கண்டார்கள்.

8. சித்திரகூடப் படலம்

அந்தச் சித்திரகூட மலையில் முனிவர்கள் வாசம் செய்யும் பல தவப்பள்ளிகள் காணப்பட்டன. மலையின் எல்லா இடங்களிலும், சந்தனம், தேவதாரு கோங்கு, அசோகு, மூங்கில் முதலிய மரங்கள் வானோங்கி வளர்ந்திருந்தன. இனிய சுவை உள்ள கனிகள் நிறைந்த மாவும் பலாவும் வாழையும் பல இடங்களில் செழித்து வளர்ந்திருந்தன. பற்பல விலங்கினங்கள் களிப்புற்று அங்கங்கே உலாவித் திரிந்துகொண்டிருந்தன. பலவகைப் பறவை இனங்கள் இனிமையாகப் பாடிப் பறந்து சென்றுகொண்டிருந்தன. இத்தகைய விநோதங்களை எல்லாம் ராமன் சீதைக்குக் காட்டினான். மூவரும் முனிவர்களைக் கண்டு வணங்கி, அவர்கள், தங்களை உபசரிக்க மகிழ்ந்திருந்தனர். லக்ஷ்மணன் ஆங்கோர் இடத்தில் பன்னக சாலையைக் கட்டினான். அதிலே மூவரும் தங்கி இருந்தனர்.

9. பள்ளிபடைப் படலம்

ராமன், சீதை, லக்ஷ்மணன் ஆகியோர் சித்திரகூட மலையில் இருக்கும்பொழுது, வசிஷ்ட முனிவரின் கட்டளையின்படி சுமந்திரனால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஓலையை எடுத்துச் சென்ற தூதுவர் கேகய நாடு அடைந்து பரதனைக் கண்டு வணங்கி நின்றனர். பரதன், அவர்களிடம், தன் தந்தை, தாயார், தமையன் முதலியோரின் நலன்களை விசாரித்தான். தூதுவர், ''யாவரும் நலமே'' என்றனர். பின்னர், அவர்கள் தாம் கொண்டு சென்ற ஓலையைப் பரதனிடம் கொடுத்தார்கள். அவன், அத்திருமுகத்தைப் பார்த்ததும் சிறிதும் காலம் தாழ்த்தாமல், தன் பாட்டன் முதலா

னேரிடம் விடை பெற்றுக்கொண்டு பரிவாரங்கள் சூழ, சத்துருக் கனனுடன் தேர் மேலேறி அயோத்திக்குப் புறப்பட்டான்.


அவ்வாறு புறப்பட்ட பரதன், வழியில் அங்கங்கே தங்கி எட்டாவது நாள் அயோத்திமாநகர் அடைந்தான். அப்பொழுது, நகரம் அழகு இழந்து துன்பம் சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றி யது. உடனே அவன் சத்துருக்னனை நோக்கி, ''தம்பீ! நகரம் ஏன் இவ்வாறு மங்கலம் இழந்திருக்கின்றது?'' என்று கேட்டான். சத்துருக்னன், ''அண்ணு! திருமகள் நம் நகரத்தை விட்டுப் போயினள்போல் தோற்றுகின்றது'' என்முன். இவ்வாறு பேசிக் கொண்டே அவ்விருவரும் தன் தந்தை இருக்கும் மாளிகைக்கு போயினர். அங்கே தந்தை இல்லாமையால், மனம் கலங்கி ஐயம் கொண்டனர். பரதன் வந்திருப்பதை உணர்ந்த கைகேயி, அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துவரும்படித் தாதியை அனுப்பினள். அவள் அதனைப் பரதனிடம் வந்து தெரிவிக்கவும், அவன் திரும்பித் தன் தாயின் மாளிகையை அடைந்து அவளைக் கண்டு வணங்கினன்.

கைகேயி, மகனை நோக்கி, “குழந்தாய்! கேகய நாட்டில் யாவரும் சுகமாய் இருக்கின்றார்களா?'' எனக் கேட்டாள். அதற்குப் பரதன், “யாவரும் சுகமே'' என்று கூறிவிட்டு, “நான் என் தந்தையாரைக் கண்டு வணங்கவேண்டும்; அவர் எங்கு உள்ளார்?'' என்றான்.

கைகேயி, சிறிதும் வாடாத முகத்துடன், ''மகனே! உன் தந்தை வானுலகம் சென்றார்; அதற்காக நீ வருந்தாதே'' என்றாள்.

இச்சொற்களைக் கேட்டதும், பரதன் அடியற்ற நெடுமரம் போல நிலத்தில் வீழ்ந்தான்; எழுந்தான்; ஏங்கினன்; இரங் கினன்; மீண்டும் விழுந்தான்; விம்மினன்; பெருமூச்சு விட்டு அரற்றினன். பின்னர் ஒருவாறு தேறி, “எனக்குத் தந்தையும், தாயும் தலைவனும், தமையனும் எல்லாம் ராமனே. ஆதலால் அவன் பாதங்களில் பணிந்து போதல்லாமல் கொடு மனத் துன்பம் குறையாது'' என்றான். அது கேட்ட கைகேயி, ''மகனே! ராமன் தன் மனைவியுடனும் லக்ஷ்மணனுடனும் காட்டிற்குச் சென்றனன்'' என்றாள்.

பரதன் திடுக்கிட்டு, “ஆ! அவர் ஏன் காட்டிற்குச் சென்றார்? தந்தையார் உயிருடன் இருக்கும்பொழுதே சென்றாரா? இறந்த பின் சென்றாரா?'' என வினவினன். அவள், “உன் தந்தை உயிருடன் இருக்கும்பொழுதே ராமன் சென்றுள்ளான்'' என்றாள். பரதன், “அதற்குக் காரணம் யாது?'' எனக் கேட்டதும், கைகேயி



மன்னன் முன்னமே தனக்குக் கொடுத்திருந்த இரு வரங்களுள் ஒன்றினால் ராமன் காடேகவும், மற்றொன்றால் மாமகன் பரதன் நாடாளவும் தான் செய்த செயலைக் கூறினாள். பரதன் உடனே, இரு கரங்களாலும் தன் காதுகளை மூடிக்கொண்டான்; அவன் புருவங்கள் துடித்தன; ரோமக் கால்களில் தீப்புகை எழும்ப இதழ்களை மடித்துக் கடித்தான்; தன் இரு கரங்களால் பூமியை அடித்தான்; அடங்காச் சினம் கொண்டு கைகேயியைத் தன் அன்னை என்றும் பாராமல், "அந்தோ! என்ன காரியம் செய்தாய்? அந்தோ! என் அண்ணனைக் காட்டிற்கு ஓட்டி, தந்தையையும் கொன்றனையோ? இத்தகைய கொலைகாரியாகிய உன் நாவை அறுத்து உன்னையும் நான் கொல்லவில்லையே! ஆ! என் அண்ணன் சினம் கொள்வார் என்றல்லவோ அஞ்சுகிறேன். வன்நெஞ்சம் உடையவளே! தன் தந்தை இறப்பான் என்பதையும் எண்ணாமல், தாய் வரங்கேட்டது என் கருத்துப்படியே என்று எண்ணி, நான் நானிலத்தையும் ஆள்வேன் என்று நம்பி அல்லவோ சென்றான் என் தமையன் ராமன்; உன்னால் எனக்குப் பழியுண்டாயிற்றே! உனக்கு மகனாகப் பிறந்த நான் பெரும் பழிக்கு ஆளாகி விட்டேன். இனி உன் முகத்தில் விழிக்கமாட்டேன்'' என்று பலவாறு வைது, கோசலை மாளிகையைச் சென்றடைந்தான்; அடைந்த பரதன், அக்கோசலை எதிரில் நிலத்தில் வீழ்ந்து,

''எந்தைஎவ் வுலகுளான் எம்முன் யாண்டையான்
வந்தது தமியன்இம் மறுக்கங் காணவோ?''

என்று கதறி அழுதான்.

"என்னைப் பெற்ற பாவியால் தீராப் பழிக்கு ஆளானேன்; நான் எதற்காக உயிர் வாழவேண்டும்? நான் உயிருடன் வாழ்வேனாயின் இத்துயரம் என்னை வருத்தாமல் விடாது; ஆதலால், நான் உயிரை விடுவதே நல்லது'' என்று பலவாறாக அரற்றினான்.

கோசலை, பரதனுடைய துயரத்தைக் கண்டு, இவன் களங்கமற்றவன்; இவனுக்குக் கைகேயியின் வஞ்சனை தெரியாது போலும்'' என்று கருதி, அவனைப் பார்த்து, "குழந்தாய்! நின் தாய் செய்த சூழ்ச்சிகளை நீ அறியாதவன் என நினைக்கிறேன்'' என்றனள்.

அதனைக் கேட்டதும் பரதன், பெருமூச்சு விட்டு, "அன்னையே! நான், என் தாயின் வஞ்சனையை முன்னரே அறிந்து, அவளுடைய கொடுஞ்செயலுக்கு உடந்தையாய் இருந்திருப்பேனாயின், கொடிய பாவங்களைப் புரிவோர் அடையும் கொடிய நரகத்தினிடையே

நானும் சேர்வேனாக'' என்று ஆணையிட்டுக் கூறி, அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அப்பொழுது கோசலை மனம் உருகி வருந்தி பரதனைத் தழுவிக்கொண்டு தானும் அழுதாள். அப்போது வசிஷ்டர் அவ்விடம் வர அவருடைய தாள்களிற் பணிந்த பரதன், "எந்தை யாண்டுச் சென்றான்? இயம்புக'' என்று கதறினான். வசிஷ்டரும் தம் துயரத்தை மறக்கமுடியாமல் அழுதார். பின்னர் பரதனை நோக்கி, "நின் தந்தையார் இறுதி எய்தி இன்று நாட்கள் ஏழு கடந்துவிட்டன. ஆதலின், நீ அவர் உடலுக்குச் செய்யத்தக்க சடங்குகளைச் செய்வாயாக'' என்று கூறினார்.

அதன் பின்னர் பரதன் முனிவருடனே சென்று, தந்தையின் சடலம் இருக்கும் இடத்தை அடைந்தான். அதனைக் கண்டதும் பரதனுக்குத் துக்கம் மிகுந்து தந்தையின் தேகத்தை கண்ணீராற் கழுவினான். அங்கு கூடியிருந்த அரசர்களும் அமைச்சர்களும் தசரதன் உடலை அலங்கரித்துப் பொன்மயமான விமானத்தில் ஏற்றி, பல வாத்தியங்கள் முழங்க, அரச மரியாதையுடன் யானை மீது வைத்துச் சரயு நதிக்கரைக்குக் கொண்டு சென்றனர். அங்கு வேதியர்கள் செய்யவேண்டியவை எல்லாம் முறைப்படி செய்து முடித்துப் பரதனை நோக்கி, ''நீர் இனிச் செய்யவேண்டிய கருமங்களைத் தொடங்கலாம்'' என்றனர். அப்பொழுது பரதன் எழுந்து சடலத்தருகே செல்லலுற்றதை அறிந்த வசிஷ்டர், அவனை அணுகி, ''பரதா! உன் அன்னையால் உண்டான துன்பத்தைச் சகிக்கமுடியாத உன் தந்தை, 'உன்னைத் தன் பிள்ளை அல்லன்; தன் உரிமைக்கு ஆகான்' என்று கூறி இருக்கிறார்'' என்றார். முனிவர் சொல்லைக் கேட்டதும் பரதன், ''ஐயோ, என்னைக் காட்டிலும் சிறந்த மன்னர் இவ்வுலகில் யாருளர்? எந்தையின் ஈமக்கடன் புரியவும் பேறு பெற்றிலேன்; அவராண்ட அரசை மாத்திரம் அடைவதற்கு மைந்தனானேன்'' என்று புலம்பினான்.

பிறகு, வசிஷ்டர், சத்துருக்னனை அழைத்து, அவனால் தசரதனுக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்வித்தார். பின்பு யாவரும் நகர் அடைந்து பத்தாவது நாள் செய்யவேண்டிய சடங்கினையும் செய்து முடித்தனர்.

இவை யாவும் நிறைவேறிய பிறகு வசிஷ்டர் மற்றை மந்திரிமார்களோடு நாடு அரசனின்றி இருப்பதுபற்றி மந்திராலோசனை செய்ய பரதனை முன்னிட்டுக்கொண்டு சபையை அடைந்தார்.

10, ஆறு செல் படலம்

சபையில் கூடிய திறன் மந்திரிகள் முதலியோர் பரதனை வணங்கிச் சுற்றிலும் அமர்ந்தனர். அப்பொழுது, சுமந்திரன் குறிப்பினை உணர்ந்துகொண்ட வசிஷ்ட முனிவர், பரதனை நோக்கி, ''இளவலே! அரசனில்லாத நாடானது, சூரியனில்லாத பகற்பொழுதும், சந்திரனில்லாத இராப்பொழுதும் போன்றது; உயிர் இல்லாத உடல் எப்படியோ அப்படியே அரசன் இல்லாத நாடும். இதனை நீ நன்கு உணர்வாயன்றோ? நெடுங்காலம் நீதி தவறாது ஆட்சி செய்த உன் தந்தை வானுலகு அடைந்தனன். உன் அண்ணன் கானகம் அடைந்தனன். இப்பொழுது, இந்நாடு அரசன் இல்லாதிருக்கின்றது; ஆதலின், நீ முடிசூட்டிக்கொண்டு அரசாட்சியை ஏற்றுக்கொள்வாயாக'' என்றார்.

முனிவர் இவ்வாறு கூறவும், பரதன்,

''நஞ்சினை நுகர்என நடுங்கு வாரினும்
அஞ்சினன் அயர்ந்தனன்.''

நீர் சொரிய, உடல் நடுங்க, நாத்தடுமாற முனிவரைப் பார்த்து, ''ஸ்வாமி!

''மூன்றுல கினுக்குமோர் முதல் வனய்முதல்
தோன்றினன் இருக்கயான் மகுடம் சூடுதல்
சான்றவ ருரைசெயத் தருமம் ஆதலால்
ஈன்றவள் செய்கையின் இழுக்குண் டாகுமோ?''

[மூன்றுலகு: மேல், கீழ், நடுவாகிய உலகு. முதல்வனய்: முதன்மை வாய்ந்த திருமால் ஆகிய ராமன். இழுக்கு: குற்றம்.]

முன்னவன் இருக்க பின்னவனாகிய நான் முடிசூடல் முறையாகுமோ ஆதலின், நான் அரசேற்கமாட்டேன்; நானே வனம் சென்று என் அண்ணனை அழைத்துவருவேன்; அவருக்கே முடிசூட்டுவேன்; அவர் வர மறுப்பாராயின் நானும் வனத்திற்றங்கி அருந்தவம் புரிவேன். இதற்கு மாறாக ஒரு சொல் சொல்வீராயினும் என் உயிரை விட்டுவிடுவேன்; இதுவே உறுதி'' என்றான்.

இதனைக் கேட்டதும் அங்குக் கூடி இருந்தோர் அனைவரும் பரதனுடைய சிறந்த குணத்திற்காக அவனைப் பாராட்டி வாழ்த்தினார்கள். பின்னர், பரதன் தம்பி சத்துருக்கனனை அழைத்து, ''அரசேற்க உரிமையுடைய ராமரை அழைத்து வரக் காட்டிற்குப் புறப்படுவோம் என்று நகர் எங்கும் முரசு அறையச் செய்து, வனம் ஏகுதற்குரிய ஆயத்தங்களை விரைவிற் செய்வாயாக''

என்று கூறினன். பிறகு, ராமரைக் காணும்பொருட்டு, பரதனும் சத்துருக்னனும் மரவுரி தரித்துக்கொண்டு பரிவாரங்களுடனே சுற்றத்தாரும் நகரமக்களும் சூழ, தேரின்மீதமர்ந்து காடு நோக்கிப் புறப்பட்டனர்.

அப்பொழுது, துன்பங்கள் யாவற்றிற்கும் காரணமாயிருந்த மந்தரை என்ற கூனியும் நகர மக்களுடன் செல்வதைக் கண்ட சத்துருக்னன் சினந்து அவளைப் பிடித்துத் தாக்கத் தொடங்கினன். அதுகண்ட பரதன், தம்பியைப் பார்த்து, ''அப்படிச் செய்யாதே; ராமர் நம்மீது சினம் கொள்வார்'' என்று தடுத்து நிறுத்தினன்.

பிறகு எல்லோரும், ராமன், நகரை நீங்கி வெளியேறிய அன்று முதலில் தங்கியிருந்த சோலையை அடைந்தார்கள். ரதத்தினின்று இறங்கிய பரதன், அச்சோலையில், ராமன், சீதை ஆகியோர் தங்கியிருந்த இடத்தையும், படுத்திருந்த தருப்பைப் பாயலையும் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுது, உணவில்லாமல் அவ்விடத்திலேயே புழுதி படியப் படுத்திருந்தனன்.

ராமபிரான் அவ்விடத்தினின்றும் கால்நடையாகப் புறப்பட்டான் என்பதை அறிந்து, தானும், சத்துருக்னனுடனே தேரிற் செல்லாது நடந்து செல்லத் தொடங்கினன். சுற்றமும் பரிவாரங்களும் பின்னால் வந்துகொண்டிருந்தன.

11. குகப்படலம்

வீரக்கழலணிந்த பரதன் காவிரியால் வளம் பெறும் சோழ நாடே போன்று செழித்து விளங்கும் கோசல நாட்டை நீங்கிக் கங்கைக் கரையை அடைந்தான். அப்போது கங்கையின் தென் கரையில் தன் படைகளுடன் நின்றுகொண்டிருந்த குகன், எதிர்க்கரையில் பரிவாரங்களுடன் வந்து நிற்கும் பரதன் முதலாயினேரைக் கண்டு அவர்கள், ராமபிரானுடன் போர் தொடுக்க வந்துள்ளார்கள் என்று எண்ணினன்.

குகன் அடைந்த கோபத்துக்கு அளவே இல்லை. அவன் பற்களை நறநறவென்று கடித்தான்; கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன; புருவங்கள் வில்லைப்போல் மேலேறி வளைந்தன. அவன்,

''கட்டிய சுரிகையன்; கடுத்த வாயினன்;
வெட்டிய மொழியினன்; விழிக்கண் தீயினன்;
கொட்டிய துடியினன்; குறிக்கும் கொம்பினன்;
இட்டிய(து) அமர்எனக் கிளர்ந்த தோளினன்''

[சுரிகை: உடைவாள். கடித்த: (கோபத்தினல்) உதடுகளைக் கடித்த. வெட்டிய : கடிந்து பேசும். கிளர்ந்த: பூரித்த.]

ஆகித் தன் வீரர்களை அழைத்து, இதோ எதிர்க்கரையில் சேனைகளுடன் நிற்கிறவன், நம் துணைவரான ராமரின் இளையோன்போல் தோன்றுகிருன்; இவன் அவருக்குத் தீமை செய்ய எண்ணி வருகின்ருன்; இவன் சேனைகளை வதைத்து, இவனையும் கொன்று நாட்டின் அரசுரிமையை நம் துணைவருக்கே உரிமையாக்கவேண்டும், நீங்கள் யாவரும் போர் செய்யச் சித்தமாயிருங்கள்'' என்று கட்டளை இட்டான். பின்னரும் அக்குகன் மிக்க சினங்கொண்டு பரதனை நோக்கியவாறே நின்று,

''அஞ்சன வண்ணனென் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே !
செஞ்சர மென்பன தியுமிழ் கின்றன செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகன் என்றெனை ஓதாரோ.''


''ஆழ நெடுந்திரை யாறுக டந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டுவி லங்கிடும் வில்லாளோ?
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்ருே?
ஏழைமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ?''

''முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னுனோர்
பின்னவன் நின்றனன் என்றிலன் அன்னவை பேசானேல்
என்னிவன் என்னையி கழ்ந்த(து) இவ்வெல்லை கடந்தன்ருே?
மன்னவர் நெஞ்சினில் வேடர்வி டுஞ்சரம் வாயாவோ?''

''பாவமும் நின்றபெ ரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலக காள்பவர் எண்ணுரோ?
ஆவது போகவென் ஆருயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது சேனையும் ஆருயி ருங்கொடு போயன்ருே?''

''அருந்தவம் என்துணை யாளவி வன்புவி யாள்வானே?
மருந்தெனின் அன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனே?
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்றுக ழிக்குவென் என்கடன் இன்ருேடே.''

[அஞ்சனம்: மை, கருமை. நாயகன்: ராமன். மன்னர்: பரதனும் சத்துருக்னனும். உஞ்சு: மீண்டு. திரை: அலை. வேழம்: யானை. விலங்கிடும்: விலகி ஓடும். மொய்புலி: வலிமையுள்ள புலி. சரம்: அம்பு. ஏவம்: சுற்றம். புகழ்: கீர்த்தி. கேண்மை: நட்பு.]



எனப் பல வஞ்சின மொழிகளைக் கூறி வேடர்களை நோக்கிய வாறு, அவர்கள் இக்கங்கையைக் கடக்க எவரும் ஓடத்தைச் செலுத்தக்கூடாதெனவும் கட்டளையிட்டான்.

இவ்விதம் குகன் தென்கரையில் நிற்பதை நோக்கிய சுமந்திரன் பரதனை அடைந்து, குகனைச் சுட்டிக் காட்டி, ''அதோ நிற்பவன், இக்கரையில் ஓடம் செலுத்துபவன்; குகன் என்னும் பெயரினன்; உங்கள் அண்ணன் ராமர்மீது மிக்க அன்புள்ளவன். உங்களைக் காணும் ஆவலுடன் நிற்கின்றான்'' என்றான். உடனே பரதன், ''அப்படியானால், நானே சென்று அவனைக் காண்பேன்'' என்று சொல்லிச் சத்துருக்னனுடன் கங்கை நீரின் ஓரத்தே போய் நின்றான்.

அப்பொழுது குகன்,

''வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவிழ விம்முற்று நின்றொழிந்தான்.''

[**வற்கலை** : மரவுரி. **மாசு** : அழுக்கு. **நற்கலை** : நல்ல கலைகளை உடைய. **மதி** : சந்திரன். **நகை** : ஒளி. **விம்முற்று** : திடுக்கிட்டு.]

விம்மி நின்ற குகன் அவர்களை நன்கு நோக்கி,

''நம்பியும்என் நாயகனை ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை; திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பாரோ பிழைப்பென்றான்.''

[**நம்பி**: ஆடவரிற் சிறந்த பரதன். **நாயகன்**: ராமன். **அயல் நின்றான்** : அவன் அயலே நின்ற சத்துருக்னன். **பிழைப்பு** : தவறு. **இழைப்பரோ** : செய்வார்களோ ?]

இவர்களுடைய இளைத்த மேனியையும், தாங்கிய தவக் கோலத்தையும், கண்ணீர் ஒழுக்கினையும் கண்டதும், ''இவர்கள் ராமபிரானுக்குத் தீங்கு செய்ய வருகின்றார்கள் என்று எண்ணியது தவறே ஆகும் ; இவர்கள், அவர்மீது மிக்க அன்பு கொண்டவர்கள்போல் விளங்குகின்றனர்'' என்று நினைத்துக் குகன் அவர்கள் மனக்கருத்தை அறியும்பொருட்டுத் தான் ஓர் ஓடத்தில் ஏறி, வடகரை அடைந்தான். சக்ரவர்த்தி குமாரனாகிய பரதனும் கங்கை வேடனும் ஒருவரையொருவர் வணங்கித் தழுவிக் கொண்டனர்.

குகன், பரதனைப் பார்த்து, ''நீங்கள் இங்கே புறப்பட்டு வந்த காரணம் என்ன?'' என்று கேட்டான். அதற்குப் பரதன், ''உலக முழுதும் ஆண்ட சக்ரவர்த்தி, என் தந்தை, தசரதர் முன்னோர் கள் முறையினின்றும் வழுவினர்; அவ்வழுவைப் போக்க மன்னன் ராமனை அழைத்துச் செல்லவே வந்தேன்'' என்றான். அது கேட்ட குகன் மிகவும் மகிழ்ந்து,

''தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!''

[**தீவினை**: கொடிய செயல். **நீத்து**: நீக்கி. **கேழ்**: ஒப்பு. **அம்மா**: வியப்பைக் காட்டும் சொல்.]

எனப் புகழ்ந்து பாராட்டினான்.

பின்னர் பரதன் ராமனைத் திசை நோக்கி வணங்கி, ''என் அண்ணன் இங்கே வந்திருந்தபோது எங்குத் தங்கினர்?'' எனக் கேட்டான். குகன், ராமன் இருந்த இடத்தையும் படுத்த புல் படுக் கையையும் காட்டினான். கண்டதும் பரதன் விம்மலுற்று அழுது, ''லக்ஷ்மணன் எங்கே இருந்தனன்?'' என்றான். அதற்கு அவன், "அவர் இரவு முழுவதும் கண் உறங்காமல் கையில் வில் ஏந்தி, இவ்விடத்திலேயே காவல் புரிந்து நின்றிருந்தார்'' என்று அந்த இடத்தையும் காட்டினான்.

அது கேட்ட பரதன், ''அந்தோ ராமருக்குரிய தம்பியர் களுள், நான் அவருக்குத் துன்பம் உண்டாவதற்குக் காரணமா யிருக்கிறேன்." லக்ஷ்மணன் அதனைத் துடைப்பதற்கு உரியவனாக இருக்கிறான்'' என்று சொல்லி வருந்தி, இரவு முழுவதும் கங்கைக் கரை மணலிலேயே படுத்திருந்தான். இரவு நீங்கியதும் எழுந்து, தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் கங்கையின் அக்கரை சேர்ப்பிக்கும்படிக் குகனை வேண்டினான். அவ்வாறே குகன், முத லில் பரதனுடன் வந்தவர்களைப் பல ஓடங்களில் ஏற்றி அக்கரை சேர்ப்பித்துவிட்டுப் பின்னர், பரதனையும் சத்துருக்னனையும் தாய் மார்களையும் சுமந்திரனையும் தனி ஓடத்தில் ஏறச் செய்து அதனைத் தானே செலுத்திச் சென்றான். அப்பொழுது பரதனை நோக்கி,

''சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
'கொற்றத்தார்க் குரிசிலிவர் ஆர்?' என்று
குகன்வினவ வேந்தர் வைகும்

முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகம்
ஈன்றுனை முன்னீன் றுனைப்
பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறந்த
லால்துறந்த பெரியாள் என்றுன்.''

[குரிசில் : இங்கு பரதன். **மூன்றுலகம் ஈன்றுனை முன் ஈன்றுனை :** மூன்றுலகங்களையும் படைத்த பிரம்மதேவரை முதலில் படைத்த திருமாலான ராமனை. **பெற்றத்தால்;** பெற்றதனுல்.]

இச்சொற்களைக் கேட்ட குகன், கோசலையின் பாதங்களிற் பணிந்து கண்ணீர் விட்டான்: அது கண்ட கோசலை, ''துயரத்துடன் வீழ்ந்து பணிந்தவன் யாவன்?'' எனப் பரதனைக் கேட்டான். பரதன், ''ராமனுக்குத் துணைவன்; எனக்கும் என் தம்பிக்கும் லக்ஷ்மணனுக்கும் மூத்தோன். குகன் என்னும் பெயரினன்'' என்றுன். உடனே கோசலை மிக்க மகிழ்ச்சியடைந்து, பரதனைப் பார்த்து, ''மகனே! ராமன் காட்டிற்கு வந்தது நலமே ஆயிற்று; அவன் இங்கு வந்ததனுலன்றே இந்தக் குகனுடைய தோழமை உங்களுக்கு உண்டாயிற்று? இனி இக்குகனேடும் சேர்ந்து நீவிர் ஐவரும் பல்லாண்டு பல்லாண்டு ஒற்றுமையாக இவ்வுலகை ஆள்வீராக'' என வாழ்த்தினுள்.

குகன், சுமித்திரையை யார் எனக் கேட்டு அறிந்துகொண்டு அவள் பாதங்களையும் வணங்கினுன். அதன்பின், கைகேயியை நோக்கி, ''இவர் யார்?'' என்று கேட்டான். பரதன் மிக்க மனக் கொதிப்புடனே, ''என்றும் தீராத பழிகாரி இவளே என்னைப் பெற்றவள்'' என்றுன். குகன் அவளையும் தாயென்று போற்றி வணங்கினுன்.

பிறகு யாவரும் கங்கையின் அக்கரை வந்து இறங்கினுர்கள். பரதன், தன் சுற்றம் சூழ சேனையுடன் ராமன் சென்ற திசையே செல்லலுற்றுன். குகனும் அவனை விட்டு நீங்க மனமில்லாமல் கூடவே சென்றுன்.

எல்லோரும் பரத்துவாசர் ஆச்ரமம் அடைந்தனர். அம்முனிவர் மற்ற முனிவர்களோடும் பரதனையும் உடன் வந்தவர்களையும் எதிர்கொண்டு வரவேற்றுர்.

12. திருவடி சூட்டு படலம்

எதிர்கொண்டு வரவேற்ற பரத்துவாச முனிவரை யாவரும் தொழுதனர். பரதன் கருத்தை உணர்ந்த அவர் மனங்களித்து அவன் பெருஞ்சேனைக்கு விருந்தளித்தார். அன்றிரவு அவ்விடத்தில்

தங்கினர். பொழுது புலர்ந்ததும் யாவரும் புறப்பட்டு இடையில் இருந்த கொடிய பாலையை விரைந்து கடந்து சித்திரகூடத்தைச் சார்ந்தனர்.

ராமனுடன் சித்திரகூட மலையில் இருந்த லக்ஷ்மணன் பெருஞ் சேனை வரும் ஓசை கேட்டு உயர்ந்த ஒரு மலைச்சிகரத்தின் மீதேறிப் பரதன் படைக் கடலைப் பார்த்தான். அக்கணமே சீற்றம் கொண்டு, ''இவன் நம் அண்ணனைக் காட்டிற்குத் துரத்தியதும் அன்றி அவருடன் போர் தொடுக்கவும் வந்திருக்கிறான்'' என்று எண்ணிய லக்ஷ்மணன், அடங்காச் சினம் கொண்டு, ராமனை அடைந்து, ''அண்ணா! இந்தப் பரதன், உம்முடனே போர் இயற்ற வந்துள்ளான். வஞ்சனையாளனான இவனையும் இவன் சேனையையும், நான் இமைப்பொழுதில் அழித்து இவன் நாடாள் வதை விட்டு நரகாளும்படிச் செய்வேன்'' எனக் கையில் ஏந்திய வில்லுடன் வன்மொழி கூறி நின்றான்.

அப்பொழுது ராமன் தம்பியை நோக்கி, ''லக்ஷ்மணா! உன்னால் முடியாதது ஒன்றுமில்லை. அவசரப்படாதே. நம் குலத் தவர் எவரும் முறை தவறி எதுவும் செய்யார்; வேதங்கள் பல வாக இருக்கின்றன; ஆனால் அவை யாவும் பரதனது செய்கை களையே பொதுவகையால் கூறுகின்றன. அத்தகைய பெருமை வாய்ந்தவன் பரதன். தருமமே வடிவெடுத்து வந்தாற்போன்ற வன் பரதன்; நேர்மை என்னும் தேருக்கு அச்சாணி போன்றவன்; அவனிடம் இத்தகைய ஐயம் கொள்ளுதல் தகாது. இதனைப் பின்னே நீயே அறிவாய்'' என்று கூறினான்.

அந்நேரத்தில், பரதன் தன் சேனைகளையும் சுற்றத்தாரையும் மலையின் அடிவாரத்திலேயே நிறுத்திவிட்டு, சத்துருக்னன் மட்டும் தன்னைத் தொடர்ந்து வர, இரு கைகளையும் தலையின்மேல் குவித்துக்கொண்டு, கண்ணீர் சோர, துன்பத்தின் வடிவம் இது என்று கற்பனை செய்து எழுதப்பட்ட சித்திரம் போன்று ராமன் இருந்த இடத்தை நோக்கி வந்தான்.

பரதன் தவக்கோலத்தையும் அவன் மேனி முழுவதும் புழுதி படிந்து வாடி இருத்தலையும் கண்ட ராமன் மனம் இளகி, லக்ஷ்மணனை நோக்கி, ''தம்பி! பரதனுடைய போர்க்கோலத்தைப் பார்த்தாயா?'' என்றான். அவனும் பரதன் நிலையைக் கண்டு, ''அந்தோ! இத்தகைய உத்தமன்மீது சிறிதும் யோசியாமல் பழிச் சொல் கூறினேனே'' என்று மனம் உருகி அழுது, கையிலிருந்த வில்லை நழுவவிட்டுச் சோர்ந்து நின்றான். அப்பொழுது, பரதன் ஓடிவந்து ராமனை அடைந்து, ''அண்ணா!

''அறந்தனை நினைந்திலை; அருளை நீத்தனை;
துறந்தனை முறைமையை''

என்று கூறி இறந்த தன் தந்தையை எதிரிற் கண்டாற்போல் அன்புமீதூர அவன் திருவடிகளில் வீழ்ந்து அப்படியே மூர்ச்சை யடைந்துவிட்டான்.

ராமன் என் செய்வான்? பரதனின் அன்பு அவனுடைய உள்ளதையே உருக்கிவிட்டது. அதனுல் ராமன், ''ஐயோ! பரதனுக்கு உயிர் போய்விட்டதோ! நிலேத்திருக்கிறதோ!'' என்று எண்ணி, தன் இரு கரங்களாலும் பரதனே வாரி எடுத்து மார் புடன் அணைத்துக்கொண்டான். பரதனுடைய வேடத்தைப் பன் முறை நோக்கிப் பலவாறு எண்ணி ஐயுற்று, ''ஐய, நம் தந்தை யார் சுகமாக இருக்கின்ருரா?'' என்று கேட்டான். அதனைக் கேட்டதும் பரதன் பெருமூச்செறிந்து, ''அந்தோ! அண்ணு! எப்படிச் சொல்வேன்? என் அன்னையாகிய எமனுலும் உம்முடைய பிரிவாகிய பாசத்தாலும் அவர் இறந்துவிட்டார்'' என்ருன்.

''விண்ணிடை யடைந்தனன் என்ற வெய்யசொல்
புண்ணிடை அயிலெனச் செவி புகாமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவாய்
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான்.''

[**வெய்யசொல்**: கடுஞ்சொல். **அயில்**: வேல். **கறங்கு**: சுழன்ருடும் கருவி. **வானின் உம்பரான்**: பேரின்ப வீட்டிற் குடையவனுன ராமன், திருமால்.]

சிறிது நேரம் சென்றபின் தெளிவு கொண்டு, தந்தை இறந்த துயர் ஆற்றமுடியாதவனுய்ப் புலம்பத் தொடங்கினுன்:

''நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனியறத்தின் தாயே! தயாநிலேயே!
எந்தாய்! இகல்வேந்தர் ஏறே! இறந்தனேயே
அந்தோ! இனிவாய்மைக்கு யாருளரோ மெய்யுற்ருர்.''

''தேனடைந்த சோலேத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவலநீ
வானடைந்தாய் இன்னம் இருந்தேன்நான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலாய்!''

[**நந்தா விளக்கு**: கெடாத விளக்கு. **இகல்**: பகை. **தெவ்வர்**: பகைவர். **ஒள்வேலாய்**: ஒளியுள்ள வேலேயுடை யாய்.]

இவ்விதமாக ராமன் புலம்பலும் பரதன் முதலிய தம்பியரும் அப்பொழுது அங்கே வந்த மன்னர்களும் அவனை மெதுவாக எடுத்து அமரச் செய்து அவன் களைப்பை நீக்கினர். வசிஷ்ட முனிவர் ராமனுக்கு,

''துறந்தலும் நல்லறத் துறையும் அல்லது
புறத்தொரு துணையிலைப் பொருந்து மன்னுயிர்க்(கு)
இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ?

''பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையும்
அறுபதி னாயிரம் ஆண்டும் ஆண்டவன்
இறுவது கண்டவற்(கு) இரங்கல் வேண்டுமோ?''

[புறத்து : வெளியில். மன்னுயிர் : நிலைபெற்ற உயிர். வரம்பு : எல்லை.

மறுவறு : குற்றம் நீங்கிய. வையம் : பூமி. இறுவது : மடிவது (இறப்பது.)]

மேலும் அவன் வைகுந்தம் அடைந்து பேரின்பத்தையன்றோ பெற்றான்? அங்ஙனம் இருக்க, நீ தந்தையின் பொருட்டு வருந்துதல் தவிர்த்து, மகன் தந்தைக்கு ஆற்றும் கடன்களைச் செய்ய முற்படுவாயாக'' என்றார்.

வசிஷ்டர் இவ்வாறு கூறியதும் மனத் தெளிவடைந்த ராமன், யாவரும் சூழத் தடாகத்தையடைந்து தந்தைக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன்களைச் செய்து முடித்தனன்.

பிறகு, ராமன், பரதன் முதலியோருடன் சீதை இருக்கும் இடத்திற்குச் சென்றான். அங்கே சீதை ஓர் ஏழை மகளைப்போலத் தனித்திருப்பதைக் கண்ட பரதன், மிக்க துயரத்துடன் கரங்களால் அடித்துக்கொண்டு அவள் திருவடிகளில் வீழ்ந்து அழுதான். அப்பொழுது, தந்தை இறந்த செய்தியை ராமன் கூறியதும், அவள் திடுக்கிட்டு மேலும் கலங்கிப் பலவாறு புலம்பத் தொடங்கினாள். அங்கிருந்த தவமகளிர் சிலர் சீதையைத் தேற்றி நீராட்டுவித்து ராமன் அருகே அழைத்துவந்தனர். அந்நேரத்தில், பரதனுக்குப் பின்னால் புறப்பட்டுவந்த அன்னையரும் நகரமாந்தரும் அங்கே வந்து சேர்ந்தனர். ராமன் அவர்களைக் கண்டு மிகுந்த துக்கம் அடைந்து கண்ணீர் சோர அழுதான். தாய்மார்களும் ராமனைக் கண்டு கண்கலங்கிப் புலம்பினர். அன்னையரும் புதல்வரும் புலம்புவது கேட்டவர் யாவரும் கலங்கினார்கள். தன் மாமி

யரைப் பார்த்த சீதை, உடனே அவர்கள் திருவடிகளில் வீழ்ந்து அழுதாள். மந்திரிகள் இந்தச் சோகக் சாட்சியைக் கண்டு வருந்தி எவரையும் தேற்றுவிக்கமுடியாதவர்களாய் நின்றனர்.

பின்னர் வசிஷ்டர் முதலிய பெரியோர்கள் யாவரையும் தேற்றுவிக்க ஒருவாறு ஆறுதல் அடைந்தவர்களாயினர். அப் பொழுது, சூரியன் மறையவே எல்லோரும் அன்றிரவு அங்கேயே தங்கியிருந்தார்கள்.

மறுநாள் கதிரவன் தோன்றலும், யாவரும் எழுந்து தம் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஓரிடத்தில் வந்து கூடினர். ராமன் பரதனை நோக்கி, ''தம்பி! நம் தந்தையார் அரசாட்சியை உனக்குக் கொடுத்து விண்ணுலகு அடைந்தனர்; நீ அதனை ஏற்று மக்களைக் காவாமல் தவக்கோலம் கொண்டு இங்கே வந்ததற்குக் காரணம் யாது?'' என்று வினவினான். அதற்குப் பரதன், ''அண்ணா! நம் குலத்தில் மூத்தவர் இருக்க இளையவர் அரசாளுதல் உண்டா? அது முறையாகுமோ? மற்றும் தந்தை இறக்கவும், தமையனாகிய தாங்கள் காட்டிற்கேகவும், நான் நகரத்தில் இருந்து, இன்பங்களை நுகர்ந்து அரசாளுவேனாயின், என்னைப் போல் பாவி யாவருளர்? ஆதலின் நான் அரசேற்கமாட்டேன். தாங்களே வந்து முடிசூட்டிக் கொள்ளவேண்டும்'' என்றான்.


ராமன், ''தம்பி! நீ நீதிமுறையினை உணராமல் கூறு கின்றாய் :

''முறையும் வாய்மையும் முயலும் நீதியும்
அறையும் மேன்மையோடு அறனும் ஆதியாம்
துறையுள் யாவையும் சுருதி நூல்விடா
இறைவர் ஏவலால் இயைவ காண்ஐயா.

''பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்.

''அந்த நற்பெரும் குரவர் யாரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்கள் தாமலால்
எந்தை கூறவே றெவரும் இல்லையால்.

''தாய்வ ரங்கொளத் தந்தை ஏவலால்
மேய நங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தவிர்தல் நீர்மையோ?
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினாய்!''



[அறையும்: சொல்லப்படும். இயைவ: நடப்பன. குரவர்: பெரியோர். நீர்மை: தன்மை.]

''பெற்றோர்களின் சொற்படி நடத்தலே பிள்ளைகளின் கடமை. ஆதலின், நம் தந்தை தாயர் சொல்லியவண்ணம் நீ அரசுரிமையை ஏற்க மறுக்கலாகாது'' என்று அறிவுறுத்தினன். பரதன், ''நான் தந்தையாரின் கட்டளைப்படி அரசை ஏற்றுக் கொண்டேன்; அவ்வாறு ஏற்று, அதனை என் சொந்தமாக்கிய நான், உமக்கு அளிக்கின்றேன் ; நீர் ஒப்புக்கொள்ள வேண்டியதே'' என்றான்.

ராமன், ''தம்பி! உன் சகோதர அன்பை நான் பாராட்டு கின்றேன். உன்னிடமிருந்து அரசாட்சியை ஏற்றுக்கொண்டால், தந்தையார் சொற்படி நான் வனவாசம் செய்யவேண்டிய பதினன்கு வருடமும் இன்றுடன் முடியுமோ? அதனால், தந்தை யின் கட்டளையை நான் மறுந்தவன் ஆவேன்; என்னை நீ, இத் தகைய அநீதிக்கு உட்படுத்தலாகுமோ? ஆதலால் என் ஆணையால் நான் வனவாசம் முடிக்கும் நாளளவும் நாட்டை ஆள்க'' என்றான்.

இவற்றைக் கேட்டிருந்த வசிஷ்ட முனிவர், ராமனை நோக்கி, ''நான் உனக்குக் கல்வி புகட்டிய குருவாதலின் உன்னை அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்படி ஆணையிடுகிறேன் ; நாட்டைப் பாதுகாப்பாய்'' என்றார்.

குருவின் வாசகத்தைக் கேட்டதும் ராமன், ''ஸ்வாமி! அது உண்மையே. எனினும் ஒருவன் கூறிய வாக்கினைத் தவறுதல் நீதி யாகுமோ? 'நான் பதினன்கு வருடங்கள் வனத்தில் சஞ்சரித்து விட்டுத் திரும்புவேன்' என்று சொல்லி வந்த பிறகு, அவ்வாறு செய்யாமல் நகரத்திற்குத் திரும்பினல், அறிஞர்கள் என்னை இகழமாட்டார்களா ? இதனைத் தாங்களே யோசித்துக் கூற வேண்டும்'' என்றான். வசிஷ்டர் ஒன்றும் பேசாமல் இருந்து விட்டார்.

பின்னர் பரதன், ராமனை நோக்கி, ''நாட்டை ஆள்பவர் ஆளட்டும்; நான் உம்முடன் வனவாசம் செய்வது உறுதி'' என்றான்.

அந்நிலையில், தேவர்கள் விண்ணிற்கூடி, 'பரதன் ராமரை வற்புறுத்தி நாட்டிற்கு அழைத்துப் போய்விடுவானயின், தேவ காரியங்கள் செவ்வனே நடைபெருது' எனக் கருதி விண்ணி லிருந்தபடியே, ''ராமர் பதினன்கு வருடங்கள் வனவாசம்

செய்து தந்தையின் வாக்கை நிறைவேற்றவேண்டும். அதுவரை, நாட்டை ஆள்வது நின் கடன்'' என்று கூறினர்.

உடனே ராமன், பரதனை நோக்கி, ''தம்பி! தேவ வாக்கு மறுக்கற்பாலதன்று; ஆதலின் நீ அயோத்தி சென்று அரசு புரிவாயாக'' என்று அவன் கரங்களைப் பிடித்து வேண்டினான்.

பரதன், யாதும் கூற இயலாமல், விம்மி அழுது, ''அண்ணா! உம்முடைய கட்டளையை ஏற்கிறேன்; பதினான்கு ஆண்டுகள் கழிந்தவுடன் தாங்கள் வந்து அரசாட்சியை ஏற்கவேண்டும்; இன்றேல், நான் நெருப்பிடை வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்வேன்'' என்று கூறினான். பின்னர் செய்வதறியாது ஏங்கி, ஸ்ரீ ராமபிரான் பாதுகைகளைத் தரவேண்டுமென்று இறைஞ்சினான்; ஸ்ரீ ராமபிரானும் எல்லா இன்பங்களையும் தரத்தக்க பாதுகைகளைக் கொடுத்தருளினான்.

பரதன் அவற்றைத் தன் இரு கரங்களாலும் ஏந்தி, ''இவையே எனக்கு மணிமுடி'' என்று தன் சிரசிலே வைத்துக் கொண்டு, கண்ணீர் மிகச் சோர, ராமனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். பின்பு ராமனிடம் விடை பெற்றுத் தன் தாய்மார்களுடனும், தம்பி, சத்துருக்னனுடனும் திரும்பி அயோத்தி நோக்கிச் சென்றான். ஏனைய முனிவர் அரசர் முதலானோரும் குகனும் அவ்வாறே ராமனிடம் விடை பெற்று அவரவர் இருப்பிடம் ஏகினார்கள்.


பின்னர் பரதன் கங்கையைக் கடந்தான்; அவன் அயோத்தி நகருக்குள் நுழையாமல், அதன் அருகிலுள்ள நந்திக் கிராமத்தை அடைந்து, அங்கே, ராமனுடைய பாதுகைக்குப் புனித நீராட்டி, சிங்காதனத்தில் அமர்த்தி, தான் அதன்கீழ் இருந்துகொண்டு, அரச காரியங்கள் நடக்கப் பணித்தனன். அன்று முதல், பரதன், ஐம்புலன்களையும் அடக்கி, ஊணும் உறக்கமும் இன்றிக் கண்ணீர் வடித்தபடியே, தென் திசையை நோக்கியவாறே, ''அண்ணன் ராமன் எப்பொழுது வருவார்?'' என்று சிந்தித்துக்கொண்டே இருந்தான்.

சித்திரகூட மலையிலிருந்த ராமன், ''நாம் இங்கேயே இருப்போமாகில், நம்மவர்கள் இங்கு அடிக்கடி வந்து நமக்கு அன்புத் தொல்லை தருவார்கள்'' என்று எண்ணி சீதையையும் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தை நீங்கித் தென்திசை நோக்கிச் சென்றான்.

அயோத்யா காண்டம் முற்றிற்று

—o—

ஆரண்ய காண்டம்



காப்பு

''பேதியாது நிமிர் பேதவுருவம் பிறழ்கிலா
ஓதியோதி புணருந்தொறும் உணர்ச்சி யுதவும்
வேதம்வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா
ஆதிதேவ ரவரெம் அறிவினுக் கறிவரோ ?''

[**பேதியாது :** முதன்மையில் வேறுபடுதல் இல்லாது. **நிமிர் :** நிமிர்ந்து வளர்ந்த. **பிறழ்கிலா :** மாறுபடாத. **வேதியர் :** அந்தணர். **விரிஞ்சன் :** பிரமன். **தெரிகிலா :** அறியமுடியாத.]

1. விராதன் வதைப் படலம்

சீதையை அழைத்துக்கொண்டு சென்ற ராமனும் லக்ஷ்மணனும் தெற்கு நோக்கிச் சிறிது தூரம் கடந்ததும், அத்திரி முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தார்கள். மூவரும் முனிவரை வணங்கினார்கள். அவரும் அவர் பத்தினியாகிய அநுசூயா தேவியும் அவர்களை வாழ்த்தி உபசரித்தார்கள். ராமன் தன் தம்பியுடனும் சீதையுடனும் அன்றிரவு, அங்குத் தங்கி அத்திரி முனிவரின் பத்தினியான அநுசூயா தேவி சீதைக்கு அளித்த ஆடைகள், ஆபரணங்கள், சந்தனம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு மறுநாள் உதயத்தில் முனிவரிடத்து விடை பெற்றுக்கொண்டு தண்டக வனம் புகுந்தார்கள்.

அவ்வாறு செல்லும்பொழுது வழியில், அவர்கள் எதிரில் பல யானைகளையும் யாளிகளையும் சிங்கங்களையும் கோத்து மாலையாக அணியப்பட்ட முத்தலைச் சூலமொன்றேந்தி வானோங்கிய மலைகள் யாவும் பஞ்சுபட்ட பாடுபடும்படி முடுகிவந்தான் ஓர் அரக்கன். அவன் பெயர் விராதன். அவன் ராமலக்ஷ்மணர்களெதிரே 'நில்லும் நில்லும்' எனப் பெருங்கூச்சலிட்டு அஞ்சத்தக்க உருவத்துடன் ஓடிவந்து ஓர் இமைப்பொழுதிற்குள் சீதையைத் தூக்கி எடுத்துக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பிவிட்டான்.

அது கண்ட ராமனும் லக்ஷ்மணனும் மிக்க சினம் கொண்டு, வில்லில் அம்பு தொடுத்து, அவனை நோக்கி, ''எங்கே ஓடுகிறாய்? நில் நில்'' என்று விளம்பினர். அப்போது விராதன் அவர்களைப் பார்த்து, ''நான் பிரமனிடம் பெற்ற வரத்தால் அழிவற்றவன்; உங்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கிறேன்; இப்பெண்ணை என்னிடமே விட்டுவிட்டு நீங்கள் பிழைத்து ஓடிப் போங்கள்'' என்றான். அவன் கூறியது கேட்டு ராமன் நகைத்து, வில்லின் நாணை

இழுத்துப் பேரொலி செய்தான். அப்பேரொலியைக் கேட்டதும் திடுக்கிட்ட விராதன், சீதையை நிலத்தில் விட்டு மிக்க சினத்துடன் தன் கையில் இருந்த சூலத்தை ராமன்மீது வீசினன். அதனை விராதன் தன் அம்பினல் இரு துண்டுகளாக்கி விழச் செய்தான். விராதன் பல மலைகளைத் தூக்கி எறிந்தான். ராமன் அவைகள் தன்மீது மோதாதபடி அவன்மீதே விழும்படிச் செய்தான். அதனை நோக்கிய விராதன், அங்கிருந்த மராமரம் ஒன்றைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு ராமனைத் தாக்கவந்தான். ராமன் அம்மரத்தை நான்கு அம்புகளாற் பிளந்து, மற்றும் சில அம்புகளை ஏவி அவன் மார்பிலும் தோள்களிலும் அழுந்தும்படிச் செய்தான். விராதன் அவற்றை உதறிவிட்டு ஒரு துன்பமும் இல்லாமல் நின்ருன். அவன் செய்கையைக் கண்டு வியப்படைந்த ராமன், அவன்மீது நெருப்பெனக் கொடிய அம்புகளைச் செலுத்தினன். அது அவன் உடலெங்கும் துளைத்து உதிரம் பெருக்கெடுக்கச் சோர்ந்து நின்றுவிட்டான். அவனைக் கண்டு, ராமன் லக்ஷ்மணனை நோக்கி, ''இவன் தேவர்களிடத்து வரம் பெற்றுள்ளவன். ஆதலின் எளிதில் இறக்கமாட்டான்; இவன் தோள்களை வெட்டி எறிந்து இவன் வலிமையைக் குறைக்கவேண்டும்'' என்று கூறிக் கையில் வாளுடன் இருவரும் அவன் தோளின்மீது ஏறிக்கொண்டார்கள். அப்பொழுது விராதன், தன் சோர்வு நீங்கி, அவர்களைக் கைகளால் சேர்த்துப் பிடித்துக்கொண்டு மிக்க விசையோடு பல இடங்களிலும் திரிந்தான்; சுழன்ருன். அவன் செய்கையைக் கண்ட சீதை மிகவும் அஞ்சி, ''ஐயனே! நீ அறமுறை தவருத அவர்களை விட்டு என்னையே விழுங்குவாயாக'' என்ருள். அவள் சொல்லைக் கேட்ட லக்ஷ்மணன், ராமனைப் பார்த்து, ''அண்ண! தேவியார் அஞ்சுகின்றனர்; நீர் இனியும் இவனுடன் விளையாடிக் கொண்டிருப்பது சரியன்று'' எனக் கூறினன். அதனை அறிந்ததும் ராமன், தன்னுடைய பாதங்களால் அந்த அரக்கனை உதைத்தான். அவன் தள்ளாடி நிலத்தில் வீழ்ந்தான். உடனே இருவரும் அவனுடைய இரு தோள்களையும் வெட்டினர்; ஆயினும் அவன் வலி குன்ருது அவர்களைத் தொடர்ந்தான். எனவே, ராமன் லக்ஷ்மணனை நோக்கி, ''பேருடலினையுடைய இவனைப் பூமியிற் புதைத்துவிடுவதே தக்கது'' என அவ்வாறே லக்ஷ்மணன் ஆழமான குழியொன்று வெட்டினன். ராமன் தன் பாதங்களால், விராதன் உடலைக் குழியில் தள்ளினன். ராமன் பாதம் பட்டதும் அந்த அரக்கன் தேவ வடிவம் பெற்று, நல்லுணர்வுடன், ராமனுடைய உண்மை வடிவத்தை அறிந்தவனய் மகிழ்ச்சி அடைந்து,

''வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்கள் இவையென்னின் படிவங்கள் எப்படியோ?
ஓதங்கொள் கடலன்றி ஒன்றினே டொன்றெவ்வாப்
பூதங்கடொறும் உறைந்தால் அவையுன்னைப் பொறுக்குமோ?''

''கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினும் சென்(று)ஒலிகொள்ள உறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேயென்(று)
எடுத்தொருவா ரணமழைப்ப நீயோவன் றேனென்றாய்.''

''ஒப்பிறையும் பெறலரிய ஒருவாமுன் உவந்துறையும்
அப்புறையுள் துறந்தடியேன் அருந்தவத்தால் அணுகுதலால்
இப்பிறவிக் கடல் கடந்தேன் இனிப்பிறவேன் இருவினையும்
துப்புறழும் நீர்த்தசுடர்த் திருவடியால் துடைத்தாய்நீ.''

[**அறைகின்ற:** சொல்லுகின்ற. **படிவம்:** வடிவம். **ஓதம்:** நீர்ப்பெருக்கு. **ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப் பூதங்கள்:** ஒன்றை யொன்று ஒத்திராத பூதங்கள்; அவை, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. **கடுத்த கராம்:** கோபம் கொண்ட முதலை. **கதுவ:** காலைப் பற்ற. **பரம்:** மேலான பொருள். **வாரணம்:** யானை. **ஒருவாமுன்:** நீங்காமுன். **இருவினை:** நல்வினை, தீவினை. **துப்பு:** பவளம், செந்நிறம்.]

என்று பல கூறித் துதிக்கத் தொடங்கினன். அதனைக் கேட்ட ராமன், அவனை, ''நீ யாவன்? உன் வரலாறு யாது?'' என்று கேட்டான். அதற்கு அவன், ''ஸ்வாமி! நான் குபேரனது அளகா புரியைச் சேர்ந்தவன்; தும்புரு என்பது என் பெயர். ஒரு நாள் தேவசபையில், ரம்பை நிருத்தம் ஆடினள்; அவளிடத்தே மனம் வைத்த என்னைத் தேவேந்திரன் சினந்து அரக்கனாகும்படிச் சபித் தான். அதன்படி நான் கிலிஞ்சன் என்பவனுக்கு மகனாகப் பிறந்து விராதன் என்ற பெயருடன்,

''அன்று மூலம் ஆதியாய்!
இன்று காறும் ஏழையேன்
நன்று தீது நாடலேன்
தின்று தீய தேடினேன்.''

இப்பொழுது, உம்முடைய திருவடி பட்டதால் அச்சாபம் நீங்கப்பெற்றேன்; என் பிழைகளைப் பொறுத்தருள்வீராக'' என்று வணங்கிவிட்டு ராமனிடம் விடை பெற்றுச் சென்றான்.


அதன் பின்னர், ராமனும் லக்ஷ்மணனும் சீதாபிராட்டியும் முனிவர்கள் வசிக்கும் ஒரு சோலையை அடைந்து அங்குத் தங்கினார்கள்.

2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்

பிறகு இரவு தோன்றியபோது ராமன் முதலிய மூவரும் சோலையிலிருந்து புறப்பட்டு, சரபங்க முனிவரின் ஆச்ரமம் அமைந்திருந்த சூழலை அடைந்தார்கள். அந்நேரத்தில், தேவேந்திரன் சரபங்கரிடம் சென்றான். அவனைக் கண்டதும் முனிவர், எதிர்சென்று அழைத்து வந்து உபசரித்து, ''தேவர்களின் இறைவனே! நீர் இங்கு வந்தமைக்குக் காரணம் யாது?'' என, அவன், ''நீர் செய்த தவத்திற்குப் பிரமதேவர் மகிழ்ந்து, உமக்குத் தம்முடைய உலகத்தில் வசிக்கும்படியான உயர்ந்த வாழ்வை அளித்திருக்கின்றார்; ஆதலின், அதனை உமக்குத் தெரிவித்து அங்கே உம்மை அழைத்துப் போக வந்தேன்'' என்றான். அது கேட்ட சரபங்கர், ''பிறப்பற்ற முத்தி உலகை அடைவதே என் நோக்கம்; பிறவிக்கு இடமான பிரமன் உலகு எனக்கு வேண்டா'' என்று கூறினார்.

இவர்கள் இருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ராமன் முதலானோர் அங்கு வந்து சேர்ந்தனர். அங்ஙனம் வந்த ராமன், இந்திரன் முனிவருடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பதை அறிந்து, சீதையையும் லக்ஷ்மணனையும் அருகிலுள்ள பொழிலில் நிறுத்திவிட்டுத் தான் மட்டும் ஆச்ரமத்துள் சென்று சரபங்கரை வணங்கினான். அப்பொழுது அங்கிருந்த இந்திரன், ராமனைக் கண்டதும் பலவிதமாகத் துதித்துப் போற்றினான். பிறகு அவன், சரபங்கரிடம் விடைபெற்றுப் பொன்னுலகு புக்கான். அப்பால், சீதையும் லக்ஷ்மணனும் ஆச்ரமத்திற்குள் நுழைந்து முனிவரை வணங்கினார்கள். சரபங்கர், தம்மை வணங்கிய மூவரையும் வாழ்த்தி, அவர்களைத் தம் இடத்திலேயே தங்கி இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவர்கள் அன்றிரவு முனிவர் ஆச்ரமத்திலேயே தங்கினார்கள்.

மறு நாள் விடியற்காலத்தில் சரபங்கர் ராமன் எதிரே வந்து, ''யாவர்க்கும் இறைவனாக உள்ளவனே! நான் என் பத்தினியுடனே தீப்புக விரும்புகின்றேன்; அதற்கு அனுமதி தர வேண்டும்'' என்றார். ராமன், "நான் வரும் சமயத்தில் தாங்கள் ஏன் இச்செயல் புரியவேண்டும்?'' என்றான். முனிவர், "திருமகள் தலைவ! நாங்கள் ஆயிரம் வகைத் தவம் செய்துள்ளோம்; 'நீ இங்கு எழுந்தருள்வாய்' என்னும் துணிவோடு இந்நாள்காறும் இருந்தோம்; நீயும் எழுந்தருளினை; இனி நாங்கள் செய்யவேண்டிய செயல் வேறேதும் இல்லை. ஆகவே, இரு வினைகளும் ஒழிய மேலான பதம் பெறவே இங்ஙனம் செய்யத் துணிந்தோம்; எங்கள் எண்ணம் நிறைவேறுமாறு திருவருள் புரியவேண்டும்'' என்றார். இவ்வாறு கூறிய சரபங்க முனிவர் தம் மனைவியோடும் எரிமூழ்கிப் பரமபதம் அடைந்தார்.



3. அகத்தியப் படலம்

ராமன் முதலிய மூவரும் சரபங்கருடைய ஆச்ரமத்தை விட்டு நீங்கி எதிரில் தோன்றிய பல மலைகளையும் மரங்கள் அடர்ந்த காடுகளையும் நதிகளையும் கடந்து, தடாகங்கள் நிறைந்துள்ள இனிய சோலைகளைக் கண்டு அவற்றில் தங்கி இளைப்பை ஆற்றிக்கொண்டு மேலும் நடந்து தண்டகவனம் வந்து சேர்ந்தார்கள்.

அவ்வனத்தில், நெடுங்காலமாகத் தவம் செய்து வரும் முனிவர்களாகிய வாலகில்ய முனிவர்களும், மழித்த தலையுடைய தவசிகளும், மௌன விரதம் கொண்டவர்களும் தசரதர் மைந்தர்கள் வருவது கண்டு எழுந்து வந்து வரவேற்று ஆசி கூறி அவர்களை ஒரு பர்ணசாலையில் தங்கியிருக்கும்படிச் செய்தார்கள். மறுநாள் அம்முனிவர்கள் கூட்டமாக வந்து ராமனை அடைந்து, "பேரரசின் மைந்தர்களே! இரக்கம் என்பதே இல்லாத அரக்கர்கள் அறவழி திறம்பி எம்மைத் தீயொழுக்கத்தில் செலுத்துகின்றனர்; வேங்கைகள் திரியும் வனத்தில் வாழும் மான்போல் பகலும் இரவும் வருந்துகின்றோம்; அறம் மறந்தோம்; எங்களுக்கு இத்துன்பத்தினின்றும் விடுதலை உண்டோ? அருளுடை வீர, 'நின் அபயம் யாம்'" என்று முறையிட்டார்கள்.

ராமன், அவர்களை நோக்கி, "நீங்கள் இனி எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை; பசு, அந்தணர், எளியவர் ஆகிய யாருக்காகவேனும் உயிரைக் கொடுத்தவர்கள் தேவர் தொழும் பெருந்தேவராவர்; ஆகையால் சூரனைக் கொன்ற முருகன், சக்கரப் படையுடைய திருமால், திரிபுரத்தைச் சிரித்துத் தொலைத்த சிவபிரான் ஆகிய மூவர் காப்பினும் அறந்தவறி நின்றவரை வேரோடு அழிப்பேன்" என்று சூளுரைத்து அவர்கள் மனக் கவலையை நீக்கினர். அவற்றைக் கேட்டதும் அம்முனிவர்கள் மிகக் களிப்படைந்து, "பெருமானே! தங்களால் செய்யமுடியாத செயல் உலகில் என்ன இருக்கிறது? தாங்கள் அயோத்திக்கு செல்லும் வரையில், இவ்விடத்திலேயே தங்கியிருந்து எங்கள் துயரத்தைப் போக்கு" என்று இறைஞ்சினர். ராமன் அவ்வாறே, சீதையுடனும் லக்ஷ்மணனுடனும் தங்கியிருக்க இசைந்து ஒரு பர்ணசாலையை அமைத்துக்கொண்டு அதனில் இருந்தான். இவ்வாறு பத்து ஆண்டுகள் அவர்கள் அங்கேயே தங்கி இருந்தனர்.

ஒரு நாள் அங்குக் கூடியிருந்த முனிவர்கள் யாவரும் ராமனை நோக்கி, "தசரத குமாரரே! தவப் பெரியோரும் மிகச் சிறந்தவருமான அகத்திய முனிவரைத் தாங்கள் சென்று அடைக" என்று அருளினர்.

அதன்படியே, ராமன் சீதையுடன் லக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு காட்டின் வழியே சென்றான். அங்கொரு பக்கத்தில் உள்ள சோலையில் சுதீக்ஷண முனிவரின் ஆச்ரமம் தென்பட்டது. மூவரும் அவ்விடத்தை அடைந்து முனிவரை வணங்கினார்கள். அவர் மூவரையும் வாழ்த்தி உபசரித்துத் தான் அதுகாறும் செய்த தவப்பயனை எல்லாம் ராமபிரானுக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தார். பிறகு ராமன் முனிவரைப் பார்த்து, ''ஸ்வாமி! நாங்கள் அகத்தியரைக் காண்பதற்காக வந்தோம்'' என்று தங்கள் கருத்தைக் கூறினான். அதற்கு முனிவர், ''அவரைக் காணவேண்டியதே. அவரும் உங்களை எதிர்பார்த்திருப்பார்'' என்று சொல்லி அகத்தியர் வசிக்கும் இடத்தை அடையும் வழியை ராமனுக்குக் கூறினார்.

பின்னர், ராமன் முதலியோர், சுதீக்ஷண முனிவரிடம் விடை பெற்று அகத்தியர் ஆச்ரமம் அடைந்தனர். அகத்தியர் ராமன் வருகையை அறிந்து மிக்க மகிழ்ச்சியுற்று எதிர்கொண்டு வந்து கருணை பொழியும் கண்களாற் பார்த்து, நல்வரவு கூறலும், ராமன் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். அப்பொழுது, நீண்ட தமிழால் உலகை நேமியினளந்த அகத்தியர், ராமனை அன்புடன் தழுவிக்கொண்டு மூவரையும் வாழ்த்தி ஆச்ரமத்துள் அழைத்துச் சென்று தக்கபடி இருக்கை அளித்து அவர்களை அமரச் செய்தார். பிறகு அகத்தியர் ராமனை நோக்கி, ''ரகு குலாதிபனே! நீ, தண்டகவனம் வந்துள்ளாய் என்று கேள்விப்பட்டு இங்கும் வரலாகும் என்று எண்ணினேன்; அப்படியே நீ இங்கு வந்து என்னை மகிழ்வித்தாய்; இனி நீங்கள் இங்கேயே இருங்கள். முனிவர்களுக்குத் தொல்லை தரும் அரக்கர்கள் வந்தால் அவர்களை அழித்து எம் போன்ற தவத்தினரின் துன்பத்தைப் போக்குவீர்'' என்றார். அதற்கு ராமன், ''ஸ்வாமி! இங்குள்ள முனிவர்கள் ராட்சஸர்களால் எத்தகைய துன்பமும் அடையாமல் காக்கவே நான் இங்கு வந்துள்ளேன். அவ்வரக்கர்கள் புறப்பட்டு வரும் வழியிலேயே அவர்களை ஒழிப்பதற்கு நான் இன்னும் சற்றுத் தெற்கே சென்றிருப்பது நலம் எனக் கருதுகிறேன்; தங்கள் கருத்து யாது?'' என்று கூறினான்,

அதைக் கேட்டதும் அகத்தியர், 'விழுமியது சொல்லினை' என்று கூறி ராமனிடம் ஒரு பெரிய வில்லையும்* அம்பறாத்

*ஸ்ரீ ராமபிரான் பரசுராமனை வென்று கொண்ட வில்லை வருணனிடம் வைக்க அதனை வருணன் அகத்தியரிடம் வைக்க அதுவே இப்போது அகத்தியரால் மீண்டும் ராமனிடத்தில் கொடுக்கப்பட்டது; ஸ்ரீ ராமபிரான் அவ்வில்லை மீண்டும் வருணனிடமே கொடுத்துத் தக்க தருணத்தில் தன்னிடம் சேர்ப்பிக்குமாறு அருளினார்.

தூணியையும் கொடுத்து, "இந்த வில்லை முழுமுதற் பொருள் வைத்துக்கொண்டிருந்தது; யாவரும் வழிபடத்தக்கது. அம்பறுத் தூணியுடன் இதனைப் பெற்றுக்கொள்க" என்றார். பிறகு,

"ஓங்குமரன் ஓங்கிமலை ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கர்உள தால்உறையுள் பஞ்சவடி மஞ்ச!"

எனப் பஞ்சவடியைக் குறிப்பிட்டு நீங்கள் அவ்விடத்தை அடைந்து அங்குத் தங்கி இருங்கள்" என்று பணித்து, அவர்கள் மூவரையும் அனுப்பினர்.

4. ஜடாயு காண் படலம்

ராமன், சீதை, லக்ஷ்மணன் ஆகியோர் மூவரும் அகத்தியரிடம் விடை பெற்றுக் காட்டின் வழியே தென் திசையிற் சென்றார்கள். அவர்கள் சிறிது தூரம் சென்றதும், எதிரில் தோன்றிய ஒரு குன்றின்மீது, தசரத மன்னரின் பழைய நண்பரும் கழுகினங்களுக்கெல்லாம் அரசருமான ஜடாயு என்பவரைக் கண்டார்கள். முன் எப்பொழுதும் பார்த்திராத ராமன் முதலியோர், சற்று நின்று நோக்கியவாறு, "புதுமையான தோற்றத்தை உடைய இவர் யாவரோ?" என ஆலோசித்தார்கள். ஜடாயுவும், இவர்களைக் கண்டு யாவரோ என ஐயமுற்றார்; பின்னரும் அவர், ராமனையும் லக்ஷ்மணனையும் நன்றாக உற்று நோக்கி, "கருமலையும் செம்மலையும் இணைந்து வருவது போன்ற தோற்றமுடையவர்கள்; லக்ஷ்மி விலாசம் பொருந்திய மார்புடையவர்கள்; சிவந்த கண்களையுடைய வீரர்கள்; இருவருமே என் அருமை நண்பன் தசரதனை ஒத்திருக்கிறார்கள்" என்று எண்ணி, அன்பு கொண்டு அவர்களைப் பார்த்து, "வில்லினை ஏந்தி வருகின்ற வீரர்களே! நீங்கள் யாவர் என்பதை நான் அறியும்படிச் சொல்லுங்கள்" என்று வினவினர். அதுகேட்ட இருவரும், "நாங்கள் தசரத மன்னருடைய மைந்தர்கள்" என்றார்கள். கேட்டவுடனே ஜடாயு, குன்றிலிருந்து கீழே இறங்கி, அவர்கள் அருகே சென்று, "தசரதர் நலமா?" எனக் கேட்டார். ராமன், "அவர் தம்முடைய வாய்மையை உலகில் நிலை நிறுத்திவிட்டு விண்ணுலகு சென்றார்" என்றான். இச்சொல்லைக் கேட்டதும் ஜடாயு, தன் ஆருயிர் நண்பர் பிரிவை எண்ணி மனம் புதைத்துக் கீழே விழுந்து மூர்ச்சையாகிவிட்டார். ராமனும் லக்ஷ்மணனும் உடனே அவரைத் தங்கள் கைகளால் தழுவி எடுத்தனர். அவர்கள் கண்ணீர் அவர் உடலை நனைத்தது. மூர்ச்சை தெளிந்த ஜடாயு எழுந்து உட்கார்ந்து,

''பரவலரும் கொடைக்குநின்றான் பனிக்குடைக்கும்
பொறைக்குநெடும் பண்பு தோற்ற
கரவலரும் கற்பகமும் உடுபதியும்
கடலிடமும் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே: பொய்ப்பகையே!
மெய்க்கனியே! புகழின் வாழ்வே!
இரவலரும் நல்லறமும் யானும்இனி
யென்படநீத் தேகி னுயே.''

''அலங்கார மெனஉலகுக் கமுதளிக்கும்
தனிக்குடையாய்! ஆழி சூழ்ந்த
நிலங்காவ லதுகிடக்க நில்லாத
நிலையுடையேன் நேய நெஞ்சின்
நலங்கான நடந்தனையோ நாயகனே!
நிவினையேன் நண்பி னின்றும்
விலங்கானேன் ஆதலினல் விலங்கினேன்
இன்னுமுயிர் விட்டி லேனல்.''

''தயிருடைக்கும் மத்தென்ன உலகைநலி
சம்பரனைத் தடிந்த அந்நாள்
அயிர்கிடக்கும் கடல்வலயத் தயலறிய
நியுடல்நான் ஆவி யென்று
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்!
செப்பினும் திறம்பா நின்சொல்
உயிர்கிடக்க உடலைவிசும் பேற்றினர்
உணர்விறந்த கூற்றி னுரே!''

[**பரவலரும்** : புகழ்தற்கு அரிய. **கரவலரும்** : ஒளித்தற்கரிய. **புரவலர்தம் புரவலன்** : அரசன். **உலகுக்கு அமுதளிக்கும்**: உலகிற்கு அமுதான அருள் தரும். **ஆழி** : கடல். **விலங்கானேன்:** விலங்காக ஆனேன். **அயிர்** : மணல். **செயிர்** : துன்பம். **விசும்பு** வானம்.]

என்று தசரதனை நினைந்து பலவாறு புலம்பினர். பிறகு, ராமனையும் லக்ஷ்மணனையும் பார்த்து, ''மக்களே ! முன் காலத்தில், பிரமதேவர் குமாரரான தட்சனுக்கு ஐம்பது பெண்கள் பிறந்தனர். பதின்மூன்று பெண்களைக் காசிப முனிவர் மணம் செய்து கொண்டார். அவர்களுள் அதிதி என்பவள் முப்பத்து முக்கோடி தேவர்களையும் வாமனராகிய நாராயணரையும் பெற்றாள். திதி என்பவள், அறுபத்தாறு கோடி அசுரர்களைப் பெற்றாள். தநு என்பவள் தானவர்கள் என்போரைப் பெற்றாள். மதி என்பவள் மனுக்களையும் மனிதர்களையும் அவர்களுக்கான வருடங்களையும் பெற்றாள். சுரபி என்பவள் பசுக்களையும் சராசரங்களையும் பெற்

ருள். குரோதவசை என்பவள் கழுதை, கடம்பை, ஒட்டகம் முதலியவற்றைப் பெற்ருள். வினதை என்பவள் காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து, மற்ற பட்சிகள் முதலியவற்றைப் பெற்ருள். தாம்பிரை என்பவள் ஊர்க்குருவி, கௌதாரி, காடை முதலியவைகளைப் பெற்ருள். கழை என்பவள் செடி, கொடி, புல், பூண்டு என்பனவற்றைப் பெற்ருள். கத்துருவை என்பவள் பல தலைகளையுடைய சர்ப்பங்களைப் பெற்ருள். சுதை என்பவள் ஒருதலைப்பாம்பு முதலியவைகளைப் பெற்ருள். அரிட்டை என்பவள் ஓணன், அணில், உடும்பு முதலியவைகளை உண்டாக்கிஞள். இளை என்பவள் நீர்வாழ்வனவற்றை உண்டாக்கினுள்.

''இப்படியே இந்தப் பதின்மூன்று பெண்களால் ஆதியில், பற்பல உயிரினங்கள் தோன்றி உலகம் உண்டாயிற்று. இங்ஙனம் தோன்றியவர்களுள் வினதை என்பவளின் மைந்தரான அருணர் அரம்பையை மணந்தார். அவ்விருவருக்கும் சம்பாதியும் நானும் பிறந்தோம். நான் என் தந்தையான அருணர் சஞ்சரிக்கும் இடம் எல்லாம் அவரை விட்டுப் பிரியாமல் அவருடன் திரிந்து கொண்டிருந்தேன். அக்காலத்தில்தான், உங்கள் தந்தையான தசரத மன்னருக்கு நண்பன் ஆனேன். அவருக்கும் எனக்கும் எவ்விதமான வேறுபாடும் உண்டானதில்லை. நான் வருணங்கள் பிரிக்கப்படுகிறபொழுதே பிறந்தவன்; என் பெயர் ஜடாயு என்பது; கழுகு இனங்களுக்கு அரசன்'' என்று தம்முடைய வரலாற்றை விளக்கிக் கூறினுர்.

ஜடாயு கூறியவற்றைக் கேட்ட ராமனும் லக்ஷ்மணனும் ஜடாயுவைத் தந்தை என்றே எண்ணி இன்புற்றனர். இறந்த தந்தை திரும்பி வந்ததுபோல எண்ணினர். அவரிடம் மிக்க அன்பு காட்டினர். பிறகு ஜடாயு, அவ்விருவரையும் தம் சிறகுகளால் தழுவிக்கொண்டு, ''பிள்ளைகளே! நானும் தசரதரும் உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாயிருந்தோம்; ஆதலின் அவர் பிரிந்தபின் நான் உயிர் வாழ்வது தகுதியன்று; நான் தீயிற் புகுந்துவிடுகிறேன்; நீரே என் மக்கள்; ஆதலின், எனக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை நீங்களே செய்யுங்கள்'' என்ருர். இச்சொற்களைக் கேட்டதும் இருவரும் வருந்தி ஜடாயுவைப் பார்த்து, ''தந்தையைப் பிரிந்து ஆற்றமுடியாத துயரத்தில் ஆழ்ந்துள்ள நாங்கள், இப்பொழுது உங்களைக் கண்டதால், அத்துயரம் ஒருவாறு நீங்கி ஆறுதல் பெற்றிருக்கிருேம்; நீங்களும் பிரிந்து விட்டால் எங்களைக் காப்பவர் யார்?'' என்று கூறி வருந்திஞர்கள்.

ஜடாயு, ''அப்படியானுல் நீங்கள் மீண்டும் அயோத்தி அடைந்தபின்பு நான் தேவருலகு செல்லுவேன்; நீங்கள் வருந்த வேண்டா'' என்று சொன்ஞர். பின்னர் அவர்களை நோக்கி, ''நீங்கள் காட்டுக்கு வரக் காரணம் யாது?'' என்று கேட்டார்.

ராமன், தம்பியின் முகத்தைப் பார்க்க, அவன், கைகேயியால் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறினன். அது கேட்ட ஜடாயு ராமனை,

''உந்தை உண்மையன் ஆக்கியுன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே!
எந்தை வல்லது யாவர்வல் லாரென.''

என்று மிகவும் புகழ்ந்து கொண்டாடி, பக்கத்தில் நின்ற சீதையைப் பார்த்து, ''இந்த பெண் யார்?'' என்று கேட்டார். அதற்கு லக்ஷ்மணன் சீதையின் வரலாற்றையும், தாடகையை வதைத்தது முதல், தாங்கள் வனத்திற்கு வந்ததுவரை நடந்த செய்திகளையும் கூறினன்.

அவைகளைக் கேட்டறிந்த ஜடாயு, 'அயோத்திக்குச் செல்லும் வரையில் நீங்கள் இவ்விடத்திலேயே இருங்கள்; நான் உங்களைப் பாதுகாப்பேன்'' என்றார். அதற்கு ராமன், ''ஐயனே! அகத்தியர் கட்டளையின்படி நாங்கள் கோதாவரி தீரத்திலுள்ள பஞ்சவடியில் வசிக்கவேண்டும். ஆதலின், நாங்கள் அங்கே தங்கியிருக்க எண்ணுகிறோம்'' என்றான். அது கேட்ட ஜடாயு, ''நல்லது; என்னுடன் வாருங்கள். அவ்விடத்தைக் காட்டுகிறேன்'' என்று அவர்களை அழைத்துச் சென்றார். செல்லும்போது ராமன் முதலியோர்மீது வெயில் படாதவாறு இறக்கைகளை விரித்து நிழல் பரப்பினர். பஞ்சவடி தீரத்தை அடைந்ததும் ஜடாயு அவ்விடத்தை அவர்களுக்குக் காட்டினர். அங்கு அரக்கர்கள் பல மாய உருவத்தில் வந்து துன்பம் புரியக்கூடுமென்றும் அவர்களிடம் தெரிவித்து மீண்டும் தம் இருக்கையை அடைந்தார். ஜடாயு அம்மூவருக்கும் எத்தகைய துன்பமும் நேராதவண்ணம் அவர்கள் நலத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

5. சூர்ப்பணகைப் படலம்

ஜடாயுவின் அருளோடு புறப்பட்டுச் சென்ற ராமன் முதலியோர் மகிழ்ந்தனர். பின்னர்,

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவிபுறத் தெளிந்து தண்ணென்(று) ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்.''

[புவி: பூமி. ஆன்ற: சிறந்த. அவியகம்: அமைதியினை யுடைய அகப்பொருள். ஐந்திணை நெறி: ஐவகை நிலங்களின் வழி. சவியுற: செவ்வையாக. தண் என்ற: குளிர்ச்சியான.]

கோதாவரியின் அழகைக் கண்டு மகிழ்ந்து அதன் கரையில் இருந்த பஞ்சவடிச் சோலையை அடைந்தனர். அவ்விடத்தில் லக்ஷ்மணன் ஓர் அழகிய பர்ணசாலையை அமைத்தான். அதில் மூவரும் தங்கி யிருந்தனர்.

அவ்வாறு இருந்து வருகையில், ஒரு நாள் அவ்வனத்தில் தமியளாய் வாழ்ந்துவரும் ராவணன் தங்கையான சூர்ப்பணகை என்பவள் ராமனைக் கண்டாள். அவனுடைய அழகை வியந்து அவன்மீது விருப்பம் அடைந்தாள்; விகார வடிவத்துடன் சென்றால் அவன் தன்னை விரும்பான் என்று எண்ணித் திருமகளைத் துதித்து ஓர் அழகிய வடிவு பெற்று,

''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
அஞ்சொல்இள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.''

[ஒளிர் பஞ்சு: ஒளிமிக்க செம்பஞ்சு. பல்லவம்: தளிர். மஞ்ஞை: மயில். வஞ்சி: கொடி.]

அவள் வனப்பைக் கண்டு ராமன் அதிசயித்தான். அவளும் அவன் அருகே சென்று வணங்கி, நாணினவள்போல ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றாள். ராமன் அவளை நோக்கி, ''திருமகள் போன்ற வரே, நும் வரவு தீமை பயவாத வரவாகட்டும்; தாங்கள் எம் மிடம் வந்தது யாம் செய்த புண்ணியப் பயனே ஆம்; தங்கள் ஊர் எது? பெயர் யாது? உறவினர்கள் யாவர்?'' என்று கேட்டான். அதற்கு அவள், ''நான் பிரமதேவர் பெயரரான விச்ர வஸுவின் மகள்; சிவனுடைய தோழனாகிய குபேரனுக்குத் தங்கை; எட்டுத் திசையிலும் உள்ள எட்டு யானைகளையும் வென்று, கயிலாய மலையையும் எடுத்து மூவுலகங்களையும் வென்றவனாகிய ராவணனுக்குத் தங்கை; என் பெயர் காமவல்லி; நான் ஓர் கன்னி'' என்றாள்.

அவள் பேச்சைக் கேட்ட ராமன் ஐயங்கொண்டான். ''இவளுக்குள்ள வடிவம் உண்மையானதன்று; இவள் இயற்கையை நாம் அறியவேண்டும்'' என நினைந்து அவளைப் பார்த்து, ''பெண்ணே! நீ ராவணன் தங்கையானால் உனக்கு இச்சிறந்த வடிவம் எவ்வாறு உண்டாயிற்று?'' என்று வினவினான். அதற்கு, அவள், ''தேவர்களின் வரத்தால் இவ்வடிவம் அடைந்தேன்''

என்றாள். ராமன், ''அப்படியானால் நீ ஒரு நற்பேறு பெற்றவளே ஆவாய்; பேராண்மையுள்ள ராவணனுக்குத் தங்கையாயிருக்கும் நீ, தனித்து வரக் காரணம் யாது?'' எனக்கேட்டான். அவள், ''ஸ்வாமி! நான் நல்லவர்களுடனே வசிப்பவள்; ஒரு காரியத்தின் பொருட்டு தங்களைக் காண வந்தேன்'' என்றாள். ராமன், ''அக் காரியம் யாது? சொல்'' எனலும், சூர்ப்பணகை, தான், அவன் மீது கொண்ட காதலைக் குறிப்பாக வெளிப்படுத்தினாள். அவள் கருத்தை அறிந்த ராமன், ''இவள் ஓர் அரக்கியின் நிலையில் உள்ளாள்'' என்று கருதி, அவளை நோக்கி, ஏளனமாக, ''அழகுடையவளே! நீயோ ஓர் அந்தணர் குலப் பெண்; நான் அரச மரபினன்; பொருத்தமில்லாத சொற்களைக் கூறுதல் தகுதியோ?'' எனக் கேட்டான். அவள் அதற்கு, ''என் தகப்பனார் அந்தணர் என்பது உண்மையே; என் தாய் ஓர் அரக்க மன்னனுடைய புதல்வி; எனினும் கற்பில் அருந்ததி போன்றவள். தாங்கள் கூறியதே என்னை இகழ்தற்குக் காரணமாயின் நான் உமது முன்னிலையில் என் உயிரைப் போக்கிக்கொள்வேன்'' என்றாள்.

அவள் கூறியதைக் கேட்ட ராமன், மனத்தில் விளையாட எண்ணி, ''நீயோ அரக்கர் குலமகள்; நானோ மானுடன்; அரக்கர் மகளை மானுடர் மணத்தல் தகுதியன்று என்று அறிஞர் கூறுவர்'' என்றான். அதற்கவள், ''பழிபடு பிறவியைத் தேவர்களைப் பராவிப் போக்கிக்கொண்டேன்'' என்றாள்.

ராமன், அவளை நோக்கி, ''மூவுலகங்களையும் வெற்றி கொண்ட ராவணனும், பெருநிதி படைத்த குபேரனும் உனக்கு அண்ணன்மார்களன்றோ! அவர்கள் முறைப்படிக் கொடுத்தால் அல்லாமல் நான் உன்னை மணம் செய்துகொள்வது தகுமோ?'' என்று கூறினான்.

அதற்கு அவள், ''நாமிருவரும் உடன்பட்டுச் செய்து கொள்வது காந்தருவ மணமாகும்; ஆதலின், இதற்கு என் சுற்றத்தார் விருப்பங்கொள்வாரன்றி வெறுப்படையார்; இதன் பயனாக என் அண்ணன்மார்களுடைய உறவும் உதவியும் உமக்கு உண்டாகும்'' என்றாள். அவள் சொற்களைக் கேட்ட ராமன், ''உன்னுடைய தயவினால் எனக்கு எல்லாச் செல்வங்களும் கிடைத்து விட்டன'' என்று சொல்லி நகைத்தான்.

அத்தருணத்தில் பர்ணசாலைக்குள்ளிருந்த சீதை வெளியே புறப்பட்டு ராமன் இருக்கும் பக்கமாக வந்தாள். அவளுடைய எழிலைக் கண்டதும் சூர்ப்பணகை அதிசயித்து, ''இவள் இவனைச் சார்ந்தவள் அல்லள். நம்மைப்போலவே இவளும் எங்கிருந்தோ வந்தவள்தான்; இவன்மீது விருப்பமுற்றிருக்கிறாள்; ஆதலின், இவளை இவன் கண்டால் நம்மை விரும்பமாட்டான்; இவளை

இகழ்ந்து பேசி, இவன் இவள்மீது வெறுப்புக் கொள்ளும்படிச் செய்துவிடவேண்டும்'' என்று எண்ணியவளாய்ச் சீதையைக் சுட்டி, ''வரும் இவள் மாயம் வல்லள்; வஞ்சனை மிக்க அரக்கி: பிறரால் எளிதில் அறியமுடியாதவள்; இவ்வுருவம் பொய்யே; ஊன் உண்டு வாழும் வாழ்க்கை உடையாள்; இவளைக் காணும் போது என் உள்ளம் வெருவுகின்றது; இவள் இங்கு நெருங்கி வராமல் தடுத்து என்னைக் காப்பீர்'' எனக் கூறி நிந்தித்தாள். அது கேட்ட ராமன், ''ஆ! அவள் அரக்கியா? அருகே வரட்டும். பார்ப்போம்'' என்று புன்முறுவல் செய்தான். அதற்குள் சீதையும் அருகில் வர, சூர்ப்பணகை, அவளைப் பார்த்து, ''அரக்கியாகிய நீ, சிறிதும் அஞ்சாது இவர் அருகே வரலாமா?'' என அச்சுறுத்தினுள். சீதை திடுக்கிட்டு விரைந்து சென்று ராமன் தோள்களைத் தழுவிக்கொண்டாள்.

பின்னர் ராமன், 'இனியும் இந்த அரக்கியுடன் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருப்பது துன்பம் விளைவிக்கும்; ஆதலின், இவளை இங்கிருந்து அகற்றிவிடுவது நல்லது' எனக் கருதிச் சூர்ப்பணகையை நோக்கி, ''நீ இங்கே நில்லாது போய்விடு; என் தம்பி உன்னைக் காண்பானுயின் சினம் கொண்டு உன்னைத் தண்டிப்பான்'' என்முன்.

அதனைக் கேட்டதும் அவ்வரக்கி, ''தேவர் முதலியோர்களும் என்னை அடைய விரும்பித் தவம் செய்துகொண்டிருக்கிறார்கள். நீர் இப்பெண்ணை விரும்பி என்னை அவமதிப்பது தகுதியா?'' என்றாள். அதன்பின் ராமன், அவளுடன் வீணுகப் பேசிப் பயனில்லை என உணர்ந்து சீதையை அழைத்துக்கொண்டு பர்ணசாலைக்குள் சென்றுவிட்டான். சூர்ப்பணகை மனம் சோர்ந்து கற்பாறையிலுள்ள தன் குகையை நாடிப் புறப்பட்டாள். அத்தருணத்தில் சூரியன் மறைந்தான். அவள், அன்று இரவு முழுவதும் ராமன்மீது கொண்ட விருப்பத்தால் மிகவும் வேதனை அடைந்தாள். பொழுது விடிந்ததும், 'அந்தப் பெண் அருகே இருக்கும்வரையில் நம்மை அந்த மனிதன் விரும்பான்; ஆதலின் அவளை எடுத்து விழுங்கிடவேண்டும்' என்று சீதை இருக்கும் பர்ணசாலையை நோக்கி விரைந்து ஓடி வந்தாள்; அச்சமயம் ராமன் ஒரு தடாகத்தில் நீராடி சந்தி செய்துகொண்டிருப்பதைப் பார்த்தாள்; ஆனுல் பர்ணசாலைப் பக்கத்தில் காவலாக நின்றிருந்த லக்ஷ்மணனைப் பார்க்கவில்லை; இதுவே தருணம் என நினைத்துச் சீதை இருந்த இடத்தை அடைதலும், அங்கே காவலாக நின்றிருந்த இளையவன் அவளைப் பார்த்துச் சினந்து, ''நில்லடி!'' எனக் கடுகி ஆர்த்து அவளிடம் வந்து, அவள் தலைமயிரை ஒரு கரத்தில் பற்றிக்கொண்டு மற்றொரு கரத்தில் வாளேந்தி அவள் கழுத்தை வெட்டுதற்கு எண்ணியதும், ''ஆ! இவள் பெண், இவளைக் கொல்லலாகாது'' என ஓங்கிய வாளைக்

கீழே தாழ்த்தினன். மறுகணமே அரக்கி, தன் தலைமயிரைப் பற்றியிருந்த அவனை அப்படியே தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் கிளம்ப முயன்றாள். ஆற்றல் மிக்க லக்ஷ்மணன் தன் வாளினால் அவளுடைய மூக்கையும் காதுகளையும் மற்றும் இரண்டு அங்கங்களையும் அரிந்து அவளை மானபங்கம் செய்தான்.

அதனால் வேதனை தாளமுடியாத சூர்ப்பணகை, நிலத்தில் வீழ்ந்து புரண்டு புரண்டு அழுதாள். ராவணனைக் கூவியவாறு பெருங்குரல் கொண்டு புலம்பினாள். அந்நேரத்தில் நீராடிவிட்டு வந்த ராமன், அவளைக் கண்டு வியந்து நின்றான். ராமனைப் பார்த்ததும் சூர்ப்பணகை, அவன் அடிகளில் வீழ்ந்து கதறி அழுதாள். அவள் நிலையினை அறிந்த ராமன், ''ஏதேனும் இவள் தகாத காரியம் செய்திருப்பாள்; அதனால் நம் தம்பி இவளைத் தண்டித்திருப்பான்'' என்று எண்ணி அவளை நோக்கி, ''நீ யார்?'' என்று கேட்டான். அவள் ''நீர் என்னை அறியீரோ ? நான் மூவுலகுமுடைய நாயகனும் ராவணன் தங்கை; நீர் என்னை அறிவீரே'' என்றாள். ராமன், ''இங்கு ஏன் வந்தாய்?'' எனலும், அவள், ''நேற்றும் இங்கு நான் உம்மிடம் விருப்பம் கொண்டு வரவில்லையா ?'' என்று கூறினாள். ராமன் அதற்கு, ''திருமகள் போல நேற்று இங்கு வந்தவர் நீர்தாமோ?'' என்று வினவினான். அதற்கு அவள், ''அந்தோ ! நான் அத்தகைய அழகுடையவள் தான் ; முக்கியமான அங்கங்களை அறுத்தெறிந்தால் ஒருவரழகு அழியாதோ ?'' என்றாள்.

அவள் பேச்சைக் கேட்டுப் புன்னகை புரிந்த ராமன் லக்ஷ்மணனை நோக்கி, ''தம்பி, இவளை ஏன் இவ்வாறு செய்தாய் ?'' என்று கேட்க, அவன், ''இவள் பிராட்டியாரை எடுக்க வந்தாள் ; அதனால் இவளை இப்படித் தண்டித்தேன்'' என்றான். அவன் இவ்வாறு சொல்லி வாய் மூடுமுன், சூர்ப்பணகை, ''மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்'' என்றாள். அக்கொடிய சொல்லைக் கேட்டதும் ராமன் மிகச் சினந்து, ''உன் குலத்தை அழித்து ஒழிப்பதற்கே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் ; நீ வாய்க்கு வந்தபடிப் பிதற்றி வீணே மடியாதே ; விரைவில் இவ்விடத்தை விட்டு ஒழிந்து போ'' என்று அதட்டினான்.

அதனைக் கேட்டும் செல்லாத சூர்ப்பணகை, ராமன் எதிரில் நின்று, ''மூவுலகங்களையும் வென்ற ராவணன் முதலானோரிடத்தில் உங்கள் வலிமை செல்லாது ; நீங்கள் என்னை மணந்துகொள்வீராயின் அவர்களால் உங்களுக்குக் கெடுதி உண்டாகாதபடி நான் உங்களைக் காத்துக்கொள்வேன் ; அவர்களுடன் செய்யும் போரிலும் உங்கள் பக்கத் துணையாயிருப்பேன் ; வாகனமாகவும் உங்களைச் சுமந்து திரிவேன் ; மெலிந்த இந்தப் பெண்ணினால்

என்ன செய்யமுடியும் ? நான் அங்கம் வெட்டப்பட்டவள் என்று நீங்கள் என்மீது வெறுப்புக் கொள்ளவேண்டாம் ; விரும்பினுல் நான் மறுகணமே அழகிய உருவம் அடையமுடியும் ; என் அங்கங்களை அறுத்ததற்காக நான் உங்கள்மீது வெறுப்படைய வில்லை ; என்னை இவ்வாறு அங்கம் குறைந்தவளாய்ச் செய்துவிட்டால், வேறு எவரும் என்னை விரும்பார் என்றும், நான் உங்களை விட்டுப் போகேன் என்றும் நினைத்தே நீங்கள் என்னை இப்படி பங்கப்படுத்தி இருக்கிறீர்கள் ; இந்த நன்மையைச் செய்தமைக்காக உங்களை நான் மிகவும் காதலிக்கிறேன் ; ஆதலின், நீங்கள் என்னை மணம் செய்துகொள்ளுங்கள்'' என்ருள்.

ராமன் வெறுப்புடன், ''ஏ அறிவற்ற அரக்கியே ! எங்களை நீ யார் என்று நினைத்தாய் ? நாங்கள், தசரத மன்னரின் மைந்தர்கள் ; தாயின் சொல்லைத் தட்டாமல் காட்டிற்கு வந்திருக்கிருேம் ; முனிவர்கள் வேண்டுதலின்படி அவர்களுக்குத் துன்பம் செய்யும் அரக்கர்களாகிய உங்கள் குலத்தையே பூண்டோடு அழிக்க எண்ணியுள்ளோம் ; முன்பே உன் பாட்டியான தாடகையைக் கொன்ற அஸ்திரம் எங்களிடம் இருக்கின்றது ; உன் இனத்தாரை எல்லாம் இப்போதே அழைத்து வா ; உன் எதிரிலேயே அவர்கள் எல்லோரையும் கொன்று குவிப்போம் !'' என்ருன்.

அதற்குச் சூர்ப்பணகை, ''என்னைச் சேர்த்துக்கொள்வீராஞல் அரக்கர்கள் எல்லோரையும் கொல்லலாம் ; உம்முடன் இருக்கும் பெண்ணை அகற்றிவிட நீங்கள் விரும்பாவிட்டாலும், அவளுடன் என்னையும் ஒருத்தியாகச் சேர்த்துக்கொள்ளுங்கள். நான் அவளுடன் மாறுபாடில்லாமல் சேர்ந்திருக்கிறேன் ; அதற்கும் நீர் உடன்படாவிட்டால் உம்முடைய தம்பிக்காவது என்னைச் சேர்த்துவிடுங்கள் ; அவர், 'மூக்கில்லாதவளுடனு சேருவேன் ?' என்ருல், நீர், 'நான் இடை இல்லாதவளுடன் கூடி இருக்கும்பொழுது, நீ மூக்கில்லாதவளுடன் சேர்ந்திருப்பது குற்றமில்லை' என்று சொல்லுங்கள்'' என்ருள்.

அவள் கூறியவற்றைக் கேட்ட லக்ஷ்மணன், கடுஞ்சினமுற்று, "அண்ணு ? இவளை இனியும் கொல்லாதிருப்போமாயின், இவள், மேன்மேலும் வீண் பேச்சுக்களைப் பேசிக்கொண்டேயிருப்பாள்'' என்ருன். ராமன் இவள், "இவ்விடத்தை விட்டுச் செல்லாதிருந்தால் அப்படியே செய்யவேண்டியதுதான்'' எனக் கூறினன். இச்சொற்களைக் கேட்டதும் சூர்ப்பணகை, ''இவர்கள் எதற்கும் இணங்கமாட்டார்கள். இனி நாம் இங்கு இருந்தோமாயின் நம் உயிருக்கே துன்பம் நேரும் ; ஆதலின் நாம் சென்று நம்மவர்களை ஏவி, இவர்களுக்குத் துன்பம் புரிவதே சிறந்தது'' என்று எண்ணி, ராமனை நோக்கி, ''நான் உங்கள் மனத்தைச் சோதிக்

கவே இவ்வாறெல்லாம் கூறினேனே அன்றி, உங்கள் மீது எனக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. உங்களை ஒழிப்பதற்கு நான் முன்னமேயே துணிந்துவிட்டேன் ; உங்களைக் கொல்வதற்கு,

''காற்றினிலும் கனலினிலும் கடியானைக் கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன் என்றுசலம் கொண்டு போனாள்.''

[கூற்றுவன் : யமன். சலம் : கோபம்.]

6. கரன்வதைப் படலம்

அவ்வாறு கறுவிக்கொண்டு ஓடிய சூர்ப்பணகை கரன் என்னும் அரக்கனின் இருப்பிடத்தை அடைந்து, செவியும் மூக்கும் சேதிக்கப்பட்டதால் உதிரம் ஒழுகக் கரிய மேகம் வீழ்ந்ததுபோல, அவன் பாதங்களின்மீது வீழ்ந்து அழுதாள். அவளுடைய அலங்கோலத்தைக் கண்ட கரன், வருத்தமும் மிக்க சினமும் கொண்டு, ''உன்னை இப்படிச் செய்தவர்கள் யார் ?'' என்று அவளைக் கேட்டான். அதற்குச் சூர்ப்பணகை, பஞ்சவடியில், ''மனிதர் இருவர் வந்துள்ளனர் ; தவசிகள் வேடம் பூண்டவர்கள் ; வில்லும் வாளும் ஏந்தியவர்கள் ; மன்மதன் போலும் வடிவுள்ளவர்கள் ; தருமவழியில் நிற்பவர்கள் ; தசரதன் புத்திரர்கள் ; போரில் எதிர்க்கும் அரக்கரைத் தேடுவதில் நாட்டமுள்ளவர்கள் ; அவர்களுடன் ஒரு பெண்ணும் வந்திருக்கிறாள். அவள் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் மற்றெந்த உலகத்திலும் காணமுடியாத மிக்க கட்டழகு உடையவள் ; ஆதலின், அவளை நான், உன்னுடைய அண்ணனை ராவணனிடத்துச் சேர்க்கலாம் என்று எண்ணி, அவளைத் தூக்குவதற்கு நெருங்கினேன் · அத்தருணத்தில், அவர்கள் சினந்து என் காதுகளையும் மூக்கையும் அரிந்துவிட்டார்கள்'' என்றாள்.

இவ்வாறு கூறக் கேட்டதும், கரன் அடங்காச் சினம் கொண்டு, ''இப்பொழுதே அவர்களை நாசம் செய்கிறேன் பார்'' என்று சொல்லித் தன் அருகே இருந்தவர்களை நோக்கித் தேரைக் கொண்டு வரும்படிக் கட்டளை இட்டான். அப்பொழுது, அரக்கர் தலைவர் பதினால்வர் எழுந்து நின்று அவனை வணங்கி, ''நாங்கள் சென்று, அம்மானிடர் இருவரையும் கொன்று வீழ்த்தி வருகிறோம்'' என்றார்கள். கரன், அவ்விதமே சென்று அவர்களை மடிவித்து அந்தப் பெண்ணையும் பிடித்துக்கொண்டு வாருங்கள்'' என்றான்.

வீரர்கள் பதினன்கு பேரும் பலவகையான படைக்கலங்களை ஏந்திச் சூர்ப்பணகை வழிகாட்டச் சேனைகளுடன் புறப்பட்டுப் போய் ராமனுடன் எதிர்த்து நிற்க ஆற்ருது மடிந்தார்கள். அதுகண்ட சூர்ப்பணகை ஓடிச் சென்று, கரனிடம், சேனைகளும் வீரர்களும் மடிந்ததைக் கூறினுள். அவன், அவர்களுக்காக வருந்தியதுடன் சினம் கொண்டு, மற்றும் பதினன்கு படைத் தலைவர்களையும் தம்பியாராகிய தூடணன், திரிசிரன் என்பவர் களையும் அழைத்துக்கொண்டு பெருத்த சேனையுடன் ராமனை எதிர்க்க வந்தான்.

கரன், தன்னை எதிர்த்துப் போர் செய்ய வருகிருன் என்று அறிந்ததும் ராமன், லக்ஷ்மணனைச் சீதைக்குக் காவலாக நிறுத்தி விட்டு, வில்லும் வாளும் ஏந்திப் போர் தொடுக்க ஆயத்தமாக வெளியே வந்து அரக்கர் படைக்கு முன்னே நின்ருன். அப்பொழுது, சூர்ப்பணகை, கரனுக்கு, ராமன் வந்து நிற்பதைக் காட்டினுள். அவனைக் கண்டதும் கரன், எள்ளி நகைத்து, ''இந்த அற்ப மனிதனுக்காக இத்துணைப் படைகள் வேண்டுமா?'' என்று கூறினன். இவ்வாறு தன்னைச் சூழ்ந்து நின்றவர்களுடன் ஏளனமாகக் கூறியதும் தானே தனியாகப் போருக்குப் புறப் படத் தொடங்கினன். அத்தருணத்தில், அகம்பன் என்ற அவனுடைய மந்திரி, கரனை நோக்கி, ''ஐயா! இவ்வளவு படை களுக்கு எதிரில், தனியாக வந்து நிற்கிற மனிதனை, வலிமையற்ற வன் என்று நினைத்தல் தவறு; வல்லமை இல்லாவிடில் அவன் இவ்விதம் தனியே வந்து நிற்கக்கூடுமா? மற்றும் நமக்கு, இப்பொழுது கெட்ட நிமித்தங்கள் தோன்றிவருகின்றன; ஆகையால், நீர் தனித்துச் செல்லவேண்டா'' என்ருன். கரன், மந்திரி கூறியதைக் கேட்டு, ''தேவர்கள் தேய்ந்து நசுங்கும்படிச் செய்த என் தோள்களாகிய அம்மிகள் இப்போது அமர் வேண்டித் தினவுடன் விளங்குகின்றன; இந்த அற்ப பலமுள்ள மனிதர் களுக்கு அவை எளியனவோ?'' என நகைத்து நிற்க, சேனைகள் யாவும் ராமனைச் சுற்றி வளைத்துக்கொண்டன. அவற்றை நோக்கிய ராமன், மாரிபோலப் பல கூரிய அம்புகளை அவற்றின் மீது செலுத்தியதும் யாவும் மடிந்து வீழ்ந்தன. சேனைகள் மடிந்ததைக் கண்டதும் படைத்தலைவர் பதினல்வரும் ஆத்திரம் கொண்டு ராமனை எதிர்த்தார்கள். சிறிது நேரத்திற்குள் அவர் களும் ராமனுடைய பாணங்களால் அழிந்துபோனர்கள். இவ்வாறு சேனைகளும் தலைவர்களும் மாண்டுபோகவே, திரிசிரன் என்பவன் மிக்க சினத்துடன் ராமனை எதிர்த்தான். சில நிமிடங் களுக்குள் ராமன், அவனுடைய இரு தலைகளையும் கொய்து வீழ்த் தினன். அப்பொழுது அவன், திரிசிரன் என்ற பெயரை இழந்து ஒரு சிரனகி, முன்னிலும் வீரத்துடன் போர் செய் தான்.



இவ்விதம் சிறிது நேரம் வரை இருவருக்கும் போர் நிகழ, அவன் துணிச்சலைக் கண்ட ராமன் சினந்து, அவனுடைய தோள்களையும் கால்களையும் துண்டித்தான். அவ்வாறு செய்தும் அவன் மடியவில்லை. அவன் தன் வாயைத் திறந்துகொண்டு, ''ராமனை விழுங்குகிறேன்'' என்று முண்டமாக நகர்ந்து வந்தான். ராமன் அவனுடைய மற்றொரு தலையினையும் அறுத்து வீழ்த்த அவன் இறந்தான்.

திரிசிரன் இறந்தது கண்டதும் வருந்திய தூடணன் என்பவன் ஓடிவந்து, தன் சேனையுடன் ராமனை வளைத்தான். சிறிது நேரம் இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அப்பால், ராமன், தன்னுடைய பாணங்களால் படைகளையும் தூடணனையும் ஒழித்துவிட்டான். தம்பியர் இருவரும் உயிர் நீங்கியது கண்டு, கரன் மிகவும் வருந்தினான். அவன், எவ்விதமேனும் இம் மானிடனை ஒழித்துத் தீர்ப்பேன்'' என்று சீறி எழுந்து, எஞ்சியுள்ள தன் படைகளுடன் ராமனை எதிர்த்தான். சற்று நேரத்திற்குள் படைகள் இறக்கவும், கரன், தனியாக ஒரு தேரில் ஏறிக்கொண்டு ராமன் அருகே சென்று அவன்மீது அம்புகளைப் பொழிந்தான். ராமனும் கரன்மீது கணைகளைக் கூட்டமாகச் செலுத்தினான். இவ்வாறு இருவருக்கும் கடும் போர் நடந்தது. விண்ணிடையே நின்று பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் ஆரவாரித்தார்கள். கரன், மேலும் பல அம்புகளைச் செலுத்தி, ராமனுடைய திருமேனியை மறைத்தான். தன் அம்புகளால் அவற்றை விலக்கிவிட்டுக் கடுங்கோபம் கொண்ட ராமன், ஒரு பாணத்தால் கரனுடைய தலையைக் கொய்ய எண்ணி கோதண்டத்தில் சரத்தைப் பூட்டி அதனைத் தோள்வரையில் இழுத்தான். அந்த வில், படீரென ஒடிந்து பேரொலி செய்தது. அதனைக் கேட்டதும்,

''வெற்றி கூறிய வானவர் வீரன்வில்
இற்ற போது துணுக்கமுற் றேங்கினர்
மற்றொர் வெஞ்சிலை யின்மை மனக்கொளா
அற்ற தாலெம் வலியென அஞ்சினர்.''

[இற்ற: ஒடிந்த. துணுக்கமுற்று: திடுக்கிட்டு. வெஞ்சிலை: கடுமையான வில்.]

வில் ஒடிந்தும் மனம் தளராத ராமன், பின்புறமாகத் தன் கரத்தை நீட்டவும், அக்குறிப்பினை அறிந்தவன்போல வருணன், அப்பொழுதே பரசுராமனிடமிருந்து ராமபிரான் பண்பினாற் கொண்ட வில்லினை நீட்டிய கரத்தில் கொடுத்தான். வில், தன் கைக்குக் கிடைத்ததும், கரன் ஏறி வந்த தேரைப் பொடியாக்கினான். பின்னர் கரன், ஆகாயத்திற் கிளம்பிப் போய் அங்கிருந்து

கொண்டே கடும்போர் புரிந்தான். ராமன், அவன் வலியை ஒடுக்கக் கருதி, கரனுடைய வலக்கரத்தை அறுத்து வீழ்த்தலும், அவன் தன் இடக்கரத்தால் ஓர் இரும்பு உலக்கையை எடுத்து ராமன்மீது எறிந்தான். ராமன் அதனை ஓர் அம்பினுல் விலக்கினுன். பின்னரும், அவன் ஒரு மாமரத்தைப் பிடுங்கி எடுத்து வந்தான். ராமன் அதனையும் தடுத்துக் கடுமையான அம்பு ஒன்றினைக் கரன் மீது செலுத்தினுன். கரன் தலை அற்றுக் கீழே விழுந்தது. கரன் மாண்டதைக் கண்ட முனிவர்களும் தேவர்களும் ராமனை வாழ்த்தினுர்கள். அவன் மகிழ்ச்சியுடன் பர்ணசாலையை அடைந்தான். இக்காட்சிகளைத் தொலைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்த சூர்ப்பணகை, வீழ்ந்து கிடந்த கரனைக் கட்டிக்கொண்டு புலம்பினுள். பின்னர் இச்செய்தியைச் சொல்லுவதற்கு, இலங்கையிலுள்ள தன் அண்ணன் ராவணனிடம் விரைந்து சென்றுள்.

7. மாரீசன் வதைப் படலம்

விரைந்து சென்ற சூர்ப்பணகை, லங்கை மாநகரை அணுகி, அதன் வடக்கு வாயில் வழியாக வந்து கொண்டிருந்தாள். அங்கே இருந்தவர்கள், அவளுடைய அலங்கோலமான தோற்றத்தைக் கண்டு துயரடைந்து பலவாறு கூறி ஏங்கினுர்கள். பின்பு, சூர்ப்பணகை, பலவகைச் சிறப்புக்களுடன் விளங்கிய ராவணன் கொலு மண்டபத்தை அடைந்து, அங்கே, அழகிய ஓர் இருக்கையில் அமர்ந்திருந்த அண்ணன் முன்னே சென்று அவனுடைய பாதங்களில் வீழ்ந்து புரண்டு அழுதாள். தங்கையின் துன்பத்தைக் கண்ட ராவணன் தானும் வருந்திப் பின்னர், உலகம் யாவும் நடுங்கும்படிச் சினம் கொண்டு ஆர்ப்பரித்து, அவளை நோக்கி, ''உனக்கு இத்தகைய துன்பத்தைச் செய்தவர்கள் யாவர்?'' என்று கேட்டான்.

அதற்குச் சூர்ப்பணகை, ''கானகத்தில் இரண்டு மானிடர்களைக் கண்டேன்; அவர்கள் மிக்க அழகு வாய்ந்தவர்கள்; அவர்களே என்னை இவ்வாறு பங்கப்படுத்தினுர்கள்'' என்றுள்.

அதைக் கேட்ட ராவணன் திசைகள் யாவும் நடுங்க நகைத்து, ''மானிடர்களா இவ்வாறு செய்தார்கள்? நீ ஏதோ அச்சத்தால் உளறுகிருய்; உன் அச்சத்தைவிட்டு நடந்ததை உள்ளபடி கூறு'' என்றுன்.

சூர்ப்பணகை, ''அண்ணு! உண்மையாக மனிதர்களே எனக்கு இத்துன்பத்தைச் செய்தவர்கள்; அவர்கள் எத்தகையோர்க்கும் அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்கள்; உன்னைச் சிறிதள

வும் மதிக்காதவர்கள்; அத்தகையோரிடம் முனிவர்களெல்லாம் வந்து, அரக்கர்களாகிய நாம் செய்யும் துன்பம் பொறுக்கமுடியவில்லையென்று முறையிட்டார்களாம்; அதற்கு அவர்கள், 'அரக்ககுலத்தினர் யாவரையும் அழித்துத் துன்பம் இல்லாது காப்போம்' என்று அவர்களுக்கு உறுதி கூறியுள்ளனராம். அவ்விருவரும் தசரத மன்னன் மைந்தர்களேயாவர்; தந்தையின் கட்டளைப்படி வனத்தில் வாசம் செய்ய வந்திருக்கிறார்கள்; அவர்களுள் ஒருவர் பெயர் ராமன், மற்றவர் பெயர் லக்ஷ்மணன் என்பதாம்'' என்று கூறினாள்.

இவற்றைக் கேட்டவுடன் ராவணன், ''இது என்ன விந்தையாயிருக்கிறது!

''மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரும் மானுடர் அரிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் வெள்கா(து)
இருந்தனன் இராவணனும் இன்னுயிர்கொ டின்னும்.''

[மருந்து: தேவர் அமுதம். மணி: அழகிய. வடி: கூர்மை. அரிந்தவர்: சேதித்தவர். வெள்காது: நாணங்கொள்ளாது.]

''நன்று! நன்று! நான், பெறுதற்கரிய வரங்களைப் பெற்று எல்லா உலகங்களையும் அடக்கியாளும் முறை வெகு நன்றாயிருக்கிறது!'' என்று சொல்லிக் கண்களில் தீப்பொறி பறக்கக் கடுஞ்சினத்துடன், சூர்ப்பணகையை நோக்கிக் காட்டிலுள்ள கரன் முதலியோர் அவர்களைக் கொல்லாமலா விட்டார்கள்? நீ அவர்களுக்கு இதனைச் சொல்லவில்லையா?'' என்று கேட்டான். அதற்கு அவள்,

''சொல்லென்றன் வாயில் கேட்டார் தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற ஒலியிற் சென்றார் கரன்முதற் காளை வீரர்
எல்லொன்று கமலச் செங்கண் இராமன்என் றிசைத்த ஏந்தல்
வில்லொன்றின் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றாள்.''

[எல்ஒன்று: ஒளி பொருந்திய. ஏந்தல்: பெருமை மிக்கோன். கடிகை: நாழிகை.]

சூர்ப்பணகை கூறிய அச்சொற்கள் தன் செவியுற் புகு முன்னரே, ராவணன், சோகமும் சினமும் ஒருங்கே அடைந்தான். பற்களை நறநறவென்று கடித்தான்; மேகங்கள் தீமாரி பொழிவதுபோலக் கண்களிலிருந்து தீப்பொறிகள் சொரிய, அவளைப் பார்த்து, ''உன்னை அவர்கள் இவ்விதம் அவமானப்படுத்துவதற்கு நீ அவர்களுக்குச் செய்த குற்றம் யாது?'' என்று கேட்டான்.



அவள், ''அந்த இரு மானிடர்களுடன் ஒரு பெண் இருக்கிருள்; அவள் பெயர் சீதை; அவளுடைய அழகினுக்கு இலக்குமியும் ஒப்பாகமாட்டாள்:

''மஞ்சொக்கும் அளக ஓதி மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள்!''

[மஞ்சு: மேகம். ஓதி: கூந்தல். வடித்த: பின்னி முடித்த.]

''அத்தகையவள் உனக்கு ஏற்றவள் என்று நினைத்து, நான் அவளை உன்னிடம் தூக்கிக்கொண்டு வந்துவிட முயன்றேன்; என் செயலைக் கண்டு அவள் கொழுந்தன் லக்ஷ்மணன் ஓடிவந்து என்னுடைய மூக்கு முதலியவற்றை அறுத்து அவமானம் செய்து விட்டான்; அதனுல் நான் அந்த இடத்திலேயே மடிந்து போயிருப்பேன்; ஆயினும் அந்தச் சீதையின் அழகையும் உன்னையும் எண்ணி, உனக்குத் தெரிவித்துவிட்டுச் சாகலாமென்று உயிருடன் ஓடிவந்தேன்; நீ உடனே அங்குச் சென்று சீதையையும் மானிடரையும் எடுத்து வந்து, சீதையை நீ வைத்துக்கொண்டு ராமனை என்னிடம் கொடுத்துவிடு. அவ்வாறு செய்தால், நான் இப்பொழுதே இறக்கவேண்டியவள் ஆயினும் சிறிது காலம் உயிர் தாங்கி இருப்பேன்'' என்ருள்.

இவ்வாறு ராவணனிடம் சீதையின் எழிலைப்பற்றிச் சூர்ப்பணகை கூறுதலும்,

''கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்ருன்
உரனையும் மறந்தான்; உற்ற பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினுல் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட மங்கையை மறந்தி லாதான்.''

''சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றிரண் டொன்ருய் நின்ருல் ஒன்றொழித் தொன்றை யுன்ன
மற்றொரு மனமும் உண்டோ மறக்கலாம் வழிமற் றியாதோ
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்க லாமோ?''

[உரனை: வலிய லக்ஷ்மணனை. அரன்: சிவபிரான். ''சீதை என்ற பெயரும் தனக்குள்ள மனமும் பொருந்தி நின்றுவிட ராவணனுக்கு, அவ்விரண்டையும் பிரித்து எண்ண, மற்றொரு மனம் அவனுக்கு இல்லை'' என்பதை இச்செய்யுளாற் காட்டினுர். **வரன்:** வரங்கள். **ஞானம்:** பொருள்களை ஐயம் திரிபு இல்லாமல் உள்ளபடி அறிதல்.]

ராவணனுக்குச் சீதையின்மீது வைத்துள்ள நினைவு அதிகரிக்க அதிகரிக்கத் தனக்கு அழிவுக் காலம் கிட்டிவிட்டது என்பதை உணராதவனுய் அவன் மோகத்தில் மூழ்கிவிட்டான். அதனுல் அவன் மனச்சோர்வு கொண்டு, இரவு வந்ததும் படாத பாடு பட்டான்; தகுதியற்ற செயல்களையெல்லாம் செய்தான்; எதனுலும் அவன் மனத்தைச் சார்ந்த மோகத் துன்பம் நீங்கவில்லை.

பொழுது விடிந்தது. ராவணன், சூர்ப்பணகையை அழைத்து, "தான் அடைந்த நோய்க்குச் செய்வது யாது?" என்று கேட்டான். அதற்கு அவள், "அண்டங்களுக்கெல்லாம் தனியரசாக விளங்கும் நீ தளர்வதென்னே! அவர்களிடத்தை அடைந்து சீதையை எடுத்து வந்துவிடு" என்ருள்.

பின்னர், ராவணன் தன் மந்திரிகளை அழைத்து, அவர்களுடன் நன்கு ஆலோசித்துப் பின்பு ஒரு விமானத்தில் ஆகாய வழியே சென்று, காட்டினுள் ஒரு பக்கத்தே புலன்களை அடக்கித் தவம் செய்துகொண்டிருந்த 'மாரீசன்' என்ற தன் மாமனை அடைந்தான்.

ராவணனைக் கண்டதும் மாரீசன் நல்வரவு கூறி அவனை உபசரித்தான். பிறகு அவன், ராவணனை நோக்கி, "இங்கு வந்த காரியம் யாது?" எனக் கேட்டான். ராவணன், "மாமா! ராமன், லக்ஷ்மணன் என்ற இரு மானிடர் ஓர் அழகிய பெண்ணுடன் காட்டிற்கு வந்திருக்கிருர்கள்; அவர்கள், அநியாயமாக, என் தங்கை சூர்ப்பணகையை மூக்கையும் காதுகளையும் அறுத்து அவமானம் பண்ணியதுடன், கரனையும் அவன் தம்பியரையும் கொன்றிருக்கிருர்கள்; இவற்ருல் என் பேரும் புகழும் குன்றிவிட்டன; அந்த நரர்களுடன் போர் செய்து, அவர்களைத் தொலைத்துவிடலாம் என்ருல், அச்செயல் என்போலியருக்குப் பெருமையாகுமோ? ஆதலின், அவர்களிடம் இருக்கும் பெண்ணை, அவர்கள் அறியாமல் நான் எடுத்துவந்துவிட்டால், அதனுல் அவர்களுக்கு அவமானம் உண்டாகும்; அன்றியும், என் தங்கையை அவர்கள் அவமானப்படுத்தியதற்கு ஈடாகிவிடும்; அதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும். அதனைக் கேட்கவே நான் உம்மிடம் வந்தேன்" என்ருன்.

ராவணன் கூறியதைக் கேட்டதும் மாரீசன், மிகவும் வெறுப்படைந்து, அவனை நோக்கி, "மருமகனே! நீ கொண்ட எண்ணம் மிகவும் கெடுதி விளைவிப்பதாகும்:

"நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொரு வற்சாய் மனைவாழும்
தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவரையா?"


[**நாரம்**: அன்பு. **வாரம்**: உரிமை. **ஈரும்**: பிளக்கும். **கண்டகர்**: துன்பம் செய்பவர்.]

''அந்தர முற்றான் அகலிகை பொற்பால் அழிவுற்றான்
இந்திரன் ஒப்பார் எத்தனை யோர்தாம் இழிவுற்றார்
செந்திரு ஒப்பார் எத்தனை யோர்நின் திருவுண்பார்
மந்திரம் அற்றார் உற்ற துரைத்தாய் மதியற்றாய்.''

[**அந்தரம் உற்றான்**: இந்திரன். **பொற்பால்**: அழகினால். **செந்திரு**: லக்ஷ்மி.]

இக்கெடுமதியால், உனக்கே அன்றி, நம் குல முழுதினுக்கும் அழிவே உண்டாகும்; உன்னுடைய நிகரற்ற வாழ்வையும் புகழினையும் ஏன் கெடுத்துக்கொள்கின்றாய்? இலங்கைக்குத் தலைவனாயுள்ளவனே! அந்த ராமனை நீ ஓர் எளிய நரன் என்று எண்ணாதே; அவன் திருமாலின் தோற்றமாவான்; அரக்கர் குலத்தை எல்லாம் வேரறுப்பதற்குத் தோன்றியுள்ளான்; அவன் எய்த அம்பின் கொடுமையை நான் முன்னரே அறிந்திருக்கிறேன்; ஆதலின் நீ கொண்ட எண்ணத்தை விட்டொழிப்பாயாக'' என்று சொன்னான். ராவணன், அவன் சொற்களை ஏற்காதவனாய், அவனைக் கொடூரமாகப் பார்த்தான். மாரீசன், அவனுக்கு அஞ்சாது, ராமன் வீரத்தையும், அவனிடம் கோசிகன் அளித்த தெய்வப் படைக்கலங்கள் இருத்தலையும் கூறிச் சீதையைக் கவர்ந்து வரும் தீய சிந்தனையை நீக்கும்படி அறிவுறுத்தினான். ராவணன் அம்மொழிகளைக் கேட்காமல், முன்னிலும் கடுமையாகச் சினந்து, அவனை நோக்கி, ''அந்த ராமன் உன் தாயைக் கொன்றதையும் நீ எண்ணவில்லை! நீ அவனுக்கு அஞ்சி, அவனைத் துதிக்கவும் தொடங்கிவிட்டாய்; நான் சொல்லுகிறபடி நீ செய்யவேண்டுமே அன்றி, எனக்கு அறிவுரை கூறலாமோ? நீ என்னுடைய நோக்கத்தை நிறைவேற்றாவிடில் என் கைவாளுக்கு இரையாக வேண்டிவரும்'' என ஆத்திரத்துடன் கூறினான்.

மாரீசன், 'இவனுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது போலும்; அதனாலேயே நம் சொல்லைத் தட்டிக் கழிக்கின்றான்; இவன் கூறுகிறபடி நடப்பதே தக்கது' என்று தனக்குள் எண்ணி, ராவணனை நோக்கி, ''நான் செய்யத்தக்கது யாது?'' என்றான். ராவணன் மகிழ்ந்து, ''மாமா! நீ உன் மாயத்தினால் அந்த மானிடர்கள் இருவரையும் சீதையிடமிருந்து பிரிந்திருக்குமாறு செய்யவேண்டும்; அப்பொழுது நான் அவளை எடுத்து வந்துவிடுவேன்'' என்று கூறினான். அதற்கு மாரீசன், ''அவ்வாறு சீதையை எடுத்துவருவது நீதியாகுமா? ராமனுடன் போர் தொடுத்து, வெற்றி கொண்டு அவளை அடைதலே நமக்குத் தகுதி


Bapu

யாகும்'' என்றான். ராவணன், ''அஃது எனக்குத் தெரியாமலில்லை; நான் ஒரு விநாடியில் என் வாளினால் அந்த நரர்களின் உயிரைப் போக்குவேன்; ஆனால் அவர்கள் இறந்தால் சீதையும் இறப்பாள்; அவ்வாறாயின், நம் எண்ணம் பயனில்லாது போகும்; ஆதலின், அவளை வஞ்சனையால் கொண்டுவருவதே தகுந்ததாகும்'' என்றாள்.

அவன் கூறியதைக் கேட்டதும், மாரீசன், ''அந்தோ! நாம் இவன் சொற்படி வஞ்சகச் செயலை மேற்கொண்டால், ராமன் வாளியால் மடிவது திண்ணம்; கூடாது என்றால் இவன் கைவாளால் இறக்கவேண்டி வரும்; விதி விளைவை யார் அறியார்? ஏவியதைச் செய்வதல்லாமல் வேறு வழியில்லை'' என்று கருதி, ராவணனைப் பார்த்து, ''நான் செய்யவேண்டிய தந்திரம் யாது?'' என்று கேட்டான்.

அதற்கு அவன், ''நீ ஒரு பொன்மானாக வடிவு கொண்டு சீதைக்கு எதிரில் உலவித் திரியவேண்டும்; அதன்பொருட்டு அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவர்; அத்தருணத்தில நான் என் காரியத்தை முடித்துக்கொள்வேன்'' என்றான். அவ்வாறே செய்வதாக இணங்கிய மாரீசன் சீதை இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான். ராவணனும் வேறு வழியாக அவர்களிடத்திற்குச் சென்றான்.

மாரீசன், ஓர் அழகிய பொன் மானாக மாறி, சீதை தங்கியிருக்கும் இடத்திற்கருகிலுள்ள சோலையிற் போய் உலாவிக் கொண்டிருந்தான். அவ்வேளையில், அங்கு மலர் பறிக்கச் சென்றிருந்த சீதை, அந்த மானைக் கண்டு வியந்தாள். ராமனை அடைந்து, மானின் அழகினைக் கூறி, அதனை உயிருடன் பிடித்துத் தருமாறு வேண்டினாள். ராமனும் மானைக் கண்டு வியப்புற்றான். அப்பொழுது லக்ஷ்மணன் பார்த்து, ''அண்ணா! அந்த மானின் உருவத்தை ஆராய்ந்து பார்த்தால் அது உண்மையான மானாக இராதென்று தோற்றுகிறது; அரக்கர்களின் மாயையாக இருக்கலாம்'' என்றான். ராமன், ''இளங்குமரா, மன்னுயிர்கள் பல்லாயிரக் கோடியாகப் பரந்துள்ளன; இவ்வுலகில் இல்லாதன இல்லை'' என்றான். அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டு சீதை அவசரப்பட்டு, ராமனை நோக்கி, ''ஸ்வாமி! நீங்கள் இப்படியே உரையாடிக்கொண்டிருந்தால் அந்த மான் அவ்விடத்தை விட்டே எங்கேனும் ஓடிவிடும்'' என்று சொல்ல, ராமன் அதனைப் பிடிக்கும்பொருட்டு முன்னே நடந்தான். சீதையும், லக்ஷ்மணனும் பின்னே சென்றார்கள். இவர்கள் சோலையின் அருகே போனதும், மான் இவர்களுக்கு எதிரில் நின்று மருண்டுமருண்டு பார்த்தது. அதனைக் கண்ட ராமன், அதன் அழகினை வியந்து நின்றான். லக்ஷ்மணன் ராமபிரானை நோக்கி, ''இது பொன்

மான்தான் ; இருக்கட்டுமே ; இதனால் பயன் என்ன ? இனித் திரும்பிச் செல்வதே நல்லது'' என்று சிந்தையில் ஐயமுற்றுச் செப்பினான். அதுகேட்ட சீதை, ராமனை நோக்கி, ''தாங்கள் இதனைப் பிடித்துத் தந்தால் அயோத்திக்கு மீண்டு செல்லுங்கால் அங்கு இனிமையுடன் விளையாட ஏற்ற மானாகும்'' என்றாள். ராமன் சென்று மானைப் பிடிக்க முயன்றான். லக்ஷ்மணன், இது ''அரக்கர்களுடைய மாயச் செயலே ; இதனைப் பிடிக்கவேண்டாம்'' என்று தடுத்தான். அதனை அறிந்த அவன், ''தம்பி ! இது மாய மானானால் என் அம்பால் மடியும் ; அங்ஙனமாயின், நாம் அரக்கரை அழிப்பதாகக் கொண்டுள்ள உறுதியும் நிறைவேறுகிறது ; மெய்யான மானாயிருப்பின், சீதைக்குப் பிடித்துக் கொடுப்பேன். இவ்வாறு இருவகையிலும் நமக்கு நன்மையே. ஆதலால், நீ தடை செய்யாதே !'' என்றான். அதற்கு லக்ஷ்மணன், ''இந்த மாய மானை முன்னே அனுப்பிவிட்டுப் பின்னே மற்ற அரக்கர்கள் நமக்குத் தீங்கு செய்யக் காத்து நிற்றல் கூடும் ; இச்செயலில் எத்தகைய சூது இருக்கிறது என்பதும் நமக்குப் புலப்படவில்லை ; இவ்விதம் தெரியாத ஒரு செயலில் நாம் புகுவானேன் ? மற்றும் வேட்டைத் தொழில் நமக்குச் சிறந்ததன்று. ஆதலின் இதனை விட்டு விடுதலே தகுதியானது'' என்றான். ராமன், ''அரக்கர் மாயைக்கு அஞ்சி, நாம் சும்மாயிருப்பது நம் பெருமைக்கே இழுக்காகும் ; ஆகையால் நாம் கருதியது செய்து முடித்தலே தகுதியாகும்'' என, லக்ஷ்மணன், ''அங்ஙனமாயின் நானே சென்று அதனைப் பிடிக்கின்றேன்'' என்றான்.

அச்சமயத்தில் சீதை, ராமனை நோக்கி, ''நாதா ! தாங்களே இந்த மானைப் பிடித்துக் கொடுக்கமாட்டீர் போலும்'' என்று கூறிக் கண்முத்துச் சிந்திப் பர்ணசாலையை நோக்கி விரைந்தாள். ராமன், சீதையின் பிணக்கைக் கண்டு, ''நானே சென்று மானைப் பிடித்துவருகிறேன். சீதைக்குக் காவலாக இரு'' என லக்ஷ்மணனுக்குக் கட்டளையிட்டு மானைத் துரத்திச் சென்றான். லக்ஷ்மணன், ''முன்னே விசுவாமித்திரருடைய வேள்வியில் தாடகையும் அவள் மக்கள் இருவரும் வந்து எதிர்த்தார்கள். தாடகையும் அவள் மக்களுள் ஒருவனும் மடிய, மற்றொருவன் உயிர் தப்பி மறைந்து ஓடினான். அவ்வாறு தப்பி ஓடிய மாரீசனே இப்பொழுது மான் வடிவத்துடன் வந்திருக்கிறான் என்று ஐயுறுகிறேன் ; மேலும் பார்ப்போம் ; செல்க'' எனக் கூறிச் சீதை புக்கிருந்த பர்ணசாலையை வெளிப்புறத்தில் இருந்தவாறே காத்தான்.

மானைத் துரத்திச் சென்ற ராமன், அது தனக்கு அகப்படுவதுபோல நிற்பதும், பிடிப்பதற்கு அருகே போனால், ஓடுவதுமாக ஏமாற்றுவதைக் கண்டு, ''இதன் செய்கையில் ஏதோ வஞ்சனை

உள்ளது போலும்; இஃது அரக்கர்களின் மாயையோ'' என்று எண்ணி அதனை வதைக்கச் சித்தமானான். ராமன் நினைத்ததை அறிந்து, மானான மாரீசன், ஆகாயத்திற் கிளம்ப முயன்றான். உடனே ராமன், ஒரு சிறந்த அம்பினை வில்லில் தொடுத்து, ''மான் வடிவமான இவ்வரக்கன் எங்குச் சென்றாலும் விடாது, கொன்று வருக'' என்று அவன்மீது எய்தான். அந்த அம்பு, மாரீசனுடைய மார்பிற் பட்டு ஊடுருவிச் செல்லலும், அவன் மான் வடிவம் நீங்கி, முன் வடிவம் அடைந்து, எட்டுத் திக்கினும் முட்டி ஒலிக்கும்படி வாய்விட்டரற்றி நெடுவரையென விழுந்து உயிர் விட்டான்.

அவன் அங்ஙனம் வீழ்ந்து இறந்தது கண்ட ராமன், முன்னொரு முறை தன்னிடம் அகப்பட்டுத் தப்பி ஓடிய மாரீசனே அவன் என்று அறிந்து, அவன் சூதினை முன்னரே தெரிந்து கூறிய லக்ஷ்மணனைப் புகழ்ந்தான். அதன்பிறகு ராமன், ''இந்த மாரீசன், என் குரலைப்போலக் கூவியதற்குக் காரணம் எதுவாயிருக்கலாம்? சீதை திகைத்து வருந்துவாளே'' என்று சிந்தித்தான். மீண்டும், ''இது மாய மான் என்பதை முன்னமே உணர்ந்து கூறிய இளையோன் இவ்வுண்மையையும் உணர்ந்து சீதையைத் தேற்றுவான்'' என்று மனம் தேறினான்.

8. ஜடாயு உயிர்நீத்த படலம்

ராமன், சீதை இருக்கும் இடத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில், பர்ணசாலையிலிருந்த சீதை, மாரீசன் கூவிய குரலோசையைக் கேட்டாள். தன் கணவனுக்கு ஏதோ கெடுதி நேர்ந்துவிட்டதென்றும் அதனாலேயே அவர் கூவினார் என்றும் நினைத்தாள். ஆகையால் திடுக்கிட்டுக் கலங்கி அங்கு நின்றிருந்த மைத்துனனை நோக்கி, "அந்தோ! இப்பொழுது கேட்ட குரலால் என் துணைவனாகிய குற்றமற்றவனாகிய ராமன் வாளரக்கர்கள் புரிந்த மாயையால் இறந்தனன் என உணர்ந்தும் அவ்விடத்திற்கு ஓடிச் செல்லாது நிற்கின்றீரே! இது தகுமோ?'' என்றாள். அதனைக் கேட்ட லக்ஷ்மணன், ''தாயே! என் அண்ணனுக்குத் தீங்கு செய்யத் தக்க வலிமையுடையவர்கள் எவ்வுலகத்திலும் இல்லை! நாம் கேட்ட அக்குரல், அரக்கர் மாயையால்நேர்ந்ததாகும்; ஆதலின், தாங்கள் கலங்கவேண்டா'' என்றான். சீதை, இளையோன் சொற்களில் சிறிதும் நம்பிக்கை கொள்ளாது, மனம் கொதித்து, அவன் மனம் நோகும்படி,

''ஒருபகல் பழகினர் உயிரை ஈவரால்
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யான்இனி
எரியிடை வீழ்ந்துயிர் இறப்பன்..''

[உலைவுறு : துன்புறும். பெற்றி : தன்மை. வெருவலை : அஞ்சவில்லை. எரி : நெருப்பு.]

என்று கூறி அருகில் எரிந்துகொண்டிருந்த காட்டுத் தீயை நோக்கி விரைந்தோடினாள்.

லக்ஷ்மணன் திடுக்கிட்டவனாய், "அந்தோ! நமக்குத் துன்பம் நேரவேண்டிய காலம் வந்துவிட்டது போலத் தெரிகிறது; அதனாலேயே, பிராட்டியார் இவ்வாறு கூறுகின்றார்; நாம் இவ்விடத்தைவிட்டு நீங்கினால், அண்ணன் கட்டளையை மீறியதாகும்; அண்ணியாருக்கும் ஏதேனும் தீங்கு நேரிடலாம்; போகாதிருந்தால், இவர் தீயில் வீழ்ந்து இறப்பார்; எனவே, இருவகையிலும் நமக்குத் தீராத துன்பமாயிருக்கிறது; எதைச் செய்வது?" என இருதலைக்கொள்ளி எறும்புபோல் துடித்தான். பிறகு, "எது வரினும், பிராட்டியாரின் உயிருக்குப் பழுது வராதிருக்கச் செய்தலே தகுதியாம்" என்று உறுதியுடன், அவன் சீதையை நோக்கி, "அம்மணி! தாங்கள் தீயிற் புகுந்து இறக்கவேண்டாம்; அண்ணனார் கட்டளையை மீறித் தங்கள் கட்டளைப்படி நான் இதோ செல்லுகிறேன்; விதியை வெல்ல யாரால் முடியும்? தாங்கள் மட்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்" என்று கூறி விடைபெற்றுச் சென்றான்; சற்றுத் தூரம் சென்று திரும்பிப் பார்த்து ஏதேனும் நேருமாயின், அருகிலேயே இருக்கும் நம் தந்தையாராகிய ஜடாயு வந்து காப்பார் என அறிவித்து, ராமன் சென்ற திசையை நோக்கிப் போனான்.

லக்ஷ்மணன் சீதையை விட்டுப் பிரிந்து செல்லலும், அவளைத் தூக்கிச் செல்லத் தகுந்த சமயம் பார்த்திருந்த ராவணன் ஒரு கிழ முனிவன்போல் வடிவு கொண்டான்; கையில் வீணையை ஏந்தி வேதம் இசைத்து விருந்தினனாய் வந்தான்; சீதை இருந்த பர்ணசாலையின் வாயிலருகே சென்று நின்று, "உள்ளே இருப்பவர் யாரோ?" என்று மெல்லிய குரலோடு கேட்டான்.

அதனைச் செவியுற்ற சீதை வாயிலருகில் வந்து நின்று பார்த்ததும், அவனை உண்மையான தவசி என நினைத்து, "வாருங்கள் ஐயா" என வரவேற்று உபசரித்தாள். சீதையைக் கண்டதும் ராவணன் அவள் அழகினை வியந்து, "இத்தகையாளை எனக்குக் கண்டு தந்த என் தங்கை சூர்ப்பணகைக்கு என் அரசையே கொடுப்பேன்" என எண்ணினான். அவன் சூழ்ச்சியை உணராத சீதை, பிரம்பினால் அமைந்த ஓர் இருக்கையைக் காட்டி அதனில் அமரும்படி வேண்டினாள். அவ்வாறே ராவணன் அமர்ந்து, சீதையை நோக்கி, "இந்தப் பர்ணசாலை யாருடையது? இங்கே இருக்கும் முனிவர் யாவர்?" என்று கேட்டான். அதற்குச் சீதை, "தசரத மன்னருடைய மூத்த புதல்வர், தம் சிற்றன்னையின் கட்டளைப்படி தம்பியுடன் வனவாசம் செய்யும்பொருட்டு இங்கே வந்துள்ளார்; அவர் பெயரை நீர் கேள்வியுற்றிருப்பீர்"

என்ருள். ராவணன், ''நான் அவர் பெயரைக் கேட்டிருக்கிறேன், பார்த்ததில்லே; அவருடைய தேசத்திற்கும் வந்திருக்கிறேன்; நீங்கள் யாருடைய புதல்வியார்? நீங்களும் வனவாசம் செய்யக் காரணம் யாது?'' என்ருன். சீதை, "நான் ஜனக மன்னர் புதல்வி, என் பெயர் ஜானகி; காகுத்தன் மனைவி'' என்று சொல்லி, ''தாங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டாள். அதற்கு, அந்தச் சன்னியாசி, ''நான் முன்பு இவ்வனத்தில் இருந்த ஒரு முனிவனே; சில நாட்களுக்குமுன், தேவர்கள் யாவரையும் அடக்கியாளும் வீரனும் அழகனுமான ராவணனுடைய லங்காபுரிக்குச் சென்று, அந்நகரத்திலேயே இதுகாறும் இருந்தேன். முன் என்னுடன் வசித்திருந்த முனிவர்களைப் பிரிந்திருக்கமுடியாமையால் அவர்களைக் காணும்பொருட்டு இப்பொழுது மீண்டும் இங்கே வந்தேன்'' என்று கூறினன்.

சீதை, இம்மொழிகளை அவனிடமிருந்து கேட்டதும் வியந்து, ''அந்தோ! நீர் தவசியாயிருந்தும், அந்தப் பாதகர்களான ராக்கதர்களுடைய நகரத்திற்கு ஏன் சென்றிருந்தீர்கள்?'' என்று கேட்டாள். அவன் அதற்கு அரக்கர்கள் தேவர்களைப்போல அத்துணை கொடியவர்கள் அல்லர்; உண்மையில் எம்போன்ருேர்க்கு மிகவும் நல்லவர்களே'' என்ருன். மேலும் சீதை ஐயுறுவளோ என எண்ணிய ராவணன் அதனை மாற்ற எண்ணி, ''மூன்று உலகங்களும் ராக்கதர் வசமாயிருக்கின்றபடியால், நாமெல்லோரும் அவர்கள் வழியில் நிற்றலை விட்டு வேறென்ன செய்தல் இயலும்?'' எனக் கூறினன்.

அதற்குச் சீதை, "அரக்கர்களைக் குறித்து இனி யாரும் அஞ்சவேண்டியதில்லே; என் நாயகர், வனவாசம் முடிவு பெறுமுன் அரக்கர்கள் அழிவார்கள்; பின்னர் அவனி துன்பமேதுமின்றிச் சிறந்து நிற்கும்'' என்ருள். ராவணன், ''எளிய இந்த மனிதர்கள் அரக்கர்களை வேரோடும் அழிப்பார்களேயாயின் கானகத்துக் கரிகளையெல்லாம் முயல் குட்டியே கொன்றுவிடும்; சிங்க வேற்றினைச் சிறுமான் கொல்லும்'' என்ருன். அதைக் கேட்ட சீதை, "என் நாதர், நீர் எண்ணுகிறபடி எளிமையானவர் அன்று; சில நாட்களுக்குமுன், அவர் கையில் விராதனும் கரன் முதலிய கணக்கற்ருேரும் மடிந்ததை நீர் அறியீரோ? ராவணன் முதலிய அரக்கர்கள் யாவரும் அழிவதையும், தேவர்கள் துன்பமின்றி வாழ்வதையும் நாளைக்கு நீரே காணப்போகிறீர். தருமத்தை என்றேனும் பாவம் வெல்லுமோ?'' என்ருள்.

சீதையின் இந்த இனிய மொழிகளைக் கேட்க ராவணன் மிக்க விருப்பங் கொண்டான். ஆயினும், மானிடர் வலியவர் என்ற மாற்றத்தால் மானம் மீதூரச் சீற்றம் கொண்டான். அதனுல் அவன் சீதையை நோக்கி, "நீ ஒரு பேதைப் பெண். அறியாமையினுல் எளியனுகிய ஒரு மனிதன், பெருவீரனுகிய

ராவணனை வெல்வான் என்று கூறிவிட்டாய். அந்த ராவணனை நீ யாரென்று நினைத்தாய்? அவன் நினைத்தால், உலகங்கள் யாவையும் ஒரு நொடியில் அழிக்கக்கூடியவன்'' என்றான்.

சீதை, "ராவணன் மிக்க வலிமையுடையவன்தான். கார்த்த வீரியார்ச்சுனன் என்பவன் அவனைப் பிடித்துச் சிறை யாக்கியபோது, அவன் வலிமை என்ன ஆயிற்று? அத்தகைய கார்த்தவீரியனுடைய ஆயிரம் தோள்களையும் இரண்டே கரமுடைய பரசுராமன் இளம்பிராயத்திலேயே மழுவால் வெட்டி எறிந்தனன் அன்றோ? ஆகவே, தோள்கள் பலவாயின் வலிமை யும் அதிகமுண்டு என எண்ணற்க'' என்றாள்.

அவள் கூறிய மொழிகளைக் கேட்டதும், ராவணனுக்கு அடங்காச் சினம் மூண்டது. அவன் தன் இயற்கை வடிவத் துடன் எமனைப்போல எதிரில் நின்றான். அவன் தோற்றத் தைக் கண்டதும் சீதை அஞ்சி, செய்வது இன்னதென்று அறியாது நடுங்கினாள்.

ராவணன் அவளை நோக்கி, "அஞ்சாதே அன்னமே, பூமியில் புழுவென வாழும் மானுடர் வலியர் என்றாய்; பெண்ணாதலின் அவ்வாறு கூறிய நீ பிழைத்தாய். யாரையும் வணங்கி வாழாத வன் நான்; என் தலைகள்தோறும் மகுடம்போல நீ மின்னுவா யாக; தேவ மாதர்கள் உன் பொன்னடிக்கு ஏவல் செய்ய ஈரேழுலகும் ஆளும் செல்வத்தில் உறைவாயாக'' என்றான்.

இத் தகாத மொழிகளைக் கேட்டதும், சீதை, இரு செவிகளை யும் மூடிக்கொண்டு, "அரக்கா, வேள்வித் தீயில் இடும் ஆகுதியை நாய் இச்சிப்பதுபோல நீ என்னை இச்சிக்கிறாய்; என் நாயக ருடைய அம்பினால் நீ ஒழிந்து போகப்போகிறாய்; உன் உயிர் நிலைக்கவேண்டுமாயின் நீ இங்கு ஒரு கணமும் நில்லாது என் நாயகர் வருவதற்குள் ஓடிவிடு'' எனக் கடிந்து கூறினாள். அவன் சீதையை நோக்கி, "ஆரணங்கே! நீ கூறியவற்றால் என் ஆவி போய்விடும் போலிருக்கிறது; தயைசெய்து எனக்கு உயிர்ப் பிச்சை தரவேண்டும்'' என்று கூறி அவளுடைய திருவடிகளில் நெடுக வீழ்ந்து வணங்கினான். அவன் அவ்வாறு வணங்கியதும், சீதை தனக்கு இவனால் எவ்விதத் தீங்கு நேருமோ என்று அச்சம் கொண்டு, "ஆ! உயிர்த் துணைவரே! மைத்துனரே!'' என்று ராமனையும் லக்ஷ்மணனையும் கூவிக் கதறினாள். ராவணனோ "விருப்பமில்லாத பிற மாதரைத் தீண்டினால் தீங்கிற்குள்ளா வாய்'' என்று முன்னொரு காலத்தில் பிரமதேவர் தனக்களித்த சாபம் நினைவுக்கு வர சீதையைத் தீண்டுதற்கு அஞ்சித் தன் வலிமையால் அவளை நிலத்தோடு பெயர்த்தெடுத்தான்; தன் தேரின்மீது வைத்துக்கொண்டான்; சீதை அஞ்சிச் செய்வதொன்

றும் அறியாது மயங்கினுள். அச்சமயத்தில் ராவணன், தேரை வான்வழியே செலுத்தும்படிப் பாகனுக்குக் கட்டளை இட்டான். அவன் அவவாறே தேரைச் செலுத்தவும் அது லங்கையை நோக்கி விரைந்தது.

அதனைக் கண்டதும் சீதை, எரியும் நெருப்பில் வீழ்ந்த மலர்க்கொடிபோல் வாடித் தேரின்மீது வீழ்ந்து புரண்டு,

''மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலைதே றினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர்.''

''செஞ்சே வகனுர் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரேல் அடியேன்
உஞ்சா லதுதான் இழிவோ வுரையீர்.''

''நிருதா தியர்வே ரறநீண் முகில்போல்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா வினையோய் மறுவே துமிலாப்
பரதா வினையோய் பழிபூ ணுதிரோ.''

''கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வார் உழையோ டினைபோய்
நீதான் வினையேன் நிலைசொல் லலையோ.''

''முந்துஞ் சுனைகாள் முழைவாழ் அரிகாள்
இந்தந் நிலனே டுமெடுத் தகைநா(ல்)
ஐந்தும் தலைபத் துமலைந் துலையச்
சிந்தும் படிகண் டுசிரித் திடுவீர்.''

எனக் கதறினுள்.

இங்ஙனம் சீதை புலம்புவது கேட்ட ராவணன் அவளைப் பார்த்து, ''பேதாய்! என்னை வென்று உன்னை மீட்க மானிடர்களால் முடியுமா? ஏன் வீணுகப் பிதற்றுகின்ருய்? பேசாமல் இரு'' என்று கூறி நகைத்தான். அதைக் கேட்ட சீதை, ராவணனை நோக்கி, ''அடா! போருக்குப் பயப்படும் புல்லனே! நீயா சுத்த வீரன்? முதலில், நீ வஞ்சகமாக ஒரு மானை அனுப்பி, என் நாயகரையும் மைத்துனரையும் என்னை விட்டு நீங்கும்படி செய்து நான் தனித்திருக்க, பெண்ணுகிய என்னை வலியக் கொண்டு

போகிறாய். இத்தகைய பேடியாகிய உனக்கு வீர மொழிகள் ஏன்? நீ ஒரு வீரனானால், தேரை நிறுத்தி, என் கணவர் வந்தபின் அவருடன் எதிர்த்துப் போர் செய்து உன் வீரத்தைக் காட்டு, பார்க்கிறேன்'' என்றாள்.

ராவணன், அவளை உற்று நோக்கி, ''மதியற்றவளே! எனக்கு வல்லமை இல்லை என்றா சொல்கிறாய்! அந்த நரர்கள் எனக்கு எம் மாத்திரம்? வலியற்ற எளியோராகிய அவர்களுடன் போர் தொடுப்பது என் வீரத்திற்கு இழிவாகும் என்று கருதியே உன்னை வஞ்சகமாகக் கொண்டுபோகிறேன்'' என்று கூறினான்.

அதற்குச் சீதை, ''உன் குலப்பகைவருடன் போர் செய்வது உனக்கு இழிவு. ஆனால், கற்புடைய ஒரு பெண்ணை, அவளுக்கு உரிமையானவர் அறியாது வஞ்சகமாக எடுத்துச் செல்வது புகழோ?'' என்று பலவாறு ராவணனைப் பழித்துக் கூறினாள்.

தேரில் போய்க்கொண்டிருந்த சீதையும் ராவணனும் ஒரு வர்க்கொருவர் இரைந்து வாதம் புரிவதையும், சீதையின் புலம் பலையும் கேட்ட ஜடாயு, மிக்க வேகத்துடன் ஆகாயத்தே பறந்து வந்து, தேரிற் செல்லும் ராவணனைத் தடுத்து, அழுது புலம்பிக்கொண்டே அவனுடன் செல்லும் சீதையையும் கண்டார்; கண்டதும், ராவணன், சீதையைத் தீண்டாதிருக்கிறான் என்பதை உணர்ந்து, ஆறுதல் அடைந்து, சீதையை நோக்கி, ''அம்மணி! நான் ஜடாயு! அஞ்சவேண்டாம்'' என்று தெரியப்படுத்திவிட்டு, ராவணனை விளித்து, ''அடா அறிவு கெட்டவனே! நீ என்ன காரியம் செய்தாய்? ராமன் உங்கள் குலத்தையே வேரறுக்க வந்திருக்கிறான் என்பதை உணராமல், நீ இக்கொடுஞ் செயலில் இறங்கத் துணிந்துவிட்டனையே. அவர் முன்னிலையில் உன் வஞ்ச கத்தைக் காட்டியிருப்பாயானால், அவருடைய அம்பு உன்னைக் கொன்றிருக்கும்; அவரும் தம்பியும் இல்லாதபொழுது, நீ இச் சூது செய்யலாமா? ராமர் அறிவாராயின் நீ எங்குச் சென்று ஒளிந்தாலும் உன்னை விடாது தொடர்ந்து கொல்லுவார்; எனினும் இப்பொழுது நானே உன்னைக் கொல்லப்போகிறேன்; நீ உயிருடன் இருக்க விரும்பினால் சீதையை விட்டு ஓடிப் போ'' எனச் சீற்றமுற்றுறைந்தார்.

இச்சொற்களைக் கேட்ட ராவணன் சினந்து, ''நீ சொல்லும் அந்த மானிடரைக் காட்டு இப்பொழுதே. என் கையில் அகப் பட்ட இப்பெண் இனி மீள்வது முடியாது'' என்றான்.

ராவணன் கூறியதைக் கேட்டதும் சீதை முன்னிலும் மிகவும் திகைப்படைந்து அழவும், ஜடாயு, ''அம்மா! அழாதே; இதோ ஒரு நொடியில், இவனுடைய பத்துத் தலைகளும் சிதறும்படி

இவனை அடிக்கிறேன் பார்'' என்று சொல்லி, இடி முழக்கம் போலத் தன் சிறகுகளை வீசிக்கொண்டு ராவணனுடைய தேரின் மீது பாய்ந்து அவன் தரித்துள்ள முடிகள் பத்தையும் கீழே தள்ளி விட்டு உயரத்தில் பறந்து தேரில் கட்டியிருந்த அவன் வீணைக்கொடி யினையும் தன் அலகினுற் கொத்திக் கிழித்தெறிந்தார். இத்தகைய மானபங்கத்தை ஒரு நாளும் அறியாத ராவணன், அவர்மீது பல அம்புகளைச் செலுத்தினன். ஜடாயு அவற்றைக் கண்டதுண்டங் களாக்கி, அவனுடைய பத்துத் தலைகளையும் தன் அலகினுலே கொத்தி ரத்தம் பெருகச் செய்து காதில் அணிந்திருந்த குண்ட லங்களைப் பறித்துக்கொண்டு மேலெழும்பினர். அவ்வாறு உயர எழும்பிய ஜடாயுவின் மார்பில், ராவணன், பதினைன்கு அம்பு களைத் தன் வில்லில் தொடுத்து ஊடுருவும்படி ஏவினன். அவ் வாளிகள் பாய்ந்ததால் ஜடாயுவின் உடலெங்கும் ரத்தம் பீறிட்டு ஒழுகலாயிற்று. அவர் பெருமூச்சு விட்டு ராவணனுடைய இருபது தோள்களின்மீது பாய்ந்து தம் நகங்களாற் குடைந்து, அவன் மார்பில் அணிந்துள்ள கவசத்தையும் பிய்த்து எறிந்தார். பின் னர், ராவணன், நூறு அம்புகளைச் செலுத்தி ஜடாயுவின் உடலில் அழுந்தச் செய்தான். அவற்றை அவர், தம் சிறகுகளால் நழுவச் செய்து, அவன் வில்லினை அலகினுற் பறித்து மேலே கிளம்பித் தம் கால்களினல் ஒடித்துவிட்டார். அது கண்ட ராவணன் கடுஞ் சினம் கொண்டு, தன்னிடமுள்ள வேலாயுதத்தை ஜடாயுவின் மீது வீசினன். அதனை அவர் வீரத்துடன் தம் மார்பில் ஏற்ருர்; அது பயனற்றுப் போகும்படிச் செய்தார். பிறகு அவர் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தேர்ப்பாகன் தலையைக் கிள்ளி ராவண னுடைய முகத்தின்மீது வீச, அவன் அதை ஒதுக்கித் தள்ளி விட்டுத் தண்டாயுதத்தைக் கையிற் கொண்டு ஜடாயுவை நோக்கி ஓங்கி அடித்தான். அவ்வடியைத் தாங்கமாட்டாமல், அவர் தம் வலிகுன்றிப் பூமியில் வீழ்ந்தார். உடனே ராவணன், தானே தன் தேரை ஆகாய வழியே, விரைந்து செலுத்தினன்.

ஜடாயு நிலத்தில் விழுந்ததைக் கண்ட சீதை, கொடும் புண்ணில் கொள்ளி புகுந்தாற்போலத் துடித்துப் புரண்டழுதாள். அச்சமயத்தில் சிறிது தெளிவுற்று எழுந்த ஜடாயு, சீதையை, ''அம்மா! மனம் கலங்காதே'' என்று சொல்லித் தேற்றி மீண்டும் ராவணன் தேரில் பாய்ந்து அவன் கையிலுள்ள தண்டாயுதத்தைப் பறித்துக்கொண்டு, அதனுல், தேரிற் கட்டியிருந்த பதினாறு குதிரைகளையும் கொன்று தொலைத்தார்; நொடி நேரத்தில் தேரையும் அழித்து, அவன் அம்பருத் தூணியையும் பறித்தார்; ராவணனுடைய மார்பையும் தோள்களையும் அலகினுலும் நகங் களாலும் கீறி கிழித்துச் சிறகுகளால் நையப் புடைத்தார். மிக விரைவில் அடுத்தடுத்துச் செய்த ஜடாயுவின் செயல்களால் துன்பம் பொறுக்கலாற்ருமல், ராவணன் மூர்ச்சை யுற்ருன். அது கண்ட ஜடாயு, ''அடா ராவணு! உன் வீரம்



இவ்வளவுதானு?'' என்று நகைத்தார். சிறிது மூர்ச்சை தெளிந்ததும் ராவணன், தன்னிடம் வேறு படைக்கலமின்மையின் சிவபிரான் தந்த தெய்வ வாளெடுத்து ஜடாயுவின் சிறகுகளை அறுத்துவிட்டான். அவருக்கு ஆயுள் முடியும் காலம் வந்து நேர்ந்ததால், மேலே இருந்து, ஒரு குன்று விழுவதுபோல் நிலத்தில் வீழ்ந்தார். ஜடாயு கீழே விழவே, சீதை திக்கற்றவளாய்ப் பின்வருமாறு புலம்பினுள்:

''வன்றுணை யுளனென வந்த மன்னனும்
பொன்றினன் எனக்கினிப் புகலென் என்கின்றுள்
இன்றுணை பிரிந்திரிந்து இன்னல் எய்திய
அன்றிலம் பெடையென அரற்றி ளைரோ.''

''பின்னவன் உரையினை மறுத்துப் பேதையேன்
அன்னவன் தனைக்கடி தகற்றி னேன்பொரு
மன்னவன் சிறையற மயங்கி னேன்விதி
இன்னமும் எவ்வினை யியற்று மோவெனு.''

''அல்லலுற் றேனைவந் தஞ்ச லென்றவிந்
நல்லவன் தோற்பதே ! நரகன் வெல்வதே !
வெல்வதும் பாவமோ! வேதம் பொய்க்குமோ!
இல்லையோ அறமென இரங்கி ஏங்கினுள்.''

''நாணிலேன் உரைகொடு நடந்த நம்பிமீர்
நீணிலை யறநெறி நின்று ளோர்க்கெலாம்
ஆணியை யுந்தையர்க் கமைந்த அன்பனைக்
காணிய வம்மெனக் கலங்கி விம்மினுள்.''

''கற்பழி யாமையென் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி யுண்டது வினையி னேன்வந்த
இற்பழி யுண்டதென்(று) இரங்கி ஏங்கினுள்.''

[**மன்னனும்:** ஜடாயு என்ற கழுகரசன். **பொன்றினன்:** இறந்தனன். **பின்னவன்:** லக்ஷ்மணன் **ஆணியை:** அச்சாணி போன்ற ராமனை. **போர்வலான்:** போரில் வல்ல ராமன், **இல்:** குலம்.]

அச்சமயத்தில் ராவணன், இனித் தாமதிக்கலாகாதென எண்ணி, தேரில் வைத்திருந்த மண்ணேடு சேர்த்துச்சீதையை எடுத்துத் தன் தோளின்மீது வைத்துக் கொண்டு ஆகாய வழியே ஏகினுன். அது கண்ட சீதை, திகைப்புற்று மூர்ச்சையுற்றுள். கீழே விழுந்துவிட்ட ஜடாயு, சிறிது தெளிவு பெற்று மேலே பார்க்கவும் ஆகாயத்தில் சீதையுடன் செல்லும் ராவணனைப் பலவாறு நிந்தித்துவிட்டு, ராமன் முதலியோரை நினைத்துப் புலம்பினுர்; மீண்டும் மூர்ச்சையானுர்.

சீதையை எடுத்துப்போன ராவணன், லங்கையை அடைந்து, அரக்கர் குலப் பெண்கள் சிலரைக் காவலாக நியமித்து, அவளை அசோகவனத்தில் சிறை வைத்துவிட்டான். 'விருப்பமில்லா மாதரைத் தொடின் தலை வெடிக்கும்' என வரும் பிரம சாபத்தால் அஞ்சிச் சீதையைத் தீண்டவில்லை; சீதை இசையும்படியான தந்திரங்களைச் செய்யுமாறு காவல் புரிந்த அரக்கியருக்குக் கட்டளையிட்டான்.

நிற்க, சீதையின் ஏவலால் ராமனைக் காணச் சென்ற லக்ஷ்மணன், அண்ணனே எதிரில் வருவது கண்டு பேரின்பம் அடைந்தான். ராமன் தம்பியைப் பார்த்ததும் திடுக்கிட்டு, ''மாரீசன் செய்த குரலைக் கேட்டு, நமக்கு ஏதோ துன்பம் உண்டாகிவிட்டதாக எண்ணிய சீதை, இவன் சொல்லைக் கேளாது, இவனை நம்மிடம் அனுப்பிருப்பாள்'' என்று கருதி, லக்ஷ்மணனை நோக்கி, "தம்பி, நீ சீதையைத் தனித்துவிட்டு வரலாமா?'' என்று கேட்டான். லக்ஷ்மணன் நிகழ்ந்ததைக் கூறினன். ராமன், ''ராக்கதர்களின் வஞ்சனை இப்படி இருக்கிறது'' என்று துயரம் கொண்டு, ''தம்பி! உன்மீது குற்றமில்லை; அவள், உன்னுடைய நன்மொழிகளைக் கேளாது கூறிய கடுஞ்சொற்களே, அவளை நீ தனியே விட்டுவரச் செய்திருக்கின்றன; அவள் மட்டுமா உன் சொல்லைக் கேட்கவில்லை? நானும் அல்லவோ உன் சொல்லைத் தட்டி வந்து, இந்த அவதி நேர்ந்திருக்கிறது; இனி அங்குச் சீதைக்கு என்ன துன்பம் உண்டாயதோ? நாம் விரைவில் பர்ணசாலைக்குச் செல்லவேண்டியதே'' என்று கூற இருவரும் விரைந்து வந்தனர்.

இருவரும் பர்ணசாலையை அடைந்து பார்க்க, சீதை அங்கு இல்லாதுபோகவே, ராமனுடைய மனம், உடலைவிட்டுப் பிரிந்த உயிர், திரும்பவும் வந்து அவ்வுடலைக் காணுவிடில் எவ்வாறு நிலை கொள்ளாது அலையுமோ, அங்ஙனமே அலைந்து சுழலத் தொடங்கியது. ராமன் கொண்ட மனக்கலக்கம் உலகம் முழுமையும் அதனில் உள்ள சராசரங்களோடு சுழலும்படிச் செய்துவிட்டது. அவ்வாறு கலங்கி நின்ற ராமனை, தம்பி, "அண்ணு! நாம் இனி வருந்திக்கொண்டு பொழுது போக்கலாகாது. அரக்கர்களே வஞ்சனையாகத் தேவியாரைக் கொண்டு போயிருக்கிறுர்கள்; அவர்கள் தொலைவில் சென்றுவிடுவார்கள். அதற்குமுன் நாம் தேடிக் கண்டு பிடித்து அவர்களைக் கொல்லவேண்டும்'' என்றுன். ராமன் அதற்கிசைந்து, இருவருமாக சீதையைத் தேடப் புறப்பட்டனர். வழியில் தேர்ச் சக்கரங்களின் சுவடுகளைப் பார்த்தார்கள். சீதையை தொடுவதற்கு அஞ்சி, அவளை நிலத்தோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு சென்றிருப்பதையும் அறிந்தார்கள். தேர்ச் சக்கரம் சென்ற வழியே இருவரும் சிறிது தூரம் நடந்தார்கள். அப்பால் அதன் சுவடுகள் தெரியவில்லை. ராமன் மயங்கி நின்றுன். அது கண்ட லக்ஷ்மணன், ''அண்ணு! தேர் இங்கிருந்தே ஆகாயத்திற்

சென்றிருக்கிறது; அதனால்தான் நமக்குச் சக்கரங்களின் சுவடுகள் தெரியவில்லை; அது தெற்குப் பக்கமாகவே சென்றிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது; நாம் தெற்கு நோக்கிப் போவோமாயின் விரைவில் அதனைப் பார்க்கலாம்'' என்றான். அவ்விதமே இருவரும் தென்திசையாக இரண்டு யோசனை தூரம் நடந்து சென்றார்கள். வழியில் வீணையின் உருவம் எழுதப்பெற்ற கொடி ஒன்று அறுந்து வீழ்ந்திருப்பதைக் கண்டார்கள். ராமன், ''இக்கொடி அரக்கர்களுடையதாக இருக்கலாம்; சீதையை விடுவிக்கும்பொருட்டு, யாரோ தேவர்கள், அவர்களுடன் போர் தொடுத்திருக்கிறார்கள்'' என்று சொல்லிக் கொடியை நன்றாகப் பார்த்தான். பின்னர் அவன், ''ஓகோ இது பறவையினுடைய அலகினால் அறுபட்டிருப்பதாக விளங்குகிறது'' என்று கூறினான் ; லக்ஷ்மணன் மேலும் ஆராய்ந்து நம் தந்தையார் ஜடாயுவே சண்டை செய்திருக்கக் கூடும்; மேலே நடந்தவை தெரியவில்லை; எனினும் ஜடாயுவே சிறிது தூரம் அவர்களைத் தொடர்ந்து சென்று தடுத்துக்கொண்டிருக்கலாம்; முதியவர் ஆனதால், நாம் விரைவிற் செல்லவேண்டியதே'' என்றான். அவ்வாறே சென்றதும் தமக்கு முன்னர், ஒரு வில் முறிந்து கிடப்பதையும் அதற்கு அப்பால் சூலமும் அம்பறாத் தூணியும் வீழ்ந்திருப்பதையும் கண்டு வியந்தனர். பின்னரும் சிறிது தூரம் செல்ல, அங்கே கவசம் அற்றுக் கிடக்கவும், ஒரு பக்கத்தே, தேர்க் குதிரைகளும் தேர்ப் பாகனும் மாண்டு வீழ்ந்திருப்பதையும், ஒடிந்த தேரின் சின்னங்களையும் பார்த்தார்கள். ஜடாயுவின் வீரத்தை வியந்து புகழ்ந்துகொண்டே போனார்கள்.

அவ்வாறு போதலும், தங்களுக்கு எதிரில், பல ஆபரணங்கள் சிதறிக் கிடப்பதை நோக்கி, ராமன், ''தம்பீ, இவ்வணிகளைப் பார்த்தால், ஜடாயுவுடன் ராக்கதர் பலர் போர் செய்திருக்கலாம்'' என்றான். அதற்கு லக்ஷ்மணன், ''அவர்கள் பலராக இருந்தால், அவரை இவ்வளவு தூரம் இழுத்து வந்திருக்கமாட்டார்கள்;கொடியையும்தேரையும் பார்க்கும்பொழுது, ராவணனே ஜடாயுவுடன் போர் செய்திருப்பான்'' என்று கூறினான். பிறகு, இருவரும் விரைவாக நடந்து செல்லக் கொஞ்ச தூரத்தில், சிறகுகள் அறுபட்டு நிலத்தில் வீழ்ந்து கிடந்த ஜடாயுவைக் கண்டார்கள். உடனே ராமன், ''அந்தோ, தந்தையாரே, எங்களுக்காக எதிரியுடன் சண்டையிட்டு இந்நிலையடைந்தீரோ?'' என்று ஜடாயுவின்மேல் விழுந்து துக்கம் தாளாது மூர்ச்சையடைந்தான். லக்ஷ்மணன் அருகே இருந்த நீரைக் கொணர்ந்து அவன் மூர்ச்சையைத் தெளிவித்தான். தெளிவுற்ற ராமன் ஜடாயுவைப் பார்த்துப் பலவாறு புலம்பினான். லக்ஷ்மணனும் அழுதான்.

இவர்களுடைய அழுகையைக் கேட்ட ஜடாயு, மயக்கம் நீங்கிக் கண்விழித்து இருவரையும் பார்த்தார். பார்த்ததுமே நன்றாகத் தெளிவடைந்து, ''புண்ணிய சீலர்களே! நான் இறக்கும்



சமயத்தில் உங்களைத் தரிசிக்கப்பெற்றேன்; நான் தூய்மையடைந்தேன்; சீதையின் பிரிவு அரக்கர்களின் வஞ்சனையால் நேர்ந்திருக்கும் என்று எண்ணுகிறேன். நீங்கள் சீதையைத் தனியே விட்டுச் சென்றிருந்தீர்களோ?'' என்று வினவினார். லக்ஷ்மணன் நிகழ்ந்தவற்றைக் கூறினான். ஜடாயு, அவர்களைப் பார்த்து, ''மக்களே! நீங்கள் நடந்ததுபற்றி வருந்தவேண்டா;

''அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ?''

என்றவாறு, தேவர்கள் முதல் யாவருமே, விதியினால் துன்பமுற்றிருக்கிறார்கள்; அன்றியும் அரக்கர்கள் ஒழிந்து அறம் நிலைபெறுவதற்கே இப்பொழுது சீதையின் பிரிவு நேர்ந்திருக்கின்றது போலும்; ராவணன் சீதையைத் தொடுவதற்கு அஞ்சியே மண்ணோடு பெயர்த்துக்கொண்டு சென்றிருக்கிறான்; அதனால் அவளுக்கு எத்தகைய இழிவும் நேராது; நான் அவளை மீட்பதற்கு முயன்றேன். அக்கொடியவன் தெய்வ வாளினால் என் சிறகுகளை வெட்டி வீழ்த்தினான். நீங்கள் இரக்கமில்லா அரக்கர்களை மடித்து நலமாக வாழ்வீர்களாக!'' என்று வாழ்த்தினார்.

ராமனுக்கு, ராவணன் செய்த கொடுஞ்செய்கையால் மிக்க சினம் மூண்டது. அதனால் உலகங்கள் அழிந்துபோகும் போல் இருந்தன. அதனை அறிந்த ஜடாயு, ராமனை நோக்கி, ''நீ உலகமெல்லாம் அழியுமாறு சினத்தல் தகாது; ராவணன் மிக்க பலசாலி. ஆகையால், அவன் தேவர்களை அடக்கியாளுகின்றான்; அத்தேவர்களுடைய துன்பம் உன்னால்தான் துடைக்கப்படும். நீ சினங்கொண்டு எல்லாவற்றையும் அழித்துவிட்டால், அரக்கர்களை ஒழிப்பது எப்படி? அறத்தை நிலைநிறுத்துவது எங்ஙனம்? மற்றும், நீயும் உன் தம்பியும் வனத்தில் சீதையைத் தனியே விட்டுச் சென்று, அவளை அன்னியர் கொண்டுபோகக் குலப்பழி அடைந்தீர்கள்; பெண்களைத் தனியே விட்டுச் சென்றால் இத்தகைய துன்பம் நேருவது இயற்கையே. ஆதலின், நீங்கள் துன்பத்தைப் பொறுத்து அக்கொடியோரை வேரறுக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்களாக.''

ராமன், ''தந்தையே! நன்று. உம்முடைய கட்டளைப்படி நான், அரக்கர்களை வதைத்து ஒழிக்கிறேன்; அந்த ராவணன், சீதையைத் தூக்கிக்கொண்டு எங்கே போனான்?'' என்று கேட்டான். அதற்கு மறுமொழி கூறுவதற்குள் ஜடாயு இறந்தார். ராமன் தரிசனத்தால் அவர் மேலான பதம் பெற்றுவிட்டார். ராமனும் லக்ஷ்மணனும் துன்பக் கடலில் ஆழ்ந்தனர்.

பின்னர், ஒருவாறு மனத் தேறுதல் அடைந்த ராமன், ஜடாயுவுக்குப் பிள்ளை போலிருந்து, அவருக்குச் செய்யவேண்டிய ஈமச் சடங்குகளை முறைப்படி முடித்தான். அந்நேரத்தில் சூரியனும் மேற்கில் மறைந்தான்.

9. அயோமுகிப் படலம்

அந்தி நேரம் வந்தது. ராமனும் தம்பியும் அவ்விடத்தினின்றும் நீங்கி ஒரு மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். சற்று நேரத்தில எங்கும் இருள் சூழ்ந்தது. அதன்பின், சந்திரன் உதயமாகவும், ராமனுக்கு சீதையின் நினைவு உண்டாகியது. அதனால், அவன் மிக்க துயரம் கொண்டான். லக்ஷ்மணன் தன் அண்ணனுக்குக் குளிர்ந்த தளிர்களைக் கொணர்ந்து ஒரு படுக்கை அமைத்துக் கொடுத்தான். ராமன் அதனில் படுத்து நித்திரை கொள்ளவில்லை; புரண்டுகொண்டே இருந்தான். அவ்வோரிரவு ஒரு பிரமகற்பம்போல நீண்டு நீண்டு ஒருவாறு கழிந்தது. படுக்கையினின்றும் எழுந்ததும் ராமன், தான் காணும் பொருள்கள் யாவும் சீதையின் அங்கங்களுக்கு ஒப்பாக இருப்பதை உணர்ந்து அவள் நினைவாக வருந்தினான். அவன் நிலையைக் கண்ட லக்ஷ்மணன், ''அண்ணா! நாம் தேவியைத் தேடிச் செல்லப் புறப்படவேண்டும். வருந்தி இருந்து நேரத்தைப் போக்குவது கூடாது'' என்றான்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டுப் பல வனங்களையும் மலைகளையும் நதிகளையும் கடந்தனர். பதினெட்டு யோசனை தூரம் சென்றார்கள். அதுவரையிலும் சீதையைப்பற்றி ஏதும் தெரியவில்லை. அதனால், இருவரும் துயரமும் சினமும் கொண்டு அங்குள்ள ஒரு சோலையிற் போய்த் தங்கினார்கள். அப்போது ஆதித்தன் மறைந்தான். சோலையின் ஒரு பக்கத்தில், முருக்க மரங்களை வேலியாகக் கொண்ட ஒரு பளிங்குக் கற்பாறையும் அதன் அருகே ஓர் அறையும் இருந்தன. இருவரும் அந்தப் பளிங்குப் பாறையின்மீது அமர்ந்தனர். அச்சமயம், ராமனுக்கு நீர் வேட்கை உண்டானதால், லக்ஷ்மணன் நீருக்காக இருளில் நெடுந்தூரம் சென்றும் நீர் இருக்கும் இடம் தெரியவில்லை. அதனால் அவன், காட்டில் பல இடங்களிலும் அங்கும் இங்குமாக திரிந்துகொண்டிருந்தான். அப்பொழுது, அக்காட்டில் வசிப்பவளாகிய அயோமுகி என்ற அரக்கி, எவரும் அஞ்சத்தக்க உருவத்துடன் லக்ஷ்மணன் எதிரில் வந்து நின்றாள். அவள், அவனைப் பார்த்ததும் காமம் மீதூர அவனிடம் தன் எண்ணத்தைக் கூறினாள். அவள் கூறியதைக் கேட்டதும் லக்ஷ்மணன் சினந்து, அந்த அயோமுகியை நோக்கி, ''நீ இங்கே நின்றால் துன்பத்திற்குள்ளாவாய்; விரைவிற் சென்றுவிடு'' என்றான். அவன் சொற்களைக் கேட்ட அரக்கி, ''இவன் நம் கருத்திற்கு இப்பொழுது

இசையமாட்டான்; ஆதலின், இவனைத் தூக்கிக்கொண்டுபோய் நம் குகையில் வைத்துக்கொண்டால், சில நாட்களில் அவனுடைய அகந்தை நீங்க, நம் நோக்கப்படி நடப்பான்'' எனக் கருதி, விரைந்து இளையோனை மயக்கி அவனைத் தூக்கி எடுத்துக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பிவிட்டாள்.

லக்ஷ்மணன் நிலை இவ்வாறிருக்க, தனியாக இருந்த ராமன் நெடுநேரமாயும் நீர் கொணரச் சென்ற தம்பி வராததால் மனம் வருந்தி, அவனுக்கு நேர்ந்தது யாதோ எனப் புலம்பி, ''இனியும் நாம் உயிர் வைத்திருப்பதில் பயனில்லை'' என்று எண்ணித் தன்னைத் தானே மாய்த்துக்கொள்ள யத்தனித்தான். அந்நேரத்தில், அயோமுகியிடம் அகப்பட்டுக்கொண்ட லக்ஷ்மணன் மயக்கம் தெளிந்து சினமுற்று, தன் வாளினால் அவளுடைய மூக்கினையும் காதுகளையும் அறுத்து வீசினான். அதனால் துன்பம் தாளாத அரக்கி, பெருங்கூச்சலிட்டுக் கதறி, லக்ஷ்மணனை விட்டு ஓடினாள். அவள் கதறிய குரல் ராமனுக்குக் கேட்டதால், அவன் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தை விட்டு, ''அரக்கி ஒருத்தியின் அழுகுரல் கேட்கிறது; தம்பியுடன் யாரோ அரக்கர்கள் வந்து எதிர்க்கிறார்கள் போலும்; நாம் விரைந்து போய், தம்பியைக் காப்பாற்றவேண்டும்'' என்று நினைத்து, ஆக்னேயாஸ்திரத்தை எடுத்துச் சுழற்றியவாறு வெளிச்சம் உண்டாக்கிக்கொண்டு தம்பி சென்ற திசையில் ஓடினான். சிறிது தூரம் செல்வதற்குள், லக்ஷ்மணன், ராமன் எதிரே வந்து, ''அண்ணா! கவலைப்படவேண்டாம், நான் வந்துவிட்டேன்'' என்றான். ராமன் கண்ணீர் ஒழுகத் தம்பியைத் தழுவிக்கொண்டான். ''தம்பி! உனக்கு ஏதோ துன்பம் நேர்ந்துவிட்டது என்று நினைத்து, நான் ஓடி வந்தேன்; நடந்தது என்ன? சொல்'' என்று கேட்டான். லக்ஷ்மணன் நிகழ்ந்தவை அனைத்தையும் சொன்னான். அவற்றைக் கேட்ட ராமன், ''தம்பி! இந்த அயோமுகியைக் கொல்லாமல் அவள் அவயவங்களைக் குறைத்துவிட்டு ஓடச் செய்திருக்கிறாய்; நீதியை அறிந்து செய்தனை; நீ வல்லவனே!'' எனப் புகழ்ந்தான்.

பின்னர் இருவரும் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்ததும் இருவரும் வருண மந்திரத்தை ஜபித்து வான கங்கை நீரினை வரவழைத்துப் பருகி விடாய் தீர்த்தனர். பின்னர், விடியும் மட்டும் அச்சோலையிலேயே தங்கி இருக்க நினைத்த அவர்கள் இருவரும் பளிங்குப் பாறையின்மீது அமர்ந்துகொண்டார்கள். சீதையின் பிரிவால் துயரம் கொண்ட ராமன் ஏதும் உண்ணாதிருந்தமையால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அதனால் அவன் விடியும்வரையிலும் சீதையைப்பற்றியே எண்ணிப் பல வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு புரண்டு புரண்டு படுத்திருந்தான். மெல்லப் பொழுது விடிந்தது.

10. கவந்தப் படலம்

சீதையைத் தேடிப் புறப்பட்ட ராமனும் லக்ஷ்மணனும், அன்று நடுப்பகல் நேரத்தில் கவந்தன் என்பவனுடைய வனத்தை அடைந்தார்கள். அக்கவந்தன், தன்னைக் கண்டார் எவரும் அஞ்சத்தக்க உருவமும் செய்கைகளையும் உடையவன். அவன், தனக்கு உணவு வேண்டும்பொழுது ஓர் இடத்தில் உட்கார்ந்து, நெடுந்தூரம் தன் இரு கைகளையும் நீட்டி வளைத்துக்கொள்வான். அதனால் அகப்படுகிற உயிர்ப் பிராணிகள் யாவற்றையும் வாயின் அருகே நெருக்கிக்கொண்டு வந்து விழுங்கிவிடுவான்.

ராமனும் லக்ஷ்மணனும் வனத்தில் வரும்பொழுது, அக் கவந்தன், தன் வழக்கம்போலவே, பல உயிர்க் கூட்டங்களைக் கைகளால் வளைத்துக்கொண்டிருந்தான். அதனால் இவர்கள் அக்கூட்டத்திற் புகுந்து முன்னே செல்லவும் தங்களுக்குப் பின்புறம் பெருங் கூட்டம் திரண்டுவருவதைக் கண்டு, ''நாம் சீதையைத் தேடிவருவதை அறிந்து ராவணன், நம்மை எதிர்ப்ப தற்காகத் தன் சேனைகளை அனுப்பியிருக்கிறான்; அவைகளே நம்மைத் துரத்திவருகின்றன. ஆதலின் அவற்றை இவ்விடத்தி லேயே ஒழித்துவிடலாம்'' என்று மகிழ்ச்சி கொண்ட ராமன், தம்பியை நோக்கி, ''தம்பி! இவைகள் ராவணன் சேனைகளாகத் தோன்றுகின்றன. இவ்வாறு திரண்டு வருவதால், அந்த ராவ ணன் இருக்கையும் அருகிலேயே இருப்பதாகும் என்று எண்ணு கிறேன்; அவ்விதம் இருந்தால், விரைவில் நம்முடைய துன்பம் தீரலாம்'' என்றான்.

அதற்கு லக்ஷ்மணன், 'அண்ணா! இவைகள் படைகளாக இருந்தால் போர்ப் பறையின் முழக்கம் கேட்கும்; அம்முழக்கம் இல்லையே. இது வேறு வகைக் கூட்டமாக இருக்கலாம்' என்று கூறிக் கூட்டம் வருகிற நான்கு பக்கங்களையும் நன்றாக உற்றுப் பார்த்தான். அவ்வாறு பார்க்கவும், கவந்தனுடைய கைகள், கூட்டத்திற்குப் பின்புறமும் பக்கங்களிலும், பாம்புபோல் வளைந்து வருவது கண்டு பாம்பென்றே எண்ணி, ராமனைப் பார்த்து, ''அண்ணா, வாசுகி என்ற பெரும் பாம்பிற்கு ஒப்பான ஒன்று, தலையையும் வாலையும் சேர்த்து, உடலை வட்டமாக வளைத்து, அவ்வளைவிற்குள் அகப்பட்ட உயிர்த் தொகுதிகளை அப்படியே விழுங்குவதற்குத் திரட்டி வாயின் பக்கத்தில் நெருக்கிக்கொண்டு வருகிறது'' என்றான்.


அவன் கூறியதைக் கேட்ட ராமன், ''தம்பி, நீ சொல்வதும் சரியே; இதனால் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்'' என்று மேலும் மூன்று யோசனை தூரம் முன்னே சென்றார்கள். அவ்வாறு சென்று பார்க்க, பெரும் பூதம் போன்ற ஓர் உருவம்,

இரண்டு சூரியர்கள் என விளங்கும் கண்களும், கடல் போன்ற வாயும், வளைந்த பற்களும் வாசுகியைப் போன்ற கைகளும், மேருமலையைப் போன்ற வயிறும் உடையதாய் அமர்ந்திருப் பதைக் கண்டார்கள். அதனைக் காணலும், லக்ஷ்மணன், ''அண்ணா ! நாம் இதனைப் பாம்பு என்று எண்ணினோமே! இது ஒரு பெரும் பூதமே ; இது தன் வயிற்றிற் போட்டுக்கொள்ளுதற் காகவே, இவ்வாறு தன் கைகளால் உயிர்களைத் திரட்டிக் கொண்டு வருகின்றது ; அவ்வுயிர்க் கூட்டங்களுடன் நாமும் சிக்கிக்கொண்டிருக்கிறோம்'' என்றான்.

ராமன், ''தம்பி ! அப்படியானால், பலவிதத்திலும் பழிக்கு ஆளாக இருக்கும் நான், இப்பூதத்தின் வயிற்றினுள்ளே புகுந்து என் உயிரைப் போக்கிக்கொள்ளுகிறேன் ; நீ திரும்பி நகரத்திற் குச் செல்வாயாக'' என்று கூறினான். இச்சொற்களைக் கேட்ட தும் லக்ஷ்மணன் மிகவும் வருந்தி, ''அண்ணா ! தாங்கள் இவ்வாறு கூறுவது சரியோ ? நீங்கள் உயிரிழக்க நான் மட்டும் பிழைத்துப் போவதா ? மிக்க வல்லமையையுடைய தாங்கள், அற்பமான ஒரு பூதத்தால் இறந்துபோகிறேன் என்பது இழிவாகாதோ ? நம் வலிமைக்கு இது எம்மாத்திரம் ? நானே இப்பூதத்தினுடைய வாயைப் பிளந்து அதன் கரங்களையும் வெட்டித் தள்ளுகிறேன், பாருங்கள்'' என்று சொல்லி முன்னே நடந்தான். ராமன், ''தம்பி ! நானே சென்று அவ்வாறு செய்கிறேன் ; நீ செல் லாதே'' என்று தம்பிக்கு முன்னே சென்றான். இவ்வாறாக இருவரும், ''நான் முன்னே செல்லுகிறேன், நான் முன்னே செல்லுகிறேன்'' என்று கூறிக்கொண்டு, முன்னும் பின்னுமாக மாறி மாறித் தன் அருகே வந்த இருவரையும் கண்டு, பூதம் போன்ற கவந்தன், சினம் கொண்டு, ''நீங்கள் யாவர் ?'' எனக் கேட்டான். இருவரும், அவன் கேள்விக்கு விடை கூறாமல் தைரியத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். அவ் விதம் நிற்பதைக் கண்ட கவந்தன், ''இவர்கள் நம்மை அசட்டை செய்கிறார்கள். இவர்களை சும்மா விடக்கூடாது ; இவர்களை எடுத்து விழுங்கிவிடவேண்டும்'' என்று எழுந்திருந்தான். அப்பொழுது, ராமனும் லக்ஷ்மணனும் மேலே எழும்பித் தம் வாளினால், அவனுடைய இரண்டு கைகளையும் வெட்டிவிட்டார் கள்.

ராமனுடைய ஸ்பரிசம் படவும் சாபம் நீங்கித் தன் பழைய உருவத்தை அடைந்த கவந்தன், ராமனை,

''ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
ஓதி யுறுபொருளுக் கப்பாலுண் டாயினுநீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார் ?''



எனப் பலவாறு அவன் துதிப்பதைக் கேட்ட ராமன், தம்பியை நோக்கி, ''இவன் வேறு வடிவத்துடன் ஞானம் பெற்றவனக விளங்குகின்றான்; ஆதலின், இவனை, நீ யாவன் என்று கேள்'' என்றான். லக்ஷ்மணனும் அவனைக் கேட்டான். கவந்தன், ''முன்னர் நான் 'தனு' என்னும் பெயருடையவன்: ஒரு கந்தருவன் கொடுத்த சாபத்தினல் இவ்வடிவம் பெற்றேன். இத்தகைய செயலில் ஈடுபட்டேன்; அக்கந்தருவன் அருளியபடி உங்கள் கரம் பட்ட மாத்திரத்தில் என் பழைய வடிவம் எய்தினேன்; நீங்கள் புண்ணியசீலர்களான சிறந்த வீரர்கள். உங்களுக்கு ஒப்பான வீரர் ஒருவரும் இல்லை. இப்பொழுது நீங்கள் சீதாதேவியாரைப் பிரிந்து அவரைத் தேடிவருவதும், அரக்கர்களை ஒழிக்க எண்ணியிருக்கிறதும் எனக்குத் தெரியும்; நீங்கள் எண்ணியதை முடிக்கும் வன்மையுடையவர்களே; எனினும், எத்தகையினருக்கும் எடுத்த காரியத்தை முடிக்க ஒரு நல்ல துணை வேண்டும்; ஆதலின், அருகிலேயே, சவரி என்ற மெய்யன்புடைய ஒரு பெண் தவசி இருக்கின்றாள்; அவளிடம் நீங்கள் சென்றால், உங்களுக்கு நல்ல துணைவரை அடையும் வழியைக் கூறுவாள்; அவள் சொற்படி ரிசியமுக மலையை அணுகி, சூரியன் மைந்தனான சுக்ரீவனை நட்புக் கொண்டு தேவியைத் தேட முயலுங்கள்'' என்று சொல்லி, ராமனையும் தம்பியையும் வலம் வந்து வணங்கிக்கொண்டு அவர்களிடம் விடை பெற்று வான வழியே சென்றான்.

பின்னர், இருவரும் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்று, சூரியன் அஸ்தமிக்கும் தருணத்தில் மதங்க முனிவர் ஆச்ரமத்தை அடைந்தார்கள்.

11. சவரி பிறப்பு நீங்கு படலம்

ராமனும் லக்ஷ்மணனும் வந்து சேர்ந்த மதங்க முனிவரின் இருக்கை ஒரு சோலையில் அமைந்திருந்தது. அங்குத் துறவு பூண்டிருந்த சவரி என்பவளைக் கண்டார்கள். அவள் ராமனைக் கண்டதும், இன்பம் பெருகும் கண்ணீருடன், அவனை நோக்கிப் பலவாறு துதித்தாள். ராமன் மிகவும் மகிழ்ச்சியுற்று, சவரியை நோக்கி, ''அம்மையே! நின் துதித்தலைக் கேட்டுப் பரவசமெய்தினேன்; நீ சுகமாயிருக்கின்றாயா?'' என்று வினவினான். அதற்குச் சவரி, ''இறைவனே! நான் செய்த தவத்தின் பயனால் நீங்களிருவரும் என் முன் தோன்றிக் காட்சி அளித்தீர்கள்; இனி எனக்கு நற்பதவி கிட்டும் என்பதில் ஐயமில்லை'' என்று வணங்கி, அவ்விருவரையும் தன் இருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனாள்.


அப்போது, கௌரி மணாளனும், நான்முகனும், தேவேந்திரனும், சவரியை அணுகி, அவளைப் பார்த்து, ''அம்மணி! உன்

தவத்திற்குப் பயன் கிடைத்துவிட்டது; நீ ராமபிரானுக்கு வேண்டிய உபசாரங்களையும் பூசனைகளையும் செய்து முத்தியடைவாயாக'' என்று கூறிச் சென்றார்கள்.


அதன் பிறகு, சவரி, ராமனை நோக்கி, ''ஸ்வாமியே! நீர் எனக்கு, என்றைக்குக் காட்சி அளிப்பீரோ என நான் எதிர் பார்த்துக்கொண்டே இருந்தேன்; என்னுடைய விருப்பம் இன்று நிறைவேறிற்று'' என்று சொல்லி ராமனை வலம் வந்து வணங்கினாள். அவளுடைய அன்பினைக் கண்ட ராமன், உன் தவத்தை அறிந்து களிப்படைந்தேன். அன்றியும், நாங்கள் உன்னைக் கண்டதால் எங்கள் மனத்துயரும் நீங்கிற்று'' என்றான்.

ராமனுடைய இன்சொற்களைக் கேட்ட சவரி நல்ல கனி வகைகளைக் கொணர்ந்து வைத்து, ராமனையும் லக்ஷ்மணனையும் உண்ணும்படி வேண்டினாள். இருவரும் அவற்றை உண்டு இளைப் பாற்றிக்கொண்டு அவள் விருப்பப்படி அன்று அவ்விடத்திலேயே தங்கி இருந்தார்கள். பிறகு ராமன் வினவியபடி, சுக்ரீவன் வசிக்கும் குன்றினை அடையும் மார்க்கத்தைக் கூறினாள். ராமன் அதனைக் கருத்தில் கொண்டு, சுக்ரீவனைக் காணும் ஆவலுடன் இருந்தான். அப்பொழுது. சவரி தன் யோகபலத்தால் உடலை நீத்து, முத்தி உலகிற்கு ஏகினாள். பின்னர் ராமனும் லக்ஷ்மணனும் சவரி குறித்த நெறியைத் தேடிக் காடுகளும் மலைகளும் கடந்து புண்ணியம் என்னும் ஒரு பொருள் உருகி ஓடிவருவது போற் காட்சியளித்த பம்பை என்னும் பொய்கையை அடைந்தார்கள்.

ஆரண்ய காண்டம் முற்றிற்று



கிஷ்கிந்தா காண்டம்



காப்பு

"மூன்றுரு எனக்குணம் மும்மை யாமுதல்
தோன்றுரு எவையுஅம் முதலைச் சொல்லுதற்(கு)
ஏன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவும்
சான்றுரு உணர்வினுக்(கு) உவந்த தாயினன்."

[**மூன்று உரு என** : அயன், அரி, அரன் என மூன்றாகிய உருவங்கள் என்று. **குணம் மும்மையாம்** : படைத்தல், காத்தல், சங்கரித்தல் ஆகிய குணங்கள் மூன்றும். **அ முதல்** : அந்த முதலாகிய ப்ரக்ருதி. **ஏன்று** : இயன்று.]

1. பம்பைப் படலம்

சூரியன் வானத்தில் உச்சியை அடைந்தான். அந்நடுப் பகல் நேரத்தில் ராமனும் லக்ஷ்மணனும் பம்பையாற்றின் கரை வழியே நடந்து சென்றனர்; பலவிதமான சிறப்புக்களைக் கண்டனர். அவை ராமனது மனத்தில் பல நினைவுகளை உண்டாக்கின. அவனது நிலையைக் கம்பர்,

"அன்ன தாகிய அகன்புனற் பொய்கையை அணுகிக்
கன்னி அன்னமும் கமலமும் முதலிய கண்டான்
தன்னின் நீங்கிய தளிரியற்(கு) உருகினன் தளர்வான்
உன்னு நல்லுணர்வு ஒடுங்கிடப் புலம்பிடல் உற்றான்."

[**புனல்** : நீர். **பொய்கை** : மானிடர் ஆக்காத நீர்நிலை. **தளிர் இயற்கு** : தளிர் போன்ற இயல்பினுடைய சீதைக்கு. **உருகினன்** : மனம் கரைந்த ராமன்.]

என்கிறார்.

அங்கே, இளம் அன்னப் பேடுகளும், மானினங்களும், செந்தாமரை மலர்களும், மற்றும் காணப்பட்ட எல்லாப் பொருள்களும் சீதையின் நடைக்கும் அவளுடைய அவயவங்களுக்கும் ஒப்பாக விளங்கின. அதுகாலையில் ராமனுக்குச் சீதையின் நினைவு உண்டாயிற்று. எனவே, அவன் நல்லுணர்வு ஒடுங்கிப் பலவாறு புலம்பி வருந்தினன்.

அண்ணனுடைய துன்பத்தைக் கண்ட அன்புத் தம்பியான லட்சுமணன், "அண்ணா! தாங்கள் இவ்வாறு புலம்பி வருந்துவதற்கு இது சமயம் அன்று; பொழுது கடந்துகொண்டிருப்பதால், விரைவில் நதியில் நீராடிவிட்டு மாலைக்காலத்திற் செய்யும் கடன்களை முடித்துக்கொள்ளுங்கள்" என்றான்.

ராமன் சிறிது தெளிவடைந்து தம்பி கூறியபடியே பம்பையில் இறங்கி நீராடி, மாலை வேளைக் கருமங்களைச் செய்து முடித்தான். பின்பு அவர்கள் அருகே இருந்த சோலைக்குச் சென்று ஒரு குளிர்ந்த இடத்தில் தங்கியிருந்தார்கள். சிறிது நேரத்தில் அந்திக்காலம் தோன்றி எங்கும் இருள் சூழ்ந்தது. அக்காலத்தில், லக்ஷ்மணன் அமைத்துக் கொடுத்த புற்களால் ஆகிய பாயலில் ராமன் படுத்தான்; சராசரங்களெல்லாம் துயிலத் தான் மட்டும் துயிலாது துன்பக் கடலில் மூழ்கினவனாய் இருந்தான். தன் அருமைத் தமையனின் துன்பத்தைக் கண்ட தம்பியும் உறக்கம் கொள்ளாது ஏங்கி இருந்தான். இங்ஙனம் இருவருக்கும் துன்பத்தைக் கொடுத்து வந்த அந்த இரவு நீங்கச் சூரியன் உதயமானான். இருவரும் எழுந்து தம்முடைய காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தென் திசை நோக்கிப் புறப்பட்டு நீண்ட தூரம் நடந்து சென்றனர்.

2. அநுமப் படலம்

ராமனும் லக்ஷ்மணனும் மலையின்மீது ஏறிவரும்பொழுது, அங்கே வசித்துக்கொண்டிருந்த வானவர் தலைவனான சுக்ரீவன் அவ்விருவரையும் பார்த்தான். ''இவர்கள் யாரோ பகைவர்கள் போலும்!'' என்று நினைத்துச் செய்வதொன்றும் அறியாது அச்சம் கொண்டு, பிழைத்தால் போதும் என அருகே உள்ள குகையிற் புகுந்துகொள்ள விரைந்து ஓடினான். அங்ஙனம் ஓடுகின்றவன், அநுமனை விளித்து, ''வாயு மைந்தனே! அதோ மலையின்மேல் ஏறிவருகின்ற இருவரையும் பார்ப்பாயாக. அவர்கள் வாலியின் ஏவலால் நம்மைத் தாக்க வருகின்றார்கள்போல் தோற்றுகின்றனர்; நீலமலை போன்ற அவர்கள் தம் கரங்களில் வில்லினை ஏந்தியவர்களாயுள்ளனர். ஆதலின், நீ அவர்களை நன்றாக ஆராய்ந்து வருக'' என்று கூறி குகையினுட் புகுந்து மறைந்துகொண்டான்.

சுக்ரீவன் காட்டிய இருவரையும் பார்த்த அநுமன், சுக்ரீவனையும் ஏனையோரையும் பார்த்து, ''நீங்கள் அஞ்சாதீர்கள்; நான் அவர்களை அடைந்து, யாவர் என்று தெரிந்து வருகின்றேன்'' என்று கூறினான். பின்பு அஞ்சனைக் குமாரனாகிய அநுமான், மலையின்மீது ஏறிவருகின்ற அவ்விருவருக்கும் எதிரே பிரம்மச்சாரி வேடங்கொண்டு சென்றான். சிறிது தூரம் கடந்ததும் அவர்களை நன்றாகப் பார்த்து யாவரென்று ஆராயத் தொடங்கினான்.

பின்னர், 'இவர்கள் தேவர்களுக்கெல்லாம் முதல் தேவர்களான மும்மூர்த்திகளோ! ஆயின் இவர்கள் இருவராக இருக்கிறார்கள்! கரங்களில் வில்லினை ஏந்தியுள்ளார்கள்; இவர்களுடைய உருவமோ எனின், தேவ வடிவமுள்ள தவக்கோலத்துடன் விளங்குகின்றது; அப்படியாக இவர்கள் யாராயிருப்பார்கள் ?' என்று



அநுமன் சிந்தித்தான்; சிறிது அவர்களுக்கு அருகிற் சென்றான்; ஒரு பக்கம் மறைந்து நின்று அவர்களுடைய தன்மையை அறியும் பொருட்டு மீண்டும் அவர்களை உற்று நோக்கினான். 'இவர்கள் வானவர்கள் அல்லர்; மானிடரேயாவர். தருமத்தையும், மற்ற நல்லொழுக்கத்தையும் இவர்கள் தனமாகவுடையோர் ஆதலின் வேறு பொருள் கருதி வந்தவர்களுமல்லர். எனினும், இவர்களுக்கு உரிய தான ஏதோ அரிய பொருளொன்றை இழந்து, அதனைத் தேடி வருபவர்போல் தோற்றுகின்றனர்; அன்றியும், இவர்கள் சினம் அற்றவர்களாகவும், பிறர்க்கு உதவும் பண்பினராகவும், மன்மதனைக் காட்டிலும் அழகுடையோராகவும், சிறந்த வீரர்களாகவும் காணப்படுகின்றனர்' என்று எண்ணி இருவரையும் அன்போடு பார்த்து முன்னம் பிரிந்த உயிர்த்துணைவரைக் கண்டாற்போன்று பேருவகை கொண்டு நின்றான். மயில் முதற் பறவைகள் யாவும் அவர்கட்கு வெயில் வருத்தம் தோன்றாதவாறு சிறகுகளால் பந்தரிட்டுவருவதையும் அசரப் பொருள்களும் அவர்களை வணங்குவதே போல் காணப்படும் தன்மையையும் கண்டு, 'இவர்கள்தான் தருமமோ? என ஐயுற்றான். பின்னர், 'இவர்களைக் காணும்போது என்பும் நெக்குருகின்றது; இயல்பாகவே இவர்கள்பால் அன்புண்டாகிறது;இதன் காரணம் யாதோ?'எனப் பலவாறு ஆராய்ந்து எண்ணி அவர்கள் எதிரில் சென்று, ''நும் வரவு நல்வரவாகுக'' என்றான்.

ராமன், அநுமனை நோக்கி, ''நீ யாவன் ?'' என்றான்.

உடனே அநுமன், ''ஸ்வாமி! என் தந்தை வாயுதேவர்; தாய் அஞ்சனாதேவி; என்னை அநுமன் என்பார்கள்; இந்த மலையில் வசிக்கும் சூரியன் மைந்தனான சுக்ரீவனுக்கு ஏவல் செய்பவன்; அவர் உங்களைக் கண்டு யாவர் என்று கேட்டு வரும்படி என்னை அனுப்பினார்; நான் வந்தேன்'' என்றான்.

அநுமன் கூறிய உரைகளை ராமன் கேட்டு, ''இந்த அநுமனைக் காட்டிலும் சிறந்தவர் எவருமில்லை'' என்று தேர்ந்து இளையோனைப் பார்த்து, "தம்பி !

''இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளையவீர விரிஞ்சனோ விடைவல் லானோ.''

[இசைகள் கூர : கீர்த்தி மிகும்படி. சொல்லின் செல்வன்: அநுமன். விரிஞ்சன் : பிரமன். விடை வல்லான் : சிவபிரான்.]

மேலும், இவனுடைய ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் அளவிடற்கு அரியவையாக இருக்கின்றன; இவன்

கொண்ட இவ்வடிவம் இவனுக்கு உரியது அன்று; வேறோர் உயர்ந்த வடிவம் இவனுக்கு உள்ளது என்று அறிகிறேன்'' என்று கூறினன்.

பிறகு அநுமனிடம் திரும்பி, "உன் தலைவன், சுக்ரீவன், எங்கே இருக்கின்றான்? நாங்கள் அவனைக் காணும் விருப்பத்தால் தான் இங்கே வந்தோம்; எங்களுக்கு அவனைக் காட்டுவாயாக'' என்றான்.

அதற்கு அநுமன், ''மலைபோன்று உயர்ந்த தோள்களை யுடைய வீரர்களே! உங்களைப்போன்ற நல்லவர்கள் இவ்வுலகத்தில் இல்லை; நீங்கள் சுக்ரீவனைக் காண்பதற்காக அன்போடு வந்திருக் கிறீர்கள்; அவன் செய்த தவமே தவம்! சூரியன் மைந்தனுகிய சுக்ரீவன், இந்திரன் மைந்தனுகிய வாலியால் துரத்தப்பட்டு, இம்மலையில் ஒளிந்து வசிக்கின்றான். நீங்கள் வந்ததால் இப்போது அவன் இழந்த செல்வத்தைப் பெறுவான். தானம், தவம், வேள்வி முதலிய பல அறங்களிலும், சரணம் அடைந்தவரைக் காத்தலே தலைசிறந்த அறமாகும். எங்கள் சுக்ரீவனைக் காப்பது உங்களுக்கு எளிதே ஆகும்; உங்களை இன்னாரென்று அறிய அவர் ஆவலாயிருப்பதால் நீங்கள் யாவர் என்று எம் தலைவருக்குத் தெரிவிக்கவேண்டும்; சொல்லியருள்வீராக'' என்றான். லக்ஷ்மணன் தங்கள் வரலாற்றையும், தாங்கள் அங்கே வந்த காரணத்தையும் விளக்கினன். அவன் கூறியவைகளைக் கேட்டதும் அநுமன் விரைந்து வந்து ராமனுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன்.

அப்போது, ராமன், அவனைப் பார்த்து, ''மறையோய், என்னை வணங்குதல் தகுமா? தகாத காரியம் செய்தனையே!'' என்றான். அநுமன், ''ஸ்வாமி! நானும் குரங்கினத்தைச் சார்ந் தவனே; தங்களை யாவர் என்று தெரிந்துகொள்வதற்குமுன், என் மெய்யுருவினைக் காட்டக்கூடாதென்று எண்ணியே இவ்வுருவம் கொண்டேன். என்னுடைய உண்மை உருவைக் காட்டுகிறேன், பாருங்கள்'' என்று சொல்லி, மிகப் பெரிய வானர உருவோடு வானளாவ நின்றான். அவனுடைய அந்தப் பேருருவினைக் கண்ட தும் ராமன் வியந்தான். லக்ஷ்மணனை நோக்கி, ''தம்பி! நான் மறைகளாலும் அறிய இயலாத அந்தப் பரமபதமே இக்குரங்கு வடிவெடுத்தது போலும்; நாம் இவ்வுருவத்தைப் பார்த்தது, நமக்கு நல்ல நிமித்தமேயாகும்; இந்நிலையிலுள்ள இவன் சேர்க்கை யால் நமக்கு இனித் துன்பம் என்பது இல்லாது இன்பமே எய்தும். இத்தகைய மகாவீரனை ஏவலனுக அடைந்திருக்கும் அந்த சுக்ரீவன் பெருமையை என்னவென்று உரைப்பது? அவனுடைய துணையும் நமக்கு வேண்டியதே'' என்று அகமகிழ்ந்து முகமலர்ச்சியுடன் கூறினன்.

பின்னர், அநுமன் தன் பேருருவினைச் சுருக்கிக்கொண்டு, அவ்விருவரையும் நோக்கி, ''நீங்கள் சற்று நேரம் இங்கேயே இருங்கள்; நான் சென்று என் தலைவரான சுக்ரீவ மன்னரை அழைத்துவருகிறேன்'' என்று அவர்களிடம் விடை பெற்றுச் சென்றான்.

3. நட்புகோட் படலம்

ராமனையும் லக்ஷ்மணனையும் காணச் சென்ற அநுமன், அவ்விருவருடைய வரலாறுகளையும் அறிந்துகொண்டு சுக்ரீவன் முதலியோர் இருக்கும் இடத்தை அடைந்தான். அவன் சுக்ரீவனை நோக்கி, ''மலையின்மீது வருபவர் நம் பகைவர் அல்லர்; அந்த உத்தமர்களால் இனி, தாங்களும் தங்கள் குலத்தினரும் யானும் இவ்வுலகத்திலுள்ளோர் யாவரும் உய்யும் வழியினை அடைந்தோம்; இனி நமக்கு அச்சம் இல்லை'' என்று கூறி உள்ளக் களிப்பால் கூத்தாடினான்.

சுக்ரீவன், அநுமன் கூறியவற்றைக் கேட்டு அச்சம் நீங்கி ஆனந்தம் அடைந்து, ''நீ கூறிய அவ்விருவரும் யாவர்?'' என்று கேட்டான். அதற்கு அநுமன், ''தலைவரே! அந்த இரு வீரர்களும், உலகத்தை எல்லாம் தன் வலிமையால் ஒரு வழிச் செல்லும்படி அரசாட்சி செய்த தசரத மன்னரின் மைந்தர்கள்; அவர்கள் பேரறிவும் அழகும் உடையவர்கள்; அவ்விருவருள் மூத்தவரான ராமர், மிக எளிதாக உங்கள் பகைவனான வாலியைக் கொன்று தங்களுக்கு அரசைத் தரக்கூடியவர்; நீதியையும், தம்மை அடைந்தவரை ஆதரிக்கும் கருணையையும் கொண்டவர் அவர், விசுவாமித்திர முனிவரால் அளிக்கப்பட்ட பல தெய்வப் படைக் கலங்களைப் பெற்று, அம்முனிவரின் ஏவலின்படி கொடிய தாடகை என்ற அரக்கியையும், வேறு பல அரக்கர்களையும் கொன்றிருக்கிறார்; கல்லுருவான அகலிகையின் சாபத்தை நீக்கிப் பழைய உருவம் அடையச் செய்திருக்கிறார். சிவபெருமானுடைய 'திரியம்பகம்' என்ற வில்லினை வளைத்து ஒடித்துச் சீதாபிராட்டியாரை மணந்துள்ளவர்; வலிமை மிக்க மழுவினை ஏந்திய பரசுராமன் உரத்தை ஒடுக்கியவர்; தந்தையின் சொல்லாகச் சிற்றன்னை இட்ட கட்டளையால், தம் அரசச் செல்வத்தை தம்பிக்குக் கொடுத்து, வனத்தை நாடி வந்தவர்; மிகுந்த வலிமையும் கொடுமையும் உள்ள அரக்கர்களான விராதன், கரன், மாரீசன், கவந்தன் ஆகியோரை வதைத்து, முனிவர்களின் துன்பத்தைப் போக்கியவர்; இத்தகைய பெரு வீரரும், கருணையுடையோருமான ராமரை நன்கு உணராமல், ராவணன் அவர் தேவியாராகிய சீதாபிராட்டியை வஞ்சகமாக எடுத்துச் சென்றான். அதனால், அவரும், தம்பியான லக்ஷ்மணனும் தேவியாரைத் தேடிக்கொண்டு

வந்துள்ளார்கள்; தங்களேயும் பார்க்க ஆவலுடையவர்களாக இருக்கின்ருர்கள்; ஆதலில், தாங்கள் தாமதியாது அந்த ராம பிரானேக் காணுதற்கு விரைவீராக'' என்று கூறினன்.

அநுமன் கூறியவற்றை எல்லாம் கேட்ட சுக்ரீவன், அவனே அன்போடு தழுவிக்கொண்டு, ''உன்னேத் துணைவனுகப் பெற்ற எனக்கு அருமையானது என்பது உண்டோ?'' என்று புகழ்ந்து, அக்கணமே அநுமனுடனே புறப்பட்டுச் சிறிது தூரம் சென்று ராமன், லக்ஷ்மணன் ஆகியோரின் திருவுருவங்களேக் கண்டு வியப் புற்றுப் பலவாறு புகழ்ந்தவனுய் அவர்கள் அருகிற் போய் வணங் கினன். ராமன் சுக்ரீவனே வரவேற்று அன்போடு அவனேயும் அநுமனேயும் தன் அருகே அமரும்படிக் கூறினன். அவ்வாறு அமர்ந்ததும் சுக்ரீவன் ராமனே நோக்கி, "ஸ்வாமி! உலகங்களுக் கெல்லாம் தலேவரான தங்களுடைய நேயம் எனக்குக் கிடைத்த தற்கு நான் என்ன புண்ணியம் செய்தேனே? நான் பெற்ற பேறு யார் பெற்ருர்கள்?'' என்று கூறி இன்புற்ருன்.

ராமன், அவனே நோக்கி, "அன்புடையோனே! நாங்கள் சீதையைப் பிரிந்தோம். அவளேத் தேடிக்கொண்டு வந்திருக்கின் ருேம்; எங்கள் துன்பத்தை உன் உதவியால் போக்கிக்கொள்ளக் கருதி நாங்கள் உன்னே அடைந்தோம்'' என்ருன். அப்போது சுக்ரீவன், ''ஸ்வாமி! நான் இனித் தங்களிடம் தஞ்சமானேன்; நான் சென்ற இடமெல்லாம் தொடர்ந்து வந்து, என்னேக் கொல்லக் கருதிய என் முதல்வனுன வாலிக்கு அஞ்சி, இந்த மலேயையே அரணுகக் கொண்டேன்; மதங்க முனிவரின் சாபத் திற்கஞ்சி வாலி இங்கு வாரான்; அதனுல்தான் இதுவரை என் உயிர் இந்த உடலில் இருக்கின்றது. அடியேனேக் காத்தல் தங்கள் தருமமாகும்'' என்ருன். ராமன் அவன்மீது இரக்கங்கொண்டு, அவனேப் பார்த்து, "கவிக்குலத் தலேவனே! உனக்கு இப்பொழு துள்ள துன்பங்களேயும் இனிவரும் துன்பங்களேயும் நான் போக்கு கிறேன்; ஆதலின் நீ உன் கவலேயை ஒழிப்பாயாக'' என்ருன். ராமன் சுக்ரீவனுக்குக் கூறிய பான்மையைக் கம்பர்,

''மற்றினி உரைப்ப(து) என்னே
வானிடை மண்ணின் நின்னேச்
செற்றவர் என்னேச் செற்ருர்
தீயரே எனினும் உன்னே(டு)
உற்றவர் எனக்கும் உற்ருர்
உன்கிளே எனதென் காதல்
சுற்றமுன் சுற்றம் நீயே
இன்னுயிர்த் துணேவன் என்ருன்.''

[வான் இடை: வானுலகத்தில். மண்ணின்: பூவுலகத்தில். செற்றவர்: பகைத்தவர். கிளே: உறவினர்.]

என்று பாடியுள்ளார்

எக்குலத்தோரும் ஏற்கத்தக்கவையாயும், வேதங்களைக் காட்டிலும் மெய்யானவையாயும் உள்ள ராமன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட வானர சேனைகள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன ; அநுமனுடைய மேனியைப் போர்த்த ரோமங்கள் சிலிர்த்தன ; விண்ணவர்கள் மலர்களை மாரிபோல் பொழிந்தனர் ; மேகங்கள் நீரை முத்துக்களைப்போல் சொரிந்தன.

அப்பொழுது அஞ்சனை மைந்தனுன அநுமன் எழுந்து, தன் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு ராமனை நோக்கி, ''ஸ்வாமி ! தாங்களும் தம்பியரும் எங்கள் மாளிகைக்கு எழுந்தருளவேண்டும்'' என்று இறைஞ்சினுன். ராமன், அவன் வேண்டியதற்கு இசையவே யாவரும் எழுந்து சென்று அங்குள்ள ஒரு சோலையில் அமைக்கப் பட்டிருந்த சுக்ரீவன் மாளிகையை அடைந்தார்கள். உள்ளே சென்று அங்கே இருந்த பூவணையின்மீது ராமனும் சுக்ரீவனும் அமர்ந்து அளவளாவுவராயினர். பிறகு சுக்ரீவன் கட்டளைப்படி வானரர்களிற் சிலர், கந்தமூலங்களையும் காய்கனிகளையும் கொண்டுவந்து வைத்தார்கள். சுக்ரீவன் வேண்டுதலால் ராமனும் நீராடிவிட்டு அக்கனிவகைகளை இனிதாக உண்டனர்.

பின்பு ராமன் ஏதோ சிந்தித்தவாறு சுக்ரீவனை நோக்கி, ''அன்ப! நீயும் என்னைப்போல உன் மனைவியைப் பிரிந்து துயர் அடைந்துள்ளாயோ?'' என்ருன்.

ராமன், சுக்ரீவனை அவ்வாறு கேட்டதும் சிறிது ஒதுங்கி அமர்ந்திருந்த அநுமான் எழுந்து தன் கரங்களைக் கூப்பிக்கொண்டு ராமனைப் பார்த்து, ''நீதியுள்ளவரே! அளவில்லாத வலிமையைப் பெற்ற வாலி என்ற ஒருவன் உள்ளான்; அவன் சிவபிரானிடம் சிறந்த வரங்களைப் பெற்றவன். அவன், நிலம், நீர், நெருப்பு காற்று என்பனவாகிய நால்வகைப் பூதங்களினுடைய வலிமையைப் போன்று, கடலையும், மலைக்கு மலை தாவும் ஆற்றலையும் உடையவன். அவனுடன் எவரேனும் எதிர்த்தால், எதிர்த்தவருடைய வலிமையில் பாதி அவனுக்கே வந்து சேரும். அத்தகைய வாலியினுடைய வால் செல்லுமிடத்தில் ராவணனுடைய கோலும் செல்லாது ; ஏனென்ருல், அந்த வாலி, ஒரு காலத்தில் ராவணனைத் தன் வாலினல் தோளோடு பிணித்துக்கொண்டு உலகமெங்கனும் சுற்றிவந்திருக்கிருன். அவன் எழுபது வெள்ளம் வானர சேனைகளுக்குச் சொந்தமானவன் ; அவன் இந்திரனுக்கு மைந்தனுய் ஒரே தாய் வயிற்றில் இந்தச் சுக்ரீவனுக்குமுன்னே தோன்றியவன். வெண்மையான உடலினன். முன்னே, எங்களுக்கு அரசனுக இருந்தவன்.

''அப்பொழுது அவன் தம்பியான சுக்ரீவன் இளவரசனுக இருந்தான். இவ்வாறு இவர்கள் ஒற்றுமையாக இருக்குங்

காலத்தில், இவர்கள் குலப்பகைவஞன ஓர் அவுணன், வாலியின் முன் தோன்றினுன். அவுணனும் வாலியும் கடுமையாகப் போர் செய்யும்பொழுது, அவுணன் தோற்று ஓடினுன். வாலியும் அவனை விடாமல் தொடர்ந்து சென்ருன். வாலி, தன்னைத் துரத்திவருவதை அறிந்த அவுணன், பாதாளத்திற்குச் செல்லும் ஒரு பிலத்திற் புகுந்தான். அது கண்ட வாலி, சுக்ரீவனைப் பார்த்து, 'நான் பிலத்தினுள்ளே புகுந்து அவுணனை மடித்து விட்டு விரைவில் வருகின்றேன். நான் வரும்வரை நீ இப்பிலத் தின் வாயிலைக் காத்திரு' என்று கூறிவிட்டு அதனிற் புகுந்து போனுன். பிலத்துட் சென்ற வாலி இருபத்தெட்டு மாதங்கள் வரையில் வரவில்லை; சுக்ரீவன் மிகவும் வருந்தினுன். அவன் வருத்தத்தைக் கண்ட நானும் ஏனையோரும் அவனுக்குத் தேறு தல் சொல்லி, வாலியின் அரசைத் தாங்கி ஆட்சி புரியுமாறு வேண்டியும், அவன் அதற்கு இசையவில்லை; அவன், 'நான் இந்தப் பிலத்திற்குள் சென்று என் அண்ணனைத் தேடிப் பார்த்து அவன் இருந்தால் அழைத்துவருவேன். இறந்தால் அவனைக் கொன்றவனைப் பழிக்குப் பழி தீர்ப்பேன். இது முடியாமற் போனுல் நானும் இறப்பேன்' என்று பிலத்தில் நுழையப் போனுன். அப்பொழுது நானும் சிலரும் இவனைத் தடுத்து, 'நீயும் இறந்து போனுல் அரசனில்லாத இந்நாடு அழியும். ஆதலின், நீ இருந்து ஆட்சி நடத்துவதே சிறந்ததாகும்' என்ருேம். நாங்கள் இவ்வாறு வற்புறுத்தியதால் இவன் அரை மனத்தினனுக ஆட்சியை நடத்த ஒப்புக்கொண்டான். அந்த மாயாவி ஒருக்கால் வாலியை வதைத்திருந்து, இவ்வழியே திரும்பிவந்து நமக்குத் துன்பம் செய்வானே என்று நினைத்து நாங்கள் குன்றுகளைப் போட்டு பிலத்தின் வழியை அடைத்து விட்டுக் கிஷ்கிந்தையை அடைந்து ஆட்சி செய்திருந்தோம்.

"அவ்வாறு இருக்கும்பொழுது இறந்துபோனுன் என்று, நாங்கள் கருதிய வாலி, இறவாமல் அவுணனைக் கொன்றுவிட்டுத் திரும்பிவநது பிலத்தின் வாயில் மூடியிருந்ததைக் கண்டு தம்பி யைக் கூவி அழைத்தான். மறுமொழி ஏதும் வராததால் 'நம் தம்பி காவல் காத்திருந்த திறம் நன்ருயிருக்கிறது' என்று கூறி நகைத்து, ஆத்திரங்கொண்டு, பிலத்தின் வாயிலை மூடி யிருந்த கற்பாறைகளையெல்லாம் காலால் உதைத்துத் தள்ளி விட்டுக் கிஷ்கிந்தைக்கு வந்தான். அவன் வரவுணர்ந்த சுக்ரீ வன் மகிழ்ச்சி பொங்க எதிர்கொண்டு சென்று அவன் பாதங் களில் பணிந்தான். ஆனுல் வாலியோ சுக்ரீவனைக் கொடுமை பல கூறினுன்; நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி நாங்கள் எடுத்துக் கூறியும் அவன் எங்களை நம்பாமல் சீறி எழுந்து சுக்ரீவனைப் பிடித்து இழுத்துக் குத்திக் கொல்ல முயன்ருன். அண்ணன் செய்த துன்பத்திற்கு ஆற்ருமல் மிகவும் அஞ்சி, அவன் கையி னின்றும் விடுவித்துக்கொண்டு இவன் ஓடினுன். வாலி, இவனை

விடாது தொடர்ந்து சென்று கரங்களாற் பற்றி எடுத்துத் தரையில் மோதுமாறு எறிந்தான்; நல்ல சூலமாக, சுக்ரீவன் அவன் கரங்களினின்றும் நழுவிப் பூமியில் மோதாமல் உயிர் பிழைத்து, இந்த மலைக்கு வந்து சேர்ந்தான். வாலி, இம்மலைக்கு வராதபடி அவனுக்கு ஒரு சாபம் உள்ளதால் அவன் இங்கே வர முடியவில்லை; அதனால் அவன் இவனை ஒன்றும் செய்ய இயலாமல், அவன் மனைவியாகிய ருமை என்பவளை அபகரித்துச் சென்றான். அது முதல் இவன் தனக்குள்ள சிறப்புக்களை இழந்து கவலை கொண்டு இம்மலையில் காலந் தள்ளிக்கொண்டிருக்கிறான். இவனுடைய தோழர்களாகிய நாங்களும் இவருடனேயே வசிக்கின்றோம்; இவையே முன்னம் நிகழ்ந்தவை'' என்று கூறினான்.

அநுமன் கூறிய வரலாற்றைக் கேட்டவுடனே ராமன், வாலியின்மீது சீற்றம் கொண்டான். அவன் சுக்ரீவனைப் பார்த்து, ''வானரத் தலைவ! உன்மீது சிறிதும் குற்றமில்லாதிருந்தும், ஆராயாமல் உனக்குத் துன்பத்தைச் செய்த வாலியை ஒழித்து உன்னை அரசனாக்குகிறேன்; உன் மனைவியையும் மீட்டுத் தருகின்றேன்; அந்த வாலி இப்பொழுது எங்கே இருக்கிறான்? விரைவில் எனக்குக் காட்டுவாயாக'' என்றான்.

ராமன் உரைத்ததைக் கேட்டதும் சுக்ரீவன் மட்டற்ற மகிழ்ச்சியுற்றான். எனினும் அவன், ''வாலி மிக்க வலிமை உடையவன் ஆயிற்றே! இவர் அவனைக் கொல்லும் ஆற்றல் உடையவரோ?' என ஐயுற்றான். ஆதலின், அவன் அதனைப் பற்றி ஆராய்வதற்காக, அநுமன் முதலிய அறிவு நிறைந்த அமைச்சர்களை அழைத்துக்கொண்டு வேறோர் இடத்தையடைந்து ஆலோசிக்கலானான்.

அநுமன், அப்பொழுது சுக்ரீவனை நோக்கி, ''உரம் மிக்கவனே! உன்னுடைய உள்ளத்தின் கருத்தை அறிந்தேன்; ''வாலியை ஒழிக்கும் திறன் ராமனுக்கு உண்டோ, இல்லையோ?' என்று ஐயம் கொள்ளுகின்றாய். நான் கூறும் சில மொழிகளைக் கேட்டு அவற்றின்படி நடப்பாயாக. அந்த ராமபிரானுடைய திருக்கரங்களில் சக்கரக் குறிகள் இருக்கின்றன. இத்தகைய குறிகள் வேறு எந்த தேவர்களுக்கும் இல்லை; அவை காத்தற் கடவுளாகிய திருமாலுக்குத்தான் உண்டு. அவற்றால் அத்திரு நெடுமாலே ராமராகத் தோன்றியிருக்கிறார். மற்றும் இன்னொரு குறிப்பும் கண்டு நான், இவர் நாராயணனுடைய வடிவம் என்று அறிந்துகொண்டேன்; நான் தோன்றிய காலத்தில் என் தந்தையார் வாயுதேவர் என்னை நோக்கி, 'நீ இனி, ராமனாக வரும் நாராயணனுக்கு அடியவனாகச் சேவை செய்திரு; உனக்கு நல்ல பதவி கிடைக்கும்; அவர் இவ்வாறு தோற்றுங் காலத்தில், அவரை நீ அறிந்துகொள். அவர் தம்முடைய அடியார்களுக்



குத் துன்பம் உற்ற காலத்தில், அதனை நீக்க உடனே அவர்கள் முன் தோன்றுவார் ; நீ அவரைக் கண்டதும் உனக்கு அவரிடம் என்றுமில்லாத பற்றுதல் உண்டாகும். இக்குறிப்புக்களால் அவரைத் தெரிந்துகொண்டு, அன்னவருக்கு நீ தொண்டனாயிரு' என்று கூறியிருக்கிறார். என் தந்தையார் உரைத்தவாறே முதலில் அவரைக் கண்ட எனக்கு அவர்பால் அளவில்லாத அன்பு தோன்றியதுமல்லாமல், நாராயணனுக்குள்ள குறிகள் யாவும் ராமரிடத்துக் காணப்பட்டன. ஆதலின் அவர் அத்திருமாலே யாவர். அவர் இந்த வாலியைக் கொல்வதில் தடையொன்றும் இல்லை; இனியும், உனக்கு ஐயம் நீங்காமல் இருக்குமாயின், இங்கே எவராலும் அம்பினை ஊடுருவி எய்யமுடியாதபடி வயிரம் பெற்று வளர்ந்திருக்கின்ற மராமரங்கள் ஏழனுள், ஒன்றின்மீது அவரை அம்பு எய்யுமாறு நீ வேண்டிக்கொள். அவர் அவ்வாறே செய்வார். அம்பு மரத்தை ஊடுருவிச் சென்று விடுமானால், ராகவன் வாலியைக் கொல்லுவதில் ஐயமில்லை'' என்றான்.

அநுமன் இங்ஙனம் உரைக்கவும் சுக்ரீவன் கேட்டு, ''நன்று சொன்னாய்'' என அநுமனுடைய இரு தோள்களையும் தழுவிக் கொண்டு, அவனைப் பாராட்டினான். பிறகு சுக்ரீவன் ராமனை அடைந்து, ''ஸ்வாமி! தங்களிடம் நான் சொல்லத் தகுவது ஒன்று உள்ளது'' என்றான். ராமன், ''அஃது யாது? இப்பொழுதே உரைக்க'' என்றான்.

4. மராமரப் படலம்

சுக்ரீவன், ராமபிரானைக் காட்டுவழியே அழைத்துச் சென்று ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த மராமரங்கள் ஏழினைக் காட்டி, ''இவற்றை நும் ஓரம்பே துளைபட ஊடுருவிச் செல்லுமாயின் என் மனத்துயரும் மாறும்'' என்றான். ராமன் சுக்ரீவன் மனக் கருத்தை உணர்ந்து தன் வலிய தோள்களால் வில்லை நாணேற்றி அவற்றின் அருகே சென்றான்.

யுகம் பெயர்ந்தாலும் பெயராதனவாயும், உலகங்கள் அழிந்தாலும் தாழ்ந்தாலும் தாம் மட்டும் அழிதலும் தாழ்தலும் இல்லாதவனவாயும் நிலைத்து வளர்ந்து, நிறைந்த இருள் சூழ்ந்து, பெருமலைகள் ஏழும் வரிசையாக நின்றதுபோல விளங்கும் மிகப் பெரிய மராமரங்களை ராமன் பார்த்து வியந்தான். பின்னர்,

''ஆய மாமரம் அனைத்தையும் நோக்கிநின் றமலன்
தூய வார்கணை துரப்பதோர் ஆதரம் தோன்றச்
சேய வானமும் திசைகளும் செவிடுறத் தேவர்க்கு
ஏய்வி லாததோர் பயம்வரச் சிலையைநாண் எறிந்தான்.''

பிறகு ராமன் நாணேற்றியிருந்த தன் வில்லில் ஓர் அம்பினைத் தொடுத்து நாணை விசையாக இழுத்துவிட்டான். அந்த அம்பு, ஓர் இமைப்பொழுதில் அவ்வேழு மரங்களையும் உருவிச் சென்றது. அவ்வாறு நாணை இழுத்துவிட்ட பேரோசை, வானத்திலும் திசைகள்தோறும் உள்ளவர்களின் காதுகள் செவிடாகும்படியும், அச்சம் என்பதனை அறியாத தேவர்களும் பயம் கொள்ளும்படியும் கேட்டது.

ராமன் அம்பு எய்த திறத்தினைக் கண்ட வானரர்கள் யாவரும் வியப்படைந்து திகைத்துப் போனார்கள். சுக்ரீவன் எய்திய இன்பத்திற்கு அளவே இல்லை. அதனால் அவன், தன் கரங்களைக் கூப்பிக்கொண்டு ராமன்முன் நின்று,

''வையம்நீ வானும்நீ மற்றும்நீ மலரின்மேல்
ஐயன்நீ ஆழிநீ ஆழிவாழ் அமலன்நீ
செய்யநீ வினைதெறும் தேவன்நீ நாயினேன்
உய்யவந் துதவினாய் உலகமுன் டுதவினாய்.''

[வையம் : பூமி. வான் : வானம். மற்றும் : வேறு பொருள்கள் யாவும். ஆழி : கடல். தெறும் : அழிக்கும் படியான.]

என்று போற்றினான். அவ்வளவில் மகிழ்ச்சியுற்ற மற்ற வானர வீரர்கள்,

''ஆடினார் பாடினார் அங்குமிங் குங்கலந்(து)
ஓடினார் உவகையின் நறவையுண் டுணர்விலார்
நேடினும் வாலிகா லனையென நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம்.''

[நறவை : தேன். கள். நேடி : தேடி. காலன் : யமன்.]

அப்போது அம்மலையின்மீது மற்றொரு மலை கிடைப்பதுபோல, ஒரு பெரிய உடலின் எலும்புக் கூடு கிடக்கக் கண்டு, ''அது யாது ?'' என ராமன் சுக்ரீவனைக் கேட்டான்.

5. துந்துபிப் படலம்

ராமனுக்கு, அம்மலையின்மீது கிடந்த எலும்புக் கூட்டின் வரலாற்றைக் கூறத் தொடங்கிய சுக்ரீவன், அவனை நோக்கி, ''ஸ்வாமி ! முற்காலத்தில் 'துந்துபி' என்ற பெயரினையுடைய ஓர் அவுணன் இருந்தான்; அவன், வானத்திலுள்ள சந்திரனையும்

முட்டும்படியான இரு கொம்புகளைத் தலையின்மீது உடையவன்; மந்திரமலையைப்போன்ற பெரிய உடலினையுடையவன்; தன்னுடன் போர் செய்பவர் எவருமில்லை என்று செருக்கடைந்த அந்த அவுணன், திருமாலுடன் போர் செய்யக் கருதி, அவரைக் காணத் திருப்பாற்கடலுக்குச் சென்றான். திருமால், அவன் அங்கு வந்த காரணத்தை அறிந்து, 'கங்கையின் கணவரான சிவபிரானே, உன்னைப் போன்றவர்களுடன் போர் செய்யத்தக்கவர்; ஆதலின் நீ அவரிடம் செல்வாயாக' என்றார். திருமால் கூறியபடி துந்துபி விரைந்து சென்று சிவபிரான் இருக்கும் கைலைமலையைத் தன் கொம்புகளால் பெயர்க்க முயன்றான். சிவபிரான் அவனை அணுகி, 'உனக்குள்ள குறை யாது?' என்று கேட்டார். அதற்குத் துந்துபி, 'தாங்கள் என்னுடன் போர் செய்து அருளவேண்டும்' என்றான். சிவபிரான், 'வீரத்தின் சிறந்தவனான உன்னுடன் போர் செய்ய என்னால் இயலாது; நீ தேவர்களிடத்துச் செல்வாயாக' என்று அனுப்பிவிட்டார். அவன் அவ்வாறே தேவர்களிடம் செல்ல, இந்திரன் துந்துபியைப் பார்த்து, 'நீ நெடுநாட்கள்வரை சலிக்காமல் போர் செய்யத்தக்கவன்; அவ்விதம் உன்னோடு போர் தொடுக்கும் வலிமையுள்ளவர்கள் தேவர்களில் எவருமில்லை. ஆதலின், நீ பூவுலகத்தை அடைந்து அங்குள்ள வாலி என்பவனுடன் போர் தொடுப்பாயாக; அவன் பலநாள் வரை உன்னுடன் போர் செய்யும் ஆற்றலுடையவன்' என்று கூறினான்.

"அதன் பிறகு துந்துபி என்ற அந்த அவுணன், வாலி இருந்த கிஷ்கிந்தை மலையைத் தன் கொம்புகளால் அசைத்தான். மலை அசையவே திடுக்கிட்ட வாலி, வந்து அவனைப் பார்த்ததும், அவன் ஓர் அவுணன் என்பதையும், மிக்க வன்மையுள்ளவன் என்பதையும் அறிந்து அவனுடன் போர் செய்யத் தொடங்கினான். பலநாட்கள் வரை சிறிதும் சலிப்பில்லாமல் இருவரும் போர் செய்தனர். கடைசியாக வாலி மிக்க ஆத்திரம் கொண்டு ஒரு மரத்தை வேருடன் பிடுங்கி அவுணன் தலைமீது அடித்தான். அடி தாங்காமல் அவன் கீழே விழவும், வாலி, தன் கரங்களால் அவன் இரண்டு கால்களையும் பற்றி எடுத்துச் சுழற்றி மேலே எறிந்தான். அவுணன் மேலிருந்தபடியே உயிர் நீங்கி இம்மலையின்மீது வீழ்ந்தான்.

"அப்போது இந்த மலையில் தவம் செய்துகொண்டிருந்த மதங்க முனிவர், அவுணன் உடல் விழுந்த அரவத்தால் தம் தவம் கலையவே திடுக்கிட்டு விழித்துப் பார்த்தார். 'வாலியின் செய்கை இது' என்று அறிந்து சினம் கொண்டார்; அந்த வாலி இம்மலைக்கு வந்தால் அவனுக்குத் தீங்கு நேரிடுக' என்று சாபம் கொடுத்து விட்டார். அதனாலேயே வாலி இம்மலைக்கு வருவதில்லை. வாலியால் எறியப்பட்ட துந்துபியின் உடல் எலும்பே இது" என்று கூறினான்.


Bapu

ராமன் இந்த வரலாற்றை அறிந்ததும் தம்பியை நோக்கி, "தம்பி இந்த எலும்புக் கூட்டைச் சற்று அப்பால் தள்ளிவிடு'' என்றான். உடனே அவன், அதனைத் தன்னுடைய கால் பெருவிரலால் சற்றே எற்றினான். அவ்வெலும்புக் கூடு ஆகாயத்திற் கிளம்பி நெடுந்தூரம் சென்று திரும்பி வந்து நிலத்தில் வீழ்ந்தது. அதைக் கண்ட வானரர்கள் பேராரவாரம் செய்து மகிழ்ந்தார்கள். பின்னர் எல்லோரும் தங்கள் இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

6. கலன்காண் படலம்

சுக்ரீவன் மாளிகையை அடைந்த ராமன் முதலியோர், அவரவர்கள் இருக்கையை நாடி அமர்ந்துகொண்டார்கள். யாவரும் அமர்ந்தபின், சுக்ரீவன் ராமனைப் பார்த்து, "ஸ்வாமி! சில நாட்களுக்குமுன்னே, நாங்கள் இந்த மாளிகையின் வெளியிடத்தில் கூடி அளவளாவிக்கொண்டிருக்கும்பொழுது, கொடுவினையாளனான ராவணன், எங்களுக்கு நேராக வானவழியில், ஓர் அழகிய பெண்ணுடன் தென் திசையாகச் செல்வதைப் பார்த்தோம். சென்ற அந்த அம்மையார் கதறி அழுதுகொண்டே, தம்மைச் சார்ந்தவர் எவரேனும் இவ்வழியே வந்தால் அவருக்குத் தம் செய்தியை உணர்த்தலாகும் என்று கருதினாரோ, வேறெந்த எண்ணம் கொண்டாரோ எங்களுக்குத் தெரியாது; சில அணிகலன்கள் பொதிந்த ஒரு முடிப்பினை எங்களுக்கு நேராகப் பூமியில் விழும்படிக் கீழே எறிந்தார். அதனை அறிந்த நாங்கள், அம்முடிப்புத் தரையில் விழுமுன்னரே தாங்கி ஏற்றுக்கொண்டோம்; இதுவரை நாங்கள் அம்முடிப்பினை அப்படியே வைத்திருக்கிறோம்; தாங்கள் அதனை அவிழ்த்து அதிலுள்ள கலன்கள் தங்கள் தேவி யாருடையவையோ என்பதைப் பாருங்கள்'' என்று கூறி விரைந்துபோய் ஒரு முடிப்பைக் கொண்டுவந்து ராமன்முன் பணிவுடன் வைத்தான்.

ராமன் அந்த முடிப்பை அவிழ்த்துப் பார்த்தான். அதிலிருந்த அணிகலன்கள் யாவும் சீதை அணிந்திருந்தவைதாம்! அவ்வளவில் ராமன் சீதையினுடைய நினைவால் துயரம் மேலிட்டுக் கண்களில் நீர் பெருகச் சோர்ந்து மூர்ச்சித்துவிட்டான். ராமனது நிலையினைக் கண்ட சுக்ரீவன், அவனைத் தன் கரங்களால் தாங்கி எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு, தன் மனமும் இரக்கமுற்றுக் கலங்கிக் கண்ணீர் விட்டு அழுதான். பிறகு அவன் ராமனைப் பலவாறு தேற்றி, "நான் இந்தக் கலன்களைக் காட்டித் தங்களுக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்துவிட்டேன்.''

''அயனுடை அண்டத்தின் அப்பு றத்தையும்
மயர்வற நாடியென் வலியுங் காட்டியுன்
உயர்புகழ்த் தேவியை உதவற் பாலனுல்
துயருழன்(று) அயர்தியோ! சுருதி நூல்வலாய்?''

''திருமகள் அனையஅத் தெய்வக் கற்பினுள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புயம்
இருபதும் ஈரைந்து தலையும் மேவினுன்
ஒருகணைக்(கு) ஆற்றுமோ! உலகம் ஏழுமே?''

[அயன்: பிரமதேவன். அண்டத்தின்: உலகத்தின். மயர்வு: மயக்கம். அயர்தியோ: சோர்வடைதியோ. வெருவர: அஞ்சும்படி. கணை: அம்பு.]

என்றான். தாங்கள் இங்கேயே இருந்தருளுங்கள்; நானே போய் அந்த அரக்கன் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து, அவனையும் அவனுடைய சேனைகளையும் கொன்றுவிட்டு வருகின்றேன்; பெருவலி படைத்த தங்கள் தம்பியாரும், வானர வீரர்களாகிய நாங்களும் தங்களுக்குத் தொண்டு செய்ய விருப்பமுள்ள வர்களாயிருக்கும்பொழுது தாங்கள் ஏன் வருந்தவேண்டும்? அடியேனுக்குள்ள சிறு குறையைப் பின்பு தீர்த்துக்கொள்ளலாம். இப்பொழுது நாம் எல்லோரும் சென்று பிராட்டியாரைத் தேடு வோம்'' என்று கூறினான்.

கதிரவன் மைந்தனாகிய சுக்ரீவன், இத்தகைய அன்பு ததும் பும் சொற்களைக் கூறியதும், ராமன், அருவியாகப் பாயும் நீரினை யுடைய கண்களைத் திறந்து ஆர்வத்துடன் அவனை நோக்கி, ''அழகிய தோள்களையுடையோனே! சீதை தனக்கு நேர்ந்த துன் பத்தால் தன் நகைகளை எல்லாம் கழற்றி எறிந்துவிட்டு என் வரவினை நோக்கித் துக்கப்பட்டுக்கொண்டிருக்க, நான் உடனே சென்று அவளை மீட்காமல், கரத்தில் வில்லைப் பற்றிக் கொண்டு புலம்பிப் பொழுதினைப் போக்குகின்றேன்; நாணிலியான எனக்குச் சிறப்பு எங்கிருந்து வரும்?'' என்று வருந்திக் கூறினான். அப்பொழுது சுக்ரீவன் மற்றும் சில அன்பான மொழிகளைக் கூறி ராமனைத் தேற்றினான். அதன் பிறகு ராமன் சற்றுத் தெளி வடைந்து, சுக்ரீவனைப் பார்த்து, ''அன்பனே! உன்னுடைய இனிய மொழிகளால் நான் என் கவலையை நீக்கிக்கொண்டேன் எனினும், முதலில் உனக்குள்ள கவலையைத் தீர்த்தபிறகே பழி நீங்குவதற்குரிய காரியத்தைப் பார்க்க முயலவேண்டும்'' என்றான்.

ராமபிரான் கூறியதைக் கேட்ட அநுமான், தன்னுடைய கருத்தும் அதுவே ஆதலின், ராமனை நோக்கி, ''ஸ்வாமி! நான் ஒன்று சொல்லவேண்டியுள்ளது; அதனையும் கேட்டருளுங்கள்''

என்று, அவனை வணங்கிக்கொண்டு, "முதலில், கொடுந்தொழிலினையுடைய வாலியைக் கொன்று சுக்ரீவனை அரசனாக்கிவிட்டால், வாலியின் வசமாயிருக்கும் எழுபது வெள்ளம் வானர சேனைகளும் நம் ஆணையின்படி நடத்தல் கூடும். ஏனெனில், அரக்கர் பல மாயச் செயல்களை உடையவர்கள். நாம் தேவியாரைத் தேடி அவர் இருக்கும் இடத்தை அடைந்தோமானால், ராவணன் அவரை வேறோர் இடத்திற்கு மாற்றிவிடுவான்; எந்த எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் அந்த அந்த இடத்தினின்று பிராட்டியாரை மாற்றி மாற்றி வைப்பான்; ஆதலின், நம்முள் பலர் உலக முழுவதும் நான்கு திசைகளினும் சென்று ஒரே காலத்தில் அவரைத் தேட முயலவேண்டும். அதற்குப் பெரும் படை இன்றி அமையாதது. ஆகவே, தாங்கள் கூறியதே தகுதியானது" என்றான்.

அநுமான் கூறியவற்றைக் கேட்ட ராமன், "நாம் செய்யத் தக்கது அதுவேயாகும் ; ஆதலின் எல்லோரும் வாலி இருக்கும் இடத்திற்குச் செல்வோம்" என்று கூறினான். பின்பு யாவரும் புறப்பட்டு வாலியின் உறைவிடமான கிஷ்கிந்தை மலையைச் சென்றடைந்தார்கள்; ஓரிடத்தில் தங்கி மேல் நடக்கவேண்டியவற்றைப் பற்றி ஆலோசனை செய்தார்கள்.

7. வாலிவதைப் படலம்

ராமன் சுக்ரீவனை நோக்கி, "நீ துணிவுடன் சென்று வாலியை அழைத்து அவனுடன் போர் தொடுப்பாயாக. அதுவே என் கருத்தாகும்" என்றான். ராமன் அவ்வாறு கூறலும் சுக்ரீவன் நன்று என அதற்கு இசைந்து, வாலி இருக்கும் மாளிகைக்கு அருகில் வந்து நின்று, தோள்களைத் தட்டிக்கொண்டு, கைகளைக் கொட்டி, இடியின் ஓசையைப் போலப் போர் முழக்கம் செய்து, "நீ ஒரு வீரனாக இருந்தால் இப்பொழுதே வந்து என்னுடன் பொருவாய்" என்று கூவினான். அப்பொழுது, அமளியிற்படுத்து உறங்கிக்கொண்டிருந்த வாலி, தம்பியின் குரலைக் கேட்டு, "பன்முறை தோற்று ஓடிப்போய் மலையில் ஒடுங்கி இருக்கும் நீயா திரும்பவும் வந்து போருக்கு அழைக்கிறவன்!" என்று ஏளனமாக நகைத்துவிட்டு சுக்ரீவனை விளித்து, "இதோ வந்தேன்! வந்தேன்!! உன்னுடைய ஆவியை ஒரு நொடிக்குள் போக்கிவிடுகிறேன்" என்று கூறி கடுங்கோபம் கொண்டு அவனை எதிர்க்க ஓடினான்.

அச்சமயத்தில், அங்கே இருந்த அவன் மனைவியான தாரை என்பவள், சுக்ரீவன் கூவியதையும் சினம் மூண்ட தன் கணவன் அவனுடன் போர் புரிய ஓடுவதையும் கண்டாள்.

ராமர் சுக்ரீவனுக்கு உதவி செய்ய வந்துள்ளார் என்பதை அவள் அறிந்தவள் ஆதலின், தன் கணவனுக்குக் கெடுதி வரும் என்று எண்ணிய அவள் வாலியின்முன் போய் அவனைத் தடுத்தாள். அப்பொழுது வாலி, தன்னைத் தடுத்த தாரையை, "நீ என்னை விலக்காது விடுவாயாக." என்னைக் கூவி அழைத்தவனுடைய நெஞ்சம் கலங்கச் செய்து, கடலைக் கடைந்து அமுதம் கண்ட தோள் வலியால் அவனை அழித்துவிட்டு விரைவில் வருகிறேன்" என்று மீண்டும் ஓட முயன்றான். தாரை, அவனைச் செல்லவிடாது மேலும் தடுத்து, "ஸ்வாமி! தங்களுடைய தோள் வலிமைக்கு அஞ்சி மலையிற் பதுங்கியிருந்த தங்கள் தம்பி, மீண்டும் போர் தொடுக்க வந்திருப்பதால் அவருக்கு ஒரு துணை அமைந்திருக்க வேண்டும். அதனால் தங்களுக்கு ஏதேனும் கெடுதி நேரலாம் என்று எனக்குத் தோற்றுகிறது" என்றாள். அதற்கு வாலி, அவளை நோக்கி, "பெண்ணே! இந்த மூவுலகத்திலுள்ள வீரர்கள் யாவரும் ஒருங்கு திரண்டு வந்து என்னை எதிர்த்தாலும் என் முன்னே நிற்கமுடியாது தோற்று ஓடுவர். அவர்கள் தங்கள் பேதை மதியால் என்னை எதிர்ப்பாராயின், அத்தகையோர் வலிமையிற் பாதி என்னை அடையும்; ஆதலின், அவர்கள் என்னைப் பகைத்துக்கொள்வது எவ்வாறு? அதனால் நீ உன் துயரினை ஒழிப்பாயாக" என்று கூறினான். தாரை, அவன் சொற்களைக் கேளாமல் மீண்டும் தன் கணவனை நோக்கி, "என் இறைவரே! அந்தச் சுக்ரீவன் தசரதர் மைந்தரான ராமரைத் தம் உயிர் நண்பராக்கிக் கொண்டு, அவரால் தங்களுடைய உயிரைப் போக்க வந்துள்ளார் என்று நம்மீது அன்பு கொண்டவர் சிலர் சொல்லக் கேட்டேன். இச்செய்தி, உண்மையா என்பதை ஆராய்ந்து அறிந்தபின்னரே தாங்கள் போருக்குச் செல்லல் நல்லதாகும்" என்றாள்.

தாரை மொழிந்த இச்செய்தியைக் கேட்டவுடனே, வாலி வியப்படைந்து, "பெண் புத்தியால் அல்லவோ இவ்வாறு மொழிந்தனை! தருமம் தன்னைத் தானே வேரறுக்குமோ? அன்னை சொல்லால் தம்பிக்கு அரசளித்த ஐயன் அவன்; உலகெலாம் எதிர்ப்பினும் வெல்லும் ஆற்றல் மிக்க அவன் எளிய குரங்கோடு நட்புக் கொள்வனோ? இருவர் போரிடும்போது ராமன் இடையே ஒருபோதும் அம்பெய்யான்" எனப் புகன்று, "நீ இங்கேயே இரு; ஓர் இமைப்பொழுதில் சுக்ரீவனைக் கொன்றுவருகிறேன்; உன் மனக் கலக்கத்தை ஒழிப்பாயாக" என்று சொல்லித் தாரையை விலக்கிவிட்டு, விரைந்துபோய்ச் சுக்ரீவனுக்கு எதிரில் நின்று ஆர்ப்பரித்தான்.

அவ்வாறு வந்து நின்ற வாலியை ராமன் உற்று நோக்கியதும், அருகே நின்றுள்ள அன்புடைய தம்பிக்கும் அவனைக் காட்டி, "தம்பி! இவனுடைய வன்மையுள்ள மேனியைப் பார்"

என்றான். லக்ஷ்மணன் தானும் அவனைப் பார்த்துவிட்டு, ''அண்ணா! இச்சுக்ரீவன், தன் உள்ளத்தில் உடன்பிறந்தவன் என்னும் பாசம் சிறிதும் இல்லாமல், முன்னவனான வாலியின் வாணாளைக் கொள்ளும்பொருட்டுக் கூற்றுவனை அழைத்து வந்திருக்கிறான். இத்தகைய இவன், மாற்றாராகிய நமக்கு எவ்வாறு உதவி செய்யப்போகிறான்?'' என்றான். தம்பி கூறியதைக் கேட்ட ராமன், லக்ஷ்மணனை நோக்கி, ''தம்பி! நாம் விலங்கினங்களின் ஒழுக்கத்தைப்பற்றிப் பேசலாமோ? சுக்ரீவன் போன்றோர் விலங்குகளின் தன்மையை உடையவர்கள். இவர்களுக்கு நம் போன்றாருடைய குணங்கள் இல்லை; உலகத்திலுள்ள மக்களிடையே, யாவரும் உடன்பிறந்தாரிடம் ஒத்த அன்பினராயிருப்பது அருமை; அப்படி இருப்பினும் பரதனைப் போலப் பெரிதும் உத்தமர்களாயிருப்பது மேலும் அருமையானதாகும்; உடன்பிறந்தாரிடம் உண்மையான அன்பு கொண்டிருப்பவர்கள் உலகத்தில் சிலரே; அன்பற்றவரே பலர்; ஒவ்வொருவரிடமும் உள்ள குணத்தையே காணவேண்டும்; உலகில் குற்றமில்லாதவர் யார்?'' என்று சமாதானம் கூறினார்.

இவ்வாறு அவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும் தருணத்தில், எதிர்த்து நின்ற வாலியும் சுக்ரீவனும் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். இவர்கள் செய்த மற்போர், காண்பவர் எவரும் அச்சங்கொள்ளத் தக்கதாயிருந்தது. அவர்களுடைய போரினைக் கம்பர்,

''வாலி னூரம் வரிந்தனர் நெரிந்துக வலிப்பர்
காலி னால் நெடுங் கால்பிடித்(து) உடற்றுவர் கழல்வர்
வேலி னூலற வெறிந்தன விறல்வலி உகிரால்
தோலி னூடல் நெடுவரை முழையெனத் தொளைப்பர்.''

''அன்ன தன்மையர் ஆற்றலின் அமர்புரி பொழுதின்
வன்னெ டுந்தடம் திரள்புயத்(து) அடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை அரிதொலைத் தென்ன
கொன்ன கங்களிற் கரங்களிற் குலைந்துக மலைந்தான்.''

[உடற்றுவர்: சிதற அடிப்பர். விறல்: வெற்றி. உகிர்: நகம். முழை: துவாரம். தும்பி : யானை. அரி : சிங்கம். கொல்+நகம்.]

என்று வருணித்துள்ளார்.

சுக்ரீவன், அடி தாங்கமாட்டாமல், மறைந்து நிற்கும் ராமன் அருகே போய் வாட்டமுற்று வணங்கினான். ராமபிரான்


Bapu

அவனை அன்புடன் நோக்கி, ''நீ மனம் அழிந்துவிடாதே! உனக்கும் வாலிக்கும் வேறுபாடு தெரியாததால் நான் அம்பு தொடுக்க இயலவில்லை ; நீ இந்தக் காட்டுக் கொடியின் பூவைச் சூடி அமர் செய்வாயாக'' என்று பூமாலை ஒன்றைச் சூட்டி அனுப்பினன். அதனால் மன எழுச்சி பெற்ற சுக்ரீவன் வாலியை மீண்டும் எதிர்த்து அவனை மோதினன், அது கண்ட வாலி, 'சற்று முன்பு அஞ்சி ஓடிய இவன், இப்பொழுது திரும்பவும் வந்து நம்மை எதிர்ப்பதற்குக் காரணம் என்னவோ?' என்று ஐயமுற்று, கடுஞ்சினம் கொண்டு சுக்ரீவனுடைய உயிர்நிலையை நோக்கி ஓங்கிக் குத்தினன். உடனே அவன் கீழே விழுந்து மூர்ச்சித்துத் தேறி குருதி கக்கினன். தீனமாக ராமன் நின்ற திசையை நோக்கினன். அப்போது வாலி அவனைக் கரங்களாற் பிடித்துத் தூக்கி நிலத்தின் மீது எறிய முயன்றான்.

அச்செய்கையைக் கண்டதும் ராமன், விரைவில் தன் கோதண்டத்தில் அம்பினைத் தொடுத்து வாலியின் மார்பைக் குறித்து விட்டான். அம்பு மார்பில் பாயவும் வாலி, கையிற் பற்றியிருந்த சுக்ரீவனை நழுவவிட்டான்; ஆனல் மார்பில் ஊடுருவும் அம்பினைப் பிடித்துக்கொண்டான்; கலங்கி நிலத்திற் சாய்ந்தான்.

''நமக்குத் தெரியாமல் இதனை நம் மார்பில் அழுந்தும்படி எய்தவன் யாவனோ?'' என்று ஐயமுற்று, ''தேவர்களே இக்காரியத்தைச் செய்தார்களோ? அன்றி நேமியானே? நீலகண்டனே? யாவர் என்று அறியமுடியவில்லையே'' என்று ஆத்திரங்கொண்டு ஆகாயத்திற் கிளம்பியும், திசைகளில் தாவியும், நிலத்திற் குதித்தும், கைகளால் அறைந்தும் ஆர்ப்பரித்தான். இன்னரென்று தெரிந்துகொள்ளும் பொருட்டு அம்பினை வெளியே இழுக்க முயற்சித்தான்; அது வரவில்லை; தன் கைகளையும் கால்களையும் வாலையும் அந்த அம்பிற் சேர்த்துப் பிணித்து மிக்க வலியுடன் வெளியே இழுத்தான். அம்பு வெளிப்பட்டதும் அது பாய்ந்திருந்த மார்பிடத்திலிருந்து ரத்தம் பெருகி, வெள்ளம் போன்று ஓடியது. அதனைக் கண்ட சுக்ரீவன், அவனுடன் பிறந்த பாசத்தால் வருந்தி நிலத்தில் வீழ்ந்தான். அம்பை வெளியே இழுத்ததும் சினம் கொண்டு அதனை ஒடித்தெறிய எண்ணினன். ஆனல் அதை அவ்வாறு செய்ய முடியவில்லை.

''மேரு மலையினையும் பெயர்த்து அழிக்கத்தக்க வலிமையை உடைய என்னல் இந்த அம்பினை முறிக்கமுடியாது போயிற்றே'' என்று வியந்து, ''அதிலுள்ள பெயரைக் காணுவோம்'' என அம்பின் அடிப்புறத்தை நோக்கினன். அதன்கண்,

''மும்மைசால் உலகுக்(கு) எல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை ராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.''

[மும்மைசால் உலகு : மூன்றாக நிறைந்த உலகம். மூல மந்திரம்: முதல் மந்திரமான தாரக மந்திரம். தம்மையே தமர்க்கு நல்கும் : தன்னைச் செயிப்பார்க்குத் தன்னையே கொடுப்பது.]

அறத்தின் வடிவமான ராமனுடைய பெயர் கண்களில் காணலும், வாலி அடைந்த வியப்பிற்கும் துன்பத்திற்கும் எல்லையே இல்லை. அதனால் அவன், ''அந்தோ ? நல்லறத்தின் செல்வனான ராமனா இத்தகாத செயலில் ஈடுபட்டான் ? பழைமையான சூரிய குலத்தில் தோன்றி, அரச இன்பத்தை நீக்கித் தவவடிவத்துடன் வனத்திற்கு வந்தவன் தன்னுடைய சிறந்த வில்லின் அறத்தையும் துறந்துவிட்டானே!'' என்று சொல்லி மனம் கூச நகைத்து நாணம் கொண்டான்.

பின்னர் அந்த வாலி, தான் அடைந்த துயரம் தாளமுடியா மல், வெறுப்புக் கொண்டு பலவிதமாய்க் கூறி வருந்தினான். அச் சமயத்தில் ராமன் அவன் முன்னிலையில் வந்து நின்றான். சினத்தி னால் சிவந்த கண்களுடனே வாலி, ராமனை நோக்கி,

''வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னாயே!
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்கன் றாமோ ?
தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்!''

[தூயவன் : தசரதன். தாய்மை : தாயின் தன்மை.]

''அரக்கர்ஓர் அழிவு செய்து
கழிவரேல் அதற்கு வேறுஓர்
குரக்கினத்(து) அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற்(று) உண்டோ !
இரக்கமெங்(கு) உகுத்தாய் என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா !
பரக்கழி(வு) இதுநீ பூண்டால்
புகழையார் பரிக்கற் பாலார்?''

[பரக்கழிவு: நிந்தை, பழிச்சொல். பரிக்க: கைக்கொள்ள.]

''கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய்;
எம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய்
கருமம்தான் இதன்மேல் உண்டோ. ?''

[கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ: அஸஹாய சூரனே. பூட்டிய: பொருந்தி அளித்த. கருமம் : செயல். எம்பி : என் தம்பி.]

''இருவர்போர் எதிருங் காலை இருவரும் நல்லுற் றுரே
ஒருவர்மேல் கருணை தூண்டி ஒருவர்மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத்து எய்தல்
தருமமோ ? பிறிதொன் றுமோ? தருகில தென்னும் பக்கம்.''

[உற்றுர்: நண்பர். குழைய: வளைய. வாய் அம்பு: கூரிய அம்பு மருமம்: மார்பு. தகுகிலது: தகுதியில்லாதது.]

என்று பழித்துக் கூறினுன்.

ராமன், வாலி கூறிய பழிச்சொற்களைக் கேட்டு அவனை நோக்கி, ''வாலியே! நீ கூறியவாறு அறநெறி தவறி எதையும் செய்துவிடவில்லை; உன்னிடம் மிக்க அன்புடையோனுயிருந்த உன் தம்பியின் செயல்களை நன்கு ஆராயாமல், உன்னை அவன் வஞ்சித்து விட்டதாய்த் தவருக எண்ணிக்கொண்ட நீ அவனைப் பலவகையில் படாத பாடு படுத்தினுய்; அறம் இன்னதென்பதையும், அதன் தன்மையையும், அதனுல் அடையும் இம்மை மறுமைப் பயன்களையும் நீ சிறிதும் சிந்தியாமல், உன் தம்பியின் தாரத்தைக் கவர்ந்து போய் வைத்துக்கொண்டிருக்கிருய் ; சுக்ரீவன், உன்னுடைய துன்பத்திற்கு ஆற்றுமல், நீ செல்லக்கூடாத மலையிற்போய் வசித்திருக்க நேர்ந்தது: நீ அங்குச் செல்லும்படியாக இருந்தால், உன் தம்பியை நீ கொன்றிருப்பாய். இவ்வாறு அவன் தனித்து வாசம் செய்து, தனக்குள்ள சிறப்புக்களை எல்லாம் துறந்துவிட்டு இருக்கும் பொழுது நான் அங்கே வரவும் என்னிடம் தஞ்சம் அடைந்தான் ; தனக்குள்ள குறைகளைப் போக்குமாறு வேண்டினுன்; அடைந்தோரை ஆதரித்து உலகில் நீதியை நிலை நிறுத்துவதே என் நோக்கம் ; ஆகவே, உன்னைக் கொன்றேன்'' என்று கூறினுன்.

அதற்கு வாலி, "ஐயா! உணர்வு சென்ற வழியில் செல்லும் ஒழுக்கத்தையுடைய விலங்கினங்களைச் சேர்ந்த எங்களுக்கு நீ கூறிய நீதிகள் உளவோ?" என்றான்.

ராமன், "நீ அவ்வாறு உரைப்பது சிறிதும் பொருந்தாது; நீ விலங்குருவில் இருப்பினும் அறநெறி இன்னதென உணர்ந்திருக்கிறாய்; நின் சொற்களால் அது நன்கு விளங்குகிறது; விலங்குத் தன்மை என்பது உடலைப் பொறுத்ததோ அன்றி அறிவைப் பொறுத்ததோ? என்றும் அறிவையே பொறுத்தது; ஆதலால் நீ செய்தது குற்றமே. முதலை பிடித்தீர்த்தலால் வருந்திய விலங்கினமான கஜேந்திரன் செய்கையையும், நீதிகளை அறிந்த பறவை இனமான ஜடாயுவின் செய்கையையும் நீ ஆலோசித்துப் பார்; விலங்குருவிலும் பறவை உருவிலும் இருந்த அவர்களையும் அறிவற்ற மற்ற விலங்குகளையும் பறவைகளையும்போல் எண்ணுதல் கூடுமோ? அன்றியும் நீ, தேவேந்திரனுக்கு மகன். ஆதலின், அறங்கெட நடப்பது முறையாகாது" என்றான்.

வாலி, ராமன் கூறியவற்றைக் கேட்டு ஆலோசித்தான்; தான் செய்த அனைத்தும் தவறானவை என்று அறிந்து, ராமனை நோக்கி, "நான் நீதிகளை ஆராயாமல் நடந்தவன் என்றாலும், நீ மறைவாக நின்று என்மீது அம்பினை ஏவக் காரணம் யாது?" என்று கேட்டான்.

வாலி அவ்வாறு கேட்டதும், லக்ஷ்மணன், "என் அண்ணலார் தம்மிடம் அடைக்கலமான சுக்ரீவனைக் காப்பதாக வாக்களித்துவிட்டார்; அவர் உன்னைக் கொல்லும்பொருட்டு வெளி நின்று போர் புரியத் தொடங்கின் நீயும் உயிர்மீது விருப்பம் கொண்டு அவரிடம் அடைக்கலம் வேண்டுவாய் என்று கருதியே உன் எதிரில் தோன்றாமல் மறைந்து நின்று எய்தனன்" என்று கூறினன்.

லக்ஷ்மணன் கூறிய மொழிகளைக் கேட்டதும் வாலிக்கு மெய்யுணர்வு தோன்றலாயிற்று. அவன் ராமனுடைய தன்மையை அறிந்தான். ராமனைப் பலவகையாகத் துதித்து, "ஐயனே, அடியேன்மீது அன்பு செலுத்தி என் ஆவி பிரியும் காலத்தில், எனக்கு நல்லறிவு தந்தருளிய நீரே எல்லாமுமாகிய முழுமுதற் பொருள்; உண்டான அறங்கள் எல்லாம் ஓர் உருவாக உடைய தங்களை இப்பொழுதே கண்டேன். தாங்கள், என்னையும் ஓர் அடியவனாக ஏற்று எனக்கு நற்பதவியைக் கொடுத்தருளவேண்டும்; என் தம்பி செய்த செய்கையால், அவன் இந்த வெற்றரசைப் பெற்றுக்கொண்டு எனக்கு வீட்டரசைத் தந்திருக்கின்றான்! என் தம்பி, தன் முன்னவனைக் கொன்றவன் எனத் தங்கள் தம்பியர் எவரேனும் அவனை இகழ்ந்து பேசுவாராயின்,

தாங்கள் முன்னே கூறியவாறு, 'தம்பியின் குறையைத் தீர்க்கவும், அண்ணன் செய்த நல்வினையால் உயர்பதம் பெறவும், அது நிகழ்ந்தது' என்று சொல்லித் தம்பியரை அவ்வாறு பழித்துக் கூருமல் தடுப்பீராக; தங்களிடம் அடைக்கலமான என் தம்பி, குரங்கு மதியால் தீய செயல்கள் இயற்றுவான் ஆயினும், தாங்கள் அவனைச் சீறி, என்மேல் ஏவிய அம்பினை அவன்மீது எய்துவிடாது அவனை எப்பொழுதும் பாதுகாத்தருள்க; தங்களுடைய காரியங்களை அடியேன் ஒரு நொடி நேரத்தில் முடித்துக் கொடுத்துவிடுவேன்; எனக்கு அப்பேறு வாய்க்காது போயிற்று; கடந்துவிட்டதைக் கூறுவதில் பயன் யாதுமில்லை; எனினும், இந்த அநுமன் கருதியதை முடித்துக் கொடுக்கும் ஆற்றல் உள்ளவன்; ஆதலின் இவனையும் சுக்ரீவனையும் சேர்த்துக்கொண்டு, தேவியாரைத் தேட முயலுங்கள், தாங்கள் வெற்றியடைவீர்கள்'' என்று கூறினன்.

அப்பொழுது தன்னுடைய முடிவை நினைத்துக் கண்ணீர் விட்டுக்கொண்டு அருகே நிற்கும் சுக்ரீவனைப் பார்த்துத் தேறுதல் கூறி, அவனை ராமனுக்கு என்றும் அடியவனுக இருக்கப் பணித்தான்; தன் மைந்தன் அங்கதனை வரவழைக்கும்படிச் சொன்னுன். அவ்வாறே அங்கதன் வந்தான்; அவன் தன் தந்தையின் நிலையைக் கண்டு வருந்தி அவன்மீது விழுந்து பலவாறு புலம்பி அழுதான். அவ்வளவில் வாலி, தன் மைந்தனைத் தேற்றி, ''மகனே! ராமர் நம் தந்தையைக் கொன்றுவிட்டார் என்று நீ அவரைப் பகைவராய்க் கருதாதே; என்னுடைய நல்வினைப் பயனுல் அவர் எனக்கு நற்பதவியை அளித்திருக்கிருர். நீ ராமனுக்கு அடியவனுக இருப்பாயாக'' என்று அங்கதனை ராமனுக்குக் காட்டி, ''ஸ்வாமி! இவன் என் மகன்; இன்று முதல் இவன் தங்களுடைய அடைக்கலமாவான்'' என்ருன்.

வாலி கூறியபடி, ராமன், அங்கதனை அருகே அழைத்து, அவனைத் தழுவிக்கொண்டு, ''நீ இதனை ஏந்திக்கொண்டிருப்பாயாக'' என்று சொல்லி, தன் கையிலுள்ள வாளாயுதத்தை அங்கதன் கையிற் கொடுத்தான். அதுகண்ட தேவர்களும், ஏழுலகத்திலுள்ளோரும் ராமனைப் போற்றித் துதித்தார்கள்.

அப்போது அம்பினைப் பற்றியிருந்த வாலியின் பக்கரங்கள் நெகிழ்ந்தன; உடனே அச்சுடுசரம், வாலியின் மார்பைத் துளைத்துப் பின்புறமாக வெளிவந்து, மேலே எழும்பிச் சென்று, கடலில் தோய்ந்து தூய்மையாகித் திரும்பவும் ராமனுடைய அம்புக் கூட்டினைச் சேர்ந்துவிட்டது. வாலியின் உயிர் உடலை நீங்கிப் பரமபதத்தை அடைந்தது.

8. அரசியற் படலம்

வாலி இறந்தமையை அறிந்ததும் அவன் மனைவியான தாரை ஓடோடியும் வந்து, அவன் வீழ்ந்து கிடக்கும் இடத்தை அடைந்தாள். மார்பில் ரத்தம் வழிய மலைபோல நிலத்திற் கிடந்த தன் கணவனைக் கண்டதும், துயரம் பொங்க அவன் உடல்மீது விழுந்து புரண்டு பலவாறு புலம்பினாள். பின்னர் அவள் தன் மகனைக் கூவியவண்ணமாய், ''மகனே! நம் வாழ் வெல்லாம் இன்றோடு கழிந்துவிட்டதை நீ அறியாயா?'' என்று ஏங்கி, ''எவ்வுலகத்திலும் எல்லோருடைய துன்பங்களை நீக்கும் தசரதன் மைந்தரான ராமர், நம்மைத் துன்பக் கடலில் தள்ளி னார்'' என்று கலங்கிக் கண்ணீர் சோரக் கதறினாள். இந்தவித மாகச் சொல்லி ஏங்கி அழுகின்ற தாரையை அநுமன் நோக்கி, ''அம்மையே! தாங்கள் வருந்துவதால் இனி யாது பயன்? மகா வீரரான வாலி, பரம்பொருளாகவுள்ள ராமபிரானார் கையால் மாண்டார். ஆயினும் அவர் எவரும் அடையாத முத்தியைப் பெற்றிருக்கிறார்; அதனால் வீணே நாம் துயரம் கொள்ளுதல் ஒழிக்கத் தக்கதாகும்'' என்று பல தேறுதல் மொழி கூறி, அவளை அரண்மனைக்கு அனுப்பினான். பின்னர், அங்கதனை அழைத்து வாலிக்குச் செய்யவேண்டிய ஈமச் சடங்கி னைச் செய்து முடித்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமனம் ஆவதை அறிந்து, ராமனுடன் யாவரும் புறப்பட்டுச் சுக்ரீவன் இருப்பிடத்தை அடைந்தார்கள்.

சூரியன் உதயமானதும், ராமன் எழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டான். பின்னர், தம்பியை அழைத்து. ''தம்பி! சுக்ரீவனுக்கு இன்று, கிஷ்கிந்தாபுரி அரசனாக முடி சூட்டுக'' என்று பணித்தார். அதற்கு இசைந்த அவன் ஆஞ்சநேயனை, அபிஷேகத்திற்குரிய புண்ணிய தீர்த்தங்களையும், மங்கலப் பொருள்களையும் திரட்டுவித்து, மறையோர்களுக்கும் வானரர் எல்லோருக்கும் செய்தி அறிவிக்கும்படிக் கூறினான். யாவும் சித்தமானதும் தகுதியானவற்றைச் செய்து முடித்து விட்டுப் பின்னர் லக்ஷ்மணன், மறையோர்கள் ஆசி கூறவும், தேவர்கள் மலர்களைப் பொழியவும் வேத விதிப்படிச் சுக்ரீவ னுக்கு மங்கல நீராட்டி மகுடஞ்சூட்டிக் கிஷ்கிந்தை அரசனென அறிவித்தான்.

அதன் பின்னர் சுக்ரீவன் பெரியோர்களை வணங்கி யாவ ருக்கும் இனிய மொழிகளைச் சொல்லி, தன்னுடைய நன்றியறி தலைத் தெரிவித்தான். அவன், லக்ஷ்மணனுடன் அநுமனையும் அழைத்துப்போய், ராமன் இருக்கும் இடத்தை அடைந்து அவன் திருவடிகளில் வணங்கினான். ராமன் சுக்ரீவனை அன்புடன்

தழுவிக்கொண்டு, ''அன்பனே, நீ கிஷ்கிந்தையை அடைந்து, மனுநெறி வழுவாமல் அரசு புரிந்து போரில் மாண்டவன் மைந்தனை அங்கதனுடன் இனிதே வாழ்வாயாக'' என்று கூறினன். பின்பு ராமன், சுக்ரீவனுக்கு அரசனுக வருவோன் மேற்கொள்ளத்தக்க ஒழுக்கங்களும், பெரியோர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் தெரிவித்து, அமைச்சர்கள், படைத் தலைவர்கள் ஆகியோரின் ஆலோசனைகளை ஏற்று அரசியற்றும்படியும் கட்டளை இட்டான். சுக்ரீவன் ராமனையும் இளவலையும் தன்னுடன் வந்து அரண்மனையில் இருக்கும்படிக் கேட்டுக்கொண்டான். ராமன் அவனைப் பார்த்து, ''தோழனே! அரசர்கள் இருக்கும் அரண்மனையில் வசிப்பது, என் போன்ற தவவிரதம் கொண்டவர்களுக்குத் தகாது. நான் உன்னுடன் இருந்தால், நீ என்னைப் போற்றி வழிபாடு செய்வதிலேயே நேரத்தைக் கழித்திடுவாய். அதனுல் உன் அரச காரியங்கள் தடையாகும் ; பதினன்கு வருடங்களையும் வனத்திலிருந்து கழிப்பதாகச் சொல்லி வந்த நான் அக்காலம் கழிவதற்குமுன் நகரத்தில் வந்து இருக்கமாட்டேன் ; 'சீதையை, அரக்கன் ஒருவன் எடுத்துப் போய்ச் சிறைப்படுத்தி வைத்திருக்க, இவன், சிறிதும் வருந்துதல் இன்றி அவளைத் தேடிச் செல்லாமல், நண்பன் வீட்டில் இன்பம் கொண்டிருக்கிருன்' என்று உலகோர் என்னைத் தூற்றுவார்கள். ஆதலின் நான் என் தம்பியுடன் இங்கேயே இருந்துவருகின்றேன்; நீ கார்காலம் முடியுமட்டும் நகரத்திலிருந்து அரசாட்சி செய்துகொண்டு, அது கழிந்தபின் வானர சேனைகளைத் திரட்டிவந்து தேவியைத் தேடுதற்கு முனைவாயாக'' என்று பணித்தான்.

சுக்ரீவன், ராமன் கூறிய யாவும் பொருத்தமாயிருந்தபடியால், அவற்றை மறுக்கமுடியாமல், கண்ணீர் விட்டுத் துயரங்கொண்டு, ராம லக்ஷ்மணர்களிடம் விடை பெற்று, நகரையடைந்தான். ராமன், அங்கதனையும் சுக்ரீவனுடன் சென்று வசிக்கும்படி அனுப்பிவிட்டு, மாருதியைப் பார்த்து, ''பெருவீரனே! நீயும் சுக்ரீவனுடன் போய், அவனுடைய அரச காரியங்களில் துணையாயிரு'' என்ருன். அதற்கு ஆஞ்சநேயன், ''ஸ்வாமி! நாயினைப் போன்ற நான் இங்கேயே தங்களிடம் இருந்து தாங்கள் ஏவிய பணிகளைச் செய்துவருவேன்'' என்று ராமனுடைய திருவடிகளிற் பணிந்தான். ராமன், அவனுடைய விருப்பத்தை அறிந்து, ''புதியதாக அரசினை ஏற்றிருக்கும் சுக்ரீவனுக்கு, நல்ல முறையில் ஆட்சி செலுத்தும்படி உதவி, பின்னர் எனக்காக வேண்டிய காரியங்களையும் செய்து முடிக்கத்தக்க அறிவிற் சிறந்தவர் உன்னையன்றி வேறு எவரும் இல்லை; ஆதலின், நீ சுக்ரீவனுடனேயே சென்று இருப்பாயாக என்று நானே உன்னை வேண்டுகிறேன்'' என்ருன். ராமன் உரைத்தமை கேட்டு, அநுமனும் சுக்ரீவனுடனே புறப்பட்டுச் சென்ருன்.

ராமன் கட்டளைப்படியே, சுக்ரீவன், அங்கதன், ஆஞ்சநேயன் முதலியோர், வானர வீரர்கள் சூழ, கிஷ்கிந்தைக்கு வந்து சேர்ந்தார்கள். சுக்ரீவன், அங்குள்ள, தன் அண்ணன் மனைவியான தாரையை வணங்கி அவளைத் தன் தாயாகவே கருதினான். அங்கதனை இளவரசனாக்கினான். மந்திரிகளின் ஆலோசனைப்படி அரசாட்சியை நடத்த முனைந்தான்.

ராமனும் லக்ஷ்மணனும், மதங்காசிரமமாகிய அந்த ருசிய முக மலையில், ஓரிடத்தில் பர்ணசாலை அமைத்துக்கொண்டு, அதனில் தங்கி இருந்தார்கள்.

9. கார்காலப் படலம்

கார்காலத்தின் வருகையைக் கம்பர்,

''மாவியல் வடதிசை நின்று வானவன்
ஓவிய மேயென ஒளிக்க வின்குலாம்
தேவியை நாடிய முந்தித் தென்திசைக்(கு)
ஏவிய தூதென இரவி ஏகினான்.''

[**மாஇயல் :** பெரிய இயல்பினுடைய. **ஓவியம் :** சித்திரம். **ஒளிக்கவின் குலாம் :** ஒளியாகிய அழகிய கிரணங்களின் கூட்டம்.]

என்று குறிப்பிடுகின்றார்.

மாரிக்காலம் வரப்போகிறது என்பதற்கு அறிகுறியாக சூரியன், வட திசையிலிருந்து பிரமதேவர் தீட்டிய சித்திர வடிவமோ என்று சொல்லத்தக்க, தன்னுடைய ஒளியாகிய அழகிய கிரணக் கூட்டங்களுடன், சீதையைத் தேடுதற்கு அனுப்பப்பட்ட தூதுவருள் தானும் ஒருவன் என்று தோற்றும்படி யாவரையும் முந்திக்கொண்டு தென் திசையாகச் சென்றான். அக்காலத்தில், வானம் எங்கணும் மேகங்கள் திரண்டு பெருமுழக்கோடு மின்னி மழை பொழியத் தொடங்கின. வாடைக் காற்று நாலா பக்கங்களிலும் வீசிற்று. மலைகளிலிருந்து வழியும் அருவி நீர் பெருக்கெடுத்து வனமெங்கும் காட்டாறுகளாய் ஓடின.

அக்காலத்தில், ராமனுக்குச் சீதையின் பிரிவுத் துன்பம் தோன்றவே, அவன் மிகவும் வருந்தினான். அவன், தம்பியைப் பார்த்து, "தம்பி! அடாத மழையோ விடாது பெய்தபடியே

இருக்கின்றது; இந்த மழைக்காலம் எப்பொழுது நீங்குவது? எப்பொழுது நாம் சீதையைத் தேடிக் காண்பது?'' என்று துக்கப்பட்டான்.

இளையோன் அண்ணனுடைய துயரம் அகலும்படி, ''அண்ணா! அம்மாரிக்காலம் நீங்கும் நாட்கள் அருகிலேயே உள்ளன; வானம் ஒளிபெற்று எங்கும் பகலவன் தோன்றியதும், விரைவில் நாம் வானர சேனைகளைச் சேர்த்துக்கொண்டு தேவியாரைத் தேடிக் கண்டுபிடித்து, அவரை வஞ்சித்தவர்களை வதைத்து ஒழிக்கலாம். ஆதலின், நீங்கள் சிறிதும் கவலை கொள்ள வேண்டா'' என்று தேற்றினான். அவன் தன் அண்ணனிடம் கொண்ட அன்பால் என்ன கூறியும் ராமன் துயரம் தாளாமல், ''இந்த மழைக் காலம் நீங்குவது என்றோ பார்க்கலாம்'' என்று உரைத்தவாறு ஏங்கி இருந்தான். எனினும், ராமனுடைய எண்ணத்திற்கு நீண்டிருப்பதாகத் தோன்றிய அம்மழைக்காலம், சில நாட்கள் கழியவும் தானாகவே நீங்கி, வானம் எங்கும் ஒளி உலாவியது.

10. கிஷ்கிந்தைப் படலம்

கார்காலம் கழிந்து வானம் எங்கணும் உள்ள மப்பு நீங்கவே, ராமன், ஜானகியைத் தேடிக் காணவேண்டும் என்ற பேராவலினால், முன்பு கூறியபடி சுக்ரீவன் சேனையுடன் வருவான் என எதிர்பார்த்தான். சில தினங்கள் கடந்தும் அவ்வாறு அவன் வரவில்லை. அதனால் ராமன், லக்ஷ்மணனைப் பார்த்து, ''வலிமையுடையோனே! அந்தச் சுக்ரீவன் குறித்த காலத்தில் சேனையுடன் நம்மிடம் வரவில்லை; நாம் அவனுக்கு உதவிய அரசச் செல்வத்தின் இன்பத்தில் திளைத்து நம் காரியத்தில் சிந்தையற்று இருக்கிறான் போலும்! அவன் அவ்வாறு இருப்பானாயின் செய்ந்நன்றி மறந்தவனே யாவான். அவ்வாறு, நாம் செய்த உதவியையும் மறந்து, நம்முடன் செய்துகொண்ட நட்பெனும் அன்பையும் அழித்து, சொன்ன சொற்களையும் பொய்யாக்கியோரைக் கொன்றாலும் குற்றமில்லையன்றோ? 'கொடியவர்களைக் கொல்லவும் நல்லறம் செய்யவும் எடுத்த வில்லும் உண்டு; அருங் கூற்றமும் உண்டு; எங்கள் அம்பும் உண்டு' என எம் ஆணையால் கூறுக. எல்விதமாயினும் நீ விரைவிற் சென்று அவன் கருத்தை அறிந்து வா. நாம் அவன் அண்ணனைக் கொன்றதால் நம்மிடம் அச்சமுள்ளவனாயிருக்கின்றான் என்றால், 'வாலி கொடியவனாய் இருந்ததால் கொன்றோம்; நல்லவர்களைக் கொல்லமாட்டோம்' என்று சொல்; மற்றும் அவனைச் சார்ந்தவர்களிடத்தும், 'நீங்கள் குறித்து வந்த காலம் கடந்தும் நம்மிடம் வரவில்லை; இனியும் வாராதிருப்பீர்களாயின், உங்கள்

ஊரும், ஆளும் ஆட்சியும், அன்றி உங்கள் சுற்றமும் மாண்டு போவதுடன், வானரர் என்ற பெயரே இனி இல்லாது போய்விடும்' என்ற செய்தியையும் கூறுவாயாக'' என்று சொல்லும்படி ஏவினன்.

மேலும் ராமன், ''அவர்கள் நம்மைக் காட்டிலும் வலிமையுடையவர்களைக் கண்டு நட்பாக்கிக் கொள்ளலாம் என்று அவமதித்து இருப்பாராயின், உலகு மூன்றிலும் உன்னை வெல்ல ஒருவரும் இல்லை என்பதைத் தெளியக் கூறுவாய். யாவும் கூறியபின்னும் அவர்கள் இசைந்து வராவிட்டால் கோபித்து அவர்களை அங்கு அழித்துவிடாதே. அவர்கள் கூறும் விடையைக் கேட்டு வருக'' என்று லக்ஷ்மணனிடம் தெரிவித்து, அவனைச் சுக்ரீவனிடம் அனுப்பினன்.

லக்ஷ்மணன் அண்ணன் கூறிய யாவற்றையும் கேட்டுச் சிந்தையிற் கொண்டு மிக்க வேகத்துடன் புறப்பட்டுப்போய் கிஷ்கிந்தை நகர் அடைந்தான். அங்கு அவன் வருகையைக் கண்ட வானர வீரர்களில் சிலர், காலனைக் கண்டவர்போல அஞ்சி ஓடிப்போய் அங்கதனிடத்தில், ''ஐயா ! இளையவரான லக்ஷ்மணன் சீற்றத்துடன் வருகின்றார் ; எத்தகைய துன்பம் நேருமோ ?'' என்றார்கள். அங்கதன், அது கேட்டு, விரைந்துபோய் தூரத்திலிருந்தே லக்ஷ்மணனைப் பார்த்து, அவனுடைய முகத்தோற்றத்தை அறிந்து, உடனே சுக்ரீவனிடம் கூறுவதற்காக ஓடினன். அப்பொழுது சுக்ரீவன், ராமபிரானால் தனக்குக் கிடைத்த செல்வத்தின் பெருமிதத்தால் மதுவை அருந்தி மயக்கங்கொண்டு, பெண்கள் பலர் தன் பாதங்களைத் தடவிக்கொண்டிருக்கப் படுத்திருந்தான். விரைந்து வந்த அங்கதனைக் கண்டதும், அப்பெண்கள் எழுந்து போய்த் தூரத்தே நிற்கவும், அவன், சுக்ரீவன் அருகே சென்று, அவனை எழுப்பி, ''சிற்றப்பா லக்ஷ்மணன் சினத்துடன் நம்மிடம் வருகிறான்'' என்றான். படுக்கையினின்று எழுந்த சுக்ரீவன் அங்கதனைப் பார்த்தும் பாராதவன்போல் மதுவின் மயக்கத்தால் ஏதும் கூறாமல் திரும்பவும் படுத்துக்கொண்டான். அது கண்ட அங்கதன், 'இனி இவரை நம்மால் எழுப்பமுடியாது' என்று எண்ணி வெளியே வந்து மந்திரியான அநுமனை அழைத்துக்கொண்டு, சில வானர வீரர்களுடன் தன் அன்னையாகிய தாரையை அணுகி வணங்கி, லக்ஷ்மணன் சீற்றத்துடன் வருதலையும் சுக்ரீவன் மது மயக்கத்தால் உறங்கிக்கொண்டிருத்தலையும் தெரிவித்தான்.

அங்கதன் உரைத்தவற்றைக் கேட்ட தாரை, தன் மகனையும் அநுமனையும் நோக்கி, ''நீங்கள் ராமர் செய்த உதவியை மறந்து செய்வதற்கு அரிய தீமையைத் தேடிக்கொண்டீர்கள் ; விரைவில் அதனை நீக்கவும் எண்ணமல் வாளா இருக்கின்றீர்கள். ராமரிடம் சேனைகளைத் திரட்டிவருவதாய்ச் சொல்லிக் குறித்து வந்த நாளில் நீங்கள் தவறாமல் சென்றாலல்லவோ உங்களுக்கு நன்மை! நீங்கள்

நன்றி மறந்தவர்களாய்விட்டீர்கள்; உங்களுக்கு இத்தகைய செல்வத்தைக் கொடுத்துதவிய ராமர், மனைவியைப் பிரிந்து துன்பக் கடலில் ஆழ்ந்திருக்கும்போது, நீங்கள் இன்பத்தில் திளைத்து மயங்கி இருப்பது என்ன நீதி? கூறிய சொற்களைச் சிதைத்த நீங்கள் அந்த உத்தமரான ராமரைப் பகைத்துக்கொண்டீர்கள். அவரை எதிர்ப்பீராயின் வானரர் குலமே அழிந்துபோகும். இனி என்ன செய்வது?'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, லக்ஷ்மணன் கிஷ்கிந்தை நகரின் கோட்டை வாயிலை அடைந்தான். அவன் அங்கு வருதலைக் கண்ட சில குரங்குகள் அஞ்சி கோட்டை வாயிலை அடைத்துக் கதவைத் திறக்கமுடியாதபடி பெருங்கற்களைக் கொண்டுவந்து தாங்கலாக வைத்து மூடின. குரங்குகளின் செய்கையைக் கண்ட இளையவன், ''நாம் உள்ளே நுழைந்துபோகாமலிருப்பதற்கோ இவை இவ்வாறு செய்கின்றன'' என்று கோபச் சிரிப்புச் சிரித்துக் கதவின் அருகே சென்று அதனைக் காலால் உதைத்தான். உதைக்கவே கதவும், அடுக்கப்பட்டிருந்த மலைபோன்ற கற்களும் சுக்கல் சுக்கல்களாக நொறுங்கிப்போய், அவற்றின் துண்டுகள் நாலா பக்கங்களிலும் நீண்டதூரம் வரை சிதறின. அவற்றால் வானரக் கூட்டங்களில் சில மடிந்தன; சில காயமுற்றன; மற்றும் சில குரங்குகள் அஞ்சின.

அதன் பிறகு, லக்ஷ்மணன் உள்ளே நுழைந்து அரண்மனை வீதி வழியாக நடந்துவந்தான். அந்நேரத்தில் தாரையைச் சுற்றி நின்று பேசிக்கொண்டிருந்த அங்கதனும் அநுமனும் தாரையை, ''அம்மா! அதோ அவனும் வந்துவிட்டான்; இனி நாம் செய்வது யாது?'' என்றார்கள். அப்பொழுது அநுமன் தாரையை நோக்கி, ''தாங்களும் தங்கள் சேடிகளுமாய்ச் சுக்ரீவன் அரண்மனை வாயிலை தடுத்துக்கொண்டால் இளையபெருமாள் கண்ணெடுத்தும் பாரார். இப்போது இதுவே செய்யத்தக்கது'' என்றான். தாரையும், ''நான் சென்று கருத்தை அறிந்துவருகிறேன்'' என்று கூறித் தாதியர் சிலருடன் விரைந்துபோய் லக்ஷ்மணன் முன்னர் வந்து நின்றாள். நூபுரங்கள் ஒலிக்கப் பலவகை அணிகலன்களையுடைய அப்பெண்கள் கூட்டம் தன் எதிரே வந்து நின்றதும், தன் சினம் நீங்கி நாணத்தால் தலைகுனிந்து நிலத்தை நோக்கியவாறு லக்ஷ்மணனும் அவர்கள் எதிரே நின்றான். தாரை அவனைப் பார்த்து, அச்சங்கொண்டு நடுங்கினவளாய், ''ஸ்வாமி, பல காலம் தவம் செய்து பேறு பெற்றவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்குக் கிடைக்கமுடியாத தங்களுடைய திருவடிகள் பட்டதால் இந்நகரமும் எங்கள் இல்லமும் புண்ணியம் பெற்றதாயின; அண்ணலாரான ராமரைச் சிறிது நேரமும் பிரியாதவராகிய தாங்கள் இங்கே எழுந்தருளிய காரியம் யாதோ? அதனைக் கூறியருளவேண்டும்; தாங்கள் சினக் குறிப்புடன் விரைந்து வந்தமை கண்டு வானர சேனை கலங்குகின்றது'' என்று சொன்னாள்; அவள் கூறியதைக் கேட்ட லக்ஷ்மணன்,

இவ்விதமான இனிமை ததும்பும் சொற்களைக் கூறும் இப்பெண் மணி யாரோ?'' என்று நிமிர்ந்து நோக்கினன். குங்குமமும் சாந்தும் கொள்ளாது மங்கலம் தரும் அணிகளை நீக்கி, தூய்மையான வெள்ளாடையைக் கழுத்துவரை போர்த்திய கைம்பெண் வாழ்க்கையைக் கொண்டிருந்த தாரை எதிரில் நின்றிருந்தாள். லக்ஷ்மணன், அவளுடைய துயரம் மிக்க தோற்றத்தைப் பார்த்ததும், 'நம் அன்னையரும் இப்படித்தானே இருப்பார்கள்!' என்று நினைத்து மனங்கலங்கிக் கண்ணீர் சிந்திச் சிறிது நேரம் பேசாது நின்றான்.

பிறகு ஒருவாறு தெளிவடைந்து, ''தாயே! பிராட்டியாரைத் தேடுவதற்காகச் சேனையுடன் வருவதாய்க் குறித்து வந்த நாளில் சுக்ரீவன் வரவில்லை; அதனால் என் அண்ணனவர் மனம் வருந்திச் சுக்ரீவனிடம் போய், அவன் அவ்வாறு வராதிருந்ததற்குக் காரணம் அறிந்துவரும்படி என்னை ஏவ, நான் வந்தேன்; அவருடைய பகைமையைத் தேடிக்கொள்ளும் சுக்ரீவன் நிலையைத் தெரிவிக்கவேண்டும்'' என்று கூறினன்.

அது கேட்ட தாரை, ''ஸ்வாமி! சீற்றம் கொள்ளாதீர்கள்; சிறியோர்களாகிய வானரர்கள் அறியாமல் தீயவை செய்வாராயினும், பெரியோர்களாகிய தாங்களல்லாமல் பொறுத்துக் கொள்பவர் வேறு யாருளர்? அபயம் என அடைந்தவருக்கு அடைக்கலம் தந்து அரசச் செல்வத்தையும் கொடுத்தருளிய நீங்களே பொறுத்துக்கொள்ளவும் வேண்டும்; சுக்ரீனும் மறந்தானில்லை; ஆயிரகோடி தூதுவர்கள் பல திசைகளிலும் வாழும் குரங்கு சேனைகளை இங்கு அழைத்துவர ஏகியுள்ளனர்; வருகின்ற நாளும் நெருங்கிவிட்டது; பிறரால் வெல்லுதற்கு அரிய பெருவீரனுகிய வாலியையே ஓர் அம்பினல் வீழ்த்திய உங்களுக்கு, மற்ற எதிரிகளை வெல்ல ஒரு துணையும் வேண்டுமோ? அப்படியிருக்க, இந்த வானரர்களையோ துணையாகக் கொள்ளப் போகிறீர்கள்! இல்லை, இல்லை, பிராட்டியாரைத் தேடிக காண்பதற்கே இவர்கள் தேவை என நினைத்தீர்கள்; வானரர்களுக்கு அத்தகைய காரியமாவது கிடைத்தது பெரும் பேறுகும். சுக்ரீவன் தன் சேனைகளின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்; சேனைகள் வந்து சேர்ந்ததும் விரைவில் தங்களிடம் வருவான்'' என்றான்.

தாரை சொன்ன யாவற்றையும் கேட்ட நல்லுணர்வினனான இளையவன் தனக்கு அந்த வானரர்கள்மீது அருள் தோன்றச் சினம் தணிந்தான். அத்தருணத்தில் அநுமன் அங்கே வந்து லக்ஷ்மணனை வணங்கி நின்றான். இளையபெருமாள் அவனை நோக்கி, ''எல்லா நீதிகளையும் உணர்ந்துள்ள நீயும் ராமனது காரியத்தை

மறந்திருந்தாயோ?'' எனக் கேட்டான். அதற்கு அநுமன், லக்ஷ்மணனை நோக்கி,

''சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல், மாயா
உதவிகொன் றார்க்கென் றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?''

[சிதைவு அகல்: அழிதல் நீங்கிய. காதல்: அன்பு. மாயா: அழியாத. உபாயம்: வழி, தந்திரம்.]

''அங்ஙனமாக, நான் ராமனது காரியத்தை மறப்பேனோ? சுக்ரீவனும் அதனை மறக்கவில்லை. பேருதவி புரிந்த உங்களை மறந்துவிட்டால் எங்களுக்கு நல்வாழ்வு ஏது? வானர சேனைகளை ஒருங்கு திரட்டுவதற்காக, சுக்ரீவன் எல்லாத் திசைகளிலும் தூதுவரை ஏவி இருக்கிறான்; இதுகாறும் அவை வரவில்லை; எங்கள் தாமதத்திற்குக் காரணம் அதுவேயாகும்; தாங்கள் தங்கள் தமையனாகிய சுக்ரீவனை வந்து காண்க'' என்று அழைத்தான்.

அநுமன் உரைத்தவற்றைக் கேட்ட லக்ஷ்மணன், 'தூதுவரும் சேனைகளும் வரத் தாமதமாயிற்று என்றால், இவர்கள் மேலும் தூதுவர்களை அனுப்பி விரைவில் வரச் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாததால் இவர்களுக்குக் காரியத்தில் கவனக் குறைவு உண்டாகியிருக்கிறது; எனினும், இவர்கள், அகந்தையாலோ, மறதியாலோ இருந்தவர்கள் அன்று. செல்வத்தினால் இன்பம் கொண்டு மயங்கிவிட்டனர் என்றே தோற்றுகிறது; பாவம், அதுவும் நாம் அளித்ததன்றோ! ஆதலின் நாம் இவர்களைக் சினந்து கொள்ளல் தகாது' என்று கருதினான். பின்னர் அநுமனை நோக்கி லக்ஷ்மணன், ''வாயு மைந்த! ராவணன் செய்த வஞ்சகத்தை அறிந்தும், நான் மனக் கொதிப்படைந்து உலகங்களுடன் யாவையும் அழித்துவிட எண்ணினேன். எனினும் அது நீதி அன்று என ஆற்றிக்கொண்டேன்; எதனையும் முறையோடு செய்யவேண்டும் என நினைத்து ராமருக்குத் தேறுதல் மொழிந்து, பிராட்டியாரைத் தேடிக் காணவும், பிறகு ராவணன் முதலியோரைக் குலத்தோடு ஒழிக்கவேண்டும் எனவும் தீர்மானித்தேன்; அப்படியே அவரையும் அழைத்து வந்தேன்; இங்கே வந்து உன்னையும், உன் தலைவனையும் கண்டதால் உங்கள் நட்பு எங்களுக்குக் கிடைத்தது. நீங்கள் தேவியாரைத் தேடிக் கண்டு வருவதாகக் கூறினமையால், உங்கள் வார்த்தைகளுக்கு இணங்கினோம். இன்றேல், ராமன் ஓர் அம்பினை ஏவி விடுவாராயின் அது சென்று, தேவியார் இருக்கும் இடத்தை அறிந்து வந்துவிடும்; உங்கள் விருப்பத்தை முற்றுவிக்கக் கருதி நாங்கள் அவ்வாறு செய்ய

வில்லை; நீங்கள் சொன்னபடிச் செய்யத் தவறியது உங்கள்மீது குற்றமே எனினும், எங்களை அவமதிக்கும் கருத்துடன் கால தாமதம் செய்திருக்கமாட்டீர்கள்; எவ்வாருக இருந்தாலும், அரக்கர்கள் சிறிது காலம் வாழவும், முனிவர்களும் தேவர்களும் தங்களுக்குள்ள துன்பம் நீங்காதிருக்கவும், பாவங்கள் ஒழியா திருக்கவும், ராகவரைச் சினம் கொள்ளும்படியும் செய்துவிட்டீர் கள்'' என்ருன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும் மாருதி, அவனை நோக்கி, ''ஸ்வாமி! எல்லா விதமான கலைகளிலும் வல்லவரான தாங்கள் கடந்தவற்றை மனத்திற் கொள்ளற்க; செய்வோம் என்று ஏற்றுக் கொண்ட ராம காரியத்தைத் தவருமல் செய்து முடிப்போம். இல்லையேல், எங்கள் உயிர் துறப்போம். அதற்குச் சான்று அறனே. தாங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம்'' என்று கூறி லக்ஷ்மணனைச் சுக்ரீவனிடம் அழைத்துச் சென்ருன். தாரை தன் மாளிகைக்கு ஏகினுள். அப்பொழுது அங்கதன் சில மந்திரிகளுடன் லக்ஷ்மணன், முன்னர் வந்து வணங்கினுன். அவனைக் கண்டதும் லக்ஷ்மணன், ''அங்கதா! நீ உன் சிறிய தந்தையிடம் போய் என் வருகையைத் தெரிவி'' என்ருன்.

அது கேட்ட அங்கதன், தன் அச்சம் நீங்கினவனுய், அரண்மனைக்குப் போய்ச் சுக்ரீவனைப் பார்க்க, அவன் அப்பொழு தும் மயக்கத்தால் உறங்கிக்கொண்டிருந்தான். அங்கதன் அவன் பாதங்களை மெதுவாக வருடிக் கொடுத்து அவனை எழுப்பி, ''இளை யவனுன லக்ஷ்மணன் மிக்க சினத்துடன் நம் அரண்மனை வாயி லருகே வருகின்ருன். தாங்கள் உடனே சென்று அவனைக் காண வேண்டும்'' என்று கூறினுன். மகன் கூறியதைக் கேட்டதும் சுக்ரீவன் திடுக்கிட்டு முன்னெரு தடவை இவ்வாறே அங்கதன் வந்து கூறியும், மதுவின் மயக்கத்தால் ஏதும் அறியாதவன் ஆத லின், மகனை நோக்கி, ''குழந்தாய்! நான் குற்றம் ஒன்றும் செய் தேனில்லையே! அவ்விதம் இருக்க, லக்ஷ்மணன் வரக் காரணம் என்ன?'' என்று கேட்டான். அதற்கு அவன், ''சிற்றப்பா! மாரிக் காலம் கழிந்ததும் சேனையுடன் வருவதாக ராமரிடம் சொல்லி வந்தவாறு செல்லவில்லை. ஆதலால் அவர் தங்கள்மீது சீற்றங் கொண்டு இளையவனை அனுப்ப அவன் நம்மிடம் வந்துள்ளான்'' என்று தெரிவித்தாள். மேலும் லக்ஷ்மணன் வந்ததைக் கண்ட வானரர்கள் கோட்டையின் கதவை மூடியதையும், அதன் பின் நிகழ்ந்ததையும் கூறினுன்.

அங்கதன் கூறியன யாவும் கேட்டறிந்த சுக்ரீவன், ''அந்தோ! என்ன காரியம் செய்தேன்? ராமபிரான் செய்த பேருதவியை எண்ணுத கயவன் என்று யாவரும் இகழும்படி நடந்துகொண்

டேனே! இந்தப் பாழும் மது மயக்கமன்றோ என்னை இத்தகைய பழிக்கு ஆளாக்கிவிட்டது:

''வஞ்சமும் களவும் பொய்யும்
மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சமென் றுரை நீக்கும்
தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும்
கள்ளினால் அருந்தி னாரை
நஞ்சமும் கொல்வ(து) அல்லால்
நரகினை நல்கா(து) அன்றே ?''

[மரபு இல்: முறையில்லாத. கொட்பு : தலைசுற்றல். கஞ்சம்: தாமரை. மெல் அணங்கு: மென்மை வாய்ந்த திரு மகள்.]

என்று மனம் வருந்தினான். பின்பு சுக்ரீவன் அங்கதனை நோக்கி, ''இனி நான் பலவிதமான தீமைகளுக்கு உட்படுத்தும் கள்ளினை ஒருபொழுதும் உண்ணமாட்டேன்'' என்று கூறினான்.

பின்னர் இளையவனை அழைத்துவரப் பல விருதுகளுடன் அங்கதனை அனுப்பிவிட்டு, தான் மற்ற வானரர்களுடன் சென்று, அரண்மனைத் தலைவாயிலில் இளையபெருமானின் வருகையை எதிர்பார்த்து நின்றான். விருதுகளுடன் எதிர்கொண்டழைக்கச் சென்ற அங்கதன், நகரின் அரச வீதியில் வரும் இளையபெருமாள் முன் சென்று வணங்கி, ''ஸ்வாமி! சுக்ரீவ மன்னர், தங்களை எதிர்கொள்ள அரண்மனைத் தலைவாயிலில் காத்திருக்கின்றார்'' என்று சொன்னான். அப்பொழுது, சுக்ரீவனும் மந்திரிகளும் வானர வீரரும் சேர்ந்து பலவித சிறப்புக்களுடனே வந்து லக்ஷ்மணனைச் சேவித்தார்கள். சுக்ரீவனைக் கண்ட லக்ஷ்மணனுக்குச் சீற்றம் உண்டாகியது; எனினும். அவன் அதனை வெளிக் காட்டாமல் சுக்ரீவனைத் தழுவிக்கொண்டு அவன் நலத்தையும், அரசாட்சியைப்பற்றியும் விசாரித்தான். சுக்ரீவன் அவனுக்கு ஏற்றவாறு கூறி, ராமருடைய நலத்தைப்பற்றிக் கேட்டறிந்துகொண்டு, அவனுடன் அரண்மனைக்குச் சென்றான்.

சுக்ரீவன் அங்கே இருந்த அரியணையில் அமரும்படி லக்ஷ்மணனை வேண்டினான். அவனும், 'திருமகள் தலைவரான ராமர் புல்லணையில் வீற்றிருக்க நமக்கு இஃது உரியதோ?' என எண்ணினான்; அவன் சுக்ரீவனை நோக்கி, ''நண்பனே! கைகேயியால் மணிமுடி துறந்த எம் தலைவராகிய ராமர் வனத்தில் புல்லாதனத்தில் வீற்றிருக்க நான் பொன்னாதனத்தில் இருக்கவேண்டுமோ?'' என்று கண்கலங்கி நின்றான். லக்ஷ்மணன் துன்ப மொழியினைக் கேட்ட

சுக்ரீவனும் கண்ணீர் விட்டு மனம் கலங்கினன். பிறகு சுக்ரீவன் இளைய பெருமாளை நோக்கி, ''ஸ்வாமி! உணவருந்தும் காலம் குறுகிவிட்டதால், தாங்கள் நீராடிவிட்டு வருக; யாவரும் உண வருந்தலாமே'' என்றான். அதற்கு லக்ஷ்மணன் அவனை நோக்கி, ''நீ தேவியாரைத் தேடிக் கண்டுபிடித்துக் காட்டுவையாயின் அதுவே எனக்கு அளிக்கும் மிகையான உணவாகும்'' என்றான். பின்னரும் அவன் சுக்ரீவனை நோக்கி, ''கிழங்கு காய்கனி களைக் கொண்டுவந்து கொடுத்து ராமர் உண்ட மீதியையே நானும் உண்பேன் ; வேறு எந்த உணவினையும் நான் விரும்பிய தில்லை ; அவ்வாறு விரும்பினேனாயின் நாயுண்ட எச்சிற்கு ஒப்பா கும். இப்பொழுது, நான் சென்று என் அண்ணனுருக்குப் பழ வகைகளைத் தேடிக்கொண்டு வரல் வேண்டும்; ஆதலின் இங்கே அதிக நேரம் தாமதிப்பதற்கில்லை'' என்றான்.

சுக்ரீவன், லக்ஷ்மணனுடைய உடன்பிறந்த பாசத்தையும், மூத்தோன் என்ற மரியாதையையும் கண்டு வியந்து, 'நாம் குரங்கினம் ஆதலின் நமக்கு இத்தகைய குணங்கள் நமக்கு இல் லாது போயிற்று' என்று தன்னைத் தானே நொந்துகொண்டு, இனி ராமர் காரியத்தில் சிறிதும் தாமதிக்கக்கூடாது என்று கருதியவனாய், அருகில் இருந்த அநுமனை விளித்து, ''சேனைகளை அழைத்துவரச் சென்ற தூதுவர் இதுவரை வரவில்லை ; ஆதலின் நீரும் சென்று, அவர்களைச் சேனைகளுடன் விரைந்துவரும்படிக் கட்டளையிட்டு வாரும்'' என்று கூறி அனுப்பினன்.

சுக்ரீவனும் லக்ஷ்மணரை முன்னிட்டுக்கொண்டு ராமரைக் காணப் புறப்பட்டான் ; லக்ஷ்மணன் கால்நடையாக நடக்கலுற்ற தைக் கண்டு தானும் நடந்தே அவனைத் தொடர்ந்து சென்றான். அங்கதனும் அவர்கள் பின்னே சென்றான். மற்ற வானர வீரர் களும் ஒன்பதினுயிரம் படைகளும் அவர்களுக்கு முன்னும் பின்னு மாய்ச் சென்றன.

யாவரும் ருசியமுக மலையை அணுகியதும் சுக்ரீவன், படை களைப் பின்னே நிறுத்தி அங்கதனை அழைத்துக்கொண்டு, லக்ஷ்மண னுடன் ராமனை அடைந்ததும் அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். ராமன் சினம் நீங்கி சுக்ரீவனைத் தழுவிக்கொண்டு அவனைத் தன்னருகில் உட்கார வைத்தான். பிறகு ராமன், தன் காரியத்தைக் குறித்து ஏதும் கேளாமல் அவனை, ''உன்னுடைய அரசு இயல்பாக நடைபெறுகின்றதா? நீ காக்கின்ற பல உயிர் களும் நின் குடையின்கீழிருந்து இன்பம் எய்துகின்றனவா?'' என்று கேட்டான். சுக்ரீவன், ''ஸ்வாமி ! தங்களுடைய கருணை அடியேனுக்குக் கிடைத்திருக்கும்பொழுது, என் அரசாட்சிக்கும் என் நாட்டு மக்களுக்கும் என்ன குறை இருக்கப்போகிறது? தாங்கள் அளித்த செல்வத்தால் களித்து, மது உண்ட வெறி

யினல் மயங்கித் தங்கள் காரியத்தில் கவலை ற்று இருந்து விட்டேன் ; என்னைப்போல் செய்ந்நன்றி மறந்தவர் எங்கேனும் உளரோ?'' என்று கூறினன்.

ராமன், அவன் அவ்வாறு கூறியதற்கு இரங்கி, ''சுக்ரீவா, உலகத்தில் ஒவ்வொருவரும் தவறு செய்வது இயற்கையாகும். அவ்வாறு செய்யினும் அவர்கள் அதனை உணர்ந்து பச்சாதாபப்பட்டு திருந்திவிடுவரே ஆயின் உயர்ந்தவரே ஆவர். ஆதலால், நான் உன்னுடைய குற்றத்தைப் பாராட்டவில்லை; பரதனைப்போலவே நீயும் எனக்கு ஒரு தம்பியே; நீ உன் கவலையை நீக்குவாயாக'' என்று தேறுதல் கூறி, ''நீதிகள் யாவும் நன்கு உணர்ந்த ஆஞ்ச நேயன் எங்கே?'' என்று கேட்டான். அதற்கு சுக்ரீவன், ''சில நாட்களுக்குமுன், சேனைகள் யாவும் வரவேண்டுமென்று தூது வர்களை அனுப்பியிருந்தும், அவை வரவில்லை ; அதனல் சேனை களுடன் அத்தூதுவரை அழைக்க அவர் சென்றிருக்கிருர். இன்று அல்லது நாளைக்குள் ஆஞ்சநேயர் வந்துவிடுவார். இங்கே இப் பொழுதிருப்பது ஒன்பதினயிரம் வானரப் படைகளே ; மற்ற வானரப் படைகளும், கரடிப் படைகளும் நாளைக்குள் வந்துவிடும் ; அவை வந்தபின்னர் நாம் செய்யத் தக்கவைகளை யோசிப்போம்'' என்று கூறினன்.

ராமன் மகிழ்ச்சி அடைந்து சுக்ரீவனை நோக்கி, ''அப்படி யாயின், நாளைக்கே நாம் செய்யத் தக்கவைகளைப்பற்றிச் சிந்திப் போம் ; ஆதலின் நீ திரும்பி அரண்மனைக்குப் போயிருந்து, சேனை கள் யாவும் வந்தபின்னர் இங்கு வருவாயாக'' என்று சொல்லி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினன். அவ்வாறே சுக்ரீவன் ராமனை வணங்கிக்கொண்டு, எல்லோருடனும் புறப்பட்டுச் சென்ருன்.

பிறகு, ராமன் லக்ஷ்மணனை அழைத்து, ''தம்பி ! நீ சுக்ரீ வனிடம் போய் வந்தது முதல், அங்கு நடந்த செயல்கள் யாவற்றையும் கூறுவாயாக'' என்ருன். அவனும் அங்கு நிகழ்ந்தவைகளில் ஒன்றும் விடாமல் கூறினன். பின்னர் ராமனும் லக்ஷ்மணனும் தங்கள் பர்ணசாலையை அடைந்து இராப் பொழு தைக் கழித்தார்கள்.

11. தானைகாண் படலம்

மறுநாள் உதயமானது. கிஷ்கிந்தை நகரமெங்கும் வானர சேனைகளும், கரடிச் சேனைகளும் கடல்போல் குவிந்துவிட்டன. அச்சேனைகளின் தலைவர்களான சதவலி, சுஷேணன், சுக்ரீவன்

தேவியான ருமையின் தந்தை, ஆஞ்சநேயனைப் பெற்ற கேசரி, கவாக்ஷன், பனசன், நீலன், ததிமுகன், கஜன், ஜாம்பவான், துன்முகன், துமிந்தன், மயிந்தன், கஜகோமுகன், குமுதன், பதுமுகன், ரிஷபன், தீர்க்கபாதன், வினதன், சரபன், நளன், கும்பன், சங்கன், ஆஞ்சநேயன் முதலானோரும், பிரமதேவர் அருளிய கரடி வேந்தன் சாம்புவன், கரடிச் சேனையின் தலைவன் இடும்பனுடனும் வந்து சுக்ரீவனைக் கண்டு வணங்கி நின்றார்கள். படைத்தலைவர்கள் யாவருக்கும் சுக்ரீவன் நல்வரவு கூறி, அவரவர்கள் படைகளை அணிஅணியாக நடத்திவருமாறு, அவர்களுக்குக் கட்டளை இட்டான்.

சுக்ரீவன், ருசியமுக மலையை அடைந்து ராமனைக் கண்டு அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ''ஸ்வாமி! தங்கள் சேனைகள் யாவும் வந்துவிட்டன'' என்று தெரிவித்தான். ராமன் மகிழ்ந்து, அவற்றைப் பார்க்கும்பொருட்டு லக்ஷ்மணனுடன் மலைமீது ஓர் உயரமான இடத்தில் நின்றான். அத்தருணத்தில், சுக்ரீவன் படைத் தலைவர்களை அணுகி, சேனைகளை எல்லாம் பதினைந்து யோசனை அகலம் கொண்டதாக அணி வகுத்து வடக்கேயிருந்து தெற்கு திசையாக நடந்து செல்லும்படி திட்டம் செய்யக் கூறினன்; பிறகு சேனாதிபதிகளை மட்டிலும் தன்னுடன் அழைத்துக்கொண்டு ராமனிடம் வந்து, ''ஸ்வாமி ! சேனைகளைப் பார்த்தருள்க'' என்றான். ராமன் அவைகளை நோக்கி, வியந்து லக்ஷ்மணனை அருகில் அழைத்து, ''தம்பி! இப்பொழுது இங்கு வந்துள்ள சேனைகளின் கணக்கையும் ஆற்றலையும் கூறுதல் அருமை; கண்ணிற்கெட்டிய தூரம் வரையில் இவை ஆரவாரித்துக்கொண்டு வந்த வண்ணமாய் இருக்கின்றன. இவைகளைச் சரியானபடி கணக்கிட்டு அறிந்தபின்னர் நாம் மேற்கொண்ட காரியத்தை நாடுவோம் என்றால் பல தினங்களாகும். ஆதலின், நாம் செய்யத் தக்கவைகளை இப்பொழுதே தொடங்கவேண்டியதாகும்'' என்றான். அதற்கு அவன், ''அண்ணா ! இவர்களுக்கு அரியது என்பது ஒன்றுமில்லை ; இவர்கள் விரும்பினால் எவ்வுலகிற்கும் சென்று எத்தகைய செயலையும் நிறைவேற்றும் ஆற்றல் உடையவர்களே ; ஆதலால், தேவியாரைத் தேடிக் கண்டு வருவது என்பது இவர்களுக்கு ஒரு சிறிய காரியமேயாகும் ; இப்படையால் இனி பாவம் தோற்கும்; அறமே வெல்லும். நாம் காலம் தாழ்த்தாமல் தேவியாரைத்தேடச் செய்யவேண்டியதே இப்பொழுது செய்யத் தக்கது'' என்று கூறினன்.

12. நாடவிட்ட படலம்

பெருங்கடலாக வந்த வானர சேனைகளையும், கரடிப் படைகளையும் பார்த்து வியப்பெய்திய ராமன், சுக்ரீவனை நோக்கி,

''நீ செய்யவேண்டிய காரியங்களை மேற்கொள்வாயாக'' என்று கூறினான். சுக்ரீவன் அதற்கு இசைந்து, அநுமனை அழைத்து, ''வாயு மைந்தரே! நாம் இனியும் காலம் கடத்தாமல், பிராட்டியாரைத் தேடத் தொடங்கவேண்டியது நம் கடமையாகும். நீர் மிக்க அறிவும் வல்லமையும் உடையவர்; ஆதலின், பிராட்டியாரை அறிந்து, அவர் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று கண்டுவருபவர் நீரே யாவீர். தேவியாரை வஞ்சித்து எடுத்துச் சென்ற ராவணன் தென் திசையாகச் சென்றான் என்பதால் அங்கேயே அவனுடைய நகரம் இருக்கலாம் என்று எண்ணுகிறேன். ஆகையால், அங்கதனையும், ஜாம்பவான் முதலான வீரர்களையும் அழைத்துக்கொண்டு, இரண்டு வெள்ளம் சேனைகளுடன் நீர் தென் திசை நோக்கிப் புறப்படும்.

''மேற்குத் திசைக்கு ரிஷபனும், வட திசைக்குச் சதவலியும், கீழ்த் திசைக்கு வினதனும் படைகளோடு செல்லவேண்டியது. யாவரும் நான் கூறியபடியே புறப்பட்டுச் சென்று பிராட்டியாரைத் தேடிப் பார்த்து, ஒரு மாதம் முடிவதற்குள் இங்கே வெற்றியுடன் திரும்பி வந்துவிட வேண்டும். ஒவ்வொரு திசையிலும் இரண்டு வெள்ளம் வானர சேனைகள் செல்லட்டும்'' என்று ஆணையிட்டான்.

பின்னர் தெற்கு நோக்கிச் செல்லும் வானரர்களை நோக்கி, ''முதலில் கொடு முடிகளையுடைய விந்திய மலைகளும், அதனை அடுத்துப் பாயும் நருமதை நதியும் தோன்றும். அங்கு எல்லா இடங்களிலும் தேவியாரைத் தேடுங்கள். பிறகு ஏமகூடம் செல்வீர்; அங்கேயும் தேடுங்கள். சிறிது தூரம் சென்றதும் தண்டக வனத்திற் புகுந்து, அதிலுள்ள முண்டகத்துறை என்னும் சோலையிலும், பாண்டுகிரியிலும் போய்ப் பாருங்கள்; பிறகு, முத்துக்களை இழுத்துக்கொண்டு பொன் திரட்டி மணிகளை உருட்டி வரும் கோதாவரி நதியைக் காண்பீர்கள்; அங்கிருந்து அருந்ததி மலை, மரகத மலை முதலிய பல மலைகளையும் வனங்களையும் நதிகளையும் சுனைகளையும் தாண்டிப்போய் வேங்கட மலையை அணுகுவீர்; அம்மலையிடத்தே பல முனிவர்கள் ஆச்ரமங்கள் காணப்படும். நீர் மட்டும் அந்த வேங்கட மலைக்குச் செல்லாதிருக்கவேண்டும்; ஏனெனில் அங்குச் செல்வீராயின், உமது பாவம் நீங்கிப் புண்யத்தால் முக்தி உலகு சென்றுவிடுவீர்; அதனால் ராமகாரியம் கெடும். நீர் தொலைவிலிருந்து அம்மலையைச் சேவித்துக்கொண்டு அதன் சுற்றுப்பக்கங்களில் எல்லாம் அன்னையாரைத் தேடும்; அப்பால் தொண்டை நாடு, புனல் நாடு, மலை நாடு, செந்தமிழ் நாடு, பொதிகை மலை, வைகை நதி பாய்வதும் தமிழ்ச் சங்கம் நிலவியதுமான மதுரை நகர் முதலிய இடங்களில் தேடிக்கொண்டுபோனால், முடிவில் மகேந்திர மலையையும் அதற்கப்பால் உள்ள கடலையும் காண்பீர்; அங்கேயும் தேடிப் பார்த்துவிட்டுக் கடலுக்கு அப்புறமும் தேடும்; பிறகு நான் கூறியவாறு ஒரு மாதத்திற்குள் இங்கே வந்து மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்கவேண்டும்; ஸ்வாமியிடம்

விடை பெற்றுக்கொண்டு விரைவிற் செல்லும்'' என்று சொன்னான்.

அவ்வாறே அநுமன், ராமனை நெருங்கி விடை பெறவேண்டி நின்றான். அப்பொழுது ராமன், ''இவன் எவ்விதத்திலும் சீதையைக் கண்டுவருவான்'' என்று நம்பிக்கை கொண்டு, சற்று ஒதுங்கி அமர்ந்து, அநுமனைத் தன் அருகே அழைத்து, அவனை நோக்கி, ''ஆஞ்சநேயா! நீ மிகவும் அறிவாளியாயும், வல்லமையுடையவனாயும் இருக்கிறாய்; நீ சீதையைக் கண்டுவருவாய் என்பதில் சிறிதும் ஐயமில்லை; அவ்வாறு கண்டால் நீ அவளைச் சீதை என்று அறிந்து கொள்வதற்கும், உன்னை அவள் என்னுடைய தூதன் என்று தெரிந்து கொள்வதற்கும், நீ கேட்கவேண்டியவைகளும் கூறத்தக்கவைகளுமாகிய சில வார்த்தைகளையும் அடையாளங்களையும் சொல்லுவேன்; அவைகளை உன் மனத்திற் பதிய வைத்துக்கொள்வாயாக; சீதையினிடத்தில், உத்தம மாதர்களுக்குரிய இலக்கணங்களும், உயர்ந்த பண்புகளும் பொருந்தித் தோன்றும். குழலிசையும் யாழிசையும் ஒன்றாய்க் கலந்ததுபோல அவளுடைய குரலோசை இருக்கும்; பா இயற்றலில் வல்ல பெரும் புலவர்கள் இயற்றிய சொல்லமைதியும் பொருளமைதியும் மிக்க காவியங்களின் நடையே அவளுடைய நடையாகும்; அவளுடைய திருமேனியின் நிறத்திற்கு மாந்தளிரும் பொன்னும்கூட இணையாகமாட்டா. அது தனக்குத் தானே இணையாகும். வேறு மகளிர் சீதைக்கிணையல்லர் ஆகையால் மனமே சான்றாகச் 'சீதை இவள்' என உணர்க.

''அகமனம் ஒப்பச் 'சீதை இவள்' என அறிந்தபின்னர், அவளிடத்தில் முறைப்படி சார்ந்து, இச்செய்திகளைக் கூறுக'' எனப் பின்வருவனவற்றைக் கூறினார். ''ஜனக மன்னரின் வேள்வியைக் காணும்பொருட்டுச் சென்ற விசுவாமித்திர முனிவரின் பின்னே நான் முதன்முதலாக மிதிலை நகர் புக்கபோது, சீதை கன்னிமாடத்திலிருந்து என்னை நோக்கினாள்; நானும் அவளைப் பார்த்தேன். நான் வில் ஒடித்ததைக் கேட்டபொழுது அவள், 'அந்த வில்லினை ஒடித்தவர் முனிவரின் பின்னே வந்த வீரர் அல்லாவிடில் என் உயிரை விட்டுவிடுவேன்' என பிரதிக்ஞை செய்தாள். பிறகு அவள் சபைக்கு வந்தபோதும் நான் அவளைப் பார்த்தேன். அவளும் தன் கைவளை திருத்துவாள்போலக் கடைக் கண்ணால் என்னைப் பார்த்தாள். காட்டிற்கு வரும்பொழுது, நான் எவ்வளவு தடுத்தும், தானும் கூட வருவதாகக் கூறினாள். 'நீ காட்டில் நடப்பதால் உன் மெல்லிய பாதம் நோக அதனால் நீ வருந்துவாய். அதனைப் பார்த்து நானும் வருந்துவேன். ஆதலின் நீ என்னுடன் காட்டிற்கு வருவது எனக்குத் துன்பமே' என்றேன்; அதற்கு அவள், 'என்னைப் பிரிந்தபின் உமக்குக் காட்டிலுள்ளவை எல்லாம் இன்பம் தருமோ? என்று வினவினாள். நாங்கள் அயோத்தியை விட்டு ஆரண்யம் வரும்பொழுது மதில் வாயிலைக் கடந்த மாத்திரத்தில் 'கானகம் எங்கே உள்ளது?' என்றாள்

இத்தகைய செய்திகளை எல்லாம் நான் சொன்னதாக நீ அவளிடம் சொல்வாயாக; இதோ, என்னுடைய மோதிரத்தையும் தருகிறேன்; அதனை நீ அவளிடம் கொடு; அதனால் அவளுக்கு உன்மீது நம்பிக்கை உண்டாகும்; பிறகு, அவள் கூறுவன யாவற்றையும் கேட்டுக்கொண்டு வந்து என்னிடம் சொல்வாயாக'' என்று தன்னுடைய பெயர் பதித்த மோதிரத்தைக் கழற்றி அநுமன் கையிற் கொடுத்து, ''விரைவிற் சென்று வெற்றியுடன் திரும்பிவருவாயாக'' என்று விடை கொடுத்து அனுப்பினான்.

அநுமன் ராமனுடைய திருவடிகளிற் பணிந்து செல்லலுற்றான். மற்ற வீரர்களும் தம் சேனைகளுடன் தமக்குக் குறித்த திசையே சென்றார்கள். அங்கதன், ஜாம்பவான் முதலானோரும் அநுமன் பின்னே சென்றார்கள்.

13. பிலநீங்கு படலம்

சுக்ரீவன் திட்டம் செய்தவாறு மற்ற மூன்று திசைகளிலும் விரைந்து சென்ற வானர வீரர்கள் அங்கங்கே உள்ள மலைகள், நதிகள், ஊர்கள், வனங்கள் முதலான எல்லா இடங்களிலும் சுற்றி அலைந்து சீதாபிராட்டியாரைத் தேடலானார்கள். தென் திசையாகச் சென்ற அநுமன் முதலியோர் மிக்க வேகத்துடன் புறப்பட்டு விந்தியமலையை அடைந்தார்கள்; அம்மலையின் கொடு முடிகளிலும், முழைகளிலும், தாழ்வரைகளிலும், அதன் பக்கங்களிலும் எங்குத் தேடியும் பிராட்டியாரைக் காணவில்லை. பிறகு தென்திசையாக வந்து நருமதை நதியை அணுகி, அங்கும் அதனைச் சார்ந்த பல இடங்களிலும் தேடினார்கள். யாவரும் ஏமகூட மலையை நாடி வந்ததும், தங்களுடன் வந்த இரண்டு வெள்ளம் சேனைகளையும் நோக்கி, ''நீங்கள் தனித்தனியே பிரிந்து சென்று யாண்டும் தேடிப் பார்த்துக்கொண்டு இறுதியாக மகேந்திர மலைக்கு வந்து சேருங்கள்; நாங்கள் இப்படியே சென்று பார்த்துக்கொண்டு அம்மலைக்கு வந்து சேருகின்றோம்'' என்று கூறி அனுப்பிவிட்டு, அநுமன், அங்கதன், ஜாம்பவான் ஆகியோர் சில வானர வீரர்களை உடன்கொண்டு தெற்கே புறப்பட்டு ஒரு பாலைவனத்திற் புகுந்தார்கள்.

நீரும் நிழலுமில்லாத கொடிய வழியாலும், சூரிய வெப்பத்தாலும் அவ்வனத்தில் சிறிது தூரம் செல்வதற்குள் எல்லா வானரர்களும் சோர்வடைந்து விட்டார்கள். அவர்கள் அத்துன்பத்துடனேயே சிறிது தூரம் சென்றதும் அப்பாலைவனத்தில் ஒரு பிலம் இருப்பதைக் கண்டார்கள். அதனைக் கண்டதும்

அவர்கள், ''இனி நாம் இப்பாலையில் நெடுகச் சென்றோமாயின் இறக்கவேண்டியதே ; ஆதலின், இந்தப் பிலத்திற்குள் நுழைந்து அங்கும் தேவியைத் தேடிப் பார்ப்போம்'' என்று எண்ணி, அப் பிலத்தின் உள்ளே நுழைந்தனர். நெடுந்தூரம் சென்றதும், மிக்க இருள் சூழ ஒருவரையொருவர் பார்க்கமுடியாமலும், கால் அடியெடுத்து வைக்க இயலாமலும் அவர்களுக்கு மூச்சு முட்டவும் தொடங்கிவிட்டது. வானரர்கள் செய்வது இன்னதென்று அறி யாதவர்களாய் மயங்கி ஆஞ்சநேயரைக் கூவி, ''இத்துன்பத்தி னின்றும் எங்களை நீர்தாம் காக்கவேண்டும்'' என்றார்கள். அநுமன், அவர்களை, ''நீங்கள் வருந்தவேண்டா ; ராமபிரா னுடைய அருளால் நமக்கு எவ்வகைத் துன்பமும் வராது ; எல்லோரும் என் வாலைப் பற்றிக் கொள்ளுங்கள்'' என்று சொல் லித் தன் வால் நீளமாகும்படிச் செய்துகொண்டான். எல்லோ ரும் தம் கரங்களால் வாலைப் பிடித்துக்கொள்ளவும், அநுமன் கைகளால் தடவிக்கொண்டே விரைந்து சென்றான் ; பன்னிரண்டு யோசனை பரந்து வளர்ந்த பேருருவங்கொண்டு குண்டலங்கள் ஒளி வீசலால் இருள் நீங்க வீரன் விரைந்தான்.

அங்குச் சூரியன் தோன்றாதிருந்தும் மிக்க ஒளியுடன், இருள் என்பது இல்லாமல் அழகுடையதாய் விளங்கிற்று. எவ்வித உயிர்ப் பிராணிகளும் அங்கு இல்லாதிருந்தும், யாவும் ஓவிய வடிவமாயிருப்பது கண்டு, 'இஃதென்ன மாயமோ ?' என்று வியந் தார்கள். அவற்றைக் கண்ட ஜாம்பவான் மிகவும் நடுங்கி, ''இது நம்மை ஒழிப்பதற்கென்று அந்த வஞ்சகன் ராவணன் செய்த வஞ்சகமாக இருக்கலாம். நாம் இந்த அபாயமான இடத் தில் அகப்பட்டுக்கொண்டோமே !'' என்று வருந்திக் கூறினான். அநுமன், அதனைக் கேட்டு, ''இது எத்தகைய வஞ்சகமாக இருந் தாலும், நாம் இப்பிலத்தை விட்டு வெளியேற வழி இல்லையா யின் இந்தப் பூமியையே பெயர்த்துத் தோண்டிக்கொண்டேனும் வெளியே சென்றுவிடுவோம் ; அப்படியும் முடியாவிட்டால், கொடிய அந்த அரக்கரைக் கண்டுபிடித்துக் கொன்றுவிட்டு நாமும் இறப்போம்'' என்று மனம் கொதித்துக் கூறினான். மற்றவரும் அவ்வாறே முடிவு செய்துகொண்டனர்.

அவ்வாறு சுற்றிப் பார்த்து வரும்போது ஓரிடத்தில் ஒரு பெண் தவம் செய்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். எவருமே இல்லாத இந்நகரத்தில், சடைமுடியோடு மிக்க அழகையும், கருணை ததும்பிய கண்களையும் உடைய அவள் வசித்துவருவதைப் பார்த்து வியந்து, அவள் அருகே போய் அநுமன் முதலியோர் வணங்கினர். வானர வீரர்கள் அவளைச் சீதாபிராட்டியோ என ஐயுற்றனர். அப்போது அநுமன் ''சங்குமணி முத்துமணியாகு மாயின் இம்மாதும் ஜானகி ஆகலாம்'' என்று சொல்லி, ''ராம பிரான் கூறிய இலக்கணங்களுள் ஒன்றேனும் இவளிடம்

இல்லையே'' என்றான். அப்பொழுது தவத்திலிருந்த அவ்வணங்கும் கண்விழித்து, எதிரில் நிற்பவர்களைப் பார்த்து, ''நீங்கள் யார்?'' என்று கேட்டாள். அநுமன், தங்களுடைய வரலாற்றையும் அங்கு வந்த காரணத்தையும் கூறினான். அவற்றைக் கேட்டதும் அவள் மகிழ்ச்சியுற்று எழுந்து நின்று, ''ராமபிரான் எங்கே இருக்கிறார்?'' என்றாள். அதற்கு அவன், ராமன் இருக்கும் இடத்தைக் கூறியதும், அவள், ''இன்றுடன் என் தவம் முடிந்தது; உங்கள் வரவு நல்வரவாகுக'' என்று சொல்லி, அங்கு வந்த யாவருக்கும் உணவளித்து உபசரித்தாள். யாவரும் உண்ட பின்னர், அநுமன் அவளை வணங்கி, ''தாயே! தாங்கள் யார் என்பதையும், இவ்வாறு இந்நகரம் இருப்பதற்குரிய காரணத்தையும் சொல்லவேண்டும்'' என்றான்.

அதற்கு அப்பெண் துறவி, மயன் என்ற தேவதச்சன் செய்த தவத்திற்கு மகிழ்ந்து பிரமனால் அவனுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டது இந்நகரம். நான் தேவர் உலகில் வசிப்பவள். என் பெயர் சுயம்பிரபை. அரம்பையரில் ஒருத்தி என் தோழி; அவளை மயன் விரும்பினான். அவளும் அவனை விரும்பினாள். நான் அவள் கருத்தை அறிந்து இங்கே வந்திருந்து மயனுடன் மகிழுமாறு செய்தேன். அவள் என் சொற்படி இந்நகரத்திற்கு வந்து மயனுடன் இருந்தாள். என் தோழியான அவளை நான் நீங்கியிருக்கமுடியாமையால் நானும் இங்கே வந்து அவள் கூடவே வசித்துவந்தேன். ஒருநாள் இந்திரன் அரம்பையைத் தேடி இங்கே வந்து, அத்தானவனைக் கொன்று அவளையும் சீறி, நிகழ்ந்ததை உள்ளவாறு கூறும்படி கேட்டான்; அவள் என்னைச் சுட்டிக் காட்டி, 'இக்காரியங்களெல்லாம் இவளாலேயே நடந்தன' என்றாள். இந்திரன் என்னைச் சினந்துப் பார்த்து, 'நீ இந்த நகரத்திலேயே இருக்கக் கடவை; நீ வெளியேறி வராதிருக்க, இதிலிருந்து செல்லும் பிலத்துவாரம் இருள் சூழட்டும்' என்று சாபம் கொடுத்தான். நான் அஞ்சி, 'எனக்கெப்பொழுது இச்சாபம் நீங்கும்?' என அவனை வேண்டினேன். அதற்கு இந்திரன், 'ராமனருள் கொண்டு வானரங்கள் இங்கே வருவர்; அப்பொழுது இச்சாபம் நீங்க தேவருலகு வரலாம்' என்று சொல்லி அரம்பையை அழைத்துக்கொண்டு போய்விட்டான். அது முதல் நான் இங்கே இருந்து என் பாபம் நீங்கவேண்டித் தவம் செய்துகொண்டிருக்கிறேன். இன்று உங்களுடைய தரிசனத்தால் என் சாபம் நீங்கிவிட்டது. இங்கே என் உபயோகத்திற்கான எல்லாப் பொருள்களும் இருந்தும், நான் அவற்றை நாடாமல் உம்மைக் கண்டு என் சாபம் நீங்கவேண்டும் என்ற கருத்துடன் தவமிருந்தேன்; இந்தப் பிலம் நூறு யோசனை பரப்புடையது. இதனை விட்டுச் செல்லும் வழி புலப்படாமல் இருள் சூழ்ந்திருக்கிறது; நீர் தயைசெய்து நான் தேவருலகு செல்லத்தக்க உபாயத்தைக் கூறவேண்டும்'' என்று இறைஞ்சினாள்.

அவள் வேண்டுதலைக் கேட்ட அநுமன், அவளை வணங்கி, "தாயே! உன் விருப்பப்படி உன்னைத் தேவருலகு அடையச் செய்கிறேன்" என்று கூறினன். அப்பொழுது வானரங்களும் அநுமானைத் துதித்து, அனைவரும் அப்பிலத்தினின்றும் நீங்கி உயிர் பிழைக்குமாறு செய்ய வேண்டினர்கள். ஆஞ்சநேயன் அவர்களுக்குத் தைரிய மொழிகளைக் கூறி, உடனே பேருருவங் கொண்டு, அந்தப் பிலத்தின் மேல்தட்டான பூமியைத் பெயர்த்து, மேற்கடலிற் சென்று விழும்படி எறிந்தான்; அது அக்கடலில் விழுந்த இடமே இன்றும் 'பிலத் தீவு' என்ற பெயருடன் விளங்கிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறு பிலம் பெயர்த்து எறியப்பட்டதும் அவர்கள் இருந்த இடத்திற்கும் பூமியின் சம தளத்திற்கும் இடையில் வெளிச்சம் நிலவிச் செல்லும் வழி தெரிந்தது. அநுமன் முதலியோர் அவ்வழியாகச் சுயம்பிரபையை அழைத்துக்கொண்டு சமவெளிக்கு வந்து சேர்ந்தார்கள்.

சுயம்பிரபை அநுமனிடமும் மற்ற வானர வீரர்களிடமும் விடை பெற்றுத் தேவருலகு சென்றுள். அநுமன் முதலியோர் அங்கிருந்து புறப்பட்டு ஒரு பொய்கைக் கரையை அடைந்தார்கள்.

14. ஆறுசெல் படலம்

அநுமன் முதலியவர்கள் பொய்கைக் கரையை அணுகியதும், சூரியனும் மேல்கடலில் மறைந்தான். யாவரும் பொய்கையில் இறங்கி நீரைப் பருகி, அங்குள்ள காய் கனிகளைப் பறித்துத் தின்று, இளைப்பாற எண்ணினர்கள். அவ்வாறே அவர்கள் பொய்கையின் கரைமீது படுத்து உறக்கம் கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம், அப்பொய்கைக்கு உரியவனை அவுணன் ஒருவன் அங்கே வந்தான். அவன், வானரர்கள் படுத்திருப்பதைப் பார்த்துச் சினம் கொண்டு, "யார் இவர்கள்? சிறிதும் அச்சமில்லாமல், இப்பொய்கை நம்மதென்று உணர்ந்தும், தரையில் படுத்து உறங்குகின்றனர்" என்று அங்குப் படுத்திருந்தவருள் ஒருவனை அங்கதன் மார்பில் ஓர் அறை அறைந்தான். திடுக்கிட்ட அங்கதன் விழித்துப் பார்த்து, அவனை ராவணன் என எண்ணிக்கொண்டு, கணத்தில் எழுந்து நின்று, அவனுடைய மார்பில் தானும் ஓர் எதிர் அறை அறைந்தான். அந்த அறையினல் அவுணன் நெஞ்சு முறிய நிலத்தின்மீது அலறி வீழ்ந்து இறந்தான். பெரிய மலை போன்று அவன் வீழ்ந்த அதிர்ச்சியால் உறங்கிக் கொண்டிருந்தவர்களும் எழுந்து, வீழ்ந்து கிடக்கும் அவுணனை நோக்கி வியப்படைந்தார்கள். அநுமன் அங்கதனை நோக்கி,

"இவன் யாவன்? என்ன செய்தான்?'' என்று கேட்டான். அங்கதன், ''இவன் யாவன் என்பது எனக்குத் தெரியாது; இவன் இங்கு வந்து என்னுடைய மார்பின்மீது அறைந்தான். நானும் அவனை அறைந்து வீழ்த்தினேன்'' என்று கூறினன். அங்கிருந்த ஜாம்பவான், "இவனை நான் அறிவேன், இவன் இந்தப் பொய் கைக்கு உரியவன். இவனைத் துமிரன் என்று சொல்லுவார்கள்'' என்றான்.

பிறகு அவர்கள் உறக்கம் நீங்கி எழுந்தனர்; சூரியனும் உதயமானன். வானரர்கள் தேவியை நாடத் தொடங்கிப் பெண்ணை நதியை அடைந்தனர்; அதன் சுற்றுப்புறங்களிலெல் லாம் பிராட்டியாரைத் தேடிப் பின் அதன் தென் கரையை அடைந்தனர். அங்கும் சீதையைக் காணவில்லை. பிறகு அதனைச் சார்ந்த பல சிறப்புகளையுடைய தண்டகவனம், முண்டகத்துறை, பாண்டுமலை முதலிய இடங்களிலும் தேடினர்கள். அங்கிருந்து புறப்பட்டு கோதாவரி நதி, சுவணத்துறை, அருந்ததிமலை என்பனவைகளையும் கடந்து, திருவேங்கடமலையை அணுகினர்கள். சுக்ரீவன் கட்டளைப்படி அம்மலையருகே செல்லாமல் தூர நின்று சேவித்தனர்; பின்பு யாண்டும் சீதையைத் தேடினர்; பின்னர் அந்தணர் வடிவம் கொண்டு தொண்டை நாடு, சோழ நாடு, தென் தமிழ் நாடு ஆகிய யாவற்றிலும் பிராட்டியைத் தேடிக் காணமல் மனம் வருந்தியவாறு, எண் திசைகளிலும் விளங்கும் யானைகளைப் போன்று, உயர்ந்து தென் கடலையடுத்து நிற்கின்ற மகேந்திர மலையை அடைந்தார்கள்.

15. சம்பாதிப் படலம்

அநுமன் முதலியோர் வானர சேனைகளுடன் மகேந்திர மலைக்கு வந்து சேர்ந்ததும், அதன் அடிவாரத்தை மோதும் பேரலைகள் ஆரவாரிக்கின்ற சமுத்திரத்தைக் கண்டார்கள். அந்த அலைகளின் காட்சியானது, ''சீதாபிராட்டியார் இலங்கையானிடம் சிறை இருக்கின்றாள்; நீங்கள் வாருங்கள்'' என்று கரங்களை எடுத்து அழைப்பதுபோல் இருந்தது. அப்பொழுது, முன்னர் இவர்களைப் பிரிந்து சென்ற வீரர்களும் தம் சேனையுடன் அங்கே இவர்களுடன் சேர, மற்றும் ஒரு கடல் வந்து கூடியதெனத் தோற்றியது. வீரர்கள் யாவரும் ஒன்றுகூடி ஓரிடத்தில் அமர்ந்து, தேடிய இடங்கள் எங்கும் தேவியார் காணப்படாததுபற்றிப் பலவாறு ஆலோசித்தார்கள். 'நம் அரசர் நமக்கு அளித்த நாளும் கழிந்துவிட்டது; நாம் நாடி வந்த காரியம் கைவரவில்லை. தேவி

யாரைக் காண்கிலோம் என்றால் ராகவர் பிழைப்பாரோ? நாம் இனிச் செய்வது யாது? அருந்தவம் செய்வோமா? அல்லது நஞ்சுண்டு மாண்டு போவோமா?' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அத்தருணத்தில் அங்கதன் யாவரையும் நோக்கி, ''நாம் எவ்வுலகிலும் தேடித் தேவியாரை அழைத்துவருவோம்'' என்று நம் தலைவருக்குச் சொல்லிவந்தோம்; சொல்லியவண்ணம் நாம் செய்யவில்லை. இப்பொழுது பிராட்டியார் எங்கும் காணவில்லை என்று நாம் போய்ச் சொல்வோமாயின், உடனே ராகவர் உயிரை விட்டுவிடுவார்; அவருடைய துன்பத்தை நாம் எவ்வாறு தேற்றுவது? ஆதலின் நான் இறந்தொழிகிறேன்; நீங்கள் சென்று நம் தலைவரிடத்திற் கூறிவிடுங்கள்'' என்றான். அங்கதன் பேச்சைக் கேட்டதும் ஜாம்பவான் அவனை நோக்கி, ''அங்கதா? நீயோ வாலிபன். இளவரசனாயும் இருக்கிறாய்; உன் தந்தையும் இறந்து போக, நீ ஒருவனே உன் குலத்திற்குச் சந்ததியாயுள்ளாய்; ஆதலின் நீ இறத்தல் தகாது; ஆயினும் எடுத்த காரியத்தை இனிது முடிக்காத நாங்கள் உயிரை விட்டு விடுகிறோம்; நிகழ்ந்த செய்திகளை நீ சென்று அவர்க்கு உரைக்க'' என்று கூறினான். இவைகளைக் கேட்ட அநுமன் அவர்களை நோக்கி, '' நீங்கள் பயனில்லாத சொற்களைப் பேசி வாது புரிவது தகுதியன்று; நாம் இவ்வுலகில், பிராட்டியாரைத் தேடலுற்றது ஒரு பகுதியிலுள்ள சில இடங்களேயாகும்; இவ்வுலகிலும் மற்ற உலகிலும் நாம் சென்று தேடவில்லை; வானத்திலும் வரைகளிலும் பிலத்திலும் நிலத்திலும் தேடவேண்டிய இடங்களில் எல்லாம் தேடினாலும் நம் தலைவர் காலதாமதம் பற்றி எண்ணார்; ஆதலின், நாம் இனியும் பல இடங்களிற் சென்று அன்னையாரைத் தேடுவதே தக்கதாகும்; அன்னை சீதாபிராட்டியாரை அரக்கன் வஞ்சித்து எடுத்தேகிய போது அமர் புரிந்து ஆருயிரை அர்ப்பணித்த வீர ஜடாயுவைப் போல் வீழ்வதே புகழ்; மற்றையவெல்லாம் இகழே'' என்று கூறினன்.

இவர்கள் இவ்வாறு வருந்திப் பேசும் பேச்சையும் இடையே ஜடாயுவைப்பற்றிக் கூறியதையும் கேட்டு அந்த மலையின் சிகரம் ஒன்றில் வசித்துவந்த ஜடாயுவின் தமையனான சம்பாதி என்ற கழுகரசன், தனக்கு இறகுகள் அற்றமையால், தன் இருப்பிடத்தைவிட்டு மெதுவாக ஒரு குன்று நடந்துவருவது போல அவர்கள் முன்னர் வந்தான். அத்துணைப் பெரிய கழுகினை என்றும் கண்டிராத வானரர்கள், அப்பொழுது சம்பாதியைப் பார்த்ததும் அஞ்சி நாலாபக்கமும் ஓடினார்கள். அநுமன் தைரியமாய் அங்கேயே நின்று, அது அரக்கர்களின் மாயமே என்று எண்ணிப் பொங்கி எழுந்த சினத்துடன் அதன் அருகே எதிரில்

நின்ருன். அச்சம்பாதியின் துயரம் கொண்ட முகத்தைப் பார்த்துக் குற்றம் அற்றவனெனக் குறிப்பினுல் உணர்ந்து சினம் தணிய, 'நீ யார்?' எனக் கேட்டான்.

அதற்குச் சம்பாதி, அநுமனை நோக்கி, ''ஐயா, வெல்லுதற்கரிய வீரனுன ஜடாயுவை யாரோ கொன்றுவிட்டதாகக் கேட்டேன். அது மெய்யாயின், அவனைக் கொன்றவர் யாவர்?'' என்று வினவினுன். அதற்கு அநுமன், ''முன்னர் நீ யாவன் என்பதையும், உன் வரலாற்றையும் கூறுவையாயின், பின்னர் உன் கேள்விக்கு விடை அளிப்பேன்'' என்ருன்; உடனே, சம்பாதி, ''அவன் என் தம்பி; அவனை இழந்து வருந்தும் பேதையான நான் அவனுக்கு முன்பிறந்தவன்'' என்று கூறினுன். அதனைக் கேட்டதும் அநுமன், அவன் ஜடாயுவின் அண்ணனே என்பது அறிந்து, துன்பக் கடலில் மூழ்கியவனுய் மிக்க மரியாதையுடன், சம்பாதியைப் பார்த்து, ''உம்முடைய தம்பி கொல்லப்பட்டது உண்மையே. அந்த வஞ்சகன் ராவணனுல் அவருக்கு அக்கதி உண்டாகியது'' என்ருன். அதனைக் கேட்டதும் சம்பாதி, உடன் பிறந்த பாசத்தால் ஜடாயுவை நினைத்து பலவாறு புலம்பி விட்டுத் தன் உயிரையும் போக்கிக்கொள்ள முற்பட்டான்.

அநுமன் சம்பாதியை நோக்கி, ''ராமருடைய காரிய நிமித்தமாக உயிர்விட்ட ஜடாயு, யாவரும் எளிதில் அடைய முடியாத பரமபதம் பெற்றுவிட்டார். ஆதலின், நீர் வருந்தி உமது உயிரைப் போக்கிக்கொள்ளாதீர்'' என்று தடுத்தான். பின்பு சம்பாதி, ''என் தம்பி, அந்த ராவணனுடன் போர் தொடுக்க காரணம் யாது?'' எனக்கேட்டான். அநுமன், அப்போர் ஜானகியின் நிமித்தமாக உண்டானது என்று விளக்கிக் கூறவும், சம்பாதி மனந்தேறி, ராமர் திருப்பணிக்காக, ஜடாயு உயிர் நீங்கியது அவனுக்குப் பெரும் புண்ணியமாகும் என்று சொல்லி, தம்பிக்காக வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்தான்.

பிறகு சம்பாதி, அநுமன் முதலிய அனைவரையும் நோக்கி, ''ஐயன்மார்களே! நீங்கள் இங்கே வந்து, என்னை வாழ்வித்தீர்கள்; வீரர்களே, என் துன்பத்தைத் துடைத்தீர்கள்; இப்போது நீங்கள் யாவரும் அந்த ராமநாமத்தை உச்சரியுங்கள். எனக்கோர் உறு பயன் உண்டாகும்'' என்ருன்.

''அப்படியானுல் நாம் அந்த அற்புதத்தையும் பார்ப்போம்'' என்று, அநுமன், ஜாம்பவான், அங்கதன் முதலியோரும், சில வீரர்களும் ஒருங்கு சேர்ந்து ராமநாமத்தை இசைத்தார்கள். தாரகமாகிய அந்த நாமத்தை எல்லோரும் கூடி இசைத்து வரும்

பொழுதே சம்பாதியின் இறகுகள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியுறுவதைக் கண்டார்கள். மிக்க வியப்புற்ற அவர்கள் மேலும் அன்பு பெருகத் தம் கரங்களைக் கூப்பிக்கொண்டு, உரக்கப் பாடினார்கள். அத்திருநாமங்களைப் பரவசத்தோடு கேட்டுக்கொண்டேயிருந்த சம்பாதிக்கு முற்றிலும் இறகுகள் வளர்ந்து வலிமையுற்றன. அது கண்ட யாவரும் களிப்படைந்து ராமனைத் துதித்துக்கொண்டு சம்பாதியை வணங்கி, ''கழுகு வேந்தரே? தங்களுடைய முழு வரலாற்றையும் கூறியருளும்'' என்றார்கள்.

சம்பாதி அவர்கள் யாவரையும் நோக்கி, ''அன்பர்களே! கூறுகிறேன் கேளுங்கள். நானும் என் தம்பி ஜடாயும் சூரியன் தேர்ச்சாரதியான அருணனுடைய மக்கள். நாங்கள் கழுகினங்களுக்கு அரசராகி ஆட்சி செய்துவந்தோம். ஒரு நாள் எங்களுக்குத் தேவர் உலகைக் காண ஆவலுண்டாயிற்று. இருவரும் விண்ணிற் பறந்து புறப்பட்டோம்; நாங்கள் சூரியன் தேரின் அருகே சென்றோம். எனக்கு முன் சென்ற என் தம்பி சூரியன் வெப்பத்தினால் தாக்கப்பட்டு வெதும்பிக் கதறினான். அத்தருணத்தில் நான் அவன் முன்னர்ப் போய் என் சிறகின் நிழலால் அவனை மறைத்தேன். அதனால் என் தம்பி இறகுகள் இழக்காமல் உயிருடன் வந்தான். நான் அவனை மறைத்துக் காத்ததால், என் இறகுகள் முற்றிலும் எரிந்து, உடலும் வெந்து வேதனையுடன் சாகாமல், 'லோக சாரங்கர்' என்ற முனிவர் வசிக்கின்ற இந்த மலைச்சாரலில் வந்து வீழ்ந்து மூர்ச்சித்துவிட்டேன். அவ்வாறு விழுந்த என்னைப் பார்த்துக் கருணை கொண்ட அம்முனிவர், தம் கரங்களால் தடவிக் கொடுத்து என்னுடைய இளைப்பை நீக்கினார். அப்பொழுது என் நிலைமையைக் கண்டு இரங்கிய சூரியன் என் முன் தோற்றி, 'பின் ஒரு காலத்தில் ராம காரியமாக அநுமன் முதலிய வானரர்கள் இம்மலைக்கு வருவார்கள்; அவர்கள் வாக்கினால் ராம நாமத்தைக் கேட்பாயாகில், உனக்கு என் வெப்பம் நீங்கிக் குளிர்ச்சியடைந்து, இறகுகளும் வளரும்' என்று அருளிச் சென்றான். எனினும் நான், எனக்குள்ள எரிச்சல் தாங்க மாட்டாது உயிர்விட எண்ணினேன்; அதனை அறிந்த முனிவர், 'விரைவில் ராம தூதர்கள் வருவார்கள்; ஆதலின் நீ உயிர் விடவேண்டாம்' என்று தடுத்து என்னைத் தேற்றினார். என் துயரத்தைப் பார்த்த என் தம்பி, ஜடாயு, எனக்காக வருந்தித் தன் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றான். நான் அவனைத் தடுத்து, 'நானே வலியற்று இருக்கிறேன்; நீயும் இறந்து போனால், கழுகினங்கள் அரசனில்லாது வருந்த நேரிடும்' என்றேன். அவன் அதற்கு இணங்கி அவற்றிற்கு அரசனாகி ஆட்சி செய்துவந்தான். நான் இதுவரை துன்பத்தோடிருந்து, இன்று உங்களால் அது நீங்கப்பெற்றேன். நீங்கள் இங்கே வந்த காரியத்தை உரையுங்கள்'' என்றான்.

அநுமன் முதலியோர், அப்பொழுது ராமரைத் துதித்துக் கொண்டு, தாங்கள் சீதையைத் தேடும்பொருட்டு வந்ததாகத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்டதும், முன்னொரு நாள், ராவணன், நிலத்துடன் ஒரு பெண்ணை எடுத்துச் சென்றது தன் நினைவிற்கு வரலும், சம்பாதி, அப்பெண் சீதையே என்று உறுதி கொண்டு, அவர்களை நோக்கி, ''ராவணன் பிராட்டியாரை இலங்கையில் சிறை வைத்திருக்கிறான்; நீங்கள் அங்கே சென்றால் தேவியாரைக் காணலாகும்; அத்த இலங்கை நூறு யோசனை தூரத்திற்கு அப்பால் உள்ளது. கூற்றுவனும் அவ்வூருக்குச் செல்ல அஞ்சுவான்; அதன் அரசனான ராவணன் வஞ்சகமும் கடுஞ்சினமும் உடையவன். அவனுடைய இலங்கைக்குக் கடலைத் தாண்டிச் செல்லவேண்டும் மும்மூர்த்திகளாலும் காலனாலும்கூட அக்கடலைத் தாண்டுவது எளிதன்று; ஆகையால், வல்லமையுள்ள உங்களுள் ஒருவர் மட்டும் கடலைக் கடந்து போய், மறைந்துகொண்டே இலங்கையிற் புகுந்து ஜானகியைக் கண்டு, ராமர் கூறியதை அறிவித்துவிட்டு, அவர் கூறுவதைக் கேட்டுக்கொண்டு மீண்டும் வர வேண்டும்; அவ்வாறு உங்களால் இயலாதென்றால், நீங்கள் அனைவரும் ராமரைப் போய்க் கண்டு, பிராட்டியார் நிச்சயமாக இலங்கையிலேயே இருக்கிறார் என்று சொல்லுங்கள்; ஆகவே, நீங்கள் இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றை விரைவிற் செய்யுங்கள். என் தம்பி ஜடாயு இறந்துபோனதால் நான், அரசனற்று அலையும் கழுகுகளிடம் செல்கிறேன்'' என்று சொல்லி யாவரிடமும் விடை பெற்றுக்கொண்டு மேலே கிளம்பி ஆகாயத்திற் பறந்து போய் விட்டான்.

16. மகேந்திரப் படலம்

சம்பாதி சென்றபிறகு அநுமன், அங்கதன், ஜாம்பவான் ஆகியோரும் மற்ற வானர வீரர்களும் இனிச் செய்யத்தக்கவை யாவை என்பதுபற்றி ஆலோசிக்கத் தொடங்கினார்கள். 'கழுகரசரான சம்பாதி பொய் உரையார்; அவர் கூறியவாறு பிராட்டியார் கடலுக்கு அப்பாலுள்ள இலங்கையிலேயே இருக்கின்றார் என்பது திண்ணம்; எனவே, நாம் தேவியாரைக் கண்டுகொண்டு ராகவரிடம் திரும்பிச் செல்லல் தக்கது' என்று முடிவு செய்தார்கள். அதனால் அவர்கள், 'நம்முள், இக்கடலைத் தாண்டிச் சென்று வருபவர் யாவர்?' என்று ஒருவரை ஒருவர் கேட்டார்கள். அப்போது நீலன் முதலிய வீரர்கள் தங்களால் கடல் தாண்டல் இயலாது என்று சொல்லிவிட்டார்கள். வாலி மைந்தனான அங்கதன், ''நான் சமுத்திரம் தாண்டி இலங்கையை அடைவேன்;

ஆனுல் அங்கிருந்து மீண்டும் வருதல் என்னுல் இயலுவதன்று'' என்ருன். ஜாம்பவான் அவர்களை நோக்கி, ''வாலிபனுயிருந்த முற்காலத்தில், வேதங்களெல்லாம் அறியமுடியாத பரம்பொருளான நாராயணன், இம்மூவுலகங்களையும் ஈரடியால் அளக்கத் தொடங்கியபொழுது நானே எண் திசைகளிலும் சுற்றிச் சுற்றிச் சென்று பறை அறைந்து வந்திருக்கிறேன். அப்படிச் சுற்றி வரும்பொழுது ஒரு முறை மேருமலையானது என் காலில் மோதியதால், ஒரு கால் ஊனமாகிவிட்டது ; அதனுல், இப்பொழுது நான் சமுத்திரம் தாண்டித் தேவியாரை நாடி வர இயலாதவனுயிருக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சற்று ஆலோசித்த பிறகு அங்கதனை நோக்கி, ''இளவரசனே ! இந்த மாபெருங் காரியத்தைச் செய்து முடிக்கத்தக்கவர் நம்முள் ஒருவரே உள்ளார் ; மற்றவர்களால் அது எண்ணுதற்கும் இயலாததாகும். அத்தகையவர் நம்முள் அநுமார் ஆகிய அஞ்சனை மைந்தர் ஒருவரே ஆவர்'' என்று கூறலும், வானரர்கள் யாவரும் களிப்பினுல் கரங்களைக் கொட்டி ஆரவாரித்தார்கள்.

பின்னர் ஜாம்பவான் அநுமனைப் பார்த்து, ''வாயுதேவன் மைந்தரே ! நீரே அந்த மாபெருங்காரியத்தை ஏற்று முடித்துப் புகழ் பெறத்தக்கவர் ; பிரமதேவரைக் காட்டிலும் நீண்ட ஆயுளைப் படைத்தவர் நீர் ; காலனையும் காயச் செய்யும் சினமுடையீர் ; செந்தீ, நீர், வளியாலும் விளியாதவர் நீர்; தெய்வப் படைக்கலங்களாலும் அழிவில்லாதீர் ;

''நல்லவும் ஒன்ருே தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரியம் நீரே துணிகிற்பீர்
வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடலுண்டேல்
கொல்லவும் வல்லீர் தோள்வலி என்றும் குறையாதீர்.''

மேரு மலையினும் உயர்ந்திருக்கும் பேருருவுடையீர் ; மலை இடுக்கிலும், மழைத்தாரையின் இடுக்கிலும் நுழைய வல்லீர் ; அண்டந்தோறும் தாவவும் வல்லீர் ; பாரை எடுத்து எறியவும், சூரியனைச் சென்று தொடவும் வல்லீர் ; அவன் தேர்முன் சென்று பல நூல்களையும் கற்று அறிந்தீர் ; நீதியில் நின்றீர் ; வாய்மை அமைந்தீர்; மாதரை மறந்தீர் ; மறைகளை உணர்ந்தீர் ; ஊழி கடந்தீர் ; அயன் நானே என அறைந்தீர் ; ஆதலின் உமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவரும் இல்லை ; அத்தகைய நீர் தாம் இச்சமுத்திரத்தைத் தாண்டிச் சென்று, இலங்கையை அடைந்து பிராட்டியாரைக் கண்டு திரும்பி வந்து, எல்லோருடைய உயிரையும் நிலைக்கச் செய்து அழியாப் புகழை உண்டாக்கவேண்டும்'' என்று துதித்து வேண்டினன்.

ஜாம்பவான் கூறிய யாவற்றையும் கேட்ட ஆஞ்சநேயன், தன்னையறியாமல் தன் வலிமை பெருகலுற்றதும் மகிழ்ந்த அவர்கள் அனைவோரையும் பார்த்துக் கரங்களைக் கூப்பிக்கொண்டு, ''பெரு வீரர்களாகிய உங்களுக்கு, நினைத்த மாத்திரத்தில் எத்தகைய கடின காரியத்தையும் செய்யும் ஆற்றல் இருந்தும் நீங்கள் என்மீது கொண்டிருக்கும் அன்பினால் என்னை அளவு கடந்து புகழ்ந்துவிட்டீர்கள்; எனினும், நான் உங்கள் கட்டளையை மறுக்கமாட்டேன்; இருமையும் தரும் ராமருடைய திரு அருளினாலும், உங்களுடைய நல்ல ஆசியினாலும் கடல் தாண்டிச் சென்று உங்கள் கருத்தை நிறைவேற்றுவேன்; நீங்கள் அந்த இலங்கையையே பெயர்த்து எடுத்து வரச் சொன்னாலும் அரக்கர்களை எல்லாம் கொன்று தேவியாரை உடன் கொண்டு ராமரிடம் செல்வாயாக என்றாலும் அவ்வாறே செய்வேன்; நான் இலங்கை சென்று திரும்பி வரும்வரையில், நீங்கள் யாவரும் இம்மலையிடத்தேயே இருங்கள்; நான் சென்று வருவதற்கு எனக்கு விடை அளியுங்கள்'' என்று கூறிப் பேருருக் கொண்டு,


''மின்னெடுங் கொண்டல் தாளின்
வீக்கிய கழலின் ஆர்ப்பத்
தன்னெடுந் தோற்றம் வானோர்
கட்புலத் தெல்லைத் தாவ
வன்னெடுஞ் சிகர கோடி
மகேந்திரம் அண்டந் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத
சிலையெனப் பொலிந்து நின்றான்.''

கிஷ்கிந்தா காண்டம் முற்றிற்று



சுந்தர காண்டம்





காப்பு

''அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ(து) எவரைக் கண்டால்
அவர்என்பர் கைவில் ஏந்தி
இலங்கையிற் பொருதார் அன்றே ?
மறைகளுக்(கு) இறுதி ஆவார்.''

[*அலங்கல்:* கலங்குதல். *அரவு:* பாம்பு. *பூதம் ஐந்து:* நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். *விலங்கிய:* விலங்கிய. *விகாரப் பாட்டின் வேறுபாடு:* ஒன்றிற்கொண்டு மாறுபட்ட வேற்றுமைகள். *வீக்கம்:* வீங்குதல், பூரித்தல். *மறைகள்:* வேதங்கள். *இறுதியாவார்:* முடிவாக உள்ளவர்.]

1. கடல் தாவு படலம்

ஆண்மையிற் சிறந்த ஆஞ்சநேயன், மகேந்திரமலைச் சிகரத்தின்மீது, மிகப் பேருருவம் கொண்டு நின்று நிமிர்ந்து மேலே பார்த்தான். மிக அருகில் விளங்கிய தேவர் உலகு புலப்பட்டது. ''இலங்கை என்பது இதுவேயோ?'' என ஐயம் கொண்டான். இது விண்ணகரம் என்று அறிந்து, பிராட்டியார் இங்கே இருக்க மாட்டார் எனக் கருத்திற்கொண்டு சிறிது முகத்தைத் தாழ்த்திக் கீழாக பார்த்தான். முன்பு கண்ட விண்ணகரைக் காட்டிலும் மிக்க அழகுடைய இலங்கை மாநகர் தோன்றியது. அந்நகர் அழகுடன் விளங்கியது. பின்பு தன் தோள்களைக் கொட்டி ஆர்ப்பரித்தான்.

அப்பொழுது ஆஞ்சநேயன், அச்சிகரத்தின்மீது நின்ற வண்ணமே, கடலின்மேல் தாவிச் செல்லும்பொருட்டுத் தன் இரண்டு அடிகளையும் அழுத்தி ஊன்றினான். வயிறு கிழிந்து குடல்கள் பிதுங்கி வெளிவருவதுபோல அம்மலையின் பிலங்களின் வழியாக நெருப்பைக் கக்கிக்கொண்டு பாம்புகள் வெளியே புரண்டு வந்தன. அதிலுள்ள உயிர்த் தொகுதிகள் அஞ்சி நடுங்கி நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின. பிறகு மலை போன்ற திருமேனியை உடைய அநுமன்,

''வால்விசைத் தெடுத்து வன்தாள்
மடக்கிமார்பு ஒடுக்கி மானத்
தோள்விசைத் துணைகள் பொங்கக்
கழுத்திணைச் சுருக்கித் தூண்டும்
கால்விசைத் தடக்கை நீட்டிக்
கட்புலம் கதுவா வண்ணம்
மேல்விசைத்து எழுந்தான்
....................''

அவ்வாறு விசைந்து எழலும், அவ்விசையினால் உயர்ந்துள்ள மரங்களும் குன்றங்களும் யானைகளும் ஆகிய எல்லாம், 'இது நம் தலைவரான ராமபிரானுடைய கட்டளை' என்று தாமும் இலங்கையை நோக்கிப் பாய்ந்தனபோல மேலே எழும்பின.

இவ்விதமாக ராம காரியமாகத் தாவிச் செல்லுகிற ஆஞ்சநேயனைக் கண்ட தேவர்கள், முனிவர்கள் முதலான மூவகை உலகத்தவர்களும் அவனை வாழ்த்தி, மலர்கள் முதலானவற்றை வாரி இறைத்து விரைவில் இலங்கையை அடையுமாறு வேண்டினர். அவர்களுடைய வாழ்த்தொலியைக் கேட்ட ஆஞ்சநேயன் மகிழ்ந்து பாய்ந்து செல்லலுற்றான். அவனுடைய விசைக் காற்றினால் கடல் அலைகள் மேலே கிளம்பி அவனுக்கும் முன்னே சென்று இலங்கையை மோதின. கடல் நீர் இரு பிளவாகப் பிரியவும் கீழுள்ள நாகர் உலகத்தைக் கண்டு வியந்து, ''நான் இதனைக் காணும் தவமுடையேன் ஆனேன்'' என அவன் மகிழ்ந்தான்.

பிறகு, அவன் முன்னிலும் வேகத்துடன் பாய்ந்து போகும் பொழுது ஒரு காலத்தில், கடல் நீரில் மூழ்கி மறைந்திருந்த மைநாகமலை மேலே எழும்பி வந்து வழியின் குறுக்கே நின்றது. அதனைக் கண்டதும் ஆஞ்சநேயன், ''இஃதேது? இவ்வாறு வழியை அடைத்துக்கொண்டு நிற்பது!'' என்று வெறுப்புடன் பார்த்து அது ஒரு மலை என்று அறிந்து, காலால் தள்ளினான். அம்மலை தலைகீழாக விழுந்து மீண்டும் மனித உருக்கொண்டு அநுமான் முன்வந்து நின்று, மிக்க அன்புடன், ''ஐயா! நான் உமக்குப் பகைவன் அல்லன்; நானே மைநாக மலை; ஒரு காலத்தில் தேவேந்திரன் மலைகளின் சிறகுகளை அறுத்தெறிந்தபொழுது, நான் அச்சம் கொண்டு துயரடைவதைக் கண்டார் உம்முடைய தந்தை வாயுதேவன்; என்னை இக்கடலிற் சேர்த்து இதனுள் மூழ்கி மறைந்து இருக்கும்படிச் சொன்னார்; நீர் அவருடைய மைந்தர் ஆதலின், எனக்கு அவர் செய்த உபகாரத்திற்காக நான் உமக்கு ஓர் உதவி செய்ய எண்ணுகிறேன். அன்றியும், 'ராமபிரான் கட்டளையால் சீதையைத் தேடிக்கொண்டு ஆஞ்சநேயர் வருகிறார்; நீ அவரை அடைந்து அவருக்குள்ள இளைப்பை ஆற்றிவா!' என்று கடலரசரும் எனக்கு உத்தர

விட்டிருக்கிருர்; ஆதலால், நீர் சிறிது நேரம் என்மீது இளேப் பாறியிருந்து, நான் அளிக்கும் விருந்திஜனயும் உண்டு செல்வீராக!'' என்றது.

மனிதனுக வந்த மைநாக மலேயின் இனிய மொழிகளேக் கேட்ட ஆஞ்சநேயன் மகிழ்ந்து, 'இவன், நற்ருயினும் அன்புடையவன்' என்று கருதி, ''அப்பனே! ராமனுடைய திருவருள் எனக்கு இருக்கும்பொழுது எவ்வித இளேப்பும் தோன்ருது; நான் அவருடைய கட்டளேயை முற்றுவிக்காமல் உண்ணமாட்டேன்; நீ என்னிடமும் என் தந்தையாரிடமும் கொண்டுள்ள அன்பைக் கண்டு களிப்படைந்தேன்; அதுவே, நான் உன்னிடம் விருந்துண்டதற்கு ஒப்பாகும். நான் இலங்கை சென்று வெற்றியுடன் மீண்டும் வரும்பொழுது உன்னேக் கண்டு, நீ அளிக்கும் விருந்தை ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லி அதனிடம் விடை பெற்றுப் பாய்ந்து சென்ருன்.

அப்பொழுது தேவர்கள், ஆஞ்சநேயனேக் கண்டு, அவன் வல்லமையை அளவிட்டு அறிய எண்ணியவர்களாய், 'சுரசை' என்பவளே அழைத்து, ''கடலின்மீது பாய்ந்து செல்லும் ஆஞ்சநேயனுடைய வலியின் மெய்ம்மையை அறிந்து வா'' என்று கூறி, அவனிடம் அனுப்பினுர்கள். அவள் ஓர் அரக்கிபோல அநுமன் முன் வந்து நின்று, ''ஏ வானரனே! கூற்றுவனும் அஞ்சத்தக்க என்முன் தோன்றியவனே, நீ வாழ்க. என் வாயிற் புகுந்து, தீப்போன்ற என் பசிப்பிணியைத் தீர்த்துவிட்டுச் செல்'' என்று முழங்கினுள்.

ஆஞ்சநேயன் அவளே நோக்கி, ''பசிப்பிணியால் வருந்தும் பெண்பாலாகிய உனக்கு என் உடலே அளிக்கத் தடை ஏதும் இல்லே. என்ருலும், தேவர் தலேவராகிய ராமருடைய காரியமாக நான் செல்வதால், அதனே முடித்துக்கொண்டு வந்து, பின்னர் உனக்கு உணவாகிறேன்'' என்று கூறி நகைத்தான். அது கேட்ட சுரசை, ''அடா! நீ என்னேப் பரிகசிக்கிருயா? இதோ இந்த ஏழுலகத்தாரும் காணும்படி உன் உடலேத் தின்னுகிறேன் பார்'' என்ருள். ஆஞ்சநேயன், சிறிது ஆலோசித்து அவளே நோக்கி' ''நான் உன்னுடைய பெரிய வாயில் நுழைந்து செல்கிறேன். உனக்குத் திறமையுண்டானுல் என்னேத் தின்னலாம்'' என்ருன். உடனே அவள் தன் அகன்ற வாயைத் திறந்தாள். அத்தருணத்தில் அவன் தன் உடலேப் பெரிதாகச் செய்துகொண்டு நீண்டு வளர்ந்தான். அது கண்ட சுரசை, தன் வாயை மேலும் அகலமாகத் திறந்தாள். அக்கணமே ஆஞ்சநேயன் உடல் சுருக்கி அவள் வாயினுள் நுழைந்து, அவள் ஒரு முறை சுவாசத்தை வெளிவிடு முன் தானும் வெளியே வந்துவிட்டான். சுரசை அவன் செய்கையைக் கண்டு 'இனி நாம் இவனே வெல்லமுடியா'தென



அறிந்தாள். முன்னைய உருக்கொண்டு தாயினும் அன்பு மிகுந்து அநுமனைப் போற்றினுள்; விண்ணவர்கள் ஆசி கூறினர். யாவருடைய ஆசியையும் புனைந்து அநுமன் தன் வழியே பாய்ந்து சென்முன்.

அவ்வாறு சென்ற ஆஞ்சநேயன் சில காவதம் கடந்ததும், திடீரெனத் தன் வேகம் குறைவுற்றமை கண்டு எதுவும் தோன்ருது மயங்கினுன். அப்பொழுது கருமையான அக்கடலின்மீது மற்ருெரு கடல் வந்து பொங்கி எழுவதுபோல், பெருவடிவங் கொண்ட அங்காரதாரை என்ற ஓர் அரக்கி அவன்முன் நின்ருள். "இங்கே வந்த நீ யார்?" என்று உறுமினுள். அவள் அதட்டலைக் கேட்ட ஆஞ்சநேயன் சிறிதும் மனம் கலங்காது நிற்க, அவள் மேலும் சினந்தாள். அநுமன் அவளை நோக்கி, "மேலே செல்லும் பொருள்களை அவற்றின் நிழலோடு இழுத்து உண்ணும் வரம் பெற்றனை போலும்; விரைந்து வரும் என் காரியத்தை அறியாமல் வான வழியை அடைத்துக்கொண்டிருக்கும் நீ யாவள்?" என்று சினந்து கேட்டாள்.

அப்பொழுது அவள், கனல் எழச் சீறி, "தேவர்களும் காலனும்கூட, என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அஞ்சி நடுங்குவர். நீ என்னை ஒரு பெண்பாலென்று எண்ணி அதட்டுகின்ருயா? இதோ உன்னை விழுங்கிவிடுகிறேன்" என்று முழங்கி, நீண்ட பற்களையுடைய தன் அகன்ற வாயைத் திறந்தாள். அநுமன் உட்புகுந்தான். அறம் அரற்றியது; இறந்தானென அமரர் ஐயுற்ருர்; ஆனுல் அநுமன் ஓர் இமைப்பொழுதில் அவள் வயிற்றைக் கிழித்துக் குடரினைப் பற்றினுன். மலை முழையினின்றும் பாம்பைப் பற்றி எடுத்துவருகிற கருடனைப்போல வெளியே வந்து உயர எழும்பினுன். அவ்வளவில் அங்காரதாரை அரற்றிக் கூவியவாறு உயிர் நீங்கினுள். அக்காட்சியைக் கண்ட தேவர், முனிவர் முதலானேர் ஆஞ்சநேயரின் வீரத்தைப் புகழ்ந்து அவனை வாழ்த்தினுர்கள்.

ஆஞ்சநேயன், மேலும் தாவிச் செல்லத் தொடங்கி, "இச் சமுத்திரம், நம்மவர் தெரிவித்த அளவைக் காட்டிலும் அதிக பரப்பினையுடையதாயிருக்கிறது; தாவிச் செல்வதும் கடினமாகக் காண்கின்றது; வழியில் நேரும் துன்பங்களும் பலவாயுள்ளன; எனினும், நாம் விரைவாக இலங்கையை அடைந்துவிட்டோமாயின், இவ்விதத் துன்பங்கள் அணுகா; இனி எவ்விதமான இடையூறுகளும் நேராதிருக்க ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டு செல்வதே தக்கது" என்று எண்ணி, ராமநாமத்தைச் சொல்லியவாறு மிக்க வேகத்துடன் போனுன். சில நாழிகைக்குள், இலங்கைக் கடற்கரை ஓரமாகவுள்ளதும், பசுமையான சோலைகள் சூழ்ந்ததுமான பவளமலையைக் கண்டு அதிற் பாய்ந்து

நின்ருன். அங்ஙனம் நின்றதும் அவன் சிறிது இளைப்பாறினுன். பின்னர் அவ்விடத்திலிருந்தே,

''நன்னகர் அதனை நோக்கி
நளினக்கை மறித்து நாகர்
பொன்னகர் இதனை ஒக்கும்
என்பது புல்லி(து) அம்மா !
அந்நகர் இதனின் நன்றே ?
அண்டத்தை முழுதும் ஆள்வான்
இந்நகர் இருந்து வாழ்வான்
இதுவதற்(கு) ஏது என்ருன்.''

[நளினம் : தாமரை. புல்லிது : இழிவானது. அண்டம் : உலகம். ஏது : காரணம்.]

2. ஊர் தேடு படலம்

பவளமலையில் பாய்ந்து வந்து நின்ற அநுமன் லங்காபுரியின் அமைப்பையும், வானையும் எட்டும் அதன் சுற்றி வளைந்த மதில்களையும், ஆழ்ந்த அகழியையும், பொன்ஞல் இழைத்த மணிகள் பதிக்கப்பெற்று சந்திரனையும் முட்டும்படி விளங்கும் மாட மாளிகைகளையும், பல அரண்மனைகளையும், அழகிய மலர்களைத் தரும் நந்தவனங்களையும் பார்த்துப் பார்த்து வியந்து நின்ற அநுமன்,

''தெய்வத் தச்சனைப் புகழ்துமோ ?
செங்கண்வாள் அரக்கன்
மெய்யொத் தாற்றிய தவத்தையே
வியத்துமோ ? விரிஞ்சன்
ஐயப் பாடிலா வரத்தையே
மதித்துமோ ? அறியாத்
தொய்யல் சிந்தையாம் யாவரை
யாதென்று துதிப்பாம் ?''

''பளிக்கு மாளிகைத் தலந்தொறும் இடந்தொறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்ணறுந் சோலைகள் தோறும்
அளிக்கும் தேறல்உண்(டு) ஆடுநர் பாடுநர் ஆகிக்
களிக்கின் ருர்அலால் கவல்கின்ருர் ஒருவரைக் காணேன்.''

''விற்படை பெரிதென் கோயான்
வேற்படை மிகுமென் கோயான்
மற்படை உளதென் கோயான்
வாட்படை வலிதென் கோயான்
கற்பணம் தண்டு பிண்டி
பாலமென் றினைய காந்தும்
நற்படை உடைத்தென் கோயான்
நாயகற்(கு) உரைக்கும் நாளில்.''

என்றான். சற்று நேரத்தில் சூரியனும் அஸ்தமித்தான்.

எங்கும் இருள் நிலவியது. அவ்விருட் காலத்திலும் இலங்கை நகரிலுள்ள அரக்கர்களும், அவர்களுக்கு ஏவல் செய்துகொண்டு அங்கே இருக்கின்ற தேவர்களும் ஒருங்கே சேர்ந்து வியக்கத்தக்க பல செயல்களைச் செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது நிலவும் எழுந்தது. அத்தருணத்தில், அப்பவளமலையில் இருந்த அநுமன் நகரினுள்ளே செல்ல எண்ணி, ''நாம் இதனுள் எவ்வழி யாகப் புகுவது?'' என்று ஆலோசித்தான். பின்பு ஒரு முடிவுக்கு வந்து, மலையினின்றும் இறங்கி ஆழிபோன்ற அகழினை யுடைய மதிற்புறத்தே அடைந்தான்; அடைந்ததும் அம்மதிலின் உயரத்தையும் உறுதியையும் கண்டு வியந்தான். ''எத்தகையோ ராலும் இதனைக் கடந்து செல்வது அரிதாகும்'' என்று கூறிய வாறு, அதன் வாயிலருகே சென்று மறைவாக நின்று நோக்கி னான். அங்கே பல அரக்க வீரர்கள் வேலும் வாளும் ஏந்தியவர் களாய்க் காவல் செய்துகொண்டிருந்தனர். அவர்களுடைய காவலின் கடுமையை அறிந்ததும், ''நம்முடைய ஸ்வாமி, வலி மிக்க வானர சேனைகளுடன் இங்கே வந்து, இவர்களை எதிர்த்து வென்றாலும், இவ்வாயிலைக் கடந்து உட்செல்வது கடினமாகும். இப்பொழுது நம்மாலும் இதனைக் கடந்து செல்லல் இயலாது; இக்காவலருடன் போர் தொடுக்க முயன்றாலும், அது முடிவுறப் பல தினங்கள் ஆகிவிடும்; ஆதலின், நாம் மற்றொரு பக்கமாய்ப் போய் மதிலைத் தாவிச் செல்வதே தக்கதாகும்'' என்று நினைத்து அக்கோட்டை வாயிலை விட்டு நீங்கி வேறு பக்கமாகச் சென்றான்.

அநுமன் அவ்வாறு செல்லும்பொழுது அந்நகரைக் காவல் செய்து வருபவளான லங்கிணி என்னும் அரக்கி, அநுமனைக் கண்டுவிட்டாள். அவ்வரக்கி,

''எட்டுத் தோளாள் நாலு முகத்தாள் உலகேழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள் சுழல்கண்ணாள்
முட்டிப் பேரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சீறும் காவல் வலத்தாள் கமையில்லாள்.''



அத்தகையாள் வானர வீரனாகிய அநுமனைக் கண்டு சீறி, ''ஆரடா இங்கே வருகிறவன்? நில், நில்!'' என்று இடிபோன்று அதட்டினாள். ஆஞ்சநேயனும் ''வா, வா!'' என்று சொல்லி நின்றான். நின்றமை கண்ட லங்கிணி, ''ஆகாத செயலைச் செய்தாய்! அறிவில்லாக் குரங்கே! நீ சிறிதும் அஞ்சவில்லை போலும்! காய் கிழங்குகளைத் தின்று வாழும் நீ எனக்கு நிகராவாயா? பொன்மதிலைத் தாவித் துன்பப்பட்டுப் பதைக்காதே; போய்விடு'' என்று கண்களிற் புகை தோன்றச் சினந்து கூறினாள்.

அவளுடைய சொற்களைக் கேட்ட அநுமன், தன் சினத்தை அடக்கிக்கொண்டான்; இனி ஆகவேண்டிய காரியங்களை எண்ணி, அவளை நோக்கி, ''நான் இந்த நகரைப் பார்க்க வந்தேன்; அதனால் உனக்கு வரும் இழிவு என்ன?'' என்று நகைத்தவாறு கேட்டான். அவள், ''நான் போய்விடு என்று சொல்லியும் இவ்விடத்தைவிட்டுப் போகாமல் என்னுடன் எதிர்த்துப் பேசுகின்றாயா! முப்புரங்களையும் எரித்த சிவன் முதலியவர்களும் இங்கே வர அஞ்சுவார்கள் என்றால், நீயா இந்த இலங்கை நகரைப் பார்ப்பவன்? நீ யாவனடா?'' என்று சினத்துடன் கேட்டு ஏளனமாக நகைத்தாள். வாயு மகனும் அவள் நகைத்தமை கண்டு புன்முறுவல் கொண்டான். அப்போது அவள் முன்னிலும் மிக்க சினம் அடைந்து, ''என் முன் சிரித்துக்கொண்டு நிற்கிற நீ யாரடா? உன் உயிர் அழியும்; ஓடிவிடு'' என்றாள். ஆஞ்சநேயன், ''நான் இவ்வூரிற் புகுந்து பார்த்தாலன்றி இங்கிருந்து செல்லமாட்டேன்'' என்றான். அது கேட்ட லங்கிணி,

''வஞ்சம் கொண்டான்; வானரம் அல்லன்; வருகாலன்
துஞ்சும் கண்டால் என்னை; இவன்சூழ் திரையாழி
நஞ்சம் கொண்ட கண்ணுதலைப்போல் நகுகின்றான்
நெஞ்சம் கண்டே கல்லென நின்றே நினைவுற்றாள்.''

பின்னர் இவனை இன்னே கொல்லல் வேண்டும்; இன்றேல் இந்நகருக்குத் துன்பம் விளையும் என எண்ணி ஒரு முத்தலைச் சூலத்தைச் சுழற்றி அவன்மீது எறிந்தாள். நாகத்தைக் கடித்து முறிக்கும் கருடனைப்போல அநுமன் அச்சூலத்தைக் கைப்பற்றி ஒடித்து வீசினான்.

லங்கிணி, பல ஆயுதங்களை ஒவ்வொன்றாக அவன்மீது வீசினாள். வாயு மைந்தன் அவற்றையெல்லாம் பற்றித் தொலைவில் எறிந்துவிட்டான். பிறகு அவள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீச முயன்றாள். அப்பொழுது அநுமன் விரைந்து அவளுடைய இரண்டு கைகளையும் தன் ஒருகையால் பற்றிக்கொண்டு, 'பெண்பாலான இவளைக் கொல்லல் ஆகாது' என்று கருதி, மற்றொரு கையால் அவள் மார்பில் ஓங்கி ஓர் அடி

அறைந்தான். உடனே அவள் இடி விழுந்த மலையைப்போல நிலத்தில் உயிர் வருந்த வீழ்ந்தாள். வாயிலும் நாசியிலும் இரத்தம் பெருக்கெடுத்து வழிந்தோடியது. சிறிது நேரம் மூர்ச் சித்திருந்து, பிறகு தெளிந்து எழுந்து நின்ற அவள் வானர வீரனைப் பார்த்து, ''ஐயனே! நான் கூறுவதைக் கேட்பாயாக. நான் இந்த லங்கை நகரைக் காவல் செய்பவள்; என் பெயர் லங்கைமாதேவி; பிரமதேவர் கட்டளையால் நான் இந்நகரத்தின் காவலை ஏற்ற காலையில் அவர் என்னை நோக்கி, 'ஒரு காலத்தில் வலிய குரங்கு ஒன்றினால் நீ அறையப்படுவாய்; அன்றிலிருந்து நகர் காவலை விட்டு என்னுடைய உலகத்திற்கு வந்துவிடு; அதன் பிறகு லங்கை நகர் அழிந்துபோகும்' என்று சொல்லி இருந்தார். அவர் கூறியதுபோல உம்மால் நான் இன்று அறைபட்டேன். எப்பொழுதும் அறம் வெல்லும்; பாவம் தோற்கும்; ஆதலின், உமக்கு முடியாத காரியம் எதுவும் இல்லை. உமக்கு வெற்றி உண்டாகுக'' என்று சொல்லி அவனை வணங்கி விடை பெற்றுச் சென்றாள்.

பின்பு அநுமன் ராமன் திருவடிகளை மனத்தால் துதித்து வணங்கிக்கொண்டு, தன் விருப்பப்படியே மகிழ்ச்சியுடன் மதிலைத் தாவி லங்கை நகரத்திற் புகுந்தான். அங்கே, வானத்தை முட்டும்படியான ரத்தின மயமாக விளங்கிய மாளிகைகளையும், அவற்றின் ஒளியால் இருள் நீங்கிப் பகலாகிய அழகினையும் கண்டு, ஒற்றைச் சக்கரத்தினையுடைய சூரியன்தான் உதயமாகி விட்டானோ என்று துணுக்கம் கொண்டான். நகரெங்கினும் 'நிசிசரர்' என்ற பெயருக்கு ஏற்ப அரக்கர்கள் திரிந்து உலவிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்; அவர்கள் காணாவண்ணம் தன் வடிவை மிகச் சிறியதாகச் செய்துகொண்டு,

''ஆத்துறு சாலை தோறும் ஆனையின் கூடந் தோறும்
மாத்துறு மாடந் தோறும் வாசியின் பந்தி தோறும்
காத்துறு கடைகள் தோறும் கருங்கடல் கடந்த காலால்
பூத்தொறும் அவாவிச் செல்லும் பொறிவரி வண்டிற் போனான்.''


இவ்வாறாக அங்குள்ளோரின் பலவிதமான இயல்புகளைப் பார்த்தவண்ணமே கும்பகருணன் வசிக்கும் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே ஏழு யோசனை பரப்பளவுள்ள ஒரு பெரிய மண்டபத்தில், வானவர் மகளிர் கால்களை வருடிக்கொண்டிருக்க, ஓர் அமளியின்மீது கும்பகருணன் உறங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய சுவாசம் இயங்கும் திசைக்கு நேராக அநுமன் சென்றான். அப்பொழுது கும்பகருணன் உயிர்ப்பு அவனை மாளிகை வாயில் வரையில் தள்ளிக்கொண்டு வந்தது. அவன் உயிர்ப்பை உள்ளே இழுத்துக்கொள்ளும்பொழுது அநுமன் நாசி வரை இழுத்துச் செல்லப்பட்டான். அந்நிலையில் அநுமன் மனம்

கூசித் திகைத்துத் தாவிக் குதித்து வெளியே ஓடிவந்து, அவனுடைய பெரிய உருவத்தைக் கண்டு, இவன் ராவணனாக இருப்பானோ என்று ஐயம் கொண்டான. பிறகு அநுமன் வேறொரு பக்கமாக அவனருகிற் சென்று பார்க்க, அவனுக்குப் பத்துத் தலைகளும், இருபது கரங்களும் இல்லாமையால் 'இவன் அந்த ராவணன் அல்லன்! வேறு யாவனோ தெரியவில்லை. யாவனாக இருந்தாலும் இன்னும் சில தினங்களில் ராமபாணத்தினால் இவன் உயிர்விட வேண்டியவனே' என்று எண்ணி, அவன் மாளிகையை விட்டு நீங்கினான்.

பின்னர் அந்நகரத்திலுள்ள மாடங்கள், கூடங்கள், மாளிகைகள், ஆடலரங்குகள், அம்பலங்கள், சபாமண்டபங்கள், தேவாலயங்கள், வித்தியாசாலைகள், பட்டி மண்டபங்கள் முதலிய பல இடங்களிலும் சீதாப்பிராட்டியாரைத் தேடிப் பார்த்துவிட்டு விபீஷணன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். வந்து சேர்ந்த அநுமன் அதனுள் நுழைந்து அங்கோர் அகன்ற இடத்தில் பவள மல்லிகைப் பந்தரின்கீழ் விபீஷணன் படுத்திருத்தலைப் பார்த்தான். அவனுடைய தோற்றத்தால் ஆஞ்சநேயன், 'இவன், யாவரும் விரும்பத்தக்க நற்குணமுடையவனாயும், நீதிமானாகவும் இருப்பான்' என்று எண்ணினான்.

பிறகு அநுமன் அவ்விடத்தினின்றும் நீங்கி, ஒரு நொடிப் பொழுதில் பல மாளிகைகளையும் பார்த்துக்கொண்டே போய் இந்திரன் சிறையிருந்த இந்திரசித்துவின் அரண்மனையை அணுகினான். அதன் வாயிற்புறத்தே, பல அரக்கர்கள் காவலாக இருந்தனர். அவர்கள் யாவருக்கும் தெரியாமல் அரண்மனையினுள்ளே புகுந்து, பல பெண்கள் ஏவல் புரிய அவர்களுக்கிடையில் யாதொரு கவலையும் இல்லாது இன்பத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருந்த இந்திரசித்தை அநுமன் பார்த்தான். அவனைப் பார்த்ததும் ராமதூதன், 'இவன் யாவனோ? நமக்குத் தெரியவில்லை; எனினும், இவன் மிக்க அழகுடையவன். திரண்ட தோள்களையும் உடையவன். இவன் பெரிய வீரன் என்பதற்கு ஐயமே இல்லை; இவனைச் சார்ந்திருக்கும் ராவணன் சிறிதும் அச்சமின்றி இருக்கலாம். ராமரும் லக்ஷ்மணரும் இங்கே வந்து போர் தொடுத்தால், இவன் அவர்களுடன் பல நாட்கள் சளைக்காமல் போர் புரிவான்' என்று தனக்குள் கூறிக்கொண்டு அங்கிருந்து வெளியே வந்தான்.

அப்பொழுது, ஆஞ்சநேயன், தன்னைக் காவலர் யாவரும் கண்டுகொள்ளாததுபற்றி மகிழ்ந்து, 'நாம் இனி இவ்விரவைக் கழித்துவிடுவது நன்றன்று; விடிவதற்குள் மற்றுமுள்ள இடங்களிலும் பிராட்டியாரைத் தேடிப் பார்த்துவிடவேண்டும்' என்று விரைந்தான். அதிகாயன் முதலிய ராவணன் புதல்வர்கள், மந்திரிகள், படைத்தலைவர் ஆகியோரின் மாளிகைகளிலும் நுழைந்து



தேடிச் சென்றான். அந்நகரின் இரண்டாவதான உள் அகழியையும், அதனைச் சார்ந்து உயர்ந்திருந்த மதிலையும் கண்டு அருகிற் சென்றதும், 'இதனை நாம் எவ்வாறு தாண்டுவது ?' என ஆலோசித்தான். எனினும், ராமனைத் துதித்தவாறு மிக்க வேகமாய்த் தாவி ஏறி அப்பாற் குதித்துப்போய் அக்கோட்டையினுள் இருந்த பல தெருக்களைக் கடந்து அரசர் மாளிகைக்குள் சென்று ஆராய்ந்து கடைசியாக ராவணனது அரண்மனையைச் சுற்றியுள்ள மூன்றாவதான அகழியையும் மதிலையும் தாண்டி, அதன் உட்புறத்தே போனான். அங்ஙனம் சென்றவன், ராவணனுடைய இருப்பிடத்தை அடையும் கருத்துடன் செல்லும் வழியில் மயன் மகளும் ராவணன் மனைவியுமான மண்டோதரியின் அந்தப்புரத்தை அடைந்தான். அந்த மாளிகை, தான் இதுகாறும் பார்த்துவந்திருக்கிற யாவற்றினும் சிறந்து விளங்கியது. அங்கே பெண்களின் தொகை மிக்கிருந்தது. 'இது பிராட்டியார் இருக்கும் இடமாக இருக்கலாம்' என்று நினைத்து, உள்ளே சென்று அலங்காரமான ஓர் அகன்ற கூடத்தில், மெதுவாக நுழைந்து பார்த்தான். அங்கே, ராவணன் மனைவியான மண்டோதரி பல தாதியர்கள் சூழ, மணிகள் ஒளிரும் மஞ்சத்தின்மீதுள்ள மலர்ப்பாயலில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளை நோக்கியதும் ஆஞ்சநேயன் திடுக்கிட்டு, 'இவர் சீதா தேவியாரோ ?' என ஐயுற்றான். பெருந்துயரடைந்து 'குடிப் பிறப்பை இகழ்ந்து தெய்வக் கற்பு நீங்கிய கனங்குழை இவளாயின் காகுத்தன் புகழும் பொலிவும் நானும் இவ்விலங்கையும் அரக்கரும் இன்றே அழிக' என்றான்.

மீண்டும் சிந்தித்த ஆஞ்சநேயன், 'பிராட்டி திருவேயாவார்; இவள் சற்றே வேறுபட்டிருத்தலின் வேறு யாரோ ? இயக்கமாதோ ? அல்லது தானவ குலத்தாளோ ?' என்று ஐயமுற்று அவளை உற்றுப் பார்த்தான். 'ராமபிரான் கூறியவாறு சீதையின் அடையாளங்கள் இவளிடத்திற் சில இருக்கின்றன என்றாலும், அவருக்குரிய அழகுக் குறிகள் முழுதும் கிடையா ! மலர்கள் சூடிய கருமையான கூந்தல் அவிழ்ந்து சோர்ந்துள்ளது. தூக்கத்தில் இருந்தவாறு அச்சமுற்றவள்போல் தீய மொழிகளைப் பிதற்றுகின்றாள் ; இவள் கணவனுக்கும் நகரத்திற்கும் அழிவுண்டாகி, இவளும் துன்பத்திற்குள்ளாவாள் என்பது இவள் செய்கையால் விளங்குகிறது. ஆதலின், நாம் இவளைப் பிராட்டியார் என்று எண்ணுவது தவறாகும்' எனக் கருதி, அங்கிருந்தும் நீங்கி, மேரு மலையும் சிறிது என விளங்கும்படி உயர்ந்து காணப்பட்ட மற்றொரு பெரிய மாளிகையை அடைந்தான்.

அவ்வேளையில் அங்கே பல தீய நிமித்தங்கள் உண்டாயின. அநுமன் நுண்ணிய அறிவால் ஆராய்ந்து பார்த்தபொழுது, 'அந்தோ ! இந்நெடுநகர் விரைவில் அழியும்போலும் ! எக்குலங்

களில் பிறந்தார் யாவரேயாயினும், நல்வினை தீவினை என்பன எல்லோருக்கும் ஒத்திருக்கும்; ஆதலின் விதியினும் வலியது வேறொன்றும் இல்லை' என்று உணர்ந்து, அம்மாளிகையின் உள்ளே புகுந்தான். ஆங்கோர் இடத்தில் பூக்களால் இயன்ற அமளியின் மேல், தேவ மங்கையர் பலர் சாமரங்களை வீச சீதையின் நினைவால் மனம் மாறுபட்டு, உடல் வெதும்பி, அணிந்துள்ள மலர் மாலைகள் தீய்ந்து கருகப் பற்பல விதமான அருவருக்கத்தக்க மொழிகளைக் கூறியவாறு குன்று புரள்வதுபோலப் புரண்டுகொண்டு படுத்திருந்த ராவணனைக் கண்டான் அநுமன். பத்துச் சிரங்களும்' இருபது கரங்களும் உடையவனாய் விளங்கியதால் அவன் ராவணனே என்பதை அறிந்தான். அப்பொழுது அவன் தன் கண்ணில் செந்தீ எழக் கனன்று, 'தேவியாரை வஞ்சித்துக் கவர்ந்து வந்த இக்கள்வனை இப்பொழுது நாம் கண்டும், உயிர் பிழைக்கவிட்டுச் செல்வதா? அவ்வாறாயின், இனி நம் ஆற்றலும் நம்மேல் நிற்கும் புகழும் என்னாவது? இப்பொழுது இவனுடைய தோள்கள் அனைத்தையும் ஒடித்து, முடிகள் தரித்த பத்துத் தலைகளையும் உதைத்து, நிலத்திற் சாய்த்து, இவனையும் இவ்வூரையும் ஒழிக்காவிடின், நாம் ராமபிரானிடம் கொண்ட அடிமைத் திறம் வெறும் நடிப்பாக வன்றோ முடியும்? ஆதலால், இப்பாதகனை இக்கணத்திலேயே கொன்று ஒழிக்கவேண்டியதே' என்று பற்களைக் கடித்துக் கொண்டு, கரங்களைப் பிசைந்தவாறு எழுந்தான்.

அவ்வாறு எழுந்தவன் சற்று யோசித்து நிதானப்பட்டு, "'இப்பொழுது இவனை நாம் கொல்லத் தகாது; ராமபிரான் கட்டளையும் அது அன்று; நாம் இவனை மடிவிப்போமாயின், 'ராமபிரானுடைய மனைவியை ராவணன் எடுத்துப் போய் சிறை வைத்திருக்க, ஒரு குரங்கு சென்று ராவணனைக் கொன்று விட்டது' என்று உலகோர் ஏளனமாகப் பேசுவார்கள். அதனால் நம் பிரானுக்குக் குறைவு உண்டாகும்; இவன் அவருடைய பாணத்தினால் மடிவதே அவருக்குச் சிறப்பு'' என்று தனக்குள் எழுந்த சினத்தை 'இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம் என்னோடும் முடிந்திடுக' என்று கூறி அடக்கிக்கொண்டான்.

பின்னர் ராவணனைச் சூழ்ந்திருந்த பெண்களுள் சீதை இல்லை என்பதை அநுமன் கண்டான். ராவணன் காம நோயால் மெலிந்து பிதற்றிய மொழிகளால் அத்தேவியார் நன்னிலையிலிருந்து பிறழவில்லை என்பதை ஓர்ந்து தன் கவலையை விடுத்தான். பின்பு ராவணன் மாளிகையினின்றும் நீங்கித் தெரு வழியே வந்தான். அந்தப் பெருநகரான இலங்கையைச் சுற்றிலும் நோக்கிய அவன், 'அந்தோ? இவ்வழகிய நகரம், இன்னும் சிறிது காலத்தில், பல அணிகளைப் பூணும் பெண்களுடன் அழியப்போகிறதே!' என்று இரங்கினான். பிறகு அவன், 'தேவியார் எங்கே இருப்பார்?' என்று தேடத்

தொடங்கி, ஒவ்வொரு தெருவாய்ச் சென்று ஆங்காங்கேயுள்ள மாளிகைகளில் நுழைந்து பார்த்தான்; பிராட்டியார் புலப்படாத தால் மிகவும் மனம் வருந்தி, 'இனி நாம் என்ன செய்வது ?'

''கொன்றுனோ கற்பழியாக்
குலக்கொடியை? கொடுந்தொழிலால்
தின்றுனோ? அப்புறத்தே
செறித்தானோ; சிறைஅறியேன்;
ஒன்றுனும் உணர்கிலேன்;
மீண்(டு)இனிப்போய் என்உரைக்கேன்?
.........................''

''கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன்; கவிகுலக்கோன்
கொண்டுவரும் என்றிருக்கும்; யான்இழைத்த கோள்இது.''

''எண்ணியது முடிக்ககிலேன்; யான்முடியா திருப்பேனோ?
புண்ணியமென் றெருபொருள்என் உழைநின் றும் போயதால்.''

என்று பலவாறு கூறிப் புலம்பினுன்.

இவ்வாறு கருங்கடலைத் தாண்டிவந்து துன்பப் பெருங்கடலில் வீழ்ந்த அநுமான் ஒருவாற்றுல் சோகம் தவிர்த்து கோபங் கொண்டு,

''வல்லரக்கன் தனைப்பற்றி வாயாறு குருதியுகக்
கல்அரக்கும் கரதலத்தால் காட்டென்று காண்கேனோ?
எல்அரக்கும் அயில்நுதிவேல் இராவணனும் இவ்வூரும்
மெல்அரக்கின் ஊருகிஉக வெந்தழலால் வேய்கேனோ?''

என வீரவுரை பகர்ந்தான். எள்ளில் எண்ணெய்போல் யாண்டும் பரவி நின்று தன் மனத்தினின்று ஒருபோதும் நீங்காத அழகனைப் போல—பரமனைப்போல—எல்லாவிடத்தும் தேடினுன்; இறுதியில், பெரும் பரப்பினையுடையதும், அழகுள்ளதுமான அசோகவனத்தை அடைந்தான்.

3. காட்சிப் படலம்

ராம தூதன் நறுமலர்கள் மிக்க அசோகவனத்தின் அழகை யும் செழிப்பையும் கண்டு வியந்தான்; 'நாம் இதனுட் சென்று தேடித் தேவியாரைக் காண்போமானுல் நமக்குள்ள குறை நீங்கும்; இங்கேயும் அவர் இல்லாதிருந்தால், நாம் முன்பு ஆலோசித்தவாறு



அரக்கர்களுடன் இந்த இலங்கையையும் அழித்துவிட்டு நாமும் உயிர் விட்டுவிடுவோம்' என்று கூறிக்கொண்டு அவ்வனத்தினுள்ளே நுழைந்தான். அப்பொழுது தேவர்கள் ஆஞ்சநேயன் வனத்துட் செல்வதைப் பார்த்து, 'இனி நம் துன்பம் விலகும் காலம் நெருங்கி விட்டதென மகிழ்ந்து அவன்மீது மலர்மாரி பொழிந்தனர்.

நிற்க, ராவணனல் இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை,

''வன்ம ருங்குல்வாள் அரக்கியர் நெருக்கவங் கிருந்தாள்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணு
நன்ம ருந்துபோல் நலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள்.''

''துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலியற் குழல்மழ லையாள் மானிளம் பேடை
அயிலெயிற் றுவெம்புலிக் குழாத் தகப்பட்ட தன்னுள்.''

''விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் ராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந்(து) உயிர்த்தல்
அழுதல் அன்றிமற் றயலொன்றும் செய்குவ(து) அறியாள்.''

[**வன்மருங்குல்** : வலிய இடை, **கன்மருங்கு**: கல்லின் இடை. **நன்மருந்து** : நல்ல மருந்தான சஞ்சீவிச் செடி. **உணங்கிய** : வாடிய. **மென்மருங்குல்** : மெல்லிய இடை. **அயில் எயிறு** : வேல் போன்ற கூரிய பல். **வெருவல்** : அஞ்சல். **துளங்குதல்** : கலங்குதல். **உயிர்த்தல்** : பெருமூச்செறிதல்.]

தன் உடலைப் பாதுகாத்தலையும் நீக்கினுள்; தான் அங்கே வரும் பொழுது உடுத்தியிருந்த அதே ஆடையுடன் அழுக்கடைந்தவளாய்த் தோற்றினுள்.

இவ்வாறுன நிலைமையில் இருந்த அவள், 'அந்தோ! எனக்குற்ற துன்பம் எப்பொழுது நீங்குமோ ? என் நாதரும் என் மைத்துனரும் என்ன செய்கின்றுர்களோ? அவர்கள் நான் இருக்கும் இடத்தைக் கண்டு அறிவார்களோ மாட்டார்களோ?' என்று எண்ணி அழுவாள். 'எவ்விதமேனும் நம் நாதர் என்னைத் தேடி வருவார். எப்பொழுது வருவாரோ ? அல்லது வந்துகொண்டிருக்கிறுரோ ?' என்று திசையனைத்திலும் பார்த்துக் காணுது திகைப்பாள். பின்னரும். 'அவள் நான் இருக்கும் இடம் தெரியவில்லை போலும்! நான் இக்கொடியோனுடன் வந்த செய்தியை அறிந்த கழுகரசன்

ஜடாயு இறந்துவிட்டானே? அவன் இறத்துபோயிருந்தால் நம் செய்தியை அவர்களுக்கு உரைப்பவர் எவர்?' என்று ஐயுற்று, 'இனி இப்பிறப்பில் நான் நாதரை அடைவது இயலாது போலும்' என்ற சோகக் கனலால் உடல் வாடுவாள். பின்பு அவள், 'தீவினையுடைய நான், சிறிதும் ஆராயாமல் அவருடைய தம்பியை நோக்கிக் கூறிய சொற்களைக் கேட்டு, இவள் அறிவில்லாதவள் என்று என் நாதர் என்னைத் துறந்துவிட்டாரோ? அல்லது என் விதியே என்னை இவ்வாறு பிரித்துவிட்டதோ? என்னைக் கொண்டு போன அரக்கன் என்னைத் தின்றுவிட்டிருப்பான் என்று எண்ணி, என்னைத் தேடுதலை ஒழித்து, அவர் தன் தம்பியுடன் மீண்டும் அயோத்திக்கே சென்றுவிட்டாரோ?' என்று பற்பலவிதமாகப் புலம்பித் துயரப்பட்டுக்கொண்டிருந்தாள்.

சீதா தேவிக்குக் காவலாக பல அரக்க மகளிர் இருந்தனர்; அவருள் விபீஷணன் புதல்வியாகிய திரிசடை என்பவளும் ஒருத்தி. அவள் தேவியினிடத்து மிக்க அன்புடையவளாயிருந்தாள். தேவி மிகவும் துயரப்படுவதைக் கண்டால், அவளுக்குத் தேறுதல் கூறித் துயரத்தை மாற்றுவாள். இப்பொழுது அவள் பலவாருகப் புலம்பலுற்ற காலத்தில், திரிசடையும் மற்றை அரக்க மகளிரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சீதாபிராட்டிக்கு இடப்புருவமும் இடக்கண்ணும் துடித்தன. அதனுல் அவள் தன் னருகே உறங்கிக்கொண்டிருந்த திரிசடையை எழுப்பி அவளை நோக்கி, ''அம்மா! உன்னுடைய அன்பான மொழிகளைக் கேட்பதாலேயே நான் இந்த இடத்தில் உயிருடன் இருக்கின்றேன்; எனக்கு நேரும் நிமித்தங்களை ஆராய்ந்து அவற்றின் நன்மை தீமைகளைச் சொல்லக்கூடியவள் நீயே; நீயே தாயினும் அன்புடையவள். ஆகையால், இப்பொழுது எனக்கு உண்டான சில குறிகளைப்பற்றிக் கேட்கப்போவதால் அவற்றையும் ஆராய்ந்து தக்கவாறு கூறுவாயாக. முன்னொரு நாள், விசுவாமித்திர முனிவருடன் என் நாயகர், மிதிலைக்கு வந்த காலத்தே எனக்கு இடப்புருவமும் இடக்கண்ணும் துடித்தன. தாம் பெற்ற அரசச் செல்வத்தைத் தம்பிக்குக் கொடுத்து என் நாயகர் கானகம் புகுந்த நாளிலும், அவ்விடத்தில், வஞ்சனையால் ராவணன் என்னைக் கவர்ந்து வந்த காலத்திலும் என்னுடைய வலப்புருவமும் வலக்கண்ணும் துடித்தன. சற்றுமுன் இங்கே எனக்கு இடப்புருவமும் இடக்கண்ணும் துடிப்பதைக் கண்டேன். இதனுல் எனக்கு நன்மை உண்டாகலாம் என்று தோன்றுகின்றது; எனினும் இந்நிமித்தத்தைக் குறித்து உன்னுடைய கருத்து யாது?'' என்று கேட்டாள்.

''என்றலும் திரிசடை இயைந்த சோபனம்
நன்றிது நன்றெனு நயந்த சிந்தையாள்
உன்துணைக் கணவனை உறுதல் உண்மையால்''

என்று கூறினுள். மேலும், ''உன் செவியருகே இப்போது ஒரு பொன்வண்டு மெல்லென ஊதிச் சென்றது; ஆகவே, உன் நாயக னிடத்தினின்றும் தூதொன்று வரும். இது திண்ணம்; நான் இப் போது தூங்கும்போது ஒரு கனவு கண்டேன்; நான் கண்ட கன வினுல் வெகு விரைவில் உனக்கு நல்லன நிகழும் என உணர்கி றேன்; என் பெரிய தகப்பனுராகிய ராவணர், தம் பத்துத் தலை களிலும் எண்ணெய் வழியும்படி, சிவந்த ஆடை தரித்துக் கழுதை களையும் பேய்களையும் பூட்டிய தேரின்மீதமர்ந்து, தெற்கு நோக் கிச் செல்லக் கண்டேன். இந்த லங்கை நகரிலும் அரக்கர்கள் இடையிலும் பற்பல திடுக்கிடத்தக்க செயல்கள் நிகழ்ந்தன. இவற்றை ஆராயும்பொழுது இந்நகரில் அரக்கர்களெல்லாம் அழிந்துபோவார்கள். தூக்கத்தில் நான் கண்டிருந்த கனவு முடிவ தற்குள் என்னை நீ எழுப்பிவிட்டாய். எழுப்பாதிருந்தால் மேலும் நடக்கும் செயல்களையும் நான் உணர்ந்திருப்பேன்'' என்ருள்.

சீதை அவளை நோக்கி, மகிழ்ச்சியுடன், ''அப்படியானுல் நீ மறுபடியும் தூங்கு; உன் கனவின் முடிவை அறியலாம்'' என்ருள்.

இவ்வாறு பிராட்டியும் திரிசடையும் பேசிக்கொண்டிருந்த தருணத்தில், அவ்வனத்தினுட் புகுந்த ஆஞ்சநேயன், பல இடங் களிலும் தேடிக்கொண்டே வந்து, அவர்கள் இருந்த இருக்கையின் அருகே ஓர் உயர்ந்த மரக்கிளைமீது அமர்ந்துகொண்டான். அப் பொழுது அங்கு சோகத்தோடு வீற்றிருந்த தேவியைச் சுற்றிலும் உறங்கிக் கிடந்த அரக்கியர் யாவரும் திடுக்கிட்டு எழுந்து, ''ஐயோ! இந்தப் பாழும் தூக்கம் தோன்றி நம்மை மயங்கச்செய்துவிட்டதே'' என்று கலங்கினர்; பின்பு கூச்சலிட்டுக் கைகளில் சூலம், வாள், சக்கரம், தோட்டி, தோமரம் முதலான பற்பல ஆயுதங்களுடன் அவளை நெருங்கி நின்று காவல் காத்தனர். சீதை அவர்களுடைய தீயனைய முகங்களை நோக்கி அச்சம் கொண்டு, ஏதும் பேசுதற் கில்லாது, கண்ணீர் வழியுமாறு இருந்தாள். அப்பொழுது, ஆயு தங்களை ஏந்திய கைகளையுடைய அந்த அரக்கியர்கள், அவ்வாறு நெருங்கிக் குழுமியிருக்கக் காரணம் யாதென அறியும்பொருட்டு ஆஞ்சநேயன் அவர்களை உற்றுநோக்கி அவர்களிடையே சீதையைக் கண்டான்; அக்காட்சியைக் கம்பர்,

''விரிமழைக் குலங்கிழித்(து) ஒளிரும் மின்னெனக்
கருநிறத்(து) அரக்கியர் குழுவிற் கண்டனன்
உருநிறத்(து) ஒருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத்(து) உற்றவேற்(கு) இயைந்த காந்தத்தை.''

[மழைக்குலம்: மேகக் கூட்டங்கள். உரு நிறம்: அழகிய நிறம். **கொண்டல்**: மேகம். **இயைந்த**: பொருந்திய.]



என்று பாடியுள்ளார். கண்டதும், அவள் சீதையே என்று அறிந்து ஆனந்தம் மேலிட்டு, ''தேவியைக் கண்டேன்; கண்டேன்'' என்று அநுமன் கூத்தாடினுன். ராமனைத் துதித்துப் பாடினுன்; அங்கும் இங்கும் ஓடினுன்; மகிழ்ச்சி என்ற மதுவை உண்டு உலாவித் திரியலுற்று, 'அறம் அழியவில்லை; இனி நானும் அழியேன்' என்று கூறினுன். அவனுடைய கூற்றுக்களைக் கம்பர் பின்வரும் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்ருர் :—

''மூவகை உலகையும் முறையின் நீக்கிய
பாவிதன் உயிர்கொள்வான் இழைத்த பண்பிதால்
ஆவதே ஐயமில் அரவின் நீங்கிய
தேவனே அவன்இவள் கமலச் செல்வியே.''

''மாசுண்ட மணியனுள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னைத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக்(கு) ஈறுண்டோ ?''

''புனைகழல் இராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ ?
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ? யாதைச் சாற்றுகேன் ?''

''தருமமே காத்ததோ? சழக்கன் தன்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ?
அருமையே அருமையே யாரிது ஆற்றுவார்?
ஒருமையே எம்மனேர்க் குரைக்கற் பாலதோ ?''

[முறையின் நீக்கிய : நன்முறையினின்று தவிர்த்த. பாவி : ராவணன். இழைத்த பண்பு : செய்த செயல். அரவின் நீங்கிய தேவன் : ஆதிசேடனுகிய பாயலினின்றும் நீங்கி வந்த திருமால். அவன் : அந்த ராமன். இவள் : சீதை. மாசு உண்ட மணி அன்னுள் : அழுக்குற்ற மணிபோன்ற சீதை. வயங்கும் : விளங்கும். தேசு உண்ட : ஒளியுள்ள. காசு : குற்றம். ஏசு உண்டதில்லை : இகழ்ச்சியடைந்ததில்லை. வண்மை : வள்ளல் தன்மை. வீக்கிடும் : பூரிப்படையும். சழக்கன் : மாறுபட்டவன், வஞ்சகனுன ராவணன்.]

மிக மகிழ்ச்சி கொண்ட அநுமன் சீதையின் தூய நிலையைக் கண்டு, 'தீவினை அறத்தை ஒரு போதும் வெல்லாது' எனத் தெளிந்து, 'இனியும் நாம் சிறிது நேரம் இம்மரக்கிளையிலேயே மறைவாக இருந்து மேலும் நிகழ்கின்ற செயல்களைப் பார்ப்போம்'

என்று சீதா தேவியாரைப் பார்த்தவண்ணம் இருந்தான். அப்போது அச்சிறந்த சோலையின்கண் ராவணன் வந்தான்.

4. சிந்தனைப் படலம்

தலைதோறும் விளங்கும் நவரத்ன கசிதமான கிரீடங்கள் இரவும் பகலெனத் தோன்றுமாறு ஒளிவீச, ராவணன் பற்பல உயர்ந்த அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு அங்கு வந்தான். அவனது வருகையைக் கம்பர்,

''உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர
மேனகை வெள்ளடை உதவச்
செருடியினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
அரம்பையர் குழாம்புடை சுற்றக்
கருப்புரச் சாந்துக் கலவையும் மலரும்
கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்பேர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவான் மூக்கிடை மடுப்ப,

''நானநெய் விளக்கம் நாலிரு கோடி
நங்கையர் அங்கையில் எடுப்ப
மேனிவெந் தெழுந்த மணியுடை மணியின்
விரிகதிர் இருளெலாம் விழுங்கக்
கான்முதற் றொடர்ந்த நூபுரம் சிலம்பக்
கிண்கிணி கலையொடுங் கலிப்பப்
பானிறந் தன்னக் குழாம்படர்ந் தென்னப்
பற்பல மழலையும் பகர.''

[வெள்ளடை : வெண்மையான வெற்றிலை. சாந்து : சந்தனம். மருப்ப : கொம்பு. மாதிரக் களிறு : திசைதொறுமுள்ள யானைகள். நானம் : வாசனையுள்ள (கஸ்தூரி). நூபுரம் : காற்சிலம்பு. சிலம்ப : ஒலிக்க. கலிப்ப : ஓசை செய்ய. பால் நிறத்தன்ன : பால் போன்ற வெண்மையான நிறத்தினையுடைய பெண்கள். மழலை : நிரம்பாத மென்சொல்.]

என்று வருணித்துள்ளார். ராவணன் தன்னுடன் வந்த பெண்டிரை எல்லாம் ஒரு பக்கத்தில் இருக்கச் செய்துவிட்டு தான் மட்டும் தனியாகச் சென்று சீதை இருந்த இடத்தை அணுகி அவள் முன்னே வந்து நிற்பதைக் கண்டதும், ஜானகி திடுக்கிட்டு அஞ்சினாள். இத்தகைய ஆடம்பரத்துடன ராவணன் அங்கே வந்து தேவியார்

முன் நின்றதையும், அவனைக் கண்டு, 'பிராட்டியாருக்கு யாதொரு குறைவும் துன்பமும் நேராதிருக்கவேண்டுமே' என்று எண்ணி,

''வாழி சானகி வாழியி ராகவன்
வாழி நான்மறை வாழியர் அந்தணர்
வாழி நல்லறம் என்றுற வாழ்த்தினன்
ஊழி தோறும் புதிதுறும் கீர்த்தியான்.''

அத்தருணத்தில் ராவணன், சீதையை நோக்கி, ''பெண்கள் நாயகமே! உன்மீது கொண்ட விருப்பத்தால் நான் அடையும் துன்பத்திற்கு எல்லையே இல்லை. நீ எனக்கு எப்பொழுது இன்னருள் காட்டப்போகிறாய்? உன்னுடைய குயிலின் மழலையால் சொல்வாயாக'' என்று கேட்டான். அதற்கு அவள் ஏதும் மொழியாது கீழே குனிந்தவாறு இருந்தாள். ராவணன், கொடிய விடத்தை அமிழ்தென விரும்புவதுபோல, அவளைப் பார்த்து, 'நீ என்னை உயிர் நீங்கும்படி ஏன் வதைக்கின்றாய்? விரைவில் நீ என் கருத்திற்கு இசைந்துவிடுவாயானால், என்னுடைய மூவுலக ஆட்சியும் உன்னதாகிவிடும்; அதனால் என் கவலையும் ஒழியும்; இனியும் நீ அந்த மானிடர்களைக் கருதி, உனக்கு வரும் பெருவாழ்வுகளையும் இன்பத்தையும் உதறித் தள்ளிவிடுவாயோ? உன்னால் உயிர் நீங்கிவிடும் தன்மையிலிருக்கும் என்னைக்காப்பாற்றமாட்டாயோ?' என்று பல தகாத மொழிகளைக் கூறி, தன்னுடைய பலவகைச் சிறப்புகளையும் மறந்தவனாய், அவள் முன்னர் நிலத்தில் வீழ்ந்து வணங்கினான்.

அப்பொழுது சீதை, ராவணன் கூறிய அடாத மொழிகளைக் கேட்டதும் கண்களிற் சோரி பாயச் சிவந்து கடுங்கோபமுற்று, 'இனி நம் உயிர் போனாலும், போகட்டும்; நம் மானத்தை இழக்கக்கூடாது' எனக் கருதித் துரும்பெனக்கனன்று, ''என்ன சொன்னாய்? இத்தகைய கொடுஞ்சொற்களைக் கூறி ஏன் அழிந்துபோகிறாய்? என் தலைவரான ராகவரை ஒரு மனிதன் என்று அவமதியாதே. அவருடைய அம்பானது, மேருவையும் விண்ணையும் கடல் சூழ்ந்த உலகத்தையும் அழித்துவிடக்கூடியது; உன்னால் எடுத்து வரப்பட்ட நான் இங்கிருப்பது இதுவரை அவருக்குத் தெரியாது. அதனாலேயே உன் உயிர் உடலில் இருக்கிறது. அவர் அறிவாராயின் அக்கணத்திலேயே நீ உன் குலத்தோடு, உன் பத்துத் தலைகளும் நிலத்தில் உருளும்படி மடிந்துபோவாய்.

''மூவுலகையும் ஆட்சிசெய்யும் பெருவீரனென்று சொல்லிக் கொள்ளும் நீ, அஞ்சியதாலன்றோ மாயமான் ஒன்றை ஏவி, என் நாதருடன் மைத்துனரையும் என்னை விட்டு நீங்கச் செய்து மறைந்துவந்தாய்? ஒரு பறவையான ஜடாயுவின்முன்நிற்க ஆற்றலில்லாது விழுந்த நீ, அவருடைய இறகுகளைத் தெய்வ வாளால்

கொய்ததாலன்றோ இதுவரை பிழைத்திருக்கிறாய். நீ பெற்றுள்ள நீண்ட ஆயுளும் பிரமதேவனிடத்திற் கொண்ட வரங்களும் ராகவர் கோத்துவிடும் ஒரு அம்பிற்குமுன் நிற்கமாட்டா என்பதை உணர்ந்துகொள்; மற்றும் நீ என் கணவரை ஓர் எளிய மானிடன்தானே என்று எண்ணற்க; கார்த்தவீரியன் கதையை நினைத்துப் பார்; ஆயிரம் கரமுடைய அவனும் மனிதனாகிய பரசுராமனால் கொல்லப்பட்டான் என்பதையும் மனத்திற் கொள்க; அந்தப்பரசுராமன் என் தலைவனால் வலிதொலைந்ததை அறியாயோ? உலகத்தில் புண்ணியம் செய்தவர்களுக்கன்றிச் செல்வம் நிலைத்து நில்லாது. ஏதோ புண்ணிய வசத்தினால் உனக்குக் கிடைத்திருக்கும் செல்வத்தை ஏன் பாவ காரியத்தால் போக்கடித்துக்கொள்கின்றாய்! அடாது செய்த உனக்குப் பெருமையேது? வீரம் ஏது? அடாத செயலைச் செய்த உனக்குக் காரணத்துடன் அறிவு கொளுத்தி இடித்துக் கூறும் பெரியோர் இங்கில்லை போலும்; நீ எண்ணியதையே தாமும் எண்ணி உன்னை அழிவுப்பாதையில் செலுத்தும்போது அழிவே வருமன்றி வேறென்ன?'' என்று கடிந்து கூறினாள்.

சீதை இச்சொற்களைக் கூறியதும் ராவணன், மிக்க சினம் கொண்டு சீறி எழுந்து, ''இதோ உன்னைக் கொன்று தின்றுவிடுகிறேன், பார்'' என்று வாயை அகலத் திறந்துகொண்டு அவளை அதட்டியவாறு அவள் அருகே சென்றான்.

அப்பொழுது மரக்கிளையின்மீது அமர்ந்திருந்த ஆஞ்சநேயன், ராவணன் செய்கையை நோக்கியதும், 'என்னே இவன் கொடுமை? அருந்ததிக்கு ஒப்பான கற்பினையுடையவளும், என்னை ஆண்ட ராமபிரானின் தேவியுமான இவரை, இந்த நீசன் தீண்டுவதற்கு முன், இவன் பத்துத் தலைகளும் நிலத்தில் உதிரும்படிச் செய்து கொன்று, இந்த லங்கையையும் பெயர்த்துக் கடலில் வீசிவிட்டு, பிராட்டியாரை அழைத்துக்கொண்டு செல்வதே தக்கது'' என்று கோபத்துடன் கரங்களைப் பிசைந்துகொண்டிருந்தான்.

எனினும், சீதையின் அருகில் சீற்றத்துடன் சென்ற ராவணனது சினத்தீ, அவள்மீது கொண்டிருந்த காதலாகிய நீரால் அணைந்துபோயிற்று. அவன் தன் முன்னை நிலையை அடைந்து நின்று சீதையை நோக்கிக் கூறுவானாய், ''பெண்ணே! நீ அறிவிழந்து, நான் சினம் கொள்ளும்படியான வார்த்தையைக் கூறிவிட்டாய்; அவற்றால் என் மனம் மாறுபட்டு உன்னைக் கொன்றுவிடுவதாகக் கூறினேன். எனினும், உன்னைக் கொல்ல என் மனம் உடன்படாது. இனி நான் கூறுவதைச் சற்று நீ கேட்பாயாக: நான் வஞ்சகத்தால் உன்னைச்சார்ந்தவர்கள் அறியாதபடி கொண்டு வந்துவிட்டதாகவும், நான் அவர்களுக்கு அஞ்சுவதாகவும் கூறுகின்றாய். அது சரியன்று. நரர்களாகிய அவர்களுடன் போர்

தொடுப்பது எனக்குப் பெருமையன்று என்பதை நான் உனக்கு முன்னரே உணர்த்தியிருக்கிறேன். மேலும் நான் அவர்களைப் போரில் கொன்றேனாயின் நீ இறந்துவிடுவாய் என்பதை எண்ணியே அவர்கள் அறியாமல் வஞ்சகமாய் எடுத்துவர நேரிட்டது. இன்னும் உன்னை எடுத்து வந்தவன் யானே என்று அந்த நரர்கள் அறிவாரேயாயின் அவர்கள் தம் எளிய தன்மையினால் இங்கே என்னை எதிர்க்க வரமாட்டார்கள். மூவரானவரும், தேவர்களும், தானவர்களும் என்னை எதிர்க்க அஞ்சியிருந்து எனக்கு ஏவல் செய்யும்பொழுது உன்னைச் சார்ந்த இந்த மானிடரா இங்கு வந்து எதிர்ப்பவர்கள்! அவ்வாறிருந்தும், நீ என் வல்லமையை அறியாமல் அவர்களையே சிறப்பித்துப் பேசுகிறாய். இனி நீ அவ்வாறு பேசுவதைத் தவிர்ப்பாயாக.

''என்னுடன் எதிர்த்து நிற்பவர் மானிடர்களோ, தேவர்களோ மற்ற எவரும் எந்த உலகத்திலும் இல்லை என்பதை உணர்ந்துகொள். நான் இனியும் சிறிது காலம் பொறுத்திருப்பேன்; விரைவில் நீ எனக்கு இணங்காவிட்டால், நீ கூறிய அவ்விரு மானிடர்களையும் என் ஒரு கையால் பற்றிக்கொண்டு வந்து உன் முன்னேயே கொன்றுவிட்டு, அயோத்திக்குச் சென்று அங்குள்ள பரதன் முதலானோரையும் வதைத்து, மிதிலையில் உள்ளோர்களையும் மாய்த்து, பின்னர் உன் உயிரையும் கொள்வேன்; இன்னும் இரண்டு மாதங்களில் இவற்றை அறியப்போகிறாய்'' என்று வெருட்டிவிட்டுச் சீதையிடமிருந்து நீங்கி, அவளுக்குக் காவலாக இருந்த அரக்கியர்களை அழைத்து, ''எவ்விதமேனும் இவளை எனக்கு இணங்கச் செய்யாவிடின் உங்களைக் கொன்றுவிடுவேன்'' என்று கடுமையான கட்டளையிட்டான். பின் அவன் தன் அரண்மனையை நோக்கிச் சென்றான்.

ராவணன் அவ்வாறு சீதையை வெருட்டிச் சென்றபிறகு, காவலாக இருந்த அரக்கியர் யாவரும் சீதையைச் சுற்றி வளைத்து நின்று, தம் அகன்ற வாயைத் திறந்துகொண்டு மனம் சென்றவாறு கூறி, ராவணன் கருத்திற்கு இசையும்படி பல விதமாய் அச்சுறுத்தத் தொடங்கினார்கள். அவர்கள் இயற்றும் துன்பத்திற்கு ஆற்றாத சீதாதேவி வருந்திக் கண்ணீர் விட்டு அழுவாளாயினாள். அதனைக் கண்ட திரிசடை, ''அம்மணி! நீ இப்பொழுது துக்கப்படுவது சரியன்று; நான் கண்ட கனவின் பயனாய், விரைவில் உனக்கு நற்காலம் வரும் என்று சொல்லியிருக்க நீ ஏன் கலங்குகின்றாய்? உன் கவலையை விடு'' என்று கூறித் தேற்றியபிறகு, மற்ற அரக்கப் பெண்டிரைப் பார்த்து, ''நீங்கள் இந்த உத்தமிக்கு ஏதேனும் தீங்கு செய்வீர்களாயின் உங்கள் யாவருக்கும் அழிவுண்டாகும்'' என்று சொல்ல, அரக்கியர்கள் அதனைக் கேட்டும், திரிசடை கூறிய கனவின்

திறத்தை அறிந்தும் மிகவும் அஞ்சி, சீதைக்குத் துன்பம் செய்வதினின்றும் நீங்கினுர்கள்.

5. உருக் காட்டு படலம்

ராவணன் அசோக வனத்தைவிட்டு நீங்கியதும், அநுமன், ''இனியும் நாம் வாளா இருந்து இந்த இரவைக் கழித்துவிடுவது சரியன்று ; நாம் வந்த காரியத்தை கவனிப்பதே நலம்; இப்பொழுது தேவியாரை நேரே பார்த்து, ராகவர் கூறியதை அவருக்கு அறிவிப்பதுடன் அவர் கூறும் மறுமொழிகளையும் கேட்டு அறிந்துகொள்வது தக்கதாகும்; அவரைச் சந்திப்பதற்கு இதுவே தருணம்'' என்று கருதி, சீதையை நெருங்கிக் காவல் செய்யும் அரக்கியர்கள் யாவரும் உறக்கம் கொள்ளும்படி ஒரு மந்திரத்தை உச்சரித்தான். உடனே அரக்கியர் எல்லோரும் படுத்து மாண்டதற்கு ஒப்பான தூக்கத்தை அடைந்துவிட்டனர், அப்பொழுது சீதை மட்டும் கண்ணுறக்கம் கொள்ளாது தனது நிலையைக் குறித்து வருந்திப் பலவாறு எண்ணிப் புலம்பலுற்ருள். அவளுடைய புலம்பலைக் கம்பர் சுவை பொருந்துமாறு,

''பொறையிருந் தாற்றியென் உயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணும் ஆசையால்
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்
சிறையிருந் தேனையப் புனிதன் தீண்டுமோ ?''

''பிறர்மனை யெய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல(து) என்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறனலர் அவனுறப் போது போக்யோன்
அறனல(து) இயற்றிவே றெங்கொண் டாற்றுகேன் !''

''வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ ?''

''அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டரும் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலை, என்னின் யானுடைக்
கற்பினை எப்பரி(சு) இழைத்துக் காட்டுகேன் ?''

[பொறை : பொறுமை. அறை : ஓசை. நிருதர் : அரக்கர். அப்புனிதன் : அந்த ராமன். திறன் அலது : திறன் அன்றி.

அலர் : பழிச்சொல். **அறன் அலது** : தருமம் அல்லது. **மன்னை**: மன்னனான ராமனை. **மஞ்சனை** : மைந்தனை (மைந்தனாக எண்ணும் லக்ஷ்மணனை). **நஞ்சு அனையான்** : விடம் போன்ற ராவணன். **உய்ஞ்சனென்** : பிழைத்து. **அற்புதன்** : அதிசயிக்கத்தக்கவன். **வருக்கம்** : கூட்டம். **ஆசு அற** : குற்றம் நீங்க. ('மாசு அற' என்று கொண்டாலும் பொருள் ஒன்றே.) **வில் பணி** : வில் தொழில். **பரிசு** : தன்மை.]

என்று பாடியுள்ளார்.

பின்பு சீதை, 'நாம் உயிரைப் போக்கிக்கொண்டு இறத்தலே அறத்தின் வழியாகும்; நாம் செய்த தவத்தின் பயனோ, யாதோ, நம்மைக் காவல் செய்கின்றவர்களும் சோர்ந்து உறங்கிக் கொண்டிருக்கின்றனர்; அதற்கு இதுவே தருணம்' என்று நினைத்து, அருகிலுள்ள குருக்கத்தி மரச்சோலையை அடைந்தாள்.

இந்நிலையை,

"கண்டனன் அநுமனும்: கருத்தும் எண்ணினன் ;
கொண்டனன் துணுக்கம்: மெய் நீண்டக்கூசுவான் ;
அண்டர்நா யகன்அருள் தூதன் யானெனாத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்."

"என்னைப்போலவே பல வானர வீரர்கள் உலகமெல்லாம் போய்த் தங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அடியேன் செய்த தவப்பயனால் தங்களை இங்கே கண்டேன்.

"தாயே! தாங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்பது ராமபிரானுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இந்த அரக்கர் கூட்டமே அழிந்திருக்கும்; அக்கூட்டம், இதுவரை உயிருடன் வாழ்வது தாங்கள் இங்கே இருத்தலை ராகவர் அறியாமல் இருப்பதே காரணமாகும். என்னை யாரோ அரக்கன் என்று ஐயம் கொள்ளவேண்டாம்; நான் ராமருடைய தூதுவன் என்பதை அறிவீராக; அதற்குத் தக்க சான்றுகள் என்னிடம் உள்ளன; மேலும் ராமபிரான், தங்களிடம் கூறும்படி சொல்லியருளிய மொழிகளும் உள. அவற்றை எல்லாம் தங்களிடம் கூறுகிறேன். செவி சாய்த்து அருள்வீராக" என்று கரங்களைக் குவித்து வணங்கியவாறு நின்றான்.

தன் முன்னே நின்ற வானர வீரன் தன்னைத் துதித்து வினயமாகப் பேசியதை நோக்கி அவன்மீது இரக்கம் கொண்ட சீதை, ஒரு வேளை இவன், 'இவ்வித மாய வடிவம் கொண்டுவந்த அரக்கனாயிருப்பானோ?' என்று நினைத்துச்

னெமும் கொண்டாள்; பின்னர் அவன் கூறிய சொற்களின் தன்மையையும் செய்கைகளையும் கண்டு, 'இவன் உண்மையான அரக்கன் அல்லன்; இவன் ஐம்பொறிகளையும் வென்ற ஓர் முனிவனோ? அவனும் அல்லனாகில் தேவனேயாம்! யாராக இருந்தாலும் இவன் தூய்மையானவன் என்பதில் ஐயமில்லை. மேலும் இவன் அரக்கனாகத்தான் இருக்கட்டும்; அல்லது ஓர் அமரனாகத்தான் இருக்கட்டும்; அன்றி ஒரு குரங்குத் தலைவனாகத்தான் இருக்கட்டும்; ராம நாமத்தைச் சொல்லி, நம்முடைய மனத்தைக் குளிரப் பண்ணியிருக்கின்றான். நமக்காக இரங்கிக் கண்ணீர் விடுகின்றான். என் உணர்வை உருக்கி உயிரைத் தந்தான்; இதைக் காட்டிலும் பெரியதோர் உதவி உண்டோ?' என எண்ணி, அவனை நோக்கி, "வீர, நீ யாவன்?" என்று கேட்டாள்.

சீதாபிராட்டி அவ்வாறு வினவியதும் அவன், தன் இரு கரங்களையும் சிரத்தின்மேற் கூப்பிக்கொண்டு, "தாயே! தங்களைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்த ராகவர், சூரியன் மைந்தனும் வானரர் தலைவனுமான சுக்ரீவனை நட்புச் செய்துகொண்டார்; அந்தச் சுக்ரீவனுடைய மூத்தோன் ஆகிய வாலி என்பவன் வலிமையுள்ள வீரன்; அவன் தன் வாலினாலேயே இந்த ராவணனைக் கட்டித் தூக்கிக்கொண்டு எட்டுத் திக்கிலும் பாய்ந்து சென்றவன். தேவர்கள் வேண்ட மந்தரமலையான மத்தினை, நாணாகிய நாகம் தேய அமுதெழக் கடைந்த தோளினையுடையவன்; அத்தகைய வலி மிக்க வாலியை, தங்கள் நாயகரான ராகவர் ஒரே அம்பினால் கொன்று அவனுடைய அரசைச் சுக்ரீவனுக்குக் கொடுத்து அவரை ஆட்சி புரியச் செய்தார்; அந்தச் சுக்ரீவனுக்கு அடியேன் ஓர் அமைச்சனாவேன்; என் தந்தையார் வாயுதேவர்; தாய் அஞ்சனா தேவியார்; என்னை அநுமன் என்றும், ஆஞ்சநேயன் என்றும் அழைப்பார்கள்" என்று தன்னைச் சார்ந்தவர்களைப் பற்றியும் கூறிவிட்டு, அவள், ராவணனோடு செல்லுங்கால் ருசிய முகமலையின்மீது வீசி எறிந்த அணிகலன்களின் முடிப்பை எடுத்து வைத்திருந்து, ராமரிடம் அளித்ததையும், தான் லங்கையை அடைந்த விதத்தையும் அவளிடம் சொன்னான்.

அவன் கூறிய எல்லாவற்றையும் கேட்டு மகிழ்ச்சியுற்ற சீதை 'என்னுடைய உயிர் நிலைப்பதற்குரிய வழி ஏற்பட்டதே' என்று கண்களில் இன்பவாரி பெருக, ஆஞ்சநேயனைப் பார்த்து, "ஐயனே! அந்த ராகவருடைய திருமேனி எப்படி இருக்கும்? சொல் பார்ப்போம்" என்றனள். உடனே அவன், அவருடைய அடி முதல் முடி இறுதியாக உள்ள அமைப்பையும் அழகையும் விவரித்துக் கூறினான். அவற்றைக் கேட்டதும் ஜானகி, அனலில் இட்ட மெழுகுபோல, அவருக்குத் தன்னால் ஏற்பட்ட துயரத்திற்காக வருந்தினாள். பின்னர் ஆஞ்சநேயன், அவளைத் தரையில்

வீழ்ந்து வணங்கி, ராமர் கூறும்படி அறிவித்த குறிப்பான அடையாளங்களை அவளுக்குத் தெரிவித்து, அவருடைய பெயர் பதித்த முத்திரை மோதிரத்தையும் பிராட்டியிடம் கொடுத்தான்.

அக்கணையாழியைக் கண்டவுடனே, ஜானகி அடைந்த பேரானந்தத்தின் திறத்தை எவ்வாறு புகல்வது! கம்பருடைய சொற்களாலேயே அவற்றைக் குறிப்பிடுதல் தக்கது :

''இறந்தவர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ ?
மறந்தவர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ ?
துறந்தவுயிர் வந்திடைதொடர்ந்ததுகொல் என்கோ ?
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை.''

''இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததென லானாள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.''

'இருந்துபசி யாலிடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்துமமு தாகியது, அறத்தவரை அண்மும்
விருந்துமென லாகியது வீயும்உயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி.''

[அரவு : பாம்பு. உழந்து : துன்புற்று. வீயும் உயிர் : சாகும் உயிர். மருந்து : சஞ்சீவி மருந்து.]

சீதை கணையாழியை வாங்கினாள்; தன் மார்பிலும் கண்களிலும் ஒற்றிக்கொண்டாள்; தேகம் பரவசமுற்று ரோமம் சிலிர்க்க, உரை தடுமாற, எதிரே நின்ற ஆஞ்சநேயனைப் பார்த்து, ''அன்பு மிக்கவனே! நீ, ஊசலாடித் தவிக்கும் என்னுடைய உயிரை நிலைபெறச் செய்தாய்; இத்தகைய உத்தமனாகிய உனக்கு என்னால் மாற்றுதவி செய்வதென்பது எளிதோ?

''பாழிய பணைத்தோள் வீர, துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே, யான் மறுவிலா மனத்தேன் என்னின்
ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்றாள்.''

[மறு : குற்றம். வீவுற்ற ஞான்றும் : அழிந்தபோதும்.]

மீண்டும் அவள் ஆஞ்சநேயனைப் பார்த்து, ''என் நாயகரும் லக்ஷ்மணரும் இப்பொழுது எங்கே வசிக்கின்றார்கள்? உன்னை எவ்விடத்தில் கண்டார்கள்? என்னுடைய செய்தியை அவர்களுக்கு

அறிவித்தவர் யாவர்?'' என்று கேட்டாள். அவற்றிற்கு அவன் ஜானகி ராமரை விட்டுப் பிரிந்தபின் அவ்விருவரும் அவளைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கி வந்ததும், வழியில் ராவணனுடன் சண்டையிட்டுச் சிறகு அறுபட்டுக் குற்றுயிராய்க் கிடந்த ஜடாயுவால், ராவணன் ஜானகியை எடுத்துப் போந்த செய்தியை அறிந்ததும், பிறகு ஜடாயு இறந்ததும், சுக்ரீவனுடன் நட்பு கொண்டு அவ்விருவரும் ருசிய முகமலையில் இருந்துவருவதும் அவர்கள் கட்டளையால் தான் தேடிக்கொண்டு லங்கையை அடைந்ததும் ஆகிய செய்திகளை எல்லாம் கூறிவிட்டு, அவளது பிரிவினால் ராகவர் மிகுந்த துயரத்திற்குள்ளாயிருக்கிறார் என்பதையும் தெரிவித்தான். அவைகளைக் கேட்டதும் சீதை, துக்கமும் களிப்பும் மாறி மாறித் தோன்றும் உள்ளம் உடையவளானாள்.

பின்பு அவள் கண்ணீர் வழிய மீண்டும் அவனைப் பார்த்து, ''அப்பனே! நீ வரும் வழியில் பெரிய கடல் இருக்கின்றதே? அதனை எவ்வாறு கடந்து வந்தாய்?'' என வினவினாள். ஆஞ்சநேயன், ''அம்மா! தங்களுடைய நாயகரின் திருவடிகளை மறவாத தூய்மையுடையோர், மாயை என்ற பெருங்கடலைக் கடந்து முத்தியுலகு அடைவதுபோல, நானும் அவருடைய திருவருளால் இக்கடலைக் காலினாலேயே கடந்து வந்தேன்'' என்றான். அது கேட்ட சீதை, அவனுடைய ராம பக்தியைக் கண்டு வியந்து, ''ஆஞ்சநேயா! இவ்வளவு சிறிய உருவினுடைய நீ எப்படிக் கடலை எளிதில் கடந்து வந்தாய்? உன்னிடத்தில் அதற்குத் தக்க தவமேனும் சித்தியேனும் உள்ளதோ?'' என்று புன்முறுவலோடு கேட்டாள். அவன், ''தாயே! நான்இந்தச் சிறிய உருவத்தைக் கொண்டு கடலைக் கடக்கவில்லை; ராகவருடைய அருள் எனக்கு இருப்பதால், நான் நினைத்தபொழுது பேருருவமடையும் சக்தி என்னிடம் உண்டு. அவ்வடிவத்தினால் நான் கடலைக் கடந்து வந்தேன். இதோ பாருங்கள். என்னுடைய அந்த வடிவத்தைக் காட்டுகிறேன்'' என்று சொல்லி, தன் பேருருவத்தைக் காணும்படி கூப்பிய கைகளால் ஜானகியைத் தொழுதுகொண்டே உயர்ந்த தோள்களையுடையவனாய், விசும்பளவும் வளர்ந்து எட்டுதற்கும் அருமையான நெடிய அதன் முகட்டினை அணுகினான். இனியும் உயர நீளுவோமாயின், அவ்விசும்பு தலையில் முட்டும் என்று உடல் வளைந்து நின்றான். அவ்வடிவத்தைப் பார்ப்பவர்கள் யாவரும் திடுக்கிடும்படி இருந்ததால், ஜானகி, அவன் தோற்றுவித்த உருவத்தைக் கண்டு மிகவும் வியந்து, ஆஞ்சநேயனை அழைத்து, ''அன்பனே! இத்தகைய உன் உருவத்தைப் பார்க்கும் பொழுது எனக்கு அச்சம் உண்டாகிறது. அதனால் நீ 'அடங்குக' '' என்றாள். அங்ஙனமே அவனும் தன்னுடைய இயற்கையான வடிவத்தை அடைந்து பிராட்டியை வணங்கினான். சீதை, ''உன்னுடைய உதவியைப் பெற்றதனால் இனி எங்கள் காரியங்கள் வெற்றி பெறும்'' என்று கூறி ஆஞ்சநேயனைப் பலவாறு புகழ்ந்

தாள். அப்பொழுது, அவன், ''தாயே! தாங்கள் என்னை அவ்வாறு புகழ்வதற்குரிய சிறந்த வீரன் அல்லன். இன்னும் என்னைக் காட்டிலும் பெரு வலிவு படைத்த வானர வீரர்கள் எங்களிடையே இருக்கிறார்கள்; அவர்களுக்குமுன் இங்குள்ள அரக்கர் சேனைகள் சுழல்கின்ற காற்றில் சிக்கிய பஞ்சுபோலாகிவிடும்'' என்றான். தேவி அதனைக் கேட்டுக் களிப்புற்றாள்.

6. சூளாமணிப் படலம்

ஜானகி தேவி ஒருவாறு தன் துயரத்தை ஆற்றியிருப்பதைக் கண்ட அநுமன் சிறிது ஆலோசித்தவாறு, 'செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அனையவரும், உலகங்களுக்கெல்லாம் துணைவரான ராமபிரானுடைய உயிர் போன்றவருமான சீதா பிராட்டியார் ஒரு துணையும் இன்றி இங்கே கடுந்துன்பத்தால் வருந்துகின்றார்; இவருடைய துன்பம் நீங்க இப்பொழுதே இவரை அழைத்துக்கொண்டு நம் ஸ்வாமியிடம் சேர்த்துவிடுவது நன்மையாகும்' என்று தனக்குள் முடிவு செய்துகொண்டு தேவியைப் பார்த்து, ''அம்மணி, தாங்கள் இக்கொடிய அரக்கியரிடம் சிக்கி அல்லலற்படுவதைப் பார்த்தும், இனியும் தங்களை இவர்களிடையே விட்டுச் செல்வது எனக்கு நேர்மையாகத் தோன்றவில்லை; நான் இங்கிருந்து நீங்கியபிறகு, தனித்திருக்கும் தங்களை இவ்வஞ்சகர்கள் கொன்றுவிட்டால் பிறகு நம் தலைவர் இங்கே வந்து போர் செய்து அரக்கர் யாவரையும் மடிவித்தாலும் பயனில்லாது போகும். அதனால், அடியேன் தங்களை இப்பொழுதே எடுத்துக்கொண்டு போய் ராமரிடம் சேர்த்துவிடுவேன்; அவருடைய கவலையும் தங்களுடைய துன்பமும் நீங்கும். நானும் பேறு பெற்றவனாவேன்; ஆதலின், தாங்கள் என்னுடைய தோளின்மீது அமர்ந்தருளுங்கள்; ஓரிமைப்பளவில் இடையில் எங்கும் தங்காமல் தங்களை ராகவரிடம் சேர்த்துவிடுகிறேன்; செல்லும்பொழுது வழியில் எவர் வந்து என்னை எதிர்த்தாலும் அவர்களைக் கொல்வேன்; தங்களை இந்த லங்கையோடு பெயர்த்துக்கொண்டு போகும்படிக் கட்டளை இட்டாலும், மற்றும் இங்குள்ள அரக்கர்கள் எல்லோரையும் மடியச் செய்து லங்கையையும் சுட்டெரித்துவிட்டுத் தங்களை அழைத்துப் போகச் சொன்னாலும் அவ்வாறே செய்கிறேன்; இவற்றுள் எதனைச் செய்ய வேண்டும்? தயைசெய்து தெரிவியுங்கள்; அடியேன் அதனை உடனே நிறைவேற்றுகிறேன்; இவற்றுள் ஏதும் செய்ய மேற்கொள்ளாமற் தங்களுடைய நிலைமையை அறிந்தும் நான் வெறுங் கையுடன் ராகவர்முன் நிற்கமாட்டேன். அரிய மருந்தினுக்

கொப்பான தேவியார், வெஞ்சிறையில் துயரால் வாடுகின்றார் என்று என் ஸ்வாமியிடம் சொல்வேனாயின், அவரிடம் கொண்ட என் அடிமைத் திறம் என்னாவது? அருந்ததிக்கொப்பான தாங்களே ஆலோசியுங்கள்; பிறகு வேண்டுமானால் நம் ஸ்வாமி வானர சேனைகளுடன் இங்கே வந்து போர் செய்து இந்த அரக்கனை, அவர்கள் குலத்தோடு அழித்து உலகத்தாருக்குற்ற துன்பத்தைப் போக்குவது நன்றாகும்; இனியும் அடியேன் வேறு என்ன சொல்ல இருக்கிறது? விரைவாகத் தாங்கள் என் தோளின் மீது ஏறி அமர்ந்தருளுங்கள்; நாம் புறப்படுவோம்'' என்று தொழுது கூறினான்.

இவ்வாறு, தன் தாயை நினைந்து செல்லும் பசுங்கன்றினையொத்த அநுமன் கூறிய அன்பு கலந்த சொற்களைக் கேட்டு ஜானகி மகிழ்ந்தாள். எனினும், தன் பெண் தன்மையால், அவன் உரைத்தபடி அவனுடன் செல்வது தகுதியன்று என எண்ணினாள். அதனால் அவள் அவனைப் பார்த்து, ''வாயு மைந்தா! நீ உன் ஆற்றலுக்கு ஏற்றவாறே உரைத்துள்ளாய். அவ்வாறு நீ செய்யவும் வல்லாய் என்பது எனக்குத் தெரியும்; ஆயினும், என்னை ராவணன் வஞ்சித்து எடுத்து வந்ததுபோல நீயும் மறைந்து எடுத்துப்போவது ராகவருக்கு ஒரு களங்கமாகும்; அன்றியும் நீ என்னை எடுத்துச் செல்லுங்காலத்தில் கொடிய அரக்கர்களுள் எவரேனும் வந்து உன்னை எதிர்த்தால் நீ அவர்களோடு சண்டை செய்வாயா? தனியாக இருக்கும் உனக்குத் துன்பம் உண்டாகுமே. மேலும், நீ ஐம்புலன்களையும் அடக்கியவனாக இருந்தாலும், ஆடவன்; ஆதலின், நீ என்னைத் தீண்டுதல் முறையன்று; அவ்வாறு தீண்டப்பெறுவது கற்புடைப் பெண்டிற்குத் தகாது.

''அதனாலேயே அந்த இழிகுணமுடைய ராவணனுக்கு, 'உனக்கிணங்காத மாதரை நீ தீண்டினால் உன் தலைகள் வெடித்துச் சிதறிவிடும்' என்ற பிரமதேவர் சாபம் உள்ளதாயிருக்கிறது; ஆதலின், அவன் என்னைத் தீண்டியிருப்பானாகில் அப்பொழுதே அவன் தலைகள் சிதறி உயிர் விட்டிருப்பான்.

''ஆதலால், இனிமேலும் அந்த ராவணன் என்னைப் பற்றுவானென்றும், அதனால் எனக்கு அழிவு நேரும் என்றும் நீ கருதவேண்டாம்; இந்த உண்மையினால், 'நாதர் வந்து நம்மை விடுவிக்கும்வரையில் பொறுத்திருப்போம்' என்றும் அவர் வராவிடில் உயிரைவிட்டு விடுவோம் என்றும் அதுகாறும் இறவாமல் இருக்கிறேன்; ஆதலின், அப்பனே! நீ என்னை எடுத்துக்கொண்டு போகும் காரியத்தை எண்ணாமல் விட்டொழித்து விரைவில் ராகவரை அடைந்து என்னுடைய நிலைமையை அறிவிப்பாயாக'' என்றனள்.

சீதா பிராட்டியார் கூறியவற்றைக் கேட்ட வாயுமைந்தன்,

''நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்து ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துவந் தேத்தினுன்
நின்ற சங்கை இடரொடும் நீங்கினுன்.''

[உலகுடை நாயகன்: ராமன். ஏத்தினுன்: புகழ்ந்தான். சங்கை: ஐயம். இடர்: துன்பம்.]

எனவே, தான் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு தேவியை நோக்கி, ''தாயே! தங்களுடைய கருத்தின்படி இனியும் சில நாட்கள் இங்கேயே பொறுமையுடன் நேரும் துன்பங்களை ஆற்றிக்கொண்டிருங்கள். நான் விரைவில் நம் பெருமானிடம் செல்லுகிறேன். அவருக்குத் தாங்கள் கூறவேண்டியவற்றை அடியேனிடம் சொல்லி அருளுங்கள்'' என்று அவளுடைய அடிகளில் வணங்கி இறைஞ்சினுன்.

அப்பொழுது ஜானகி அவனைப் பார்த்து, ''நான் இனியும் ஒரு மாதம் வரை உயிருடன் இருந்து ராகவர் வருகைக்காகக் காத்திருப்பேன் ; அவர் இங்கே வராவிடின் நான் உயிர் வைத்திரேன் என்பதை நீ உன் மனத்திற்கொள்வாயாக. ராகவர் என்னை, 'இவள் நமக்கு அமைந்த மனையாள் அல்லள், இவளுடைய நெஞ்சினில் அன்பில்லாதவள்' என்று நினைத்து என்னைக் காத்தற்கு இங்கே வர அவருக்கு விருப்பம் இல்லாவிடினும், தம்முடைய வீரத்தையாவது காத்துக்கொள்ளும்படி நீ அவரிடம் சொல். மற்றும் மானைத் தொடர்ந்து சென்ற என் நாதர், என்னைப் பிரிந்த காலத்தில், அவருடைய கட்டளையால் இளையவர் என்னைக் காவல் செய்திருந்தார். ஆதலின், அவரே இப்பொழுது, சிறை இருக்கும் என்னை விடுவித்தற்குக் கடமைப்பட்டிருக்கிறுர் என்பதை நீ அவரிடம் கூறுவாயாக. இந்த ஒரு மாத காலத்திற்குள் என் ஸ்வாமி என்னைக் காண வராதிருந்தால் நான் இறத்தல் உறுதி. எனவே, அக்காலத்திற்குபின் கங்கையாற்றங்கரையில் எனக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்துவிடும்படி அவருக்குத் தெரிவி. மற்றும் என் மாமியார்கள் மூவருக்கும் 'உங்கள் மருமகள் சீதை இறந்து போய்விட்டாள் ; அவள் இறக்கும்பொழுது அவள் உங்களைத் தொழுதாள்' என்று கூறுமாறு ராகவருக்குச் சொல் ; ஒரு வேளை அவர், தம் தாயாருக்கு இதனைக் கூற மறந்துவிட்டார் என்றுலும் நீயாவது என் மாமியாரை அடைந்து கூறிவிடு. மேலும்,

''வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும்தொடேன் என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.''

''நான் இங்கே வருந்தியவாறு இறந்துபோவேன் ஆயினும் என் மறு பிறவியில் அவரையே நான் அடையும்படியான நல் வரத்தை வணங்கி வேண்டிக்கொண்டேன் என்பதையும் கூறு வாயாக. அந்தோ! என் நாதர், அரசேற்க முடிசூடி யானையின் மீது வீதிவலம் வருவதனையும், அவருடைய நெருக்கமான அலங் காரிப்பின் அழகினையும் காண விதியில்லாத நான் என் ஊழ்வினை யின் திறத்தை என்னவென்று நினைப்பேன்! அப்பா! இனியும் ஒன்று கூறுகிறேன். கேட்பாயாக: அவர், நகரத்திலுள்ளவர்கள் தம்மைப் பிரிந்ததுபற்றி வருந்துதலுக்கும், தம்முடைய தாய் மார்களின் துன்பத்திற்கும், பரதனுடைய ஆற்றுத் துயரத்திற் கும் வேண்டி, மீளவும் அயோத்திக்குச் செல்வாரேயன்றி என்னைத் தேடி இங்கே வரமாட்டார் என்ற ஓர் எண்ணம் எனக்கு உண்டா யிருக்கிறது. அவ்வாறு அவர் நகரத்திற்குச் செல்ல எண்ணுவா ராயின், அப்படியே என் நாதரை அழைத்தேகி, அவருக்கு முடி சூட்டி வைக்கும்படி உங்கள் சுக்ரீவ மன்னரிடம் நான் கேட்டுக் கொண்டதாகச் சொல். நீயும் அங்கே செல்வதாயின், மிதிலை நகரத்தையும் அடைந்து என்னுடைய தாய் தந்தையர் முதலான சுற்றத்தார்களுக்கும் என் வணக்கத்தைக் கூறு'' என்று இவ்வாறு பலபடியாகச் சொல்லிக் கண்ணீர் விட்டுக் கலங்கி அழுதாள்.

சீதை, துயரம் மிக்குக் கூறிய மொழிகளை எல்லாம் கேட்ட அநுமன் மனம் பதைத்துத் தானும் கண்ணீர் விட்டான். ''உலகங்கள் யாவற்றிற்கும் தாயாக உள்ளவரே ! தாங்கள் இத் தகைய மொழிகளைக் கூறலாமா? தங்களுடைய பிரிவினால் ராகவர் வருந்துவதை எத்திறம் கொண்டு இயம்புவது ! எப்பொழுதும் தங்களுடைய நினைவாகவே இருந்து துயரக் கடலில் மூழ்கிய அந்த உத்தமர், தங்களை இங்கிருந்து மீட்காமல் அயோத்தியை அடைந்து முடி புனைவாரோ ? அடியேனும் சுக்ரீவ மன்னனும் வானர சேனைகளுடன் வந்து அரக்கர்களைக் கொன்றொழிக்காமல் விட்டுவிடுவோமா ! நான் சென்று தங்கள் நிலைமையை எம்பெரு மானிடம் கூறுவதுதான் தாமதம். அவர் அதனைக் கேட்ட அக் கணத்திலேயே, கடல் போன்ற வானர சேனைகளுடன் இந்த லங்கையிற் புகுந்து அரக்கர்கள் யாவரையும் சிதற அடிப்பார். அதனைத் தாங்களே காண்பீர்கள்:

''வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகியென் றொருநழல் நடுவண் தங்கலான்
அனகன்கை அம்பெனும் அளவில் ஊதையால்
கனகநீ(டு) இலங்கைநின் றுருகக் காண்டியால்.''

[தீவினையையடைய அரக்கர்களாகிய கரிவெந்து சாம்பலாகு மாறு ஜானகி என்றொரு தழல் நடுவில் தங்கியிருக்கிறது. ராமன் கை அம்பு எனும் காற்று வீசலால் பொன் மயமான லங்கை உருகி அழிவதைப் பார். இருந்தை கரி. **அனகன்** : குற்ற மற்றவன், ராமன். **ஊதை** : காற்று.]

'' தங்களை இங்கே வருந்தும்படி வைத்துவிட்டு, நாங்கள் வேறு காரியங்களிற் புகமாட்டோம். தாங்கள் இனியும் ஒரு மாதம் வரை இங்கே இருந்து துன்பத்தால் வருந்தவேண்டுவதில்லை. அடியேன் மிக விரைவாய்ச் சென்று சேனைகளுடன் ஸ்வாமியை அழைத்துவருகின்றேன். தாங்கள் கலங்குதலை ஒழித்து எனக்கு விடை அளியுங்கள். இந்நகருக்கு வானர சேனை விரைவில் வரும். அப்போது என் தோளின்மீது ராமன் அமர்ந்துவருவதைக் காண்பீர்; அங்கதன் தோள்மீது லக்ஷ்மணன் அமர்ந்துவருவதைக் காண்பீர்'' என்றான்.

இவைகளைக் கேட்டதும் சீதை தெளிவடைந்து உள்ளத்திற் களிப்பு கொண்டாள். அநுமன் லங்கையை விட்டு விரைவிற் செல்லுதல் தக்கது என்று நினைத்து, ''அஞ்சனை மைந்தா! உன் வீர மொழிகளால் என் துயரம் நீங்கித் தெளிவுற்றேன்; நீ விரைந்து புறப்படுவதே நன்மை. மேலும் நீ என்னைக் கண்டேன் என்பதற்கு அடையாளமாகச் சில செய்திகளைக் கூறுகின்றேன்; அவற்றை நீ மனத்திற்கொண்டு ராகவரிடம் சொல்வாயாக:

''முன்னொரு காலத்தில், இந்திரன் மைந்தனாகிய 'சயந்தன்' என்பவன் தன் விளையாட்டுப் புத்தியால் என்னிடம் காக வடிவத்துடன் வந்து, தன் கூரிய அலகால் என் மார்பினைக் குத்தி எனக்குத் துன்பத்தை உண்டாக்கினான். அதனைக் கண்ட என் நாதர் சினங்கொண்டு, அங்கே ஒரு கல்லின் கீழ்த் தோன்றிய புல்லினை எடுத்து அஸ்திரமாக்கி அவன்மீது ஏவினார். அதனைக் கண்ட அவன் அஞ்சி ஓடி, அயன் முதலான எல்லாத் தேவர்களிடத்திலும் சென்று, தன்னை ராகவர் அஸ்திரம் துரத்திவருவதைக் கூறிச் சரண் புகுந்தான். அவர்கள் யாவரும், தங்களால் அதனைத் தடுத்து அவனைக் காக்க முடியாதென்றும், ராகவரிடமே சென்று வேண்டுமாறும் கூறினர். சயந்தன் ஸ்வாமியினுடைய திருவடிகளை அடைந்து



துதித்தான். அவர் மனம் இரங்கி, அவனுடைய உயிரைக் கவரும்படி ஏவிய அஸ்திரத்திற்கு, அவன் கண்ணில் ஒன்றைப் பற்றும்படி கட்டளை இட்டார். அஃது அவ்வாறே செய்யவும், ராகவர் அவனை நோக்கி, 'நான் உன் குற்றத்தைப் பொறுத்து உன் கண் ஒன்றை வாங்கினேன்; இதன் குறியாக, இனி, நீ எடுத்த வடிவத்தையுடைய காகங்களுக்கெல்லாம் இரண்டு கண்களுக்கும் இடையில் மணி ஒன்றேயாகுக' என்று கூறினன். அதன் பிறகு காகமாக வந்த சயந்தன், தன் உண்மை வடிவங் கொண்டு அவரை வணங்கிவிட்டுச் சென்றான்.

"மற்றொரு முறை, நானும் என் நாதரும் உரையாடிக் கொண்டிருந்தபொழுது, என்னால் வளர்க்கப்பட்ட கிளிக்கு எப்பெயரிடலாம் என்று கேட்டேன்; அதற்கு அவர், 'என் சிற்றன்னையான கைகேயியாரின் பெயரினை இடு' என்று கூறி, அந்த அன்னையின்மீது தனக்குள்ள அன்பைக் காட்டினர். இச்செய்திகளை நான் அவருக்கு நினைவூட்டியதாகச் சொல்" என்று கூறினர்.

பின்னர், ராமனுக்கு இனியும் ஒரு தகுதியான பொருளை அடையாளமாக அனுப்பக் கருதிய சீதை தன்னிடமிருந்த சூளாமணி என்ற கூந்தலில் அணியும் ரத்தினபரணத்தைக் கையிலெடுத்தாள். அதன் பேரொளியைக் கண்டு அவன் வியந்து நிற்க, சீதை,


"சூடையின் மணி கண்மணி ஒப்பது ; தொன்னாள்
ஆடை யின்கண் இருந்தது ; பேரடை யாளம் ;
நாடி வந்தெனை(து) இன்னுயிர் நல்கிய நம்பா,
கோடி என்று கொடுத்தனன்."

அநுமனும் அந்தச் சூளாமணியைத் தொழுது வாங்கினன்; ஆடையிற் பொதிந்து பத்திரப்படுத்தினன்; தேவியை வணங்கினன்; கருணையால் அழுதான்; மும்முறை வலம் வந்தான்.

சீதை அவனை வாழ்த்தி, விரைவில் ஸ்வாமியுடனும் சேனைகளுடனும் அங்கு வருமாறு சொல்லி விடை அளித்தாள். ஆஞ்சநேயன் அவளைப் பிரிய மனம் இல்லாமல் அந்த அசோக வனத்தின் மற்றொரு பக்கம் சென்றான்.

7. பொழிலிறுத்த படலம்

பின்னர் அநுமான் தான் வந்த வழியான வடதிசையை நோக்கிப் புறப்படத் தொடங்கினன். அவ்வாறு புறப்பட்ட



வன், 'நாம் லங்கைக்கு வந்து தேவியாரைக் கண்டு கொண்டோம்; திரும்பிச் செல்லுகின்றோம். இது ஒரு மிகச் சிறிய காரியமே ஆகும். இழிந்த குணங்களையுடைய அரக்கர்களை ஒழித்து, லங்கையையும் பெயர்த்துக் கடலில் வீசி எறிந்து விட்டுத் தேவியாரை அழைத்துப் போய் நம் ஸ்வாமியிடம் சேர்ப்பிக்கவில்லையெனின், நாம் அவருக்கு மெய்யடியேம் என்பது எவ்வாறு விளங்கும்? வஞ்சகனான ராவணனை நெருங்கி, நாம் நம்முடைய நீண்ட வாலினால் அவனுடைய பத்துத் தலைகளையும் அசைவுறச் செய்து, அவனை வெல்லவில்லையென்றால் நாம் நம்மை ஓர் அடியவன் என்று கூறிக் கொள்ளல் தகுமோ? ஏதாவது ஒரு சிறு கலகத்தையேனும் உண்டுபண்ணி, அதனால் சில அரக்கர்களைக் கொன்றுவிட்டுச் செல்வதே ஏற்றதாகும். நாம் இவ்வனத்தை அழிக்கத் தொடங்குவோமாயின் சிலர் நம்மை எதிர்த்துவருவார்கள். அப்பொழுது நாம் நம் எண்ணத்தை முடித்துக்கொள்ளலாம்' என்று தீர்மானித்து உடனே தன் பெரிய உருவத்தை எடுத்து நின்றான்.

உடனே அவன், அந்த அசோக வனத்திலுள்ள பலவகை மரங்கள், செடிகள், மலர்க் கொடிகள், மண்டபங்கள், தடாகங்கள் முதலிய அனைத்தையும் கதிரவன் தோன்றுவதற்குள் நாசப்படுத்திவிட்டு, ஊழியின் முடிவுக் காலத்தில் தோன்றும் ருத்திர மூர்த்தியைப்போல நின்றான். அவ்வேளையில், முன்னே ஆஞ்சநேயன் உச்சரித்த மந்திரத்தின் வன்மையால் உறக்கம் கொண்டிருந்த அரக்கியர் அனைவரும் விழித்தெழுந்து, மேரு மலைபோல நின்ற மாருதியைப் பார்த்து அஞ்சி நடுங்கி சீதையை, 'இவன் யாரம்மா? இவனை உனக்குத் தெரியுமோ?" என்று கேட்டார்கள். அதற்கு அவள், 'மாயமாக வந்த இவனை மாயஞ் செய்தலில் வல்ல உங்களுக்கன்றி எனக்கு எப்படித் தெரியும்?' என்று கூறினாள்.

அதனைக் கேட்ட அரக்கியர்கள் யாவரும், பேருருவம் கொண்ட ஆஞ்சநேயன்முன் நிற்கலாற்றாது, வயிற்றில் அடித்துக்கொண்டு கூக்குரலிட்டு நாலா பக்கங்களிலும் ஓடினார்கள். அப்பொழுது ஆஞ்சநேயன், அச்சோலையிலுள்ள எழில்மிக்க வேள்வி மண்டபத்தை அடியோடு தன் கரத்தாற் பற்றித் தூக்கி எடுத்து இலங்கை நகரின்மீது வீசி எறிந்தான். அது வீழ்ந்த உடனே அங்கிருந்த பல மாளிகைகளும் தெருக்களும் நாசமாயின; அரக்கர்கள் பலர் இறந்தனர்; சிலர் காயமுற்றனர்; மற்றும் பலர், அது வீழ்ந்த பேரோசையைக் கேட்டு கதறி ஓடினர்.

அப்போது வனத்தின் அழிவைக் கண்டு அதனைக் காத்து வந்த கால தேவர்கள் விரைந்து ஓடிச் சென்று, ராவணனை அடைந்து, ''ஐயனே! மலைபோன்ற திரண்ட தோள்களையுடைய குரங்கொன்று, அசோக வனமெல்லாம் அழித்து வேள்வி மண்டபத்தையும் வேரொடு பிடுங்கி எறிந்துவிட்டது; மற்றும் அக் குரங்கு வனத்திற் செய்த திடுக்கிடும் செயல்களை வாய்விட்டுக் கூறவும் எளிதாக இல்லை. அந்தோ! அதனை ஓர் அற்பக் குரங்கென்று எண்ணல் தகாது. அதன் மிகப் பெரிய வடிவத்தைப் பார்த்தால், அதனால் இந்த லங்கைக்கே அழிவு நேரும் என்று தோன்றுகிறது, தாங்கள் இப்பொழுதே வந்து அதனைக் காணுவீராக'' என்றனர். அவர்கள் கூறியவற்றைக் கேட்டதும் ராவணன் வியந்து, ''ஒரு குரங்கா வனத்தை அழித்ததுடன் யாக மண்டபத்தையும் தூக்கி வீசியது? நம் அரசாட்சி நன்றாயிருக்கிறது'' என்று சொல்லி ஏளனமாக நகைத்தான். அப்பொழுது, அண்டங்களெல்லாம் பிளக்கும்படியும், எண் திசைகளிலுமுள்ள யானைகளும் தேவர்களும் அஞ்சி ஓடும்படியும், அரக்கியர்கள் வயிறுடைந்து சோரும்படியும், மற்றும் பலர் பலவிதமாய்க் கதறும்படியும் அநுமன் பேரிரைச்சலோடு ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தான்.

8. கிங்கரர் வதைப் படலம்

அவ்வாறு ஆஞ்சநேயன் செய்த பெருமுழக்கம் மலைகளிலுள்ள பிலங்களையும் சென்று தாக்கியது; மேகத்தின் இடிபோலவும், அன்று ராமன் ஈசனுடைய வில்லினை ஒடித்த ஓசையைப் போலவும் சென்று ராவணனுடைய முடித்தலைகள் பத்தும் குலுங்குமாறு அவனது இருபது செவிகளிலும் நுழைந்தது. அப்பொழுது அவன் புன்முறுவல் செய்து, சிறிது பொறுமையும் கொண்டு சினந்து, மிக்க ஆற்றலுடைய யமகிங்கரர்களைக் காட்டிலும் வீரமுள்ள பல அரக்கர்களை அழைத்தான்; அவர்களை நோக்கி, ''நீங்கள் யாவரும் இப்பொழுதே விரைந்துபோய் அசோகவனத்தருகே ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கும் அந்தக் குரங்கினை, எங்கும் தப்பிப் போகவிடாமலும், கொல்லாமலும் என்முன் கட்டிப் பிடித்து வாருங்கள்'' என்று கட்டளை இட்டான்.

அக்கட்டளையைக் கேட்ட கிங்கரர்கள், பலவிதமான ஆயுதங்களைக் கரத்தில் ஏந்தியவர்களாய்ப் பெருமுழக்கத்துடன் சென்று, அநுமனை வளைத்துக்கொண்டு சுற்றிலும் நின்று, அவன்மீது ஆயுதங்களை வீசினர்; அம்புகளைச் சொரிந்து அச்சம் காட்டி அவனைப் பிடித்துவிட எண்ணினர்கள். அவர்கள் செய்கையைக்

கண்ட ஆஞ்சநேயன், அந்த ஆயுதங்களும் அம்புகளும் தன்மீது படாதவாறு கைகளாலேயே தடுத்து அப்பாற்போய் விழும்படிச் செய்துவிட்டான். பின்னர் அந்த அரக்கர்கள் வாள்களையும் வேல்களையும் கைகளாற் பற்றிக்கொண்டு அவன்மீது எறிய முயன்றார்கள். அதனைக் கண்ட அநுமன் ஓடிச் சென்று ஒரு பெரிய மரத்தை வேரொடு பிடுங்கித் தன் கரத்தில் தாங்கிய வாறே அவர்கள்முன் விரைந்து சென்றான்; குழுமியிருந்த அரக்கர் ஊடே புகுந்து பம்பரம்போலச் சுழன்றுகொண்டே, அவர்கள் கரங்களிலுள்ள பலவகை ஆயுதங்களும் கீழே நழுவுமாறு அவர்கள்மீது தன் கரத்திற் பிடித்த மரம் மோதும்படியும் வீசினான். அப்போது அரக்கர்களுள் ஒருவர் தவறாது யாவரும் மரத்தின் வலிமையான தாக்குதலால் தாங்கமாட்டாது வாயிலும் மூக்கிலும் உதிரம் பெருக்கெடுத்து வழிய நிலத்தில் வீழ்ந்து மாண்டார்கள். அக்காட்சியைக் கம்பர்,

''ஈர்க்கப் பட்டனர் சிலர்; சிலர் இடியுண்டு பட்டார்;
போர்க்கப் பட்டனர் சிலர்; சிலர் பிடியுண்டு பட்டார்;
ஆர்க்கப் பட்டனர் சிலர்; சிலர் அடியுண்டு பட்டார்;
பார்க்கப் பட்டனர் சிலர்; சிலர் பயமுண்டு பட்டார்.''

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு அரக்க கிங்கரர்கள் யாவரும் வீழ்ந்திறந்தமை கண்ட வனத்தைக் காவல் செய்யும் காலதேவர்கள் விரைந்து சென்று ராவணனை அணுகி, கிங்கரர்கள் யாவரும் ஒருவர்கூட எஞ்சாமல் மடிந்துபோனதையும், ஆஞ்சநேயனுடைய பெருங்களிப்பையும் கூறினார்கள். அது கேட்ட ராவணன், '''ஒரு குரங்கு அரக்கரைக் கொன்றது' என்றும் இது நீங்கள் நேரில் கண்டதோ? அன்றிக் கேட்டதோ?'' என்றும் சினந்து வினவினான். அக்காவலர்கள், ''வனத்தில் ஒருபால் நின்று நாங்களே கண்களாற் கண்டோம்'' என மொழிந்தார்கள்.

9. சம்புமாலி வதைப் படலம்

கிங்கரர்கள் யாவரும் மடிந்துபோனமையையும், குரங்கின் வீரத்தையும் கேட்ட ராவணன் மிகவும் மனங்கொதித்து, தன்னருகே வணங்கி நின்ற பெருவீரனான சம்புமாலியை நோக்கி, ''நீ விரைவிற் சேனைகளுடன் சென்று, அந்தக் குரங்கின் வீரத்தை அழித்து, அதனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து என் முன்னே நிறுத்தி, என் சினத்தை ஆற்றுவாயாக'' என்று கட்டளை இட்டான். அக்கட்டளையைக் கேட்ட

சம்புமாலி, 'அளவிடற்கரிய சிறந்த மற்றைய அரக்க வீரர்கள் முன்னிலையில் தன்னையும் மதித்துப் போருக்கு ஏகுவாய் என்று கூறப்பெற்றேன் எனில், என்னினும் உயர்ந்தவர் யார்' என்று மகிழ்ச்சியடைந்தான். அதனால் அவன் தனக்கு உரிய சேனையோடு ராவணன் அனுப்பிய சேனைகளையும், தன் தந்தை அளித்த வாட்போரிற் சிறந்த பல வீரர்களையும், தனக்குற்ற நண்பர்களான அரக்க வீரர்களையும் அழைத்துக்கொண்டு, பற்பலவிதமான ஆயுதங்களையும் தாங்கித் தேர்மீதேறி, ஆஞ்சநேயனை எதிர்த்துச் செல்லலுற்றான்.

அசோக வனத்தருகே இருந்த ராம தூதனான ஆஞ்சநேயன், அதன் வாயிற்புறத்தே, இந்திரன் வில்லினைப் போன்று காணப்படுவதும் சந்திரன் முதலான நட்சத்திரங்களும் தழுவும்படி உயர்ந்து நின்றதுமான தோரண கம்பத்தின்மீது ஏறிக்கொண்டு, 'அரக்கர்கள் இனியும் ஏன் நம்முடன் எதிர்க்க வரவில்லை?' என்று தன் மனத்தில் எண்ணியவனாய் அவர்கள் வரும் வழியைப் பார்த்தவண்ணமே ஆர்ப்பரித்து நின்றான்.

அப்பொழுது ஆஞ்சநேயனுடன் எதிர்க்க ஆயத்தமாக வந்துகொண்டிருந்த சம்புமாலி, தான் வரும் வழி எங்கணும் இரத்தப் பெருக்கு ஓடிக்கொண்டு பிணக்காடாக இருந்ததால், செல்ல வழியறியாது மயங்கி, பிறகு அச்சவங்களின்மீதே கடந்து செல்லும்படிப் பணித்துத் தன் தேரையும் அவ்வாறே செலுத்திக்கொண்டு போய் அநுமனை நெருங்கினான்.

சேனைகள் யாவும் அணிவகுத்து நின்றன. முன்னும் பின்னும் சேனைகள் சூழ்ந்திருக்குமாறு நடுவில் சம்புமாலி தன் தேர்மீது நின்று, போர் புரியத் தொடங்கினான். அவ்வாறு சேனைகள் சூழ நின்று போர் புரியத் தொடங்கும் அரக்கனைக் கண்டதும் ஆஞ்சநேயன் களிப்புற்றான்; உடனே கம்பத்தினின்றும் கீழே இறங்கித் தானும் போரிட ஆயத்தமானான். அத்தருணத்தில் அரக்க வீரர்கள் அவன்மீது பலவகை ஆயுதங்களை வீசினார்கள். அவைகள் யாவற்றையும், அவன் தன் உடலிற் படுவதற்குமுன்பே இரு கரங்களாலும் பிடித்துப் பல துண்டுகளாக ஒடித்து எறிந்துவிட்டு, கண நேரத்திற்குள், கீழே கிடந்த ஓர் ஆயுதத்தை எடுத்துக் கையிற் கொண்டு, அரக்கர் படையின் மீது தாவிப் பாய்ந்து பலரைக் கொன்று சாய்த்துவிட்டான்.

தன் சேனையிலுள்ள வீரர்கள் பலர் மடிந்ததைக் கண்ட சம்புமாலி, சீற்றம் கொண்டு குருதி படிந்த நிணச் சேற்றில் தன் தேரைச் செலுத்தியவாறு போய், ஆஞ்சநேயன்முன் நின்றான். அப்படி வந்து நின்ற அரக்கனைக் கண்டதும் வாயு மைந்தன் அவனை நோக்கி, ''அடே மூடா! உன்னுடன் வந்த சேனைகளை

காத்தற்கு வலியில்லாத நீ, வீரர்கள் பெரும்பாலோரை இழந்து விட்டாய்; இப்பொழுது உன்னிடத்தில் உள்ள சிறிய சேனைகள் ஓரடிக்குத்தான் போதுமானவை. அவ்வாறு இளைத்துப்போன உன்னுடன் இனியும் போர் செய்வது நீதியாகாது; ஆதலின் நீ உயிர் பிழைத்துப் போய்விடு'' என்று கூறினன். ஆஞ்சநேய னுடைய சொற்களைக் கேட்டதும் சம்புமாலி, ஏளனமாய்ச் சிரித்து, ''நன்று நன்று உன் கருணை! முன்னர் உன்னுடன் போரிட்டு வீரம் இழந்து செத்து மடிந்தவர்களைப்போல என்னை யும் நினைத்தாயோ! இதோ, உன் வல்லமையைக் காட்டு, பார்க் கிறேன்'' என்று சொல்லி நூறுயிரக்கணக்கில் பல அம்புகளை ஆஞ்சநேயன்மீது ஏவிக்கொண்டே, ''அரிய வில்லினை ஏந்திய எனக்கு வெறுங்கையினனான உன்னை வெல்வது அரிதோ?'' என்று கூறியவாறு மீண்டும் சிரித்தான். அவனது அறியாமை யைக் கண்ட ஆஞ்சநேயன் வீராவேசத்துடன் தன்னை நோக்கி வரும் அவனுடைய வாளிகளை எல்லாம் தன் கையாகிய ஆயுதத் தாலேயே தட்டித் துண்டு துண்டாக ஒடித்து, ஏதும் பயனில்லாது போகும்படிச் செய்துவிட்டான்.

தன்னுடைய அரிய வாளிகள் யாவும் ஒடிந்து உதிர்வதைக் கண்டு, அடங்காத சினம் கொண்ட சம்புமாலி, ஆஞ்சநேயனுக்கு அருகிற் செல்ல முயன்றும், பிணக்குவியல்களால் தேரைச் செலுத்தமுடியாமல் திகைத்து அங்கேயே தேரின் நின்று ஓர் அரிய மழுவாயம்பினை எடுத்து வில்லிற் பூட்டி ஏவி அநுமன் கையிலிருந்த ஆயுதத்தை ஒடித்துவிட்டான். அது கண்ட ஆஞ்ச நேயன் சிறிது சலிப்படைந்தாலும் உடனே தெளிந்து, அவன் எய்த மற்ற அம்புகளை வெறுங்கையாலேயே முறித்து வீசிவிட்டு, முன்னிலும் சினம் பொங்கவும், தேவர்கள் யாரும் பார்த்து ஆர்ப்பெடுக்கவும் சம்புமாலியின் தேரின்மீது தாவிப் பாய்ந்து, இமைப் பொழுதில் அவன் கரத்திலுள்ள வில்லினைப் பறித்து அப்படியே அவன் கழுத்தில் மாட்டி முறுக்கி இழுத்தான். அவ்வாறு வில்லின் நாண் முறுக்கேற்று விசையோடு இழுக்கவும், சம்புமாலியின் தலை அறுபட்டு நிலத்தில் விழுந்தது. உடனே ஆஞ்சநேயன் அவன் தேரைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கித் தள்ளிவிட்டு, அதிற் பூட்டிய குதிரைகளையும் சாரதியையும் மிதித்துக் கொன்று, மீண்டும் போய்த் தோரண கம்பத்தின்மீது ஏறிக்கொண்டான்.

அரக்கருடைய சவங்களை ரத்தப் பெருக்கு இழுத்துக் கொண்டு போய் நகரின் பல இடங்களில் தள்ளியது. அங்கங்கே கிடந்த சவங்களின் அடையாளத்தைக் கண்டு இறந்த அரக்கர் களின் மனைவிமார் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓலமிட்டு அழுதார்கள்; சிலர் பயந்து அங்குமிங்கும் ஓடினார்கள். அப்பொழுது வனத்தைக் காவல் புரியும் தேவர்கள், சேனைகளும்

சம்புமாலியும் இறந்தமையை ராவணனிடம சென்று கூறலும், அவன் கண்கள் இருபதும் சிவக்கக் கடுஞ்சினம் அடைந்து, ''இனி நானே போய் விரைவில் அக்குரங்கைப்பற்றி இழுத்து வருவேன்'' என்று கூறி எழுந்தான்.

ராவணன் அவ்வாறு செல்லத் துணிந்தமை கண்ட அவன் சேனைத் தலைவர்கள் ஐவரும் தம் கருத்தைக் கூறத் தொடங்கினர்.

10. பஞ்ச சேனாதிபதிகள் வதைப் படலம்

ராவணனுடைய பஞ்ச சேனாதிபதிகளாகிய விரூபாக்ஷன், யூபாக்ஷன், துர்த்தரன், ப்ரகஸன், பாஸகர்ணன் என்பவர்கள், 'குரங்கினை எதிர்க்கச் செல்வேன்' என்று சொல்லி எழுந்த ராவணனைத் தடுத்து நிறுத்தி, ''மிக்க வீரமும் வலிமையும் உள்ள தங்களுக்கு ஒரு குரங்கின்மீது சினந்து செல்லுதல் இழிவாகும்'' என்று கூறித் தடுத்தனர். மேலும், ''இறைவனே! கேவலம் சிலந்திப் பூச்சிகளை அருந்திக்கொண்டு உயிர் வாழ்கின்ற இந்தக் குரங்கை எதிர்க்கத் தாங்களா செல்வது? மிக்க வலிமையுடைய கருடன், ஒரு கொசுகினை எதிர்த்துச் செல்வதுபோல இந்த அற்பக்குரங்கின் மேற்சென்றால், அன்று தாங்கள் வேரோடு குலுக்கிய வெள்ளி மலையும் தங்க ளிடமுள்ள அச்சத்தை நீக்கிவிடுமே! தாங்கள் ஒரு குரங்கினை அடக்கப் போர் கருதிச் சென்றால், அதனைக் காணும் தேவர் களும் மும்மூர்த்திகளும் பரிகசித்துச் சிரிப்பார்களன்றோ! வெற்றி என்பதை அறியாத மெலியார்கள் சிலரைத் தாங்கள் அனுப்பியதால் அவர்கள் அக்குரங்கினை எதிர்க்கமாட்டாது மாண்டு போயினர். ஆதலின் இப்பொழுது எங்களுக்குக் கட்டளை இடுங்கள்; நாங்கள் சேனைகளுடன் போய் எத்தகைய வலிமையுடையதாயினும், அந்த மற்கடத்தை ஈர்த்துக் கொண்டுவந்து தங்கள் முன்னே நிறுத்துகின்றோம்!'' என்று கூறியவாறு வேண்டினர்.

அது கேட்ட ராவணன் மகிழ்ந்து அதற்கு இசைந்தான். உடனே அவர்கள் ஐவரும் போர்க்கோலம் பூண்டு, அளவில்லாத தேர்கள், பரிகள், கரிகள், பலவிதமான படைக்கலங்கள் முதலியவற்றுடன் புறப்பட்டுப் போய் அநுமன் இருந்த தோரண கம்பத்தருகே வந்தார்கள். அப்பொழுது அவர்கள் அக்கம்பத்தின்மீது சிறிய உருவத்துடன் அமர்ந்திருந்த குரங்கினைக் கண்டு வியப்புற்று, ''இச்சிறிய குரங்கா இங்கு

வந்த வீரர்களையும், பெருத்த சேனைகளையும் அழித்துவிட்டது?'' என்று ஐயத்துடன் வினவிக்கொண்டார்கள்.

பிறகு அந்தச் சேனாதிபதிகள் தம் சேனைகளைத் தோரண கம்பத்தைச் சுற்றிலும் ஆயுதபாணிகளாக நிற்கச் செய்துவிட்டு, ஆஞ்சநேயன்மீது பல படைக்கலங்களை வீசத் தொடங்கினர். அப்பொழுது வாயுமைந்தன், கம்பத்திலிருந்தபடியே பேருருவம் எய்தி ஆவேசம் கொண்டு, தன்னை நோக்கிவந்த பல படைகளையும் கைகளாற்பற்றி முறித்து எறிந்துவிட்டான். சேனைத் தலைவர்கள் குரங்கின் பேருருவத்தைப் பார்த்து அதிசயித்தவாறு, ஆயுதங்கள் வீணானதை எண்ணிச் சீற்றம் கொண்டு, அவன்மீது வலிய தண்டாயுதங்களை எடுத்து எறிந்தார்கள். அவற்றைக் கண்ட ஆஞ்சநேயன் சிறிதும் கலக்கம் கொள்ளாமல், எதிர்த்தவர்களுள் ஒருவன் எறிந்த இரும்புத் தண்டத்தைக் கையில் பற்றிச் சுழற்றியவாறே கம்பத்தினின்றும் கீழே இறங்கி நொடிப் பொழுதில் அரக்கர் சேனைகளின் ஊடே புகுந்து யாவரையும் மோதி மோதி அடித்துக் கொன்றுவிட்டான்.

இவ்விதமாகச் சேனையிலுள்ளோர் இறந்துபோவதைக் கண்ட தலைவர்கள் ஐவரும், ஆத்திரம் பொங்கிய உள்ளத்துடன் தம்முடைய தேர்களை ஆஞ்சநேயன் அருகே செலுத்தி நிறுத்திக்கொண்டு, பல உயர்ந்த அஸ்திரங்களை அவன்மீது எய்தார்கள். அவைகள் எல்லாவற்றையும் அவன் முன்போல ஒடித்துப் பொடியாகச் செய்துவிட்டு, ஒருவனுடைய தேரைக் கையிலுள்ள தண்டத்தால் இடித்து மோதித் துகளாக்கினான். அத்தேரில் இருந்தவன், கண் இமைக்குமுன் வானத்திற் கிளம்பி நின்று ஆஞ்சநேயன்மீது பல அம்புகளை ஏவினான். அவை யாவற்றையும் தண்டினால் நாசப்படுத்திய ஆஞ்சநேயன், அந்த அரக்கனை ஓங்கி அடித்தான். அந்த அடி, அவனுடைய வில்லிற்பட்டு அதனை ஒடித்துவிட்டது. தன் வில் ஒடிந்துபோனதைக் கண்ட அந்த அரக்க சேனாதிபதி, உடனே ஒரு மலையை எடுத்து அவன்மீது வீச முயலுகையில் ஆஞ்சநேயன், அவனைத் தண்டினால் மார்பினில் மோதவும் அரக்கன் உயிரிழந்தான்.

தம்முள் ஒருவன் இறந்துவிட்டது கண்ட மற்ற நால்வரும் கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பைப்போலச் சீறி எழுந்து, பெருமழைபோலப் பல அம்புகளை அநுமனை நோக்கி எய்தார்கள். அப்பொழுது வாயுமைந்தன், அவர்கள் அம்பெய்யும் திறத்தை உணர்ந்து, முன்போலக் கையாற்பற்றி ஒடிக்க இயலாது சிறிது மனம் வருந்தினான். எனினும், அடுத்த கணத்தில் தெளிவடைந்து வேகமாய்ப் பாய்ந்து கைக்கெட்டிய ஒரு

வனுடைய தேரை மேலே தூக்கி வீசினான். அத்தேர் மேலே போய்ப் பூமியில் வீழ்வதற்குள் அதனில் இருந்தவன் கீழே குதிக்கவும், வெகு விரைவில் ஆஞ்சநேயன், அவ்வாறு குதித் தவன்மீது தன் காலை ஊன்றி மிதித்துக் கொன்றான்.

எஞ்சியிருந்த மூவரும் மிக்க வீரத்துடன் அநுமானைத் தாக்கினார்கள். அப்பொழுது அந்த ராமதூதன் அவர்கள் தாக்கு தலை விலக்கிக்கொண்டு சிறிது முன்சென்று இருவருடைய தேர்களைக் கைக்கொன்றாக எடுத்துக்கொண்டு உயரத் தாவினான். அவன் தாவிய வேகத்தால் தேர்கள் இரண்டிலும் கட்டிய குதிரைகள் கீழே விழுந்து மாண்டன. அவற்றின் சாரதிகளும் நழுவி விழுந்து இறந்துபோயினர். தேர்களில் நின்றிருந்த வீரர்கள் இருவரும் தயது இருப்பிடத்தினின்றும் விரைந் தெழுந்து ஆகாயத்திற் கிளம்பிச் செல்வதைக் கண்ட ஆஞ்ச நேயன், அவர்களுக்கும் முன்னே சிளம்பிப் போய், இருவரையும் தன் வாலினால் சுற்றி நெருக்கிக் கொன்று தீர்த்துவிட்டு, கீழே தன் தேரில் நின்ற மற்றவன்மீதும் மேலிருந்தபடியே குதித்து, அவனையும் கீழே தள்ளி உதைத்து மடியச் செய்தான்.

இவ்வாறு மிக விரைவில் தலைவர்கள் ஐவரும் பிணங்க ளாகிவிட்டதைக் கண்ட வீரர்கள் ஓடிப் போய் ராவணனை அடைந்து, ஆஞ்சநேயனாகிய குரங்கின் வீரச் செயலையும், அதனால் சேனாதிபதிகள் ஐவரும் இறந்தொழிந்ததையும் கூறி னார்கள்.

11. அக்ஷகுமாரன் வதைப் படலம்

பெருவீரரான சேனாதிபதியர் ஐவரும் வலிமிக்க பெருத்த சேனைகளும் மாண்டுபோனமை கேட்ட ராவணன் மிக வருந் திச் சினங்கொண்டு தீக்கிளம்பி எழுகின்ற பெருமூச்சுடன், ''அந்தோ! ஓர் அற்பக் குரங்கு இங்கிருந்து அனுப்பிய சேனை களை எல்லாம் கொன்றதுடன், சேனைத் தலைவர் ஐவரையும் மடித்துவிட்டதா? இது மிக்க விந்தையாக இருக்கின்றதே!'' என்று கூறிக்கொண்டு, தானே புறப்பட்டுப்போய் ஆஞ்சநேய னுடன் போர் செய்யத் துணிந்தான். அச்சமயத்தில் அவன் அருகே இருந்த இளைய மைந்தனான அக்ஷகுமாரன் என்பவன், தந்தையின் கருத்தை உணர்ந்து, அவன் பாதங்களில் வணங்கி நின்று, ''எந்தையே! இந்த அற்பக் குரங்கின் செயலை எண்ணி அதன்மேல் தாங்களா போர் தொடுக்கச் செல்லத் துணிய வேண்டும்? தாங்கள் எதிர்க்கப்போவது, சிவன் வாகனமான

நந்தியுடனு? திருமாலின் ஊர்தியான கருடனுடனு? அல்லது அன்னவன் பாயலாகவுள்ள ஆதிசேடனுடனு? அல்லவே! அவர்கள் யாரும் அல்லவென்றால் தாங்கள் மேற்கொள்ளும் செயல் தங்கள் பெருமைக்கு இழிவு அன்றோ? முன்னொரு காலத்தில் இந்திரனைப் பற்றிவருமாறு, நான் தங்கள் அருகே இருக்கவும், என்னையும் என் வீரத்தையும் மதியாமல் என் அண்ணரான மேகநாதரை அனுப்பினீர்கள்; அக்காரியத்திற்கு என்னை அனுப்பவில்லையே என்ற வருத்தம் கொஞ்சம் எனக்கு உண்டு. அவ்வருத்தம் தீருமாறு இம்முறை இக்குரங்கினையே னும் பற்றி வரும்படி அடியேனுக்குக் கட்டளை இடவேண்டும்'' என்றான்.

தன் மைந்தனுடைய வீரமொழிகளைக் கேட்ட ராவணன் சினம் தணிந்து மகிழ்ச்சியுற்று, 'இவன் எவ்விதமேனும் அக் குரங்கைப் பிடித்து வருவான்' என்று நினைத்து ஆஞ்சநேய னுடன் போருக்குச் செல்லும்படி அவனை ஏவி சேனையுடன் அனுப்பினன்.

தந்தையின் அனுமதி பெற்ற அக்ஷகுமாரன் போர்க் கோலம் கொண்டு, முன்னர் நிகழ்ந்த போரில் தேவேந்திரன் அஞ்சி ஓடியபொழுது விட்டுச் சென்ற இருநூறு புரவிகள் பூட் டிய தேரில் ஏறிக்கொண்டான். அப்பொழுது நகர் எங்கணும் போர் முரசு முழங்க, வயது முதிர்ந்த அரக்கர்கள் ஆசி கூறி னர். சேனைகள் யாவும் ஊழிக்காலத்திலே பொங்கி எழுகின்ற கடலைப்போலத் திரண்டுவிட்டன. அவன் அவைகளைத் தனக்கு முன்னும் பின்னுமாகச் செல்லுமாறு பணித்து அதன் நடுவண் அமரர் அஞ்சுமாறு வந்தான்.

அந்த அக்ஷகுமாரனுடனே, பன்னீராயிரம் அரக்க வாலி பரும், அரசகுமாரர்களும், மந்திரிமார்களின் புதல்வரும், பிர தானிகளின் பிள்ளைகளும், ராவணனுக்கு அரம்பையரிடம் தோன்றிய பல மக்களும் ஆகியோரான இரண்டு லட்சம் வீரர் கள் தங்களுடைய தேரின்மேல் ஏறிச் சென்றார்கள். அப்படிச் செல்லும்பொழுது அவர்களுக்குப் பல தீய நிமித்தங்கள் தோன்றலாயின. இவ்வாறு கடல்போன்ற சேனைகளுடனும் பல தோழர்களுடனும் புறப்பட்டுச் சென்ற அக்ஷகுமாரன், ஆஞ்சநேயன் இருக்கும் இடத்தை அணுகினன்.

அவனைப் பார்த்த அஞ்சனை மைந்தன், ''இவன் ராவணன் மகனான இந்திரசித்து என்பவனே? அல்லது அந்த ராவண னேயோ? யாரோ ஒருவன் நம்முடன் போருக்கு வருகின்றான்; அவ்விருவருள் யாவனாயிருந்தாலும் ஒருவனுடன் போர் செய்து வென்றேனாயின் நானும் புண்ணியம் செய்தவனாவேன். ராம

பிரானுக்கும் வெற்றி உண்டாகும்'' என்று ராமனை வணங்கித் தொழுதவாறு தனக்குள் கூறிக்கொண்டான். அத்தருணத்தில் அக்ஷகுமாரன், ஆஞ்சநேயனுக்கு மிக நெருங்கி வந்துவிட்டான். ஆதலின், அவனை உற்று நோக்கியதும், 'இவன் அந்த இருவரும் அல்லன். இவன் யாவனோ தெரியவில்லை. கரிய குன்றினைப் போல் விளங்குகின்றான்; எனினும் இவனை ஒரு நொடி நேரத்தில் கூற்றுவனிடம் அனுப்பிவிடுகின்றேன்' என்று, இந்திரன் வில்லினைப் போன்ற தோரண கம்பத்தின்மீது அமர்ந்துகொண்டு, அரக்கன் செயலை எதிர்நோக்கி இருந்தான்.

அப்பொழுது அக்ஷகுமாரன், கம்பத்தின் மேலே இருந்த ஆஞ்சநேயனை நோக்கியதும், "இந்தக் குரங்குதானா இங்கு வந்த சேனைகளையும் வீரர்களையும் அழித்துவிட்டது!'' என்று ஏளனமாகக் கூறி நகைத்தான். அவனுடைய சாரதி அதனைக் கேட்டு, "ஐயா, இதனை ஓர் எளிய குரங்கென்று எண்ணாதீர்; மூவுலகங்களையும் வெற்றி கொண்ட நம் ராவணேசுவரரைத் துன்புறுத்திய வாலியும் குரங்கு அல்லவா? ஆதலின் நீங்கள் எதற்கும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்'' என்று கூறினான்.

அப்பொழுது அவன், "இங்கே வந்து நமக்குப் பெருந் துன்பங்களைச் செய்த இக்குரங்கு எப்படிப்பட்டதாயினும் இதனை விடாது பற்றிக் கொன்றுவிடுகிறேன் பார்!'' என்று சொல்லி ஆஞ்சநேயனை வளைத்துக்கொள்ளும்படிச் சேனைகளுக்குக் கட்டளை இட்டான். அதன்படி சேனை வீரர்கள் யாவரும் அவன் கீழே இறங்க வழியில்லாதபடி கம்பத்தைச் சுற்றி வளைத்து நின்று அவன்மீது பலவகை ஆயுதங்களை எறிந்தார்கள். அவற்றைக் கண்ட ஆஞ்சநேயன், திடீரென்று அவர்கள்மீதே குதித்து, ஒரு நொடிக்குள் அத்துணைப் பேர்களையும் கைத்தண்டினால் வீசிக் கொன்று பிணக் காடாக்கிவிட்டான். எங்கும் தலைவேறு கால் வேறாக விழுந்து குருதி வெள்ளம் ஆறாகப் பெருகி ஓடியது. அதனைக் கண்டு தவித்து நின்ற அக்ஷகுமாரன் தேர்மீதிருந்தவாறு, அம்புகளைத் தொடுத்துக்கொண்டே தன் தேருடன் ஆஞ்சநேயன் முன் சென்றான். ஆஞ்சநேயனும் அவன் அருகே வந்து நிற்க, அந்த அரக்கன் உடனே தன் வில்லில் பல அரிய வாளிகளைப் பூட்டி, அவன் உடலில் பாயும்படி எய்தான். அப்பொழுது விண்ணிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் மாருதியினுடைய நிலையைக் குறித்து வருந்தினார்கள். அத்தருணத்தில், அரக்கன் எய்கின்ற பாணங்களை எல்லாம் ஆஞ்சநேயன் தன் கரங்களால் தடுத்துச் சிதைத்துவிட்டு சரேலென்று அவன் தேரின்மீது தாவி ஏறி அதனை நிலத்தில் அழுத்தி அதனிற் கட்டியிருந்த குதிரைகளையும் சாரதியையும் கொன்று தீர்த்தான்.

பிறகு அக்ஷகுமாரன் கையிலுள்ள வில்லை விசையாகப் பற்றிப் பிடித்துக்கொண்டு இழுத்தான். இவ்வாறு இருவரும் வில்லை நழுவவிடாது விசையோடு இழுத்ததால் அது ஒடிந்து போயிற்று. அது கண்ட அக்ஷன், மற்போர் செய்யக் கருதி ஆஞ்சநேயனைத் தன் கரங்களால் இறுகப் பிடித்துக் கட்டினன். வாயுமைந்தனும் அவனைத் தன் வாலால் சுற்றி இறுக்கிக்கொண்டு, அவனுடைய பற்கள் உதிரும்படி கன்னத்தில் அறைந்து, கைகளால் குத்திக் கீழே தள்ளி, அவன் உடலின்மீது நின்று குடல் வெளி வரும்படி துவைத்தான்; அப்படியே அக்ஷகுமாரனைப் பூமியின்மீது புரட்டி இழுத்துத் தேய்த்தான். அக்ஷகுமாரன் மாண்டான். அக்ஷகுமாரனின் உயிர் நீங்கவே, எஞ்சியிருந்த சில அரக்கர்களும் அஞ்சி, ஓடினர். சிலர் மீனுருக் கொண்டு கடலை அடைந்தனர்; சிலர் பசுவுருக் கொண்டு புல் கறித்தனர்; சிலர் பறவையுருக் கொண்டு பறந்தனர்; சிலர் அந்தணர் உருக்கொண்டு நின்றனர்; சிலர் பெண்ணுருக் கொண்டு தம் கையால் குழல் வகிர்ந்து நின்றார்கள்; சிலர், 'ஐயா, நின் சரண்! நின் சரண்!' என்று கதறினார்கள். இவற்றை எல்லாம் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்து வியப்பெய்திய காலதேவர்கள் கடுகிச் சென்று அக்ஷகுமாரன் இறந்தான் என்பதை ராவணனிடம் கூறினார்கள். நகரம் முழுவதும் இச்செய்தி பரவிவிட்டது. மகன் இறந்து போனதைக் கேட்ட மண்டோதரி, வயிற்றிலடித்துக்கொண்டு ஓடி வந்து ராவணன்முன்னே வீழ்ந்து கதறிப் புலம்பினாள். எங்கும் அழுகுரல் ஓசை மிகுந்தது. அரக்கர்களின் அழிவு கண்டு மகிழும் மனதினரான தேவர்களும் அவர்களோடு சேர்ந்து அழுதார்கள்.

12. பாசப் படலம்

அக்ஷகுமாரன் இறந்தது கேட்டு யாவரும் புலம்பி அழவே, ராவணனுக்குண்டான துக்கமும் சினமும் அளவிலடங்கா. தம்பி இறந்தான் என்பதைக் கேட்டதும் இந்திரசித்து காலருத்திரனைப் போன்று உருத்தெழுந்து, போர்க் கோலம் பூண்டு ஆயிரத்திரு நூறு பேய்கள் பூட்டிய தேரின் மீதேறி, சேனைகள் சூழ வந்து தந்தையான ராவணனைக் கண்டான்; ராவணனுடைய துக்கத்தைப் பார்த்துத் தானும் புலம்பி அழுதான். தந்தையும் மகனும் கட்டிக்கொண்டு துக்கிப்பதைக் கண்ட அரக்கப் பெண்களும் கதறி அழுதனர். இப்படியாக யாவரும் துயர்க் கடலில் மூழ்கியிருந்து எழுந்ததும், இந்திரசித்து, தன் தந்தையை நோக்கி, ''அந்தக்

குரங்கினுடைய வலிமையை அறியாமல் சேனைகளுடன் பல வீரர்களையும் தம்பியையும் அனுப்பி யாவரும் மாண்டுபோகும்படிச் செய்துவிட்டீர்கள். ஒரு குரங்கினால் நேர்ந்த இத்தகைய விபரீதத்தைக் காட்டிலும், நமக்கு வேறு என்ன இழிவு இருக்கிறது ? நாம் அந்தக் குரங்கைப் பிடித்துச் சித்திரவதை செய்தாலும் அது நீங்குமா ? எனினும், நாம் அதனைச் சும்மா விட்டு விடலாகாது ; நானே சென்று அக்குரங்கை இழுத்துக்கொண்டு வருகிறேன் ; தாங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம்'' என்று சொல்லிப் புறப்பட்டுப் போர்க்களத்தை அடைந்தான்.

அங்கே ரத்த வெள்ளத்தில் குடல் சரிந்து வீழ்ந்து கிடந்த தம்பியின் சவத்தைக் கண்டு தேரின்மீதிருந்தபடியே இந்திரசித்து மிகவும் சோர்ந்து துக்கித்துப் புலம்பி, 'ஒரு குரங்கு தனியாக வந்து பெருஞ்சேனைகளை எல்லாம் மடியச் செய்துவிட்டு, சிறந்த வீரனான நம் தம்பியையும் கொன்றுவிட்டதே ; இனி இத்தகைய குரங்குகளுடன் அந்த ராமனும் லக்ஷ்மணனும் செய்யும் போர் எப்படி இருக்குமோ ? நாம் இக்குரங்கிற்கு இவ்வாறெல்லாம் செய்ய இடம் அளித்தது மிகவும் கேவலம் ; நம் தம்பியைக் கொன்ற இதனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும்' என்று நினைத்துக் கடுஞ்சினங்கொண்டு விரைந்து வந்தான்.

அச்சமயத்தில் பிணங்களின்மேல் தேரைச் செலுத்திக்கொண்டு விரைந்து வருபவனைக் கண்ட ஆஞ்சநேயன், 'இவன் இந்திரசித்தேயாவன். நான் இவனையும் தொலைத்துவிட்டேனாயின் இனி நிகழவேண்டியவை யாவும் எளிதாக முடிந்துவிடும். தேவேந்திரனுடைய துயரமும் ஒழிந்துபோகும்' என்று எண்ணினான். அப்பொழுது இந்திரசித்தின் வீரர்கள், ஆஞ்சநேயனைச் சூழ்ந்து நின்று, அவன்மீது பல அஸ்திரங்களைப் பொழிந்து போர் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது ஆஞ்சநேயன் கம்பத்தினின்றும் கீழே குதித்துப் பெரியதொரு மராமரத்தைப் பிடுங்கிக் கையிற் பற்றிக்கொண்டு சுழற்றியபடி, தானும் போர் செய்யத் தொடங்கினான். அப்படிச் செய்த போரில் ஏராளமான அரக்க வீரர்கள் இறந்தார்கள். குதிரைகள் ஒன்றின்மேலொன்று பாய்ந்து உருண்டு வீழ்ந்து மடிந்தன. மலைபோன்ற யானைகளிற் சில உதைப்புண்டன. சில உருண்டன. மற்றும் சில ஒன்றின் மேல் ஒன்று விழுந்து புதையுண்டு போயின. அவற்றால் இந்திரசித்து, தன் சேனைகளுள் பெரும்பகுதி அழிந்துவிட்டது கண்டு மனமுடைந்து பின்பு தெளிந்து முன்னிலும் மிக்க சினம் கொண்டு ஆஞ்சநேயனுக்கு எதிரில் போய்த் தேரை நிறுத்திப் பல வீர மொழிகளைப் பேசி ஆர்ப்பரித்தான்.

அநுமனும் அவனைப் பலவாறு இடித்துப் பேசினான். பிறகு இந்திரசித்து வில்லினை வளைத்து ஆஞ்சநேயன் தலையிலும் உடலி

லும் அழுந்தும்படி அஸ்திரங்களை ஏவினன். அத்தருணத்தில் ராமதூதன், பேருருவம் எய்தி நின்று, தோள்களைத் தட்டி ஆர்ப் பரித்தான். அவன் வடிவத்தைப் பார்த்த இந்திரசித்து திகைத் துப் போய், அவ்வுருவத்தின் பெரும்பாலான அவயவங்களைக் காணமுடியாமல் அஸ்திரங்களை எய்துகொண்டிருந்தான். அவற்றை எல்லாம் கரத்தினல் தட்டி எறிந்த ஆஞ்சநேயன் அவனுடைய தேரில் பூட்டிய குதிரைகளைக் கொன்று சாரதியை யும் அடித்து வீழ்த்தித் தேரினையும் சிதைத்துவிட்டான். அதனல் இந்திரசித்து வேருெரு தேரில் ஏறிக்கொண்டு, பல அம்புகளால் மாருதியை அடித்தான். அவன் அவைகளை உதறி அப்புறப் படுத்திவிட்டு, விசையுடன் அவன் தேரிற் பாய்ந்து அவன் கரத்து வில்லை முறித்துவிட்டான். மறுகணமே இந்திரசித்து, ஒரு காலத்தில், தன் முன் நிற்கமுடியாமல் அஞ்சியோடிய இந்திரன் எறிந்துவிட்டுப் போன அவன் வில்லினை எடுத்து வளைத்துப் பல நூறு பாணங்களைத் தொடுத்து, அநுமனுடைய உடலிற் பாய்ச்சி ஞன். அவற்ருல் மாருதியினுடைய உடலினின்றும் சோரி பொழிந்தது. சிறிது நேரம் சோர்ந்திருந்தபின்பு அது நீங்க அநுமன் தன் கையால் ஒரு மரத்தைப்பற்றி எடுத்துக்கொண்டு, அவனுடைய அம்புகளை எல்லாம் துண்டுகளாகச் செய்து, அம் மரத்தால் அவன் தலையில் ஓங்கி அடித்தான். அவ்வடியால் அவன் மகுடம் நொறுங்கித் தலையினின்று ரத்தம் சோர அவன் சோர்வுற்று மயங்கி இருந்தான். பிறகு தெளிவு பெற்று, தேவ ரும் முனிவரும் திகைப்படையும்படி, ஆஞ்சநேயன் உடல் நடுங்கு மாறு அவன்மீது பல கடிய பாணங்களைச் சொரிந்தான். அவை தன்மீது பாய்வதற்குள் அநுமன் எல்லாவற்றையும் காத்தால் வலித்து மறைத்துவிட்டு ஆத்திரம் கொண்டு இந்திரசித்தைத் தேருடன் எடுத்து மேலே எறிந்து ஆர்ப்பரித்தான். எறியப்பட்ட அவன், கண் இமைப்பதற்குள் தேருடன் பூமியில் விழுந்து, அக் கணத்திலேயே தேரை விட்டு ஆகாயத்தில் எழும்பினன். தேர் நொறுங்கிச் சுக்கலாகப் போய்விட்டது. அதனைப் போலவே, ஆஞ்சநேயன் அவனுடன் வந்திருந்த மற்ற உதவித் தேர்களையும் உதைத்து நொறுக்கி விட்டான்.

அப்பொழுது இந்திரசித்து, தான் ஏறுதற்கு வேறு தேர் இல்லாததாலும் எதிரில் நின்று போர் தொடுத்தற்கு வலியற்று இருந்ததாலும் மனம் வருந்தியவனய், 'நாம் இனி, நம்மிட முள்ள பிரம்மபாசப் பகழியையேனும் தொடுத்துப் பார்ப் போம். அஃது ஒன்றே இத்தகைய ஆபத்துக் காலத்தில் உதவி செய்யக்கூடியது' என்று எண்ணி, அந்த மாறில்லாத அம் பினை எடுத்து, மனத்தினலேயே முறைப்படிப் பூசித்து அர்ச்சனை செய்து வில்லிற் பூட்டி, ஆஞ்சநேயனுடைய தோள்களுக்கு நேராகக் குறி பார்த்து, மண்ணும் விண்ணும் நடுங்கும்படி நாணை இழுத்தான். உடனே அந்த பிரம்மாஸ்திரமானது

விரைந்து சென்று ஆஞ்சநேயனுடைய தோள்களைப் இறுகப் பிணித்தது. அதனால் அவன் மிகவும் சோர்ந்து தோரண கம்பத்தின்மீது சாய்ந்திருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் உணர்ச்சியடைந்து, அது பிரம்மாஸ்திரம் என்று அறிந்தான். பாசத்தால் தோள்கள் கட்டப்படுவதையும் அறிந்து கொண்டு 'இதற்கு மாறாக நாம் செய்வதொன்றின்று' என எண்ணி ராமனைத் தியானித்தபடி அசையாமல் நின்று விட்டான்.

ஆஞ்சநேயன் அசைவின்றி நின்றமை கண்ட இந்திர சித்து, குரங்கின் வலி ஒடுங்கிவிட்டது என்று நினைத்து அவன் அருகே வந்தான். மற்ற அரக்கரும் அச்சம் நீங்கி ஓடிவந்து, அவனைக் கட்டி இருக்கும் பாம்பு போன்ற பாசத்தின் தலையை யும் வாலையும் பற்றி இழுத்தார்கள். இவ்விதம் ஆஞ்சநேயனு கிய குரங்கு இந்திரசித்துக்குக் கட்டுப்பட்டதென்ற செய்தி யைக் கேட்ட நகரத்திலுள்ளோர் யாவரும் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். அந்த ஆர்ப்பினால் லங்கை நகரம் கடலை ஒத்திருந்தது. ஆஞ்சநேயனைக் கட்டிய பிரம்மபாசமாகிய பாம்பு அக்கடலைக் கடைந்த மத்தினைச் சுற்றியிருந்த நாணை வாசு கியை ஒத்திருந்தது; அந்த நாணைப்பற்றி இழுத்த தேவர்கள் பிரம்ம பாசத்தைப்பற்றியிழுக்கும் அரக்கரை ஒத்திருந்தனர். ஆஞ்சநேயன் கடல் கடைந்த மத்தான மந்தர மலையை ஒத்தி ருந்தான். இக்கருத்தினைக் கம்பர் அழகாக,

> ''குரக்கு நல்வலம் குறைந்ததென் றாவலம் கொட்டி
> இரைக்கு மாநகர் எறிகடல் ஒத்ததெம் மருங்கும்
> திரைக்கு மாசுணம் வாசுகி ஒத்தது தேவர்
> அரக்கர் ஒத்தனர் மந்தரம் ஒத்தனன் அநுமன்.''

[குரக்கு: குரங்காகிய ஆஞ்சநேயன். ஆவலம் கொட்டி: வெற்றிக்காகக் கைகளைக் கொட்டி. திரை: அலைகளையுடைய கடல். மாசுணம்: பாம்பு.]

என்று பாடியுள்ளார்.

13. பிணி வீட்டு படலம்

ஆஞ்சநேயனைப் பிணித்த பிரம்மபாசமாகிய பாம்பின் தலையையும் வாலையும் பற்றிப் பிடித்துக்கொண்ட ஐம்பதி னாயிரம் கிங்கரர்கள், அவனை லங்கையின் தெரு வழியே

இழுத்துச் சென்றனர். அப்பொழுது தெருவில் நிற்போரும் வருவோரும் போவோரும் மாளிகைகளிலுள்ள சாளரங்களின் ஊடே காண்போருமாகிய அந்நகரத்திலுள்ளவர்கள் எல்லோரும், கிங்கரர்களால் இழுத்துவரப்பட்ட ஆஞ்சநேயனை நோக்கிச் சினந்தும் இகழ்ந்தும் இரங்கியும் புகழ்ந்தும் மகிழ்ந்தும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். அவ்வாறு அவர்கள் தன்னைக் குறித்துப் பேசுவதைக் கேட்டும், அரக்கர்களால் இழுத்துச் செல்லப்பட்டு அவர்களைத் தொடர்ந்தவாறு போய்க்கொண்டிருந்த ஆஞ்சநேயன், 'நமக்கு இந்தப் பிரம்ம பாசத்தினின்றும் விடுவித்துக்கொள்ள முடியுமேனும், நாம் அப்படிச் செய்யாமல் அதற்குக்கட்டுப்பட்டதாகவே யாவரும் எண்ணும்படிச் செய்து இந்திரசித்தின் மூலமாக ராவணனை அடையவேண்டும்; அவனை நேரிற் கண்டால் அவனுடைய மற்றச் செய்திகளையும் அறிவதுடன், நம் பேச்சினால் அவனுடைய கருத்தையும் அவனைச் சார்ந்தவர்களின் கருத்தையும் உணரலாகும். இன்னும் அவனுக்கு, நம ராமருடைய பெருமைகளையும் வலிமையையும் கூறினேமானால், அதைக் கேட்ட ராவணன், தன்னுடைய தகாத செயல்களை உணர்ந்து, ஜானகியாரை ராமபிரானிடம் சேர்ப்பித்து அவரிடம் மன்னிப்பு வேண்டினும் வேண்டலாம். அவன் அப்படிச் செய்ய விருப்பம் இல்லாதவனாய், நம் சொற்களை மதியாமல் நமக்கு ஏதேனும் தீங்கு செய்யக் கருதுவானாயின், உடனே ம் கட்டினின்று நீங்கி, மற்ற அரக்கர்களையும் ஒழித்துவிட்டு இந்த லங்கையையும் பாழ்படுத்திச் சென்றுவிடலாம்' என்று தனக்குள் முடிவு செய்துகொண்டு பாசத்திற்கு அடங்கியவன் போல ஏதும் செய்யாமல் அரக்கர்களோடு சென்றான்.

அப்பொழுது இந்திரசித்து அநுமனை ராவணனுடைய அரண்மனைக்கு இழுத்துப்போகும்படி அரக்கர்களுக்குக் கட்டளை இட்டான். அங்கிருந்த தூதுவர்களிற் சிலர் ராவணனிடம் ஓடிப்போய் அவனைக் கண்டு, "பெருமானே! தங்களுடைய மூத்த புதல்வர், மலர்க் கடவுளின் வாளியால் வலிமிக்க குரங்கினைக் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறார்" என்று கூறி வணங்கினார்கள். தூதர்கள் கூறியதைக் கேட்டதும் ராவணன் பேருவகையால் தோள்கள் பூரிப்படைய அத்தூதுவர்களை நோக்கி, "நீங்கள் இந்திரசித்தினிடம் விரைவாகப் போய், குரங்கினைக் கொல்லாமல் நாம் கொண்டுவரச் சொன்னதாகக் கூறுங்கள்" என்று ஆணை இட்டான். அவ்வாறே தூதுவர்கள் சென்று, ராவணன் ஆணையை இந்திரசித்துவிடம் தெரிவித்தார்கள். ஆஞ்சநேயன் பாசத்தால் பிணிப்புண்ட செய்தி எங்கும் பரவிவிட்டதால், அசோக வனத்திலிருந்த சீதையும் அச்செய்தி அறிந்து, புகையுண்ட

ஓவியம்போலப் பூவினை ஒத்த தன் மேனி சிலிர்த்து வருந்தி, வேடன் கையகத்துச் சிக்கிய தன் குஞ்சினைக் கண்ட அன்னத்தைப்போன்று, 'அந்தோ! நம் காரியங்களுக்கெல்லாம் பழுது நேரும்படி வீரனான நீ இவ்வஞ்சகர்களிடம் அகப்பட்டுக்கொண்டாயே' என்று பலவாறு புலம்பித் துக்கித்தாள்.

இவ்வாறு சீதை துயரத்திலிருக்கும்பொழுது, அரக்கர்கள் அரண்மனையை அடைந்து சபாமண்டபத்தில் அமர்ந்திருந்த ராவணன் முன்பு ஆஞ்சநேயனை நிறுத்தினார்கள். அவ்வாறு தான், அந்த ராவணன்முன்னர் நிறுத்தப்பட்டதும் ஆஞ்சநேயன் அவனைப் பத்துத் தலைகளுள்ள சர்ப்பத்தைக் கண்ட கருடனைப்போல் மனம் கொதித்து, 'இவ்வஞ்சகனை நேற்றைய இரவில் உறங்குகின்றபொழுது நாம் கண்டும், உறங்குபவனைக் கொல்லல் தீது என்றும், அது நமது பிரான் கட்டளையும் அன்று என்றும் எண்ணி ஏதும் செய்யாது விட்டுச் சென்றோம்; எனினும், இப்பொழுது பாவியான இவனைப் பலர் அறியக் கொன்றுவிட்டு ஜானகி தேவியையும் அழைத்துச் செல்வதே தகுதியானது. ஆதலால் நம்மைப் பிணித்திருக்கும் பிரம்மபாசத்தை அறுத்தெறிந்துவிட்டு, இவன்மீது தாவிக்கொல்வோம்' என்று எண்ணினான். மீண்டும் அவன், 'நனது எண்ணம் இப்பொழுது வெற்றி பெறாது; ஏனெனில், அவன் மிக்க வலிமை உடையவன்; இவனை எதிர்த்து வெற்றி கொள்ளப் பல தினங்கள் ஆகலாம்; இன்னும் ஒரு மாதம் வரையில்தான் உயிர்த்திருப்பேன் என்று சொன்ன தேவியார் தன் ஆவியைப் போக்கிக்கொண்டு விடுவார். ராகவரும் தமது கரத்தால் இவனைக் கொல்வதாகக் கூறியிருக்கிறார். ஆதலின், நாம் இவனைக் கொல்லும் எண்ணத்தை விட்டு, தூதனைப்போலவே நடந்துகொள்வோம்' என்று, ராவணன் அருகே போய் நின்றான்.

அத்தருணத்தில் இந்திரசித்து, தன் தந்தையான ராவணனுக்கு ஆஞ்சநேயனைச் சுட்டிக் காண்பித்து, ''ஐயனே! இந்த வானர உருவாக நிற்கின்றவன், உலகங்கள் எல்லாவற்றையும் வென்று அழிக்கும் சிவனையொத்த மிக்க வீரன்'' என்று அவனை அறிமுகப்படுத்தினான். மகனுடைய சொற்களைக் கேட்ட ராவணன், கண்களிலும் வாய்களிலும் தீப்பறக்கப் பற்களைக் கடித்துப் பெருமூச்செறிந்து, ஆஞ்சநேயனை நோக்கி,

''நேமியோ! குலிசியோ! நெடுங் கணிச்சியோ!
தாமரைக் கிழவனோ! தறுகண் பல்தலைப்
பூமிதாங் கொருவனோ! பொழுது முற்றுற
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய்!''

''நின்றிசைத்(து) உயிர்கவர் நீலக் காலனோ ?
குன்றிசைத்(து) அயிலுற எறிந்த கொற்றனோ !
தென்றிசைக் கிழவனோ ? திசைநின்(று) ஆட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவன்நீ !''

''அந்தணர் வேள்வியின் ஆக்கிய ஆணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ ?
முந்தொரு மலருளோன் இலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய திகிரித் தெய்வமோ !

''ஆரை நீ என்னையிங்(கு) எய்து காரணம் ?
ஆருனை விடுத்தவர் ? அறிய ஆணையால்
சோர்வில சொல்லுதி என்னச் சொல்லினன் .''

[நேமியான் : சக்கரப் படையையுடைய திருமால். குலிசியான் : வச்சிரப்படையுடைய இந்திரன். கணிச்சியான் : சூலமேந்திய சிவன். தாமரைக்கிழவன் : பிரமன். தறுகண் : அஞ்சாமை. பூமிதாங்கு ஒருவன் : பூமி தாங்கும் ஆதிசேடன். குன்று எறிந்த கொற்றவன் : முருகன். அயில் : வேல். திசை நின்ற ஆட்சியர் : திக்கு பாலர்கள். வயம் : வெற்றி.]

அதற்கு ஆஞ்சநேயன், ராவணனை நோக்கி, ''நான், நீ கூறிய திருமால் முதலிய யாவருள்ளும் ஒருவனல்லன்; அவர்களுள் எவருடைய ஆணையைக் கொண்டும் வந்தவனல்லன். அயோத்தியின் பேரரசரான தசரத மன்னவருக்குப் புதல்வராய்த் தோன்றியவரும், கோதண்டம் என்ற வில்லினை ஏந்தியவருமான ராமபிரானுக்குத் தூதன் நான். அவர் யாவரெனில், ஆதியும் நடுவும் முடிவும் என்பதில்லாதவரும், முன்னுகிய இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற காலங்களும் கணக்கின் எல்லைகளையும் கடந்த காரணப் பொருளாய், திருக்கரத்தில் வில் ஒன்றினை மட்டும் தாங்கி, மற்றச் சூலம், சக்கரம், சங்கு, குண்டிகை என்பவைகளைத் துறந்து, தம் இருப்பிடங்களான திருப்பாற் கடலையும் தாமரை மலரையும் வெள்ளி மலையையும் விட்டு நீங்கி அயோத்தி நகரில் எழுந்தருளியவர் ஆவர். அத்தகைய சிறப்பினையுடையவருக்கு நான் அடிமைத் தொழில் புரிபவன்; என் பெயர் அநுமன் என்பார்கள். எங்கள் இறைவரான ராகவருடைய தேவியாரான சீதா பிராட்டியாரைத் தேடிக்கொண்டு, நான்கு திசைகளிலும் சென்ற எங்கள் சுக்ரீவ மன்னருடைய சேனைகளுள், தென்பால் வந்த படைகளுக்குத் தலைவனும், வானர அரசன் வாலியின் மைந்தனுமான இளவரசன் அங்கதன் கட்டளைப்படித் தூதுவனுக நான் இங்கே வந்தேன்'' என்றுன்.

ஆஞ்சநேயன் கூறியவற்றை எல்லாம் கேட்ட ராவணன், நகைத்து, அவனை நோக்கி, ''வாலியின் மைந்தன் அனுப்பிய தூதனே, வாலி சுகமாக இருக்கின்றானா? அவன் அரசு நன்கு இருக்கின்றதா?'' என்று கேட்டான். ஆஞ்சநேயன் சிரித்து, ''அரக்கர்க்கரசே, நீ சிறிதும் அஞ்சற்க; எங்கள் ராகவருடைய ஓரே அம்பினால் வாலி இறந்துபோனான். அவனுடைய வாலும் அவனோடு போய்விட்டது. இப்பொழுது எங்களுக்கு அரசன் சுக்ரீவன். இளவரசன் அங்கதன்'' என்று கூறினான்.

ராவணன், ''அந்த வாலியை உங்கள் ராமன் எவ்வாறு கொன்றான்? அவன் இப்பொழுது எங்கு இருக்கிறான்? அந்த ராமனுடைய மனைவியை அங்கதன் தேடவேண்டிய காரணம் என்ன?'' என்று பின்னரும் வினவினான். அவன் அவ்வாறு வினவியதற்கு விடையாக, மாருதி, ராமர் சீதையைத் தேடிக் கொண்டு வரும்பொழுது, சுக்ரீவனைக் கண்டு நட்புச் செய்து கொண்டதையும், சுக்ரீவன் வேண்டியபடி வாலியைக் கொன்று ராமர் அவனுக்கு அரசைக் கொடுத்ததற்காக அவருக்கு உதவி செய்யும்பொருட்டு அவருடைய அனுமதியால் தேவியாரைத் தேடச் சேனைகளை அனுப்பியதையும், அவ்விதம் தென் திசைக்கு வந்த சேனையின் தலைவனாகிய அங்கதன் அனுப்பத் தான் வந்ததை யும் கூறினான். பின்பு அவன், ''நான் வந்தது ராம காரியமாத லால் எங்கள் சுக்ரீவனுக்கும் தூதனே; ராமனுக்கும் தூதனே'' என்றான்.

ஆஞ்சநேயன் கூறியதைக் கேட்டதும் ராவணன், ''உங்கள் தலைவனாக இருந்த பெருவலியையுடைய வாலியைக் கொல்வித்த தன்றி, உங்கள் குலத்தார் அக்கொலைபாதகனான ராமனுக்கு ஏவல் செய்வது உங்களுக்கு இழிவு என்று தோன்றவில்லையா? தூதனாக இங்கு வந்த நீ, போர் தொடுக்கக் காரணமென்ன? சுக்ரீவன் எனக்குத் தெரிவிக்கும்படிக் கூறியவை யாவை? தூத னென்று சொன்ன உன்னை நான் கொல்லமாட்டேன். ஆதலின், நீ அஞ்சாமல் உண்மையைச் சொல்'' என்றான். அப்பொழுது ஆஞ்சநேயன், 'இவனுக்குச் சில நீதிகளை எடுத்துரைத்து, இவன் செய்துள்ள தீமைகளை எடுத்துக் காட்டி இவனுடைய கருத்தை அறிவதற்கு இதுவே தருணம்' என்று எண்ணி, ராவணனைப் பார்த்து, ''லங்கை வேந்தே! நீ அரிய தவங்கள் யாவும் செய்து பலவிதமான சிறப்புக்களைப் பெற்றிருந்தும் அறம் தவறி நடந்து அவற்றை எல்லாம் போக்கிக்கொள்ள முயல்கின்றாய்; அருந் ததிக்கு ஒப்பான தூய்மையுடைய கற்பினளான சீதாதேவியை இச்சித்து எடுத்துவந்து, அவரைத் துன்பத்திற்குள்ளாக்கியதால் அந்த ராமருடைய பாணமானது உன்னைக் குலத்தோடு அழித்து விடப்போகிறது; அன்றியும், காம மயக்கத்தால் முறை தவறிய

வர் வாழ்வரோ ? தன்னிடம் வெறுப்புற்ற ஒருத்தியை விரும்பிப் பாவத்தைத் தேடிக்கொண்டு வாழ்கின்ற வாழ்வைக் காட்டிலும், முகத்தின் ஓர் உறுப்பாகிய மூக்கினை அறுத்துக்கொண்டு வாழ்வது நன்று. 'ஆதலின், உன் பெருஞ்செல்வத்துடன் உன் உயிரும் சுற்றமும் நிலைக்கவேண்டுமாயின், நீ இத் தீய எண்ணத்தை விட்டுச் சீதையை ராமனிடம் சேர்ப்பித்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்' என்று உனக்குக் கூறும்படிச் சுக்ரீவன் என்னிடம் சொல்லியனுப்பினான்'' என்றான்.

ஆஞ்சநேயன் இவ்வாறு சொன்னதும், ராவணன், ''இனி நான், மலைகளில் வாழும் குரங்குகளின் புத்தியைக் கேட்டுத்தான் நடக்கவேண்டும்'' என்று சொல்லிப் பெரியதாக நகைத்தான். பிறகு அவன் அந்தச் சுக்ரீவன் சொற்களும், மானிடரின் வீரமும் அப்படியே இருக்கட்டும்; ''இங்கே தூதனாக வந்த நீ, அரக்கர்களைக் கொன்ற காரணம் என்னடா? அதனைச் சொல்'' என்று சினத்துடன் ஆஞ்சநேயனைப் பார்த்துக் கேட்டான். ஆஞ்சநேயனும் அவனைச் சீற்றத்துடன் பார்த்து, ''நான் உன்னை நேரே பார்க்க விரும்பியும் அது முடியாததால், உன்னுடைய அசோக வனத்தை அழித்தால் அதன் காரணமாக உன்னைக் காணலாகும் என்றே அதனை அழித்தேன். அது கண்ட அரக்கர்கள், என் கருத்தை அறிந்துகொள்ளாமல் என்னைக் கொல்ல வந்தார்கள். அதனால் நான் அவர்களை வதைத்தேன். பின்னரும் உன்னைப் பார்க்கும் நோக்கத்துடனேயே வலிமையற்றவன்போல் கட்டுண்டு இங்கு வந்தேன்'' என்றான்.

ஆஞ்சநேயன் கூறிய மாத்திரத்தில் தீயின் சுவாலை நீண்டெழுவது போன்று சினந்தெழுந்து, கொலையாளிகளை நோக்கி, ''இந்த அடாத குரங்கை என் முன்னரேயே நசுக்கிக் கொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான். உடனே கொலையாளிகள் ஆஞ்சநேயனை அணுகிச் சூழ்ந்துகொண்டனர். அத்தருணத்தில் மிக்க நீதிமானாகிய விபீஷணன் அக்கொலையாளிகளைக் கையமர்த்தி நிறுத்திவிட்டுத் தமையனாகிய ராவணனை நோக்கி, ''சிறப்புடைய லங்கை அரசே! தூதுவனாக வந்த இவனைக் கொல்லுதல் தகாது. பூதலப்பரப்பிலும், மலைப்பரப்பிலும், அவற்றிற்கு அப்புறத்தும் பொய்ம்மை நீங்கிய வேதங்கள் இயங்குகின்ற வெவ்வேறு இடங்களிலும் உள்ள அரசர்களில் ஒரு சிலர் மாதர்களைக் கொன்றவர்கள் உளர் எனினும், தம்மிடம் வந்த தூதுவர்களைக் கொன்றவர்கள் ஒருவரும் இலர். ஆதலின், நாம் இவனைக் கொன்றால் பழிப்புக்கிடமாகும். இவனை உயிருடன் விட்டால்தான் இவன் நம் எதிரிகளை அடைந்து நம் சேனைகளின் அளவையும் வீரர்களின் தன்மையும் கூறுவான். கொன்றுவிட்டால் கூறுபவர் எவர்? இன்னும் நாம் இவனைக் கொன்றால்

நம்முடைய தன்மைகளை எதிரிகளுக்கு அறிவிக்க அஞ்சி, இவன் உயிரைப் போக்கிவிட்டதாக உலகோர் கருதுவார்கள். ராமனும் லக்ஷ்மணனும் சூர்ப்பணகையைக் கொல்லாது அங்கங்களை மட்டும் சிதைத்து அனுப்பினார்களே. ஏன்? அவர்களுடைய வல்லமையை நமக்கு அறிவித்தற் பொருட்டன்றோ? ஆதலின், இவற்றை ஆலோசித்து இவனைக் கொல்லாது அனுப்பிவிடுவது ஏற்றதாகும்'' என்று கூறினான்.

விபீஷணன் உரைத்ததைக் கேட்ட ராவணன் அவனை நோக்கி, ''தம்பி! நீ நல்லதே சொன்னாய்!'' என்று கூறிப் பின் ஏவலரை நோக்கி, ''இவன் வாலை மூலமறச் சுட்டு நகரைச் சுற்றி இழுத்துச் சென்று எல்லை தாண்டிப் போகுமாறு விட்டுவிடுங்கள்'' என்று ஆணையிட்டான். உடனே அக்கட்டளையை நிறைவேற்றப் பல அரக்கர்கள் பேரொலியுடன் திரண்டு அஞ்சநேயனை அணுகினர். அத்தருணத்தில் 'பிரம்மபாசப் பிணிப்புடன் அஞ்சநேயனுடைய அங்கத்தில் தீயிடல் பிரம்மதேவனுக்கு இழிவை உண்டாக்கியதாகும்' எனக் கருதிய இந்திரசித்து, அவனை அணுகி அப்பாசத்தின் கட்டை அவிழ்த்துவிட்டான்.

அதன் பிறகு, அஞ்சநேயனைச் சூழ்ந்து நின்ற அரக்கர்கள் சுமை சுமையாகக் கயிறுகளைக் கொண்டுவந்து அவனை இறுகக் கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். ஆஞ்சநேயன், ''நாம் பிரம்ம பாசத்தைச் சிதைக்கலாகாது என்று அஞ்சி இருந்தோம்; இப்பொழுது இவர்களே அதனை நீக்கியது நமக்கு நல்லதாயிற்று; ஒரு நொடிக்குள் நம்மைக் கட்டிய கயிறுகளை எல்லாம் அறுத்தெறிந்து விடலாம். இன்னும் இந்த அரக்கர்கள் நம் வாலில் நெருப்பிடுவார்களாயின், அவர்களே இத்த 'லங்கை நகரைச் சுட்டெரித்துவிடு' என்று நமக்குக் கூறியது போலாகும். நம்முடைய வாலிலிடும் நெருப்பினாலேயே லங்கை நகரம் முழுமையும் பொசுக்கி அழித்துவிடலாம்'' என்று கருதினான். அரக்கர்கள் கயிற்றால் பிணித்து இழுத்துப் போவது துன்பமாயிருந்தாலும், அதனைப் பொறுத்துக்கொண்டு அதற்கு அஞ்சி ஒடுங்கினவன் போல அவர்களோடு சென்றான். அவனை இழுத்துப்போன அரக்கர்கள் அரண்மனையைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் ஓரிடத்தில் நிறுத்தி, எண்ணிறந்த சீலைகளை ஆஞ்சநேயனுடைய வாலில் நெருக்கமாகச் சுற்றி, அதன்மேல் குடங்குடமாக எண்ணெய்யை ஊற்றி, வால் நுனியில் நெருப்பைக் கொளுத்தி விட்டு அண்டம் நடுங்கும்படி ஆர்ப்பரித்தார்கள்.

பின் அநுமனின் கைகளிலும் இடுப்பிலும் கட்டித் தொங்க விட்ட கயிற்றைப் பக்கத்திற்கு நூறாயிரம் பேர்களாக இறுக்கிப் பற்றிக்கொண்டு, தெருக்களின் வழியாக இழுத்துச் சென்றார்கள்.

அரக்கர் பலர் ஆயுதங்களை ஏந்தியவர்களாய் அவனுக்கு முன்னும் பின்னுமாகத் தொடர்ந்தனர். நகரத் தெருக்களில் உள்ளவர்கள் ஆஞ்சநேயனுடைய நிலையைப் பார்த்து பலவாறு பேசிக்கொள்வாராயினர். பலர் அசோக வனத்திலுள்ள சீதாபிராட்டியிடம் ஓடிச் சென்று ஆஞ்சநேயனுடைய நிலையைக் கூறினுர்கள். அது கேட்ட சிதை துடித்து மனங் கலங்கி அழுது,

''தாயே அனைய கருணையான் துணையே ஏதும் தகவில்லா
நாயே அனைய வல்லரக்கர் நலியக் கண்டால் நல்காயோ ?
நீயே உலகுக் கொருசான்று நிற்கே தெரியும் கற்(பு) அதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல்என்ருள்.''

அதனுல், அக்னிதேவன் வாயுமைந்தனைச் சுடாமல் குளிர்ந்தான். அச்சமயத்தில் தன் வால் நுனியில் பற்றவிட்ட நெருப்பானது கொழுந்து விட்டெரிந்து உடல் முழுதும் வீசியும் சிறிதும் சுடாமலிருந்ததைக் கண்டு, ஆஞ்சநேயன், 'இது நம் ஜானகி தேவியாரின் கற்பின் சிறப்பேயாகும்' என்று மகிழ்ந்துகொண்டே, நகரத்தின் பற்பல தெருக்களிலுள்ள அழகிய மாடங்களையும், மாளிகைகளையும், விந்தை தரும் காட்சிகளையும் பார்த்தவண்ணமாய், தன் இரு பக்கங்களிலும் கயிற்றைப் பற்றி வருகின்ற அரக்கர்களோடு சென்ருன்.

இவ்வாறு போய்க்கொண்டிருக்கும்பொழுது ஆஞ்சநேயன் தன்னைப் பற்றி வருபவரிடமிருந்து நழுவ எண்ணினவனுய்க் கயிற்றைப்பற்றி இழுத்துவரும் அரக்கரெல்லோரும் கயிற்றுடன் தொங்குமாறு விரைந்து ஆகாயத்திற் கிளம்பினுன். உடனே அவர்கள் யாவரும் கரத்திற் பற்றியிருந்த கயிற்றை அப்படியே விட்டுவிட்டுக் கீழே விழுந்து உருண்டு மாண்டார்கள். அப்பொழுது தன்னைச் சுற்றியுள்ள கயிறுகள் தொங்க விசும்பில் காணப்பட்ட ஆஞ்சநேயன் பல பாம்புகளைக் காலிற் பற்றிக் கொண்டு வானிற் பறக்கும் கருடனைப்போலக் காட்சியளித்தான். பிறகு ஆஞ்சநேயன், 'நாம் இப்படியே தாவிப் பாய்ந்துகொண்டு இந்த லங்கை நகரைக் கொளுத்திவிடுவோம்' என்று ராமபிரானைத் துதித்தவாறு, அந்த அழகிய பொன்னகர்மீது நீண்டு செல்லும்படி தன் வாலைப் போகவிட்டான்.

14. லங்கை எரியூட்டு படலம்

ஆஞ்சநேயன் தன் வாலை வெகுதூரம் நீட்டி, அந்த லங்கா புரியிலுள்ள எல்லா இடங்களையும் பந்தம்போல் எரியும் வாலின்



நெருப்பினுல் பற்ற வைத்தான். உடனே தீயானது பற்றி எங்கும் பரவி எரியத் தொடங்கவே, புகை எழும்பி ஆகாயத்தை மூடிக் கொண்டுவிட்டது. அதனுல் நகரத்திலுள்ளோர் அனைவரும் செல்லும் திசையறியாது மயங்கினர். பொற் கட்டடங்கள் யாவும் உருகி வழிந்து ஓடின. ரத்தின மாளிகைகள் எல்லாம் வெடித்து நீறுயின. சோலைகளும் வனங்களும் ஆகாயமளாவக் கொழுந்து விட்டு எரிந்து கரிக்கட்டைகள் ஆயின. பசுக்களும், எருமைகளும், குதிரைகளும், யானைகளும் ஆகிய யாவும், அவை நின்ற நிலையிலேயே வீறிட்டுக் கதறி எரிந்து சாம்பலாயின. கிளி முதலியன பறவை இனங்களும் நெருப்பினுல் வெந்து வீழ்ந்தன. அரக்கர்கள் யாவரும் தப்பிச் செல்ல வழியில்லாது தத்தம் இல்லங்களோடு எரிந்து சாம்பராயினர். பெண்டிர் யாவரும் தம்முடைய குழந்தைகளை ஏந்தியவாறே மடிந்தனர். லங்கை நகர் முழுதும் எரிமலை போன்று கனல் கக்கியவாறு எரியலாயிற்று, நகர் எங்கணும் நெருப்பினுல் உண்டான சேதம் அளவற்றது. இவ்வாறு நகரம் முழுவதும் எரித்துவிட்ட நெருப்பானது கடைசியில், சிறிது அப்பால் அமைந்திருந்த ராவணன் அரண்மனையிலும் பற்றிக் கொண்டு எரிக்கத் தொடங்கிற்று. அங்கிருந்த பெண்டிரெல்லாம் அஞ்சிக் கூக்குரலிட்டு நாற்றிசைகளிலும் விரைந்து ஓடினுர்கள். ராவணன், தன்னைச் சார்ந்த சில பெண்டிருடனும், மைந்தர்களுடனும் விமானத்தில் ஏறி உயிர்த் தப்பித்துக்கொண்டான். அவனுடைய அரண்மனை தூய பொன்னுல் அமைக்கப்பட்டது. ஆதலின், அது சிறிது நேரத்திற்குள் உருகி உருண்டையாகி விட்டது.

இவ்வாறு பெருநகராகிய லங்கை முழுதும் எரிந்து அழிந்து போனதை விமானத்தின் மீதிருந்த ராவணன் பார்த்து மிகவும் வருந்தி, இங்ஙனம் நேர்ந்ததற்குக் காரணம் ஏதும் புலப்படாமல் கொதிப்புடன் ஆகாயத்தில் இருந்தபடி, தீயினுல் உயிரிழக்காமல் ஒதுங்கி நின்ற சில அரக்கர்களை நோக்கி, ''இது என்ன ஊழியின் முடிவுக் காலமோ ? இந்த லங்கை எரிந்து அழியவேண்டிய காரணம் யாது ?'' என்று ஆவேசத்துடன் கேட்டான். அவர்கள் மிக்க விசனத்துடன், ''ஐயனே ! தங்கள் கட்டளைப்படி அந்தக் குரங்கின் வாலில் நெருப்பைக் கொளுத்தி எல்லைக்கு அப்பால் துரத்தினேம். ஆயின் அது செல்லாமல், நகரத்தினுள் பாய்ந்து வந்து, தன் வாலின் நெருப்பினுலேயே நகர் முழுமையும் பற்ற வைத்து எரித்துவிட்டது'' என்றுர்கள். ராவணன் அந்த அக்னியைப் போலவே மனம் எரிந்து, ''என்ன விந்தை இது ? அந்தக் குரங்கு தன் குறும்புத்தனத்தால் நெருப்பிட்டாலும், நமக்கு அஞ்சிய அக்னிதேவன் எப்படி நம் நகரத்தை எரித்தான் ? உடனே அந்த அக்னியையும், கொடிய குரங்கையும் விரைவிற் பிடித்துக் கொண்டு வாருங்கள்'' என்றுன்.

அவன் கட்டளையைக் கேட்ட வலிமிக்க வீரர்களாகிய ஏழு பேர்கள் அவனை வணங்கிக்கொண்டு ''அப்படியே செய்கிறோம்'' என்று மற்றும் பல அரக்கர்களுடன் ஆயுதங்களை ஏந்தியவாறு, ஆஞ்சநேயனைத் தேடிப் போயினர். லங்கை முழுதும் கொளுத்தி எரியச் செய்தபிறகு, அப்பொழுதுதான் ஒருபக்கத்தில் உள்ளக் களிப்புடன் அமர்ந்துகொண்டிருந்த ஆஞ்சநேயனைக் கண்டதும் அந்த வீரர்கள், ''பிடியுங்கள்! பிடியுங்கள்!! அடியுங்கள்!! அடியுங்கள்!!'' என்று கூறி இரைந்துகொண்டே ஆஞ்சநேயன் அருகே நெருங்கினார்கள். உடனே மாருதி, அவர்களைத் தன் வாலினால் வளைத்துக் கொன்றுவிட்டான். அரக்கர்கள் பலரும் மடிந்துபோகவே வீரர்கள் ஏழு பேரும் வீராவேசம் கொண்டு அருகே சென்று போர் புரிந்தார்கள். ஆஞ்சநேயன் அவர்களைக் கரத்தைப்பற்றி இழுத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அறை கொடுத்து அந்த ஏழு பேரையும் ஒழித்துவிட்டான். பின்னர் கடற்கரையை அடைந்து தன் நீண்ட வாலை அந்நீரில் தேய்த்துக் கனலை அவித்தான். அதன் பிறகு தனக்குள்ள சிறிது சோர்வை ஆற்றிக்கொள்ள எண்ணி, முன்பு அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று உட்கார்ந்தான்.

அப்பொழுது விண்ணில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த விஞ்சையர் சிலர், ''லங்கை முழுதும் எரிந்தும் சீதை இருக்கும் அசோக வனம் மாத்திரம் அழியாமல் இருக்கிறதே'' என வியந்து கூறினர். அதைக் கேட்ட ஆஞ்சநேயன், மிகவும் உவகையோடு அப்பொழுதே அவ்வனத்திலிருந்த ஜானகியின் எதிரில் போய் நின்று வணங்கினான். அவன் வருவதற்கு முன்னர் அவனுக்கு ஏதேனும் அக்னியால் துன்பம் நேருமோ என்று திகில் அடைந்திருந்த ஜானகி, ஆஞ்சநேயனைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி கொண்டாள். அநுமனும் சீதா பிராட்டியை வணங்கி மீண்டான். அவன் சென்றதும் லங்கையை எரித்துக் கொண்டிருந்த அக்னி தேவனும் மறைந்தான்.

15. திருவடி தொழுத படலம்

சீதா பிராட்டியிடம் விடை பெற்றுச் சென்ற ஆஞ்சநேயன் மிக விரைவாக ராமபிரானை அடைந்து, தான் கண்ட செய்திகளை அறிவிக்க எண்ணி அங்கிருந்த ஒரு மலைச் சிகரத்தின்மீது சூரியனைப் போன்று நின்றான். அவ்வாறு நின்றுகொண்டு தன் உருவத்தைப் பெரிதாக்கி ராமபிரானுடைய திருவடிகளைத் தொழுதவாறு வானத்தில் தாவினான். அப்போது, தன் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்த மைநாகமலையை அணுகியதும்

அதன் விருப்பப்படி அங்கே இறங்கினான். ஆஞ்சநேயனைக் கண்டதும் அம்மலை அவனுக்குப் பலவிதமான உபசாரங்களைச் செய்து, லங்கையில் நிகழ்ந்தவற்றையெல்லாம் கேட்டுக் களிப்பெய்தியது.

பிறகு ஆஞ்சநேயன் மைநாக மலையிடம் விடை பெற்று, அங்கிருந்து உயரத் தாவி, ஒரு கண நேரத்தில், தன் வரவிற்காகக் காத்துக்கொண்டிருக்கும் அங்கதன், ஜாம்பவான் முதலான வீரர்கள் தங்கியிருக்கும் மகேந்திர மலையிற் போய்க் குதித்தான்.

அவனைப் பார்த்ததும் அங்கதன் முதலியோர், பறவைக் குஞ்சுகள் தம் தாயைக் கண்டதுபோலப் பேருவகை எய்தினர். மேலும் அவர்கள், அவன் முகத்தோற்றத்தால் அவன் வெற்றியை உணர்ந்து மகிழ்ச்சியுற்று ஆர்ப்பரித்தார்கள் சில வானரர்கள், ஆஞ்சநேயன் வெற்றி பெற்றுத் திரும்பியதைக் கண்டு புகழ்ந்தார்கள்; சிலர் தொழுதார்கள். சிலர் அவனுக்குப் பலவகை உபசாரங்களைச் செய்து காய்கனி கிழங்குகளைக் கொணர்ந்து உண்ணும்படிக் கொடுத்தார்கள். சிலர் அவனை ஆனந்தத்தினால் தழுவிக் கூத்தாடினர்; சிலர், அவன் உடலில் ஆயுதங்களாற் பட்ட புண்ணினைக் கண்டு வருந்தி அழுது 'இவன் அரக்கர்களுடன் போர் செய்து மிகுந்த துன்பத்தின்மேல் தன் காரியத்தை முடித்துக் கொண்டு வந்திருக்கிறான்' என்று துக்கித்தும் துதித்தும் பலவாறு போற்றினார்கள்.

அப்பொழுது அநுமன் அங்குள்ளவர்களை, அவரவர்கள் முறைப்படி வணங்கியும் ஆசி கூறியும் அவர்கள் அருகே அமர்ந்து கொண்டு, ''உங்கள் அனைவருக்கும் சீதாபிராட்டியார் நல்லாசி கூறினார்!'' என்று தெரிவித்தான். அச்சொற்களைக் கேட்டதும் அவர்கள் எழுந்து நின்று, சீதை இருக்கும் திக்கு நோக்கி வணங்கினார்கள். பின்னர் அங்கதன் முதலியோர் ஆஞ்சநேயனை நோக்கி, ''ஐயா! வாயு மைந்தரே! நீர் இங்கிருந்து சென்றது முதல் இங்கே வந்தவரையில் நிகழ்ந்தவைகளை எல்லாம் கூறவேண்டும்'' என்று கேட்டார்கள். தான் அரக்கர்களைக் கொன்றதும், லங்கையை எரியூட்டியதையும் சொன்னால் தற்புகழ்ச்சியாகும் என்று கருதி அவற்றைச் சொல்லாமல், ஆஞ்சநேயன் மற்ற எல்லாவற்றையும் அவர்களுக்குச் சொன்னாலும், அவன் உடலிலுள்ள ஆயுதங்களின் காரியங்களினாலும், லங்கை இருந்த திக்கில் புகை கிளம்பியதாலும் அவன் செய்கையைத் தெரிந்துகொண்டு, தன்னை புகழ்ந்துகொள்ளுதலை விரும்பாத அவனுடைய பெருந்தன்மையை எண்ணி அவனைப் புகழ்ந்துவிட்டு, அவனை நோக்கி, ''ஐயா! நாம் இனிச் செய்யத்தக்கவற்றை விரைவில் கூறுங்கள்'' என்றார்கள். ஆஞ்சநேயன், அவர்களுக்கு, ''இனி நாம் செய்யத் தக்கது ஒன்றே அன்றி வேறு எதுவும் இல்லை. சிறிதும் தாமதியாமல் நாம்

ராகவரிடம் சென்று, தேவியாரைக் கண்டு வந்த நற்செய்தியைக் கூறி, அவருடைய துயரினைப் போக்குவதேயாகும்'' என்றதும் அப்பொழுது யாவரும் மகேந்திர மலையிலிருந்து கிளம்பிச் செல்ல லுற்றனர்.

சூரியன் வானத்தின் உச்சியை அடைந்த நடுப்பகல் நேரத்தில் அவர்கள் யாவரும் முன்பு வாலியின் வசமாயிருந்து, இப்பொழுது சுக்ரீவனும் உரியதாக இருக்கும் மதுவனத்தை அடைந்தார்கள். அந்த வனத்தில் தேன்கூடுகள் மிகுதியாக இருத்தலைக் கண்ட வானர வீரர்கள், முன்பு, சீதையைக் காணாததால் உண்டாகிய வருத்தத்தால் போதுமானபடி உணவு கொள்ளாதிருந்து, இப் பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சியால் அங்குள்ள தேனைத் தம் வயிறு நிறைய உண்ணவேண்டுமென்று விருப்பம் கொண்டார்கள். அவர் கள் விருப்பத்தை அறிந்த ஆஞ்சநேயன், அங்கதனை அணுகி, வீரர்களின் விருப்பத்தைத் தெரிவித்து, ''தேன் உண்ணும்படி அவர்களுக்கு அனுமதியளிப்பாயாக'' என்று கூறினன்.


அங்கதன் அவ்வாறே தேன் உண்ணும்படி அவர்களுக்கு அனுமதியளித்தான். உடனே வானரர்கள் எல்லோரும் அம் மதுவனத்தின் உட்சென்று, தேன் கூடுகள் யாவற்றையும் கைகளால் பிய்த்து, அவற்றினின்றும் ஒழுகிய மதுவை வயிறு கொண்ட மட்டும் உண்டு களித்து, அந்த மது மயக்கத்தால் மரங்களின் மேலேறிக் கிளைகளை ஒடித்தும், மலர்களைப் பறிந்தும், காய்கனிகளை உதிர்த்தும் பலவிதமாக ஓடி விளையாடினர். அவ் வாறு மதுவனம் அழிவுறுவதைக் கண்டு, அவ்வனத்தைக் காவல் செய்யும் வானரர்கள் அங்கே வந்து அவர்களைத் தடுத்தார் கள். அப்பொழுது களித்துத் திரியும் வானரர்கள், தங்களைத் தடுக்கும் காவல் வானரர்களை வெருட்டிப் பேசி உதைத்து ஓட்டிவிட்டார்கள். உதைபட்டவர்கள் ஓடிப்போய்த் தங்கள் தலைவனான ததிமுகன் என்பவனை அடைந்து, அங்கதன் ஏவ லால் அவனுடைய வீரர்கள் வனத்தை அழித்த காலையில் தாங்கள் தடுத்ததையும், அதற்கு அவர்கள் தங்களைப் புடைத் துத் துரத்திவிட்டதையும் கூறினார்கள்.

அதனைக் கேட்ட ததிமுகன் சினந்து, தன்னிடமுள்ள வானர சேனைகளை அழைத்துக்கொண்டு அங்கதன் முன்பு போய் நின்று, ''அங்கதா! இப்பொழுது இம்மதுவனம் சுக்ரீவர் வசமாயுள்ளதென்பதை அறியாமலும், அவர் இதனை என் காவலுக்கு உட்படுத்தியிருக்கிறார் என்பதை எண்ணாமலும் நீ உன் சேனைகளை ஏவி வனத்தை அழிக்கச் செய்தாய்: இதோ உன் வாழ்வு இன்றுடன் முடிகிறதைப் பார்'' என்று ஆவேசம் கொண்டு, ஒரு கற்பாறையைப் பெயர்த்தெடுத்து

அங்கதன்மீது எறிந்தான். விரைவில் அங்கதன் கடுங்கோபங் கொண்டு அவன்மீது வீசிய கற்பாறையைப் புறங்கையால் தட்டி விட்டுத் ததிமுகனைத் தன் கைகளாற் பிடித்துக்கொண்டு, அவனுடைய முகத்திலும் மார்பிலும் உதிரம் ஒழுகக் குத்தி, "நீ போய்ச் சுக்ரீவனிடம் நடந்ததைச் சொல்" என்று துரத்திவிட்டு தன் வீரர்களைப் பார்த்து, "ததிமுகன் சேனைகளை எல்லாம் அடித்து ஓட்டுங்கள்" எனக் கட்டளை இட்டான். அதைக் கேட்பதற்குள் அங்கதன் வீரர்கள் ததிமுகனோடு வந்தவர்களை நன்றாகப் புடைத்து ஓட்டிவிட்டார்கள். பிறகு அங்கதன் சேனைகள் யாவும் மதுவனத்திற்குள் புகுந்து தங்கள் ஆசை தீர மதுவைக் குடித்து, காய்கனிகளையும் உண்டு, அங்கதன் முதலியோருக்கும் கொண்டு வந்து கொடுத்தனர். பிறகு எல்லோரும் 'சூரிய வெப்பம் தணிந்தவுடன் புறப்படுவோம்' என்று முடிவு செய்துகொண்டு, அந்த மதுவனத்தை அடுத்துள்ள ஒரு சோலையான உவவனத்திற் சென்று இளைப்பாறியிருந்தனர்.

இங்கே இவர்கள் இவ்வாறு இருந்தபொழுது, ருசிய முக மலையில் சுக்ரீவனோடு இருந்த ராமன் சீதையை நினைத்து வருந்தியிருந்தான். அப்பொழுது தென்திசை தவிர மற்ற மூன்று திசைகளிலும் சீதையைத் தேடிச் சென்ற வீரர்கள் வந்து அவரைக் காண இயலாமையைக் கூறினார்கள். அதனால் ராமன் சோர்வடைந்து, "தோழனே! நம் முயற்சி ஏதும் நமக்கு நன்மையாக முடியவில்லை; நாம் குறித்த தினங்களும் கழிந்துவிட்டன; தெற்கே சென்றவர்களும் விரைவில் வருவதாகத் தெரியவில்லை. அவர்கள் அரக்கர்களின் கைகளிற் சிக்கிச் சிறப்பட்டார்களோ! அன்றிச் சீதையைக் காணாததால், இந்தத் துன்பம் தரும் செய்தியை எப்படி நம்மிடம் வந்து சொல்வது என்று எண்ணி எங்கேனும் விசனத்தில் மூழ்கி இருக்கிறார்களோ? ஒன்றும் புரியவில்லை" என்று துக்கப் பட்டுக்கொண்டிருந்தான்.

அத்தருணத்தில் அங்கதனால் அடித்துத் துரத்தப்பட்ட ததிமுகன், தலையில் உதிரம் ஒழுகச் சிலருடன் ஓடிவந்து, சுக்ரீவன்முன் நின்று, அழுதுகொண்டே, அங்கதன் ஏவலால் அவன் சேனைகள் மதுவனத்தை அழித்ததையும், தானும் சேனையும் தடுத்ததையும், அங்கதன் தன்னை அடித்து விரட்டியதையும் கூறினான். சுக்ரீவன் தன்னுடைய மதுவனம் அழிந்ததற்கு விசனப்படாமல் ராமனை நோக்கி, "ஸ்வாமி, நாம் செய்த முயற்சி நமக்கு வெற்றியைக் கொடுத்துவிட்டது. ஆஞ்சநேயன் முதலானவர்கள் கற்பிற்சிறந்த தேவியார் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு மகிழ்ச்சியோடு திரும்பி வந்திருக்கிறார்கள். அம்மகிழ்ச்சியாலேயே மதுவனத்தைச் சிதைத்துத் தேனைக் குடித்து ஆரவாரித்திருக்கிறார்கள். தாங்கள் இனி விசனப்பட



வேண்டியதில்லை'' என்று கூறிவிட்டுத் ததிமுகனை நோக்கி, ''அங்கே அங்கதனுடன் வந்திருப்பவர்கள் எவரெவர்?'' என்று வினவினான். அதற்கு அவன், ''அநுமன், மயிந்தன், ஜாம்பவான் முதலியவர்கள் மிகுந்த சேனைகளுடன் வந்திருக்கிறார்கள்'' என்று சொன்னான். சுக்ரீவன், அவனை நோக்கி, ''ததிமுகா, அங்கதன் அற்பச் செயல்களைச் செய்யான்; அவன் பிராட்டியாரைக் கண்டு வந்த மகிழ்ச்சியினால் அப்படிச் செய்திருக்கிறான். மேலும், அவன் உங்களெல்லோருக்கும் இளவரசனாக இருக்கிறான். ஆதலின் நீ அவனுக்குத் தாழ்ந்திருப்பதே தகுதி. அவன் வனத்தை அழித்துவிட்டான் என்று கருதி, அவனை நீ மதியாமல் பேசியதால் உனக்கு இக்கதி நேர்ந்துவிட்டது. நீ அவனிடமே சென்று சரணடைக'' என்று சொல்லி அனுப்பினான். ததிமுகன் திரும்பவும் அங்கதனை அடைந்து, அவனை வணங்கித் தன் குற்றத்தைப் பொறுக்கும்படி வேண்டலும் அங்கதன் சினம் தணிந்து அவனுக்கு அன்பான மொழிகளைக் கூறினான்.

பிறகு அவன் ஆஞ்சநேயனை நோக்கி, ''நீர் முதலில் புறப்பட்டுச் சென்று, துயரத்தில் ஆழ்ந்திருக்கும் ராமரிடம், தேவியாரைக் கண்ட நற்செய்தியைக் கூறும். நாங்களும் பின்னாலேயே புறப்பட்டு வருகிறோம்'' என்று சொன்னான். அதுவும் நல்லதே என்று கருதிய ஆஞ்சநேயன் உடனே எழுந்து ராமனைக் காணப் புறப்பட்டான். சிறிது வெப்பம் தணிந்ததும் அங்கதன் முதலானோரும் ராமனிடம் செல்ல எழுந்தனர்.

ருசிய முகமலையில் அமர்ந்துகொண்டிருந்த ராமனும் சுக்ரீவனும் தென் திசையில் சென்ற ஆஞ்சநேயன் முதலியோரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, இருவருடைய கண்களுக்கும், தெற்குத் திசையிலிருந்து விரைந்து வரும் ஆஞ்சநேயன் தோன்றினான். அவனைத் தன் கண்களாற் கண்டதும் சுக்ரீவன் பேரானந்தம் கொண்டு ராமனை நோக்கி, ''ஸ்வாமி! இதோ ஆஞ்சநேயர் வந்தார்'' என்று சொல்ல ராமன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, அநுமன் அவண் எய்தினான்; எய்திய அநுமன் ஸ்ரீராமபிரான் பாதங்களை வணங்காது சீதா பிராட்டியார் இருந்த திசை நோக்கி பூமியில் படிந்து வணங்கினான். அவன் செய்கையைக் கண்ட ராமன், 'சீதை நன்னிலையில் இருக்கிறாள்' என்பதைக் குறிப்பாக உணர்ந்தான். அந்நிலையில்,

''கண்டனென் கற்பினுக்(கு) அணியைக் கண்களால்
தெண்டிரை அலைகடல் இலங்கைத் தென்னகர்
அண்டர்நா யக!இனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயருமென்(று) அனுமன் பன்னுவான்.''


என்று கம்பர் பாடியுள்ளார்.

"அவருடைய உயர்ந்த பண்புகளும் தங்களிடம் வைத்துள்ள அன்பும் அளவிட்டுக் கூறுதற்கு இயலாதன. அங்குள்ள அசோகவனம் என்ற இருண்ட சோலைக்குள், இளையவர் அமைத்துக் கொடுத்த புல்லினாலாய பர்ணசாலையிலேயே தேவியார் எழுந்தருளியிருக்கின்றார். அங்கு, கற்பென்னும் பண்பும் பொறுமையும் நற்குடிப் பிறப்பும் களிநடம் புரியக் கண்டேன். அவர் தங்களையே தியானித்துக்கொண்டு அரக்கியர் நடுவண் இரக்கமென்ற பண்பு ஏந்திழை வடிவங்கொண்டு தனியே சிறையிருந்தாற்போல இருக்கிறார். இன்னும் ஒரு மாதத்திற்குள் தாங்கள் வந்து அரக்கரை அழித்துச் சிறையிருந்து மீட்காவிடில், உயிர் வைத்திரேன் என்ற உறுதியுடன் இருக்கின்றார்; இனித் தாங்கள் காலங் கடத்தாமல் விரைவில் இலங்கைக்குச் செல்லவேண்டும்" என்று கூறினான். பின்னர் சீதாதேவியின் திருக்கரத்தால் அளித்த மணிகளுக்கரசான சூளாமணியை எடுத்து ராமனுடைய திருக்கரத்திற் கொடுத்தான்.

அச்சூளாமணியைப் பெற்ற உடனே, ராமன் மனதிலுள்ள துயரம் யாவும் நீங்கின. தன்னுடைய திருமணக் காலத்தில் சீதையின் கரத்தைப் பற்றியபொழுது அவனுக்கு எத்தகைய மகிழ்ச்சி உண்டாகியதோ அத்தகைய மகிழ்சசி அப்பொழுது அவனுக்கு உண்டாகியது. அதுகாலையில் அவனுடைய உடலிலுள்ள ரோமங்கள் சிலிர்த்தன; கண்களில் இன்பக் கண்ணீர் பெருகிற்று; மார்பும் தோளும் துடித்தன; அப்பொழுது அங்கதன், ஜாம்பவான் முதலானோரும் வந்து சேர்ந்து ராமனை வணங்கினார்கள். தென்திசை சென்றவர்கள் யாவரும் வந்து சேர்ந்ததை அறிந்த சுக்ரீவன் ராமரை வணங்கி, "எம்பெருமானே! இனியும் ஏன் தாமதம் செய்யவேண்டும்? இலங்கைக்குப் புறப்படுவோம்" என்றான். ராமன், "அப்படியே புறப்படுவோம்" எனலும் சுக்ரீவன், சேனைத் தலைவர்கள் யாவரையும அழைத்துச் சேனைகளை நடத்திக்கொண்டு தெற்கு நோக்கிச் செல்லும்படிப் பணித்தான். அவ்வளவில் போர் முரசம் முழங்கியது. ஆஞ்சநேயன் விருப்பப்படி ராமன் அவன் தோளின்மீது எழுந்தருளினான். அங்கதன் வேண்ட அவன் தோளின்மீது லக்ஷ்மணன் அமர்ந்துகொண்டான். அவ்வாறு இருவரும் இருவர் தோள்களிலும் அமர்ந்தவாறு, சுக்ரீவன், ஜாம்பவான் முதலானோரோடும், எழுபது வெள்ளம் சேனையோடும் புறப்பட்டுப்போய்ப் பவளமலையில் தங்கியிருந்து, மறுநாள் உதயத்தில் அங்கிருந்து நீங்கிப் பன்னிரண்டாம் நாள் தென் சமுத்திரக் கரையை அடைந்தார்கள்.

சுந்தர காண்டம் முற்றிற்று

யுத்த காண்டம்



காப்பு

"ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பலவென்று உரைக்கிற் பலவேயாம்
அன்றே' என்னின் அன்றேயாம்
ஆமே என்னின் ஆமேயாம்
இன்றே என்னின் இன்றேயாம்
இலதென்று உரைக்கின் இலதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங்(கு) என்னே பிழைப்பம்மா.''

[என்னின் : என்று கூறினல். ஆம் : ஆகும். என்னே : எவ்வாறே.]

1. கடல் காண் படலம்

உலகங்கள் யாவும் மாறுபடும் காலத்திலும் தாம் மட்டும் மாறுபடாத உயர்ந்த மலைகளும், கடலும், நிலனும் உடைய வடபால் முழுதும் மேலே உயர்ந்து வானத்தைத் தொடும்படியாகவும், அத்தகைய மலைகளும் கடலும் நிலனும் உடைய தென்பால் முழுதும் தாழ்ந்து பாதாலத்தில் அழுந்தும்படி வந்தனபோலப் பரந்தெழுந்த எழுபது வெள்ளம் வானரசேனைகளுடன், தென் கடற்கரையை அடைந்த ராமன் முதலியோர், ஆங்கொரு நல்ல இடத்திற்போய் அமர்ந்துகொண்டார்கள். கடலின் அகன்ற பரப்பையும், காற்றினல் உயரத்திரண்டு எழும் அலைகளின் வேகத்தையும், விரைவையும், ஓயாத பேரோசையினையும் அவர்கள் வியந்தனர். "நீண்ட காலம் எம்பெருமான் கடற்பள்ளியைப் பிரிந்து காடு மலைகள் யாவும் திரிந்தான்; திரிந்த அலுப்பால் இனிக் கண்வளர்வான்'' என்று கருதிய கடல் தென்றலின் உதவியோடு தூய்மையான வெள்ளி மலர்களைப்போல நுரைகளையும் முத்துகளையும் சிந்திப் பாயலை எடுத்து உதறி விரித்ததுபோல் கடல் காணப்பட்டது.

இத்தகைய கடலின் காட்சியைப் பார்த்த வண்ணமாய் இருந்த ராமன், சுக்ரீவன், ஆஞ்சநேயன் முதலான வானர வீரர்களுடன், இனி நிகழவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

2. ராவணன் மந்திரப் படலம்

லங்கைக்குத் தலைவனான ராவணன் ''ஓர் எளிய குரங்கினால் இலங்கை அழிந்துவிட்டது'' என்று எவரும் இனிக் கூறாதிருக்க எண்ணி, நகரை நல்லதொரு முறையில் அமைத்துக் கொடுக்குமாறு பிரம்மதேவரை வேண்டினான். அவர், அவன் விருப்பப்படியே தேவதச்சனான மயனை அழைத்து விரைவில் நகரை நிர்மாணிக்கக் கட்டளையிட்டார். மயன் அக் கட்டளையை ஏற்று முன்னிலும் மிக்க எழிலுடன் விளங்கும்படி லங்கை நகரை முறைப்படி அமைத்து முடித்தான். ராவணன் அப்புதிய நகரை முற்றிலும் பார்த்துத் தன் கவலையை நீக்கிக்கொண்டு களிப்பெய்தி, பிரம்மதேவரைத் தக்கபடிப் பூசித்துக் கொண்டாடினான். மயனுக்கும் ஏற்ற பரிசுகளை வழங்கினான்; அவ்விருவருக்கும் விடை கொடுத்து அனுப்பினான்.

அதன் பிறகு ராவணன், தன் அரண்மனையிலுள்ள அழகிய சபாமண்டபத்தில், பொன்னாற் செய்த மணிகள் பதிக்கப் பெற்ற அரியணையில் வீற்றிருந்தான்; தனக்கு மிகவும் வேண்டிய தம்பியர், சேனாதிபதிகள், அமைச்சர்கள், புதல்வர்கள் ஆகியோர்களை மட்டும் தன்னருகே அமரும்படிப் பணித்தான்; ஏனையோர்களை விலக்கி அவர்களுக்கு விடை அளித்து அனுப்பி விட்டு, இனிச் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினான். அவன் தன்னைச் சூழ்ந்திருந்தோரை நோக்கி, ''கேவலமான வாழ்க்கையினையுடைய ஒரு குரங்கு, எவரும் அணுக அஞ்சத்தக்கதும், அழிக்க இயலாததுமான இந்த லங்கை நகரை நாசம் செய்துவிட்டுப் போயிருக்கிறது; வலி மிக்க வீரர்கள் பலர் மாண்டு போயினர்; நகர் எங்கணும் துக்கம் மேலிட்டு அழுகுரலோசை மிக்கிருக்கின்றது; நாம் அக் குரங்கைக் கைப்பற்றி வந்தும் அதனைக் கொல்லாமல் விட்டு விட்டோம்; இதனால் என்றும் நமக்குத் தீராத பழியேயன்றி பெருமை எவ்வாறு உண்டாகும்?'' என்று வருந்திக் கூறினான்.

ராவணன் தனது குறையை உரைத்த பான்மையைக் கம்பர்,

''சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த(து) எங்கணும்
இட்டஇவ் வரியணை இருந்த(து) என்னுடல்.''

''ஊறுகின் றனகிணை(று) உதிரம் ஒள்நகர்
ஆறுகின் றிலதுஅனல் அகிலின் ஆவிரத்து
ஏறுமங் கையர்நறுங் கூந்த லின்சுறு
நாறுகின் றதுநுகர்ந் திருந்த நாம்எலாம்.''

''மற்றில தாயினும் மலைந்த வானரம்
இற்றுஇல(து) ஆகிய(து) என்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்திலம் என்னும் பேரலால்
முற்றுவ(து) என்இனிப் பழியின் மூழ்கினும்.''

[எரி : நெருப்பு. சூறையாடிய : கொள்ளை கொள்ளும்படி. கிளை : உறவினர். பட்டனர் : இறந்தனர். அரியணை : சிங்காதனம். உதிரம் : ரத்தம். மலைந்த : போர் செய்த. இற்று : உயிர் கெட்டு.]

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு ராவணன் வருந்திக் கூறியதைக் கேட்ட சேனைத் தலைவன் எழுந்து நின்று வணங்கி, ''மூவகை உலகங்களையும் வென்ற முதல்வரே! எளிய மனிதர்களை வஞ்சித்து, அவர்களுக்கு உரிய மங்கையைப் பற்றி வருதல் அச்சங்கொண்டவரின் செயலாகும் என்று நான் உரைத்தபொழுது அது தாழ்வு எனக் கருதாது விட்டீர்; இப்பொழுது அவர்கள் நமக்குப் பல துன்பங்களைச் செய்திருக்கப் பார்த்துக்கொண்டும், அவர்களைக் கொன்று தீர்க்காமல் நம் அரசியல் அழிந்ததே என்று வருந்துகிறீர்; தேவர்களும், தானவர் இயக்கர் முதலானோரும், யாவரும் மேன்மையாகக் கொண்டாடும் மூவரும் உயது வலிமைக்கு ஆற்றாது ஒடுங்கிப் போயிருக்க, இந்த அற்பக் குரங்கினையும், இதனை ஏவியவர்களையும் போய்ப் பிடித்துக் கொன்று நம் பகையை முடிக்காமல், வாயாலும், மனத்தாலும் வெறுத்துக் கூறுவதுடன், ஏதும் செய்யாமல் வாழ எண்ணுவோமாயின், நம் வலிமையெல்லாம் இனி ஒய்ந்துபோகவேண்டியதே'' என்றான்.

அப்பொழுது மகோதரன் என்பவன் எழுந்து நின்று ராவணனை வணங்கி ''அன்றொரு காலத்தில் வெள்ளிமலையை, அங்கு உறையும் ஈசனோடு வானம் தொட எடுத்து ஆர்த்த வலிமையுடைய நீர், மரக் கிளைகளிலிருந்து வாழும் ஒரு குரங்கின் தோள் வலிமைக்கு, எங்கள் தோளுடன் உமது தோளையும் இகழ்ந்து கலங்குவது முறையோ? நம் சேனாதிபர் கூறியவாறே என் கருத்தும் உள்ளதால், நீர் இப்பொழுதே எனக்குக் கட்டளை இடுவீராயின், அக்குரங்கினையும் வதைத்து, அதனை இங்கே அனுப்பிய அந்த மானிடர்களின் உயிர்களையும் குடித்து, நம் பகைமையைத் தீர்த்துவருகின்றேன்'' எனக் கூறினான். அதனைக் கேட்ட ராவணனுடைய மற்ற மந்திரிகளான வச்சிரதந்தன், துன்முகன், மகாபார்சுவன் முதலானோரும் ராவணனை வணங்கித் தங்களுடைய கருத்தும்

அதுவே என்றும், தங்களுள் எவரை அனுப்பினுலும் பகை வரைக் கொன்றெழித்து வெற்றியுடன் வருவோம் என்றும் கூறினர்கள்.

அப்பொழுது ராவணன் தம்பியான கும்பகர்ணன் அவர்கள் யாவரையும் நோக்கி, ''நீங்கள் இடம், காலம், செயல் என்பவற்றை ஆராயாது சொல்லிவிட்டீர்கள்; ஆதலின், நீங்கள் சற்றுப் பேசாதிருங்கள்'' என்று விலக்கி, ராவணனைப் பார்த்து, ''அண்ணு! நீங்கள் அயன் முதலாக உள்ள குலத்தில் தோன்றியும் வேதங்கள் யாவையும் அவற்றின் பொருளறிந்து ஓதி உணர்ந்தும், தகாத செயலில் ஈடுபட்டதால் நமக்கு இத்தகைய துன்பம் நேர்ந்துவிட்டது. நம்மவருள் பலர் மாண்டுபோனர்கள் என்றும், நம் நகர் நாசமுற்றது இழிவு என்றும் வருந்துகிறீர். வேறெரு குலத்தவன் மனைவியை அவன் அறியாமல் கொணர்ந்து வந்து சிறையில் வைத்திருப்பது மட்டும் உமக்குப் புகழாகுமா? இன்னும் நீர் வெட்கத்தை விட்டு உமது தேவியார் நகைக்குமாறு பிறனுடைய மனைவியான சீதையின் காலில் வீழ்ந்து வணங்குவது உமக்குப் புகழைத் தருமா? என்று மற்றெருவன் மனைவியை அறநெறிக்கு மாருகச் சிறை வைத்தாயோ அன்றே அரக்கர் புகழ் அழிந்தது. அற்பச் செயலுடையவர்கள் புகழடைவார்களா? அயலவன் மனைவியைச் சிறையில் அடைத்துவிட்டுப் புகழை நாம் விரும்பினேம். மானத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே, காமத்தை மேற்கொண்டுள்ளோம். மனிதர்கட்கு நாம் அஞ்சுகின்றேம். நமது வெற்றி நன்ருக உள்ளது. இனி, இந்த இழிவைப் போக்குதற்பொருட்டுச் சீதையை அவர்களிடம் சேர்த்துவிடலாம் என்ருலும், மனிதர்க்கு நாம் இளைத்து விட்டோம் என்று நம்மை உலகம் இகழும். எனவே, அவர்களுடன் போர் புரிதலே தக்கது. அவர்களுடன் போர் புரிந்து, அவர்களைக் கொல்லாவிடில், நம பகைவர்களாகிய தேவர்கள் இந்த மனிதர்களுடன் சேர்ந்துகொள்வார்கள். எனவே, நாமே கடலைத் தாண்டிச் செல்வோம்; மனிதர்களும், குரங்குகளும் எங்கும் ஓடிவிடாமல் தடுப்போம்; யாவரையும் கொல்வோம். இதுவே நாம் செய்யத் தக்கது'' என்று கூறினன்.

கும்பகர்ணனது உரையைக் கம்பர் சுவைப்பட,

''ஆசுஇல்பர தாரமவை அஞ்சிறை அடைப்பேம்
மாசுஇல்புகழ் காதல்உறு வேம்வளமை கூரப்
பேசுவது மானம்இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்றுநம் கொற்றம்!''

''பிட்டர்செயல் செய்நிலை குலச்சிறுமை செய்தாய்
மட்டுஅவிழ் மலர்க்குழலி ஞானிஇனி மன்ற
விட்டிடுது மேல்எளியம் ஆதும் அவர்வெல்லப்
பட்டிடுது மேல்அதுவும் நன்றுபழி யன்றல்.''

''ஊறுபடை ஊறுவதன் முன்னம்ஒரு நாளே
ஏறுகடல் ஏறிநரர் வானரரை எல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடும் அடங்க
நூறுவது வேகருமம் என்பது நுவன்றான்.''

[ஆசு : குற்றம். **தாரம்** : மனைவி. கூர : மிக. **கொற்றம்:** வெற்றி. சிட்டர் : உயர்ந்தவர். மட்டு : தேன். **நூறுவதுவே:** கொல்வதே. **நுவன்றான்** : கூறினான்.]

என்று பாடியுள்ளார்.

ராவணன், கும்பகர்ணன் கூறியவற்றைக் கேட்டு, ''தம்பி! நீ இறுதியாக மொழிந்தபடியே செய்வோம்; நானும் அப்படிச் செய்யவே எண்ணினேன்; ஆதலால், நீ விரைவில் நம்முடைய சேனைகளை எல்லாம் போருக்குப் புறப்படும்படி ஆயத்தம் செய்வாயாக'' என்று கூறினான். ராவணன் இவ்வாறு கும்பகர்ணனிடம் சொன்னதைக் கேட்டு அங்கிருந்த இந்திரசித்து எழுந்து தந்தையை வணங்கிவிட்டு, ''தந்தையே! அந்த எளிய மானிடரையும் அற்பக் குரங்கினையும் வெல்லப் பெரும் படையோடு என் சிற்றப்பாவும் தாங்களும்தான் செல்ல வேண்டுமோ? மிக நன்றாயிருக்கிறது உங்களுடைய வீரம்? நம்மை எதிர்க்க வருபவர், நம்மைப் போன்று யானைப்படை இலர்; தேர்ப்படை இலர்; நம்மேல் ஏவுதற்குக் காலாட் படையும் இலர்; இன்னும் நம்மைப் போன்று தவம் இயற்றி மிக்க வலிமை எய்தியவர்களும் அல்லர். அப்படி இருக்கும் அவர்கள் சிறிய வில்லினை ஏந்தியவர்களாய், கூன் முதுகினை யுடைய சிறிய குரங்குகளைத் துணைக்கொண்டா நம்மை வெல்லு வார்கள்? அவ்வாறு வெல்ல நினைப்பவர்களும் மானிடர்களே! நம் ஆண்மை நன்று! நன்று!'' எனக் கூறி நகைத்துப் பின்னரும் அவன் தன் தந்தையை நோக்கி, ''விரைவில் எனக்குக் கட்டளையிடும்; நான் சென்று குரங்குகளை எல்லாம் மடிவித்து, அம்மானிடர் இருவரின் தலைகளையும் கொய்துகொண்டு வருகிறேன், பாருங்கள்'' என்று சொன்னான்.

அத்தருணத்தில் மிக்க அறிவாளியும் நீதிமானும் ஆகிய விபீஷணன் எழுந்து இந்திரசித்தனைப் பார்த்து, ''நீ ஓர் அறியாக் குழந்தையைப்போல மேல் வரும் பொருளையும் காலத்தையும் உணராது பேசிவிட்டாய்; உனக்கு இனி நிகழப்

போவது தெரியாது. நீ பேசாமலிரு'' என்று அதட்டி அவனை அடக்கியபின், ராவணனை நோக்கி, ''அண்ணா! நான் சில வார்த்தைகளைக் கூறுகின்றேன்; என்னை இகழாமல் தாங்கள் அவைகளைக் கேட்டபிறகு, வேண்டுமாயின் என்மீது சினந்து கொள்ளலாம்; நீர் எனக்குத் தந்தை போலவும், எனக்கு முன் பிறந்த தமையனாகவும் இருக்கிறீர்; மிக்கத் தவத்தைச் செய்து இந்திரனிலும் மிகுதியான செல்வங்களையும் இன்பங் களையும் பெற்றிருக்கிறீர்; இப்பொழுது உம்முடைய தகாத செயல்களால் அவை யாவற்றையும் இழந்துவிடப்போகிறீரே என்று வருந்துகிறேன்.

''உம்முடைய இந்த லங்கை நகரமும் புகழும் ஜானகி என்கின்ற உலக மாதாவினுடைய கற்பினால் வெந்து அழிந்த தல்லாமல் ஒரு குரங்கினால் சுட்டு அழியவில்லை. உலகத்தி லுள்ள எத்தகையவர்களுக்கும் ஆபத்தும், சம்பத்தும், பெண், பொன், மண் என்ற மூன்றினாலேயே வரக்கூடியன. எவரொரு வர் இவற்றை நீதிமுறையின்றிக் கைப்பற்றினாலும் அவர்களுக் குத் துன்பமேயன்றி இன்பமில்லை. நீர் இப்பொழுது அந்த ராமர் முதலியோர் அறியாது, ஜானகி தேவியை முறையின்றி எடுத்துவந்து சிறைப்படுத்தியிருப்பதால் உமக்குப் பெருந் துன்பமே நேரும். மற்றும் நீர், எளிய மானிடர்கள் என்று இகழ்ந்து பேசும் ராமரையும் லக்ஷ்மணனையும் வெல்லமாட்டீர்; பிரம்மதேவரிடம் நீர் கோரிப் பெற்ற வரங்களில், மானிடர்கள் எளியர் என்று நீர் கருதியதால், அவர்களை வெல்லத்தக்க வரம் இல்லை. ஆதலின், அவர்களை நீர் வெல்லமுடியாதென்பதற்கு, அன்று ஒரு மானிடனான கார்த்தவீரியார்ச்சுனனுக்கு நீர் தோற்றுவிட்டதே சாட்சியாகும். அன்றியும், நீர் கயிலையைப் பெயர்த்தபொழுது நந்திதேவர் அளித்த சாபத்தால் குரங்கு களையும் வெல்லமுடியாது. இதற்கு நீர் வாலியால் கட்டுண்டு துன்பப்பட்டதே போதுமானது.

''ஒரு காலத்தில் தனக்குத் திருமாலே கணவனாக வேண் டும் என்று தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர் புத்திரியான வேதவல்லி என்பவளை நீ கற்பழிக்க முயன்றபொழுது அவள் 'உமக்கு நானே யமனாவேன்' என்று கூறிவிட்டு எரியில் புகுந்தாளன்றோ! அவளே இப்பொழுது சீதையாகத் தோன்றி இங்கே வந்திருக்கிறாள். இந்திரன் வேண்டியதற்கிணங்கி, வானத்தில் தேரைச் செலுத்திக்கொண்டு சம்பராசுரனைக் கொன்றவனும், மிக்க வீரமும் புகழும் எய்திய பல மன்னர்கள் தோன்றிய மனுவின் குலத்தில் பிறந்தவனும் ஆகிய தசரத மன்னனுடைய புதல்வர்களாயுள்ள ராமரும் லக்ஷ்மணருமே நமக்கு இப்பொழுது பகைவர்களாய்த் தோன்றியிருக்கிறார்கள்; அத்தகையோர் மிகவும் சிறந்த வீரர்கள்; அவர்கள் விசுவா

மித்திர முனிவரால் கொடுக்கப்பெற்ற பல உயர்ந்த அஸ்திரங்களை உடையவர்கள்; எந்தக் காலத்திலும் எவரையும் வெல்லத்தக்க திருமாலினுடைய வில்லையும், திரிபுரங்கள் அழியும்படிச் சிவன் கைக்கொண்டிருந்த மிக உயர்ந்த அஸ்திரங்களையும் அகத்திய முனிவரால் கொடுக்கப்பெற்றிருக்கிறார்கள். அந்தப் படைக்கலங்களெல்லாம் வலிமை மிக்கவை. முனிவர்களும் தேவர்களும் வேண்டியதால் ராமரும் லக்ஷ்மணரும், அரக்கர்களாகிய நம் குலத்தவரை வேரோடு அழித்துவிடக் கருதியிருக்கிறார்கள்; அவர்கள் கருத்திற்கு ஏற்றதாகவோ அல்லது எக்காரணத்தாலோ நமக்கு இப்பொழுது பல தீய நிமித்தங்கள் தோன்றிவருகின்றன. நீர் இன்னமும் ஒரு செய்தியை அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய குலப்பகைவர்களான தேவர்களே மானிடர்களாகவும் குரங்குகளாகவும் கரடிகளாகவும் தோன்றி இவ்வுலகத்திற்கு வந்துள்ளார்களென்றும் கேள்விப்படுகின்றேன். ஆதலின், இனியும் நம் வாழ்வு நிலைத்திருக்க வேண்டுமாயின், நீர் உடனே சீதாதேவியாரை அந்த ராமரிடம் சேர்ப்பித்துவிடுவது நலமாகும்'' என்று அறிவித்தான்.

விபீஷணன் கூறிய அறிவுரைகளைக் கம்பர் பல பாடல்களின் வாயிலாக, நயம் பொருந்துமாறு வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுள் சில பாடல்கள் வருமாறு:

''கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும்பெயர் உலகுசன்(று) அம்மனை
ஆனவள் கற்பினால் வெந்த தல்லதுஓர்
வானரம் சுட்டதுஎன்(று) உணர்தல் மாட்சியோ?''

''மீன்உடை நெடுங்கடல் இலங்கை வேந்தன்முன்
தான்உடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வதுஓர்
மானுட மடந்தையால் என்னும் வாய்மொழி
தேன்உடை அலங்கலாய் இன்று தீர்ந்ததோ?''

'தீயிடைக் குளித்தஅத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்தசொல் மறுக்க வல்லமோ
நோய்உனக்(கு) யான்என நுவன்று ளாள்அவள்
ஆயவள் சிதைபண்(டு) அமிர்தில் தோன்றினாள்.''

''இசையும் செல்வமும் உயர்குலத்(து) இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடும் மடியாது
அசைவுஇல் கற்பின்அவ் வணங்கைவிட் டருளுதி யிதன்மேல்
விசையம் இல்லெனச் சொல்லினன் அறிஞரின் மிக்கான்.''

[கொற்றம் : வெற்றி. மாட்சியோ : பெருமையோ. மடந்தை : பெண். அலங்கலாய் : மாலையை அணிந்தவனே. தெய்வக் கற்பினுள் : வேதவதி. நுவன்றுளாள் : சொல்லி யுள்ளாள். இசை : புகழ். வசை : பழி. அணங்கு : தெய்வப் பெண், சீதை. விசையம் : வெற்றி. அறிஞரின் மிக்கான் : விபீஷணன்.]

இவ்வாறு விபீஷணன் கூறிய யாவற்றையும் கேட்ட ராவணன், கையோடு கை அறைந்து முழங்கி ஆர்ப்பரித்துக் கண்களில் தீப்பறக்க விபீஷணனை நோக்கி, ''நீ எனக்கு விருப்பம் தரத்தக்க உறுதிச் சொற்களைக் கூறுவேன் என்று சொல்லிப் பித்தர் கூறுவதுபோல் என் வலிமையை, இழிவான மானுடன் வெல்லுவான் என்றது, நீ அவர்களிடத்துக் கொண்ட அச்சத்தினாலோ ! அன்றி அன்பினாலோ !'' என்று கூறி நகைத்துப் பின்னரும், அவனை நோக்கி, ''பேதையே ! நான் அந்த மானிடப் பசுக்களுக்கு இளைத்துவிடுவேன் என்றனை ; எண்திசைகளிலும் சென்று வெற்றி கொண்டு திசை யானைகளையும் அடக்கிக் கயிலையைப் பெயர்த்தெடுக்க நான் வரம் பெற்றிருந்தேனோ ? என்னுடைய வலிமையினாலன்றோ வென்று வந்தேன். தேவர்களே மானிடர்களாகத் தோன்றி யுள்ளார் என்கிறாய் ; மிக்க சினத்துடன் வந்த தேவர்கள் யாவரும் செருக்களத்தில் என்முன் நிற்க அஞ்சி ஓடினார்களே ! அவ்விதம் இருக்க, என்னுடன் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த உனக்கு, நம்மிலும் மானிடர் வலிமையுள்ளவர் என்பது எவ்வாறு தோன்றியது ? நந்தியின் சாபத்தால் குரங்குகள் நம்மை வெல்லும் என்கிறாய். அதற்குச் சான்றாக நான் வாலிக்குத் தோற்றதை எடுத்துக் காட்டுகிறாய் அந்த வாலி, தன்முன் நிற்கும் எதிரியின் வலிமையிற் பாதி தனக்கு வர வேண்டும் என்று சிவனிடம் பெற்ற வரத்தை நான் அறியா மல் அவன்முன் நின்றதாலன்றோ தோற்கும்படியாயிற்று ; இந்த உண்மையை அறிந்ததனால் ராமன் அந்த வாலியின் எதிரில் நிற்காது மறைந்து நின்று கொன்றான். நந்தியின் சாபம் போலவே நாம் இதுவரை தேவர்கள் முனிவர்கள் ஆகிய வரிடத்தும் சாபம் பெற்றுள்ளோம். அந்தச் சாபங்களெல்லாம் நம்மை என்ன செய்துவிட்டன ? முன்னமே விரிசல் கண்ட வில்லை ஒடித்து ஓட்டையான மாமரங்களின்மீது அம்பெய்து கூனி சூழ்ச்சியால் அரசிழந்து அருங்கானம் நண்ணி என் வஞ்சனையால் தன் மனைவியை இழந்தும் கழிந்து போகா உயிரைச் சுமந்துகொண்டிருக்கும் மனிதர்களின் வலிமையை உன்னைத் தவிர யார் மதிப்பார் ? அவனோ என்னை வெல்லு பவன் ?'' என்று விபீஷணன் கூறியவற்றிற்கெல்லாம் மாறு படச் சொல்லி, அவனை அறிவிலி என்று இகழ்ந்து, ''நல்லது, நாம் போருக்குப் புறப்படுவோம்'' எனப் புகன்றான்.

ராவணன் தன்னை இவ்வாறு கடிந்து கூறியும் உடன் பிறந்த பாசத்தால் விபீஷணன், அண்ணனைச் சிறிதும் வெறுக்காமல் அவனைப் பார்த்து, "அண்ணா! தனக்கு மேற்பட்ட பொருளில்லாத ஒப்பற்ற தலைவனாகிய பரம்பொருளான நாராயணமூர்த்தியே, அரக்கர் குலத்தை எல்லாம் அழிப்பதற்கு ராமனாகத் தோன்றியிருக்கிறார்; அவரை நீ அவமதித்து அவருடன் போர் மேற்செல்லுபவையோ?" என்று ராவணனுடைய பாதங்களைப் பற்றிக்கொண்டு வணங்கி வேண்டினான்.

அதனைக் கேட்ட ராவணன், சினத்தினால் சிரித்து, "நீ அந்த மனிதனைத் திருமால் என்று புகழ்கின்றாய்? அந்தத் திருமால் எனக்குப் பல முறை தோற்று ஓடிப்போயிருக்கிறான். ஆ! ஆ! நன்று!! நன்று!! ஆயிரமாகவுள்ள தோள்களும் அத்துணைத் தலைகளும் கொண்ட பேருருவமான அத்திருமால் நாம் தின்னத்தக்க ஒரு சிறு மானுடனாக வந்திருக்கின்றானா? அவனோ என்னை வெல்லப்போகிறான்; எனினும் நீ போருக்கு அஞ்சியவனாகக் காண்கின்றாய். போர் தொடங்கினால் நீ எனக்குப் பக்கத் துணையாக வரவேண்டியதில்லை. இந்த லங்கையின் கோட்டைக்குள்ளேயே சுகமாக இருந்துவிடு" என்று சொல்லிச் சபையிலுள்ளோரை நோக்கி, "இந்த விபீஷணனுடைய அறியாமையைப் பார்த்தீர்களா?" என்னும் பொருள் தோன்றுமாறு சிரித்து ஆர்ப்பரித்தான்.

3. இரணியன் வதைப் படலம்

ராவணன் கூறிய தகாத சொற்களைக் கேட்ட விபீஷணன், தன் அண்ணன் கெடுமதியை உணர்ந்து வருந்தி, தனது தமையன்மீதுள்ள அன்பினால் அவனைப் பார்த்து, "அண்ணா! நீர் நாராயணரைக் கேவலமாக நினைக்காதீர். உம்மைப்போன்றே எல்லாவிதமான செல்வத்தையும் சுகத்தையும் அடைந்து ஒப்புயர்வு இல்லாத வீரர்களாயினோர் பலர், அந்த நாராயணரைப் பகைத்துக்கொண்டு அழிந்து போயிருக்கிறார்கள். அத்தகையவர்களில் இரணியன் என்பவனும் ஒருவன். அந்த இரணியன் மிகக் கடுமையான பல தவங்களைச் செய்து, பிரம்மதேவரிடம் தான் கருதிய பல வரங்களையும் பெற்றான். மானிடர்களாலும் தேவர்களாலும் விலங்குகளாலும் மற்றும் உலகத்திலுள்ள எந்தப் பிராணிகளாலும் அழிவுறாத தன்மையை எய்தினான். மேலும்,

''உள்ளிற் சாகிலன் புறத்தினும் உலக்கிலன் உலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம் யாவையுங் கொல்லா
நள்ளிற் சாகிலன் பகலிடைச் சாகிலன் நமனுர்
கொள்ளச் சாகிலன் ஆரினி அவனுயிர் கொள்வார்.''

''பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினிற் புணரும்
வேத நான்கினும் விளம்பிய பொருள்களால் விளியான்
தாதை தன்னைத்தான் தனிக்கொலை சூழினும் சாகான்
ஈத வன்னிலை எவ்வுலகங்கட்கும் இறைவன்.''

[**உலக்கிலன்:** குறையான். **நள்ளில்:** இரவில். **நமன்:** கூற்றுவன். **பூதம் ஐந்து:** நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். **வேதம் நான்கு:** ருக், யஜுர், சாமம், அதர்வணம். **விளியான்:** சாகான். **தாதை:** தந்தை.]

''அவன் எல்லா உலகத்தவரையும், தன்னையே கடவுள் என்று சொல்லி வருமாறும் தன்னையே போற்றிப் பூசிக்கும் படியும் கட்டளை இட்டான். அந்த இரணியனுக்கு அவன் விரும்பிய வரங்கள் எல்லாவற்றையும் கொடுத்தான் பிரம்ம தேவன். அதுமுதல் எல்லாத் தேவர்களும் அவன் கட்டளைக்கு அஞ்சித் தாம் செய்யும் காரியங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் அவனை நினைத்து, 'இரணியாய நம' என்ற அவன் பெயரையே சொல்லிவந்தார்கள்.

''இத்தகைய இரணியனுக்கு, மிக்க அறிஞனும் தூய்மையானவனும், அறம் மிகுந்தவனும் ஆகிய ஒரு புதல்வன் பிறந்தான். இரணியன் அவனுக்குப் பிரகலாதன் என்று பெயரிட்டான். பிரகலாதனுக்குக் கல்வி கற்கும் பருவம் வந்ததும் இரணியன் தன் குல குருவான சுக்கிராச்சாரியாரின் மைந்தனை சண்டமார்க்கன் என்பவனை அழைத்துத் தன் மகனுக்குச் சாஸ்திரப் பயிற்சி செய்விக்கும்படிக் கூறினன். அந்த ஆசிரியன் பிரகலாதனைக் கலைக்கூடத்திற்கு அழைத்தேகி முறையாக அவனுக்கு வேதம் ஓதுவிக்கத் தொடங்கினன். வேதம் ஓதும்பொழுது தொடக்கத்தில் அக்காலத்தில் எல்லோரும் கூறிவருவதுபோல் ஆசிரியன் பிரகலாதனை, அவன் பிதாவின் பெயரான 'இரணியாய நம' என்று உச்சரிக்கும்படிச் சொன்ஞன். பிரகலாதன், முன்னரே எப்பொருட்கும் இறைவரான நாராயணருடைய உண்மை வடிவத்தை உணர்ந்து இருந்தவன். ஆதலின் தன் குரு தொடக்கத்தில் அவருடைய நாமத்தைச் சொல்லச் செய்யாமல், தன் தந்தையின் பெயரை உச்சரிக்கச் சொன்னவுடனே, தன்னிரு செவியையும் பொத்திக் கொண்டு, 'வயதால் மூத்த பெரியீர், இது நற்றவமன்று' எனக் கூறி வேத முடிவிற் பயிலும் மெய்ப்பொருளை,

''ஓம்நமோ நாராயணுய வென்(று) உரைத்துளம் உருகித்
தான மைந்திரு தடக்கையுந் தலையின்மேல் தாங்கிப்
பூநிறக் கண்கள் புனலுக மயிர்புறம் பொடிப்ப
ஞான நாயக னிருந்தனன்.........''

[புனல் உக: கண்ணீர் சிந்த. ஞான நாயகன்: அறிஞனை பிரகலாதன்.]

பின்பு விபீஷணன் தொடர்ந்து, '''ஓம் நமோ நாராயணுய' என்ற திருமந்திரத்தைச் சொல்லி மனமுருகிய பிரகலாதன் தன்னுடைய இரு கரங்களையும் சிரத்தின்மேற் கூப்பிக்கொண்டு கண்களில் நீர் வழிய மெய்ம்மயிர் சிலிர்க்கத் தன்னை மறந்திருந்தான். இவனுடைய செய்கையைப் பார்த்ததும் ஆசிரியனுகிய சண்டமார்க்கன் திடுக்கிட்டு நடுங்கிப் பிரகலாதனை நோக்கி, 'அட பாவி! நீ என்னையும் கெடுத்து நீயும் அழிந்துபோகவல்லவோ துணிந்துவிட்டாய்! பிரமன் முதலான எல்லாத் தேவர்களும் சொல்ல அஞ்சும்படியான இதனை நீ கூறலாமோ? நீ இவ்வாறு சொல்லக் காரணமென்ன?' என்று வினவினுன். அதற்குப் பிரகலாதன், 'ஐயா, வேதப் பயிற்சி செய்கிறவர்கள் அதன் முதலிலும் முடிவிலும் அவ் வேதத்தின் முதற் பொருளாயுள்ள ஸ்ரீமந் நாராயணரின் திருநாமத்தைச் சொல்வது முறையாதலின் நானும் அதனை உச்சரித்தேன். அதில் என்ன குற்றம்?' என்றுன்.

''அவன் கூறியதைக் கேட்ட ஆசிரியனுன சண்டமார்க்கன், 'அப்பா! பிரகலாதா! உலகங்கள் எல்லாவற்றிற்கும் தலைவரும் அரசருமான உன் தந்தை மிக்க வலிமையும் சிறப்பும் உடையவராய் இருக்கிறுர். யாவரும் உன் பிதாவையே எல்லாவற்றிற்கும் கர்த்தா என்று போற்றுகிருர்கள். அப்படியிருக்க, நீ அவருடைய பெயரைத்தான் முதலில் உச்சரிக்க வேண்டும்; மற்றும் எல்லாச் சாஸ்திரங்களையும் அறிந்திருக்கிற நானே அவர் பெயரை உச்சரிக்கும்பொழுது நீ மட்டும் கூறுதிருப்பது தகுதியானதோ? என்னைக் காட்டிலும் நீ தெரிந்தவனு?' என்றுன். அதற்குப் பிரகலாதன், 'நான், அந்த ஆதிநாராயணருடைய எட்டெழுத்து மந்திரமன்றி வேறு எதனையும் சொல்லமாட்டேன்; சொல்லவும் தகாது; அவர் என்னுள் புகுந்து, என் நெஞ்சத்தையே உறைவிடமாகக் கொண்டுள்ளார்; அவருடைய திருவடிகளை அடைவதைவிட நான் பெறக்கூடிய பயன் யாதுமில்லை. கடுந்தவங்கள் பலவற்றைச் செய்து மோக்ஷத்தை அடையும் முக்தர்கள் பெறும் இன்பத்தைக் காட்டிலும், அந்த நாராயணருடைய திருமுன் நின்று சேவிப்பது பேரின்பமாகும்; உமக்கும் நன்மையைக்

கொடுப்பது அத்திருநாமமே; ஆதலின், நீரும் அவருடைய எட்டெழுத்து மந்திரத்தையே உச்சரித்து வாரும்' என்றான்.

"இவ்வார்த்தைகளை எல்லாம் கேட்ட ஆசிரியன், செய்வது இன்னதென்றறியாது மயங்கிச் சிறிது ஆலோசித்த பின்னர், மிகுந்த அச்சங்கொண்டு இரணியனை அடைந்து, மகனுடைய செய்தியை அறிவித்தான். இரணியன் மகனுடைய செயலைக் கேட்டதும் மிகவும் வியப்புற்று, மகனை அழைத்து வரச் செய்து, தழுவி அணைத்துக்கொண்டு, அருகில் உட்கார வைத்து அவனை நோக்கி, 'குழந்தாய்! நீ உன் ஆசிரியர் அஞ்சும்படி ஏதோ கூறினாய் என்று கேள்விப்பட்டேன். அப்படி நீ என்ன கூறினாய்?' என்று கேட்டான். அதற்கவன், 'தந்தையே! வேதம் ஓதும்பொழுது தொடக்கத்தில் எதனைச் சொல்லவேண்டுமோ அதனைத்தான் நானும் சொன்னேன்; வேறு தவறானதொன்றும் நான் கூறவில்லை' என்றான். இரணியன், 'அவ்வாறு நீ கூறியது யாது? விரைவிற் சொல்' என்றான். பிரகலாதன், 'தம்மைத் துதித்தோர்க்குச் செல்வத்தையும், சுகத்தையும் கொடுத்து, இறுதியில் மோக்ஷத்தை அளிப்பதும், பரம்பொருளாய் வேத முடிவாய் விளங்குகின்றதும் ஆகிய முதற் கடவுளின் திருநாமத்தையே அடியேன் சொன்னேன்; அதுதான் பிரணவத்துடன் கூடியதும் சாட்சாத்காரமானதுமான 'ஓம் நமோ நாராயணாய' என்ற திருநாமமாகும்' என்றான்.

"அவன் இப்படிக் கூறியவுடனே இரணியன் கண்களில் தீப்பொறி பறக்கத் தாங்கமுடியாத சினத்துடன், மின்னலைப் போன்று ஒளிவிடுகின்ற தனது வச்சிரவாளை உருவிக் கையிற் பிடித்துக்கொண்டு, 'அடா நான் தோன்றியதுமுதல் எவரும் இத்தகைய சொல்லைச் சொன்னதுமில்லை; மனத்தால் நினைத்ததுமில்லை. எவரேனும் அப்படிச் சொன்னாலும் நினைத்தாலும் உடனே என் ஆணைச் சக்கரமானது சென்று அவருடைய நாவினை அறுத்து, நெஞ்சத்தைப் பிளந்து, சித்திரவதை செய்துவிடும். நீ இதனை எவரிடத்துத் தெரிந்துகொண்டாய்! மூவுலகத்திலுள்ள எவரும், என்னுடைய அடியை வணங்கி, என்னையே பூஜித்தும் தியானித்தும் வருகின்றார்கள்; ஆதலின் அவர்களுள் யாரும் உனக்குச் சொல்லியிருக்கமாட்டார்கள்; பின்னை நீ இதனை எப்படி அறிந்தாய்? நீ சொன்ன அப்பெயருடைய விஷ்ணு என்பவன், நம்மைச் சார்ந்தவர் பலரைக் கொன்றுவிட்டு, என்னை எதிர்க்க ஆற்றலில்லாது பயந்து ஓடிப் போய்க் கடலிற் படுத்தவன் இன்னும் எழுந்திராமல் உறங்கிக் கிடக்கின்றான். பதினான்கு உலகங்களையும் தன் வயிற்றில் அடக்கிக்கொள்ளும் ஆற்றலுடைய என் தம்பியான இரணியாட்சனை, ஒரு பன்றி வடிவத்தில் வந்து குத்திக் கொலை செய்த

அந்த குலப்பகைவனின் பெயரைச் சொல்லுவதற்கோ உன்னை நான் மகனுகப் பெற்றேன்! நானே உலகம் யாவற்றிற்கும் இறைவன்; முத்தொழில்களும் என்னுலேயே இயங்குகின்றன. அடே! நீ எனக்குப் பிள்ளையாயும், அறியாச் சிறுவனுயும் இருப்பதனுல் நீ என் பகைவனின் பெயரைச் சொன்ன குற்றத்திற்காக உன்னை மன்னித்துக் கொல்லாது விடுகின்றேன்; இனி நீ இத்தகைய பொருந்தாத வார்த்தையைச் சொல்லாதே; ஆசிரியர் எதனைச் சொல்லிக் கொடுக்கிருரோ அதனையே நீ சொல்ல வேண்டும். இனி ஆசிரியரிடம் சென்று முறைப்படி வேதங்களை ஓதுவாயாக' என்ருன்.

''இரணியன் கூறிய எல்லாவற்றையும் கேட்டதும், பிரகலாதன் அவனை நோக்கி, 'தந்தையே! தாங்கள் கூறியவை சாஸ்திர சம்மதமானவையல்ல இன்னும் நான் தங்களுக்கு உரைக்க வேண்டியன சில உள்ளன; தாங்கள் கோபியாது கேட்டருள வேண்டும்; ஆதிமூலப் பொருளாகவுள்ள அந்த நாராயணரன்றி எந்த உலகமும், அதனிற் காணும் எப்பொருளும் உண்டாவதற்குக் காரணமில்லை.

'வித்தின்றி விளைவதொன் றில்லை வேந்தநின்
பித்தின்றி உணர்தியேல் அளவைப் பெய்குவன்
உய்த்தொன்றும் ஒழிவின்றி உணர்தற் பாற்றெனக்
கைத்துன்று நெல்லியின் கனிநற் காண்டியால்''

[பித்து: மயக்கம். கைத்து: கையினிடத்து.]

''உலகங்கள் யாவையும் தன்னுள்ளிருந்தே உண்டாக்கியும், தானும் அவற்றினுள்ளே நின்று அவற்றையே உறைவிடமாகக் கொண்டு தனக்கும் முன்னும் பின்னும் இல்லாது, ஒப்பும் உயர்வும் அற்ற தனிப்பொருளாய் எப்பொழுதும் குறைதலும் நிறைதலும் அழிதலும் இல்லாத நாராயணருடைய சிறப்பைக் கூறுதற்கு எவராலும் இயலாது. அவர்தாமே மூவுலகங்களாகியும் முக்குணங்களாகியும் யாவரும், யாவையும் ஆகியும், எண்ணில் அடங்கா பேதம் உடையதாயும் இருக்கின்ற அந்தப் பரம்பொருளின் திருவிளையாடல்களைப் பிரமன் முதலான தேவர்களும் முனிவர்களும்கூட அறியமாட்டார்கள். அத்தகைய பரம்பொருளாகவுள்ள நாராயணர் கர்மாவாகவும், அக்கர்மத்தின் பயனுகவும், அப்பயனைத் தருகின்ற கர்த்தாகவும் இருக்கின்ருர்; எல்லோருடைய நினைவிலும் சொல்லிலும் செயலிலும் இருந்து, காலம், கருவி, இடனுகவும் விளங்குகிருர்; இந்திரியங்கள் தோறும் கலந்திருக்கின்ருர்; இத்தகைய சிறப்புக்களையுடைய எம்பெருமானை நீர் இகழ்கின்றீர்; அதனுல் நீர் அடைந்துள்ள பெருஞ்செல்வமும், நீண்ட ஆயுளும், உமது பெயரோடு ஒழிந்து போய்

விடும். அவ்விதம் நீர் அழியாதிருப்பதற்காக, நானுவது அவருடைய திருநாமத்தை உச்சரித்து உமக்கு நல்வாழ்வைக் கொடுக்கலாம் என்று கருதி, நான் வேதப் பயிற்சி செய்யத் தொடங்குகையில் அந்த நாராயணருடைய 'அஷ்டாட்சர மந்திரத்தை வாழ்த்தாகக் கூறினேன்' என்று விளக்கமாக இயம்பினுன்.

''தனக்கு அறிவூட்டும் விதமாகத் தன் மகன் கூறியவற்றைக் கேட்டதும் இரணியன் முன்னிலும் பன்மடங்கு சினங்கொண்டு, 'நம் குல விரோதிக்குத் தான் அடியவன் என்று சொல்கின்ருன்; மேலும் விசனித்து இவன் எண்ணத்தை அறியவேண்டியதில்லை. இப்பொழுதே இவனைக் கொல்லுங்கள்' என்று அருகிலுள்ள அசுரர்களை நோக்கிக் கட்டளை இட்டான்.

''உடனே அவர்கள், ஒரு யானைக் கன்றைப் பல சிங்கங்கள் பற்றுவதுபோல், பிரகலாதனைப் பிடித்து இழுத்துக்கொண்டு, அரண்மனைக்குப் புறத்தே பெருவெளியில் அவனை நிறுத்தி அவன் மீது, பற்பல ஆயுதங்களால் குத்தியும் வெட்டியும் எற்றியும் மோதியும் முட்டியும் பல கொடுஞ்செயல்களால் அவனைத் துன்புறுத்தினுர்கள். அப்பொழுது பிரகலாதன், அடியார்க்கு அருளும் அந்த நாராயணனுடைய திருநாமங்களைத் தியானித்துக் கொண்டிருந்ததால், அவன்மீது செலுத்திய ஆயுதங்கள் யாவும், அவனுக்கு யாதொரு துன்பமும் செய்யாமல், அவன் திருமேனியில் பட்ட மாத்திரத்தில் முறிந்தும், மழுங்கியும் பயனில்லாமல் போயின. அதுகண்ட அசுரர்கள், ஓடிப்போய் இரணியனைக் கண்டு, பிரகலாதன் யாதொரு துன்பமும் இல்லாதிருப்பதையும், ஆயுதங்கள் பயனின்றிப் போவதையும் தெரிவித்தார்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட இரணியன் அந்த அசுரர்களை நோக்கி, 'நீங்கள் அவனை நன்கு கட்டிப் பெருநெருப்பிடைத் தள்ளுங்கள்' என்று பணித்தான். இரணியனுடைய அக்கடுங் கட்டளையை உணர்ந்த அக்கொலைபாதகர்கள், திரும்பி வந்து பிரகலாதனை அடைந்து, அவனைப் பிடித்து, எரிகிற நெருப்புக் குண்டத்தில் தள்ளினுர்கள். பிரகலாதாழ்வானுக்கு யாதொரு துன்பமும் உண்டாகவில்லை; பின்னர், அஷ்டநாகங்களையும் அவனிடம் விடுத்து கடிக்கச் செய்தார்கள்; ஐராவதம் என்ற யானையை அழைத்துவந்து அவனைக் குத்திக் கொல்ல முயன்றனர்; ஆனுல், அவ்வியானைக் கோடு முறிந்தது; கோபுரத்தின் உச்சியினின்றும் கீழே தள்ளினுர்கள்; நஞ்சு கலந்த உணவை ஊட்டினுர்கள்; கடைசியாக அவனைக் கட்டிப் போட்டுப் பலர் சம்மட்டிகளைக் கொண்டு அடித்தார்கள். அப்பொழுதும் பிரகலாதன், தன் மனத்திற் குடிகொண்ட அந்த பரந்தாமரது அழகிய நாமங்களின் தியானத்தால், அசுரர்கள் பலவாறு தனக்குச் செய்த கொடுமைகளுக்குச் சிறிதும் மனம் கலங்காமலும்,

உடலில் எவ்வித ஊனமும் உண்டாகப்பெருமல் கண்மூடி மௌனியாக இருந்தான்.

"'பிரகலாதனுடைய இத்தகைய நிலையைக் கண்ட இரணியன், மனங்கொதித்து, இவன் ஏதோ மாயையால் தனக்குற்ற துன்பங்களையும் பொருட்படுத்தாமல் உயிரும் நீங்காமல் இருக்கிருன். 'இனி இவனை நானே கொல்வேன்' என்று கனன்று ஏழுலகும் நடுங்க அவன் அருகே சென்ருன். தந்தை வந்ததைக் கண்டதும் பிரகலாதன், 'தந்தையே! என்னுடைய உயிரைப் போக்குவதற்குத் தாங்கள் முயலவேண்டா. அஃது உம்மால் இயலாது; ஏனெனில், உலகங்கள் யாவையும் அவற்றிற்கான பொருள்களுடன் தோற்றுவித்த எனது பெருமானுரான நாராயணரால் அன்றி, என் உயிரைப் போக்குவதற்கு வேறு எவராலும் முடியாது' என்ருன்.

"'இவ்வுரையைக் கேட்டதும் இரணியன், மகனைப் பார்த்து, 'அடே மதி கெட்டவனே! எவனோ நாராயணன் என்றும், உலகங்களை உண்டாக்கினனென்றும், அவனே கர்த்தாவென்றும் உளறுகிருயே! அவன் யார்! அவன் எப்பொழுதும் என் பெயரையே துதித்துக்கொண்டிருக்கிற திருமூர்த்திகளுள் ஒருவனு? எல்லாச் செயல்களையும் இழந்து எனக்கு அடங்கி வாழ்கிற தேவர்களுள் ஒருவனு? அன்றி மனிதர்கள், நரகர்கள் ஆகியவர்களுள் ஒருவனு? அவன் இன்னவன் என்பதைச் சொல்' என்று அதட்டினுன்.

"'அதற்குப் பிரகலாதன், 'எந்தையே! அவர் மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் போல எங்கும் எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பார்; என்னுடைய கட்புலன் செல்லும் இடங்களில் எல்லாம் எனக்குத் தோற்றம் அளிப்பார். அத்தகையவர் அந்த நாராயணரான மகாவிஷ்ணுவேயாவர். உமக்கு அவருடைய பலவகைச் சிறப்புக்களைக் கூறியும் நீர் அவரை ஒரு பொருளாகக்கூட நினைக்கவில்லை; ஆதலின் உமது அஞ்ஞானமாகிய இருள் சூழ்ந்த கண்களுக்கு அவர் தோன்றமாட்டார். நீர் அவரிடம் அன்பு கொண்டு, அவரை நினைப்பீராஞல் அவர் உமக்குக் காட்சி கொடுப்பார். இன்னும் அவருடைய சிறப்புக்கள் அளவிடற்கு அரியனவாகும் என்பதை நீர் உணரவேண்டும். சாத்துவீகம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்கள் அவருடையன; படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களும் அவருடையன; அயன், அரி, அரன் என்ற முத்தோற்றங்களும் அவருடையன. சோமன், சூரியன், அக்னி என்ற முச்சுடர்களும் அவருடையன. சூரியன், சந்திரன், அக்னி என்ற முச்சோதிகளும் அவருடையன. சுவர்க்கம், மத்தியம், பாதலம் ஆகிய மூவுலகங்களும் அவருடையன. ஆதி, நடு,

அந்தம் என்று தோன்றியிருக்கிற பொருள்கள் மூன்றும் அவருடையனவே. அவரே இவை யாவற்றிற்கும் சாட்சியாக இருக்கிறார்; வேதத்திலுள்ள முடிவும் இவையே. உண்மையும் இவையே' என்று கூறினன்.

''இவற்றைக் கேட்டதும் இரணியன் தன் கோரைப் பற்கள் தோன்ற நகைத்துப் பிரகலாதனை நோக்கி, 'ஒருவனே உலகப் பொருளில் எல்லாம் கலந்து நிற்பதாகக் கூறுகிறாயே. அஃது இயலுவதா? அப்படி இருப்பின் அவனை, இங்கே உள்ள தூணில் எனக்குக் காட்டு; நான் அவனைப் பார்த்தபின் செய்யவேண்டிய தைச் செய்கிறேன்' என்றான். அப்பொழுது பிரகலாதன்,

> ''சாணினும் உளனோர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
> கோணினும் உளன்மா மேருக் குன்றினும் உளனிந் நின்ற
> தூணினும் உளன்முன் சொன்ன சொல்லினும் உளனித் தன்மை
> காணுதி விரைவின் என்றான்..............''

[கோணினும் : பகுப்பிலும்.]

''உடனே இரணியன், பெருஞ்சினம் கொண்டு இடியின் ஒலியைப்போல முழங்கிப் பிரகலாதனை நோக்கி, அவனுக்கு எதிரேயுள்ள ஒரு தூணைக் காண்பித்து, 'அடே பயலே! நீ சொன்ன அந்த அரியை இந்தத் தூணிற்காட்டு! நீ காட்டாமற் போனால் ஓர் யானையைச் சிங்கம் அறைவதுபோல அறைந்து உன்னைக் கொன்று, உன் உதிரத்தைக் குடித்து, உடலையும் தின்றுவிடுவேன்' என்று ஆர்ப்பரித்தான்.

''இரணியன் கூறிய சொற்களைக் கேட்ட பிரகலாதன், 'தந்தையே! நீர் என்னைக் கொன்றுவிடுவதாகப் பல முறை கூறி விட்டீர். அப்படிச் செய்ய உம்மால் இயலாது. யான் கூறிய ஸ்ரீமந்நாராயணன் தாங்கள் தொட்ட தொட்ட இடந்தோறும் தோன்றுவான்; தோன்றானாயின் என் உயிரை நானே மாய்த்துக் கொள்வேன்; பின்னும் வாழ விரும்புவேனாயின் அந்நாராயண மூர்த்திக்கு அடியவன் அல்லன்' என்றான்.

''அப்பொழுது இரணியன், தன் வாயைத் திறந்து பற்கள் தெரியக் கோபச் சிரிப்புச் சிரித்து, மனம் கொதிக்க ஆரவாரித் தெழுந்து மகன் காட்டிய பொற்றூணைத் தன் கரத்தால் அறைந் தான்; அறைந்தவுடனே ஆதிமூலமான அந்த விஷ்ணுமூர்த்தி, நரவடிவும் சிங்கமுகமும் கொண்ட நரசிங்கமாய் அத்தூணிற்குள் ளிருந்து அண்டங்கள் யாவும் நடுங்கிப் பிளந்துபோகும்படிச் சிரித் தார். எவரும் தேடிக் காணமுடியாத எம்பெருமானார், தம் முடைய உண்மை பக்தனான பிரகலாதன் சூளுரையை நிறை

வேற்றி வைக்கும்பொருட்டுத் தூணில் தோன்றிக் கர்ஜனைப் புரிந்ததைக் கேட்டதும், அந்தப் பிரகலாதன், தன்னுடைய சொல் உண்மையாயிற்றெனக் கருதிப் பெருங்களிப்படைந்து கூத்தாடினுன்; ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அழுதான்; அரிவாசுதேவருடைய கருணையை வியந்து பாடினுன்; சிரத்தின் மேற் கரங்களைக் குவித்துக்கொண்டு தொழுதான்; அங்குமிங்கும் துள்ளிக் குதித்து ஓடினுன்.

''அத்தருணத்தில் இரணியன், அகங்காரம் கொண்டு அதட்டி, 'ஆரடா! இந்தத் தூணிற்குள் இருந்துகொண்டு சிரித்தவன்? இச்சிறு பயல் சொன்ன அரி என்பவன் நீதானு? எனக்கு அஞ்சி ஓடிக் கடலில் மறைந்திருந்த நீ, அங்கு நான் வரக் கூடுமென்று எண்ணி, இந்தத் தூணிற்குள் வந்து ஒளிந்துள்ளாயோ? அடே! நீ என்னுடன் போர் செய்யவல்லவனுயின் இப்பொழுதே வெளிக் கிளம்பி வா! வா!!' என்று கூறி ஆத்திரத்துடன் கூவினுன். அவன் தூணின் அருகே நெருங்கியதும், உலகங்கள் யாவும் அதிரும்படி அத்தூண் படீரென்று இரு பிளவாகப் பிளந்தது. அதனுள் இருந்த திருமாலாகிய பெருமான் உக்கிர நரசிங்கராக வெளியே தாவினுர்; தாவியதும் அங்கிருந்த இரணியனும் பிரகலாதனும் நீக்க, மற்றெல்லா அசுரர்களையும் ஒரு நொடியில் கொன்று குவித்துவிட்டு, இடிபோலக் கர்ச்சித்து இரணியன்மீது பாயத் திரும்பினுர். அப்பொழுதும் அந்த இரணியன் தன் அகங்காரம் ஒடுங்காமல் ஆவேசம் கொண்டு, 'அடே! நீ எந்த உருவத்துடன் வந்தாலும் அஞ்சேன்; இதோ நான் உன்னை என் வாளுக்கு இரையாக்குகிறேன்' என்று ஆர்ப்பரித்து வலக்கையால் வாளை ஏந்திச் சுழற்றியவாறு, அப்பெருமான் முன்னே சென்றுன். அவன் அவ்வாறு தம் அருகே வந்ததும், மிகுந்த உக்கிரத்துடன் விளங்கிய நரசிம்மர் வீரகர்ச்சனை செய்து, தமது அளவற்ற கரங்களாலும் கால்களாலும் அந்த இரணியனைக் கட்டிப் பிடித்து, ஓர் இமைப்பொழுதில் இரவு பகல் சந்திப்பாகிய அந்த அந்திநேரத்தில், அப்படியே தூக்கிக் கொண்டு போய், அவனுடைய அரண்மனைக் கோபுர வாயிற்படியில் அமர்ந்துகொண்டு, அவனைத் தமது திருத்தொடைகளின்மீது கிடத்திக் கூறிய வாள் போன்ற கை நகங்களால் கிழித்தார். கிழித்த மாத்திரத்தில் எழுந்த உதிரத்தை நிலத்திற் சிந்தவிடாமல், வாயினுல் உறிஞ்சிக் கொப்பளித்து, அவன் வயிற்றிலுள்ள குடரை எடுத்துக் கழுத்தில் மாலையாக இட்டுக்கொண்டு, அஞ்சத்தக்கத் தோற்றத்துடன் காட்சி அளித்தார்.

''உலகிலுள்ள எந்தப் பிராணியாலும், எவ்வகை ஆயுதங்களாலும், இரவிலும் பகலிலும், உள்ளிலும் வெளியிலும் சாகா வரம் பெற்ற அந்த இரணியன், விஷ்ணுத் துவேஷியாயிருந்ததனுலே, முன்னர் அவன் அவரைப் பல முறை எதிர்த்தும், அப்

பெருமான், அவனைக் காலம் வரும்பொழுது கொல்ல எண்ணி, அவனை இதுவரையில் விட்டிருந்து, அவன் பெற்ற வரங்களுக்கும் பழுதில்லாமல், தமது அடியவனான பிரகலாதனைக் காக்கவேண்டி இவ்வாறு அவனைச் சங்கரித்தார்.

''பின்னர் தேவர்களும் முனிவர்களும் வந்து, உக்கிர நரசிம்மமூர்த்தியைத் தரிசித்து வணங்கி, அவர் கொண்ட உக்கிரத்தைத் தணிவித்தார்கள். பிறகு, பிரகலாதனுக்கு அப் பெருமான் தமது திருக்கரங்களால் திருமுடி புனைந்து மூவுலகங் களையும் அரசாளும்படிச் செய்து, 'இனி உன் குலத்தவர்கள் அவர்கள் எத்துணை தீமை செய்யினும் யான் கொல்லேன்' என்று வரமளித்தார்'' என்று அந்த இரணியாசுரன் வரலாற்றையும், அவன் திருமாலைப் பகைத்துக்கொண்டதால் அவரால் அழிந்து போனதையும் சொல்லிய விபீஷணன் பின்னரும் ராவணனை நோக்கி, ''அண்ணா! நீர் அத்தகைய திருமாலின் தோற்றமாக வந்த ராமஸ்வாமியைப் பகைத்துக்கொள்ளாதீர்; உமக்கு நிச்சய மாகத் தீங்கு விளையும்'' என்று கூறினார்.

4. விபீஷணன் அடைக்கலப் படலம்

விபீஷணன், இவ்வாறு பல நீதிகளுடன், இரணியன் அழிந்த வரலாற்றைத் தன் அண்ணனுக்குச் சொல்லக் கேட்ட ராவணன், தான் சீதாபிராட்டியின்மீது கொண்டிருந்த விருப்பத்தால் சிறிதும் சிந்தியாதவனாய், மூட்டிய நெருப்பு முடுகி எரிவதுபோல் சினம் பொங்கி எழத் தம்பியை நோக்கி, ''அடே, வீரமற்ற வனே! இந்த இரணியன் என்பவன் நம்மிலும் வலிமை மிக்க வன்; அவனே திருமாலால் மடிந்தான்; ஆகவே, உன்னையும் பாதுகாப்பான் என்று எண்ணி அவனிடம் அன்பு கொண்டுள் ளாய்; இரணியன் மகன் தன் குலப்பகைவனிடத்து அன்பு கொண்டு தன் தந்தையைக் கொல்வித்தான். அவனைப் போலவே நீயும் என் பகைவனான அந்த நரனிடத்தில் அன்பு கொண்டு, என்னை ஒழித்துவிட்டு என் அரசைக் கைப்பற்ற எண்ணியிருக் கிறாய். அன்றைக்கு நம் கையிற் சிக்கிய குரங்கை நான் கொல்ல நினைத்தபொழுது, நீ தூதனைக் கொல்வது முறையாகாது என்று சொல்லி என்னைத் தடுத்தாய்; நீ என் கொடிய பகைவரான அந்த மனிதர்களிடத்தில் அன்பு வைத்துக்கொண்டு என் அழிவிற் காக இரங்குகிறவன்போல என்புருக அழுகிறாய்; என்னைத் துதிப்பதுபோல நடிக்கிறாய்; இத்தகைய சூதினை நெஞ்சத்திற் கொண்ட உன்னைக் காட்டிலும் எனக்கு வேறு பகைவர் எவர் இருக்கிறார்? உன்னோடு வாழ்வதைக் காட்டிலும் நஞ்சுடன்

வாழ்வது நன்று. உடன்பிறந்தவனைக் கொல்லல் பழியாகும் என்பதை அறிந்த நான் உன்னைக் கொல்லாது விடுகிறேன். நீ உடனே வெளியிற் சென்றுவிடு; அவ்வாறு செல்லாது நீ என் எதிரில் இனியும் நிற்பாயானால் அடையும் பழியினைப் பாராது, உன்னைக் கொன்றுவிடுவேன்'' என்று கடிந்து கூறினான்.

ராவணன் இத்தகைய மொழிகளைக் கூறியதும், விபீஷணன் 'நாம் இனி இங்கே இருத்தல் தகாது' என்று கருதி அவ்விடத்தினின்றும் நீங்கி எழுந்து, வானவீதியிற் போய் நின்று, ''அண்ணா! உம்முடைய நீண்டகால வாழ்வை நீரே போக்கிக் கொள்கிறீர்! நீர் உமது புத்திரர், மித்திரர், உற்றார், உறவினர் ஆகிய இத்துணைப்பேருடன் விரைவில் ராமருடைய பாணத்தினால் அழியப்போகிறீர். பலவகையாக உமக்கு நீதிகளை எடுத்துச் சொன்ன என்மீது குற்றங்களைக் காண்பீராயின் என்னைப் பொறுத் தருளும். இதோ நான் உம்மை விட்டுச் செல்கிறேன்'' என்று கூறி நகரினின்றும் நீங்கினான். அத்தருணத்தில் ராவணனுடைய செயல்களில் வெறுப்புற்றவரும், நற்குணங்களிற் சிறந்தவரும், விபீஷணன் துணைவருமாகிய அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற நால்வரும் விபீஷணனோடு புறப்பட்டுவிட்டார்கள். அவ்வாறு புறப்பட்ட ஐவரும், வானர சேனைகளுடன் ராமபிரான் தென் கடற்கரையை அடைந்தமை கேள்வியுற்று அவ்விடம் சென்றனர்; வானர சேனையைக் கண்டு வியந்து, மேலும் செய்யத் தக்கது யாதென ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது விபீஷணன், மந்திரிகள் நால்வரையும் நோக்கி, ''அன்பர்களே! என் மனம் நீதியுள்ளவர்களையே நாடுகின்றது; என் தமையன் அறவழியை விட்டு அநீதியைக் கைப்பற்றியதால் நான் அவனை நீங்கி வந்தேன். இனி நான் செய்யவேண்டியது யாது என்பதை நீங்களே ஆலோசித்துக் கூறுங்கள்'' என்று கேட்டான். அதற்கு அந்த நால்வரும், ''ஐயா! நீர் எல்லா அறங்களையும் அறிந்த நீதிமானாக இருக்கிறீர்; ஆதலின் அறத்தின் வடிவாகத் தோன்றிய அந்த ராமமூர்த்தியிடம் சேர்வதே தக்கதாம்'' என்றார்கள். விபீஷணன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் நல்லதே கூறினீர்கள்; நாம் வேறு வகையாக எண்ணுவோமாயின், மற்ற அரக்கர்களுக்கு உண்டாகும் கதியே நமக்கும் நேரும். ஆதலின் நாம் அந்த ராமஸ்வாமியைக் கண்டு, அவரிடத்தில் சரண் புகுவதே நமக்கு நன்மையாகும்'' என்று சொல்லி, மந்திரிகள் நால்வரையும் அழைத்துக்கொண்டு ராமன் இருந்த இடத்தருகே சென்றான்.

அப்பொழுது இரவு காலமாயிருந்ததால், 'நாம் இவ்வேளையில் ராமரிடம் செல்வது தகுதியல்ல' என்று நினைத்த விபீஷணன், தன் துணைவருடன் ஒரு சோலையில் தங்கியிருந்தான். இரவு நீங்கிச் சூரியன் உதயமாயினான். உடனே விபீஷணன் துணைவர் நால்வருடன் எழுந்து, சேனைகள் இருக்கும் இடத்தை

அணுகி நின்று, "கொற்றவ சரண்" எனக் கூவினன். அச்சொல் ஸ்ரீ ராமபிரானின் செவித்தலத்து விழவும், "எந்தையே, ராகவ சரணம் என்ற சொல் தந்தவர் எவரோ? விரைந்து கூறுங்கள்" என்று கட்டளையிட்டார். அப்போது அநுமன் ஆணைப்படி மயிந்த துவிவிதர்கள் விரைவாகச் சென்று சேனைவீரர்களை விலக்கி நிறுத்திவிட்டு, விபீஷணன் முதலியோரைப் பார்க்க, அவர்கள் முகத் தோற்றத்தால் விரோத உணர்ச்சியுடன் வந்தவர்களல்லர் என்பதை அறிந்து அவர்களை அழைத்து, "நீங்கள் யாவர்? இங்கே ஏன் வந்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

அவர்கள் அவ்வாறு கேட்டதும் விபீஷணனுடன் வந்த மந்திரிகளுள் ஒருவனான அனலன் என்பவன், அவர்களுக்கு விபீஷணனைக் காட்டி, "இவர் பிரம்மதேவர் குமாரரான புலஸ்தியர் என்பவருடைய மைந்தராகிய விச்ரவசு என்னும் முனிவரின் பிள்ளையாவார்; விபீஷணர் என்ற பெயருடையவர்; ராகவருடைய திருவடிகளில் சரண் புக வந்துள்ளார். திருமாலிடத்தில் மிக்க அன்பு கொண்டவர்; மிக்க நீதிகளை அறிந்தவர்; தம் தமையனான ராவணனுக்குப் பல நீதிகளைக் கூறி நற்புத்தி புகட்ட, அவனால் வெறுக்கப்பட்டு, அந்த ராவணனை நீக்கி வந்துவிட்டார்!" என்று கூறினன். அனலன் உரைத்ததைக் கேட்டதும் மயிந்தன் ராமனை அடைந்து, வந்தவன் விபீஷணன் என்பதையும், அவன் வரலாற்றையும் அறிவித்தான்.

சேனையின் முகப்பிலிருந்த வானரர்கள் அவர்களைப் பார்த்து, "யாரோ அரக்கர்கள் நமக்குத் துன்பம் செய்ய வந்திருக்கிறார்கள்; இவர்களைக் கட்டுங்கள்; அடியுங்கள்; கொல்லுங்கள்" என்று ஆர்ப்பரித்து அவர்கள் ஐவரையும் செல்ல வழியில்லாது சுற்றி வளைத்துக்கொண்டார்கள்.

மயிந்தன் உரைத்ததைக் கேட்டதும் ராமன், சுக்ரீவன் முதலியோர்களை நோக்கி, "இங்கு வந்துள்ள விபீஷணனை நமது அடைக்கலமாக ஏற்கலாமா அல்லது நீக்கலாமா என்பதை நன்றாக ஆராய்ந்து கூறுங்கள்" என்றான். அதற்குச் சுக்ரீவன் தன் கருத்தைக் கூறுபவனாய், ராமனை நோக்கி, "ஸ்வாமி! போர் மூளும் இச்சமயத்தில், இவன் தன் தமையனை நீங்கி வந்திருக்கிறான். ராவணன் மிகவும் கொடியவனாயிருந்தாலும், அவனுடைய உடன்பிறந்தவனாகிய இவன் தன் தமையன்மீது அன்பில்லாது நம்மிடம் மட்டும் அன்பு கொண்டிருப்பானா? மற்றும் நாம் அரக்கர்களை நம்பலாகுமோ? ஆதலின் இவன் நம்மால் வெறுக்கத்தக்கவனே" என்றான். பிறகு ஜாம்பவான் கருத்தை வினவ, "மானுருக் கொண்டு வந்தவன் வரவே போலும் இவன் வரவும்" என்று கூறினர். பின்னர் நீலன் என்ற வானரர் தலைவன் எழுந்து, இவனைத் தேரிச் சேர்த்துக்கொள்ளுதல் தகாதெனத் தெரிவித்தான்.

அதன் பின்னர் ராமன், மிக்க அறிவாளியும் பல நீதிகளைக் கற்றறிந்தவனுமான ஆஞ்சநேயனை நோக்கி, ''மாருதி! இது பற்றிய உனது நோக்கத்தையும் அறிவிப்பாயாக'' என்ருன். அதற்கு அவன் ராமபிரானை வணங்கி, மிகவும் பணிவோடு, ''ஸ்வாமி, முன்னர் யோசனை சொன்னவர்கள் யாவரும் கூறியன யாவும் சிறந்த நீதிகளையுடையனவ என்ருலும், அடியேன் நேரில் பார்த்த சில செய்திகளைக் கொண்டு, இந்த விபீஷணர் மிகவும் உத்தமர் என்றே எனக்குப் புலப்படுகிறது; என் கண்களினுல் கண்டவற்றிற் சில கூறுகிறேன், கேட்டருள்க: நான் லங்கையை அடைந்து ராவணன் எதிரில் நின்றதும், அவன் என்னைக் கொல்லும்படிக் கட்டளை இட்டான்; அப்பொழுது இந்த விபீஷணர், அவனுக்குத் தூதரைக் கொல்லலாகாதெனப் பல நீதிகளை எடுத்தியம்பி அவனை விலக்கினுர். நான் இரவில் லங்கையிலுள்ள மாளிகைகள் தோறும் சென்று தேவியாரைத் தேடலுற்றபொழுது, இவருடைய மாளிகையினுள்ளும் சென்றேன். அது, மறைகள் யாவையும் ஓதியுணர்ந்த ஓர் அந்தணர் இருப்பிடமாகத் தோற்றமளித்ததும் அங்கே இவர், உறங்கிக்கொண்டிருக்கும் பொழுது பார்த்த எனக்கு, இவருடைய முகக் குறிப்பால் இவர் வஞ்சனையற்றவரென்றும், பல நூல்களைக் கற்றறிந்த நீதிமானென்றும் விளங்கியது. மற்றும் இவருடைய பெண் திரிசடை என்பவள் நற்குணம் வாய்ந்தவளாகக் காண்கிருள். அவள் தேவியார் அருகேயிருந்து, மற்ற அரக்கியர் செய்யும் கொடுமைகளிலிருந்து காத்துவருவதுடன், அவருக்கு ஏற்ற சமயங்களில் தைரிய மொழிகளைச் சொல்லிக்கொண்டு, தேவியாரிடம் அன்புடையவளாயிருக்கிருள். தங்களுடைய சிறப்புக்களை எல்லாம் கேள்விப்பட்டுத் தங்களுடைய அருளால் மேலான வாழ்வை அடைய எண்ணி இங்கே வந்திருக்கின்ருர் என்று கருதுகிறேன்; இத்தகையவரைத் துரோகி என்றும், தீய குணமுடையவர் என்றும் நினைக்கலாகாது. மற்றும் ஒன்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது; அரக்கர்கள் பெரிய மாயாவிகள். நாம் அவற்றை அறிதற்கும் லங்கையின் காவல் கட்டுகளைத் தெரிந்துகொள்ளவும் இவருடைய உதவி வேண்டியதாகும். பிரமன் முதலிய முத்தேவர்களாலும் முடியாத ஒரு செயலைச் செய்து முடிக்க உறுதி கொண்டு வந்தபின் ஆபத்துச் சமயத்தில் 'அபயம்' என்று வந்தவனை ஐயத்தால் கைவிட்டால் 'கிணற்று நீரைக் கண்டு கடல் நீர் ஐயுற்றதுபோல்' ஆகுமன்ருே? ஆகவே, இவரை ஏற்றுக்கொள்வதில் தவறு நேராது என அடியேனுக்குத் தோன்றுகிறது'' என்ருன்.

அறிவு மிக்க அநுமன் கூறியவற்றைக் கேட்ட ராமன், எல்லோரையும் பார்த்து, ''அன்பர்களே! அநுமன் உரைத்

தவை தக்கனவாகத் தோன்றுகின்றன. விபீஷணன் நம்மை நாடி வந்துள்ளான். அதிலிருந்தே அவன் குற்றமற்றவன் என்பதை நாம் நன்கு உணரலாம்.

''மற்றினி உரைப்ப தென்னை ? மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி ; அன்ன(து) அன்றெனில் பிறிதொன்றுனும்
வெற்றியே பெறுக ; தோற்க ; வீக ; வீயாது வாழ்க ;
பற்றுதல் அன்றி உண்டோ ? அடைக்கலம் பகர்கின் றனே?''

''பின்பு அவன் நமக்குத் தீங்கு செய்தானேயாயினும், அதனுல் நமக்குப் புகழ் வருமேயன்றிப் பழியும் வருமோ ?

''புரு ஒன்றின் பொருட்டுத் தன் உயிரையே கொடுக்க இசைந்து, தராசுத் தட்டில் ஏறிய சிபி மன்னனை இவ்வுலகம் மறக்குமா ? அஞ்சி நடுநடுங்கி, அபயம் என்று வந்த அமரர் பொருட்டுச் சிவபிரான் ஆலகாலவிடத்தை உண்ண வில்லையா ? இளைத்தவர்க்கு, உதவானுயின், தன்னிடம் உள்ள ஒன்றை ஈயானுயின், அடைந்தவர்க்கு அருள் செய்யா னுயின் ஒருவனிடம் அறமும், ஆண்மையும் இருப்பதனுல் பயன் யாது ?

''பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந்(து) அடைந்த பேதை
வேடனுக்(கு) உதவி செய்வான்
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுஉறு பசியை நோக்கித்
தன்உடன் கொடுத்த பைம்புள்
விடுபெற்(று) வுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி(து) அன்றோ ?''

''பெண் புருவைப் பிடித்துத் தன்னையும் பிடிக்கும் பொருட்டு வேடன் ஒருவன் முயன்ற காலையில், ஆண் புரு யாது செய்தது ? அவ்வேடன் தன்னிடம் விருந்தின ஞக வந்துள்ளான் என்று கருதியதன்றோ அந்த ஆண் புரு ; அதுமட்டுமா ? அவ்வேடன் மூட்டிய தீயில் அப்புரு விழுந்து, அவனுடைய பசியைப் போக்குவதற்குத் தன் உடலையும் கொடுத்ததன்றோ ? அப்புரு நற்கதி பெற்ற வரலாறு, வேதப் பொருள்களைக் காட்டிலும் உயர்ந்ததன்றோ? முதலையினுல் பிடிக்கப்பட்ட காலையில் ஆதிமூலமே என்று ஓலமிட்டருளிய யானையைக் காத்தற்பொருட்டுத் திருமால் எளிதில் வெளிவந்து, அந்த யானையின் பெருந்துயரைத் தீர்க்கவில்லையோ ? தன்னை அடைக்கலமாகச் சேர்ந்த மார்க் கண்டன் பொருட்டுச் சிவபிரான் காலனைக் காலால் உதைக்க வில்லையோ ?

"அடைக்கலம் என்று கூறிச் சீதை அழுதகாலையில், ஜடாயு யாது செய்தான்? 'அஞ்சாதே' என்று சீதைக்கு அபயம் அளித்து, ராவணனுடன் போர் செய்து, தெய்வ மரணம் அடையவில்லையா?

"உய்யநிற்(கு) அபயம் என்றான் உயிரைத்தன் உயிரின் ஓம்பாக்
கையனும் ஒருவன் செய்த உதவியில் கருத்தி லோனும்
மைஅற நெறியின் நோக்கி மாமறை நெறியின் நின்ற
மெய்யினைப் பொய் என்றானும் மீள்கிலா நரகில் வீழ்வார்."

"அபயம் என்று வந்தவனது உயிரைத் தன்னுயிர்போலக் கருதிப் போற்றாத கயவனும், ஒருவன் செய்த உதவியை மறந்தவனும், வேதம் கூறும் மெய்யினைப் பொய்யென்று கூறுபவனும் மீளுதல் இல்லாத நரகில் வீழ்வர். மேலும், அன்று யான் தண்டகாரணிய முனிவர்களிடம், 'அடைக்கலம் அடைந்தோரைக் காப்பேன்' என்று கூறினேன். அந்த உறுதி உரையை நான் தவறுதல் தகுமோ? ஆதலால் 'அபயம்' என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடென்ப" எனக் கூறிச் சுக்ரீவனை நோக்கி, "சூரிய புதல்வ! நீ ஏதும் ஐயங்கொள்ளாமல், அந்த விபீஷணனை என்னிடத்திற்கு அழைத்து வருவாயாக" என்று கூறினான். சுக்ரீவன் சென்று விபீஷணனைக் காணலும், வானர சேனையின் ஒரு தலைவனான துவிவிதன் என்பவன் சுக்ரீவனை விபீஷணனுக்கு அறிமுகப்படுத்தி, "உம்மை ராமபிரான் அழைத்துவரக் கட்டளை இட்டதன்மேல் எங்கள் அரசரான இவர் வந்திருக்கிறார்" என்றான். அதனைக் கேட்டதும் விபீஷணன், சுக்ரீவனை எதிர்கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் மகிழ்ந்து தழுவிக்கொண்டனர்.

இவ்வாறு கரிய நிறத்தினுடைய விபீஷணனும் தூய்மையான மனத்தினராகி, அன்புடன் பல நாள் கூடியிருந்த நட்பினர், சிலகாலம் பிரிந்து மீண்டும் கூடியதுபோன்று உணர்ச்சி பொருந்தத் தழுவிக்கொண்டபின்பு, சுக்ரீவன் விபீஷணனை நோக்கி, "ராகவர் உமக்கு அபயதானம் அருளியிருக்கின்றார். நீர் விரைவில் வந்து அவருடைய திருவடிகளை வணங்கிக் கொள்ளும்" என்றான். சுக்ரீவன் கூறிய அருள் ததும்பும் அந்தச் சொல், தன்னுடைய செவிகளில் நுழையுமுன்பே, விபீஷணன், ஆனந்தத்தால் கண்களில் நீர் பெருக, மனமும் மற்ற அங்கங்களும் குளிர உடலிலுள்ள ரோமம் சிலிர்க்கப் பரவசம் மேலிட்டு, 'இன்றே நான் பெறுதற்கரிய பேறு பெற்றேன். தமது தேவியைப்பிரித்து வைத்த கொடும்பாவியின் தம்பியான என்னையும் வருக என்று அருள் செய்தாரோ! என்னையும் தமது அடைக்கலமாகக் கருதினாரோ? ஆ! அந்த ராமஸ்வாமியினுடைய பெருங்குணத்தை எவ்வாறு புகழ்வேன்!" என்று மெய் மறந்து நின்றான். அப்

பொழுது சுக்ரீவன் அவனை நோக்கி, ''ஐயா விபீஷணரே! நீர் எங்கள் ஸ்வாமியிடம் கொண்டிருக்கும் அன்பை வியந்தேன். அப்பெருமான், தம்மைச் சரணம் என்று அடைந்தவர் யாவராக இருந்தாலும் அவர்களுக்கு அபயதானம் அளித்து, ஆதரம் செய்யும் அருங்குணம் படைத்தவர். நீர் விரைந்து வந்து அவருடைய கருணை மொழிகளைக் கேட்டுக் கொள்வீராக'' என்று கூறினன். அக்கணத்திலேயே விபீஷணன் தன் துணைவர்களுடன், சுக்ரீவனும் வானர வீரர்களும் சூழ்ந்துவர, ராமனுடைய திருவடிவத்தைக் கண்ணாரக் கண்டு, பலவாறு புகழ்ந்து துதித்தவண்ணம், கரங்களைக் கூப்பிக்கொண்டு ராமனுடைய செந்தாமரை போன்ற திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான்.


மிகுந்த அன்புடன் விபீஷணனை எழுந்திருக்கச் செய்து,

''ஆழியான் அவனை நோக்கி அருள்சுரந் துவகை தூண்ட
'ஏழினோ டேழாய் நின்ற உலகுமென் பெயரும் எந்நாள்
வாழுநாள் அன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்றான்.''

ராமனுடைய அருள்மொழியைக் கேட்டு, அங்கு நின்றோரும் மற்ற எல்லா உலகங்களிலுள்ளோரும் தங்கள் தங்களுக்கு அச்செல்வம் கிடைத்ததுபோல எண்ணிக் களிப்படைந்தார்கள்.

அப்பொழுது விபீஷணன், 'நான் பெரும் புண்ணியம் செய்தவனாவேன்' என்று பலமுறை ராமனுடைய அடிகளில் வீழ்ந்து பணிந்து பணிந்து எழுந்திருந்தான். ராமன் அவன்மீது கருணை கொண்டு தம்பியை நோக்கி, ''தம்பி! களங்கமில்லாத மனத்தினையுடைய நம் விபீஷணனுக்கு லங்கை அரசனாகத் திருமுடி சூட்டுவாயாக'' என்று பணித்தார். உடனே விபீஷணன் ராமனை நோக்கி, ''ஐயனே! தாங்கள் திருமுடி சூட்ட அருளினீர் ஆயினும், அக்கள்வனான ராவணன் தம்பி என்ற உறவுக் கடன் ஒழியும்பொருட்டுத் தமது தம்பியாரான பரதருக்குச் சூட்டிய தங்கள் பாதுகைகளையே அடியேனுக்கும் முடியாகச் சூட்டத் திருவருள் புரியவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான்.

அதனைக் கேட்டதும் ராமன் மனம் உருகி, ''விபீஷணா! முதலில் நான், மூவர் தம்பியரை அடைந்து நாங்கள் நால்வரானோம்; பின்னர் குகனோடு சேர்ந்து ஐவராகி, மற்றும் இந்தச் சுக்ரீவனைச் சேர்த்து அறுவராயினோம்; இப்பொழுது உன்னோடு கூட ஏழு பேர்களாயினோம்'' என்று சொன்னான். உடனே விபீஷணன், ''இதனைக் காட்டிலும் மேம்பட்ட செல்வம் உண்டோ?'' என்று சொல்லி ராமனுடைய திருப்பாதுகையைக் கரங்களால் எடுத்துத் தலையில் சூடி நின்றான். ராமன், லக்ஷ்மணன் முதலான



அங்கிருந்த யாவரும், விபீஷணனுடைய மெய்யன்பைக் கண்டு வியந்து கொண்டாடினார்கள். தேவர்கள் கண்டு மகிழ்ந்து அவன்மீது மலர்களைப் பொழிந்தார்கள்.

அதன் பின்னர் ராமன், லக்ஷ்மணனையும், சுக்ரீவனையும் நோக்கி, ''இந்த லங்கை அரசு விபீஷணனுக்கே உரிமையானது என்பதற்குச் சான்றாக யாவரும் கேட்கும்படிக் கட்டியம் கூறச் செய்து விபீஷணனை விமானத்திலேற்றிப் பாடி வீட்டைச் சுற்றி வானர சேனைகளுடன் வலம் வரச் செய்யுங்கள்'' என்று கட்டளை இட்டான். அவ்வாறே வானரர்கள் கட்டியங்கள் கூற, ஊர்வலமும் செய்விக்கப்பட்டது. தேவர்களும் முனிவர்களும் வாழ்த்தினார்கள். ஊர்வலமாக வந்த விபீஷணன் ராமனைப் பணிந்து போற்றினான். அப்பொழுது ராமன் அவனுக்கும், அவன் துணைவருக்கும் தகுந்த விடுதியொன்றை அமைத்துத் தரும்படிச் சொல்ல, அப்படியே நளன் என்ற வானர வீரன் விடுதி அமைத்துக் கொடுத்தான். அதில் விபீஷணன் தன் துணைவரோடு போய் மகிழ்ச்சியுடன் தங்கி இருந்தான்.

5. லங்கை கேள்விப் படலம்

தனக்கு அமைத்துக் கொடுத்த விடுதியை நோக்கி விபீஷணன் சென்றதும் சூரியன் அஸ்தமிக்கும் காலம் குறுகிற்று. அதன் பிறகு எங்கும் இருள் சூழ்ந்தது. நட்சத்திரங்களின் தோற்றமும் சந்திரோதயமும் ஏற்பட்டன. அப்பொழுது ராமனுக்குத் தன்னைப் பிரிந்த சீதையின் நினைவு தோன்றியது. அதனால் அவன் தன் தனிமையை எண்ணியும், அயலான் ஊரில் சிறையாக இருக்கும் சீதையின் நிலையை எண்ணியும் துயரங்கொண்டு புலம்பினான். அதனைக் கண்ட சுக்ரீவன், ராமனை நோக்கி, ''தேவரே! தாங்கள் இத்தருணத்தில், நாம் இனிச் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்து ஆலோசிக்க வேண்டியிருக்க, இப்படி வருந்தலாமோ?'' என்றான். உடனே ராமன், ''ஆம்'' என்று கூறி, தனது வருத்தத்தை நீக்கிக்கொண்டு, விரைவில் விபீஷணனை அழைத்து வரும்படி சுக்ரீவனுக்குக் கட்டளை இட, அவன் சென்று விபீஷணனை அழைத்து வந்தான்.

ராமன், தன்னை வணங்கிய விபீஷணனை அருகில் அமர்த்திக் கொண்டு அவனை அன்பு கனியப் பார்த்து ''தம்பி! நாம் இங்கு வந்த காரியம் ராவணனுடன் போர் தொடுப்பதற்கே என்பதை

நீ அறிவாய்; ஆதலின், அந்த ராவணனின் வலிமையையும் லங்கை நகரின் அமைப்பு, காவல் முதலியான ரகசியங்களையும் நீ விளக்கமாகக் கூறவேண்டும்'' என்று கேட்டான். விபீஷணன், அப்பொழுது ராமன் திருமுகத்தைப் பார்த்து, ''ஸ்வாமி! முதலில் நான் லங்கையின் தோற்றத்தையும் அதனுடைய காவல் கட்டுக்களையும் கூறுகிறேன். கேட்டருளுங்கள். ஒரு காலத்தில், ஆதிசேஷனும் வாயுதேவனும் தாம் தாமே வலியர் என்று வாது புரிந்தனர். கடைசியாக அவர்கள் ஆதிசேஷன், வடவரையான மேருவைத் தன் தலையால் மூடிக்கொள்ளுகிறதென்றும், வாயு தேவன் தன் வல்லமையால் அதனைப் பெயர்த்துவிடுகிறதென்றும் முடிவு செய்துகொண்டார்கள். அப்படியே அவர்கள் தங்களுடைய காரியத்தைச் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது வாயுதேவன் தன்னுடைய முழு வலிமையையும் உபயோகித்து, மேருமலையின் மீது மோதினான். அதனால் மேருவின் சிகரம் ஒன்று பெயர்ந்து தென் சமுத்திரமாகிய இதனில் வந்து வீழ்ந்தது; அதுவே லங்கைத் தீவாயிற்று.

''அந்த லங்கை நகரம் எழுநூறு யோசனை நீள அகலம் உடையது; அதைச் சுற்றிலுமுள்ள கோட்டைமதில் நூறு யோசனை ஆழ்ந்து, சூரிய மண்டலத்தையும் எட்டத்தக்க உயரத்தினையுடையது. கோட்டையின் வடக்கு வாயிலில் பதினாறு கோடி அரக்கர்களும், மேற்கு வாயிலில் பதினெட்டு கோடி அரக்கர்களும், தெற்கு வாயிலில் பதினாறு கோடி அரக்கர்களும், கிழக்கு வாயிலில் பதினாறு கோடி அரக்கர்களும் காவல் புரிகின்றனர். இவர்கள் யாவரும் கூற்றுவனும் அஞ்சத்தக்க கொடுமை வாய்ந்தவர்கள். இவர்களன்றி, ஆகாயத்தில் முப்பத்திரண்டு கோடி அரக்கர்கள் காவலாக இருக்கின்றார்கள். பூமிக்குள் பதுங்கியுள்ளவர்களுக்குக் கணக்கே இல்லை. அந்த லங்கைக்கு இதேவிதமான மூன்று கோட்டைகள் உள்ளன; அவற்றைக் காத்துவருவோர் தொண்ணூறு கோடிப் பேர்களாவர். மற்றும் ராவணனுடைய படையில் உள்ளவர்கள் ஆயிரத்துநூறு கோடியாம். அவனுடைய மூல பல சைன்யங்களின் தொகை ஆயிரம் வெள்ளமாகும். இவற்றுடன் தேர்கள் பதினாயிரம், யானைகள் இருபதினாயிரம், குதிரைகள் நாற்பதினாயிரம், ஒட்டகங்கள் எண்பதினாயிரம் அவனிடம் இருக்கின்றன.

''ராவணன் தவத்தில் மிக்கவன். அவன் தன் தவத்தினால் சிவனிடத்தில் வாளாயுதம் பெற்றிருக்கிறான். எண்திசை யானைகளின் கொம்புகளைத் தன் இரு கைகளாற் பற்றிப் பிடுங்கியவனும், தேவர்களைப் புறங்கண்டவனுமான கும்பகர்ணன் என்பவன் ராவணனுடைய தம்பி. ராவணனுடைய மூத்த மகன் இந்திரசித்து என்பவன் இந்திரனை வென்று சூரியனை

யும் சந்திரனையும் சிறையாக வைத்தவன். இவனுடைய தம்பியே அதிகாயன்; அவன் இந்திரசித்துவையும் வெல்லக் கூடியவன். இந்த இருவரும் அன்றி ராவணனுக்கு தேவாந்தகன், நராந்தகன், திரிசிரர் என்னும் மூன்று புதல்வர்களும் உளர். இவர்கள் மும்மூர்த்திகளையும் வெல்லும் திறனுடையவர்கள். இப்பிள்ளைகளைப் பெற்ற ராவணனுடைய வன்மை அளவிடற்கரியது. அவன் பிரம்மதேவர் குமாரரான புலத்திய முனிவரின் பெயரன். அவன் காலகேயர்களைக் கொன்றவன்; தேவர்களை நடுங்கச் செய்து தனக்கு அடங்கும்படி செய்திருக்கிறன். குபேரனும் அவனுக்கு எதிர் நிற்கமாட்டாமல் அந்த லங்கையை விட்டு ஓடிவிட்டான். யமனுக்கும் அவனைக் கண்டால் அச்சமே. சூரியனும் அவனுக்குப் பயந்து லங்கைக்கு நேராக வரமாட்டான். அந்த ராவணன் வருணனை வென்று அவனுடைய பாசத்தைப் பிடுங்கிக்கொண்டிருக்கிறன்.

அத்தகைய ராவணனைத் தேவரீரேயன்றி வேறு யாவராலும் வெல்லமுடியாது; அவன் இத்துணை வலிமையோடும் அரண்களுடனும் இருந்தும், ஆஞ்சநேயர் அங்கே வந்தபொழுது, பெருவீரர்களான பல அரக்கர்கள் அவரால் கொல்லப்பட்டு, லங்கையும் எரியுண்டது. ராவணனுடைய பஞ்ச சேனதிபதிகளையும், சம்புமாலி என்ற வலிமிக்க வீரனையும், ராவணனுடைய இளைய புதல்வனுன அக்ஷகுமாரனையும், எண்பதினாயிரம் கிங்கரர்களையும் ஆஞ்சநேயர் ஒருவரே கொன்று தீர்த்திருக்கிறர். லங்கை எரிந்ததைக் கண்டு மனம் வருந்திய ராவணன் ஏழு நாட்கள்வரை ஆகாயத்திலே நின்றிருந்தான். பிறகு ராவணன் பிரம்மதேவரை வேண்டி நகரைப் புதுப்பித்துக்கொண்டு இப்பொழுது நகரில் வசிக்கிறன்; அடியேன் இந்த மகாவீரனுன ஆஞ்சநேயருடைய வியக்கத்தக்க செயல்களைக் கண்ணாரக் கண்டதனுலும், அவர், தேவரீருடைய தூதர் என்று அறிந்து, தங்களுடைய சிறப்புக்களைக் கேள்வியுற்றதாலும், இனி ராவணன் அழிந்துபோகத் தக்கவனே என்பதை மனத்திற்கொண்டு தங்களை நாடிவந்து அடைக்கலமாயினேன்'' என்று கூறினன்.

லங்கையில் தான் நிகழ்த்திய செயல்களைச் சொன்னல் 'தற்புகழ்ச்சியாகும்' என்று கருதிய ஆஞ்சநேயன், அவற்றை அப்பொழுது சொல்லாதிருந்தும், இப்பொழுது விபீஷணனல் அச்செயல்களைக் கேட்டதும், ராமன் அளவிலா மகிழ்ச்சியடைந்து ஆஞ்சநேயனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடி அவனை நோக்கி, ''அப்பா, ஆஞ்சநேயா,

''என்ன தாக்கிய வலியொ(டு)அவ் விராவணன் வலியும்
உன்ன தாக்கினே; பாக்கியம் உருக்கொண்ட(து) ஒப்பாய்!
முன்ன தாக்கிய மூவுல காக்கிய முதலோன்
பின்னதாக்கிய பதம்நினக்(கு) ஆக்கினன் பெற்றும்.''

[கருத்து : என் வலிமையும் ராவணன் வலிமையும் ஒரு சேர உன்னதாகக் கொண்டாய்; பாக்கியமே ஓருருவெடுத்து வந்தது போன்றவனே ; முன் இருந்தது போலவே முறையாகப் படைக்கப்படும் மூவகையுலகும் படைக்கும் முதல்வன் பதத்தை உனக்கெனப் பணித்தேன்; வரும் கல்பத்தில் 'பிரம்மபதம்' எய்துக.]

என்று வாழ்த்தினர். சுக்ரீவன், ஜாம்பவான் முதலானோரும் ஆஞ்சநேயனுடைய அற்புதச் செயல்களையும், உயர்ந்த குணத்தையும் பாராட்டிப் புகழ்ந்து வியந்தார்கள்.

6. வருணனை வழி வேண்டு படலம்

பிறகு ராமபிரான் விபீஷணனை நோக்கி, ''இப்பெருங்கடல் கட்டுப்படுமாயின் மூவுலகையும் வெல்லுதல் ஒரு பொருட்டன்று; இப்பெருங்கடலை நம் பெருஞ்சேனையோடு எவ்வாறு கடந்து செல்லமுடியும்? அதற்கோர் உபாயம் தேர்ந்து கூறுவாயாக'' என்றான். உடனே விபீஷணன், ''இப்பரந்த கடல் தங்கள் முன்னோர்களால் உணடாக்கப்பட்டது ; ஆகையால் நம்மிடம் அன்பு கொண்டு வேண்டிய வரம் தரும் ; எனவே, இதனைச் சரணடைந்து வழி வேண்டுக'' என இயம்பினன்.

விபிஷணன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட ராமன், அது மிக்க நல்லதே என இசைந்து, வானர சேனைகளோடு யாவரும் வரும்படி அழைத்துக்கொண்டு, கடற்கரையோரத்தில் போய் நின்றான். அப்பொழுது இராக்காலம் நீங்கிச் சூரியன் தோன்றினன். அவ்விடத்திலேயே தம்பியான லக்ஷ்மணன் ராமனுக்குத் தருப்பைப் புற்களைக் கொண்டுவந்து, பரப்பிப் பாயல் அமைத்துக் கொடுத்தான். உடனே ராமன், வருணன் வருவதற்காக அவனை வழுத்தும் வாருண மந்திரத்தை உச்சரித்தவாறே தருப்பைப் பாயலில்மீது சயனித்தான் இப்படியாக வருணனைத் துதித்துக்கொண்டு ஏழு நாட்கள்வரை பள்ளிகொண்டிருந்தும், அவ்வருணதேவன் வரவில்லை; அதனல் ராமன் துயரமும் சினமும் கொண்டு, ''நாம் மனைவியைப் பிரிந்து வருந்தி, அவளை மீட்பதற்காகக் கடலைத் தாண்டிச் செல்லும் வழி காட்டும்பொருட்டு வருணனை வரும்படி முறையாக வேண்டியும் அவன் வாராதிருக்

கின்றான். ஓர் இமைப்பொழுதில் இந்தக் கடல் நீர் முழுதும் வற்றும்படிச் செய்து, இதன் வழியாக வானர சேனைகள் எல்லாவற்றையும் நடந்துபோகச் செய்வோம்'' என்று லக்ஷ்மணனைப் பார்த்து, ''வில்லைக் கொடு'' என்றான். தம்பியும் உடனே வில்லை ராமனிடம் கொடுக்க, அவன் அதனைக் கையில் தாங்கி வளைத்து, அதனில், வடவைக் கனலினும் கடுநெருப்பைக் கக்கும் அஸ்திரங்களைத் தொடுத்துக் கடலை நோக்கிச் செலுத்தினான்.

அக்னிமாரி போலச் சென்ற அந்த அஸ்திரங்கள் ஏழு கடல்களையும் எரித்து, சக்கரவாள மலைக்கு அப்பாலுள்ள இருளையும் நீக்கிவிட்டன. கடலிலுள்ள உயிர்ப் பிராணிகள் யாவும் மடிந்துபோயின. அவ்வாறு யாவும் நாசமாகியும் வருணன் வரவில்லை. ராமன் முன்னிலும் கடுங்கோபங் கொண்டு பிரம்மாஸ்திரத்தை எடுத்து வில்லிற் பூட்டியதும், அதன் தொனியைக் கேட்டு, காரணம் உணர்ந்துகொண்ட வருணன், நா வறண்டு போகக் கண்ணீர் விட்டுக்கொண்டு, உடல் தகிக்க நடுங்கியவாறு, கரங்களைக் கூப்பித் தொழுதபடியே புறப்பட்டு, எங்கும் புகை சூழ்ந்திருந்ததால் வரும் வழியறியாது தட்டுத் தடுமாறி விரைந்து வருபவனாய்ப் பெருங் குரலுடன், ''ராமஸ்வாமியே ! அடியேன் உமக்கு அபயம் ! அபயம் !'' என்று சொல்லி ராமன் முன்னர் வந்து அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ''அடியேன் கடலுக்கப்பால் நின்றிருந்தேன். ஆதலின், ஸ்வாமி என்னைச் சிந்தித்ததை உணரமுடியவில்லை. தங்களுடைய கோபத்தை அடியேனால் ஆற்றமுடியுமோ ? தாங்கள் சினம் தணிந்து அருள் புரியவேண்டும். எல்லாமும் அல்லவுமாய தாங்களே எளியேனுக்கு தாயும் தந்தையும் ஆவீர்'' என்று துதித்துப் பின்னரும் வணங்கினான்.

ராமன், தன் சினத்தை ஆற்றிக்கொண்டு, வருணனை நோக்கி, "கடலுக்கு இறைவனே ! அஞ்சேல். நான் உன்னைச் சிந்தித்தும் நீ விரைந்து வராததற்குற்ற காரணம் யாது ?'' என்ன, அவன், "ஸ்வாமி ! ஏழு கடல்களுக்கும் அப்பால் சில மீன்கள் போர் செய்துகொண்டிருந்தன. நான் அங்கே சென்று அவற்றைப் போர் நிறுத்துமாறு சொல்லிக்கொண்டிருந்தேன் ; ஆதலின், தாங்கள் சிந்தித்ததை உணராமலிருந்துவிட்டேன்'' என்றனன். வருணன் கூறியதை அறிந்த ராமன், அவன்மீது இரக்கமுற்று, ''வருணா ! நான் உன்மீது தொடுத்த இந்தப் பிரம்மாஸ்திரம் வீண் போகக்கூடாது ; ஆதலின் இதனுக்கு ஓர் இலக்குச் சொல்'' என்றான். அப்பொழுது அவன், "மருகாந்தாரம் என்ற தீவில் எனக்குப் பகைவரான நூறு [illegible]டிக்கதிகமான அரக்கர்கள் வாழ்கின்றனர். அவர்கள்மீது இந்தப் பாணத்தை ஏவுங்கள்'' என்றான். ராமன் அப்படியே அந்த



அரக்கர்களை அழித்துவரும்படி அந்த அம்பை ஏவ, உடனே அது சென்று அவர்கள் யாவரையும் ஒரு நொடிப்பொழுதில் அழித்து விட்டுத் திரும்பி வந்து, அம்பறாத் துணியில் புகுந்துகொண்டது.

அதன் பின்னர், ராமன் வருணனை நோக்கி, "லங்கையிலுள்ள ராவணன் முதலானோரை வதைப்பதற்காகச் சேனையுடன் நாங்கள் அங்கே செல்லவேண்டும். இக்கடலில் அதற்குரிய நல்ல வழியைக் காட்டும்" என்றான். வருணன், "ஸ்வாமி, இக்கடல் மிக்க ஆழமுடையது. இதிலுள்ள நீரையும் வேறு பக்கம் திருப்ப முடியாது. ஆதலின், இதன்மேல் வைக்கும் பொருள்களை நீரினுள் அழுந்திப்போகாதவாறு அடியேன் என் உடலால் தாங்கிக்கொள்ளுகின்றேன். ஸ்வாமி, என்மீது சேதுவை அமைத்து, அதன் வழியாக லங்கைக்குச் செல்லுங்கள்" என்று கூறினான். அது கேட்ட ராமன் மகிழ்ந்து வருணன் மொழிந்த படி, மலைகளைக் கொண்டுவந்து அணையைக் கட்டுமாறு வானரர்களை ஏவியதும், வருணனுக்குச் செல்ல விடை அளித்தார். வருணனும் அருளோடு தன்னிருப்பிடம் சென்றான்.

7. சேதுபந்தனப் படலம்

ராமன் கட்டளைப்படி சுக்ரீவன், வானர மந்திரிகளான ஆஞ்சநேயன் முதலானோருடனும், ஜாம்பவான், விபீஷணன் ஆகியோருடனும் ஓரிடத்தே அமர்ந்துகொண்டு கடலின்மீது அணையை அமைப்பதுபற்றி ஆலோசித்தான். அப்பொழுது சுக்ரீவன், மயன் மகனான நளன் என்ற வானரத் தச்சனை அழைத்துவரச் சொல்லவும், அவனும் அங்கே வந்து சுக்ரீவனை வணங்கினான். சுக்ரீவன், நளனை நோக்கி, "நீ ராமர் கூறியவாறு சமுத்திரத்தின்மீது சேதுவைக் கட்டுதல் நமக்குப் பணி" என்றான். அதனைக் கேட்டதும் நளன், அவனை நோக்கி, "மன்னரே! அவ்வாறே நான் அணையைக் கட்டுகிறேன்; அணைக்கு வேண்டிய கற்பாறைகளைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வரும்படி நம் சேனைகளுக்குக் கட்டளையிடுக" என்று கூறினான். உடனே ஜாம்பவான் பெருங்கற்களைக் கொண்டு வரும்படிச் சேனைகளுக்குக் கட்டளையிட்டுப் பறை சாற்றினான். அக்கட்டளையைக் கேட்ட வானர வீரர்கள் யாவரும் நெடுந் தொலைவிற் போய், அங்கங்கேயுள்ள மலைகளைப் பெயர்த்துக் கால்களால் உருட்டிக்கொண்டும், தலையிலும் தோள்களிலுமாக தூக்கிச் சுமந்துகொண்டும், வாலிற் கட்டி இழுத்துக் கொண்டும் வந்து நளன் கூறிய இடத்தில் ஒரு மலை புதிதாக தோன்றியதுபோலக் குவித்தார்கள்.



அவைகளை வானரர்கள் எடுத்துக் கொடுக்கும்படி செய்து, நளன் தன் ஒரு கையை நீட்டி வாங்கி வருணன் முதுகில் கிடத்திவைத்து, ஒழுங்காகவும் உயரமாகவும் அணையைக் கட்டி மூன்றே நாட்களில் முடித்துவிட்டான். அணையின் அமைப்பு முடிந்ததும் நளன் சுக்ரீவனை அடைந்து, ''அரசே! தங்கள் கட்டளைப்படி நூறு யோசனை நீளமும், பத்து யோசனை அகலமும் உள்ள திருவணை முற்றுப் பெற்றது'' என்றான். அதனைக் கேட்டதும் சுக்ரீவன் மிக்க மகிழ்ச்சியுற்று ராமரிடம் வந்து, ''ஸ்வாமி! தங்கள் திருவுள்ளப்படி சேது கட்டி முடிக்கப் பட்டது. தேவரீர் பார்த்தருளவேண்டும்'' என்று வணங்கிக் கூறினான்.

8. ஒற்றுக் கேள்விப் படலம்

சேதுவைக் கட்டி முடித்தது கேட்டு ராமன் பெருமகிழ் வெய்தி அப்பணியை மேற்கொண்டு அமைத்த நளனை அன்புடன் தன் மார்புறத் தழுவி, அவனுக்கு நல்ல மொழிகள் பல கூறிப் புகழ்ந்துவிட்டு, எல்லோரையும் அழைத்துக்கொண்டு அணையின் அருகே சென்று அதனைப் பார்த்து, ''மிகப் பெரிய கற்களைச் சுமந்துவந்து விசித்திரமான வேலைப்பாடுகளுடன் மூன்றே நாட்களில் அமைத்து முடித்தது அருமை! அருமை!'' என்று வானரர்களைக் கொண்டாடி வருணன் தனக்குக் காணிக்கையாகக் கொடுத்த ஆரத்தை நளனுக்குப் பரிசாக அளித்தான். பிறகு லங்கைக் கரையை அடைய எண்ணிய ராமன் யாவரையும் அணையின்மீது செல்லும்படிப் பணித்துச் சேனைகளுக்கு முன்னே விபீஷணனையும், பின்னே ஆஞ்சநேயனையும் நின்று நடத்திக்கொண்டு வரும்படிக் கூறியதும், அவ்விருவரும் சேனைகளோடு முன்னே செல்லத் தனக்குப் பின்னே லக்ஷ்மணன் தொடர்ந்து வர, மனக்களிப்போடு லங்கை நகரை நோக்கிச் சென்றான்.

வானரர்கள் யாவரும் ஆனந்தம் மேலிட்டு, ஒருவரை ஒருவர் மோதிக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் பற்பல அதிசயிக்கத்தக்க செயல்களைப் புரிந்தவாறு அணையின்மீது நடந்துபோயினர். எம்பெருமானான ராமன்மேல் கதிரவன் வெப்பம் சிறிதும் படாமலிருப்பதற்காகச் சில வானர வீரர்கள், தாம் முன்னரே பற்றி ஈர்த்துக் கரங்களில் பிடித்திருந்த சந்தன மரங்களையும், இலைகள் அடர்ந்த சுரபுன்னை மரங்களையும் உயர்த்திக் குடையாக ஏந்திச் சென்றார்கள். மற்றும் பல

வானரங்கள், அம்மரங்களின் கிளைகளைப் பிடித்துக்கொண்டு விசிறிபோல வீசிக் குளிர்ந்த காற்று வீசும்படிச் செய்தார்கள். வானரர்களின் இவ்விதச் செயல்களைக் கண்டு வியந்து கொண்டவாறு ராமன், தன் துணைவர்களுடனும் சேனைகளுட னும் சேதுவின்மீது நடந்து சென்று கடலைக் கடந்து லங்கை நகர்க் கரையை அடைந்தான்.

அவ்வாறு, ராமனுடன் யாவரும் லங்கைக் கரையைக் கண்டு இறங்கியதும், அந்த நகரை நெருங்கியுள்ள சுவேல மலையில் போய்த் தங்கினர்கள். அப்பொழுது ராமன், நீலனை நோக்கி, ''நாமும் சேனைகளும் வசிப்பதற்கான விடுதிகளை நீ விரைவில் உண்டாக்குவாயாக'' என்று கட்டளை இட்டான். அவன் அக்கட்டளையை நளனுக்குக் கூறினன். உடனே நளன், தன் தந்தையான மயனும் நாணும்படி அவரவர்களுக்கு ஏற்பக் கூடாரங்களை அமைத்துவிட்டு, அம்மலையின்மீது ராமன் தங்கியிருப்பதற்கு அழகிய பர்ணசாலை ஒன்றையும் கட்டி முடித் தான். யாவரும் தங்களுக்குரிய கூடத்திற் போய்ச் சேர்ந் தனர். அத்தருணத்தில் சூரியன் மறையச் சந்திரன் வானத்தில் தோன்றினன்.

இக்காலத்தில், லங்கை நகரத்தில் இருந்த ராவணன், எண்ணிறந்த வானர வீரர்களை அழைத்துக்கொண்டு, ராம னும் லக்ஷ்மணனும் சமுத்திரத்தைத் தாண்டி நகரத்தினருகே வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்து, அவர்களுடைய வலிமை யையும், வானரர்களின் அளவையும் அறிந்துவரும்படி இரண்டு அரக்க ஒற்றர்களை அவர்களிடத்திற்கு அனுப்பினன். அவர்கள் குரங்குகளைப்போல் வடிவங்கொண்டு வானர சேனை களின் இருப்பிடத்தை அடைந்து, அவற்றினுள் இரகசியமாய்ப் புகுந்து, வானரர்களின் அளவை மதிப்பிட்டுக்கொண்டிருந்தார் கள். அச்சமயத்தில், சேனைகளைக் காணவந்த விபீஷணன், குரங்கு வடிவத்துடன் மற்றக் குரங்குகளோடு திரிந்துகொண் டிருந்த அரக்கர் இருவருடைய சூதை அறிந்ததும், அவர்களைப் பிடித்துக் கைகளால் குத்தி மோதி, கொடிகளால் இறுகக் கட்டி அப்படியே ராமனிடம் இழுத்து வந்து நிறுத்தி, ''உளவு அறிய வந்த கள்வர்கள் இவர்கள்'' என்று தெரிவித் தான். அதனைக் கேட்ட ராமன், அவர்கள் விரோதியால் அனுப்பப்பட்டு, நமக்குக் கெடுதி செய்ய வந்தவர்கள் என ஐயுருது இவர்கள் வானரர்களேயாவர்; பகைவர்களுக்கு இணங்கிக் குற்றம் செய்திருக்கிறார்கள் என எண்ணி, ''நம்மைச் சரணடைந்த வானரர்களைச் சார்ந்தவர்களாயிருப்பதால், இவர்க ளைத் துன்பத்திற்குட்படுத்தாமல் விட்டு விடுவாயாக'' என்றான். உடனே விபீஷணன், ''இவர்கள் உண்மையில் குரங்கினத்தைச்

சேர்ந்தவரல்லர்; ராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள்; 'இவன் சுகன்; இவன் சாரணன்'' எனக் குறிப்பிட்டுக் கூறினான். அவ்வஞ்சகர்கள் ராமனை நோக்கி, ''ஸ்வாமி, நாங்கள் உண்மையில் குரங்கு இனத்தைச் சேர்ந்தவர்களே; வானரர் வலிமையை எண்ணி இவர்களைப் போரில் வெல்லமுடியாது' எனக் கருதிய இந்த விபீஷணன், வஞ்சக மனத்துடன் தங்களிடம் அடைக்கலம் புகுந்ததுபோல நடித்து, வானரர்களாகிய எங்களைக் கொன்று தங்களுடைய சேனையின் அளவைக் குறைத்து வருகிறான். தாங்கள் இவனுடைய கபட வார்த்தைகளை நம்பாமல் எங்களைக் காக்கவேண்டும்'' என்றார்கள்.

அதுகேட்ட விபீஷணன், ''ஸ்வாமி! இவர்கள் கூறுகிறபடி வானரர்கள் அல்லர் கொடிய அரக்கர்களே; இவர்களுடைய உண்மை உருவை இதோ பாருங்கள்'' என்று ஒரு மந்திரத்தை உச்சரித்தான். ஒரு கணத்தில் மாய உருவம் மாறி இருவரும் பழைய அரக்கர்களாகிவிட்டனர். ராமன் அக்கொடியவரைப் பார்த்து நகைத்து, ''நீங்கள் வஞ்சகமாய் வந்து கெடுதியைச் செய்தாலும் நான் உங்களைக் கொல்லுகிறதில்லை. ஆதலின், நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்பதைக் கூறுங்கள்'' என்று கேட்டான். அதற்கவர்கள், ''நாங்கள் ராவணன் கட்டளைப்படி இங்குள்ள உளவுகளை அறிந்துகொள்ளத்தான் வந்தோம்'' என்றார்கள்.

ராமன், ''அப்படியானால் நான் உங்களைச் சிறை செய்வதும் இல்லை. உங்கள் ராவணன் விருப்பப்படியே நீங்கள் அவனைக் கண்டு, லங்கை அரசுடன் எல்லாச் செல்வங்களும் என்னால் விபீஷணனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும், நான் கடலில் அணையிட்டு, மிக்க வீரமுள்ள வானரச் சேனைகளுடன் வந்திருப்பதாகவும், ராவணனைப்பற்றி ஏதும் தெரியாதிருந்ததால்தான் அவன் இதுவரை உயிரோடிருப்பதாகவும், ஜடாயுவைக் கொன்றதனாலும், சீதையை வஞ்சகமாக அழைத்து வந்ததாலும், அவன் நிமித்தமாக அரக்கர் குலத்தையே அழித்துப் பழி தீர்க்க நான் வந்திருக்கிறேன் என்றும் நான் கூறியதாகச் சொல்லுங்கள்'' என்று அவர்களுக்குத் தெரிவித்து, ''இவ்விருவரையும் துன்பம் செய்யாது நம் விடுதிகளுக்கப்பால் கூட்டிப்போய் விட்டு வாருங்கள்'' என வானரத் தலைவர்களுக்குக் கட்டளை இட்டான். அவ்வாறே அவர்கள், அரக்கர்களைக் கொண்டுபோய் விட்டு வந்தார்கள். அந்த ஒற்றர்களும் ஓட்டம் பிடித்தனர்.

அப்பொழுது ராவணன், ராமன் முதலியோர் போர் இயற்றும்வண்ணம் வந்திருப்பதால், தான் இனிச் செய்யத் தக்கவைகளை ஆலோசிப்பதற்காக, அந்த இரவு நேரத்தில்

தன் கருத்திற்கு இசைந்த சில மந்திரிகளுடனே சபை கூட்டி ஆலோசிப்பானாயினன். அவன் மந்திரிகளை நோக்கி, ''அறிவிலும் வீரத்திலும் சிறந்தவர்களே! இப்பொழுது ராமன், லக்ஷ்மணன் என்ற அந்த மனிதர்கள், அநேக குரங்குகளுடன் நம்முடன் போர் செய்ய எண்ணி நம் நகரத்தருகே வந்துள்ளார்கள்; ஆதலின், நாம் இனிச் செய்யத்தக்கவை யாவை? உங்களுடைய கருத்தைக் கூறுங்கள்'' என்றான்.

அவன் கூறியதைக் கேட்டதும் அவன் தாயைப் பெற்ற பாட்டனான மாலியவான் என்பவன் ராவணனை நோக்கி, ''அப்பா ராவணா! அந்த ராமன் என்பவன் எய்த அம்புகளால் வருணன் அடைந்த துன்பத்தையும், அவன் கடலின்மீது அணையைக் கட்டி முடித்து வானரர்களோடு நகருக்கருகில் வந்திருப்பதையும் எண்ணும்பொழுது என் நெஞ்சம் நடுங்குகின்றது. முன்னே ஒரு குரங்கு இந்நகருக்கு வந்து செய்துவிட்டுப்போன அட்டூழியங்களை நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம். அவ்வாறிருக்க இனியும் நாம் அவர்களுடைய வலிமையைப்பற்றியும், அவர்களுடைய குரங்குச் சேனைகளைப் பற்றியும் ஆலோசிக்க என்ன இருக்கிறது?'' என்று சொன்னான். பாட்டனுடைய கருத்தைக் கேட்டதும் ராவணன், பற்களைக் கடித்து உதடு துடிக்க அவனை வெறுத்துப் பார்த்து, ''மாலியவானே! உனக்கு அவர்களிடத்தில் அச்சம் இருந்தால் அந்த விபீஷணன் போனதுபோல் நீயும் அந்த நரர்களிடத்திற்கே சென்றுவிடு'' என்று சினத்துடன் கூறினான். இவ்வாறு ராவணன் தன்னைக் கடித்து கூறலும் மாலியவான், 'புன்மதியினை உடையோருக்குப் புத்தி புகட்டுவதால் யாதும் பயன் இல்லை' என்று கருதி ஏதும் பேசாதிருந்துவிட்டான்.

அப்பொழுது சேனைத் தலைவன் எழுந்து மாலியவானை நோக்கி, ''ஐயா! அந்த அற்ப மானிடர்களை நீர் உயர்த்திப் பேசுகிறீர்; வருணனை வென்று இந்தச் சிறிய கடலைத் தாண்டி வந்த அவர்களை மேன்மையாகக் கருதும் நீர், எண்திசைக் காவலர்களையும் வென்ற நம் லங்காதிபருடைய வல்லமையைச் சிறிது எண்ணிப் பார்த்தீரா? அவர்களுக்கு அழிவு காலம் வந்ததாலேயே, அந்த மானிடர்களையும் வானரங்களையும் விதி இங்கே இழுத்துக்கொண்டு வந்திருக்கின்றது'' என்று கூறினான். அத்தருணத்தில், ராமன் முதலியோரிடமிருந்து, உயிர் பிழைத்தால் போதும் என்று விடுபட்டு ஓடிவந்த தூதுவர்களான சுகனும், சாரணனும், அஞ்சி நடுங்கிக்கொண்டே ராவணன் முன்னர் வந்து நின்று, தாங்கள் அங்கே கண்ட காட்சிகளையும், தங்களைக் காட்டிக் கொடுத்த விபீஷணன் செய்கையினையும் அறிவித்ததுடன், ராமன் சொல்லி அனுப்பிய எல்லாச் செய்திகளையும் அவனுக்குக் கூறினார்கள்.

9. லங்கைகாண் படலம்

ஒற்றர்கள் கூறியவற்றைக் கேட்டதும், ராவணனுடைய சேனைக் காவலன் ராவணனை நோக்கி, ''லங்கைத் தலைவரே! விற்களை ஏந்திய அந்த மனிதர்கள் கடல் நீரை அடைத்து அணைகோலி, நம்முடைய ஊருக்கருகே வந்துள்ளார்கள் என்றால், இனி நாம் ஆலோசிக்கத்தக்கது என்ன இருக்கின்றது? நாம் அந்தச் சீதையைக் கொண்டுபோய் அவர்களிடத்து விட்டுவிடுவ தென்றாலும், அப்படிச் செய்வது நம் வலிமைக்கும் வீரத்திற்கும் கேவலமாகும். ஆதலின் நாமும் சென்று எதிர்த்து அந்த மனிதர்களையும் வானரங்களையும் கொன்றுவிட்டு வருவதன்றி, வேறொன்றையும் இனி யோசிப்பதற்கில்லை. நீர் எனக்கு உத்தரவு கொடுத்தீரானால், நான் சென்று அவர்களை வென்று வருவேன்; ஆயிர வெள்ளம் அரக்கர் சேனை உள்ளது; அது அழிவதாயினும் நூறு கல்பங்கள் வேண்டும்; மேலும் தாங்கள் கோபித்துப் போருக்கெழுதலைக் கண்ட மாத்திரத்தில் குரங்குகள் சிங்கத்தைக் கண்ட நாய்க் கூட்டங்களைப்போல அஞ்சி ஓடாமல் வேறு என்ன செய்யமுடியும்?'' என்றான்.

ராவணன் கருத்திற்கு இசையும்படி சேனைக் காவலன் உரைத்தவற்றைக் கேட்ட மாலியவான், ராவணன்மீது தனக் குள்ள அன்பினால் மீண்டும் ராவணனைப் பார்த்து, ''அப்பா ராவணா! நம்முடன் சண்டை செய்ய வந்திருப்பவரை நீ மனிதர் என்று கேவலமாகப் பேசுகிறாய். உண்மையில் அவர் திருமாலே யாவார். அவருக்கு இளையவரை ஆதிசேஷன் என்று அறிந்து கொள். வானரர்களாக வந்தவர்கள் யாவரும் தேவர்கள். அவர்களுள் வாலியையும் அவன் மகனையும் இந்திரன் தோற்றம் என்றும், நீலனை அக்னி என்றும், ஆஞ்சநேயனை, வாயு சிவன் ஆகியோரின் கூறுகளையுடையோன் என்றும் கேள்விப்படுகிறேன். அந்த ஆஞ்சநேயனே, அடுத்துவரும் கல்பத்தில் பிரம்மதேவனாகப் போகின்றான். இந்த லங்கையை இதுவரை காத்துவந்துள்ள தேவதையான லங்கிணி, ராம தூதனால் உதைபட்டு ஓடிவிட் டாள். அதனாலேயே நம் நகரம் அழிந்ததென்றும், இப்பொழுது போர் மூளத் தொடங்கியதென்றும் யாவரும் பேசிக்கொள்ளு கிறார்கள். என்னுடைய குலம் முன்காலத்தில் அந்தத் திருமாலி னாலேயே அழிந்துபோயிற்று. இப்பொழுதும் அவரால் நமக்கு ஆபத்து நேரும் என்று அஞ்சுகிறேன்; நீ என் பெயரன் என்ற பாசத்தால், பின் விளையும் நாசத்தை எண்ணி இவற்றை நான் உனக்குக் கூறினேன்; இனியேனும் சீதையை விட்டுவிடுவாயானால் நீ துன்பமில்லாது இருக்கலாம்'' என்று கூறினான். ''கெடுமதி கெடுங்காலத்தில் தோன்றும்; நன்மதி நற்காலத்திலே தோன்றும்'' என்றபடி ராவணனுக்கு அழிவுக் காலமானதால் மாலியவான்

கூறியவற்றைக் கேட்டும் அவனது அறிவு தெளிவடையவில்லை; அதனால் அவன் தன் பாட்டனை நோக்கி, ''நீ கூறிய மற்ற வரலாறுகளெல்லாம் ஒரு புறம் இருக்க, அந்தச் சிவனும் திருமாலும் எந்தத் தோற்றத்தோடு வந்தால்தான் என்ன? அவர்களைக் காற்றிற் பறக்கும் பஞ்சுபோலப் பறக்கடித்து ஓட்டிவிடுகிறேன் பார்'' என்று சினந்து கூறினன்.

அப்பொழுது அந்த இரவு நீங்கலும் சூரியன் தோன்ற ஆரம்பித்தான். அதுகண்ட ராமன் முதலியோர், லங்கை நகரத்தைப் பார்க்க விரும்பித் தாங்கள் இருந்த மலைச் சிகரத்தின்மீது ஏறி நின்றார்கள். ராமன், தன் கண்கண்ட தூர மட்டும் லங்காபுரியைப் பார்த்துப் பார்த்து வியந்து தம்பியை நோக்கி, ''லக்ஷ்மணா! அங்கே தோன்றுகிற லங்கையைப் பார்; அதன் ஒவ்வொரு பகுதியிலும் விளங்கும் தெருக்களின் ஒழுங்கையும் அழகையும் நோக்கினல், சுவர்க்க உலகமும் இதற்கு இணையாகாது போலன்றோ தோற்றுகிறது! மற்றும் இதிலுள்ள மதில்களையும், அவற்றைச் சுற்றியிருக்கின்ற அகழியினையும் பார்ப்பாயாக'' என்று சொல்லி, அதிலுள்ள பொன்மயமான ஒளி வீசும் மாளிகைகளையும், பலவிதமான சிறப்புக்களையும் அவனுக்குக் காட்டினன். அவன் எல்லாவற்றையும் பார்த்து அதிசயித்தவாறு நின்றுகொண்டிருந்தான். அவ்வேளையில் நகரத்திலிருந்த ராவணனும், வானர சேனைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலால், பல அரக்கர்களுடனே கோட்டையின் வடக்குக் கோபுரத்தின் மீது ஏறி வந்து நின்றான்.

10. ராவணன் தானைகாண் படலம்


அங்ஙனம் கோபுரத்தின்மீது ஏறி வந்து நின்ற ராவணன், தனக்கெதிரேயுள்ள சுவேலமலையின்மேல் நின்ற ராமனை, அவன் திருமேனியின் நிறத்தினல் அறிந்துகொண்டு, தன்னுடைய இருபது நயனங்களாலும் பார்த்தான். கண்டதுமே அவனுடைய வாய்கள் பத்தும் மடிக்கமுடியாமல் துடித்தன; கண்கள் இருபதிலும் தீப்பொறிகள் பறந்தன; நெஞ்சில் சினமெழுந்து பொங்கியது; இடப்பாகத்திலுள்ள கண்களும் தோள்களும் துடித்துக்கொண்டன; பத்துச் சிரங்களிலும் விளங்கிய மணிமகுடங்கள் அசைவுற்றன; இத்தகைய துர்நிமித்தங்கள் உண்டாக அந்த ராவணன், ராமனைப் பார்த்துத் தெரிந்துகொண்டவுடன் அருகிலிருந்த சாரணனை விளித்து, ''நான் ராமனென்ற மனிதனை அவன் வடிவத்தால் அறிந்தேன். மற்றவர்களையும் நீ இன்னின்ன

ரென்று எனக்குக் காட்டு'' என்று உக்கிரத்தோடு மொழிந்தான். உடனே சாரணன் ராமனுடன் மலையின்மீது நின்றுகொண்டிருந்த லக்ஷ்மணன், சுக்ரீவன், அநுமன், ஜாம்பவான், நீலன், நளன், முதலிய யாவரையும் தனித்தனி ராவணனுக்குக் காட்டி, இன்னின்னார் என்று தெரிவித்தான். பிறகு மலையின் அடிவாரத்தில் நின்றிருந்த கடல்போன்ற வானர சேனைகளையும் ராவணனைப் பார்க்கச் செய்து, ''ஐயா லங்காதிபரே! இந்த வானர சேனைகளின் அளவை எவராலும் கூறமுடியாது'' என்று சொன்னான். அவன் அவ்வாறு சொன்னதைக் கேட்ட ராவணன் சினச் சிரிப்புடன் அவனை, ''சாரா! காய்கனிகளைத் தின்று காட்டில் திரியும் இந்த அற்பக் குரங்குக் கூட்டங்களைப் புகழ்கிறாயோ? பான்கள் கூட்டம் கூட்டமாக இருப்பினும் சிங்கத்தை என்ன செய்ய முடியும்?'' என்றான்.

11. மகுடபங்கப் படலம்

அப்பொழுது ராமன், அருகில் நின்ற விபீஷணனை நோக்கி, ''நம் வலிமையைக் காண்பதற்காக லங்கை மாநகரினின்றும் கோபுரங்களிலும் மாடங்களிலும் நின்று பலர் பார்க்கிறார்கள்; நீ அவர்களை இன்னின்னார் என்று எனக்குக் காட்டுவாயாக'' என்று கூறினான். விபிஷணன் அவ்வாறே ராமனுக்குக் காண்பிக்கத் தொடங்கி, முதலில் அங்கு நின்றவருள் ராவணனைச் சுட்டிக் காட்டி, ''அதோ பாருங்கள்; தேவமாதர்கள் சிலரின் நடுவில், சிறப்பான தோற்றத்தோடு நிற்பவன்தான் ராவணன்'' என்றான். வேறொரு வார்த்தை சொல்லுமுன்னமே சுக்ரீவன், கண்களில் நெருப்பெழக் கோபித்து, முன்பு சூரியனைக் கனியென்று கருதும் அவன் மேற்பாயலுற்ற அநுமனைப் போன்று, குபீரென்று பாய்ந்து தாவிக் கோபுரத்து உச்சியில் நின்றிருந்த ராவணன் எதிரிற் போய் திடுமென நின்றான். அப்பொழுது, கருணையங் கடலான ராமனைப் பார்த்தவாறு, ராவணனைச் சூழ்ந்து நின்றிருந்த அரம்பை மாதர் பலரும், குன்றிடை வீழ்ந்த இடி ஓசையைக் கேட்டு அஞ்சி ஓடுகின்ற மயிற் கூட்டங்களைப்போல ராவணனை விட்டு ஓடிப் போயினர்.

அவ்வாறு சுவேல மலையினின்று தாவி ராவணன் எதிரில் நின்ற சுக்ரீவன், நீலமலையின் முன்னர் வெள்ளிமலை நிற்பது போல் காணப்பட்டான். ராவணன் அவனை நோக்கி, ''நீ யார்? எதன் பொருட்டு இங்கே வந்தாய்?'' என்று கேட்டான். அதற்கு அவன் ஏதும் சொல்லாமல், ராவணனுடைய மார்பில் தன் இரு



கரங்களாலும் ஓங்கிக் குத்தினன். அதனுல் ராவணன் சினமடைந்து, ஒரே காலத்தில் பத்துத் திசைகளிலிருந்து ஒலிக்கும் ஒலியைப்போல உருமி, தன்னுடைய இருபது கைகளாலும் சுக்ரீவனை இடிஇடித்ததுபோல அடித்தான். காலால் எற்றினன். அப்பொழுது சுக்ரீவன், அவனுடைய தலைகளிலும் முகததிலும் காலால் உதைக்கவும், அவன் சுக்ரீவன் கால்களை அப்படியே பிடித்து அவனைத் தூக்கிச் சுழற்றிக் கீழே போட்டு மிதித்தான். சுக்ரீவன் விரைவில் துள்ளி எழுந்து ராவணனைக் கீழே தள்ளி அழுத்திக்கொண்டு அவன் வாய்களை நோக்கிக் குத்தி அவற்றினின்று ஒழுதகின்ற உதிரத்தை வாரி வாரிக் குடித்தான்.

இவ்வாறு இவர்களுக்குள் சண்டை நிகழ்ந்துகொண்டிருக்க, ராமன் அதனை அறிந்து, ''ஆ! என் உயிரனைய சுக்ரீவா! உன்னைக்கொண்டே நான் பல நன்மைககளையும் அடைய எண்ணியிருக்க, எனக்கு அறிவிக்காமல் நீ முன்கோபத்தால் தனியே பாய்ந்து அரக்கர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டாயே! நான் என்ன செய்வேன்? ஐயோ! நீ திரும்பி வராவிட்டால் என் உயிர் நீங்கிவிடுமே. அது கண்டு மற்றவர்களும் மாய்வார்களே! பகைவர் செருக்கடைவார்களே! எழுபது வெள்ளம் வானரர்களுள் ஒருவரும் குறையாமல் நான் வெற்றியடைந்து அயோத்திக்குச் சென்ருலும் உன்னைப் பிரிந்த இத்துயர் தீருமோ? இப்படியும் செய்வாயோ?'' என்று பலவாறு சொல்லிப் புலம்பினன். அப்பொழுது சிறிதும் இளைக்காமல் ராவணனுடன் சண்டை செய்துகொண்டிருந்த சுக்ரீவன், அவனுடைய மகுடங்களிலிருந்த உயர்ந்த ரத்தினங்கள் பத்தையும் பறித்துக்கொண்டு, மிக வேகமாய்ப் பாய்ந்துவந்து ராமனுக்கு முன்னே குதித்து, அவனுடைய திருவடிகளில் ரத்தினங்களைப் பாதகாணிக்கையாக வைத்து வணங்கி நின்ருன்.

ராமன் மகிழ்ந்து அவனைத் தழுவிக்கொண்டு அவனை நோக்கி, ''தம்பி, சுக்ரீவா! என் மனம் கலங்கும்படி நீ இப்படித் துணிந்து தனிமையிற் செல்லலாமா? ஏதேனும் உனக்கு அபாயம் நேர்ந்தால் என் நிலைமை என்னவாகும்?'' என்று அன்பு கனிய மொழிந்தான். சுக்ரீவன் தன் அவசரச் செயலுக்கு நாணி நிலம் நோக்கி, ''ஸ்வாமி! பாவியான ராவணனை யமனுலகுக்கு அனுப்பிவிடவேண்டும் என்ற கோபம் எனக்கு உண்டாயிற்று. அதனைத் தணிக்கமுடியாத நான் அவன் மீது பாய்ந்தேன். எனினும் என்னல் அஃது இயலவில்லை.''

''காட்டிலே கழுகின் வேந்தன் செய்தது காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனுர் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலே னல்லேன் இன்று கண்டும்அக் கிளியன் ...
மீட்டிலேன் தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் வெறுங்கை 153, 17.''

''நூல்வலி காட்டுஞ் சிந்தை நும்பெருந் தூதன் வெம்போர்
வேல்வலி காட்டி னூர்க்கும் வில்வலி காட்டி னூர்க்கும்
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்கு மற்றென்
கால்வலி காட்டிப் போந்தேன் கைவலிக் கவதி யுண்டோ ?''

என்று கூறித் தலைகுனிந்து நின்ருன்.

இவ்வாறு சொல்லிய சுக்ரீவனுடைய பெருந்தன்மையை வியந்த விபீஷணன் அவனை நோக்கி, ''அன்பரே! ராவணனுடைய மகுடங்கள் அவன் தலைகளைக் காட்டிலும் சிறந்தவை. அத்தகைய மகுடங்களின் மணிகளைப் பறித்துவந்த நீர், ஏதோ அற்பமான காரியத்தைச் செய்துவந்ததாகக் கூறுகின்றீர். அது சரியன்று. நீர் அப்படிப் பறித்துவந்ததால், அவன் கீர்த்தியை வேரோடு பறித்து வந்தவராகி விட்டீர்; இச்காரியம் வேறு எவராலும் செய்யமுடியாது. இச்செய்கையால் அவனை வெல்வதற்கு அடிகோலிவிட்ட மாதிரியாயிற்று. இதனிலும் வீரச் செயல் யாது?'' என்று புகழ்ந்தான். ராமனும் விபீஷணன் கூறியதை ஆமோதித்து, ''அஃது உண்மையே. சுக்ரீவனுடைய இச்செயல், வேறு யாவராலும் செய்தற்கு அருமையாகும்; சுத்த வீரர்களாயிருப்போர் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளார்; ஆதலால் இந்தச் சுக்ரீவனும் தான் செய்த காரியத்தை அற்பமென்று உரைக்கிருன்'' என்று சொன்னுன். அச்சமயத்தில் சூரியன் அஸ்தமித்தான். யாவரும் மலைச் சிகரத்தினின்று இறங்கித் தத்தம் இருக்கையை நாடிப் போனுர்கள்.

12. அணி வகுப்புப் படலம்

உயர்ந்த ஜீவ ரத்தினங்களை இழந்துவிட்ட நாகத்தைப் போல மிகவும் துக்கித்து வெட்கத்தோடு ராவணன் மெல்லிய மலர்ப்படுக்கையில் கிடந்தான்; எவருடனும் ஏதும் பேசாமல் நீர்கூட அருந்தாது கவலையுற்றிருந்தான்.

அப்போது சார்த்தூலன் என்ற ஒற்றன் ஓடோடியும் வந்து ராவணன்முன் நின்று வணங்கினுன். அவனைக் கண்டதும் ராவணன், ''நீ அறிந்து வந்தது என்ன சொல்?'' என்ருன். அதற்கவன், அந்த மானிடர்களுடைய கட்டளைப்படி பதினேழு வெள்ளம் வானர சேனைகளுடன் ஆஞ்சநேயன் நம்முடைய கோட்டையின் மேற்கு வாயிலில் நிற்கிருன்; அங்கதன் என்பவன் பதினேழு வெள்ளம் சேனைகளுடன் தெற்கு

வாயிலில் நிற்கிறான்; நீலன் என்ற வானரன் பதினேழு வெள்ளம் சேனைகளுடன் கிழக்கு வாயிலில் நிற்கிறான்; மற்றும் பதினேழு வெள்ளம் சேனைகளுடன் சுக்ரீவன், ராமன், லக்ஷ்மணன் ஆகியோர் வடக்கு வாயிலில் நிற்கிறார்கள்; இவை அல்லாது, இரண்டு வெள்ளம் சேனைகள் மற்றப் படைகளுக்கு உணவு முதலியன தேடிக்கொண்டு வந்து கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; தங்களுடைய தம்பியான விபீஷணர், ஒவ்வொரு கோட்டை வாயிலாகச் சுற்றிப் பார்த்து அங்கங்கே உள்ள நிலைமையை அறிந்துவந்து சொல்ல நியமிக்கப்பட்டிருக்கிறார்'' என்று கூறினான்.

சார்த்தூலன் கூறியவற்றைக் கேட்ட ராவணன் கண்களில் தீ எழும்பும்படி கடுஞ்சினம் கொண்டு, ''நாளைக்கே அவர்கள் எல்லோரையும் யமனுலகு அனுப்பிவிடுகின்றேன்'' என்று பற்களை நறநறவென்று கடித்து உரப்பினான். பின்னர் மலர்ப்பள்ளி நீங்கிப் பளிங்கால் இயன்ற ஆலோசனை மண்டபத்தை அடைந்து தன் கருத்திற்கிசைந்த மந்திரிகளை வரவழைத்துத் தன் அருகே அமரச் செய்தான்; பின்னர் அவ்விடத்திற்குப் பத்துக்கோடி பேய்க் கணங்களைக் காவலாக வைத்து அவர்களைப் பார்த்து, ''குரங்குப் படைகள் நம்முடைய கோட்டையைச் சுற்றிலும் நின்றுகொண்டிருக்கின்றன; நாம் இனிச் செய்யவேண்டியதைக் கூறுங்கள்'' என்று வினவினான். அவ்வாறு ராவணன் கேட்டதும் நிகும்பன் மிகுந்த சினத்துடன் அவனை நோக்கி, ''நம்மிடம் மிக்க வலிவுள்ள சேனைகள் ஆயிரம் வெள்ளம் உள்ளன; குரங்குகளோ எழுபது வெள்ளம்; அரக்கர் போரென எழுந்தபோது தம் கைப்படை யாவும் போட்டுத் தேவர்களே நம்மைத் தொழுது ஓடுவர் எனினும் வெறுங்கையுடன் வந்துள்ள குரங்குகள் நம்மை வெல்லுமோ?'' என்று மனம் பொங்கிக் கூறினான். இக்கூற்றைக் கேட்ட மாதுலத் தலைவன், மாலி, ''வேதனைக் காயம் வேரோடும் கெடுத்தது; அன்று லங்கையிற் புகுந்து அழித்து எரியூட்டிச் சென்ற குரங்கின் கையல் சக்கரமிருந்ததோ? வில் இருந்ததோ? அம்பு இருந்ததோ? அல்லது கிரியென விளங்கும் ராவணன் மணிமகுடத்தின் மணிகளைப் பறித்துச் சென்ற குரங்குக்குச் சூலமும் வாளும் உண்டோ'' ஆயுதங்கள் அற்ற இக்குரங்குகள் செய்தன இவையென்றால் பல உயர்ந்த அஸ்திரங்களையுடைய ராமனும் லக்ஷ்மணனும் நம்முடன் யுத்தம் செய்யும் காலத்தில், நமக்கு எவ்வகைத் தீங்கு விளையுமோ தெரியவில்லை. ஆதலால், அவர்களுடைய சீதையைக் கொண்டுபோய் அவர்களிடமே விட்டுவிட்டு, அடைக்கலம் அடைவதல்லாமல் நாம் பிழைப்பதற்கு வேறு வழியில்லை'' என்றான்.

அப்பொழுது ராவணன், அவனை மாமன் என்றும் உணராமல் வாயில் வந்தவாறு திட்டி, ''நம்முடைய வலிமையை அறியாது பேசுகின்ற நீ, உன் வாயை மூடு'' என்று சினந்துகொண்டான். பிறகு அவன் தன் தானைத் தலைவனாகிய பிரகஸ்தனை நோக்கி, ''கொடிய காலகேயர்களை வெற்றி கொண்ட தலைவனே, இருநூறு வெள்ளம் சேனைகளுடன் கிழக்கு வாயிலைக் காத்து நிற்பாய்'' என்றான்; பிறகு மகோதரனை நோக்கி, ''நீ மகாபாரிசுவனைத் துணையாகக் கொண்டு, இருநூறு வெள்ளம் சேனைகளுடன் தெற்கு வாயிலைக் காத்து நிற்பாய்'' என்றான். இந்திரசித்தை நோக்கி, ''முன்னம் அநுமன் வலிமையை உணர்ந்தவன் நீ. ஆதலின் இருநூறு வெள்ளம் சேனைகளுடன் சென்று மேற்கு வாயிலை அடைக'' என்றான். விருபாட்சனை நோக்கி, ''நீ நம் மூலச் சேனையோடு போய், மற்ற மந்திரிகளையும் சேர்த்துக்கொண்டு நகரைக் காவல் செய்க'' என்றான். இவ்வாறு யாவருக்கும் கட்டளையிட்டுப் பின்னர் தான் இருநூறு வெள்ளம் சேனையுடன் வடக்கு வாயிற் சென்று போர் புரிய ஆயத்தமானான்.

இவ்வாறு இருவிதப் படையினரும் போர் செய்யும் விருப்பத்துடன் அன்றைய பொழுது விடிவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, சற்று நேரத்தில் இரவு நீங்கி சூரியன் உதயமானான். ராமனுடைய கட்டளைப்படி வானர சேனைகள் யாவும் தங்களுக்கு நியமித்த இடங்களில் போய் நின்று, நகரை வளைத்துக்கொண்டு ஆரவாரித்தன. சூரியன் மைந்தனான சுக்ரீவனும், லக்ஷ்மணனும் தங்களுடைய இடமான வடக்கு வாயிலை நோக்கிச் செல்லவும், அவர்கள் பின்னே, வானவர்கள் யாவரும் தொழுது வாழ்த்த ராமனும் எழுந்து சென்றான்.

13. அங்கதன் தூதுப் படலம்

ராமபிரான், தன் இளவலுடன் சுக்ரீவனையும் சேர்த்துக் கொண்டு கோட்டையின் வடக்கு வாயிலிற் ராவணன் வரவை எதிர்நோக்கி நின்றான்; அச்சமயத்தில் ராமன் விபிஷணனை நோக்கி, ''தம்பி! நாம் இப்பொழுது போர் தொடங்குவதற்கு முன் 'சீதையை விடுதியோ! அல்லது போர் செய்து மாளுதியோ' என்று ராவணனிடம் சென்று இரண்டிலொன்றைக் கேட்டு வரும்படி ஒரு தூதனை அனுப்பக் கருதுகின்றேன். அதுவே போர் முறையாகும், நீதியும் ஆகும்'' என்று கூறினான். அது

கேட்ட விபீஷணன், ''அவ்வாறு அனுப்பிக் கேட்டுவருவது நியாயந்தான்'' என்று கூற சுக்ரீவனும், அதுவே அரசர்களுக்கு அடுத்ததாகும் என்று தன் கருத்தையும் தெரிவித்தான். இவர்கள் சொற்களைக் கேட்டதும் லக்ஷ்மணன் ராமனை நோக்கி, ''அண்ணு! அவன் சீதாபிராட்டியாரைச் சிறை வைத்தவன்; தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் துன்பம் செய்தவன்; நமக்குத் தந்தை போலிருந்த ஜடாயுவின் உயிரைப் போக்கியவன்; அச்சண்டாளன் செய்த கொடுமைகள் கணக்கில; இப்பொழுது, அத்தகையவன் அஞ்சி, தேவியாரைக் கொண்டுவந்து விட்டுவிடில் தாங்கள் அக்கொடியவனுக்கு உயிர் அருளவேண்டியிருக்கும். அப்போது விபீஷணனுக்குத் தாங்கள் அளித்த உறுதி யாதாவது? நாம் போர் செய்யத்தான் வேண்டும்; அம்பு துரக்கத்தான் வேண்டும்; அவன் இறக்கத்தான் வேண்டும்'' என்ருன்.

லக்ஷ்மணன் உரைகளைக் கேட்ட ராமன் புன்னகையுடன் தம்பியைப் பார்த்து, ''அப்பனே! நான் செய்த சபதங்களை மறக்கவில்லை; அவன் முடியுங்காலமும் நெருங்கிவிட்டது. எனினும், அறிஞர்கள் அமைத்த நீதிகளை நாம் மட்டும் துறந்துவிடுதல் நன்மையாகுமோ? எப்படியும் போர் நடக்கப் போகிறது. ராவணனும் ஒழியப்போகிருன்; ஆதலின் போர் தொடங்குவதன்முன்னர் தூதனுப்பல் முறையாகும்'' என்று சொல்லி அவனை இசையச் செய்தான்.

பிறகு யாரைத் தூதாக அனுப்புவதென எண்ணினன். ராமன், ''அநுமனை அனுப்புவோமாயின், 'இவனை அன்றி இவர்களுக்கு வேறு எவரும் இல்லை போலும்' என்று எதிரிகள் எண்ணுவார்கள். அதனுல் இப்போது அங்கதனை அனுப்வோம். பகைவர் கெடுதி செய்யத் துணியினும் தீங்கின்றி மீளவல்லவன் அவனே'' என்ருன். அங்கதனை நோக்கி, ''புதல்வனே! நீ நமக்கு எதிரியாக உள்ள ராவணனிடம் தூதாகச் சென்று, 'நீ சீதையை விட்டு உன்னுயிரோடு வாழப் போகிருயா? அல்லது உன் தலை பத்தும் சிந்த, இறக்கப் போகிருயா? இவ்விரண்டில் எது உன்னுடைய கருத்து?' என்று கேட்டறிந்து வா'' என்று கூறினுன். அதற்கு அங்கதன், 'ஆஞ்சநேயரைப் போன்று நானும் ராமபிரானுக்குத் தூதனுகப் பெற்றது என் தவப்பயனேயாகும்' என்று அளவிலாக் களிப்புடன், ராமனை நிலத்தில் வீழ்ந்து வணங்கி விடை பெற்று விரைந்து சென்று ராவணன் இருந்த சபாமண்டபத்தை அடைந்து அருகிற்போய் அவன் எதிரே நின்ருன். ராவணன் அவனை உற்றுப் பார்த்துச் சீற்றம் கொண்டு, ''நீ யார்? எதன் பொருட்டு இங்கே வந்தாய்?'' என்று கேட்டான். உடனே அங்கதன், ''நான் எப்பொருட்கும் இறைவராகிய ராமபிரானுடைய தூதன்'' என்று அங்கதன் சொன்னதைக்

கேட்டதும், ராவணன் சிரித்து, "கேவலம் குரங்குகளைச் சேர்த்துக்கொண்டு, சிறிய குட்டை போலுள்ள கடலுக்கு அணைக் கட்டித் தாண்டி வந்து, இனியும் போர் தொடங்காமல் அஞ்சியிருக்கும் அவனா இறைவன்? சரி, அவன் யாராயிருந்தால் என்ன? அவனுக்குத் தூதனாக வந்த நீ யாவன்?'' என வினவினான்.

அதற்கு அவன், ''தேவேந்திரருடைய குமாரரும், தேவர்கள் வேண்ட மந்திர மலையால் கடலைக் கடைந்தவரும், உன்னைத் தன் வாலிற்கட்டித் திசைதோறும் தாவித் திரிந்தவருமான வாலியின் புதல்வன் நான்; என் பெயர் அங்கதன்'' என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்டதும் ராவணன், ''உன தந்தை எனக்கு நெருங்கிய நண்பனன்றோ? மிக்க வீரனாகிய வாலியின் மைந்தனாகிய நீ, ஒரு மனிதனுக்குத் தூதனாய் வந்தது கேவலமல்லவா? தந்தையைக் கொன்றவனுக்கும், கொல்லச் செய்தவனுக்கும் அடங்கித் தொண்டு செய்வது இழிவன்றோ! நல்லது; மேலும் காலம் தாழ்த்தாது என்னிடம் வந்தனை; சீதையைப் பெற்றேன்; உன்னையும் என் பிள்ளையாக ஏற்கிறேன். உனக்கு வானரர் தலைமையை நானே கொடுத்தேன். நாளை இந்த மனிதர்கள் என் கையால் மாண்டுபோவார்கள். உன் தந்தையின் கிஷ்கிந்தை அரசை உனக்கே திரும்பவும் கொடுத்து, நெடுங்காலம் அரசு செய்யும்படி நானே உனக்கு மகுடத்தைச் சூட்டுகிறேன். இனி நீ என்னிடத்திலேயே இருப்பாயாக'' என்றான். ராவணன் கூறியவற்றை எல்லாம் கேட்ட அங்கதன் சிரித்து, அவனை நோக்கி, ''இங்கிருப்போர் யாவருக்கும் முடிவு காலம் நெருங்கிவிட்டதென்பதை அறிந்தே உன் தம்பி விபீஷணன் உங்களெல்லோரையும் விட்டு எங்களிடம் வந்து அடைக்கலமாயினான். இதனை அறியாத நீ வாய்க்கு வந்ததை சொல்லி, என்னை உன் வசப்படுத்தப் பார்க்கிறாய்; ராமபிரானுக்குத் தூதனாக உள்ள நான், உன்னிடத்திலா அரசாட்சியைப் பெற்றுக்கொள்வது! அவ்வாறு பெற்றேனானால் சிங்கம், நாயின் கையில் மகுடம் பெற்றது போலல்லவா ஆகும்?'' என்று சொன்னான்.

அவ்வாறு அங்கதன் அலட்சியம் செய்யவே, ராவணனுக்கு அவனைக் கொல்லத்தக்க கோபம் உண்டாகிவிட்டது. அவன் அக்கோபத்தால் சீறிப் பார்த்து, ''அடா குரங்கே! மனிதர்களை நம்பி சாகத் துணிந்த நீ வந்த காரியத்தை உடனே சொல்'' என்று கர்சித்தான். அதற்கு அங்கதன், ''போருக்கு அஞ்சிக் கோட்டையுள் பதுங்கி இருக்கின்ற நீ, 'உடனே தேவியை விடுக; அல்லது செருவில் நின்று தம்முன் ஆவியை விடுக' என்று உனக்குக் கூறி இவ்விரண்டில்

எது உன் கருத்து என்பதைத் தெரிந்து வரும்படி ராகவர் என்னை உன்னிடம் அனுப்பினர்; அவர் உன் உறவினரைக் கொன்றபொழுதும், ஆஞ்சநேயர் உன் கண் எதிரிலேயே லங்கையைச் சுட்டெரித்தபொழுதும், சுக்ரீவன் உன் மகுடங் களிலுள்ள மணிகளைப் பறித்துப்போன பொழுதும் உண்டா காத வீரமா இனி உனக்கு உண்டாகப்போகிறது? நீ ராம ருடைய பாணத்தினல் மடிந்துபோவது உறுதி. அப்படி மடிவதற்கு விருப்பமா? அல்லது பிராட்டியாரை ராமபிரா னிடம் சேர்த்துவிட்டு, அவர் திருவடிகளை வணங்கி இன்னும் சிறிது நாள் பிழைத்திருக்க விருப்பமா? விரைவில் உன் கருத்தைக் கூறுவாயாக'' என்றான்.

அவற்றைக் கேட்டதும் ராவணன் அடங்காச் சினம் கொண்டு, அங்கதனை அப்படியே விழுங்கி விடுகிறவனைப் போல ஆர்ப்பரித்து, நான்கு அரக்கர்களை ஏவி, ''இப்பொழுதே இவனைப் பிடித்து, மூளை சிதறிப் போகும்படியாக நிலத்தில் அறைந்து கொல்லுங்கள்'' என்றான். அவ்வாறே அந்த நால் வரும் அங்கதனைப் பிடிக்க, அவர்கள் பிடித்துக்கொண்டிருந்த வாறே நால்வரையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பி, அவர்கள் தலைகளை வாயால் கடித்துத் துண்டித்து, அத்தலைகளை ராவணன் கோபுர வாயிலில் விழும்படிப் போட்டுவிட்டு, அங்கு நின்ற அரக்கர் கூட்டங்களைப் பார்த்து, ''ராமபாணம் வந்து உங்களை அழிப்பதற்குமுன், போருக்காற்றாத எளியவர் கள் எங்கேனும் ஓடிப் பிழையுங்கள்'' என்று உரத்துச் சொல்லிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு, ராமனுக்கு முன்பாக வந்திறங்கி, அவனுடைய திருவடிகளில் வணங்கி நின்றான்.

அப்போது, ராமன் தன்னை வணங்கிய அங்கதனைப் பார்த்து, ராவணன் தெரிவித்ததென்ன என்று கேட்டான். அங்கதன், அங்கு நடந்த செய்திகளையெல்லாம் சொன்ன துடன். அந்த ராவணனுடைய பத்துச் சிரங்களையும் கொய்து வீழ்த்தினலல்லாமல் அவன் ஆசை ஒடுங்காது என்று கூறினன்.

14. முதற் போர் புரி படலம்

அங்கதன் உரைத்தவற்றைக் கேட்ட ராமன், போர் செய்வதே தக்கது என்று முடிவு செய்தான்; தன் வானரப் படைத் தலைவர்களை நோக்கி, ''இனிப் போர் தொடங்குங்கள். லங்கைக் கோட்டையை முற்றுகையிடுங்கள்'' என்று கூறி னன். இத்தகைய ஏவலுக்காகத்தானே வானரப் படைகள்

காத்துக்கொண்டிருந்தன ? அவர்கள் போர் தொடங்கினர் ; அரக்கர்களும் வானர வீரர்களும் மோதினர் ; பலவகைப்பட்ட படைக்கலங்களால் தாக்கிக்கொண்டனர். மலைகளும் மரங் களும், பற்களுமே வானர வீரர்கட்குப் படைக்கலமாக உதவின. சுக்ரீவனுக்கும், வஜ்ரமுஷ்டி என்பவனுக்கும் நிகழ்ந்த போரில் வஜ்ரமுஷ்டி இறந்துவிட்டான்.

கிழக்கு வாயிலில் இருந்த நீலன் என்னும் வானர வீரன், அரக்கர்கள் பலர்மீது மரங்களையும், மலைகளையும் எடுத்து வீசிக் கொன்றான். அது கண்ட அரக்கன் பிரகஸ்தன் என்பவன் வானரர்களில் பலரைக் கொல்ல, அதை நீலன் பார்த்துச் சினந்து, அந்தப் பிரகஸ்தனைத் தன் வாலிற்கட்டி இழுத்து நெருக்கி அவன் உயிரைப் போக்கினான். தலைவன் இறந்ததும் சிலர் பயந்து ஓடிப்போனார்கள். தெற்கு வாயிலில் இருந்த சுபாரிசன் என்ற அரக்கர் படைத் தலைவனையும், அவன் சேனைகளையும் அங்கதன் கொன்று குவித்தான். மேற்கு வாயிலில் நூற்றிரண்டு வெள்ளம் அரக்க சேனைகளுடன் இருந்த துன்முகனும் அவன் சேனைகளுடன் ஆஞ்சநேயரால் கொல்லப்பட்டான். வடக்கு வாயிலிருந்த லக்ஷ்மணனும் அரக்கர் படைத் தலைவரையும், சேனைகளையும் நாசம் செய்ய, எஞ்சியவர் ஓடிப் போயினர். இவ்வாறு அரக்கர் களில் பெரும்பாலரும் இறந்துபோனதைக் கண்ட ராவணன் தூதுவர்கள் விரைந்து போய் ராவணனிடம் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தார்கள்.

படைத் தலைவர்கள் பலர் இறந்ததைக் கேட்டதும் ராவணன் மிகச் சினந்து, தனது இருபது தோள்களும் தின வெடுக்க, பத்து முடிகளையும் திருத்திக்கொண்டு பல அணிகளை அணிந்து, ஆயுதங்களைத் தாங்கி தேர் ஏறினான். பலவிதத் துர் நிமித்தங்கள் உண்டாகியும் அவைகளைச் சிறிதும் பொருட்படுத் தாமல் அரக்கர்கள் வானரச் சேனைகளை எதிர்த்தார்கள். அப் பொழுது வானரர்கள், மலைகளையும் மரங்களையும் பிடுங்கி ஓயாமல் வீச, அரக்கர்கள், தேர், யானை குதிரைகளுடன் வாள், வில், ஈட்டி, வேல், குண்டாந்தடி முதலியவைகளால் அவை களைத் தடுத்து, மிகக் கடுமையாக சண்டை செய்தார்கள். அவ்வாறு செய்ததில் அரக்கர்களில் அனேகர் இறக்கவும், வானரர்களில் சிலர் இறக்கவும் உதிரவெள்ளம் எங்கும் ஓடலா யிற்று.

அப்போது அங்கு ராவணன் வந்துள்ளான் என்பதைக் கேட்டதும், ராமன் சேனையின் பின்புறத்திற்குக் காவலாக நின்ற தம்பியிடம் வந்து சேர்ந்தான். ராவணன் வருவதைக் கண்ட சுக்ரீவன் ஒரு குலிசத்தை அவன்மீது எறிந்தான். ராவணன் அதை ஓர் அம்பால் துகளாக்கினான். பின்னர் இருவரும் நெடு

நேரம் யுத்தம் புரிந்தனர். இறுதியில் சுக்ரீவன் சலித்துவிட்டான். அப்போது அங்கு அநுமன் தோன்றி ராவணனுடன் பொருதான். ராவணன் நூறம்பை ஒரே சமயத்தில் அநுமன் மீது எய்யவும் அநுமன் குருதி மல்க அலக்கணுற்று அயர்ந்தான். ராவணன் வானர வீரர்களைப் பரிகசித்தான்.

குரங்குத் தலைவர்கள் ராவணனுடன் போரிட்டுப் பெருந் துன்புற்றதைக் கண்ட லக்ஷ்மணன், 'இவனை இன்னே ஒழிப்பேன்' என்று வஞ்சினம் கூறி மேருவென விளங்கும் வில் ஒளி வீச விரைந்து வந்தான். அவன் நாணொலி கேட்ட அரக்கர்கள் அஞ்சினர்; ராவணனும் வியந்தான். போர் தொடங்கியது. அரக்கர் குருதி கடலெனப் பரந்தது. தேர்கள் உடைந்தன; யானைகள் இறந்தன; குதிரைகள் மரித்தன; யாண்டும் பிணங்களே குப்பையெனக் கிடந்தன. 'யமன் வெறி கொண்டு கொல்லத் தொடங்கினாற்போலக் கொல்லும் லக்ஷ்மணனைக் கொல்வேன்' என்று கோபித்து ராவணன் எதிர்த்துக் கிட்டி வந்தான். லக்ஷ்மணன் சிறிதும் பின்னிடாமல் ராவணனைப் பழித்தான்; அம்புமாரி பொழிந்தான். ராவணனும் லக்ஷ்மணன் அம்பறுத் தூணியை அறுத்து வீழ்த்தினான்.

அச்சமயத்தில் அநுமன் மயக்கம் நீங்கி எழுந்து வந்து ராவணன் லக்ஷ்மணனுடன் போரிடுவதைத் தடுத்து வீரவாதம் புரிந்து விசுவரூபம் கொண்டு உயர்ந்து நின்றான்; நெருப்பெனப் பெருமூச்சு விட்டான்; ராவணனை நோக்கி, ''திசை யானைகளுக்கும் கயிலையங்கிரிக்கும் இளைக்காத தோள்களையுடையவனே, என் கரவலிமையைத் தாங்குவையோ? நான் இப்போது உன் மார்பில் குத்துகிறேன்; குத்துப்பட்ட பின்பும் உயிருடன் இருப்பையாயின் உன் கைகளால் நீ என் மார்பில் குத்துவாய்; அதனால் பொன்றாது நிற்பேனெனில் உன்னோடு மேலும் போர் செய்யேன்'' எனச் சூளுறைத்தான். அநுமன் கூறியதைக் கேட்ட ராவணன் வியந்து, ''வீரன் சொல்லத்தக்க வார்த்தைகளே சொன்னாய்; உன்னையல்லால் எனக்கீடாக இங்கு நின்று போர் புரியும் ஆற்றல் வேறு யாருக்கு இருக்கிறது? நீ பெருவீரனே! ஆகையால் உலகெலாம் காணக் குத்துக'' என்று கூறி எதிர் நின்றான்.

அநுமனும் ராவணன் வீரத்தை வியந்து விழிக்கனல் சிந்த அவன் கவசமணிந்த உடல் பொடியாகிச் சிதறும்படி வஜ்ர முஷ்டியால் ஓங்கிக் குத்தினான். ராவணன் மார்பில் திக்கயங்களின் தந்தங்கள் முறிந்து தங்கியிருந்தன. அவற்றை இழைத்து மணிகள் பதித்து அணியெனச் செய்திருந்தான் அரக்கர் கோமான். அத்தந்தங்கள் அநுமன் குத்தின உடனே முதுகின் வழியாய்ச் சிதறி வீழ்ந்தன. தசக்ரீவன் தள்ளாடி வடமேரு சலித்ததேபோற் சலித்து வீழ்ந்தான். தேவர் முதலியோர் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர்.

ஒருவாறு மூர்ச்சை தெளிந்தெழுந்த ராவணன் அநுமனை நோக்கி, ''வலிமை என்பது நின்னிடந்தான் உளது; மெலிவு என்பதை இன்றுதான் நான் உணர்ந்தேன்'' என்று வியந்து கூறினன்.

மாருதி அவனை நோக்கி, ''உயிரை விடாமல் என்னுடன் உரையாடுகின்றாயே! இஃதொன்றே அமையும் என்னை நீ வென்றமைக்கு; கடனை மீண்டும் பெற்றுக்கொள்க'' எனக் கூறித் தன் மார்பைக் காட்டினன்.

ராவணனும் ஆஞ்சநேயர் மார்பில் ஓங்கிக் குத்தினன். அநுமான், வெள்ளியங்கிரி நிலைகுலைந்து விழுவதேபோல் சலித்து வீழ்ந்தான். அவன் வீழ்ந்தமை கண்டு தேவருலகெல்லாம் சலித்தன; அறமும் தளர்ந்தது; உண்மை குலைந்தது; நற்குணங்களெல்லாம் தளர்ந்தன; புகழ் தளர்ந்தது; வேதமும் சலித்தது; நீதி தளர்ந்தது; கருணை தவித்தது; தவமும் சலித்தது. அதனைக் கண்ட வானர வீரர் யாவரும் ஒருங்கே பெரிய மலைகளைப் பெயர்த்து வந்து ராவணன்மீது வீசினர்கள்; அரக்கர் பலர் அழிந்தனர்; ராவணன் தன் பாணங்களால் மலைகளைப் பொடியாக்கி விலக்கினன். அவனது திறமையைக் கண்ட வானவர் நடுங்கினர். மேலும் பல அம்புகளால் வானரர் உடலைத் துளைத்தான் தசக்ரீவன். வானரப் படை நிலைகுலைந்தது. லக்ஷ்மணன் அது கண்டு மிகச் சினந்து ராவணன் அம்புகளைத் தடுத்து அவன் வில்லையும் அறுத்தான்; அவன் புதிய வில் எடுக்க மீண்டும் அறுத்தான்; இவ்வாறு பத்து விற்களைப் பயனின்றாம்படிச் செய்தான். அதிசயம் அடைந்த அரக்கர் கோமான் லக்ஷ்மணனை நோக்கி, ''கரன் உரம் அழித்த காகுத்தனும் வானர்கோன் வலியழித்த மேகநாதனும் யானும் அன்றி உன் வலிமைக்கு ஈடு கொடுக்கக் கூடியவர் ஒருவரும் இலர்'' எனக் கூறித் தான் பிரம்மனிடம் பெற்ற வேற்படையொன்றை எடுத்து அவன்மீது வீசினன். யமனெனச் சென்ற அவ்வேல் இளையபெருமான் மார்பிற் பாய்ந்தது. நெடுங்களத்தில் லக்ஷ்மணன் தளர்ந்து வீழ்ந்தான்.

ராவணன் கீழே விழுந்த லக்ஷ்மணனைக் கண்டு, ''இவனுடலை எடுத்துச் செல்வேன்'' எனக் கூறி முயன்று தூக்கினன். ஆனல் தூக்கமுடியாமல் திகைத்தான். இளையபெருமானின் உடல் அவ்வளவு கனமாய் இருந்தது. அச்சமயத்தில் அநுமன் விரைந்து தோன்றி மகவை மடியிற்கொண்டு மரத்தில் ஏறும் மந்தியைப்போல லக்ஷ்மணனைத் தூக்கிச் சென்றான். ராவணன் படையால் மயங்கிய லக்ஷ்மணன் சிறிது தேற அநுமன் ராமபிரான் இருந்த இடம் சென்றான். ராமபிரான் யானைமேற் செல்லும் சிங்க ஏறு என மிகுந்த சினத்தோடு ராவணனை எதிர்க்கச்

சென்றான். அப்பொழுது ஆஞ்சநேயன் ராமனை நோக்கி, ''ஸ்வாமி! அந்த ராவணன் தேரின்மீது ஏறி வரும்பொழுது தாங்கள் நிலத்தில் நின்று அவனை எதிர்ப்பது தகாது'' என்று சொல்லித் தன் தோளின்மீது அமர வேண்டினான். அப்படியே ராமன் அநுமன் தோள்மீதமர்ந்து, கோதண்டத்தை வளைத்து நாணை இழுத்துப் பேரொலி எழுப்பினான். அது கேட்ட அரக்கர்கள் கலங்கினார்கள். உடனே ராவணன், ராமன்மீது ஏழு விதமான கொடிய அம்புகளை ஏவினான். அவைகளைத் துண்டங்களாக்கிவிட்டு ராமன் ராவணன்மீது அம்புகளைப் பொழியத் தொடங்கினான். அவற்றால், ராவணனுடைய குடை, கொடி, தேர், சாரதி, குதிரைகள் ஒவ்வொன்றாய் அழிய ஆரம்பித்தன. அரக்கர்கள் வானர சேனைகள்மீது பல ஆயுதங்களை எறிந்தார்கள். அவற்றை எல்லாம் வானரர்கள்மீது தாக்காவண்ணம் ராமன் தன் அம்புகளால் தடுத்து, வேறு சில அஸ்திரங்களால் அரக்கர்கள் அனைவரையும் மாளும்படிச் செய்து, பிணக் குவியலாக்கி விட்டான்.

தன்னுடைய இருநூறு வெள்ளம் சேனைகளும் பஞ்சுபோல் பறந்துவிட்டதைக் கண்ட ராவணன் நெருப்பைப்போல் கொதித்து, ராமன்மீது அழுந்தும்படி அம்புகளை எய்தான். அவற்றிற்குச் சிறிதும் சலிக்காத ராமன் புன்னகை செய்து, தன்னுடைய அஸ்திரம் ஒன்றினால் அவன் வில்லை ஒடித்துவிட்டான். ராவணன் மற்றொரு வில்லை எடுத்தான். அதனையும் ராமன், தன் அம்பினால் ஒடித்தெறிந்து, மற்றும் பல அஸ்திரங்களால், அவனுடைய சேமத் தேர்கள், ஆயுதங்கள் முதலிய யாவற்றையும் சின்னபின்னமாக்கி அழித்துவிட்டு, அவனை வெறுங்கையோடு நிலத்தில் நிற்கும்படிச் செய்தான். ராவணன் நிலத்தின்மீது நின்று தன் தேர்களும் படைகளும் அழிந்ததைப் பார்த்துக் கொண்டிருக்குங்கால் விரைந்துவந்த ராமபாணம் அவனுடைய பத்து முடிகளையும் தள்ளிக்கொண்டுபோய் கடலிற் போட்டது. எக்காலத்திலும் எவரிடத்திலும் தோல்வியடையாத ராவணன், இவ்விதம் எல்லாவற்றையும் இழந்து வெறுங் கையனாய் வெட்கித் தலைகுனிந்து முக ஒளி இழந்து நின்றான்.

அப்பொழுது அவனுடைய கதியை நோக்கிய கருணைக் கடலான ராமன், வெறுங்கையனாக இருக்கும் இவனைக் கொல்லலாகாதெனக் கருதி, ''ராவணா! அறத்தின் முறையாலல்லாமல் தேவர்களும் போரில் வெற்றியடைதல் அரிது என்பதை மனத்தில் கொள்வாயாக. இப்பொழுது உயிர் பிழைத்துப் போய் விடு; இனி ம் நிற்பாயாகில் உன்னுயிர் நீங்கிவிடும்; நீ போய், மற்றுமுள்ள உன் படைகளைக் கூட்டிக்கொண்டு வந்தாலும் நீ உன் குலத்துடன் மாளுவது திண்ணம். நீ பிழைத்திருக்கவேண்டின் ஜானகியை என்னிடம் கொண்டுவந்துவிட்டு விபீஷணனை லங்கை



அரசனுக்கி, அவனிட்ட ஏவல்களைச் செய்துகொண்டிரு. நீ மடிந்து போகவேண்டுமானுல் திரும்பவும் போருக்கு வா. இப்பொழுது உனக்கு அமைந்திருந்த படைகளெல்லாம் காற்றினுல் எறியப்பெற்ற இலவம் பஞ்சுபோல் பறந்துவிட்டதைக் கண்டாய்; நீ இன்று போய், உன் படை வலிமையுடன் நாளைக்கு வா'' என்று கருணையோடு மொழிந்தான்.

'ஆள்ஐ யாஉனக்(கு) அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகுஇளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுஉடை வள்ளல்.''

[மாருதம்: காற்று. பூளை: பூளைப்பஞ்சு.]

15. கும்பகர்ணன் வதைப் படலம்

ராவணன் வெறுங்கையுடன் மீண்ட நிலையையும், நாணம் கொண்டிருந்த நிலையையும் கம்பர்,

''வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்(கு) ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தார்அணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ(டு) இலங்கை புக்கான்.''

''மாதிரம் எவையும் நோக்கான் வளநகர் நோக்கான் வந்த
காதலர் தம்மை நோக்கான் கடல்பெருஞ் சேனை நோக்கான்
தாதுஅவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தான் அப்
பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்.''

''வான்நகும் மண்ணும் எல்லாம்
நகும்நெடு வயிரத் தோளான்
நான்நகு பகைஞர் எல்லாம்
நகுவர்என் றதற்கு நாணன்
வேல்நகு நெடுங்கண் செவ்வாய்
மெல்இயல் மிதிலை வந்த
சானகி நகுவள் என்றே
நாணத்தால் சாம்பு கின்றான்.''

[வாரணம்: திக்கு யானைகள். பொருத: குத்திய. வரை: கைலைமலை. மவுலி: முடி. மாதிரம்: திசை. பூதலம் என்



னும் நங்கை : பூமிதேவி. அஃதாவது தலைகுனிந்தவாறு ராவ
ணன் சென்றான் என்பது கருத்து.]

என்று கூறுகின்றார்.

யாவற்றையும் இழந்து மிகுந்த அவமானத்தோடு வெறுங்
கையனாய்க் கால்நடையாகப் போய்ச் சூரியன் மறையும் சமயத்
தில் நகரடைந்து, எதிரே வரும் எவரையும் பாராமல் அரண்மனை
யுட் சென்று, ஆசனத்தில் அமர்ந்து தனிமையாக இருந்து
கொண்டு வாயுவேகன், மனோவேகன், மருத்தன், மேகன் என்ப
வர்களை வரவழைத்து அவர்களை நோக்கி, ''நீங்கள் விரைவிற்
போய் ஏழு சமுத்திரங்கள், ஏழு தீவுகள், பர்வதங்கள், பாதலம்
முதலிய இடங்களை அடைந்து, ஆங்காங்குள்ள அரக்கர் படைகளை
எல்லாம் கூட்டி வாருங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டுப்
போரில் தோற்ற வெட்கத்தினால் எழுந்து சென்று, ஒரு மலரா
சனத்தில் சாய்ந்து, பெருமூச்சுவிட்டுத் துக்கப்பட்டுக்கொண்டி
ருந்தான்.

அச்சமயத்தில் அங்கே வந்த அவன் பாட்டனான மாலிய
வான், ராவணனைப் பார்த்து, ''அப்பா, பேரனே ! நீ முகங்
கள் சோர்ந்து துக்கப்படக் காரணமென்ன ?'' என்று கேட்
டான். அதற்கு ராவணன், தான் போருக்குச் சென்றதும்,
ராம லக்ஷ்மணர்களின் வில் திறமையினையும் கூறித் தான்
அவர்களிடம் தோற்று வந்ததையும் சொல்லி வருந்தினான்.
மாலியவான், ''பிள்ளையே ! நான் முன்னமேயே அவர்கள்
இன்னார் என்பதைக் கூறினேன். அதற்கு என்னைக் கடிந்து
கொண்டாய். உனக்கு நற்புத்தி காட்டிய உன் தம்பி விபீஷ
ணனையும் வெறுத்தாய். இப்பொழுது வருந்தி விசனிக்கிறாய்.
இனியேனும் ஜானகியை விட்டு விட்டால்தான் நீ வாழ்வாய்.
இல்லையெனில் மற்றுமுள்ள யாவையும் இழந்து உயிரிழப்பது
உறுதி'' என்று சொன்னான்.

அச்சொற்களைக் கேட்டுக்கொண்டே வந்த புன்மதியாள
னான மகோதரன், மாலியவானைச் சினந்து, ''நீ பேசாமலிரு''
என்று சொல்லிவிட்டு ராவணனைப் பார்த்து, ''ஐயா லங்கா
திபரே ! ஒரு செயலை மேற்கொண்டால் அது முடியும்வரை
செய்துவிடுவதுதான் வீரத்திற்குச் சிறந்தது. தேவர்கள் யாவ
ரும் உமக்குப் பயந்திருக்க, இந்தச் சிறு மனிதர்களுக்குப்
பயந்துவிடுவதா ? எப்பொழுதும், வென்றவர் தோற்பதும்,
தோற்றவர் வெல்வதும் இயற்கையன்றோ ? இனியும் நாம்
போர் செய்தே தீரவேண்டும். இப்பொழுதென்ன நமக்கு
வலிமை குறைந்துவிட்டதா ? உம்முடைய கும்பகர்ணர் இருக்
கும்பொழுது நீர் ஏன் பயப்படவேண்டும் ? போருக்கு அவரை
அனுப்பினால், கண்டவுடனே அந்த நரர்களும் குரங்குகளும்

அஞ்சி ஓடமாட்டார்களா? அபபடி ஓடாதிருந்தால் அவர் கையால் சாகமாட்டார்களா?'' என்று கூறினன்,

மகோதரன் கூறியதைக் கேட்டதும் 'இதுவும் சிறந்ததே' என்று எண்ணிய ராவணன், அவ்வாறு சொன்ன மகோதரனை வாயாரப் புகழ்ந்துவிட்டுத் தூதுவர்களை அழைத்து, ''நீங்கள் சென்று விரைவில் என் தம்பியான கும்பகர்ணனை அழைத்து வாருங்கள்'' என்றான். அங்ஙனமே தூதுவர்கள், உறக்கத்தில் இருந்த கும்பகர்ணனை ஒருவாறு எழுப்பி அழைத்துவந்தனர். கும்பகர்ணனைக் கண்ட ராவணன், ''தம்பி! ராம லக்ஷ்மணர் கள் சுக்ரீவனைத் துணைகொண்டு அநேக வானரங்களுடன் வந்து, பிரகஸ்தன் முதலிய படைத் தலைவர்களைக் கொன்று, நம் சேனைகளை எல்லாம் அழித்து நகர்ப்புறத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். நீ சென்று அவர்கள் யாவ ரையும் உனக்கு இரையெனக் கொள்வாய்'' என்று கூறினன்'

முன்னரே கும்பகர்ணன் அறம் பல கூறி நித்திரைக்குச் சென்றவன் ஆதலின், அதன் பிறகு நடந்திருக்கும் செயல்கள் யாவும் அவன் உணரான். இப்பொழுது அண்ணன் சொன் னதைக் கேட்டு மிகவும் வருந்தி,

''ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றும் காலமே.''

''இனி நாம் எல்லோரும் குலத்தோடு அழிவது நிச்சயம். விபீஷணன் ராகவனுடன் சேர்ந்து நற்பதவியை அடையப் போகிறான். நீ பிழைத்திருக்கவேண்டுமானால், சீதாபிராட்டி யாரை ராமனுடைய திருவடிகளிற் சேர்த்து அவரை வணங்கிக் கொள்'' என்றான். இதனைக் கேட்டதும் ராவணன் கண்கள் நெருப்பெழக் கோபித்து, அவனை நோக்கி, ''கும்பகர்ண, நான் அவர்களைக் கொன்று வர உன்னை அழைத்தேனேயன்றி, எனக்குப் புத்தி சொல்வதற்கல்லவென்பதை உணர்ந்துகொள். நீ அந்த நரர்களுக்குப் பயந்துவிட்டாய். மனிதர்களையும் குரங்குகளையும் வணங்கிப் பிழைப்பது விபீஷணனுக்கும் உனக் குமே தகும். நீ என் முன் நில்லாதே. நித்திரை செய்யப் போ'' என்று கூறி, மறுபடியும் தானே போருக்குப் புறப்படத் தயாரானன்.

அதனைக் கண்ட கும்பகர்ணன் மிகவும் மனம் வருந்தி அண்ணனை வணங்கி எழுந்து சூலமேந்தி, ''அண்ண! நீ சினங் கொள்ள வேண்டாம். உமக்குப் பின்வரும் விளைவுகளை அறிந்து

நான் சில வார்த்தைகளைக் கூறினேன். நம்முடைய கெட்ட காலத்தால் உமக்கு அவை ஏற்கவில்லை.''

''வென்றிவண் வருவன்என்று உரைக் கிலேன்; விதி
நின்றது ; பிடர்பிடித்(து) உந்து கின்றது;
பொன்றுவன் ; பொன்றினல் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுதல் நன்றரோ.''

''இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்தி ; கொற்றவ ;
அற்றதால் முகத்தினில் விழித்தல் ; ஆரிய ;
பெறுறனன் விடையெனப் பெயர்ந்து போயினன்.''

அப்பொழுது ராவணனும் அழுதுவிட்டான். கும்பகர்ண னும் போர்க்களத்தை அடைந்தான்.

போர்க்களத்தில் கும்பகர்ணனைப் பார்த்த ராமன், ''இவன் யார் ?'' என்று விபிஷணனைக் கேட்டான். அதற்கவன், ''ஸ்வாமி ! இவர் என் அண்ணனர் ; ராவணன் தம்பியார் ; கும்பகர்ணர் என்பவர் இவரே. மிக்க நீதிகளை அறிந்த இவர், ராவணனுக்கு எவ்வளவோ புத்திகள் கூறியும், அவன் கேளா ததால் போர் இயற்ற வந்திருக்கிறர்'' என்று சொன்னன். அதனைக் கேட்ட ராமன், அப்படியானல், அக்கொடியவனல் அழிய வேண்டாமென்றும், நம்மை அடைந்து சுகப்படுமாறும் அவனுக்குக் கூறி நீயே சென்று அவனை அழைத்து வருவா யாக'' என்று சொல்லி விபீஷணனைக் கும்பகர்ணனிடம் அனுப் பினன். உடனே விபீஷணன் சென்று கும்பகர்ணனை அடைந்து அவனை வணங்கினன்.

அப்பொழுது அவனைக் கண்ட கும்பகர்ணன், 'இவன் ராமருடன் சேர்ந்திருக்க மனமில்லாது நம்மைக் கண்டதும் இங்கே வந்துவிட்டான் போலும் !' என்று எண்ணி, அவனை வாரி எடுத்து மார்போடணைத்துக்கொண்டு கண்ணீர் பெருக அவனை நோக்கி, ''தம்பி ! அந்தப் பரந்தாமரான ராகவ ரிடம் சரணம் அடைந்து, இம்மையிலும் நன்மை பெற்ருய் என்றல்லவோ எண்ணினேன் ! அப்படியிருக்கக் காலன் வாய்க்கு இரையாகும் எங்களை நாடி ஏன் திரும்பி வந்தாய் ! நாங்கள் மடிந்தபிறகு நீ இருந்தால் எங்களுக்காக எள்ளும் நீரும் இறைப்பாய். நீ எங்களுடன் சேர்ந்துவிட்டால் எங்கள் ஆவி கடைத்தேறுவதற்குப் பிதுர்க்கடன் ஆற்றுபவர் யாவர் ? ஆதலின் நீ இங்கே சிறிதும் தாமதியாமல் அவர்களோடு போய்விடு'' என்று அழுதுகொண்டே கூறினன். விபீஷணன் அவனை நோக்கி, ''அண்ண ! நான் ராமபிரானைப் பிரிந்து வந்து

விடவில்லை; நீர் மிகவும் நீதியுள்ளவராகவும், அறிவாளியாகவும் இருப்பதால் உமது மரணத்தைத் தடுக்கலாமென்று வந்தேன். நீர், அந்த மூர்க்கர்களின் பொருட்டு ஏன் உயிரை விடவேண்டும்? ராமருடன் இருக்க நீர் சம்மதித்தால், அவர் என்னைக் காப்பதுபோலவே உம்மையும் ஆதரிப்பேன் என்கிறார். அவரால் எனக்களிக்கப்பட்ட லங்கை அரசை, நான் உமக்கே கொடுத்து, உம்முடைய ஏவலைச் செய்கின்றேன். நீர் நீண்ட காலம் சுகமாய் வாழ்ந்தபின்னர் பரமபதமும் அடையலாம். ஆதலின் நீர், நன்கு ஆலோசித்து, இப்பொழுதே என்னுடன் வாரும்'' என்றான்.

விபீஷணன் கூறியதைக் கேட்டவுடனே, கும்பகர்ணன் கண்களில் உதிரம் சொரிய அவனை நோக்கி,'' தம்பி, விபீஷணா!

''நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்துவிட்டார்க்(கு) உயிர்கொடா(து) அங்குப்போகேன்
தார்க்கோல மேனி மைந்த; என்துயர் தவிர்தி யாகில்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதின் என்றான்.''

[நீர்க்கோல வாழ்வு: நீர்மேல் இட்ட கோலம்போல் விரைந்து அழியும் வாழ்வு. நச்சி: விரும்பி. தார்: மாலை. கோலம்: அழகு.]

விபீஷணன் தாங்கமுடியாத துயரத்துடன் ராமனிடம் சென்று, கும்பகர்ணன் கூறியவற்றைத் தெரிவித்தான். ராமன் கேட்டு, ''எதுவும் விதிப்படியே நடப்பது; நாம் செய்வது யாது?'' என்று விபீஷணனுக்குச் சமாதானம் கூறினான்.

விபீஷணன் சென்றதும் கும்பகர்ணன் கட்டளைப்படி அரக்க சேனைகள் வானரர்களை வளைத்துக்கொண்டு கொல்லத் தொடங்கினர். கும்பகர்ணன் தன்னை வந்து எதிர்த்த நீலன், அங்கதன், அநுமன் முதலியோரை அடித்து ஓட்டிவிட்டான். அப்பொழுது லக்ஷ்மணன் அவனெதிரே வந்து, வில்லை வளைத்துப் பல அஸ்திரங்களைத் தொடுத்து, அரக்கர்களுடைய தேர், குதிரை, யானைகள் யாவற்றையும் கொன்றொழித்தான். அரக்கர்கள் பயந்து ஓடத் தொடங்கினார்கள். அதுகண்ட கும்பகர்ணன் லக்ஷ்மணன் விற்பயிற்சியை வியந்து, தானே தன் தேரை அவனருகே செலுத்திப் போய் அவனை எதிர்த்து நின்றான். அப்பொழுது ஆஞ்சநேயன், ''கும்பகர்ணன் தேரின் மீதிருக்க, இளையபெருமாள் நிலத்தில் நிற்பது தகாது'' என்று சொல்லி, அவனைத் தன் தோளில் ஏறி நிற்கும்படி வேண்டினான். அவ்வாறே அவன் அநுமன் தோள்களை விடுத்து, அவனுடைய தேர், குதிரை ஆகிய எல்லாவற்றையும் நாசப்படுத்தி, அவன்

கையிலுள்ள வில்லையும் ஒடித்தெறிந்தான். தன் தேர் நாசமானதும் கும்பகர்ணன் நிலத்தில் நின்று, ''இதோ லக்ஷ்மணனைக் கொல்லுகிறேன்'' என்று கர்சித்துச் சூலத்தை எடுத்தான். அச்சமயத்தில் லக்ஷ்மணன் அரக்க சேனையுள் புகுந்து, அநேகரை தலைவேறு கால்வேருகத் துண்டித்தும், கொன்றும், எல்லாவற்றையும் நாசம் செய்தான். சுக்ரீவன், அப்பொழுது ஒரு மலையைப் பிடுங்கியெடுத்து வந்து, கும்பகர்ணன்மீது வீசினன். அவன் அதனைத் தூளாகச் செய்துவிட்டு, அந்தச் சுக்ரீவனைக் கொல்ல நினைத்துத் தன் கையிலுள்ள சூலத்தை அவன்மீது வீசினன். அதுகண்ட ஆஞ்சநேயன், அதனைத் தடுத்து முறித்துவிட்டான்.

இப்படி எல்லாவற்றையும் இழந்து, தான் நிராயுதபாணியாய் நின்றதை எண்ணிய கும்பகர்ணன், துயரத்துடன் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும்பொழுது சுக்ரீவன் அவனை பற்றிக் குத்தினன். கும்பகர்ணன் அவனுடன் மற்போர் செய்யத் தொடங்கினன். இருவரும் நெடுநேரம், ஒருவருக்கொருவர் மோதியும், குத்தியும், தள்ளியும், விழுந்தும் புரண்டும் போர் செய்தார்கள். கடைசியில், கும்பகர்ணன் சுக்ரீவனை இறுகக் கட்டி அமுக்கவும், அவன் மயக்கமடைந்துவிட்டான். அதுகண்ட கும்பகர்ணன், அச்சுக்ரீவனைத் தன் மார்போடணைத்துக் கொண்டவாறு, தூக்கி எடுத்து லங்கையை அடைய விரைந்தான். இவ்வாறு தங்கள் தலைவனைக் கும்பகர்ணன் எடுத்துக்கொண்டு வான்வழிச் செல்வது கண்ட வானரர்கள் ஒன்றும் தோன்ருது வருந்தி ராமனிடம் விரைந்துபோய்ச் சொல்ல, உடனே ராமன் மிகுந்த சினம் கொண்டு எழுந்து லங்கைக் கோட்டை வாயிலை அணுகி, ஆகாய வழியில் வரும் கும்பகர்ணனைக் கோட்டையினுள்ளே போகவொட்டாமல் மூடிக்கொள்ளும்படி சரக்கூடம் கட்டினன். அதனல் கும்பகர்ணன் உள்ளே போக வழியறியாமல் திகைத்து நிற்கும்பொழுது, ராமன் அவனுக்கு எதிர்ப்பட்டான். ராமனைக் கண்டதும் அவன், ''நான் உன்னையே தேடியும் நீ இதுவரை எதிர்ப்படவில்லை; இப்பொழுது இக்குரங்கை மீட்கவந்தாய் போலும் உனக்கு வல்லமை இருந்தால் இக்குரங்கை மீட்டுக்கொள், பார்க்கலாம். நீ இதனை விடுவித்துக்கொண்டேயானல் உன் சீதையையும் விடுவிப்பாய்'' என்ருன். அதற்கு ராமன், ''சுக்ரீவனைப் பற்றியிருக்கிற உன் தோளை இப்பொழுதே நான் அறுத்துத் தள்ளாவிட்டால் இனி என் வில்லை எடுப்பதில்லை'' என்று சூள் கூறி, இரண்டு அம்புகளால், கும்பகர்ணனுடைய நெற்றியைப் பிளந்தான். அதனல் அவன் மூர்ச்சித்தலும், அங்கிருந்து ஒழுகிய ரத்தமானது சுக்ரீவன் முகத்தில் பாய்ந்தது. உடனே சுக்ரீவன் தன் மயக்கம் தெளியவும், ராமர் தன் எதிரே நிற்பதையும், கும்பகர்ணன் நெற்றியில் ராம பாணம் தைத்திருப்பதையும்


Bapu

கண்டு தைரியம் தோன்ற அந்தக் கும்பகர்ணனுடைய மூக்கையும் செவிகளையும் கடித்துப் பிடுங்கிக்கொண்டு, அவன் பிடியிலிருந்து நழுவித் தாவிப்போய் வானர சேனைகள் இருக்குமிடத்தை அடைந்தான். அவன் செய்கை கண்டு யாவரும் மகிழ்ந்தார்கள்.

கும்பகர்ணன் மூர்ச்சை தெளிந்ததும், சுக்ரீவன் தப்பிச் சென்றதையும் மூக்கும் காதுகளும் போய் மூளியானதையும் அறிந்து, 'இந்த ராமனையும் என்னைப் போலாகும்படிச் செய்து விடுகிறேன்' என்று கர்ச்சித்துத் திரும்பவும் யுத்த களத்திற்கு வந்து, தன் கேடயத்தை எடுத்து வீசினான். அதன் காற்றால் வானரங்கள் யாவரையும் வாரிக்கொண்டு போய் எல்லாத் திசைகளிலும் எறிந்துவிட்டது. அப்பொழுது ஜாம்பவான் ராமனை நோக்கி, ''ஸ்வாமி! வானர சேனைகள் இவனால் அழிகின்றன. இனியும் இந்த கும்பகர்ணனைக் கொல்லாவிடில் நமக்கு மிகவும் துன்பமே நேரும்'' என்றான். ராமன், ''அப்படியே இவனை இன்றே கொன்றுவிடுகின்றேன்!' என்று சபதம் செய்து, கோதண்டத்தை ஏந்தி, அவனை நெருங்கி நின்று ஆயிரம் ஆயிரம் அம்புகளால் அவனிடமிருந்த கேடயங்கள், வாள், சூலம் முதலியவற்றை நாசப்படுத்தி அவனைத் தனித்து நிற்கச் செய்தான். தனித்து நின்ற கும்பகர்ணனை நோக்கி ராமபிரான், ''படைகளும் படைக்கலங்களும் இழந்து தனிமையாயினை; நீதிமானாகிய விபீஷணனுடன் பிறந்தவனாதலின் உன்னைக் கொல்லவில்லை; நீ சென்று மீண்டும் படைகளுடன் போருக்கு வருகின்றாயோ அன்றி இப்போதே பொருது சாகின்றாயோ சொல்'' என்றான். அதற்கவன், ''சேவகர் கடமையை அறியாதவன்போற் பேசுகின்றாயே'' என்று கூறி, ஒரு மலையைப் பிடுங்கி ராமன்மீது எறிந்தான். அதனை ராமன் ஓர் அஸ்திரத்தால் துகளாகப் போகும்படிச் செய்தான். உடனே கும்பகர்ணன் மிகுந்த கோபத்துடன் சூலத்தை எடுக்க ராமன் அதனையும் துண்டித்தான். மேலும் வலிமை மிக்க அம்புகளை அவன் மார்பு நோக்கிச் செலுத்தினான். ஆனால் வாளிகள் கும்பகர்ணனின் கவசத்தைக் கடக்கமாட்டாதவையாய் வீழ்ந்தன. பின்னர் ராமன் சங்கரன் கணையால் அதனைப் பிளந்தான். கும்பகர்ணன் பெருஞ்சீற்றம் கொண்டு ஒரு தண்டாயுதத்தால் வானர வீரர்களை அழிக்கத் தொடங்கினான். ராமன் தண்டத்தையும் துகளாக்க அரக்கன் கறுவி, வாட்படையொன்றை எடுத்தான். வானரர் யாவரும் அஞ்சி ஓடினர். அது கண்ட காகுத்தன் அரக்கன் கையை அறுத்து வீழ்த்தினான்.

அப்படி வீழ்ந்த கையைத் தன் இடக் கரத்தாற் பற்றிக் கொண்டு கும்பகர்ணன் வானரர்களை எல்லாம் அடித்து நொறுக்கினான். அது கண்ட ராமன், அவன் இடக்கரத்தையும் அறுக்க, அவன் சிறிதும் இளைக்காமல் கால்களால் உதைத்தும், வாயாற்-

கடித்தும் வானரர்களைக் கொன்றான். ராமன் அனல் கக்கும் அம்புகளால் அவன் இரு கால்களையும் துண்டித்து முண்டமாகப் பூமியின்மீது உருளும்படிச் செய்துவிட்டான். அப்பொழுதும் அவன் வலி ஒடுங்காமல் உருண்டுகொண்டே வானரர்களை மோதி நசுக்கி வந்தான். அவனது செயல்களைக் கண்ட ராமனும் வியப்புற்றான். அத்தருணத்தில் கும்பகர்ணன் ராமனுடைய திருமுகத்தை நோக்கவும் உண்மை தோன்றி நல்லறிவு ஏற்பட்டது. அவன் மிகவும் பக்தியோடு ராமனுடைய மங்கள வடிவைச் சிந்தித்து அவனைப் பார்த்துப் பலவாறு துதித்து விபீஷணனைக் காக்குமாறும், அரக்கர்கட்கு நற்பதவி அளிக்குமாறும் வரங்களை வேண்டினான்.

ராமன் அவன் வேண்டுதலைக் கேட்டு, அவனை நோக்கி, "நீ கேட்ட வரங்களைத் தந்தேன்" என்று சொல்லி, ஒரு சிறந்த பாணத்தை எடுத்து வில்லில் தொடுத்து, கும்பகர்ணனின் தலையைத் துணித்து, பின்னர் வாயு அஸ்திரத்தால் அத்தலையைக் கடலிற் போட்டுவிடச் செய்தான். அப்படி அவன் தலை கடலில் வீழ்ந்து மூழ்கிவிட்டது. அப்பொழுது கும்பகர்ணனுக்குப் பயந்தோடிய வானர சேனைகள் யாவும் திரும்பிவந்து ராமனை அடைந்தன. கும்பகர்ணன் ஒழிந்தான் என்றதைக் கேட்டதும் முனிவர்களும் தேவர்களும் களிப்பெய்தி ராமனை வாழ்த்தினர். எஞ்சியிருந்த அரக்க சேனைகள் கும்பகர்ணன் இறந்ததைத் தெரிவிக்க ராவணனிடம் ஓடினார்கள்.

16. மாயா ஜனகப் படலம்

போர்க்களத்தில் கும்பகர்ணன் மிக்க ஆண்மையோடு போர் நிகழ்த்திக்கொண்டிருக்கும்பொழுது, லங்கையிலுள்ள ராவணன், சீதையின்மீது கொண்ட ஆவல் அதிகரித்து அதே நினைவினாய்ச் செய்வதொன்றும் தோன்றாது மயங்கி இருந்தான். அத்தருணத்தில் மகோதரன் அவனைக் காண வந்தான். ராவணன் அவனை நோக்கி, "நான் விரைவில் சீதையை அடையும் வழியைக் கூறி, என் உயிரை நிலைக்கச் செய்வாயாக" என்று சொன்னான். அதனைக் கேட்ட மகோதரன் அவனை நோக்கி, "லங்காதிபரே! அந்தச் சீதை, தானே விருப்பங்கொண்டு உம்மை அடையும் மார்க்கத்தைச் சொல்லுகிறேன். நம்மிடையேயுள்ள மாயத்தில் வல்ல மருத்தன் என்பவனை, அவன் உருவத்தை மாற்றி ஜனகன் வடிவம் எடுத்துக்கொள்ளச் செய்து, அந்த மாயா ஜனகனைச்

சீதையிடம் கூட்டிப் போவோமாயின், அவள் உண்மையில் தன் தந்தை என்று எண்ணி, வேறு வழியில்லாது உமது வசமாய் விடுவாள்'' என்றான். அந்த உபாயத்தைக் கேட்டதும் ராவணன் மிகவும் மகிழ்ந்து, மகோதரனைப் பலவாறாகக் கொண்டாடி விட்டு அவ்வாறே செய்யத் திட்டமிட்டு விரைந்து சீதை இருக்கு மிடத்தை அடைந்தான்.

அவனை அந்த நிசிவேளையில் கண்டதும் சீதை, புலியைக் கண்ட மானைப்போல் மருண்டு அஞ்சினாள். அப்பொழுது, அவள் எதிரிலுள்ள ஓர் இருக்கையில் அமர்ந்துகொண்ட ராவணன், அவளை நோக்கி, ''ஏ சுந்தரி! நீ எப்பொழுது என்மீது இரக்கம் கொண்டு, என் செல்வத்தை எல்லாம் ஆண்டு சுகப்படப் போகிறாய்? நான் போர்க் களம் சென்று அநேகரைக் கொன்று வீழ்த்தி வெற்றியுடன் வந்திருக்கிறேன். நாளை இரவிற்குள் அந்த மானிடர் இருவரும் என் வாளுக்கு இரையாகிவிடுவார்கள்; ஆதலின், நீ இனியேனும் வீரனாகிய என்னை அடிமை கொண்டு, எனக்கு இரக்கம் காட்டி என் உயிரைப் பாதுகாப்பாயாக'' என்று பல இழிவான சொற்களைக் கூறிக்கொண்டே எழுந்து போய் அவள் பாதங்களில் வீழ்ந்து பணிந்தான். அவன் செய்கையைக் கண்ட சீதை மிகவும் நடுங்கி, அவனைப் பார்ப்பதற்கும் கூசி, அங்கிருந்த ஒரு துரும்பினைப் பார்த்துக் கூறுபவள்போல், ''ஏ ராவணத் துரும்பே! என்ன வார்த்தை சொன்னாய்? நான் உனக்கு நஞ்சு என்று நினைத்துக்கொள். என்னிடம் நெருங்குவாயாகில் நீ உடனே மடிவாய். நீ போர்க் களம் சென்று வந்ததாகக் கூறுகிறாய். நீ அப்படிச் சென்றிருந்தால், என் நாதர் உன்னைக் கொன்றிருப்பாரே! ஒரு வேளை நீ அவருக்கு அஞ்சி ஓடி வந்திருப்பாய்; நான் அவரைப் பிரிந்தபொழுதே உயிர் நீங்கி இருப்பேன். எனினும், அவர் தம் தம்பியுடன் இங்கே வந்து, உன் குலத்தோடு உன்னையும் கொல்லுவார் என்று நான் இதுவரை என் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் யாவரும் என் நாதரால் மடிவது திண்ணம். இதனை நீ நன்றாக உணர்ந்து இங்கே நிற்காமல் விரைந்து சென்று விடு'' என்றாள். அச்சமயத்தில், மகோதரன் சில அரக்க வீரர்களுடன் மாயா ஜனகனைக் கட்டி இழுத்துக்கொண்டு வந்து ராவணன்முன்னே நிறுத்தினான்.

சீதை அவனைத் தன் தந்தையென்றே நினைத்து, உடல் பதைத்துத் துடித்து முகத்திலறைந்துகொண்டு அவன் முகத்தைப் பார்த்து, ''தந்தையே! என் பொருட்டு உங்களுக்கும் இக்கதி நேர்ந்ததோ?'' என்று கதறி அழுதாள். அப்பொழுது அந்தப் பாவியாகிய ராவணன், ''இவளை நம் வசப்படுத்துவதற்கு இதுவே தருணம்'' என்று நினைத்து, இளகியவன்போல் நடித்து, சீதையை நோக்கி, ''நான் உன்னுடைய அன்பை அடைய வேண்டும் என்னும் ஆசையினாலே இக்கொடுஞ்செயலை மேற்

கொண்டேன். இனி நீ எனக்கு உடன்படுவாயானால் உன் தந்தையைக் கொல்லாது விட்டுவிடுவதேயன்றி, என் செல்வத்தையும் அவருக்கே கொடுத்து, நானும் உன் தந்தைக்கு அடிமையாகிறேன். நீ மட்டும் எனக்கு உன் சம்மதத்தைத் தெரிவிப்பாய்'' என்றான். அது கேட்ட சீதை மனம் கொதித்து, நிலத்தைப் பார்த்தவாறே, ''அடா ராவணப் பதரே! நீ உன் சுற்றத்துடன் ராமபாணத்தால் அழிவாய். உன் மகனான இந்திரஜித்தை இளையவர் கொல்லப்போகிறார். இவ்வாறு நீங்கள் யாவரும் ஒழிந்துபோவதை நான் அநுமனால் கேட்கப்போகிறேன். இவற்றை நீ உணராமல் ஏதேதோ பிதற்றுகின்றாயே! பேசாமல் எழுந்து போய்விடு'' என்று கூறினாள். இந்தக் கடுஞ்சொற்களைக் கேட்டதும் ராவணன் சீறி எழுந்து, சீதையைக் கொன்றுவிடுபவன் போல் சிறிது அவள்முன் பாய்ந்தான்.

அந்நேரத்தில், அவனைப் போன்று சூது நிறைந்த மகோதரன், ராவணனை நோக்கி, ''இவளுடைய தகப்பனே இவளுக்குப் புத்தி புகட்டுவான். நீர் பேசாமல் உட்காரும்'' என்று சொல்லி அவனை அமரச் செய்துவிட்டு, மாயா ஜனகனுக்கு ஜாடை காட்டினான். உடனே ஜனகனாக வந்த அந்த மருத்தன், சீதையை அணுகி, ''அம்மா! இந்த ராவணனார் மிகச் சிறந்தவர்; தீரம் வாய்ந்தவர்; நீ இவருடைய விருப்பத்திற்கு இணங்கி, இவருடைய பட்டத்துத் தேவியாவதே நன்மையாகும். அவ்வாறு நீ அவருடன் இருந்து எல்லா இன்பங்களையும் அடைவதுடன் என்னையும் இச்சிறையிலிருந்து நீக்குவாயாக'' என்றான். அவனுடைய இச்சொற்கள் தன் செவிகளில் புகுமுன் அவற்றைக் கரங்களால் மூடிக்கொண்டு, ''என் தந்தையா இத்தகைய வார்த்தைகளைச் சொல்லுபவர்! இஃதென்ன காலம்! அறம் பொய்த்ததோ?'' என்று பெருமூச்சு விட்டு, அந்த மாயா ஜனகனை நோக்கி, ''அந்தோ! நீர் அரச குலத்திற் பிறந்தும் ஆண்மை இழந்து அடாதவற்றைக் கூறினீரே! நான் முறை தவறி ஒரு போதும் நடக்கமாட்டேன். ராகவருக்கே உரிமையான நான் இந்த நாயைத் தீண்டுவேனோ? அரச சிங்கத்தை அடைந்த ஒரு பெண் சிங்கம் பிணம் தின்னும் நரியைத் தொடுமோ? என் நாதர் வந்து உம்மை மீட்டால் மீட்க. இல்லையேல் இறந்தொழிக; உம் சொற்களைப் பார்த்தால் நீர் உண்மையில் ஜனகன்தானோ என்ற ஐயம் தோன்றுகிறது'' என்று சொன்னாள். அப்பொழுது ராவணன் மிக்க சீற்றத்துடன் எழுந்து நின்று, ''அறிவில்லாதவளே! நீ அப்படியா சொல்லுகிறாய்? இதோ உன் கண் முன்னால் உன் தந்தையைக் கொல்லுகிறேன் பார்'' என்று சொல்லி வாளை உருவிக்கொண்டு மாயா ஜனகன் அருகிற் போனான். அதுகண்ட சீதை, அஞ்சிப் பின் தேறி,

''என்னையும் கொல்லாய் இன்னே
இவனையும் கொல்லாய் இன்னும்
உன்னையும் கொல்லாய் மற்றிவ்
வுலகையும் கொல்லாய் யானே
இன்னுயிர் நீங்கி என்றும்
கெடாப்புகழ் எய்து கின்றேன்
பின்னையும் எங்கோன் அம்பிற்
கிளையொடும் பிழையாய் என்றாள்.''

தந்தையைக் கொல்லமுடியாது. நீயே விரைவில் மடியப்போகிறாய். ராம பாணம் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது'' என்றாள்.

இவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்த மாயாவியான மகோதரன் ராவணனை நோக்கி, ''ஐயா! இவள் தந்தைதான் உமக்கு அநுகூலமாக மகளுக்கும் புத்தி சொன்னானே. அவள் இணங்காவிடின் அவன் செய்வது யாது? இவள் சொல்லுகிற அந்த நரர்களைக் கொன்றோமாயின் இந்தச் சீதை தானே வழிக்கு வருகிறாள். ஆதலின், நீர் விரைவில் அவ்விருவரையும் கொல்ல முயற்சி செய்யும்'' என்று கூறினான்.

அத்தருணத்தில், போர்க் களத்தினின்று வந்த இரு தூதர்கள் ராவணனையடைந்து மெதுவாக அவன் செவிகளில் கும்பகர்ணன் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்கள். அதனைக் கேட்டதும், ராவணன் தனது பத்து முடிகளும்பட நிலத்தில் வீழ்ந்து, ''ஐயோ, தம்பி கும்பகர்ணா! நீயும் உயிர் விட்டனையோ!'' என்று பலபடியாக அவன் வீரச்செயல்களைப் புகழ்ந்து சொல்லிப் புலம்பினான். அது கேட்ட சீதை மனத்திற்குள்ளேயே மகிழ்ந்தாள். பின்னர் ராவணன், ''இதோ நான் சென்று அந்த மனிதர்களைக் கொன்று, அவர்கள் ரத்தத்திலேயே என் தம்பியின் கடன் கழிக்கிறேன்'' என்று சீறிக்கொண்டு ஓடினான். மகோதரனும், நமக்கும் இக்கதியே என்று நினைத்தவனாய், மாயா ஜனகனை அழைத்துப் போகச் செய்துவிட்டுத் தானும் அவ்விடத்தினின்று நீங்கினான். அவர்கள் சென்றதும் திரிஜடை, ராவணனும் மகோதரனும் மாயா ஜனகனைக் காட்டிச் செய்த சூதுகளை எல்லாம் ஜானகிக்குத் தெரிவிக்க, அது கேட்ட சீதை தன் கலக்கம் நீங்கியிருந்தாள்.

17. அதிகாயன் வதைப் படலம்

அசோக வனத்தினின்றும் நீங்கிய ராவணன், கொழுந்து விட்டெரியும் நெருப்பெனக் கண்கள் சிவந்து யாருடனும் பேசாதவனாய் அரண்மனையை அடைந்தான். அப்பொழுது தனக்கு இருமருங்கிலும் நின்று தொழுதவாறிருந்த மந்திரிகளையும் வீரர்களையும் நோக்கி, ''நீங்கள் யாவரும் என்முன்னே நிற்காதீர்கள் ; பல சேனைகளுடன் போயும் நீங்கள் போரில் தோல்வி அடைந்துவருகிறீர்களேயன்றி, வெற்றியுடன் வருவதில்லை ; சிறந்த வீரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நீங்கள் இருந்தும் கும்பகர்ணனை மடியும்படிச் செய்துவிட்டீர்கள். இனி உங்களால் என்ன பயன்? அந்த நரர்களை வெற்றி கொள்வதானால் இனிப் போருக்குச் செல்லுங்கள். இல்லையெனில் இங்கேயே செத்து மடியுங்கள் ; இந்த இரண்டினுள் எதனைச் செய்கின்றீர்கள்?'' என்று வெகுண்டு கேட்டான்.

அதனைக் கேட்டதும் ராவணன் இளைய புதல்வனான அதிகாயன் என்பவன் மனம் கொதித்துத் தன் தந்தையை நோக்கி, ''தந்தையே! நானும் இவ்விடத்தில் இருக்கின்றேன் என்பதைச் சிறிதும் யோசியாமல், மற்ற யாவருடனும் சேர்த்து வீரமற்றவர்கள் என்று கூறிவிட்டீர்களே! நான் தேவர்களையும் தானவர்களையும் வென்றவன் என்பதைத் தாங்கள் மறந்துவிட்டீர்களா? இப்பொழுதே என்னைச் சண்டைக்கு அனுப்பும். நான் சேனைகளோடு போகவேண்டுமானாலும் போகிறேன், அல்லது தனியே போகச் சொன்னாலும் அப்படியே போய் அவர்களைக் கொல்கிறேன்'' என்று வீரத்துடன் கூறினான். ராவணன் களிப்படைந்து, ''அதிகாயா! உன் வீரமே வீரம் ; நீ அந்த லக்ஷ்மணனை ஒழித்துவிடுவாயாயின், நான் ராமனை எளிதில் கொன்றுவிடுகிறேன். நீயே போருக்குச் செல். மூவாயிரம் கோடி வீரர்களுடனும் யானைகள், குதிரைகள், தேவர்கள் சூழ நடுவே நின்று சண்டை செய்'' என்றான்,

அப்படியே நால்வகைப் படைகளும் தன்னைத் தொடர, கும்பன், அகம்பன், நிகும்பன் என்ற வீரர்கள் தேரேறி இருபுடையிலும் சூழ, அதிகாயன் ஆயிரம் குதிரைகள் பூட்டிய ஒரு தேரின்மீதமர்ந்து கொண்டு போர்க் களத்திற்கு வந்தான். அவனை லக்ஷ்மணன் எதிர்த்தான். இரு திறத்தாரும் போர் செய்யத் தொடங்கினர். அரக்கர்களிலும் வானரர்களிலும் அநேகர் மாண்டுபோனார்கள். அதைக் கண்ட லக்ஷ்மணன் மற்ற வானரர்களுக்குத் தைரியம் கூறி, ''பயப்படாதீர்கள். இதோ ஒரு நொடியில் உங்கள்மேல் வருபவர்களை மாய்க்கிறேன்'' என்று எண்ணிறந்த பாணங்களை ஏவினான். அவற்

ருல் பலர் விழுந்து மடிந்தார்கள். அது கண்ட கும்பன், நிகும்பன், அகம்பன் என்ற மூன்று அரக்க வீரர்கள், மற்றும் சில வீரர்களுடன் வந்து லக்ஷ்மணனை எதிர்த்தார்கள். லக்ஷ்மணன் தன் வில் வன்மையினால் அவர்கள் யாவரையும் ஆயுதங்களை எடுக்காதபடிச் செய்து, அவர்கள் தலைகளை அறுத்துத் தள்ளிவிட்டான்.

இங்கு இப்படியிருக்க, ஆஞ்சநேயன் ஒரு பெரிய மராமரத்தைப் பிடுங்கிக் கையிற்கொண்டு, யானைக் கூட்டங்களில் புகுந்து சாடி, வாலினால் வளைத்துக் கட்டி மோதி அடித்து எல்லாவற்றையும் கொன்றுவிட்டான். இவ்வாறு யானைகள் இறந்துவிட்டமை கண்டு தேவாந்தகன் என்னும் அரக்க வீரன் மிகச் சினந்து ஆஞ்சநேயன்மீது அநேக பாணங்களைச் செலுத்தி, அவன் உடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தான். ஆஞ்சநேயன் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் கையிலிருந்த மராமரத்தால் அவனை ஓங்கி அடித்தான். தேவாந்தகன் அம்மரத்தைத் தண்டினால் துண்டாக்கிவிட்டான். அம்மரம் துண்டானதும் ஆஞ்சநேயன் வெகுண்டெழுந்து, அவன் மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்துத் திருகிக் கீழே தள்ளிக் கொன்றான்.

அதுகண்ட அதிகாயன் 'அநுமனைக் கொல்வேன்' என வெகுண்டு வந்தான். அநுமான் நகைத்து, 'திரிசரனையும் தேய்த்தே கொல்வேன்' என்று கூறவும் திரிசரன் என்னும் வீரன் சீறிப் பொர வந்தான். கணத்தினில் அவனைக் காலன் உலகுக்கனுப்பி அநுமன் மேற்கு வாயிலை அடைந்தான்.

பின்பு அதிகாயன் லக்ஷ்மணனிடம் வந்து அவனை எதிர்த்தான். அதிகாயன் தேர்மீதிருப்பதைக் கண்ட அங்கதன், லக்ஷ்மணனைத் தன் தோள்மீது ஏறிக்கொண்டு போர் தொடங்கும்படி வேண்டினான். அப்படியே அங்கதன் தோள்மீதேறிக் கொண்ட லக்ஷ்மணன் அநேக உயர்ந்த பாணங்களை ஏவி, அதிகாயனுடைய படைகளை எல்லாம் நாசப்படுத்திவிட்டான். பிறகு லக்ஷ்மணன், அதிகாயனைப் பார்த்து, "உன் படைகள் யாவும் ஒழிந்துபோய் நீ தனியாக நிற்கிறாய். நீ போய்விடுகின்றாயா அல்லது என்னுடன் யுத்தம் செய்கிறாயா?" என்று கேட்டான். அதற்கு அவன், "உன்னை நான் கொல்லாமல் போக மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டே தன் சங்கை ஊதி முழங்கியவாறு பல பாணங்களை ஏவத் தொடங்கினான். அப்பொழுது இவனும் அஸ்திரங்களை அவன்மீது விடுத்தான். அதிகாயன் அவற்றைத் தடுத்துப் பல பாணங்களை லக்ஷ்மணன் உடலைத் துளைக்கும்படிச் செலுத்தினான். லக்ஷ்மணன் அவற்றை முறித்துத் தள்ளினான். இவ்வாறே ஒருவருக்கொருவர் அஸ்திரங்

களைத் தொடுத்துவிடுவதும் தடுப்பதுமாய் நெடுநேரம் இருவரும் சளைக்காமல் போர் செய்தனர். அப்போது வாயுதேவன், லக்ஷ்மணனிடம் வந்து, ''இவன் பிரம்மாஸ்திரத்தாலன்றி மற்ற பாணங்களுக்குச் சாகமாட்டான்'' என்று கூறி மறைந்து போனுன். உடனே இளையவன், களிப்புற்று பிரம்மாஸ்திரத்தை எடுத்து மந்திரித்து, அதிகாயன் கழுத்தைக் குறி பார்த்து விடவும், அந்த அஸ்திரம் சென்று அதிகாயன் கழுத்தைக் கொய்து கொண்டு போய்விட்டது. தேவர்கள் யாவரும் மகிழ்ந்தார்கள். விபீஷணன் லக்ஷ்மணனை அடைந்து கொண்டாடி, ''இனி உம்மால் இந்திரஜித்தும் மடிவான்'' என்று சொன்னுன். அதிகாயன் இறந்தமை கேட்ட ராவணனும், ஏனை அரக்கர்களும் பெரு வருத்தம் எய்திப் புலம்பினர்.

18. நாகபாசப் படலம்

லங்கை நகரில் அரக்கியர்களின் அழுகுரல் மிகுதலும், அதனைத் தன் மாளிகையிலிருந்தவாறே கேட்ட இந்திரஜித்து திடுக்கிட்டு, தன் அருகே நின்ற சிலரைக் காரணம் யாதென வினவினுன். அதற்கவர்கள் பயந்துகொண்டு ஏதும் சொல்லாத வர்களாய் நின்றுர்கள். அவர்கள் செயலைக் கண்டதும் அவன் ''இவர்கள் அஞ்சும் காரணம் தெரியவில்லை; எப்படியும் நாம் தந்தையை அடைந்து விசாரிப்போம்'' என்று எண்ணி, உடனே ஒரு தேரின்மீதேறித் தானே விரைந்து செலுத்திக்கொண்டு போய் அரண்மனையிலுள்ள தன் தந்தையைக் கண்டு, ''தந்தையே! இப்படி நகர முழுவதும் துக்கம் பரவியதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான். அதற்கு ராவணன் அவனை நோக்கி, ''அப்பா! போரில் நின் தம்பி அதிகாயனும் கும்ப நிகும்பர்களும் கொல்லப்பட்டார்கள்'' என்றுன். கேட்ட தும் இந்திரஜித்து கடுங்கோபம் கொண்டு, ''யார் அவர்களைக் கொன்றவர்கள்?'' என்றுன். அதற்கு அவன், ''லக்ஷ்மணனும் வானரர்களும்'' என்று கூறினுன்.

இந்திரஜித்து, ''தந்தையே! மிக்க திறமுடைய அந்த மனிதர்களின் முன்னே அறியாச் சிறுவர்களாகிய என் தம்பியரை அனுப்பிச் சாகடித்துவருகிறீர்; இனியும் நான் என்ன சொல் வது? நானே போய் என் தம்பியரைக் கொன்ற அந்தப் பாவி களைக் கொன்றுவருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

போர்க் களத்தை அடையலுற்ற இந்திரஜித்தைக் கண்டதும் லக்ஷ்மணன், விபீஷணனை நோக்கி, ''இவன் யாவன் ?'' என்று கேட்டான். அப்பொழுது விபீஷணன், ''இவனே இந்திரஜித்து என்பவன். இவன் மிக்க வீரமும் மாயச் செயல்களும் உடையவன். இவன் இப்பொழுது சிறந்த வீரர்கள் பலரோடு வருகின்ருன். ஆதலின் நாமும் தகுந்த வீரர்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டும்'' என்ருன். அப்படியே லக்ஷ்மணனும், ஆஞ்சநேயன், சுக்ரீவன், அங்கதன், நீலன், இடபன், குமுதன், மயிந்தன், பனசன், துமிந்தன், கேசரி முதலிய வானரப் பெருவீரர்களைச் சேர்த்துக்கொண்டான். இரு திறத்தாருக்கும் போர் தொடங்கியதும் வானரவீரர்கள் மலைகளையும் மரங்களையும் ஆயுதமாகக் கொண்டு கணக்கற்ற ராக்கதர்களை மடித்து எங்கும் பிணக் காடாகச் செய்து ஆர்ப்பரித்தனர்.

அப்பொழுது இந்திரஜித்து கடுமையாகச் சினந்து வானரர்களருகே தேரைச் செலுத்திப் போய் பல அம்புகளை ஏவி, நாலா பக்கத்திலும் சிதறும்படி அவர்கள் எறிந்த மலைகளையும் மரங்களையும் மற்ற ஆயுதங்களையும் பொடியாகப் பண்ணிவிட்டான். வானரர்கள் ஓடத் தலைப்பட்டனர். அதுகண்ட சுக்ரீவன், ஒரு மராமரத்தைப் பிடுங்கிவந்து அரக்கர்களைச் சுழற்றி அடித்தான். அதனுல் பலர் மடிந்தார்கள். அத்தருணத்தில் இந்திரஜித்து சுக்ரீவன் நெற்றியின்மீதும் மார்பிலும் பாணங்களைச் செலுத்தி அவன் கையிலுள்ள மரத்தையும் துகள் செய்துவிட்டான். அது கண்ட ஆஞ்சநேயன் வெகுண்டு ஒரு பெரிய குன்றினை எடுத்து இந்திரஜித்தின்மேல் எறிந்தான். அவன் அதனையும் துகளாக்கி விட்டு ஆஞ்சநேயனைப் பார்த்து, ''வா வா! குரங்கே! உன்னையே கொல்லவேண்டும் என்று வந்தேன். நீ மலைகளையும் மரங்களையும் ஆயுதமாகக் கொண்டா வெற்றியடையப் போகிருய்!'' என்ருன்.

அவன் அவ்வாறு கேட்டதற்கு ஆஞ்சநேயன், ''அடா பேதாய்! வில்லை எடுத்துப் போர் செய்ய வேறு இரண்டு வீரர்கள் எங்களிடம் உள்ளனர். அவர்கள் வருமளவும் பொறுத்திருக்கமுடியாதெனின் இதோ இம்மலையைத் தடுத்துக் காத்துக் கொள்'' என்று கூறிக் குன்றை இந்திரஜித்தின்மீது எறிந்தான். அது அவ்வரக்கன் மார்பில் பட்டுப் பொடியாயிற்று.

இந்திரஜித்து அநுமன்மீது ஓராயிரம் பாணங்களை ஏவி, அவன் உடலில் அழுத்தினுன். அநுமன் உடல் முழுதும் குருதி சோர இளைத்துத் தளர்ந்து விழுந்தான். மீண்டும் தேறி எழுந்த போது அவனுக்குத் துணையாக நீலன் வந்து சேர்ந்தான். நீலன் ஒரு மலையை அவ்வரக்கன்மீது எறிந்தான்; மலையைப் பொடியாக்கி நீலனை வாளிகளால் துளைத்தான் அரக்கன்; நீலன் நடுங்கி

ஞன். இடையே அங்கதன் தோன்றி மலைகளை எறிந்து யுத்தம் புரிய இந்திரஜித்து நாகமெனப் புகையும் வேகவாளிகள் துரந்து அங்கதன் மயங்கி விழும்படிச் செய்தான்.

அதுகண்ட லக்ஷ்மணன், ''இவனை நானே போருக்கழைத்துக் கொல்லாதிருந்தது தவறாகியதே; இவன் நம் குரங்குத் தலைவர்கள் யாவரையும் கொன்று குவிக்கின்றானே!'' என இரங்கி விபீஷணனிடம் கூறினான். விபீஷணன் லக்ஷ்மணனை நோக்கி, ''இவனை நீயே கொன்றால் அல்லாமல் வேறொருவரால் இவனை வெல்லமுடியாது'' எனக் கூறினான்.

அவ்வளவில் இந்திரஜித்தின் ஒற்றன் லக்ஷ்மணனைச் சுட்டிக் காட்டி, ''இவனே பரதனுக்கு மூத்தான்; நின் தம்பி அதிகாயனைக் கொன்றவன்'' என்று கூறினான்.

அவனே அதிகாயனைக் கொன்றவன் என்றறிந்ததும், பல அஸ்திரங்களை லக்ஷ்மணன்மீது செலுத்தினான். அதற்குள் இந்திரஜித்துடன் வந்த பல அரக்க வீரர்களும் லக்ஷ்மணனைச் சுற்றி வளைத்துக்கொண்டனர். இளையவன் உடனே, இந்திரஜித்து ஏவிய பாணங்களை எல்லாம் எதிர் அம்புகளை ஏவிக் கெடுத்து விட்டு, அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்து தன்னைச் சுற்றி நின்றவர்களைக் கொன்றான்; பலர் அஞ்சியோடினர். பின்னர் லக்ஷ்மணன் ஆஞ்சநேயன் தோள் மீதேறிக்கொண்டு இந்திரஜித்தை எதிர்த்துப் பலவகையான பாணங்களை அவன்மீது எய்தான். அப்பொழுது இந்திரஜித்து சிறிது களைப்புற்றான். அதுகண்ட விபீஷணன், லக்ஷ்மணனை நோக்கி, ''இப்பொழுதே இவனைக் கொன்றுவிடுங்கள்; சிறிது நேரமானால் இரவு வந்துவிடும்; அப்பொழுது இவன் பல மாயங்களைச் செய்வான். நாம் கொல்லமுடியாமற் போகும்'' என்றான். அப்படியே செய்கிறேன் என்று சொல்லிய லக்ஷ்மணன் ஒரு வலிய அம்பினை வில்லில் தொடுப்பதற்குள், அவன் விரைந்து மேலே கிளம்பி, மேகங்களுக்கிடையில் மறைந்துவிட்டான்.

மேகங்களுக்கிடையில் மறைந்திருந்த இந்திரஜித்து தான் எண்ணியபடி, நாகாஸ்திரத்தை எடுத்து லக்ஷ்மணன் முதலானோர்மீது செலுத்திவிட்டான். அது லக்ஷ்மணன் முதலிய யாவர் மீதும் பட்டு, அவர்கள் தோள்களைக் கட்டி அசையமுடியாது விட்டது. விபீஷணன் மட்டும் அதனின்றும் தப்பித்துக்கொண்டான். இந்திரஜித்து மேலும் சில பாணங்களை ஏவி யாவரும் விழுந்து மூர்ச்சையடையச் செய்துவிட்டுத் தன் மாளிகைக்கு ஓடிவிட்டான். இவ்வாறு லக்ஷ்மணன் முதலான யாவரும் விழுந்து மூர்ச்சையுற்றதைக் கண்டு விபீஷணன் மிகவும் வருந்திப் புலம்பத் தொடங்கினான். அப்பொழுது அவனருகிலிருந்த அவன் தோழ

ஞன அனலன் என்ற மந்திரி விரைந்தோடிப் போய் ராமனைக் கண்டு நிகழ்ந்ததைக் கூறலும் அவன் கேட்டு, விரைந்து வந்து தம்பியும் அநுமன் முதலானவர்களும் விழுந்து கிடப்பதைப் பார்த்து, யாவரும் இறந்துபோனுர்கள் என்று கருதி மிகவும் அழுது துக்கித்தான். அது கண்ட விபீஷணன், ராமனை நோக்கி, ''ஸ்வாமி! இவர்கள் யாவரும் இறக்கவில்லை. அந்தக் கொடியோன் இந்திரஜித்தின் நாக பாசத்தால் கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடக்கின்றனர். இப்பாசம் தானே விடுபட்டாலன்றி வேறு எவராலும் மூர்ச்சையைத் தெளிவிக்கமுடியாது. சற்று நேரம் பார்ப்போம். தாங்கள் துயரப்படவேண்டாம்'' என்று ஆறுதல் கூறினுன்.

இங்கே இப்படியிருக்க, லக்ஷ்மணன் இந்திரஜித்து ஆகியோர் செய்யும் போரினைப் பார்த்து நின்ற தேவர்கள் லக்ஷ்மணன் முதலியோர் நாகபாசத்தால் கட்டுண்டதையும், ராமன் துக்கிப்பதையும் பார்த்துக் கலங்கினுர்கள். அப்பொழுது அத்தேவர்களுடன் ஒருவனுய் பார்த்துக்கொண்டிருந்த கருடாழ்வான், தன் தலைவராகிய திருமாலின் தோற்றமாகிய ராமர் துக்கப்படுவதைக் கண்டு சகியாதவனுய்ச் சரேலென்று பறந்து வந்து, மிகுந்த அன்புடன் அவன் முன்னர் வந்து நின்று வணங்கி, ராமபிரானைப் பலவாறு துதித்துக் கொண்டாடினுன். ராமனை மும்முறை வலமாகப் பறந்து வந்தான். தன் பெரிய சிறகுகளை விரித்துப் போர்க் களம் முழுதும் பரவும்படிக் காற்றை வீசினுன். கருடன் நிழல் பட்ட அளவில்,

''வாசம் கலந்த மரைநாள நூலின்
வகையென்ப தென்னை; மழையென்(று)
ஆசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்
தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாளர் என்றிம் முதலோர்
பாசங் கலந்த பசி போல் அகன்ற
பதகன் துரந்த உரகம்.''

வானர வீரர்கள் யாவரும் மீண்டும் மயக்கம் தெளிந்து எழுந்து மகிழ்ச்சியால் பேரொலி எழுப்பினர்.

19. படைத் தலைவர் வதைப் படலம்

போர்க் களத்தில் வானரர்கள் செய்த ஆரவாரத்தைக் கேட்ட அரக்கர்கள் யாவரும் ராவணனிடம் ஓடிவந்து, ''நாங்கள் போருக்குப் போகிறோம்; எங்களுக்கு அனுமதி தாருங்கள்'' என்றுர்கள்.

அத்தருணத்தில் மகாபாரிசுவனும் தூமாட்சனும் வந்து, ''நாங்களும் போருக்குச் செல்லுகிறோம்'' என்றனர். அப்போது அங்கிருந்த தூதுவர், ''இவ்விருவரும் இந்திரஜித்து யுத்தம் செய்யும் பொழுது, அவரைத் தனியே விட்டுவிட்டுப் பயந்தோடி வந்து விட்டார்கள்'' என்று கூறினர். தூதுவர் உரைத்தது கேட்ட ராவணன் மிகக் கோபமுற்றான்; அவர்களுடைய மூக்கை அரியுமாறு கட்டளையிட்டான். அப்போது மாலியவான் தடுத்து ராவணனைச் சமாதானப்படுத்தினன்.

ராவணன், மாலியவான் கூறியது கேட்டுக் கோபம் நீங்கித் தக்க படைகளைக் கொடுத்துப் போருக்குச் செல்ல அனுமதி அளித்தான். உடனே, மகாபாரிசுவனும், தூமாட்சனும், மாலி, பிசாசன், வச்சிரதந்தன், யஜ்ஞசத்ரு, சூரியசத்ரு என்ற படைத் தலைவர்களுடன் பத்து வெள்ளம் ராட்சத சேனைகளை அழைத்துக்கொண்டு போருக்குப் புறப்பட்டார்கள். வானரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராட்சத வீரனுடன் எதிர்த்தனர். முதலில் ஆறுவெள்ளம் ராட்சத சேனைகளை ராமன் கொன்று விட்டான். எஞ்சியிருந்த நான்கையும் லக்ஷ்மணன் கொன்றான். அப்பொழுதே மகாபாரிசுவனுடன் அங்கதன் எதிர்த்துச் சண்டையிட்டு அவனை மடிவித்தான். அவ்வாறே பிசாசனுடன் பனசனும், சூரியசத்ருவுடன் சுக்ரீவனும், யஜ்ஞசத்ருவுடன் லக்ஷ்மணனும், தூமாட்சனுடன் அநுமனும் சண்டையிட்டனர். கடைசியில் வானரவீரர்கள் ராக்கதத் தலைவர்களைக் கொன்று வெற்றி முழக்கம் செய்தார்கள். அரக்கர்கள் யாவரும் மடிந்ததைக் கண்ட ஒற்றர்கள் ஓடிப்போய் ராவணனிடம் சொல்லினர்.

20. மகரக் கண்ணன் வதைப் படலம்

சிறந்த படைத் தலைவர்கள் யாவரும் மடிந்துபோனதைக் குறித்து ராவணன் வருந்திக்கொண்டிருந்தபொழுது கரனுடைய மகனும். மாயாவியுமான மகரக் கண்ணன் என்பவன் அவனை அடைந்து, ''ஐயனே! நான் இருக்கும்பொழுது நீர் ஏன் வருந்தவேண்டும்? நெடுநாட்களாக என் தந்தையைக் கொன்ற அந்த ராமனைக் கொல்லவேண்டும் என்ற ஆத்திரத்துடனிருக்கிறேன். ஆதலின் இப்பொழுது என்னை அனுப்பும்'' என்றான். ராவணன் உத்தரவு அளித்ததும், அவன் படைகளுடன் போர்க் களம் சென்று கர்சித்தான். அது கேட்ட வானரவீரர்கள் தம் சேனையுடன் வந்து அரக்கர்களை வாட்டினார்கள். இரு தரத்தாருள்ளும் பலர் மடிந்தார்கள். அப்

பொழுது மகரக்கண்ணன், ராமன்முன் தன் தேரைச் செலுத்தி நிறுத்தி அவனை நோக்கி, ''நீ என் தந்தையைக் கொன்றாய் அன்றே! இன்று அப்பழியைத் தீர்க்கவே வந்தேன்'' என்றான். அதற்கு ராமன், ''நீதான் கரன் மகனோ? நெடும்பகை தீர்க்க வந்தாயோ? ஆண்மையாளனுக்கு ஏற்ற சொற்களே கூறினை'' என்றான். அதுகேட்ட மகரக் கண்ணன் ராமன்மீது அநேக பாணங்களை ஏவினான். அவற்றையெல்லாம் ராமன் தன் பாணங்களால் தடுத்து முறித்துவிட்டான். அதன் பிறகு மகரக் கண்ணன் தன் மாயத்தால் இடி, மழை, காற்று, தீ முதலியவற்றை உண்டாக்கினான். அது கண்ட வானரர்கள் நாலாபக்கமும் ஓடத் தலைப்பட்டனர். அப்பொழுது ராமன் அக்கினி, வாயு அஸ்திரங்களால் அவற்றைத் தடுத்தான். அது கண்ட மகரக் கண்ணன் அந்தரத்தில் மறைந்து தன் மாயையால் எங்கும் தன் உருவமே காணும்படிச் செய்தான். ராமன் மாயையை உணர்ந்துகொண்டு, உடலினின்று வழியும் உதிரம் வரும் திசையை நோக்கி, அவன் மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடித்து, பாணத்தைச் செலுத்தினான். அந்த அம்பினால் மகரக் கண்ணன் தலை அறுப்புண்டு கீழே விழுந்து இறந்தான். அச்சமயத்தில் நளன் என்ற வானரன் ரக்தாக்ஷனை யும், பனசன் என்பவன் சிங்கனையும் எதிர்த்துக் கொன்று விட்டார்கள். இப்படியாக, மகரக் கண்ணனும் அவன் துணைவர்களும் சேனைகளும் மாண்டனர். தூதுவர்கள் ராவணனிடம் சென்று மகரக் கண்ணன் இறந்ததைக் கூறினார்கள்.

21. பிரம்மாஸ்திரப் படலம்

ராவணன் மூலமாக மகரக் கண்ணன் முதலிய படைத் தலைவர்கள் பலர் இறந்துபோனதைக் கேட்டதும் இந்திரஜித்து மிகுந்த சினங்கொண்டு, ''நான் இப்பொழுதே போய் அந்த இரண்டு மனிதர்களையும், வானர சேனைகளையும் கொன்று குவித்து வருகிறேன்'' என்று அறுபது வெள்ளம் சேனைகளோடு, ஆயிரம் சிங்கங்கள் பூட்டிய தேரில் ஏறிக்கொண்டு, போர்ப் பறை முழங்க யுத்த களத்திற்கு வந்தான். வந்து தன் சேனையைக் கிரவுஞ்ச வியூகமாக வகுத்து நிறுத்தினான். அப்பொழுது ராமன் கோபித்துக் கோதண்டத்துடன் எழுந்து போர் செய்யச் சித்தமானான். அப்பொழுது லக்ஷ்மணன் ராமனைப் பார்த்து, ''அண்ணா! முன்னர் இந்த இந்திரஜித்து என்னை நாகபாசத்தினால் கட்டி வெற்றி கொண்டதாக ஒரு பெயரை உண்டாக்கிக்கொண்டிருக்கிறான். இவனை

நானே கொன்றால்தான் அப்பெயர் ஒழியும். ஆதலால் இவனை நான் ஒருவனே எதிர்த்து இவன் தலையை அறுத்து வந்து தங்களுடைய பாதத்தில் வைக்கிறேன். அப்படி நான் செய்யாமல் போனால் இனி நான் வில்லைக் கையால் எடுப்பதில்லை'' என்று சூளுரைத்தான். ராமன் கேட்டு மகிழ்ந்து, ''நீ கூறிய படியே செய்! உனக்கு வெற்றி உண்டாகட்டும்'' என்று வாழ்த்தினான்.

லக்ஷ்மணன் உருத்து அநேக ராட்சதரை மடித்தான். ராமனும் வேறொரு பக்கம் பல அரக்கர்களை மடிவித்தான். இவ்வாறு சேனைகள் யாவும் மடிய இந்திரஜித்து மாத்திரம் தன் தேரோடு தனித்து நின்றான். அப்பொழுது லக்ஷ்மணன் எய்த பாணங்களால் துன்பப்பட்டு, ஆகாயத்தின் வழியே லங்கையுள் புகுந்தான். அப்போது அஸ்தமனமாகிவிட ராமன் விபீஷணனை நோக்கிப் படைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரம் செய்யுமாறு ஏவினான். அவனும் களத்தினின்றும் நீங்கிச் சென்றான். பின்னர் 'சேனை காவல் நினது' என இளையபெருமாளிடம் கூறி ராமபிரான் அஸ்திர பூஜை செய்யப் பாசறைக்கு ஏகினார்.

லங்கையில் சென்ற இந்திரஜித்து ராவணனிடம் ''லக்ஷ்மணன் என்மீது பிரம்மாஸ்திரம் பிரயோகம் செய்ய எண்ணிய அளவில் மறைந்து இங்குற்றேன். இனி, அவர்களை வஞ்சனையால்தான் வெல்லல் இயலும். என்னை அவர்கள் மறக்கும் படி பெரும் படையை உந்தினால் யான் மறைந்து நின்று பிரம்மாஸ்திரம் தொடுத்து அவர்களை வீறழிப்பேன். இடையில் வெற்றியளிக்கும் வேள்வியொன்றியற்றி யாவரையும் அழிப்பேன்'' என்றான்.

ராவணன் அதற்கிசைந்து மகோதரனை அழைத்துப் பெருஞ் சேனைகளுடன் போருக்குச் செல்லப் பணித்தான். அப்படியே அவன் சென்று, அநுமனுடன் போர் செய்தான். இப்படியே ஆஞ்சநேயன், சுக்ரீவன் முதலியோர் தனித்தனியாகப் போரியற்றி, அரக்க சேனைகளைக் கொன்று பிணக்குவியலாக்கிவிட்டனர். அக்காலையில், மகோதரன் தேவேந்திரனைப் போலவும், மற்றும் சிலரை முனிவர்கள் போலவும் வரச் செய்து லக்ஷ்மணனோடு சமர் விளைத்தான். லக்ஷ்மணன் இக்காட்சியைப் பார்த்ததும், 'தேவர்களும் முனிவர்களுமா நம்முடன் சண்டை தொடுக்கிறார்கள்'! என்று திகைத்து நின்றான். இவ்வாறு யாவரும் திகைத்து நிற்க 'இதுவே தக்க தருணம்' என்றெண்ணிய இந்திரஜித்து ஆகாயத்தில் ஒளிந்துகொண்டு லக்ஷ்மணன் முதலியோர்மீது பிரம்மாஸ்திரத்தைச் செலுத்தினான். அதிலிருந்து அநேகமாயிரம் பாணங்கள் புறப்பட்டு லக்ஷ்மணன்,

சுக்ரீவன், ஆஞ்சநேயன் முதலிய யாவர்மீதும் மோதிய மாத்திரத்தில், எல்லோரும் மயங்கிக் கீழே வீழ்ந்து மூர்ச்சித்து விட்டனர்.

அதன் பிறகு இந்திரஜித்து, மகோதரனுடன் நகர் சென்று ராவணனை அடைந்து தான் வெற்றி பெற்றதைக் கூறினன். ராவணன் ஆனந்தமடைந்தான்; பின்னர் ''அந்த ராமன் இறக்கவில்லையே!'' என்று கேட்டான். இந்திரஜித்து, ''ஐயனே! அச்சமயத்தில் அவன் எங்கேயோ போய்விட்டிருக்கிறான். அதனல் அவன் தப்பிவிட்டான்'' என்று அவனுக்குச் சொல்லித் தன் மாளிகைக்குள் ஏகினன். மகோதரனும் விடை பெற்றுச் சென்றான்.

இவ்வாறிருக்க பாடி வீட்டிற்குப் போய் அஸ்திர பூஜை செய்துவிட்டுப் போர்க் களத்திற்குத் திரும்பி வந்த ராமன், அங்கே இருள் சூழ்ந்து ஒன்றும் புலப்படாதிருந்ததால் அரக்கர்களால் ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்று நினைத்து, உடனே அக்கினி அஸ்திரத்தை எய்து வெளிச்சம் உண்டாக்கி எங்கும் பார்க்க மயக்கமுற்றவர் போலவும் மடிந்தவர்போலவும் கிடக்கும் சுக்ரீவன், ஜாம்பவான், நீலன், அங்கதன் முதலியோர்களைக் கண்டு, ''அந்தோ! என் பொருட்டு நீங்கள் யாவரும் உயிரைக் கொடுத்துவிட்டீர்களே!'' என்று வருந்தியவாறு சற்று தூரத்தில் கிடக்கும் தம்பியைக் கண்டான். கண்டதும் அவன் அருகே ஓடி, ''ஆ! தம்பி! நீ கூட இறந்துவிட்டனையோ? இனி நான் மாத்திரம் ஏன் உயிருடன் இருக்க வேண்டும்?'' என்று லக்ஷ்மணனைத் தழுவிக்கொண்டே தானும் அவன் பக்கலில் விழுந்து மூர்ச்சையானன்.

ராமன் அப்படி ஒரு நாழிகை வரையில் மூர்ச்சையுற்றிருந்து பிறகு உணர்வு பெற்றதும் தம்பியைப் பார்த்துக்கொண்டே, ''ஐயோ! தம்பி பரமபதம் அடைந்துவிட்டான்; இனி ஒரு பொழுதும் எழுந்து வரமாட்டான்; ஆ! என் அருமைத் தம்பி! என்னுடன் காட்டிற்கு வந்து, ஊணும் உறக்கமும் இல்லாது என் சேவையே பெரிதென்று செய்து வந்த உன்னை நான் எவ்வாறு பிரிந்திருப்பேன்? இத்தகைய உடன் பிறப்பாளனை நான் எப்பிறவியில் காணப்போகிறேன்! இத்துயரம் காண்பதற்கா உன்னைக் காட்டிற்கு அழைத்துவந்தேன்? நாம் தருமத்தை மேற்கொண்டதற்குக் கிடைத்தது பயன் இதுவோ? நீ இறந்தபின் எனக்கு என்ன இருக்கிறது? நானும் உன் கூடவே இறப்பேன்; சீதையும் இறப்பாள். பரதனும் சத்ருக்கனனும் யாவரும் இறப்பார்களே! நம்முடைய சபதமும் நிறைவேறாமற்போயிற்றே!'' என்று பலவாறு சொல்லிப் புலம்பினன்; புலம்பியவாறே, மீண்டும் லக்ஷ்மணனைத் தழுவிக்

கொண்டு மூர்ச்சையடைந்தான். அதைக் கண்ட தேவர்கள் யாவரும் புலம்பித் துக்கமுற்றுர்கள்.

இப்படி ராமன் மரணத்திற்கு ஒப்பான மூர்ச்சையுற்று வீழ்ந்து விட்டதும் யாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த அரக்க தூதர்கள் விரைந்துபோய் ராவணனைக் கண்டு, ''ஐயா! இந்திரஜித்தின் பாணத்தால் லக்ஷ்மணனும் வானரர்களும் இறந்துபோனுர்கள். அவர்களிறந்த துக்கத்தால் ராமனும் மாண்டான்'' என்று சொன்னுர்கள். அச்சொற்களைக் கேட்ட ராவணன் அடங்கா மகிழ்ச்சி கொண்டு, அவற்றைச் சொன்ன தூதுவர்களுக்குத் தக்க பரிசளித்தான்.

22. சீதை களங்காண் படலம்

அரக்கர்கள் பெற்ற வெற்றியை முரசறைந்து யாவருக்கும் தெரிவிக்கும்படி ராவணன் கட்டளையிட்டான். ''எதிரிகளான ராமனும் தம்பியும் மாண்டு போயினர். இனிப் போரில்லை'' என்று களித்திருந்த ராவணன் மருத்தன் என்பவனை அழைத்துப் போர்க் களத்தில் மாண்டு கிடக்கும் அரக்கர்களின் உடலையெல்லாம் எடுத்துக் கடலில் எறிந்துவிடும்படிக் கட்டளை இட்டான். அவனும் அப்படியே எறிந்துவிட்டு வந்து ராவணனிடம் கூறினுன். பின்னர் ராவணன், சில அரக்கியரை வரவழைத்து, நீங்கள் வனத்திலிருக்கும் சீதையைத் தேவ விமானத்தில் ஏற்றிச் சென்று போர்க் களத்தை அடைந்து, பிணங்களாகக் கிடக்கும் ராமன், லக்ஷ்மணன் முதலானேரை அவளுக்குக் காட்டுங்கள். அப்பொழுதுதான் அவள், அவர்கள் மீதுள்ள ஆசையை மறந்து என் வழிக்கு வருவாள்'' என்று கூறினுன். அவன் கூறியபடியே அந்த அரக்கியர், விமானத்தில் சீதையை ஏற்றிக்கொண்டு போர்க் களத்தை அடைந்தார்கள். சீதை விமானத்திலிருந்தவாறே, வீழ்ந்து கிடக்கும் ராமனையும் இளையவனையும் பார்த்து ஓவென்று கதறி விமானத்திலேயே வீழ்ந்து மூர்ச்சையடைந்தாள். அவளுடைய நிலையைக் கண்ட தேவமாதர்களும் கலங்கி அழுதார்கள். இரக்கமற்ற அரக்கப் பெண்களும் அழுது பலவகை உபசாரங்களைச் செய்ய சீதை சிறிது உணர்ச்சி பெற்ருள். சீதை தன் நாயகனையும் மைத்துனனையும் பார்த்துப் பார்த்து முகத்திலும் மார்பிலும் அடித்கொண்டு, நெஞ்சுருகி விமானத்தின்மீதே வீழ்ந்து புரண்டு அழுது, ''ஐயோ! தெய்வமே! என் பிராண நாதரே! நீர்


இங்கே வந்து இக்கொடியோரை வதைத்து என்னைச் சிறையிலிருந்து மீட்பீர் என்ற தைரியத்தினுல் நான் இதுவரை என் உயிரை வைத்திருந்தேனே. என் மைத்துனரே! என் துயரத்தைக் கேட்டறிந்தும் நீரும் அதனை நீக்காது போய்விட்டீரோ? கோசலை இனி ஒருபோதும் உயிர்வாழாள்; இளைய தம்பிகளும் வாழார்; தீவினையே எண்ணிக் காகுத்தனைக் கானகத்துப் போக்கிய கைகேசியின் கருத்து இதுதானே? 'ராமன் முடிவதற்குமுன்னே நீ முடி' என்று மாதா கூறிய அறவுரையின் வழி நின்றனையோ?'' என்று அரற்றினுள்; 'ராமன் திருமேனிமீது விழுந்து உயிர் விடுவேன்'' எனப் பாய்ந்து எழுந்தாள்.

அதுகண்ட திரிசடை அவளைத் தடுத்து நிறுத்தி மெதுவாக அவள் காதில் மட்டும் கேட்கும்படி, ''அம்மா! ராமர் இறக்கவில்லை; லக்ஷ்மணர் முகத்திலும் ஒளி வீசுகிறது. ஆஞ்சநேயர் சிரஞ்சீவியாதலின் அவர் சாகமாட்டார். யாவரும் மூர்ச்சையுற்றிருப்பதுபோல் காண்கிறது. இந்தத் தேவவிமானம் மங்கலம் நீங்கிய பெண்டிரைத் தாங்கமாட்டாது. உன்னைத் தாங்கிக்கொண்டிருப்பதால் ராமர் இறக்கவில்லை என்பது உறுதியாகும். இதற்குமுன் அரக்கர்கள் செய்த மாயங்களுக்கெல்லாம் இவர்கள் பிழைத்துக்கொண்டதை அறிந்திருக்கிறோம். அவற்றைப்போல இத்துன்பமும் இவர்களைவிட்டு விரைவில் நீங்கும். கற்பிற் சிறந்த உனக்கு எத்தகைய தீங்கும் நேராது. நீ கவலைப்படவேண்டாம்'' என்று தேற்றினுள். அதன் பிறகு சீதை தைரியமடைந்து திரிசடையை நோக்கி, ''தங்காய்! உன்னுடைய உறுதிமொழிகளாலேயே நான் இதுவரை உயிர் தரித்திருக்கிறேன்; இனியும் உன் வார்த்தைகளை நம்பி இன்றிரவு வரை உயிர் வைத்திருக்கிறேன். அதற்குள் இவர்கள் எழாவிடில் நான் உயிரைப் போக்கிக்கொள்ள வேண்டியதே'' என்றுள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அரக்கியர் சீதையை அசோகவனத்திற்கொண்டு சேர்த்தார்கள்.

23. மருத்துமலைப் படலம்

ராமன் முதலியோருக்கு உணவுப் பொருள்களைத் தேடித் திரும்பிய விபீஷணன் பாடி வீட்டைச் சேர்ந்தான். அங்கு



ராமன் இல்லாமையால் தான் கொண்டு வந்தவற்றை அங்கேயே வைத்துவிட்டு, போர்க் களத்தை அடைந்து பார்க்க, எங்கும் இருள் சூழ்ந்து இருந்ததைக் கண்டு திடுக்கிட்டு, 'ஏதோ இயற்கைக்கு மாருக இருக்கின்றதே! போர்க் களம் சந்தடியற்று இருக்கும் ?' என்று ஆலோசித்தவாறு ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்துக்கொண்டு அதன் வெளிச்சத்தால் பார்க்க, வானரர்கள் மாண்டு வீழ்ந்திருப்பதையும், அவர்களின் அருகே லக்ஷ்மணன் உயிரற்றுக் கிடப்பதையும், அவனைத் தழுவியவாறு ராமன் வீழ்ந்து கிடப்பதையும் பார்த்து மிகவும் மனம் வருந்தி, 'இஃது இந்திரஜித்தின் செயல்; அவன் ஏவிய பிரம்மாஸ்திரத்தால் லக்ஷ்மணன் முதலியோர் மரணமுற்றிருக்கிருர்கள் : ராமன் தம்பியின் துயர் கண்டு ஆற்ருது, துக்கித்து மூர்ச்சையடைந்திருக்கிருர்' என்று அறிந்துகொண்டு. சிறிது நேரம் துக்கித்துப் பின்னர் ஒருவாறு ஆற்றிக்கொண்டு, "அறவழியில் செல்லும் இவர்களுக்கு ஒருபொழுதும் தீங்கு வராது விரைவிற் பிழைத்துக்கொள்வார்கள்; ராமர் மூர்ச்சை தெளிவுறுவதற்குள் இவர்கள் எழுவதற்கு வழி தேடவேண்டும். ஆஞ்சநேயன் முதலியோர் எங்கே இருக்கிருர்கள் என்பதைப் பார்ப்போம்" என எண்ணிக் களம் முழுவதும் தேடினுன்; அநுமனைக் கண்டான். ஆஞ்சநேயன் அப்பொழுது, சோர்ந்துபோய் பிணக்குவியலின் மீது படுத்திருந்தான். விபீஷணன் அவன் உடலிலிருந்த அப்புகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு, மேகநீரைத் தெளித்தலும் அவன் சோர்வு நீங்கி விபீஷணனைத் தழுவிக்கொண்டு நிகழ்ந்தது கூறினுன். பின்பு இருவரும் ஜாம்பவானைத் தேடி அடைந்தார்கள். அவன் ஆஞ்சநேயனை நோக்கி, "வீரசிகாமணியே! இந்திரஜித்தால் தொடுக்கப்பட்ட பிரம்மாஸ்திரம் இவ்வாறு செய்தது. விரைவில் சஞ்சீவியை இங்குக் கொண்டுவந்தால் நம்மவர் எல்லாரும் பிழைத்துவிடுவர். அதனைக் கொண்டு வரும் ஆற்றல் உமக்குத்தான் உண்டு; இங்கிருந்து வடக்கே ஐம்பதினுயிரம் யோசனை தூரத்திலுள்ள சஞ்சீவி மலையைச் சென்றடைவாய். இறந்தாரை உயிர்ப்பிக்கும் மருந்தும், உடல் அங்கங்கள் வெவ்வேருக வெட்டுண்டிருப்பினும் ஒன்ருய்ப் பொருத்தும் மருந்தும், உடலிற் பாய்ந்து தங்கிய படைக்கலங்களை வெளிப்படுத்தும் மருந்தும், முற்றும் உடல் நசித்துப் போயினும் மீண்டும் முன்னுருவே அருளும் அதிசய மருந்தும் அம்மலையில் உள. அவைகளை உடனே கொண்டுவரவேண்டும்" என்று சொல்லி அவைகள் இருக்கும் மலையையும், செல்லும் வழியையும் மற்ற விவரங்களையும் கூறினுன்.

உடனே ஆஞ்சநேயன், "இந்த இரவு கழிவதற்குள் நான் அவற்றைக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி அவ்விருவரிடமும் விடை பெற்றுத் தன் பேருருவை எடுத்துக்கொண்டு

ஆகாயத்திற் கிளம்பிப் பாய்ந்து சென்று ஜாம்பவான் குறிப்பிட்ட சஞ்சீவி மலேயில் குதித்தான். அப்பொழுது அங்குள்ள தேவதைகளைக் கண்டு, தான் வந்த காரியத்தைக் கூறி அவர்கள் அனுமதி பெற்று, அம்மலேயிலிருந்த மருந்துகளைக் கண்டான். அவை இன்னின்னவை என்று அறிந்துகொள்ள முடியாதபடியால் ஆஞ்சநேயன் அந்த மலேயையே அடியோடு பெயர்த்து, ஒரு பந்துபோல் ஒரு கையில் தாங்கி எடுத்துக்கொண்டு உயரக் கிளம்பிப் பாய்ந்து விடிவதற்குள் போர்க்களத்திற்கு வந்துவிட்டான். அவன் அம்மலேயைத் தாங்கியபடியே பூமியில் காலே ஊன்றியதும், அச்சஞ்சீவிமலே அரக்கர்கள் இருக்கும் லங்கையில் இறங்கக்கூடாதென்று உயரத்திலேயே நின்றுவிட்டது. ஆஞ்சநேயன் அதனைத் தூக்கிக்கொண்டு வந்த விசையினுல் மலேயின் காற்றுப்பட்ட மாத்திரத்தால் எல்லாரும் பிழைத்து எழுந்தார்கள். லக்ஷ்மணன் உறங்கி எழுந்தவன் போல் நின்று ராமனை வணங்கினுன். ராமன் அவனைத் தழுவிக்கொண்டு களிப்படைந்தான். அரக்கர்களின் உடலெல்லாம் மருத்துவனுல் கடலில் எறியப்பட்டபடியால் ஒழிந்துபோயின. யாவரும் பிழைத்து எழுந்தது கண்ட தேவர்கள் மகிழ்ந்து கூத்தாடினுர்கள். இந்திரஜித்துவால் ஏவிய பிரம்மாஸ்திரம் ராமன்முன் தோன்றி, ''இனி உங்களுக்கு எவ்விதத் துன்பமும் இல்லே'' என்று சொல்லிப் போய்விட்டது. அத்தருணத்தில் ஆஞ்சநேயன் ராமனிடம் வந்து வணங்கலும், அவன் அவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினுன். ஜாம்பவான் மாருதியைப் பார்த்து, ''வாயு மைந்தரே! இனி இச்சஞ்சீவிமலே இங்கே இருக்கக்கூடாது. ஏனெனில் இறந்த அரக்கர்கள் பிழைத்துக்கொண்டே இருப்பார்கள். இதை நீர் மீண்டும் அது இருந்த இடத்தில் சேர்ப்பித்துவிடவேண்டும்'' என்றுன். அதுகேட்ட ஆஞ்சநேயன், ''இம்மலேயைத் திரும்பவும் எடுத்துக்கொண்டுபோய் முன்னிருந்த இடத்தில் வைத்துவிட்டு வருவேன்'' எனக் கூறி மலேயுடன் சென்றுன்.

24. களியாட்டுப் படலம்

போர்க்களத்திலுள்ளவர் செய்கை இவ்வாறிருக்க, லங்கையிலுள்ள தன் மாளிகையிலிருந்த ராவணன் பகைவர் யாவரும் மாண்டுபோனுர்கள் என்னும் களிப்பு மேலிட்டு இன்பத்தில் திளேத்திருக்க எண்ணினுன். அதன்படி அவன், மேனகை, திலோத்தமை முதலான அரம்பையர்களேயும், அரக்க மாதர்

களையும் பலவான இன்னிசைக் கருவிகளுடன் ஆடவும் பாடவும் செய்து, ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தான்.

அப்பொழுது, போர்க் களத்திலிருந்து, உயிர்த்தெழுந்த வானரர்களின் ஆரவாரவொலி அவன் செவிகளிற் கேட்டது. பிறகு அவ்வொலியை அடுத்து, ராமலக்ஷ்மணர்களுடைய விற்களின் ஒலிகளும் கேட்டன. அதனால் அவன் மிகுந்த பிரமையோடு சுற்றிலும் பார்க்க, அங்குள்ள நடன மகளிரும் நட்டுவர்களும் வானரக் கூட்டங்களாகவும் ராம லக்ஷ்மணர்களாகவும் அவனுக்குத் தோற்றினர். அவ்விதம் தோன்றவே ராவணன் மிரள மிரள விழித்தான். அப்பொழுது, போர்க் களத்தில் நிகழும் செய்திகளை அறிந்து வரப்போயிருந்த தூதுவர் ஓடி வந்து, வேறு எவருக்கும் கேட்காதிருக்கும்படி வண்டின் உருவங்கொண்டு மெதுவாக ராவணன் செவியில் எதிரிகள் பிழைத்தெழுந்ததையும் மற்றுமுள்ள விவரங்களையும் கூறினார்கள்.

25. மாயா சீதைப் படலம்

தூதுவர் கூறியதைக் கேட்டவுடனே ராவணன் களியாட்டத்தை நிறுத்திவிட்டுச் சரேலென்று எழுந்து, மிக்க மனக் கொதிப்புடன் மந்திராலோசனை மண்டபம் புக்கான். அப்பொழுது அங்கே, அவன் மைந்தனான இந்திரஜித்தும், பாட்டன் முதலான பெரியோர்களும் மகேந்திரனும் இருந்தார்கள். போர்க் களத்தில் நிகழ்ந்த ஆரவாரங்களையும், தூதுவர்கள் கூறியவற்றையும் ராவணன் அவர்கள் யாவருக்கும் கூறினான்.

அத்தருணத்தில், மாலி ராவணனை நோக்கி, ''ஐயனே! பிரம்மாஸ்திரம் ராமனை மட்டும் தீண்டாது வந்ததால், அவன் திருமாலின் அம்சமானவன் என்பது தெரிந்துவிட்டது'' என்றான். இந்திரஜித்து, ''நான் நிகும்பலை வேள்வி செய்யப்போகிறேன். அது நன்கு முடியுமேயாகில் வெற்றி நமக்கே'' என்றான். ராவணன், அவனை, ''நீ அவ்வேள்வியை உடனே செய்து முடிப்பாயாக'' என்றதும், இந்திரஜித்து அவனைப் பார்த்து, ''நான் அந்த வேள்வியைச் செய்கிறேன் என்பதை உம்முடைய தம்பியே எதிரிகளுக்குக் கூறிவிடுவான். எதிரிகள் அறிந்ததும் என் யாகத்தை அழிக்கத் தொடங்குவார்கள். அவர்கள் அவ்விதம் செய்யாதிருக்க நாம் ஓர் உபாயத்தைச் செய்யவேண்டும். அது யாதெனில், ஓர் அரக்கனைச் சீதை போலாக்கி, அந்த அநுமன்

முன்னிலையில் வெட்டிவிட்டு, அயோத்தியிலுள்ளவர்களையும் கொல்ல அங்குச் செல்வதாகப் போக்குக் காட்டி, நான் அவ் வேள்வியைத் தொடங்கவேண்டும். அநுமன் அச்செய்தியை ராமன் முதலியோருக்குக் கூறியதும், அவர்கள் துக்கம் மேலிட்டு மனம் கலங்கியிருப்பார்கள். அக்கலக்கம் நீங்குவதற்குள் நான் என் யாகத்தை முடித்துக்கொண்டு விடுவேன்'' என்று கூறினன். ராவணன் அதற்கிசையவும் இந்திரஜித்து மாயா சீதையை உண்டாக்கி வரச் சொன்ஞன்.

இங்கே இவர்களுடைய ஆலோசனை இவ்விதமாயிருக்க, போர்க் களத்தில் சுக்ரீவன், ராமனைப் பார்த்து, ''ஸ்வாமி! நமக்கு பலவிதமாய்த் துன்பம் செய்யும் ராவணன் முதலியோர் கலங்கும்படி அந்த லங்கையைச் சுட்டெரித்தாலென்ன?'' என்று கேட்டான். அதற்கு ராமன், ''அப்படியே செய்'' என்றான். உடனே சுக்ரீவன் கட்டளையால் வானரர்கள் யாவரும் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையை ஏந்தி எடுத்து லங்கை நகரை நோக்கி வீசினர்கள். அவை ராம லக்ஷ்மணர்கள் தொடுக்கும் ஆக்னேயாஸ்திரம் போல விரைந்து சென்றன. அவற்றல் நகர முழுவதும் திடீரென்று தீப்பற்றி எரியத் தொடங்கி, அங்குள்ள பல மாடங்களும் கூடங்களும் கோபுரங்களும் இடிந்து விழுந்தன. நகரத்திலுள்ளோர் யாவரும் அலறிக்கொண்டு ஆகாயத்தில் எழும்பிப் பறந்தனர்.

அப்பொழுது சஞ்சீவி மலையை அதனிருப்பிடத்தில் வைத்து விட்டுவந்த ஆஞ்சநேயனும் லங்கையின் மேற்கு வாயிலை அடைந்து பெருமுழக்கம் செய்து கர்ஜித்தான். அவன் குரலைக் கேட்ட லங்கையிலுள்ளோர் யாவரும், ''ஐயோ? அந்தப் பெருங்குரங்கு திரும்பவும் வந்துவிட்டதே'' என்று நடுங்கி அலறினர்கள். அப்பொழுது இந்திரஜித்து, அநுமன் மேலை வாயிலில் வந்திருப்பதை உணர்ந்து, தான் எண்ணி முடித்தபடி, மாயா சீதையை அவள் கூந்தலைப் பிடித்து இழுத்துப் போய், அநுமன் முன்னே நிறுத்தி, ''இவளாலேயே இத்துன்பங்கள் நேர்ந்தெனவென்று என் தந்தை இவளை வெறுத்துச் சித்ரவதை செய்யும்படி கட்டளை இட்டிருக்கிருர். நான் இவளை வதைத்துக் கொல்லப் போகிறேன். பார்த்துக்கொண்டிரு'' என்று உரைத்தான். அது கண்ட ஆஞ்சநேயன் மனம் பதறிப் பல நீதிகளைச் சொல்லியும் கேளாத இந்திரஜித்து சிறிதும் பொருட்படுத்தாதவன் போல நடித்து, ''நான் இனி இவளைக் கொன்றே தீர்ப்பேன். இவளைக் கொன்றபிறகு அயோத்திக்குப் போய் அங்குள்ளவர்களையும் வதைத்து ஒழிக்கிறேன்'' என்று, மாயா சீதை துடிக்கத் துடிக்க அவளை வெட்டிச் சாய்த்துவிட்டுத் தன் படைகளுடன் அயோத்திக்குப் போகிறவன்போல் விமானத்தில் ஏறிக்கொண்டு வடக்கே போக்குக் காட்டி, மாயமாய்ச் சென்றுவிட்டான்.

மாயா சீதையின் சித்திரவதைதையைக் கண்டதும் அநுமன், மிக வருந்தி மூர்ச்சையடைந்தான். சிறிது நேரம் சென்றதும் தெளிந்து வேகத்துடன்போய் ராமன் முதலியோரை அடைந்து இந்திரஜித்தின் செயலையும், அவன் சொன்ன சொற்களையும் கூறினன். அது கேட்டதும் ராமனும் தம்பியும் பலவாறு புலம்பிக் கீழே விழுந்து மூர்ச்சித்தனர். பிறகு இருவரும் எழுந்து பலவாறு ஆலோசித்துத் துயரப்பட அப்பொழுது விபீஷணன், இந்திரஜித்தின் செய்கையில் ஐயங்கொண்டு ராமனை நோக்கி, ''ஸ்வாமி! தாங்கள் சற்று நிதானிக்கவேண்டும்; இதில் ஏதோ சூது இருக்கிறது; நான் போய் பிராட்டியார் இருக்குமிடத்தில் ஆராய்ந்து வருகிறேன்; பிறகு வேண்டுமானல் வேறு யோசனைகள் செய்யலாம்'' என்று கூறிவிட்டு, உடனே ஒரு வண்டின் உருக்கொண்டு அசோக வனத்தை அடைந்து பார்க்க, அங்கே சீதா பிராட்டி வருந்திபவாறு இருப்பதைக் கண்டு மனந்தேறினுன். அப்போது அங்கொரு பக்கத்தில் ராவணனுடைய சேனை வீரர்களிற் சிலர், வேள்விக்காகச் சமித்துக்களை சேகரித்துக் கொண்டு நிகும்பலை யாகம் நடக்குமிடம் நோக்கிச் செல்வதைக் கண்டு, 'ஓ! அநுமன் சொன்னபடி இந்திரஜித்து அயோத்தி செல்லவில்லை; அவன் நிகும்பலை வேள்வியைத் தொடங்கியிருக்கிறன்' என்று அறிந்தான். விபீஷணன் வண்டின் உருவமாகவே விரைவில் ராமனிடம் வந்து, சீதை ஸௌக்கியமாயிருக்கிருள் என்று கூறிவிட்டு, ''இந்திரஜித்து செய்யும் நிகும்பலை யாகத்தை விரைவில் அழிக்கவேண்டும். அது நிறைவேறுமாயின் அவனை வெல்ல ஒருவராலும் இயலாது. இளையபெருமாளை என்னுடன் அனுப்பினுல், இந்திரஜித்தின் யாகத்தையும் அழித்து, அவனையும் கொன்றுவருவேன்'' என்றுன். 'சீதை சௌக்கியமாயிருக்கிருள்' என்று கேட்டதும் எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

26. நிகும்பலைப் படலம்

ராமனது ஏவலின்படி ஆஞ்சநேயன், சுக்ரீவன், அங்கதன் ஆகிய வீரர்களுடன் விபீஷணனையும் அழைத்துக்கொண்டு லக்ஷ்மணன் வானர சேனைகள் முன் செல்ல, பல மலைகளையும், காடுகளையும் கடந்து யாகம் நடக்குமிடம் வந்து சேர்ந்தான். அங்கே அநேக வீரர்கள் யாகசாலையைச் சுற்றிலும் ஆயுதங்களுடன் காவலிருக்க, அதன் மத்தியில் இந்திரஜித்து ஓமாக்கினியின் எதிரில் விரதங்கொண்டு அமர்ந்திருந்தான்.

யாகசாலையை நெருங்கியவுடன் வானர வீரர்கள் ஆர்ப்பரித்தார்கள். அரக்கர்களும் வீர ஆரவாரம் புரிந்து போருக்கு எழுந்தனர். அவர்களுடைய வலிய ஆயுதங்களால் வானர வீரர்களில் பலர் மாண்டு போயினர். அப்பொழுது விபீஷணன் லக்ஷ்மணனை நோக்கி, ''ஸ்வாமி! விரைவில் அவன் யாகத்தைச் சிதையுங்கள். அப்படிச் செய்யாவிடில் நாம் இவர்களை வெல்வது அரிது'' என்று கூறினான். உடனே லக்ஷ்மணன் பல அஸ்திரங்களைத் தொடுத்து, அவற்றால் அவர்களுடைய யானைகள், குதிரைகள் எல்லாவற்றையும் மாய்த்து, அரக்கர்களுடைய தலைகள் வேறு கால்கள் வேறாகத் துண்டித்தான். இந்திரஜித்து வெகுண்டான்; அதனால் அவன் நியமம் குலைந்தது. மோன விரதம் முடிவுற்றது. தான் தொடங்கிய வேள்வி இடையில் சிதைந்தமை கண்டு பெருவருத்தம் கொண்டான். கனலெனச் சினம் பொங்கியது. ஆஞ்சநேயனைப் பார்த்து, ''அடா முரட்டுக் குரங்கே! இதற்குமுன் என்னால் நீங்கள் பட்ட பாட்டை மறந்துவிட்டீர்களோ? என் யாகம் அழிந்தவிட்டால் என் வலிமையும் அழிந்துவிட்டது என்று எண்ணினீர்களா? இதோ ஒரு நொடிப் பொழுதில் உங்களையும், இந்த லக்ஷ்மணனையும் ஒழித்துவிடுகிறேன் பார். இனி நீங்கள் சஞ்சீவியாலும் பிழைக்க மாட்டீர்கள்'' என்று விரைந்து போர்க்கோலம் பூண்டு தேரில் ஏறி வில்லை வளைத்துப் பல பாணங்களை விடுத்தான். அதனால் வானரர்கள் பயந்தோடினர். அப்பொழுது ஆஞ்சநேயன் லக்ஷ்மணனைத் தன் தோள்மீதேறிக் கொண்டு போர் புரியும்படி வேண்டினான். அவனும் அவ்வாறே செய்தான். இந்திரஜித்தும் இளையபெருமாளும் அநேக உயர்ந்த அம்புகளைத் தொடுத்துக் கொண்டார்கள். லக்ஷ்மணன் அஸ்திரங்களால் இந்திரஜித்தினுடைய தேரும் குதிரைகளும் சாரதியும் நாசமடைந்து, அவனுடைய கவசம், வீரப்பட்டம், கைவிரல் முதலியனவும் சின்னபின்னமாயின. அது கண்ட இந்திரஜித்து தன்னுடைய உப்பசள் வீணானதையும், தான் நிராயுதபாணியானதையும் எண்ணி, இனி வேறு தேரில் ஏறி வந்துதான் யுத்தம் செய்யவேண்டுமென்று இமைப்பொழுதில் மேலெழும்பி மேகத்தில் மறைந்து, உடலில் பட்ட அம்புப் புண்களின் வழியே உதிரம் ஒழுக, ராவணனிடம் போய்ச் சேர்ந்தான்.

27. இந்திரஜித்து வதைப் படலம்

இந்திரஜித்து வானத்தில் மறையவும் யாவரும் மயங்கினார்கள்; முன்போலவே வஞ்சனை செய்வான் என்று எண்ணி மருண்

டார்கள். யாவருடைய கண்களிலும் கலக்கமும் ஐயமும் கலந்து தோன்றின.

லக்ஷ்மணன் முதலியோர் இங்கே இவ்வாறிருக்க, உடலில் உதிரம் பெருக ஓடிவரும் இந்திரஜித்தைக் கண்டதும் ராவணன் திடுக்கிட்டு, ''மகனே! உனக்கு நேர்ந்ததென்ன? உன் யாகம் அழிந்துவிட்டதோ? உன் வருத்தத்திற்கு என்ன காரணம்? சொல்'' என்றான். இந்திரஜித்து, ''தந்தையே! உம்முடைய தம்பி, நான் செய்யும் யாகம் முதலிய ரகசியங்களை எல்லாம் எதிரிகளுக்குத் தெரிவித்துவிட்டதனால், அவர்கள் வந்து என் யாகத்தை அழித்துவிட்டார்கள். நான் ஏவிய பிரம்மாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம் ஆகிய முப்பெரும் அஸ்திரங்களையும் லக்ஷ்மணன் தடுத்துவிட்டான். நெடுமாலின் படை லக்ஷ்மணனை வலஞ்செய்து செல்லுமாயின் வேறென்ன சொல்ல இருக்கிறது? நம் குலம் செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக்கொண்டோம். சினத்தால் லக்ஷ்மணன் ஒருவனே மூவுலகையும் அழிக்கும் ஆற்றல் மிக்கவன். தெய்வப் படைக்கலம் தொட்டு வெல்ல விரும்பாததனாலேயே அவர்கள் அவற்றைத் தொடுவதில்லை. நாம் தொடுத்தால் மட்டுமே தடுக்கிறார்கள். தம் வலிமையாலேயே வெல்ல உறுதி கொண்டனர்;

> "ஆதலால் அஞ்சி னேன்என்(று) அருளலை; ஆசை தான்அச்
> சீதை பால் விடுதி யாயின் அனையவர் சீற்றம் தீர்வர்;
> போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
> காதலால் உரைத்தேன்;........என்றான்."

இவற்றைக் கேட்டதும் ராவணன் உடல் குலுங்கச் சிரித்து, ''அந்த மனிதர்களுக்கு மிகவும் பயந்துவிட்டாய் போலும்; முன்னே இறந்தவர் யாவரும் பகைவரை வென்று தருவர் என்றோ, இன்னும் உள்ள பெருவீரர்களால் இப்பகையை வென்று கொள்ளலாம் என்றோ, உன்னை நம்பியோ நான் இப்பகையைத் தேடிக்கொள்ளவில்லை; என்னையே நோக்கி இந்நெடும்பகை தேடிக்கொண்டேன்; நீரிற் குமிழன்ன யாக்கையை விடுவேனே அன்றிச் சீதையை விடுவதுண்டோ? ஆகையால் நீ நின் இருக்கை செல்க; உடலிற் பாய்ந்த பகழிகளை வெளிப்படுத்தி புண்ணுக்கு மருந்திட்டுப் போர் செய்த சிரமம் போக இரவு முழுதும் இளைப்பாறுக'' என்று இகழ்ந்து கூறித் தன் தேரைக் கொணரும்படி ஏவலர்க்கு ஆணையிட்டான்.

அச்சொற்களைக் கேட்ட இந்திரஜித்து மிகவும் வருந்தி, தந்தையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்து, ''தந்தையே! கோபம் வேண்டா; இதோ நானே எதிர்க்கச் செல்லுகிறேன்'


Bapu

என்று சொல்லிப் பச்சைக் குதிரைகள் பூட்டிய அழகிய தேரில் ஏறிக்கொண்டு, தந்தையை நோக்கிக் கண்ணீர் விட்டுக்கொண்டே போர்க்களத்திற்கு வந்து சேர்ந்தான். அத்தருணத்தில் லக்ஷ்மணன் ஆகாயத்தைப் பார்த்தபடியே வில்லைப் பிடித்துக் கொண்டு விபீஷணனை நோக்கி, ''அக்கொடியன் மறைந்தோடி ஏதேனும் இனியும் துன்பம் கொடுப்பானோ ?'' என்று கேட்டு நாலா பக்கமும் நோக்கியவாறிருந்தான். அப்பொழுது திடீ ரென்று அவன்முன் தோன்றிய இந்திரஜித்து அநேக அஸ்திரங் களை லக்ஷ்மணன்மீது பொழிந்தான். லக்ஷ்மணனும் அவனை எதிர்த்துப் பல அம்புகளை ஏவினான்.

விபீஷணன் இளையவனை நோக்கி, ''இனித் தாமதிப்பது கூடாது. இப்போதிவனை விட்டுவிட்டால் பிறகு வெல்வது அருமை'' என்றான். அதனைக் கேட்டதும் லக்ஷ்மணன் அக்னி யாஸ்திரத்தை எடுத்து விடுத்து, இந்திரஜித்தின் உடலெங்கும் துளைத்து, அவன் கையிலுள்ள வில்லையும் அம்புக் கூட்டையும் நாசப்படுத்தி, சாரதியையும் கொன்றுவிட்டான். அது கண்ட இந்திரஜித்து, தானே தேரைச் செலுத்தி, தன் தேகத்தில் பாய்ந்திருந்த அம்புகளையே பிடுங்கி அநுமன் மேலும் லக்ஷ்மணன் மேலும் பருவ மழையென பாணமாரி பொழிந்தான். அப்போது லக்ஷ்மணன் விபீஷணனை நோக்கி, ''இவன் வானிற் சென்று போர் புரியினும் புரிவான் ; அன்றி மறைந்து மாயம் செய்யினும் செய்வான் ; மேகமண்டலத்தில் மறைந்து கொடுமையாற்றுவதும் இயல்பே ; எவ்வகையினும் இரவில் இறவான்'' என்று கூறி அவன் வீரத்தை வியந்து நின்றான். அப்போது விபீஷணன், ''இவன் தேர் அழியாதவரை சாகமாட்டான். குதிரைகளும் சாகா ; இத்தேர் சிவபிரானுடையது'' என்றான். உடனே லக்ஷ் மணன் இந்திரஜித்து ஏறியிருந்த தேரை நாசப்படுத்தவும், அதிற் கட்டியிருந்த குதிரைகள் ஓடிவிட்டன. தேரும் குதிரையும் ஒழியவே, இந்திரஜித்து ஆகாயத்திற் கிளம்பி மலைப்பாறைகளைப் பெயர்த்துச் சொரிந்தான். அவற்றால் பல வானரங்கள் மடிந்து விட்டன. அவன் செய்கையைக் கண்டு மிகவும் சினந்து ஓர் அர்த்த சந்திர பாணத்தை எடுத்து,

''மறைகளே தேறத் தக்க வேதியர் வணங்கற் பால
இறையவன் இராமன் என்னும் நல்லற மூர்த்தி என்னின்
பிறையெயிற்(று) இவனைக்கோறி என்றொரு பிறைவாய் வாளி
நிறையுற வாங்கி விட்டான் உலகெலாம் நிறுத்தி நின்றான்.''

அது உடனே போய் இந்திரஜித்தின் தலையை அறுத்துத் தள்ள அது நிலத்தில் வீழ்ந்தது. அவன் முண்டமும் சூலம் பிடித்த கையுடனே மற்றொரு பக்கம் வீழ்ந்தது. அவன் கதி

அவ்வாறாக, அரக்கர்கள் யாவரும் ஓட்டம் பிடித்தார்கள். தேவர்கள் யாவரும் லக்ஷ்மணன்மீது மலர்களைச் சொரிந்து வாழ்த்திவிட்டு, அங்கே இருந்த வானரர்களையும் உயிர் பெறச் செய்தார்கள். அதன் பிறகு ஆஞ்சநேயன் மீதிருந்தபடியே, இந்திரஜித்தின் தலையை எடுத்துக்கொண்டு வரும்படி அங்கதனுக்குக் கட்டளையிட்டுத் திரும்பி ராமனிடம் போய் அங்கதன் கொண்டுவந்த இந்திரஜித்தின் தலையை அவன திருவடிகளில் வைத்து வணங்கி நின்றான். ராமன் முதலியோர் மிக மகிழ்ச்சியடைந்தனர்.

28. ராவணன் சோகப் படலம்

இந்திரஜித்து தலை அறுபட்டு வீழ்ந்து இறந்தது கண்ட சாரணர்கள் விரைந்துபோய், மிகுந்த அச்சத்துடன் ராவணனைக் கண்டு, ''ஐயனே! தங்களுடைய புதல்வர் இந்திரஜித்து மாண்டு போனார்'' என்றனர். அவர்கள் சொல் செவியில் புகுந்த மாத்திரத்தில், ராவணன் ஆத்திரம் கொண்டெழுந்து, அத்துக்கச் செய்தியைக் கூறிய சாரணரிருவரையும் வாளால் வீசித் தள்ளிவிட்டுத் திடீரென்று நிலத்தில் வீழ்ந்து புரண்டு பலவாறு புலம்பி அழுது கதறினான். போர் நிகழ்ந்த இடத்திற்கு ஓடினான்; அற்ற தலையோடு பொற்றைத் தரையில் கிடந்த அருமை மகன் உடலைக் கண்டான்; தலையை இன்னார் எடுத்துச் சென்றனர் என்று உணர்ந்தான். துக்கம் பெருக அவ்வுடலைத் தாங்கிக்கொண்டு லங்கை புக்கான்.

இச்செய்தியை அறிந்த ராவணன் மனைவியான மண்டோதரி ஓடிவந்து மகன்மேல் விழுந்து புரண்டு அவன் வீரங்களெல்லாம் கூறிப் புலம்பி அழுது, அந்தோ!

''பஞ்(ஞ)ளி உற்ற தென்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சி னேன்இச் சீதைஎன்(று) அமிழ்தால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளைஇத் தகையன் அன்றோ ?''

[பரவை: கடல். விளிந்தது: இறந்தது.]

என்று புலம்பினாள். அதுகேட்ட ராவணன் மிக்க சீற்றத்துடன், ''அந்தச் சீதையினால் அல்லவா இந்தத் துன்பங்கள்? நான் அவளை இப்பொழுதே தொலைத்துவிடுகிறேன்'' என்று வாளை உருவிக் கையிற் பிடித்துக்கொண்டு சீதையை வெட்டுவதற்கு ஓடினான். மகோதரன் கண்டு திடுக்கிட்டு, ''ஐயா! லங்கேஸ்வரா! நீர் எப்பொழுதும் ஓயாத பழியையே தேடிக்கொள்ளு

கிறீர். அந்த உத்தமியைக் கொன்றால், பலரும் உம்மைப் பழிப்பார்கள். பெண் கொலை மிக்க பாவமாயிற்றே; மேலும் அவள் இறந்தால் ராமன் சண்டையை நிறுத்திவிட்டன்றோ போய்விடுவான். அப்படிப் போய்விடுவானாகில் அவர்களை வெற்றி கொள்ள உம்மால் முடியவில்லை என்று சொல்லுவார்களே'' என்று சொன்னான். அதைக் கேட்டதும் ராவணன், கையில் இருந்த வாளைத் தூர வீசிவிட்டு, ''என் மகனைக் கொன்றவர்கள் மீது என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளாமல் விடமாட்டேன்'' என்று மொழிந்து இந்திரஜித்தின் உடலைத் தைலத்தில் வைக்கக் கட்டளையிட்டுத் தூதுவர்களை நோக்கி, ''நீங்கள் விரைவிற்போய் எண் திசைகளிலும், ஏழு தீவுகளிலும் நமக்கு மூலபலமாக உள்ள அரக்கர் சேனைகளை எல்லாம் அழைத்து வாருங்கள்'' என்று கூறினான்.

29. படைக்காட்சிப் படலம்

ராவணன் கூறியபடி தூதுவர்கள் எல்லா இடங்கட்கும் சென்று அவனுக்கு மூலபலமாகவுள்ள சேனைகள் எல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். சேனைகள் எல்லாம் வந்து சேர்ந்த செய்தியை அறிந்ததும், ராவணன், மகோதரன் முதலானோருடன் சென்று அவைகளைப் பார்த்தான். கண்ணிற்கெட்டிய தூரம் வரை ஒரே கூட்டமாகப் படைகள் நிற்பதைக் கண்டு வியந்து தூதுவர்களை நோக்கி, ''இந்தச் சேனையின் கணக்கென்ன?'' என்றான். அவர்கள், ''அளவிடற்கரிதாகும்'' என்றனர். உடனே ராவணன், ''நீங்கள் சென்று சேனைத் தலைவர்கள் யாவரையும் வரச் செய்யுங்கள்'' என்று சொல்ல, அப்படியே தலைவர்கள் எல்லோரும் வந்து ராவணனை வணங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட ராவணன் மகிழ்ந்து நிகழ்ந்த பரிசெல்லாம் உரைத்தான்; கேட்ட வீரர்கள், ''எங்களை அழைத்தது ஆதிசேஷன் உச்சியினின்றும் உலகை எடுத்தற்கு அன்று; ஸப்த குல பர்வதங்களையும் வேரோடு பறிக்கவும் அன்று; அலைகடலை அகங்கையால் வாரிக் குடிக்கவும் அன்று; கேவலம் மலர்களையும் இலைகளையும் கோதித் தின்று உயிர் வாழும் குரங்குகளின்மேல் ஏவவோ எங்களை அழைத்தது?'' எனக் கூறி நகைத்தனர். ராவணன் மீண்டும் ராமலக்ஷ்மணர்களின் திறமைகளை விரித்துக் கூறினான். பின்னர் அவர்கள் ராவணனைத் தேற்றி, ''அம்மானுடரை வென்று மீளுவோம்'' எனச் சூள் மொழிந்து போருக்குச் சென்றனர்.

30. மூலபல வதைப் படலம்

ராவணன், ''நான் ஒரு பக்கத்தில் நின்று வானரர்களை அழிக்கிறேன்; நீங்கள், உங்கள் சேனைகளுடன் அந்த மானிடர்களைச் சூழ்ந்து நின்று அவர்களைக் கொன்றுவிடுங்கள்'' என்று கூறினான். பின்பு, தானும் போர்க்கோலம் பூண்டு தேரிலேறிப் போய், வானர சேனைகளுள்ள ஒரு பக்கத்தில் புகுந்தான். பெருந்திரளான மூலச் சேனைகளைக் கண்டதும் வானர வீரர்களும், ஜாம்பவானும் மிகவும் பயந்து ஓடவே, மற்ற வானரர்களும் அவர்களைத் தொடர்ந்து போர்க் களத்தை விட்டுப் பறந்துவிட்டனர். ஆஞ்சநேயனும் சுக்ரீவனும் அங்கதனும் மட்டும் அங்கேயே நின்றிருந்தவர். ராமன் அப்பொழுது விபீஷணனைப் பார்த்து, ''இப்படைகள் யாவை? இதுவரையில் இவைகள் எங்கே இருந்தன?'' என்று கேட்டான். அதற்கு விபீஷணன், ''ஸ்வாமி! இவர்களெல்லாம் எண் திசைகளிலும், ஏழு தீவுகளிலும் வாழும் அரக்கர்கள். ராவணனுக்கு மூலப்படைகள். முடிவாக அவன் எல்லா அரக்கர்களையும் திரட்டி அனுப்பியிருக்கிறான். இவர்களைத் தவிர இனி அரக்கர்கள் எங்கும் இல்லை. இவர்கள் யாவரும் இங்கே வந்தது இவர்களுக்கு முடிவு காலமாகத்தானிருக்கும்'' என்று சொன்னான்.

அதைக் கேட்டதும் ராமன் முறுவலும் சீற்றமும் ஒருங்கே தோன்ற, ''முடிவை விரைவில் காட்டுகிறேன்; நீ காண்க'' என்று கூறி அங்கதனை நோக்கி, ''அஞ்சியோடின வானர சேனைகளுக்குத் தைரியம் கூறி யாவரையும் என்னிடம் அழைத்து வா'' என்றான். அங்கதனும் அஞ்சி ஓடிய வானரர்களைத் தேற்றி அழைத்து வந்தான்.

ராமன் அவர்களுக்குத் தைரிய மொழிகளைக் கூறிவிட்டுத் தம்பியை நோக்கி. ''தம்பி! இப்பொழுது இங்கே வந்துள்ள அரக்கர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் நான் ஒருவனே சென்று வதைத்து வருவேன்; நான் வரும்வரை வானரர்கள் வருந்தாதபடி நீ ஆஞ்சநேயனுடனும் சுக்ரீவனுடனும் கூடி இருந்து காத்துவருவாயாக. எனக்குத் துணை வேண்டுமென்பதில்லை'' என்றான். அப்பொழுது அநுமன் தன் தோள்மீது இவர்ந்து செல்லவேண்டும் என்று வேண்டினான். ராமன் அவனை நோக்கி, ''ஆஞ்சநேயா! ஒருவேளை, நான் மூலபலத்தை எதிர்க்கும்பொழுது ராவணன் லக்ஷ்மணனை எதிர்த்து வரக்கூடும். அப்பொழுது உன்னுடைய உதவி தம்பிக்கு வேண்டும்; ஆதலால், விபீஷணனையும் உன்னோடு இருத்திக்கொண்டு, தம்பியையும் வானர சேனைகளையும் காத்துவருவாயாக'' என்று கூறி, போர்க் கோலம் கொண்டு, அநேக

உயர்ந்த அஸ்திரங்களுடன் மூலபலச் சேனைகளின்முன் வந்து நின்றான்.

அப்பொழுது அந்தச் சேனைத் தலைவர்கள் ராமனைப் பார்த்து, 'இவன் யாதொரு வாகனமும் எவ்விதத் துணையுமில்லாமல் வில் ஒன்றை ஏந்திக்கொண்டு எங்கள் முன் நிற்கிறானே? எவ்வாறு நம்மை இவன் வெற்றிகொள்ளப்போகிறான்?' என்று எண்ணி ஒரு சிங்கத்தைப் பல யானைகள் சூழ்ந்துகொள்வதைப்போல ராமனை வளைத்து நின்றார்கள். அப்பொழுது ராமன், கோதண்டத்தை வளைத்து விசித்திரமானதோர் ஒலியை எழுப்பினான். அப்பேரொலியைக் கேட்டதும் அவர்களிடத்திலுள்ள யானை குதிரைகளெல்லாம் ஓட்டமெடுத்தன. அரக்கர்கள் அஞ்சி நடுங்கினர். ராமன் சில அஸ்திரங்களை வரிசையாக எய்தலும், பல அரக்கர்கள் இறந்தனர். தேர்கள் முறிந்து சிதைந்தன. யாளிகள் கீழே விழுந்து உருண்டு மடிந்தன. அவற்றைக் கண்டு வியந்து அடுத்த வரிசை படையிலுள்ள அரக்கர்கள் பலர் பலவித ஆயுதங்களை ஒரே காலத்தில் ராமர்மீது வீசினர். ராமன், எதிரம்புகள் விடுத்து அவற்றைச் சின்னபின்னமாக்கி, ஒரு நொடியில் பலரைக் கொன்றான்.

அதற்குப் பின்னர் வந்த அரக்கப் படையினர் யாவரும் ராமனைச் சூழ்ந்து நின்று, தண்டு, தோமரம், வாள், ஈட்டி முதலியவற்றை எடுத்து ராமன்மீது எறிந்தார்கள். ராமன் தன் கை அம்பினால் அவைகள் யாவற்றையும் பொடியாகச் செய்துவிட்டு திடீரென்று, அக்கூட்டத்தினுட் புகுந்து இடசாரி வலசாரியாகச் சுற்றி மாரிபோல அஸ்திரங்களைப் பொழிந்தான். அச்செய்கையால் எங்கும் ராமனுடைய தோற்றமே காணப்பட்டு அஸ்திரங்கள் வருதலை அறிந்ததும் அரக்கர்கள் ''இஃதென்ன நாம் முன்பு ஒரு ராமனைப் பார்த்தோம். இப்பொழுது பல ராமர்கள் தோன்றுகிறார்களே'' என்று மயங்கினார்கள். அவர்களை நோக்கி வந்த பாணங்கள் எண்ணிறந்த அரக்கர்களைக் கொன்று குவித்துவிட்டன.

அப்பொழுது, வன்னி என்ற மூலபலச் சேனாதிபதி, தன் வீரரைப் பார்த்து, ''ஒரு தனி மனிதன் நம் சேனைகளைக் கொன்று கொண்டிருக்க, நீங்கள் மயங்கி நிற்கின்றீர்களே! நன்றாயிருக்கிறது உங்கள் வீரம்! அந்த மானிடன்மீது எல்லாரும் ஒருமிக்கப் பாயுங்கள்'' என்று ஆத்திரங்கொண்டு கூறினான். அதனைக் கேட்டதும் அரக்க சேனைகள் ஒருங்குகூடி ராமனை வளைத்து அவன்மீது பலவகை ஆயுதங்களை எறிந்தார்கள். உடனே ராமன் உயர்ந்த பல அஸ்திரங்களை எய்து அவர்கள் ஆயுதங்களையும், தேர்க் குதிரைகளையும் நாசம் செய்து கோதண்டத்தில் பாணங்

களைத் தொடுத்துக்கொண்டே அவர்களிடையிற் புகுந்து, இட சாரி வலசாரியாகச் சுற்றி எய்யவும், தங்களுக்குள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு ராமனுக அவர்களுக்குத் தோற்றியதால், அவர வர்களே வெட்டிச் சாய்த்துக்கொண்டு மாண்டுபோனுர்கள்.

இவ்விதமாய் மூலபலச் சேனைகளும் படைத்தலைவரும் அழிந்து போக வன்னியென்பவன் மிகுந்த கோபம் கொண்டு ராமரை எதிர்த்தான். ராமன் ஒரு தேவாஸ்திரத்தால் அவன் தலையையும் கொய்து வீழ்த்தினுன். அன்றைய போரில் இறந் தவர் எண்ணிக்கை எடுத்தியம்பல் இயலாது; ஆயிரம் யானை, பதினுயிரம் தேர், ஒரு கோடி குதிரை, ஆயிரம் வீரர் இறந்தால் போர்க் களத்தில் ஒரு கவந்தம் கூத்தாடும் என்பர். அத்தகைய கவந்தங்கள் ஆயிரம் கோடி குதித்தால் ராமபிரானுடைய கோ தண்டத்தில் கட்டியிருக்கும் மணி 'கணீல்' என்று ஓர் ஒலி செய் யும். அந்த மணி ஏழரை நாழிகை இடைவிடாமல் ஒலித்த தென்ருல் இறந்த அரக்கர்களின் எண்ணிக்கையை வாசகர்களே உணர்ந்துகொள்க. முடிவில் பார்க்கும்பொழுது மூலபலம் முழு வதும் ஒழிந்துபோய், போர்க் களமெங்கும் பிணங்கள் குவிந்து ரத்த வெள்ளம் ஓடியது. அங்ஙனம் யாவும் ஒழிந்து சேனையில் ஒருவர்கூட இல்லாமல் சூனியமாகிவிட்டதைக் கண்ட தேவர் கள் யாவரும் மகிழ்ந்து, ராமனை வாழ்த்தி, சந்தனக் குழம்பை வாரி வாரி இறைத்து மலர்களைச் சொரிந்தார்கள். சந்தன நீர் உடலிற் பட்டதும், ராமன் போர் செய்த களைப்பு தீர லக்ஷ்மணன் முதலியோர் இருக்கும் இடத்தை அடைந்தான்.

31. வேலேற்ற படலம்

ராமன் மூலபலச் சேனைகளோடு போராடிக்கொண்டிருக் கும்பொழுது, லக்ஷ்மணன் முதலியோர் ஒரு பக்கத்திலிருந்து வானர சேனைகளைக் காத்து நின்றிருந்தனர். முன்பு கூறியபடி மூலபலச் சேனைகளை ராமன்மீது சண்டை செய்ய அனுப்பிய தும், ராவணன் லக்ஷ்மணன் காத்து நின்ற வானர சேனைகள் இருக்குமிடத்திற்கு வந்து வீர கர்ஜனை புரிந்தான். அது கண்ட வானர சேனைகளும் தோள்களைத் தட்டி ஆரவாரித்து யுத்தத்திற் குச் சித்தமாயின. இரு திறத்திலும் சண்டை தொடங்கிவிட்டது. இரு பக்கத்திலும் உண்டான சேதங்களுக்கு அளவேயில்லை. இளையவன் கையில் வில்லை ஏந்திப் பல உயர்ந்த அஸ்திரங்களை ஏவி, அரக்கர் பலரைக் கொன்ருன். குரங்குகள் அரக்கர்கள் மீது தாவி அவர்களைக் கடித்தும் குத்தியும் அநேகரைச் சாகடித் கடித்தன.

அச்செய்கைகளைக் கண்டதும் ராவணன், "இனி நாம் தாமதிப்போமாயின் வானரங்கள் அரக்கர்களை உயிருடன் விட மாட்டார்கள்" என்று கருதி, மிக்க ஆத்திரம் கொண்டு சிவனுரிடத்துப் பெற்ற மோகனுஸ்திரத்தை எடுத்து மந்திரம் உச்சாரணம் பண்ணி, லக்ஷ்மணன்மீதும் வானரர்களின்மீதும் எய்தான். அப்பொழுது உடனிருந்த விபீஷணன், லக்ஷ்மணனை நோக்கி, "இது மோகனுஸ்திரமாகும்; மிக்க ஆபத்தானது; ஆதலின் இதனை நாராயணுஸ்திரத்தால் அழித்துவிடும்" என்றான். லக்ஷ்மணன் அந்த அஸ்திரத்தைப் பூட்டிவிட, மோகனுஸ்திரம் அழிந்து போயிற்று. அது தெரிந்த ராவணன், மிகச் சினந்து, "இந்த விபீஷணன், அவ்வப்பொழுது எதிரிகளுக்கு உபாயங்களைச் சொல்லிக்கொடுத்துக் கொண்டல்லவா நமக்குக் கேட்டை உண்டாக்குகிறான்? இவனை முதலில் ஒழித்துவிட வேண்டியதே!" என்று, தனக்கு மயனால் கொடுக்கப்பட்ட வேலாயுதத்தை எடுத்து விபீஷணன் மார்பினை நோக்கி வீசினான்.

விபீஷணன் அவ்வேலின் சக்தியை அறிந்தவனாதலால், லக்ஷ்மணனை நோக்கி, "ஏ! ராமனுஜா! ராவணன் எறியும் இந்த வேல் என்மீது பட்டால் என் உயிர் நீங்கும். இதனைத் தடுக்க எவ்விதத்தாலும் முடியாது" என்றான். உடனே லக்ஷ்மணன் "நான் இதனை நம்மிடம் வரவொட்டாமல் தடுத்துவிடுகிறேன் பார்" என்று பல தேவாஸ்திரங்களை ஏவியும், எதிர்த்துவரும் வேலை நிறுத்தமுடியவில்லை. அதனைப் பார்த்த இளையவன், 'இனி விபிஷணனை இது கொன்றுவிடும். ராமரிடம் அடைக்கலம் புகுந்த இவனை நம் கண் எதிரில் சாகவிடுவதா?' என்று எண்ண, விபிஷணனுக்கு முன்னே நின்று தன் மார்பைக் காட்டி நின்றான். விபிஷணன் அவனை விலக்கித் தானே முன்பு போய் நின்றான். அவ்விருவரையும் விலக்கி அங்கதன் 'நான் சாகிறேன்' என்று சொல்லி முன்னே போனான். சுக்ரீவன் அது கண்டு, அம்மூவரையும் தடுத்து முன்னே போனான். இவர்களைப் பார்த்த ஆஞ்சநேயன், "நான் இருக்க நீங்கள் ஏன் சாகவேண்டும்? இந்தச் சமயத்தில் உதவாது போனால், நான் ராகவனுக்கு உண்மை அடியனாவது எவ்வாறு?" என்று எல்லாரையும் விலக்கித் தான் போய் நின்றான். லக்ஷ்மணன், "நானே அவ்வேலைத் தாங்குவதற்குரியவன். நீங்கள் யாவரும் விலகுங்கள்" என்று சொல்லிச் சரேலென்று முன்னே சென்றான். அப்பொழுது வேகத்துடன் வந்த அந்த வேலாயுதம் லக்ஷ்மணன் மார்பில் பட்டது. அவன் சுருண்டு நிலத்தில் விழுந்தான். இளையவன் வீழ்ந்ததைக் கண்டதும் ராவணன் மிக்க களிப்படைந்து, 'இன்று நமக்குக் கிடைத்த இந்த வெற்றியே போதும்' என்று நினைத்து வனுய்த் தேரைச் செலுத்திக்கொண்டு நகரத்திற்குப் போய் விட்டான்.

அதன் பிறகு விபிஷணன், வீழ்ந்திருக்கும் லக்ஷ்மணன் அருகே அமர்ந்து பலவாறு துன்பப்பட்டு ''இனியும் நான் உயிரோடிருப்பது தகாது. நானும் இறக்கிறேன்'' என்று புலம்பினன். அதனைக் கேட்ட ஜாம்பவான் அவனை நோக்கி, ''அப்பா! இளையபெருமானை எழுப்புவதற்குரிய வழி இருக்கும் பொழுது நீர் ஏன் கவலைப்படுகிறீர்?'' என்று கூறி, ஆஞ்சநேயனை அடைந்து அவன்மீது தைத்திருந்த அம்புகளை எல்லாம் பிடுங்கி எறிந்து அவன் இளைப்பை மாற்றி, அவனைப் பார்த்து, ''வீராதி வீரரே! நம்முடைய ராகவர் இளையவரைக் கண்டு வருந்துவதற்கு முன் நீர் சஞ்சீவியைக் கொண்டு இவரை எழுப்பிவிடவேண்டும்'' என்று கூறினன். ஜாம்பவான் சொன்னதுதான் தாமதம், அந்த மகானுபாவனன ஆஞ்சநேயன் அப்பொழுதே ஆகாயத்திற் கிளம்பிச் சென்று, முன்பு கொண்டுவந்த அதே சஞ்சீவியைத் திரும்பவும் எடுத்து வந்துவிட்டான். அதன் காற்று பட்ட மாத்திரத்தில் இளையவன் உறங்கி எழுந்தான்போல எழுந்து, ஆஞ்சநேயனைத் தழுவிக்கொண்டு பலவாறு புகழ்ந்தான். பின்னர் எல்லோரும் எழுந்து ராமனைக் காணப்போனர்கள்.

அப்பொழுது அவர்கள் இருந்த திசையை நோக்கிவந்து கொண்டிருந்த ராமன், எதிரே வந்த தம்பி முதலானோரை நோக்கி, ''உங்கள் பக்கம் நடந்த போர் எவ்வாருயிற்று?'' என்று வினவினன். ஜாம்பவான் அங்கே ராவணன் செய்த சண்டையையும் பிறகு நடந்தவைகளையும் விவரமாய்க் கூறினன். அது கேட்ட ராமன் அநுமனைத் தழுவிக்கொண்டு, ''நான் உன்னைப் பெற்றிருக்கும்பொழுது எனக்குப் பெறுதற்கரியது யாது ? இறுதியற்ற வாழ்நாளைப் பெறுவாயாக'' என்று வாழ்த்தினன். அருகே கண்ணீர் விட்டு வணங்கிய தம்பியை, ''அப்பா! தம்பி! நீ விபீஷணனுக்காக உயிரைத் தியாகம் செய்தது நம் குலப் பெருமைக்கு தக்கதேயாகும். ஒரு புறுவினுக்காக உயிரைக் கொடுத்த நம் மரபினர் சிபிச் சக்ரவர்த்தியும் உனக்கு ஈடாகமாட்டார்'' என்று புகழ்ந்து அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு, அவன் ஆயாசத்தைப் போக்கினன். பின்னர் ராமன் வில், அம்பறுத்தூணி முதலியவற்றை அநுமன் கையில் கொடுத்து அருகில் இருந்த குன்றுமீதேறி இளைப்பாறத் தொடங்கினன்.

32. வானரர் களங்காண் படலம்

அத்தருணத்தில் சுக்ரீவன் ராமனை வணங்கி, ''ஸ்வாமி! உலகமெல்லாவற்றையும் ஒரு நொடியில் அழிக்கத்தக்க மூல

பலச் சேனைகளை எவ்வாறு வென்றீர்கள் ?'' என்று கேட்டான். அதற்கு ராமன், ''நீ விபீஷணன் முதலியவர்களோடு அங்கே சென்று பார்த்து வா'' என்று கூறினன்.

ராமன் சொற்படி சுக்ரீவன், வானர வீரர்கள் யாவரையும் அழைத்துக்கொண்டு விபீஷணனுடன் புறப்பட்டுப் போர்க்களத்தை அடைந்தான். அங்கே எவ்விடத்திலும் நெருங்கியவாறு யானைகளும் யாளிகளும் மாண்டுபோய் உருண்டு கிடப்பதையும், எண்ணிறநத தேர்கள் சிதைந்து பரவிக் கிடப்பதையும், அரக்க வீரர்கள் பலர் தலை வேறு, கால் வேறு, முண்டம் வேருக வீழ்ந்து எங்கும் கால் வைப்பதற்கு முடியாமல் ரத்தச் சேருகக் காணப்பட்டதையும் நோக்கி, ''ஆ! ஆ!! இத்துணைப் பேர்களையும் நம் ஸ்வாமி, ஒரே வில்லினைத் தாங்கி எவ்விதம் கொன்ருரோ? அவருக்கு எத்தகைய ஆயாசம் தோன்றிற்ரே?'' என்று பலவிதமாகச் சொல்லி வியந்தார்கள். ''மூலபலம் என்ற இப்படையில் உள்ளவர்கள் எத்துணைப் பேர்கள் என்பதைக் கணக்கிட முடியாதிருக்கின்றனவே! கண்ணிற் கெட்டிய தூரம் வரையில் பிணங்கள் பரவிக் கிடக்கிறபடியால் நம்மால் அளவிடமுடியாது; ஆதலின் நாம் ஸ்வாமியிடமே செல்வோம்'' என்று பேசிக்கொண்டே ராமனுடைய போர்த் திறத்தைப் பாராட்டிக்கொண்டு, அவனை அடைந்து வணங்கி யாவரும் அமர்ந்தார்கள்.

33. ராவணன் களங்காண் படலம்

இங்கே போர்க் களத்திலுள்ள ராமன் முதலியோர் மகிழ்ச்சியோடு அளவளாவிக்கொண்டிருக்க, தேவர்கள் வருந்தும்படி வானரர்களைச் சாடி லக்ஷ்மணனை வேலாயுதத்தால் வீழ்த்தி, வெற்றி நமதே என்று மகிழ்ந்திருந்த ராவணன் போரைப் பற்றித் தன்னை விசாரிக்க வந்தவர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கிப் பெருவிருந்து அமைக்குமாறு கூறிச் செருக்குடன் வீற்றிருந்தான். அவ்வாறு ராவணன் இருக்குப்பொழுது, போர்க் களத்தின் செய்தியறியச் சென்றிருந்த தூதுவர் சிலர் ஓடி வந்து, அச்சத்தால் வாய் குழற,

''இன்றுயார் [விருந்(து) இங்(கு) உண்பார்;
இகன்முகத்(து) இமையோர் தந்த
வென்றியாய்; ஏவச் சென்ற
ஆயிர வெள்ளச் சேனை

நின்றது புறத்த தாக
இராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினால் இரண்டு மூன்று
கடிகையின் உலந்த தென்றார்.''

[இகன்முகத்து : போர்முகத்தில். சாபம் : வில். கடிகை: நாழிகை.]

அதனைக் கேட்டதும் ராவணன் மிகவும் துடித்து, ''அவ்வளவு பெரிய சேனையை அந்த ராமன் ஒருவனாகக் கொன்றுவிட்டானா? மிக்க விந்தையாக இருக்கிறதே; இதனில் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்'' என்றான்.

அப்பொழுது ராவணன் பாட்டனான மாலியவான், அவனைப் பார்த்து, ''அப்பா பேரப் பிள்ளையே! தூதுவர் கூறியது உண்மையே; நீ சிறிதும் ஐயங்கொள்ளாதே; உலகம் யாவையும் படைத்தும் காத்தும் பின்னர் அவற்றை அழிக்கவும் வல்ல பரம்பொருளான அந்த ராமபிரான் மூலப்படைகள் யாவையும் அழித்தேயிருப்பார்; எக்காலத்திலும் வெற்றியே அடைந்த நீ, இத்தருணத்தில் அவர் முன்பு தோல்வியுற்று வந்ததனாலேயே, அவருடைய சிறப்பு உனக்கு விளங்கவில்லையா? உன் செய்கையால் நம் சுற்றத்தாரெல்லாம் அழிந்துபோனார்களே. இதனையும் நீ ஆலோசித்து, ஏற்றவற்றைச் செய்து பிழைக்கும் வழியைத் தேடிக்கொள்'' என்று கூறினான்.

இவ்வாறு சொன்ன தன் பாட்டனை ராவணன் கடுங்கோபத்துடன் நோக்கி, ''அடே மூடா! நான் இப்பொழுது தான் வானரர்கள் அழுது புலம்பும்படி வேலை எறிந்து, லக்ஷ்மணனைக் கொன்று வந்திருக்கிறேன். அவன் இறந்ததைக் கேட்டதும் அந்த ராமன் தானே இறந்து போய்விடுவான். அதனால் எனக்குண்டாவது வெற்றியே. நீ இவைகளை உணராமல் எனக்குப் புத்தி சொல்லவா வந்தாய்?'' என்று சீறி அவனைப் பலவாறு இகழ்ந்து பேசினான். ராவணன் இப்படிப் பேசி நிறுத்துவதற்குள் அங்கு நின்றிருந்த தூதுவர்கள். மிகவும் அஞ்சியவர்களாய், ''இறைவரே! அந்த அநுமன் சஞ்சீவியைக் கொண்டு வந்ததால் இளையவன் பிழைத்துவிட்டான். அதனால் அவர்கள் இப்பொழுது களிப்பால் கூத்தாடிக்கொண்டிருக்கின்றனர்'' என்றார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ராவணன் திடுக்கிட்டுத் தானே அச்செய்தியை அறிந்துகொள்ள எண்ணி, விரைவிற் போய்க் கோபுரத்தின் மீதேறிப் பார்த்தான். போர்க் களத்தில் அளவற்ற பிணங்கள் கிடப்பதையும், லக்ஷ்மணன் உயிர் பெற்று நின்றிருப்பதையும், வானரர்கள்

ஆரவாரித்தலையும் கண்டு, நெஞ்சம் வெடித்து விடுவதுபோல ஆத்திரங்கொண்டு, கோபுரத்தைவிட்டுக் கீழே இறங்கி, மிக்க துயரத்துடனும் சினத்துடனும் தன்னுடைய கொலுக் கூடத்தை நோக்கிப் போனான்.

34. ராவணன் தேரேறு படலம்

ராவணன் கொலுமண்டபத்தை அடையவும் மகோதரன் முதலான சில மந்திரிகளும் பெரியோர்களான சில அரக்கர்களும் மண்டபத்திற்கு வந்து கூடினார்கள். உடனே அவன் மகோதரனை நோக்கி, ''இதுவரை யுத்தத்தில் மாண்டவர்கள் போக இந்நகரத்தில் எஞ்சியுள்ள வீரர்கள் எல்லாரும் போர்க் கோலம் பூண்டு விரைவில் வந்து சேரும்படிப் பணியாளரால் பறை அடித்துத் தெரிவிப்பாயாக'' என்று கட்டளை இட்டான். அடுத்த கணத்திலேயே ஆயிரத்துநானூறு கோடி அரக்கர்கள் நால்வகைப் படைகளுடன் விரைந்து வந்து கூடினர். இனிச் சண்டை செய்யத்தக்க அரக்கர்கள் யாரும் லங்கையில் இல்லை.

எல்லோரும் வந்து கூடியதும் ராவணன், தன் வழிபடு தெய்வமாகிய சிவபிரானைப் பூஜித்து வணங்கியதும், முன் எப்போதுமில்லாத அலங்காரங்களைச் செய்துகொண்டு, தேவர்களால் தனக்களிக்கப்பட்ட வாகை மாலையோடு தும்பை மாலையினையும் அணிந்துகொண்டு, மூவுலகங்களையும் சுமந்து செல்லத்தக்கதும், குதிரைகளில்லாமலேயே நினைத்த இடங்களுக்குப் போகத்தக்க யந்திர அமைப்புகளை உடையதும், தேவலோகத்திலுள்ள பச்சைக் குதிரைகளின் மரபில் பிறந்தது மான குதிரைகளைப் பூட்டியதும், நெருப்பிலும் நீரிலும், ஆகாயத்திலும், மேருவிலும், விரைந்து ஓடத்தக்கதும், நவரத்தினங்கள் பதிக்கப்பெற்றதுமான அற்புதத் தேரைக் கொணரச் செய்து, அதற்குச் செய்யவேண்டிய பூசனைகளைச் செய்து, பல வித தான தருமங்களை வழங்கித் தேரின்மீதேறி, ''இன்று ஜானகி தன் மலர்க்கைகளால் வயிற்றில் புடைத்துக்கொண்டு கதறித் துன்பக் கடலிடை விழவேண்டும்; அன்றேல் மயன் மகளாகிய மண்டோதரி அவ்வாறு தவிக்கவேண்டும். இரண்டிலொன்று இன்று உறுதி'' எனச் சூளுரைத்து, வீராவேசம் கொண்டு அங்குக் கூடியிருந்த படைகளுடன் போருக்குப் புறப்பட்டான்.

ராவணன் போருக்கு வருவதைக் கண்ட விபிஷணன், ராமனிடம் சென்று, "ஸ்வாமி! சேனைகளுடன் ராவணன் போருக்கு வருகிறான்" என்றான். வானரர்கள், வீராவேசத்துடன் வரும் ராவணனைக் கண்டு மேல் கீழாக விழுந்து மெய் நடுங்கி வாய்குழறி அச்சத்தால் அலறினர். அப்பொழுது ராகவன், வானரர்களையும் விபிஷணனையும் நோக்கி, "நீங்கள் யாவரும் எவ்வகையாலும் அஞ்சவேண்டியதில்லை; இன்றுடன் சீதையின் துன்பமும், தேவர்களின் அச்சமும் நீங்கிப்போகும்" என்று கூறிவிட்டு, மிகுந்த உக்கிரம் கொண்டு அனேக தேவாஸ்திரங்களுடன் போர்க் கோலம் கொண்டருளினான். அப்பொழுது தேவேந்திரனது கட்டளையால் தெய்வத் தேர் ஒன்றை மாதலி ஓட்டி வந்து ராமனின்முன் நிறுத்தினான்.

அத்தேரைப் பார்த்ததும் ராமன் அதிசயித்து, "நாம் இது வரை இதனைக் கண்டதில்லை; இது யாருடைய தேரோ?" என்று வினவினான். அப்பொழுது மாதலி, "ஸ்வாமி! இது முன்னொரு காலத்தில் சிவபிரானாலும், பிரம்மனாலும் உண்டாக்கப்பட்டது. குறுக வேண்டியபொழுது இது குறுகும்; உயர வேண்டிய பொழுது உயர்ந்து வானத்தில் வட்டமிடும். இதனை யாவராலும் எவ்வகையாலும் அழிக்கமுடியாது" என்றான். அவற்றைக் கேட்டதும் ராமன் ஐயங்கொண்டு, "இஃது அரக்கர்கள் செய்யும் மாயமாக இருக்குமோ?" என எண்ணினான். அவன் ஐயத்தை அறிந்த தேர்க் குதிரைகள் தேவலோகத்தைச் சார்ந்தவையாதலின், "ஸ்வாமி! மாதலி உரைத்தமை உண்மை" என்று சொல்லி வேத மந்திரங்களை முழங்கின. உடனே ராமன் தன் சந்தேகம் நீங்கினான்; அநுமனையும் லக்ஷ்மணனையும் நோக்கி, "இதுபற்றி நுங்கள் கருத்து யாது?" என்றான். அதற்கவர்கள், "இது புரந்தரன் தேரே; ஐயமில்லை" என்றனர். ராமனும் தீவினை வெதும்பி அழியவும் நல்வினை களிப்பவும் தேர் மீதேறினான். அப்பொழுது முனிவர்கள் வாழ்த்தினர்கள். தேவர்கள் மலர் மாரிப் பொழிந்தார்கள்.

35. ராவணன் வதைப் படலம்

ராமன் தேரேறி வருவதைப் பார்த்த ராவணன், அது தெய்வத் தேர் என்பதை அறிந்துகொண்டதும், "இதுவரை நமக்கு அஞ்சிக் கிடந்த அத்தேவர்கள், இன்றைய போரில் நாம் அழிந்துவிடுவோம் என்று உறுதி கொண்டு அந்த மானிடனுக்கு இந்தத் தேரை அனுப்பியிருக்கின்றார்கள்; என்ன தைரியம் அவர்களுக்கு? முதலில் இந்த நரனை ஒழித்துவிட்டுப் பிறகு

அவர்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்'' என்று பற்களை நறநற வெனக் கடித்து, ராமன் முன்னே தன் தேரைச் செலுத்தும்படிச் சாரதிக்குச் சொன்னான். ராவணன் தேர், தனக்கு எதிரே வந்ததும் ராமன் மாதலியை நோக்கி, ''மாதலி! ராவணன் இயற்றும் செயல்களை உணர்ந்து நான் செய்யப் புகும் காரியங்களுக்குத் தக்கவாறு என் நோக்கத்தையறிந்து கொண்டு நீ தேரைச் செலுத்தி வரவேண்டும். நீயாக அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதே'' என்று கூறினான். மாதலியும் அவ்விதமே செய்வதாகச் சொன்னான். அப்பொழுது ராமனுக்கு எதிரே வந்த ராவணன் போர் தொடங்கச் சித்தமானான்.

அதனைக் கண்ட மகோதரன் ராவணனைப் பார்த்து, ''லங்காதிபரே! நானும் உம்மோடு போர் செய்யுமாறு அனுமதிப்பிராயின் எதிரியின் சேனைகளை ஒழிக்கின்றேன்'' என்றான். ராவணன், ''மகோதரா! நானே இந்த ராமனுடன் போர் தொடுக்கிறேன். நீ சென்று லக்ஷ்மணனுடன் சண்டையிட்டுக் கொண்டு, அவனை என் பக்கம் நாடாமல் பார்த்துக்கொள். அந்த உதவி நீ எனக்குச் செய்'' என்றான். அதற்கிணங்கிய மகோதரன் இளையவனிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான். அப்படிப் போகும்பொழுது ராமன் தேரை எதிரே கண்டதும், மகோதரன் தன்னுடைய சாரதியை நோக்கி, ''நீ நம் தேரை ராமன் தேர்மீது முட்டும்படிச் செலுத்து'' என்றான். சாரதியும் மனமில்லாமல் ராமனுக்கு எதிரே தேரைச் செலுத்தி ராமன் தேரைத் துளங்கச் செய்தான். அதுகண்ட ராமன் சினந்து, மகோதரனை எதிர்த்தான் சிறிது நேரத்தில் இருவருக்கும் மும்முரமான போர் மூண்டுவிட்டது. அப்பொழுது ராமன் பாணங்களால் மகோதரனுடைய படைகள் யாவும் அழிந்து போகவே, அவன் தனித்து நின்று, ராமனுடைய தோள்களின் மீதும் சாரதியின்மீதும் அம்புகளை மாரிபோலப் பொழிந்து ஆர்ப்பரித்தான். ராமன் அவனைப் பார்த்து மெதுவாகச் சிரித்து விட்டு, அவன் எய்த அம்புகளை உதறி வீசி, அவன்மீது தனது அஸ்திரங்களைச் செலுத்தி, முதலில் அவன் கையிலுள்ள வில்லையும் கவசத்தையும் தொலைத்து, பிறகு அவன் கழுத்தை அறுத்துத் தள்ள, மகோதரன் மாண்டொழிந்தான்.

மகோதரன் இறந்ததை அறிந்த ராவணன் மனம் கொதிப்படைந்து ராமனைத் தாக்க விரைந்தான். அப்பொழுது அவனுக்குப் பல துர்நிமித்தங்கள் தோன்றலாயின. ராவணன் அவற்றை அறிந்தும் சிறிதும் மனம் தளராமல், ''இத்தகைய நிமித்தங்கள் நம்மை என்ன செய்துவிட முடியும்? இந்த மனிதனா என்னை வெல்லுபவன்!'' என்னும் அகங்காரம் தோன்ற சங்கை எடுத்து ஊதினான். அப்பொழுது ராமனிடத்தும் சங்கு உள்ளது என்று தோன்றும்படி திருமாலின் பாஞ்சசன்யம் என்னும் சங்கு

தானுகவே வந்து ராமன் பக்கலில் நின்று, அதற்கு எதிரொலி யாக முழங்கிற்று. மாதலியும் இந்திரனுடைய சங்கை எடுத்து ஊதினுன். உடனே ராமனும் ராவணனும் ஒருவருக்கொருவர் நெருங்கி நிற்க, ஞானத்தை அஞ்ஞானமும், விஞ்சையை அவிஞ் சையும், தர்மத்தைப் பாவமும் எதிர்த்துத் தாக்குவதுபோலத் தாக்கத் தொடங்கிவிட்டனர்.

இருவரும் தத்தம் வில்லினைக் கையிற்கொண்டு வளைத்து நாணேசை செய்தனர். உடனே ராவணன் பல உயர்ந்த அம்பு களை ராமன்மீது எய்தான். அவற்றை ஒரு நொடியில் அஸ்திரங் களால் ராமன் துண்டித்துவிட்டான். இப்படியே லங்கை வேந்தன், ராமன்மீது அரிய பல அஸ்திரங்களை எய்வதும், ராமன் அவைகளை நாசம் செய்வதுமாயிருந்தான். அத்தருணத்தில் ராவணன் தன் தேரோடு உயரத்திற் கிளம்பி நின்று, பல அஸ்தி ரங்களைப் பொழிய, அவற்ருல் வானரர்களில் பலர் இறந்துபோயி னர். அவன் செய்கையைக் கண்டதும், ராமன் மிகுந்த உக்கிரத் துடன், தன் தேரையும் அந்தரத்தில் செலுத்துப்படி மாதலிக்குக் கூறினுன். அவன் அவ்வாறே செலுத்தவும், அந்தரத்தில் நின்ற இருவருடைய தேர்களும் ஏழு கடல்களின்மீதும் அண்ட முகட்டி லும் போய்ச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டு பிறகு நிலத்திற்கு வந்து சேர்ந்தன.

பின்பு ராவணன், பல தேவாஸ்திரங்களை ராமன்மீது தொடுத்துவிட்டான். ராமன் அவற்றையெல்லாம் அந்தந்த அஸ்திரங்களாலேயே அழித்தான். ராவணன் சினந்து, தன் மாமனுராகிய தேவதச்சரால் கொடுக்கப்பெற்ற உயர்ந்த பாணத்தை ராகவன்மீது செலுத்திஞன். அந்த அஸ்திரம், இனி உலகில் மானிட வர்க்கமே இல்லாது செய்துவிடுவது போன்று, மிக உக்கிரமாக வந்தது. உடனே ராமன் கந்தர் வாஸ்திரத்தினுல் அதனைத் துண்டாக்கிவிட்டான். பின்னர் அந்த அரக்க மன்னன், ''இந்த அற்ப ஆயுதங்களால் பயனில்லை'' என்று மாயாஸ்திரத்தைத் தொடுத்தான். அதன் மாயத்தால், முன்னர் இறந்த இந்திரஜித்து முதலிய அரக்கர்கள் யாவரும் எழுந்துவந்து, ராமன் லக்ஷ்மணன் முதலானோர்களைப் பெயர் சொல்லி அழைத்துப் போருக்குக் கூவுவதுபோலவும், பூதகணங் களும் பேய்க்கூட்டங்களும் எங்கும் நிறைந்து கர்சிப்பதுபோல வும் தோற்றம் உண்டாயிற்று. அவற்றைக் கண்டதும் ராமன் மாதலியை, ''இவை என்ன?'' என்று கேட்க அவன், ''ஸ்வாமி, ராவணன் மாயாஸ்திரத்தை விடுத்திருக்கிருன்; அதனுல் ஏற்பட்ட பொய்த் தோற்றங்களே இவை ; தாங்கள் ஞானுஸ்திரத்தைச் செலுத்தி ஒழித்துவிடுங்கள்'' என்ருன். அப்படியே ராமன் ஞானுஸ்திரத்தை விடுதலும், மாயாஸ்திரத்தின் செய்கைகள் யாவும் மாயமாக மறைந்து போயின.

தான் தொடுத்த மாயாஸ்திரமும் பாழானதால் ராவணன் எதனுலும் தடுக்கமுடியாததும், யாவரும் நடுங்கத்தக்கதுமான ஒரு சூலத்தை ராமன்மீது எறிந்தான். அதைக் கண்டு தேவர்களும் அஞ்சினர்கள். ராமன் பல உயர்ந்த அஸ்திரங்களை எய்து அதனைத் தடுக்கப் பார்த்து முடியவில்லை. அச்சூலம் தன்னுடைய மார்பிற்கு நேராகப் பாய வந்துவிட்டது. உடனே ராமன் மிகுந்த உக்கிரத்துடன், உங்காரத் தொனியால் ஓர் அதட்டு அதட்டினன். அப்பேரோலியின் அதிர்ச்சியால் சூலம் நொறுங்கி துகள் ஆகிவிட்டது.

ராமனுடைய அச்செய்கையைக் கண்டதும் ராவணனுக்கு விபீஷணன் கூறியவை நினைவிற் தோன்ற,

''சிவனோ அல்லன் ; நான்முகன் அல்லன் ; திருமாலாம்
அவனோ அல்லன் ; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின் செய்து முடிக்கும் தரன் அல்லன் ;
இவனே தான்அவ் வேத முதற்கா ரணன் என்றான்.''

[அடு: அழி. தவன்: தவஞ் செய்தவன். தரன்: தகுதி (வயது முதலியன).]

மறுகணத்தில் தன்னுடைய ஊழ்வினையால், அவன் அந்த எண்ணத்தை விட்டு, 'அந்த ராமன் எவனாயிருந்தால் என்ன? அவனை நானே வெல்வேன் அல்லது இறப்பேன். இவ்விருவகையிலும் நமக்குக் கீர்த்தியே' என்று, நாகாஸ்திரம், வாயுவாஸ்திரம், அக்கினியாஸ்திரம் முதலியவைகளை எய்தான். ராமன் அவற்றிக்கெல்லாம் மாறுபட்ட அஸ்திரங்களைத் தொடுத்து அழித்து, ராவணனுடைய மார்பில் அழுந்தும்படி பல பாணங்களை ஏவினன். அவைகள் அவன் நெஞ்சிற் பாய்தலும் அவனுக்கு அறிவு மயக்கம் ஏற்பட்டு வில்வித்தையும் மந்திரங்களும் மறக்கத் தொடங்கின. ராமன் வீரம் மேன்மேலும் அதிகரித்தது. அதனல் ராமன் ஒரு பிறைவடிவான பாணத்தைத் தொடுத்து ராவணனுடைய ஒரு தலையை அறுத்து வீழ்த்தினன். அத்தலை நெருப்பைக் கக்கிக்கொண்டு கடலிற்போய் விழுந்தது. ஆயினும் அதே இடத்தில் வேறொரு தலை முளைத்து ராமனை அதட்டியது. கடலில் வீழ்ந்த அறுபட்ட தலையும் வீர கர்ச்சனை செய்தது.

அப்பொழுது ராவணன், ''இதுவரை தோல்வி என்பதையறியாத நம்முடைய தலையில் ஒன்றை இவன் அறுத்தானல்லவா!'' என்ற ஆத்திரத்துடன் ராகவமூர்த்தியின் தோள்களில் அழுந்தும்படிப் பதினன்கு வலிய அம்புகளை ஏவினன். ராமன்



அவைகளைத் தடுத்து, ராவணனுடைய கரங்களிலொன்றை அறுத்தான். அறுத்தவிடத்தில் மற்றொரு கை முளைத்தது. ராவணன் அறுத்த கையினை எடுத்து மாதலியின்மீது எறியவும் அவன் ரத்தம் கக்கிச் சோர்ந்து போனான். அச்சமயத்தில் ராமன் ஓயாமல் அவன் மார்பினை நோக்கி அம்புகளைப் பொழிந்து உடலிற் பல இடங்களில் துளைக்கும்படிச் செய்ய, அவற்றிலிருந்து குருதி பெருகவும் ராவணன் அறிவு கலங்கித் தேரின்மீது விழுந்து மூர்ச்சித்தான். அத்தருணத்தில் அவனுடைய சாரதி 'தலைவன் மூர்ச்சித்துவிட்டான். ஆதலின் தேரை இங்கு நிறுத்துவதில் பயன் இல்லை' என்று தேரைத் திருப்பிக்கொண்டு நகரை நோக்கிச் செலுத்தினான். மற்ற அரக்கர்களும் அத்தேரின் பின்னே சென்றனர்.

அதுகண்ட மாதலி ராமனை நோக்கி, ''ஸ்வாமி! இவன் மூர்ச்சை தெளிந்தானாகில் இவனைக் கொல்லுதல் அரிது; ஆதலின் இப்பொழுது தாங்கள் இவனைக் கொல்வது எளிது'' என்றான். அதற்கு ரகுகுல மைந்தனான ராகவன், ''மாதலி! இப்பொழுது இவன் அறிவு மயங்கியிருக்கிறான். அப்படியிருக்க இவன்மீது அஸ்திரங்களைச் செலுத்துதல் அறமன்று. இவனுடைய போர் இனி மிக விரைவில் முடியப்போகிறது. இவன் மூர்ச்சை நீங்கி எழுந்த பின்தான் போர் தொடுக்கவேண்டும். நீ அஞ்சவேண்டியதில்லை'' என்று கூறினான். ராமனுடைய இந்த உத்தமமான குணத்தைக் கண்டு தேவர்கள் யாவரும் மகிழ்ந்து அவனைத் துதித்தார்கள்.

சிறிது நேரம் செல்ல ராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் தனக்கெதிரில் எதிரியும், அவன் படைகளும் காணாததால் மற்ற மூன்று பக்கமும் பார்த்தான். அவர்கள் யாவரும் தன் பின் பக்கத்தில் நிற்பதாகத் தெரிந்ததும், ''நாம் மூர்ச்சையடைய எதிரிக்கு பயந்து சாரதியானவன் தேரைத் திருப்பி வந்திருக்கிறான்'' என்று நினைத்து மிகுந்த கோபம் கொண்டு சாரதியைப் பார்த்து. ''அடா மூடா! எதிரிகள் நகைக்கும்படி நீ தேரைத் திருப்பிக்கொண்டு வந்து எனக்கு அவமானத்தை உண்டாக்கிவிட்டாயே. உன் உயிரைப் போக்குகிறேன் பார்'' என்று வாளை உருவிக்கொண்டான். அதுகண்டு சாரதி நடுங்கி அவனை வணங்கி ''தாங்கள் மூர்ச்சித்திருந்ததால், எதிரிகள் தங்கள் உயிருக்குக் கேடு சூழ்வார்கள் என்று நான் கருதித் தங்களைக் காப்பாற்றும் பொருட்டு தேரைத் திருப்பிக்கொண்டு வந்தேன் அவ்வாறு தங்களுக்கு நன்மையை நாடிய நிரபராதியான என்னைக் கொல்லுதல் தருமமன்று'' என்றான். ராவணன் சினந்தணிய அவனை நோக்கி, ''சாரதி! நடந்தது போகட்டும். நீ விரைவில் ராமன் மீது தேரைச் செலுத்துவாய்'' என்று கூறினான். சாரதியும் அம்

படியே தேரை நடத்திவந்து ராமன்முன் நிறுத்தினன். உடனே தசகண்டன் முன்னிலும் வீரத்துடன் பல உயர்ந்த பாணங்களை ராமன்மேல் எய்தான்.

அவற்றை எல்லாம் ராமன் பயனறச் செய்துவிட்டு, ''நாம் இவன் உடலிற் பல அம்புகளைச் செலுத்தித் துளைத்தும் இவன் சலிக்கவில்லை. சிரங்களையும் கைகளையும் கொய்து வீழ்த்தினலும் பின்னரும் முளைத்துவிடுகின்றன. ஆதலால், தகுந்த அம்பினை இவன்மீது செலுத்தி இவன் உயிரை வாங்கிவிட வேண்டியதே'' என்று எண்ணியதும், தோளில் தொங்கிய அம்புப் புட்டிலினின்று, ஓர் அம்பினைக் கைப்பற்றி எடுத்தான். அந்த அஸ்திரம், முன்னர் ஏழு மராமரங்களையும் ஒரே காலத்தில் துளைத்து ஊடுருவிச் சென்று வந்ததும், வாலியின் மார்பைத் துளைத்து அவன் உயிரைப் போக்கி வந்ததும், முன்பு முப்புரங்களையும் சுட்டெரிப்பதற்காக உண்டாக்கப்பட்டதுமாகிய பிரம்மாஸ்திரமேயாகும். அதனைக் கோதண்டத்தில் தொடுத்து மந்திரம் ஜபித்து, ''எதிரியின் உயிரை நீக்கி விட்டுத் திரும்பவும் வந்து சேர்வாயாக'' என்று ராவணன் மார்பிற்கு நேராகக் குறி பார்த்து நாணை இழுத்தான். வில்லினின்று கிளம்பிய அந்தப் பிரம்மாஸ்திரம் நான்கு முகங்களுடையதாகி, திருமாலின் சக்கரப்படைக்குள்ள வலிமையைக் கொண்டு, மூவுலகும் எண்டிசைகளும் நடுங்கும்படி ஆரவாரித்த ஒலியுடன் ராவணன் மார்பில் தைத்தது.

''முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்துஞ் செருக்கடைந்த புயவலியும்
தின்று மார்பிற்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன்
புனித வாளி.''

பின்னர் கடலில் முழுகித் தூய்மை பெற்று மீண்டும் ராமனுடைய அம்பறாத் தூணியிற் புகுந்து கொண்டது. அந்த ராம பாணம் தன்னுடைய மார்பைத் துளைத்துச் சென்றதும் ராவணன் அக்கணமே மேகத்தின் இடிபோலத் தன்னுடைய இருபது தோள்களையும் கொட்ட, பத்து வாய்களிலிருந்தும் குருதி சொட்ட, இருபது கண்களிலும் புகை எட்டத் தான் ஏறியிருந்த உயர்ந்த தேரிலிருந்து ஒரு பெரிய மலையின் சிகரம் விழுவதுபோல நிலத்தின்மீது வீழ்ந்தான்.

அப்பொழுது ராமன் மாதலியை நோக்கி, "அப்பனே! இனி போரில்லை. ஆதலின் தேரைப் பூமியில் இறக்குவாயாக" என்றான். அவனும் அப்படியே தேரை நிலத்தில் இறக்கியதும் ராமன் அதனின்றும் கீழே இறங்கி, மாதலியைப் பார்த்து மகிழ்ச்சியுடனே பல இனிய மொழிகளைக் கூறி, தேரை வானுலகிற்குச் செலுத்திப் போகும்படி கட்டளையிட்டு அனுப்பினான். அத்தருணத்தில் தேவர்களும் முனிவர்களும் வேத வேதியர்களும் அரம்பை முதலான தேவ மாதர்களும் ராவணன் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து 'இனி நமக்குத் துன்பமில்லை' என்று ராமன்மீது மலர்களைச் சொரிந்து வாழ்த்தித் துதித்தார்கள். அதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்த தம்பி சுக்ரீவன், ஆஞ்சநேயன், விபீஷணன், ஜாம்பவான், அங்கதன் முதலியோர் ராமனிடம் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

ராமன் அவர்கள் யாவரையும் அழைத்துக்கொண்டு மலை போல் வீழ்ந்து கிடந்த ராவணன் அருகே சென்று அவனை யாவருக்கும் காட்டி, "நீங்கள் யாவரும் இறந்து கிடக்கும் ராவணனைப் பாருங்கள்; இவன் தன் வீரபராக்கிரமத்தினால் மூவுலகங்களையும் அடக்கி ஆண்டவன். ஆயினும் என்னுடைய பாணத்தினாலேயே இறந்து போனான். எனினும் இந்த வெற்றியைப்பற்றி எனக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. இவனுடைய முதுகில் பல வடுக்கள் காணப்படுவதால் இவன் முன்னே யாருக்கோ தோற்றோடி வந்திருக்கிறான் என்று விளங்குகிறது. அன்றியும் கார்த்தவீரியனால் கட்டப்பட்டான் என்றும் வாலியின் வாலிற் கட்டி இழுக்கப்பட்டான் என்றும் நான் கேள்விப்பட்டேன். இவ்வாறு சிலருக்குத் தோற்ற இவனைக் கொன்றதனால் எனக்குச் சிறப்பேதும் இல்லை. வீணாகப் பழியைத் தான் தேடிக்கொண்டேன்" என்று கூறினான். அம்மொழிகளைக் கேட்ட விபீஷணன் மிகுந்த துக்கத்தோடு எழுந்து நின்று, ராமனை வணங்கி, "ஸ்வாமி! இந்த ராவணன் தேவர்கள் கொடுத்த சாபத்தினால் கார்த்தவீரியனாலும், வாலியினாலும் தோல்வி அடைந்தான். இவன் உலகமெங்கும் திக்கு விஜயம் செய்யும்போது இவனுடன் சண்டைக்கு வருவோர் இல்லாததால் எண்திசை யானைகளோடு போர் செய்ய, அவை இவனை முட்டியதால் ஏற்பட்ட வடுக்களேயன்றி வேறல்ல; ஆதலின் இவன் ஒரு சுத்த வீரனேயாவான். இத்தகையவனைத் தாங்கள் கொன்றதால் தங்களுக்குப் புகழேயாகும்" என்றான்.

அதைக் கேட்டதும் ராமன் தன் ஐயம் நீங்கிக் களிப்புற்று, விபீஷணனை நோக்கி, "விபீஷணா! உன் தமையன் கொடியவனேயாயினும் அவனுக்கு ஈமச்சடங்குகளை நீ செய்க" என்றான். விபீஷணனும் அதற்கு இசைந்து, தனது அண்ணன் கிடந்த இடத்தை அடைந்தான். அண்ணனின் உடலைக் கண்ட விபீஷணன்,

"உண்ணாதே உயிர் உண்ணு(து) ஒருநஞ்சு ;
சனகிஎனும் பெருநஞ்(சு)உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர் ; நீயும் களப்பட்டாயே
எண்ணாதேன் எண்ணியசொல் இன்று இனித்தான்
எண்ணுதியோ ? எண்ணில் ஆற்றல்
அண்ணாவோ ! அண்ணாவோ ! அசுரர்கள்தம்
பிரளயமே ! அமரர் கூற்றே !"

"போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
தழுவியகை பொறுமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப்
பழிகொண்ட பித்தா ! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ ? திசையானை
மருப்புஒடித்த தெய்வ மார்பால்."

[நஞ்சு: விஷம். சனகி: சீதை. பட்டாயே : இறந்தாயே. எண்ணாதேன்: ஆராய்ச்சியில்லாத யான். தெரிவரிய: தெரிவதற்கு அரிய. தழுவுவான்: தழுவும்பொருட்டு. மருப்பு: கொம்பு.

என்று பலவாறு புலம்பினான். அவனை ஜாம்பவான் ஒருவாறு தேற்றினான். இந்நிலையில், ராவணன் இறந்த செய்தியைக் கேட்டாள் அவனது மனைவியாகிய மண்டோதரி. தெய்வக் கற்பு வாய்ந்த அவள் கலங்கி ஓடிவந்து, தனது கணவனின்மீது வீழ்ந்து புலம்பினாள். பலவாறு புலம்பிய மண்டோதரி பின்பு உயிருடன் வாழ விரும்பினாளல்லள். தலைக்கற்பு வாய்ந்த அவள் தன் கணவனைத் தழுவியவாறே கிடந்தாள். கற்பின் பொற்பினால் அவளது அரிய உயிரும் அக்கணமே அகன்றது.

அதுகண்ட விபீஷணன் மிகவும் அழுது துக்கித்து வேத விதிப்படிச் சடங்குகளைச் செய்து, இருவரையும் ஒருசேர ஈமத்தில் வைத்து நெருப்பிட்டுத் தகனம் செய்து கண்ணீர் விட்டு அழுதவாறு, அவர்களுக்கும், கும்பகர்ணன், இந்திரஜித்து, அவன் தம்பியர் முதலிய யாவருக்கும் மற்றும் இறந்த அசுரர் அனைவருக்கும் நீர்க்கடன்களை முறைப்படி செய்தவிட்டு, ராமரை அடைந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சினான். அப்பொழுது ராமர் தாமும் துக்கித்து விபீஷணனுக்குப் பல தேறுதல் மொழிகளைக் கூறி, அவன் துயரத்தை மாற்றினார்.

36. மீட்சிப் படலம்

பின்பு ராமன் தன் தம்பியைப் பார்த்து, "லக்ஷ்மணா, நீ சுக்ரீவன் முதலானோருடன் விபீஷணனை அழைத்துக்கொண்டு லங்காபுரிக்குச் சென்று அவனுக்குச் சிறப்பாக முடிசூட்டி வருவா

யாக'' என்று சொல்லி, அங்கு வந்திருந்த தேவர்களைப் பார்த்து, ''நீங்கள் விபீஷணன் மகுடம் சூட்டிக்கொள்வதற்கான உதவிகளைச் செய்யுங்கள்'' என்று வேண்டினன். உடனே பிரம்மதேவன், விரைவில் மகுடாபிஷேக மணி மண்டபம் அமைக்கும்படி தேவதச்சனாகிய விஸ்வகர்மாவுக்குக் கட்டளையிட்டார். பிறகு லக்ஷ்மணன் விபீஷணனையும் மற்றவர்களையும் லங்கைக்கு அழைத்துச் சென்றான். தேவர்களும் முனிவர்களும் வைர மகுடமும், மணிகள் பதித்த சுவர்ண சிங்காதனமும், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களையும் கொண்டுவந்தார்கள். யாவும் சித்தமானதும் லக்ஷ்மணன் உயிரோடிருந்த மாலியவான் முதலிய சில அரக்கர்களை வைத்துக்கொண்டு, விபீஷணனுக்கு மங்கல நீராட்டி, அவனை அழைத்துவந்து சிங்காதனத்தில் வீற்றிருக்கச் செய்து, ராமபிரானைத் தியானித்து மகுடத்தை எடுத்து, வேத மந்திரங்கள் முழங்க விபீஷணாழ்வான் சிரசில் சூட்டினான். அத்தருணத்தில் தேவர்களும் முனிவர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் மலர்களை வாரி இறைத்து விபீஷணனுக்கு ஆசி கூறினர்.

அதன் பின்னர் ராமன் ஆஞ்சநேயனைப் பார்த்து, ''மாருதி! இங்கே நடந்தவைகளை எல்லாம் நீ சென்று ஜானகிக்குத் தெரிவிப்பாயாக'' என்று கட்டளையிட்டான். அக்கணமே ஆஞ்சநேயன் ஓடோடியும் போய் அசோக வனத்தையடைந்து, ராம நாமங்களைச் சொல்லியவாறே, சீதாபிராட்டியாரைக் கண்டு, கரங்களைக் குவித்துக்கொண்டு,

''ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழி யான அரக்கரை ஆரியச்
சூழி யானை துகைத்தது சோபனம்.''

என மங்கல கீதம் பாடி ஆடினான்.

அதனைக் கேட்டதும் சீதை, மகிழ்ச்சியால் உடல் பூரித்து இன்னது சொல்வதென்று தோன்றாமல் நின்றாள். அது கண்ட மாருதி, ''தாயே! நீங்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் வார்த்தையாடாதிருக்கின்றீர்களா? அல்லது நான் மொழிந்தவை பொய் என்பதாக நினைத்துவிட்டீர்களா?'' என்று கேட்டான்.

அதற்குச் சீதை, ''ஆஞ்சநேயா! உன் வார்த்தைகளிலும் நான் சந்தேகம் கொள்வேனோ? இத்தகைய நல்ல செய்தியைச் சொன்ன உனக்கு எத்தகைய பதில் உதவி செய்வது என்பது பற்றி யோசித்திருந்தேனேயன்றி, எனக்கு வேறெதுவும் விளங்க

விலலை. உனக்கு நான் அளிப்பது யாது? அதனை நீயே சொல்'' என்றாள். உடனே அநுமன், ''தேவியே! நான் உங்களை என் தாயாகக் கொள்ளும்படி தாங்கள் திருவருள் செய்வதுதான் எனக்கு வேண்டியதாகும்'' என்று கூறினான். அதனைக் கேட்டதும் அத்தேவியார் மனமகிழ்ந்து அவனுடைய பக்தியைப் புகழ்ந்து அவனைப் பார்த்து, ''குழந்தாய்! அப்படியே கருதிக் கொள்வாயாக'' என்று கருணை ததும்ப அருளினாள்.

அத்தருணத்தில், ''எல்லாவிதச் சிறப்புக்களுடன் ஜானகியை அழைத்து வருக'' என்ற ராமன் கட்டளைக்கிணங்கி அங்கே புறப்பட்டு வந்த விபீஷணன், பிராட்டியைக் கண்டு வணங்கிச் செய்தியைத் தெரிவித்தான். தேவியார் அதைக் கேட்டதும் அளவில்லா ஆனந்தம் கொண்டு விபீஷணனை நோக்கி, ''குலோத்தமரே! நீர் சொன்னபடி நான் அலங்காரம் செய்துகொண்டு சிறப்போடு வருவது சரியன்று; இப்போதிருக்கும் நிலையுடன் வருவதுதான் என் கற்பிற்குப் பெருமை'' என்று கூறினாள். விபீஷணன், ''தாயே! தேவதேவரான ராகவமூர்த்தியே தங்களை அலங்கரித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டிருக்கிறார்'' என்றான். அதற்குச் சம்மதித்த சீதை, தேவ மாதர்களால் அலங்காரம் செய்வித்துக்கொண்டு, திரிசடையுடன் ராமன் திருமுன்பு சென்று, அவனுடைய திருமேனியைக் கண்களாற் கண்டு, அவன் திருவடிகளில் வணங்கி நின்றாள்.

அப்பொழுது லக்ஷ்மணன், தேவியார் அண்ணாவிடம் வருகிறார் என்பதுணர்ந்து, அவரைக் காணும் ஆவலால் அரண்மனையைவிட்டு அங்கே வந்திருந்தான். தேவர்களும் முனிவர்களும் அங்கே எழுந்தருளினார்கள். அவ்வேளையில் தன்னை வணங்கி நின்ற சீதையை நோக்கி, அவளடைந்த இன்பமெல்லாம் துன்பமாக மாறும்படித் தன் சிந்தையில் ஒன்றைக் கருதிக்கொண்டு, மிகுந்த சினத்துடன் ராமன், ''ஏ ஜனக மன்னன் மகளே! நீ இதுவரை அரக்கர் வசமாயிருந்து மாமிசாதிகளையுண்டு களித்திருக்கிறாய். உன் கற்பு அழிந்துவிட்டிருக்கும். அதனை இழந்த நீ சிறிதும் நாணமில்லாமல் சிங்காரித்து எனக்கு எதிரில் வந்தாயே! நான் உன்னைச் சேர்த்துக்கொண்டு விடுவேன் என்று எண்ணினாய் போலும்! உன்னைச் சிறையினின்றும் விடுவிப்பதற்காக நான் இச்செயல்களைச் செய்யவில்லை. தேவர்கள் துன்பத்தை நீக்கவும் சாதுக்களைக் காக்கவும் ராவணனால் எனக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்கவும் போர் செய்து அரக்ககுலத்தை அழித்தேனே அன்றி, உன்னை நினைத்தல்ல; உன்னால் சூரியகுலப் பெருமை ஒழிந்துவிட்டது. ஆகலால், நீ இனி என்முன் நில்லாமல் எங்கேனும் சென்று விடு'' என்றான்.

இத்தகைய கொடுஞ்சொற்கள் கூறியதும் சீதைக்கு நொந்த புண்ணில் ஊசியைப் பாய்ச்சுதல்போல் இருந்தன. அவள் ரத்தக் கண்ணீர் விட்டழுது, நிலத்தைப் பார்த்துக்கொண்டே பெருமூச்சுவிட்டு, ''ஸ்வாமி! தங்களுக்கு இத்தகைய கருத்து இருக்குமாயின் என்னை இங்கே அழைத்துவரும்படி விபீஷணரை ஏன் அனுப்பவேண்டும்? எப்படியும் தங்களை அடையலாகும் என்ற உறுதியுடன் நான் பற்பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டு என் உயிரைப் போக்கிக்கொள்ளாதிருந்தேன்; என்னுடைய நிலைமையை அநுமன் கூறவில்லையோ? இனி நான் பல கூறுவதிற் பயனில்லை. நான் தங்களால் வெறுக்கப்பட்டவளானேன். ஆதலின் நான் உமக்கு எதிரிலேயே என் உயிரைப் போக்கிக்கொள்ளுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, லக்ஷ்மணனைப் பார்த்து, ''ராமாநுஜரே! நான் அறியாமல் பேசி உங்களையும் வருந்தச் செய்துவிட்டேன். எனினும், அவற்றை மனத்திற் கொள்ளாது என்னை மன்னித்து, இப்பொழுது நான் விழுந்து இறப்பதற்குரிய நெருப்பினை மூட்டித் தருவீராக'' என்று கேட்டாள்.

ஜானகி கூறியதைக் கேட்ட இளையவன் மிகுந்த துக்கத்துடன் ராமனைப் பார்த்து ஏதும் சொல்லாது வணங்கி நின்றான். ''அவள் கருத்தின்படியே செய்'' என்று ராமன் தம்பிக்குக் கண்சாடை காட்டியதும் அவன் அழுதுகொண்டே நெருப்பை மூட்டினான். சீதாபிராட்டி அந்த அக்கினியை வலம் வந்து நிற்கவும், அவளைக் கண்ட தேவர்களும் தேவமங்கையரும் நடுங்கிக் கண்ணீர் விட்டு ராமனைப் பார்த்து, ''எம்பெருமானே! இது தக்கதன்று'' என்று கூறி வருந்தினர்கள். சுக்ரீவன், ஜாம்பவான் விபீஷணன், ஆஞ்சநேயன் முதலியோர் அனைவரும் துக்கம் தாளாமல் கதறினர். அப்பொழுது அக்கினியின்முன் நின்ற தேவியார் அந்த எரியை நோக்கி, ''அக்னி தேவரே! நான் குற்றமுடையவளாயின் என்னைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடும்'' என்று சொல்லி ராமனை வணங்கியவாறு தீயிற் குதித்துவிட்டாள்.

நீரிலுள்ள செந்தாமரை மலராகிய தன் சொந்த இருப்பிடத்திற்கு மீண்டும் ஏகினள் என்னும்படித் தாமரை மலர் போன்று சிவந்து சிவந்து நிற்கும் எரியில் சீதாபிராட்டியார் புகுந்தார். அவ்வளவில் அவளுடைய கற்பு என்னும் நெருப்பானது அத்தீக் கடவுளையே எரிக்கத் தொடங்கிவிட்டது. அவன் அந்த வெப்பத்தை ஆற்றமுடியாமல் துள்ளித் துடித்து தேவியைத் தன் இரு கரங்களாலும் தாங்கிக்கொண்டு ராமன் முன்வந்து நின்று, ''பரந்தாமரே! உம்முடைய பத்தினியாரின் கற்பின் நெருப்பானது என்னையும் சுட்டுவிட்டதே! இந்த உத்தமியை என் சுவாலையிற் புகச்செய்து என்னைத் தகிக்கும்படி செய்துவிட்டீரே! நான் உமக்கு என்ன பிழை செய்தேன்?'' என்று முறையிட்டான்.



ராமன் அப்படி முறையிட்டவனைப் பார்த்து, ''நெருப்பினின்றும் தோன்றி வெளிப்போந்த நீ யாவன்? அக்கினி தேவனாக இருந்தால் தீயொழுக்கமுள்ள இவளை ஏன் சுட்டெரிக்கவில்லை?'' என்று கேட்டான். அதற்கவன், ''ஸ்வாமி! நானே தீக் கடவுள். தேவியின் கற்புத் தீ என்னைச் சுட்டதால் அதற்கு நான் ஆற்ற முடியாமல் உம்மைச் சரணடைந்தேன். நீர் என் சொல்லை நம்பி இவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர் எவ்வித தோஷமும் இல்லாதவர்'' என்று சொல்லி ஜானகியை அவர் பக்கத்தில் விடுத்தான். ராமன் அங்கியங் கடவுளை நோக்கி, ''நீ இவளைக் குற்றமற்றவள் என்று சொல்வதால் நான் ஜானகியை ஏற்றுக் கொண்டேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினான். அப்பொழுது சிவன், இந்திரன், பிரமன் முதலானவர்களும் மகிழ்ந்து, ''ஸ்வாமி, ராவண சங்காரத்தின் பொருட்டு மானிட வடிவத்துடன் வந்த மஹாவிஷ்ணு மூர்த்தியே நீர். இந்த ஜானகி தேவியார் உம்முடைய மார்பில் உறையும் மகாலக்ஷ்மியேயாவர். அத்தகையவரை நீர் ஏற்றுக்கொள்ள வேண்டியதே தகுதியானது'' என்று கூறிவிட்டு, ராமனுடைய பிரிவினால் துயருற்று வைகுந்தத்திலிருந்த தசரத மகாராஜனும் அங்குத் தோன்றினான். ராமலக்ஷ்மணர்களும் சீதையும் அவன் பாதம் பணிந்தனர். ஆசி மொழிந்த தசரதன் சீதையை நோக்கி, ''நின் கற்பை உலகுக்கு உணர்த்தவே உன்னைத் தீப்புகச் செய்தான் ராமன்; ஆகவே நீ முனியல்'' எனத் தேற்றினான். லக்ஷ்மணனுடைய வீரத்தைப் பாராட்டினான். பின்னர் ராமனை நோக்கி வேண்டிய வரங்களைக் கேட்குமாறு கூறினான். ராமன் உடனே, ''என் தெய்வமாகிய கைகேயியும் மகன் போன்ற பரதனும் தாயாகவும் தம்பியாகவும் ஆகும் பேற்றைத் தரல் வேண்டும்'' என்று வேண்டினான். தசரதன் அவ்வாறே அருளி மறைந்தான். அப்பொழுது தேவர்கள் ராமபிரானை நோக்கி, ''வனவாசத்திற்கெனக் குறிப்பிடப்பட்ட பதினான்கு ஆண்டுகளும் கழிந்தன; இன்றே நீர் பரதனைக் காணாவிடின் அவன் தீப்புகுதல் திண்ணம்'' என்றனர்.

அதன் பின்னர் ராமன், விபீஷணனைப் பார்த்து, ''நாம் அனைவரும் அமர்ந்துகொண்டு விரைவில் அயோத்தி சேரத்தக்க வாகனம் ஏதேனும் உளதோ?'' என்று வினவினான். உடனே விபீஷணன், முன்னர் குபேரனிடமிருந்து, பின்னர் ராவணனுக்குச் சொந்தமான புஷ்பக விமானத்தைக் கொண்டுவந்து ராமன் முன்பு நிறுத்தினான். ராமன், தம்பி, சீதை முதலியோரும், சுக்ரீவன், விபீஷணன், அங்கதன், ஆஞ்சநேயன் ஆகியவர்களும் ஏறிக்கொள்ள, விமானம் மேலே கிளம்பி லங்கையை வலம் வந்து வடக்கு நோக்கிப் பறந்தது. விமானம் பரத்துவாசர் ஆச்ரமத்தை அடைந்த அளவில் ராமன் ஆஞ்சநேயனை நோக்கி, ''அப்பா மாருதி! நீ விரைந்து சென்று, அயோத்திக்கு அருகி

ளுள்ள நந்திக் கிராமத்தை அடைந்து பரதன் சத்ருக்னருக்கு எங்கள் வருகையை அறிவிப்பாயாக'' என்று சொல்லி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினுன்.

ஆஞ்சநேயன் ராமன் கட்டளைப்படி பரதனை நோக்கிப் போய்க்கொண்டிருக்க, நந்திக் கிராமத்திலிருந்த பரதன், ராமர் திரும்பி வருவதாகச் சொன்ன நாள் அன்றேயாதலின், அவர் வராததால் மனம் கலங்கி, ''அந்தோ! ராகவர் இன்னும் வர வில்லையே! அவருடைய திருவுள்ளம் யாதோ? அன்றிக் கொடிய வர்களுடன் கோர யுத்தம் மூண்டதோ? ஏதும் அறியக்கூட வில்லையே!'' என்று பலவாறு எண்ணி வருந்தியபிறகு சத்ருக் ணனை நோக்கி, ''தம்பீ! தவணைப்படி இன்று நம் அண்ணு வராத தால் நான் முடிவு செய்ததற்கிணங்க இன்று தீயில் விழுந்து இறக்கப் போகிறேன். நீ அயோத்தி சென்று அரசுரிமை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ இதனைத் தட்டக்கூடாது'' என்ருன். அதனைக் கேட்டவுடன் சத்ருக்னன் விஷம் உண்டவன்போல் நிலத்தில் வீழ்ந்து புரண்டழுது கொண்டே பரதனைப் பார்த்து, ''அண்ணு! என்ன வார்த்தை கூறினீர்? லக்ஷ்மணர் ராகவரைப் பிரிய முடியாதபடி அவரோடு வனம் செல்ல, நீர் ராமர் வராததால் இறந்துபோக, நான் மாத்திரம் அரசு தாங்கியிருக்கவோ? உங்க ளுடன் உடன்பிறந்தவன் என்ற பாசம் அற்றவனு நான்!'' எனறு புலம்பினுன். அப்பொழுது பரதன், சத்ருக்னனை வாரி எடுத்து மார்புறத் தழுவி நீங்காத துயரத்துடன் அவனைப் பார்த்து, ''தம்பி! நான் மனமொத்து இங்கு ஆள்கின்றதால் அல்லவா ராமபிரான் கானகத்தினின்றும் வாராது தாழ்க்கின்ருர். யான் இறந்தொழிவேனேயாயின் உலகைக் காக்கும் பொறுப்பு அவரைச் சாரும்; உலகு வருந்தப் பொருன். ஆகையால் நாடு திரும்பி அரசைக் கைக்கொள்வான்; ஆகவே அதுவே செய்யத்தக்கது; நீ மறுப்பாயல்லே; சென்று எரி அமைக்க'' என்று கூறினுன்.

அத்தருணத்தில் இப்பிள்ளைகளின் செயல்களைக் கேள்வியுற்ற கோசலை, சுமித்திரையுடனும் மற்ற அரண்மனைப் பெண்டிரு டனும் வந்து பரதனைத் தடுத்தனள். ஆனுல் பரதன் கோசலை யைப் பார்த்து, ''அம்மா! நான் உங்கள் வார்த்தையை மீறுகி றேன் என்று என்மீது வருத்தப்படவேண்டாம். நான் செய்த வாக்குறுதியிலிருந்து தவறுவேனுயின், சூரிய குலத்திற்கே இழி வாகும். ஆதலின், நீர் எங்களைத் தடுக்காதீர்'' என்று கூறிய தும், யாவரும் அழுது புலம்ப ராமனைத் தியானித்தவாறு நெருப்பில் விழ, அதன் அருகே போய் நின்ருன். சத்ருக்னனும் பரதன் பின்னே வந்து நின்ருன்.

அச்சமயத்தில் ராமத் தியானத்துடன் பரதனைக் காணும் ஆவலால் வானவீதியில் வந்த வாயு மைந்தன் பரதனுடைய நிலையைப் பார்த்துத் திடுக்கிட்டு,


''ஐயன் வந்தனன் ; ஆரியன் வந்தனன் ;
மெய்யின் மெய்யன்னஎன் இன்னுயிர் வீடினால்
உய்யு மேஅவன் ? என்றுரைத்(து) உட்புகாக்
கையி னாலெரி யைக்கரி யாக்கினான்.''

[**வீடினால் :** இறந்தால். **உய்யுமே :** பிழைக்குமே? **எரி:** நெருப்பு. **எரியைக் கரியாக்கினான் :** நெருப்பை அணைத்தான். **கரி :** சான்று.]

பின்னர் அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்து அவனை நோக்கி, ''பரதரே ! ராமர் சொல்லிச் சென்ற தவணை நாள் இன்னும் வரவில்லை. அந்நாள் இன்றிரவு கழிந்து நாளைப் பொழுது விடியும்வரை இருக்கின்றது. அதற்குள் அவர் உம்மிடம் வந்துவிடுவார் ; பரத்துவாச முனிவர் வேண்டியதற்கிணங்கி ராகவர் முதலானோர் அங்கேயிருக்கிறார்கள். ஒரு சமயம் தாமதமானால் நீர் எரியிற் புகுந்துவிடுவீர் என்று நினைத்துத் தம்முடைய வருகையை உமக்கு அறிவிக்கும்படி என்னை அனுப்பியதுடன், தம்முடைய முத்திரை மோதிரத்தையும் என்னிடத்தில் கொடுத்திருக்கிறார். அதனைப் பாரும்'' என்று ராமன் கொடுத்த மோதிரத்தைப் பரதனிடம் கொடுத்தான். அதனைப் பார்த்த மாத்திரத்தில் பரதன், சத்ருக்னன், கோசலை முதலான யாவரும் பரமானந்தம் அடைந்து, ஆஞ்சநேயனைக் கொண்டாடியபின்பு, வாயு புதல்வரின் வரலாற்றையும் கேட்டறிந்தனர். அவனுக்குப் பரதன் பலவிதமான உபசாரங்களைச் செய்தான்.

அதற்கப்பால் பரதன் சத்ருக்னனை நோக்கி, ''தம்பி! நம் துன்பம் நீங்கிற்றாதலின் ராமரை எதிர்கொள்வதற்காக நகரை அலங்கரித்து எல்லோரும் புறப்பட்டு வரும்படி பறை சாற்றக் கட்டளையிடுவாயாக'' என்று கூறினான். அவ்வாறே அயோத்தி நகரம் அலங்கரிக்கப்பட்டது. வள்ளுவர் முரசறைந்து ராமன் வருகையை நகரெங்கணும் அறிவித்தனர். பின்பு யாவரும் எழுந்து ராமன் வருகையை எதிர்பார்த்து இருந்தனர்.

இங்கே இவர்கள் இப்படியிருக்க, ராமன் முதலியோர் அன்றைய பகலில் பரத்துவாசர் அளித்த விருந்துண்டு, இரவில் இளைப்



பாறிவிட்டு, பொழுது விடியவே எழுந்து விமானமேறிப் புறப்பட்டார்கள். தூரம் செல்லவும் ராமனுக்கு அயோத்தி நகர் தெரிந்தபிறகு விமானம், நந்திக் கிராமத்திற்கு வெகு அருகில் வர, ஆஞ்சநேயன் கண்டு பரதனை நோக்கி, ''இதோ பாரும். விமானம் வந்துவிட்டது. ராமர் முதலியோர் வருகிறார்கள்'' என்றான். விமானத்தைப் பார்த்ததும் பரதன் பெரு மகிழ் வெய்தினான். அங்கிருந்த பெருங் கூட்டத்தினரும் அதைப் பார்த்து ஆரவாரித்தார்கள்.

ஒரு சில விநாடிக்குள் விமானம் அவர்களிருக்கும் இடத்தை அடைந்ததும் கீழே இறங்கிற்று. பரதன், விமானத்திலிருந்த ராமனைக் கண்டு, தன்னையும் மறந்து கரங்களைச் சிரஸின்மேல் கூப்பிக்கொண்டு நின்றான். ராமன் விமானத்திலிருந்து இறங்கியதும் பரதன், சத்ருக்னன், ஆகியோரைத் தழுவிக்கொண்டு, அவர்களுக்கு ஆசி கூறிவிட்டு, அங்கு வந்திருந்த வசிஷ்டர் முதலிய பெரியோரையும் வணங்கி, அன்னையர்களையும் கண்டு பணிந்து, அவர்களுடைய நல்லாசியைப் பெற்றான். ஜானகியும் அவ்வாறே மாமியருக்கு வணக்கம் செலுத்தி, அவர்களுடைய ஆசியைப் பெற்றாள். ராமன், தன்னுடன் வந்த சுக்ரீவன், விபீஷணன், அங்கதன் முதலியவர்களை, பரதனுக்கும் சத்ருக்னனுக்கும் காட்டி அறிமுகப்படுத்த, ஒருவருக்கு ஒருவர் வணங்கிக்கொண்டார்கள். பிறகு சுமந்திரன் என்ற மந்திரியும் சேனாதிபதிகளும் ராமனைக் கண்டு வணங்கினார்கள். ராமன் அவர்களுக்கு முகமன் கூறி, அவர்களுடைய நலன்களை விசாரித்தான். அதன் பின்னர், யாவரும் அயோத்தியை அடைந்தனர்.

37. திருமுடி சூட்டு படலம்

அப்போது அங்கே வந்த பிரம்மதேவர், மயனை அழைத்து விரைவில் மகுடாபிஷேக மண்டபத்தை அமைக்கும்படிக் கட்டளையிட்டார். அவன் அவ்வாறே கட்டி முடித்தான். ஆஞ்சநேயன் நான்கு திசைகளிலும் சென்று ஏழு சமுத்திர நீரையும், புண்ணியமிக்க ஏழு நதிகளின் தீர்த்தங்களையும் சுவர்ணக் குடங்களில் கொண்டுவந்து வைத்தான். அரசர்கள் யாவரும் தம்முடைய யானைகளின்மீது அமர்ந்து சென்று

ரத்தினம் பதித்த குடங்களில் சரயு நதி நீரை நிரப்பிக்கொண்டு வந்தார்கள். குறிப்பிட்ட முகூர்த்த நேரம் வந்ததும்,

''மாணிக்கப் பலகை தைத்த
வயிரத்தின் கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்றும் உச்சி
அழகுறச் சமைத்த பீடம்
ஏனுற்ற பளிக்கு மாடத்(து)
இட்டனர் அதனின்மீது
சேனுற்ற திரள்தோள் வீரன்
திருவொடும் பொலிந்தான் மன்றே.''

மங்கையர் மங்கல கீதம் பாடினர்; அந்தணர் வேதம் ஓதினர்; பல வாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் மலர்களைப் பொழிய வசிஷ்டர், முனிவர்களால் எடுத்துக் கொடுக்கப்பட்ட தீர்த்தங்களை அவ்விருவர் மீதும் அபிஷேகம் செய்தார்.

இவ்வாறு வேதமந்திரங்களைக் கூறி, தீர்த்தாபிஷேகம் முடிந்ததும், ராமபிரானையும் பிராட்டியாரையும் அழைத்துப் போய், புதிய ஆடை ஆபரணதிகளால் அலங்கரித்து, சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்தனர். சிங்காதனத்தை அநுமன் தாங்கி நின்றான்; அங்கதன் உடைவாள் ஏந்தி முன்னே நின்றான்; பரதாழ்வான் வெண்கொற்றக் குடை பிடித்தான்; லக்ஷ்மணனும் சத்ருக்னனும் கவரி வீசினர்; சீதா பிராட்டியார் மனமகிழ்ந்து பெருமிதம் அடைந்தாள்; திருவெண்ணெய்நல்லூர்ச் சடையன் வமிசத்து முன்னோருள் ஒரு வள்ளற் பெரியார் மாணிக்க மகுடத்தைத் தம் கையால் எடுத்துக் கொடுத்தார்; வசிஷ்டரே அதை வாங்கி ராமபிரான் திருமுடியில் சூட்டியருளினர்:

''அரிஅணை அநுமன் தாங்க அங்கதன் உடைவாள் வாங்கப்
பரதன்வெண் குடைக விப்ப இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி ஓங்க வெண்ணெயூர்ச் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.''

அத்தருணத்தில் பலவகை வாத்தியங்கள் முழங்கின; தேவர்களும் பூவுலகத்தவர்களும் மலர்களை வாரி வாரி ராமபிரான்மீதும் சீதாபிராட்டியார்மீதும் இறைத்தார்கள்.

38. விடை கொடுத்த படலம்

மறுநாள் ராமபிரானும் சீதாபிராட்டியாரும் பலவகைச் சிறப்புக்களுடன் அரசிருக்கை மண்டபம் அடைந்து, சிங்காதனத்தில் அமர்ந்தனர். அப்பொழுது அங்கே அமைச்சர்களும், சேனுதிபதியரும், நகரப் பெரியோர்களும் வந்து கூடினர். வானர சேனைகள் சூழச் சுக்ரீவனும், அங்கதனும், அநேக அரக்க வீரர்களுடன் விபீஷணனும், வேடுவச் சேனைகள் சூழக் குகனும், வலிமிக்க கரடிச் சேனைகளுடன் ஜாம்பவானும் அம்மண்டபத்திற்கு வந்து ராமஸ்வாமியை வணங்கி நின்ருர்கள். வாயுதேவர் புதல்வனும் நூல்களில் வல்லவனுமான ஆஞ்சநேயன் சிங்காதனத்தின் அருகே இருந்து அதனைத் தாங்கியபடி வீற்றிருந்தான்.

ராமபிரான் தன்னை வணங்கி நின்ற யாவரையும் அமரச் செய்துவிட்டு, அங்கு வந்த வேதியர்களுக்கும், சிற்றரசர்களுக்கும், பரிசிலருக்கும் விரும்பியபடி ஆடை அணிகளும், நிதிகளும் வழங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்பினுன். பொற்கடகங்களும் உயர்ந்த யானைகளும் குதிரைகளும் பொன்னுடைகளும் சுக்ரீவனுக்குக் கொடுத்தான். விலையுயர்ந்த வாகுவலயத்தையும், ரத்தின ஆரத்தையும், பொன்னுடையையும், யானை குதிரைகளையும் அங்கதனுக்குக் கொடுத்து, அவனைச் சுக்ரீவனைவிட்டு நீங்காதிருக்கக் கூறினுன். பிறகு கீழே அமர்ந்து சிங்காதனத்தைத் தாங்கிப் பற்றியிருக்கும் ஆஞ்சநேயனை நோக்கி, ''அப்பனே மாருதி! நீ எங்களுக்குச் செய்த உதவிக்கு நான் எத்தகைய சன்மானம் செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. எனினும், நான் அன்புடன் கொடுப்பதை நீ ஏற்றுக்கொள்'' என்று சொல்லித் தன் கழுத்திலணிந்திருந்த வஜ்ர மாலையையும், மெல்லிய பொன்னுடையினையும் அவனுக்குக் கொடுத்து, ''நீயும் ஏதாவது தருவாயாக'' என்ற குறிப்பை ஜானகிக்குக் காட்ட, உடனே அவள், வாணியால் தனக்களிக்கப்பட்ட முத்து மாலையை எடுத்து அநுமனை அழைத்து, ''குழந்தாய்! இதனை ஏற்றுக்கொள்'' என்று அவன் கழுத்தில் தானே அணிவித்து அவனைப் பலவாறு கொண்டாடினுள்.

பின்னர், ராமன், இந்திரன் அணிந்துகொள்ளத்தக்க முத்தாரத்தையும், பீதாம்பரங்களையும், யானை குதிரைகளையும் ஜாம்பவானுக்குத் தந்தான். மற்றுமுள்ள வானர வீரர்களுக்கு அவரவர் தகுதிப்படி யானை குதிரைகளையும் ஆடை ஆபரணங்களையும் கொடுத்தான். பிறகு விபீஷணனை அழைத்து அவனைப் பலவாறு புகழ்ந்து கூறி, தனக்குத் தேவர்கள் கொடுத்த

கடகத்தையும், மதயானைகளையும், குதிரைகளையும், உயர்ந்த ரத்தினபரங்களையும், பொன்னுடைகளையும் கொடுத்தான். இவ்வாறு தனக்குப் பலவகையிலும் உதவி செய்து தன்னிடத்து அன்பு கொண்ட ஆஞ்சநேயன், சுக்ரீவன், அங்கதன், ஜாம்பவான், விபீஷணன் ஆகியோர் யாவரையும் நோக்கி, "உங்களைப் பிரியும்படி நேர்ந்திருக்கிறதே என்று எனக்கு மிக்க வருத்தமாயிருக்கின்றது; ஆயினும் கிஷ்கிந்தை அரசு சுக்ரீவன் அல்லாது நடவாது. ஆதலின் ஆஞ்சநேயனுடனும், ஜாம்பவானுடனும் சுக்ரீவன் அங்கு போய்ச் சேரவேண்டியதேயாகும்'' என்றான். பின்பு அவன் அவ்வாறே விபீஷணனுக்கும் பல நல்ல மொழிகளைக் கூறி, யாவரும் போற்றும்படி லங்கையை ஆளுமாறு அருளி விடை கொடுத்தான். உடன் பிறந்தவனாகவே பாவித்த குகனை அருகே அழைத்து, அவனை மார்புறத் தழுவிக் கொண்டாடிவிட்டு, அவனுக்கும் பலவகை உயர்ந்த ஆடை அணிகளும், யானைகளும், குதிரைகளும் கொடுத்து, பின்னரும் அனைவரையும் நோக்கி, "நீங்கள் யாவரும் எந்தக் காலத்திலும் விரும்பியபொழுது இங்கே வந்து என்னைப் பார்க்கலாம்'' என்று கூறி, எல்லோரையும் அவரவர்களுடைய இருப்பிடத்திற்குச் செல்ல விடை கொடுத்து அனுப்பினான்.

அவ்வாறு தங்களுக்கேற்றபடி சிறப்புக்களை அளித்து விடை கொடுத்தவுடனே, யாவரும் ராமபிரானையும் சீதாபிராட்டியாரையும் வணங்கி விடை பெற்றுத் தங்கள் சேனைகளுடன் தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குப் புறப்பட்டார்கள்.

ராமபிரான், தன் தம்பியருடனும், தாயர்களுடனும், எல்லாப் பெரியோர்களுடனும் பலவகை அறங்கள் புரிந்து ஜானகி தேவியுடன் அன்புற்று இன்புற்று அயோத்தியை மனுமுறை தவறாது அரசு செய்து வாழ்ந்திருந்தான்.

''இராவணன் தன்னை வீட்டி இராமனும் வந்து தோன்றி
தராதலம் முழுதும் காத்துத் தம்பியும் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னும் நமனையும் வெல்லு வாரே.''

சுபம்



கம்ப ராமாயணம்

